(326)

T. N. L. C. Debates

official Report

1983

Vol: CE

No: 3, 4/5

D
V211,32'N83
N83.2n.3-5
143188

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

13

THURSDAY 28th APRIL 1983

Volume CC (No. 5)

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

Price Rs. 2.75 Paise]

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
5 ஏப் 1984.
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# பொருளடக்கம்

26—4—1983

பக்கங்கள்


1. வினாக்கள் விடைகள் .. .. .. .. 247—265

2. தகவல் கோரல் —

   உரிமைப் பிரச்சினையில் தீர்ப்பு குறித்து .. 266

3. அறிவிப்பு —

   பேரவையிலிருந்து செய்தி .. .. .. 267

4. கவன ஈர்ப்பு —

   கும்பகோணம் ஆடவர்-மகளிர் அரசு கலைக் கல்லூரியைச் சேர்ந்த பி. எஸ். ஸி. மாணவர் சான்றிதழ்கள் வராதது குறித்து .. .. 267—270

5. அரசின் தீர்மானங்கள் :—

   (1) சட்டப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் .. .. 270

   (2) சட்டப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் .. .. .. 271

   (3) சட்டப் பேரவையின் துணைச்சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்தல் .. .. 272

   (4) சட்டப்பேரவையின் பொதுத் தொழில் நிறுவனங்களை குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் 273

பக்கங்கள்

6. அரசின் சட்ட முன்வடிவுகள் —

(1) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/1983) .. .. .. 274—281

(2) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/1983) 281—294

7. 2—8—1983 அன்று ஓய்வு பெறும் உறுப்பினர் களுக்குப் பாராட்டுரை பகர்தல் .. .. 294—351

8. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 352

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008.
143188
D



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) பள்ளி ஆசிரியர் பதவியில் உள்ள முதுநிலை வரிசையின் அடிப்படையில், சரித்திர உதவிப் பேராசிரியர் பதவியால் முதுநிலையை நிர்ணயிக்க ஒரு நபருக்கு மட்டும், அவர் அரசிற்கு அனுப்பிய மேல் முறையீட்டின் பேரில் அரசாணை (நிலை) எண் 1148 கல்வி, நாள் 27—6—1980-ல் ஆணையிடப்பட்டது.

(இ) புதுக்கோட்டை ராஜா கல்லூரியில் பணிபுரியும் ஒருவர் மட்டும் தன் பணிமூப்பு நிலையை மாற்றியமைக்கக் கோரி, விண்ணப்பத்தை கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு தற்போது அனுப்பியுள்ளார்.

(உ) மற்றும் (எ) ஒரே ஒரு நபரிடமிருந்து வந்துள்ள முறையீடு நியாயமானது தானா என்பது பற்றி அக்கல்லூரி முதல்வருடன் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.

### *Play-grounds for Madurai Law College.*

*324 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the new building for the Madurai Law College has been completed without any play-grounds attached to it;

(*b*) if so, whether there is any proposal to provide play-grounds near the College; and

(*c*) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இல்லை. ஆனால் சட்டக்கல்லூரி விடுதிக்கருகில் விளையாடும் இடம் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(உ) தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், மதுரை சட்டக்கல்லூரி விடுதியும் விடுதி அமைந்துள்ள இடத்திலேயே விளையாட்டு மைதானமும் அமைத்துக் கொள்வதற்குத் தகுந்தாற்போல் வரை படமும் மதிப்பீடும் அனுப்புமாறு கேட்?க்கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவரவர்களே, மதுரை சட்டக்கல்லூரி விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்கள் பல ஆண்டுகளாகத் தங்களுக்கு வசதியில்லை என்று போராடிவருகிறார்கள். இப்போது 3 ஆண்டு என்பதை எடுத்துவிட்டு. வரும் ஆண்டிலிருந்து 5 ஆண்டு சட்டப்படிப்பு என்று கொண்டு வந்திருக்கிறோம். அப்படியானால், அங்கு தங்கிப் படிப்பவர்களுக்கு அதிகமான வசதியைச் செய்து கொடுக்க வேண்டும். அந்த அடிப்படையில்

அதிகமான மாணவர்கள் தங்க இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டதா? அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இதுவரை இருந்துவந்த 3 ஆண்டு பட்டப்படிப்புக்கு ஏற்ப இடத்தைத் தேர்ந்தெடுத்து, கட்டிடங்கள் கட்டுவதற்கான முறையில் செலவு செய்து வந்திருக்கிறோம். வரும் ஆண்டிலிருந்து சட்டக் கல்வி 5 ஆண்டுப் படிப்பாக வர இருக்கிற காரணத்தால், அப்போது ஏற்படுகிற புதிய மாறுதலுக்கு ஏற்ப, கூடுதல் வசதிகளைச் செய்து தர வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதைப் பற்றிச் சிந்தித்து முடிவெடுக்க இருக்கிறோம். தற்போது மதுரை சட்டக் கல்லூரி இருக்கிற இடத்திலேயே விளையாட்டு மைதானம் அமைக்கிற சாத்தியக் கூறு இல்லை. தல்லாகுளம் அருகில் சர்வே எண் 134/2-ல் இதற்காக 4 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் விடுதி கட்டியதுபோக மீதியுள்ள இடத்தை விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்த முடியுமா என்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவ்வாறு பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்யுமாறும் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, தல்லாகுளத்தின் அருகில் உள்ள இந்தப் பகுதியை மேடாக்காமல் விளையாட முடியாது. அதற்கான வசதி அங்கே இருக்காது, அதோடு அங்கே சென்று விளையாடுவதற்கு வசதியாக தற்போது சட்டக் கல்லூரியுள்ள இடத்திலிருந்து மாணவர்கள் சென்று வர போக்குவரத்து வசதி செய்து தரப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாணவர்கள் விளையாட்டு மைதானத்திற்குச் சென்று வர போக்குவரத்து வசதி தேவையானால், அது குறித்து தனியாகப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, தற்போது மதுரை சட்டக் கல்லூரி இருக்கிற இடத்தில் சரியான விளையாட்டு மைதானம் இல்லாமல் இருக்கிறது. ஆனால் பக்கத்திலேயே வக்ஃப் போர்டுக்குச் சொந்தமான கல்லூரி ஒன்று இருக்கிறது. அந்தக் கல்லூரிக்குச் சொந்தமான இடம் தற்போது மதில் சுவர்கூட இல்லாமல் இருக்கிறது. அந்த இடத்தைச் சுத்தப் படுத்தி ஒரு விளையாட்டு மைதானமாக ஆக்கினால், இரண்டு கல்லூரியின் மாணவர்களும் விளையாடுவதற்கு வசதியாக இருக்கும். இனி சட்டக் கல்லூரியில் ஐந்தாண்டு பட்டப்படிப்பு வர இருக்கிற காரணத்தால், மிகவும்



இளைஞர்களாக இருக்கிற மாணவர்கள் வந்து சேரும் நிலை ஏற்படும். எனவே அவர்களையெல்லாம் ஊக்கப்படுத்தும் வகையில் பக்கத்திலேயே ஒரு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, ஒரு கல்லூரி மாணவர்கள் விளையாடுகிற விளையாட்டு மைதானத்திலேயே இன்னொரு கல்லூரி மாணவர்களும் வந்து விளையாடுகிற முறையில் ஏற்பாடு செய்வதென்பது நடைமுறைக்கு ஒத்துவராது என்றுதான் நான் கருதுகிறேன். இறுதியில் அதுவே வேறுபல பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைந்துவிடும். இப்போது விளையாட்டு மைதானத்தைப்பற்றி பலரும் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மையில் எத்தனை பேர் விளையாடுவதற்கு வருகிறார்கள் என்பதுதான் முக்கியமான பிரச்சனை. விளையாட்டில் மாணவர்களுக்கு ஆர்வம் வந்து, அவர்களுக்கு உண்மையிலேயே மைதானம் தேவைப் படுகிறது என்கிற நிலை வரும்போது, எப்படியும் நாம் அவர்களுக்கு ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். ஆனால், பொதுவாக விளையாட்டில் மாணவர்களுக்கு ஆர்வம் குன்றியிருக்கிறது. படிப்பிலேயே ஆர்வம் குன்றியிருக்கிறது என்கிற நிலையில்தான் கல்லூரிகளையே நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் கடந்த இரண்டாண்டுகளாக விளையாட்டில் ஒரு முன்னேற்றத்தைக் கண்டு வருகிறோம். எனவே இந்த ஆர்வம் விளையாட்டிலும் கல்வியிலும் நல்ல முறையில் வரும்போது, இதுபோன்ற பிரச்சனைகள் எதுவும் குறுக்கே நிற்காது. அரசு, எப்படியும் தேவையான நடவடிக்கைகளைக் கண்டிப்பாக எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. அருணாசலம் :** தலைவர் அவர்களே, மதுரையில் உள்ள சட்டக் கல்லூரிக்கு அருகிலேயே விளையாட்டு மைதானம் ஒன்று இருக்கிறது. அதை மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் அரசு ஏற்பாடு செய்வதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, பக்கத்திலே இருக்கிற இடத்தைப்பற்றி என்னிடம் விவரம் இல்லை. எனக்கு நினைவு சரியாக இருக்குமானால், பக்கத்தில் இருக்கிற அந்த இடத்தைத்தான் உலகத் தமிழ்ச் சங்கத்திற்காக வேண்டுமென்று பார்த்திருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 26

கல்வி அமைச்சர்களின் மாநாடு.

*325. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில அரசு 1980 அக்டோபரில், சென்னையில் கல்வி அமைச்சர்கள் மாநாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்ததா ?

(இ) ஆம் எனில், இதில் கலந்துகொண்ட மாநிலங்கள் யாவை ?

(உ) இம்மாநாட்டில் உருவான பொதுவான மையக்கருத்துக்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளா, மத்தியப்பிரதேசம், ஒரிசா, தமிழ்நாடு, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் கலந்து கொண்டன.

(உ) பின்வரும் விஷயங்கள்பற்றி பொதுவான கருத்துக்கள் அம்மாநாட்டில் உருவாயின ; அதாவது (1) ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்விக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்; (2) பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு வட்டார மையங்கள் அமைக்க வேண்டும்; (3) மைய அரசும் மாநில அரசுகளும் தேசிய ஒருமைப்பாட்டைப் பேணி வளர்க்கத் தக்க வகையில் பல்வேறு கல்விப் பணிகளை நடத்த வேண்டும்; (4) மாணவர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் ஆகியோரை மாநிலத்திற்கு மாநிலம் பரிமாற்றம் செய்துகொள்ள விரிவான திட்டங்கள் வகுக்க வேண்டும் ; (5) இந்தியப் பூர்வீக முடைய வெளிநாட்டு மாணவர்களையும் வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியக் குடிமக்களுடைய குழந்தைகளையும் மாநிலங்களிலுள்ள கல்வி நிலையங்கள் தாங்களே நேரிடையாகச் சேர்த்துக் கொள்ள மைய அரசு அனுமதிக்க வேண்டும்; ஆகிய ஐந்து விஷயங்களைப் பற்றி மாநாட்டில் ஒருமித்த கருத்துக்கள் உருவாயின.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, அனைத்து மாநில கல்வியமைச்சர்களுக்கும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அழைப்புகள் அனுப்பப்பட்டனவா ? சில மாநிலக் கல்வியமைச்சர்கள் மட்டும் இதில் கலந்து கொண்டிருக்கிறார்கள். சில மாநிலங்களின் கல்வியமைச்சர்கள் கலந்து கொள்ளாததற்குக் காரணம் ஏதேனும் உண்டா ? மாநாட்டில் உருவான மையக் கருத்துக்களின் அடிப்படையில் தொடர் நடவடிக்கைகள் நமது அரசால் உருவாக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா ? இதுகுறித்து மத்தியக் கல்வியமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா ? அது குறித்து மத்திய அரசின் கருத்து என்ன என்பதை அறியலாமா ?



1983 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அனைத்து மாநில கல்வியமைச்சர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. வசதியின்மை காரணமாக சில கல்வியமைச்சர்கள் வர இயலாமை குறித்து வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். வேறு சில மாநிலங்களைப் பொறுத்த வரையில், அவற்றின் கல்வியமைச்சர்கள் வருவதற்குப் பதிலாக அதிகாரிகள் அனுப்பப் பட்டிருந்தார்கள். அங்கே மேற்கொள்ளப்பட்ட அனைத்து முடிவுகளும் அனைத்து மாநிலங்களுக்கும், மத்திய அரசுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு வேறு ஒரு இடத்தில் இந்த மாநாட்டைக் கூட்டலாம் என்று முடிவெடுத்தோம். ஆனால் இதுவரை அந்தக் கூட்டம் கூட்டப்படவில்லை. வாய்ப்புகள் கிடைக்கும்போதெல்லாம், இந்தப் பிரச்சினைகளுக்கு ஆதரவினைத் தேடிக் கொண்டிருக்கிறோம். ஒருவர் மட்டும் இதை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அது ஏற்றுக்கொள்கிற நிலையில் இல்லை. எனவே அவர்கள் இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வருகிறோம். சந்தர்ப்பங்கள் கிடைக்கிறபோதெல்லாம் இந்தக் கருத்துக்கு ஆதரவான முறையில் நாம் பேசி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, சென்னையில் கூடிய அனைத்து மாநில கல்வியமைச்சர்கள் மாநாட்டில் உருவான 5 பொதுக் கருத்துக்கள் இதற்குப் பிறகு மத்திய அரசின் கல்வியமைச்சரால் கூட்டப் பட்ட கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, ஏதேனும் முடிவுகள் மேற்கொள்ளப் பட்டனவா ? இங்கே வந்து மாநாட்டில் கலந்துகொண்ட மாநிலங்களின் கல்வியமைச்சர்கள் மேற்கொண்ட முடிவுகள் மத்திய அரசின் கல்வியமைச்சகத் திற்குத் தெரிவிக்கப்பட்டு கல்வியமைச்சர்கள் மாநாட்டில் இவை குறித்து விவாதிக்கப்படுவதற்கான செயற்குறிப்புகள் ஏதேனும் கடிதம் மூலம் மத்தியக் கல்வியமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதற்குப் பிறகு ஒரு மாநாடு நடைபெற்றது. அப்போது சட்டசபை நடைபெற்றுக்கொண்டிருந்த காரணத்தால், நான் சென்று கலந்து கொள்கிற வாய்ப்பில்லாமல் போய் விட்டது என்று கருதுகிறேன். மறுபடியும் அத்தகைய மாநாடு நடைபெறும் போது, இந்த மாநாட்டுக் கருத்துக்களையெல்லாம் அங்கே எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறேன். அப்படிக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் மாநாட்டுக் கருத்துக்களையெல்லாம் வலியுறுத்தும் வகையில் பேசுவோம். இதை அஜெண்டாவில் சேர்க்கிற நிலை வராது அமைச்சர்கள் பேசுகிறபோது, பொதுவான கருத்துக்களை ஏற்றுக்கொள்கிறோம்.

[1983 ஏப்ரல் 26

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நம் மாநில அரசு இதற்கு முதல் முயற்சி மேற்கொண்டு மாநாட்டை ஏற்பாடு செய்திருக்கிறது. அதைப்போலவே பிற மாநிலங்களிலும் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அந்த மாநாட்டில் முடிவு ஏதேனும் செய்யப்பட்டதா ? வேறு மாநிலங்களில் கல்வியமைச்சர்கள் மாநாட்டை ஏற்பாடு செய்யும் பொதுக் கருத்து உருவாகியிருக்கிறதா ? அதுபற்றிய விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, வேறு ஒரு மாநிலத்தில் அடுத்த கூட்டம் நடத்தப்பட வேண்டுமென்ற பொதுவான கருத்தோடுதான் பிரிந்து சென்றோம். அதன்படி இதுவரை நடக்கவில்லை. மறுபடியும் அப்படிப்பட்ட வாய்ப்பு வருகிறபோது, தமிழ் நாடு அதற்குப் பரிபூரண ஒத்துழைப்பை நல்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## சூரிய வெப்ப சக்தி ஆராய்ச்சி.

*** 326. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், சூரிய வெப்ப சக்தி பற்றி ஆராய்ச்சி நடைபெற்று வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், இதுவரை செய்துள்ள ஆராய்ச்சியின் முக்கிய முடிவுகள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) பல்வேறுபட்ட கதிரவ கதிர் சேகரிப்பான்கள் (Solar Collectors) வடிவமைக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டன. கதிரவ கதிர் குவிப்பான்கள் (Solar focussing collectors) கதிரவ நீர் வெப்பமேற்றிகள் (Solar water heaters) கதிரவ காற்று வெப்பமேற்றிகள் (Solar air heaters) கதிரவ நீர் சுத்திகரிப்பான்கள் (Solar stills) கதிரவ வெப்ப பெட்டி உலர்த்திகள் (Solar cabinet driers) கதிரவ வெப்ப காற்று பதப்படுத்துவான் (Solar air-conditioner) கதிரவ வெப்ப பால் வெப்பமேற்றி (Solar milk heater) கதிரவ வெப்ப மெழுகு உருக்கி. (Solar wax melter) மற்றும் நாளொன்றுக்கு ஒரு டன் நெல் உலர்த்தி (One ton per day Solar paddy drier) ஆகியவை வடிவமைக்கப்பட்டு வெற்றிகரமாக சோதனைக்குட்படுத்தப்பட்டதாக பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது.



1983 ஏப்ரல் 26]

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, வெற்றிகரமான முறையில் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட ஆராய்ச்சி முடிவுகள் பொது மக்களுக்கு எந்த வகையில் பயனுள்ளவைகளாக ஆக்கப்படுகின்றன ? மாநில அளவில் சிக்கனமான செலவில் சூரிய வெளிச்சத்தைப் பயன்படுத்தினால், அதன் மூலம் தற்போது ஏற்பட்டுள்ள மின் தட்டுப்பாட்டிலிருந்து மக்களுக்கு ஓரளவு நிவாரணத்தைத் தர முடியும். எனவே எந்த வகையில் அந்தத் துறை பொதுமக்களுக்கு உதவும் வகையில் இந்தச் சோதனைகளின் முடிவுகளைப் பயன்படுத்துவதற்கு முன்வர இருக்கிறது ?

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பல்கலைக் கழகத்திலே இப்படி ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள் என்றால், அதற்கடுத்து பொது மக்கள் உபயோகிக்க முடியும் என்ற நிலைமைக்கு அரசின் சார்பிலோ, தனிப்பட்டவர்களோ அந்தக் கருவிகளை உற்பத்தி செய்து சந்தைக்குக் கொண்டு வந்தாக வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகியிருப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும் கதிரவன் வெப்பத்தைப் பயன்படுத்தி பல்வேறு வகையான கருவிகள் செய்யப்பட்டு சந்தைக்கு வந்திருக்கின்றன என்பதை நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு கைத்தறித் துறையில் ஈரோடு புராசெசிங் சென்டரில் இது போன்ற ஒரு இயந்திரம் வாங்குவதற்கான முயற்சியில் அவர்கள்கூட ஈடுபட்டிருக்கிறார்கள். அதைப் போல பல்வேறு முறையில் பொது மக்களுடைய பயனுக்குக் கொண்டுவருவார்கள்.

THIRU J. M. MIAKHAN: Sir, are the Government aware that the scientists assembled in Auroville at Pondicherry have made very important strides in the field of solar energy. They have found out that electricity can be produced through solar energy at a cheap cost for use in the rural areas. Moreover, Thiruvalargal Mettur Chemicals are also manufacturing solar cells at a reduced cost. Are the Government aware of these things and do they intend to pcpularise these things ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வழிமுறைகளில் செலவு அதிகமாக இருப்பதால், நாம் இன்னும் அதை ஏற்படுத்தவில்லை. சோலார் எனர்ஜியைப் பயன்படுத்தி தெர்மல் ஸ்டேஷனை ஜப்பானில் போட்டிருக்கிறார்கள். அமெரிக்காவில் கூட இருப்பதாக எங்கேயோ படித்ததாக நினைவு. அதிகமான பணத்தைச் செலவு செய்ய வேண்டிய நிலையில் இருப்பதால், நாம் அதைப்

பின்பற்றும் முறையிலில்லை. ஆனால் பரிசோதனை தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று கருதி தொடர்ந்து பரிசோதனை நடைபெறுகிறபோது, நம்முடைய பணவசதிக்கேற்ப நிதிநிலைமைகளுக்கேற்ப இத்தகைய கருவி களைப் பயன்படுத்த முடியும் என்ற நிலை வருகிறபோது பரவலாகப் பயன் படுத்தலாம்.

THIRU J. M. MIAKHAN : Sir, Thiruvalargal Mettur Chemicals have made a break through in this respect. They claim that they have found out a cheap chemical for the manufacture of solar cells. The Government may contact them and get the information.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது பெரிய மின் தட்டுப் பாடு உள்ள நிலைமையில் அப்படிக் கண்டுபிடித்திருப்பார்களேயானால், அதை வியாபாரத்திற்குக் கொண்டு வந்து நிறைய லாபத்தைச் சம்பாதித்திருக்கலாம். அப்படிச் செய்யாததிலிருந்து, அதைப்பற்றித் தெளிவான அபிப்பிராயம் நமக்கு ஏற்படவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தமிழகத்திலுள்ள இதர பல்கலைக் கழகங் களிலும் ஆசிரியர்கள்—மாணவர்கள் இணைந்து பல்வேறு துறைகளில் பல ஆராய்ச்சிகளைச் செய்து பலவற்றைப் புதிதாகக் கண்டுபிடிக்கிறார்கள். அவைகள் எல்லாம் மக்களுக்குத் தெரியவில்லை. ஓரிரு சமயங்களில் செய்தித் தாளில் வருவதோடு சரி. ஆகவே பல்கலைக் கழகங்களில் நடை பெறுகிற வெவ்வேறு ஆராய்ச்சி முடிவுகளையெல்லாம் ஒருங்கிணைத்து அவற்றில் மக்களுக்குப் பயன் உள்ளதாக இருப்பவற்றையெல்லாம் செயல் படுத்தும் முயற்சியை ஒரு தனி அமைப்பின் மூலமாகவோ, கல்வித் துறையின் மூலமாகவோ அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பல்கலைக் கழகங்கள் தன்னிச்சை யாகச் செய்வதைப் போல தோன்றினாலும், மத்திய மாநில அரசுகளுடைய ஒத்துழைப்பும், வழிகாட்டுதலும் அவ்வப்போது இருக்கின்றன. சையன்ஸ் அண்டு டெக்னாலஜி என்று மத்திய அரசு ஏற்படுத்தியுள்ள இலாக்காவின் மூலமாகவும், யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் மூலமாகவும், பல்வேறு விஞ்ஞான மையங்கள் மூலமாகவும், பல்வேறு நிதிநிறுவனங்கள் மூலமாகவும் டெக்னாலஜி என்று மத்திய அரசு ஏற்படுத்தியுள்ள இலாக்காவின் மூலமாகவும், ஆதரவுகள் பெற்று இந்த ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. நாம் கூட எஜுகேஷன், சையன்ஸ் அண்டு டெக்னாலஜி என்று



ஆக்கி ஒரு விஞ்ஞான தொழில் நுட்பக் குழுவை அமைக்க முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இது போன்ற ஆராய்ச்சிகளை ஒருமுகப் படுத்தி அதன் மூலம் மக்களுக்குப் பயன் போய்ச் சேருவதற்கான முயற்சி களில் ஈடுபட இந்தக் குழுவை நாம் பயன்படுத்திக்கொள்வோம்.

திரு. ம. சங்கரலிங்கம் : மத்திய மாநில அரசுகளுடைய உதவிகள் மூலமாக பல்கலைக் கழகங்கள் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்து சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தும் முறையை ஆய்ந்து வெற்றிகண்டிருப்பதாக அறிவிக்கிறார்கள். எனவே அந்த ஆராய்ச்சியில் வெற்றி கண்டவர்களையும், தொழில் முனைவர் களையும் அழைத்து அவர்கள் இருவரையும் ஒரு சேர சந்திக்கச் செய்து, குறைந்த செலவில் இத்தகைய கருவிகள் மக்களுக்குப் பயன்படுகிற வகையில் உற்பத்தி செய்கிற முறையை உருவாக்க அரசு முதலில் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் கேள்விக்காக உள்ள பதிலில், சூரியனுடைய வெப்பத்தை நேரிடையாகப் பயன்படுத்துகிற கருவிகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். இது தவிர, சூரிய வெப்பத்தை மின்சாரமாக மாற்றி, அந்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் திட்டம் தனியாக இருக்கிறது. நம் நாட்டைப் பொறுத்தவரையில், எப்படியும் சூரிய வெப்பத்தை மின்சாரமாக மாற்றிப் பயன்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம். இதிலே பல்வேறு அமைப்புகள் ஈடுபட்டிருக்கின்றன. அதிலே ஒன்றுதான் அண்ணாமலைப் பல்கலைக் கழகம். இந்த முயற்சிகளை ஒருமுகப்படுத்தி ஆராய்ச்சியின் முடிவுகளை மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற கருத்து வரவேற்கக்கூடியது. அத்தகைய காரியங்களைச் செவ்வனே செய்ய வேண்டும் என்பதற்காகத்தான், நம்முடைய அரசைப் பொறுத்த வரையில், விஞ்ஞான தொழில் நுட்பக் குழுவை அமைத்திருக் கிறோம். அந்தக் குழு நல்ல முறையிலே செயல்படும்போது, இத்தகைய முயற்சிகளில் அரசின் நல்லாதரவைப் பெறும். அதனுடைய பயன்களை மக்களும் அடைவார்கள்.

திரு. பா. ரா. தாமஸ் : அமெரிக்க நாட்டில் இரண்டாயிரம் ஆண்டில் 20 விழுக்காடு மின்சக்தியை சூரிய வெப்பத்திலிருந்து பெறுவார்கள் என்ற செய்தியை பத்திரிக்கைக் குறிப்பிலிருந்து பார்க்கிறோம். ஆனால் நம்முடைய நாட்டிலே அப்படி இராது என்று சொல்லுகிறார்கள். நமது நாட்டிலே கூட வட மாநிலங்களில் சூரிய வெப்ப அடுப்பை வைத்து அதற்குள்ளே பருப்பு, காய்கறிகள், அரிசி போன்றவற்றை வைத்துவிட்டுப் போனால், மத்திய உணவு

சமைக்கப்பட்டுவிடுகிறது என்று சொல்லுகிறார்கள். அந்த அளவிலே தமிழகத்திலும் சிறு தொழில் நிறுவனங்கள் மூலமாகச் சூரிய அடுப்பை உற்பத்தி செய்து விற்றால், அதனால் வேலைக்குச் செல்லுபவர்கள் பயன்பெறலாம் அல்லவா? அந்த வகையிலே அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** காந்தி கிராமத்தில் தனிப்பட்டவர்கள் செய்த அடுப்பை வாங்கி வைத்திருந்தார்கள். இப்போதே அத்தகைய அடுப்புகள் மார்க்கெட்டுக்கு வந்திருக்கின்றன. இன்னும் அதை வாங்கிப் பயன்படுத்தும் நிலைமைக்கு நாம் வரவில்லை. ஏற்கெனவே உள்ள பழக்கத்தின் காரணமாக நாம் பயன்படுத்தாமல் இருக்கிறோம். மார்க்கெட்டில் இது போன்ற கருவிகள், அமைப்புகள் வந்திருக்கின்றன. அது மட்டுமல்லாமல், சோலார் எனெர்ஜியைக் கொண்டு இயங்கக் கூடிய இயந்திரங்களையும், கருவிகளையும் வாங்கி உபயோகப்படுத்துகிறபோது, அதிகப்படியான மானியத்தை மத்திய அரசு தருகிறது என்று கேள்விப்படுகிறோம்.

### மாவட்டந்தோறும் பனைப் பொருட்கள் உற்பத்தி நிலையம்.

* 327. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாவட்டந்தோறும் ஒரு பனைப் பொருட்கள் உற்பத்தி நிலையம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** (அ) மற்றும (இ) தர்மபுரி, இராமநாதபுரம், தென்னாற்காடு, செங்கற்பட்டு, திருநெல்வேலி மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் பனைப் பொருள் உற்பத்தி மையங்கள் உள்ளன. இதர மாவட்டங்களில் பனைப் பொருள் உற்பத்தி நிலையங்கள் அமைக்கும் குறிப்பு அரசு மற்றும் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்த உற்பத்தி நிலையங்களில் எந்தெந்த வகையான பனைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன ? உற்பத்தி செய்யப்படுகின்ற பனைப்பொருட்களுக்கு மக்களிடத்திலே நல்லாதரவு இருக்கிறதா ?



**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** இந்த மையங்களில் நுங்கு பதப்படுத்துதல் பிரிவு, பனங்கற்கண்டு பிரிவு, பனந்தும்பு பிரிவு, பனை ஓலைப் பிரிவு, பனை வெல்ல உற்பத்திப் பிரிவு, பனங்கிழங்கு மாவு பிரிவு, பன நாரிகைப் பிரிவு, பனை கட்டுமான பொருட்கள் பிரிவு, பனஞ்சீனி ஆலைகள் ஆகியவைகள் செயல்படுகின்றன. இப்படிப்பட்ட பொருள்களுக்கு மக்கள் மத்தியிலே நல்ல வரவேற்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்தத் துறையில் உற்பத்தி செய்யப்படும் "பாம்டா" என்ற ஒரு வகையான பானம் சில இடங்களில் மட்டும் கிடைக்கிறது. ஆகவே பரந்த அளவில் அதை உற்பத்தி செய்து தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் அது கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** பாம்-கோலா, பாம்-டா என்ற இரண்டு பானங்கள் பனஞ் சீனியிலிருந்து தயாரிக்கப்படுவதால், ஆரோக்கியத்திற்கு நல்லது என்ற கருத்து தமிழ் நாட்டில் பரவியிருப்பதால், கன்னியாகுமரி மாவட்டம், கோவை மாவட்டம், சென்னை மாவட்டம் போன்ற மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டு மக்களிடையே நல்ல வரவேற்பு பெற்றுக் கொண்டிருக்கிறது. டில்லியிலேகூட, இதற்காக ஒரு பிரிவு இயங்கி வருகிறது. அங்கே நல்ல முறையிலே இயங்கி வருகிறது.

(முற்பகல் 10-00)

**திரு. க. அருணாசலம் :** இப்போது பனைப் பொருட்கள் ஏற்றுமதியாவதுபற்றிச் சொல்கின்றார்கள். அது எவ்வளவு ஏற்றுமதி செய்யப்பட்டுகின்றது? அதனால் வரும் லாபம் யாது?

**மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் :** தலைவர் அவர்களே, பனந்தும்பு போன்ற பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த வாரியத்தில் பனை ஓலையிலிருந்து தயாரிக்கப்படும் பொருள்கள் ஏஜென்சி வழியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நுங்கு, பாம்ஜேக்கரி ஆகியவைகளை அமெரிக்கா நாட்டிற்கும், அரேபியன் கன்ட்ரிகளுக்கும் ஏற்றுமதி செய்வதற்கான ஆர்டர்கள் கிடைத்திருக்கின்றன. அதை விரைவிலே அனுப்புவதற்கான நடைமுறைகளை அரசு எடுத்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 26

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, இந்த உற்பத்தி நிலையத்தை கோவை மாவட்டத்திலே அமைக்க இருக்கின்றார்களா ? இப்போது அந்தப் பனைப் பொருள்கள் பெருகியிருக்கின்றனவா ? பாம்-டா எல்லாம் வெய்யில் காலத்திலே குடித்தால் சுவையாக இருக்கும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு சொ. நீ. இராசேந்திரன் : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில், கிணற்றுக்கடவு என்ற ஊரில் இந்த மையம் ஆரம்பிக்கப்படுவதற்கான முயற்சி நடைபெற்று வருகிறது, பாம்-டா, பாம்-கோலா போன்றவற்றுக்கு வரவேற்பு இருப்பதால், உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகளை இந்த வாரியம் எடுத்து வருகிறது.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 6 மாவட்டங்களிலேதான் இந்தப் பனைத் தொழில்களை, ஆரம்பித்திருப்பதாகச் சொல்கின்றார்கள். இதைப் பிற மாவட்டங்களிலேயும் எப்போது ஆரம்பிக்க இருக்கிறார்கள் ? மற்றொரு கேள்வி என்னவென்றால், பொதுவாக பனை மரங்கள் நடுவதைப் பொறுத்தவரையிலே பனை மரத்தை நடுபவர்கள் பார்த்துவிட்டு சாவார்கள், பனையைத் தின்னமாட்டார்கள், ஆனால் தென்னையைப் பொறுத்த வரையில், தென்னையைத் தின்றுவிட்டுச் சாவார்கள் என்று சொல்வார்கள். ஆகவே தென்னை மரத்தையும் பனை மரத்தையும் சேர்த்து நடக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களில், கன்னியாகுமரியிலே அதங்கோடு பகுதியில் ஆரம்பிக்க முயற்சி எடுத்து வருகிறோம். அதுபோலவே இராமநாதபுரத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூரிலும், திருச்சி மாவட்டத்திலே, கே. பரமத்தியிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார்குடியிலும், சேலம் மாவட்டத்தில் ஜலகண்டபுரத்திலும், வட ஆற்காடு மாவட்டத்தில் மங்களம் மாமண்டூரிலும், செங்கற்பட்டிலே கும்மிடிபூண்டியிலும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை இந்த வாரியம் எடுத்து வருகிறது. விரைவிலே அங்கே அந்த மையங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்னை குறுகிய காலத்தில் வளர்வதுபோல பனை மரத்தையும், ஆராய்ச்சிகள் செய்து, அதே தன்மைகளில் வளர்க்கின்ற அளவுக்கு முயற்சிகள் நடக்கின்றன. பனை மரங்கள் 30 ஆண்டுகள் கழித்து பருவம் அடைகின்றன. ஆகவே அதைக் குறைக்கின்ற சூழ்நிலைக்கு மாற்றியமைத்து ஒரு 10 ஆண்டு காலத்திலே பனை மரங்கள் பலன் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதா என்பதைப்பற்றி ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சி செய்து



1983 ஏப்ரல் 26]

வருகின்றது. நெட்டை மரமாக வளர்வதை குட்டை மரமாக வளர்க்க இப்போது ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இந்தத் தலைமுறையிலே இல்லாவிட்டாலும், அடுத்த தலைமுறையிலே வீட்டிற்கு ஒரு தென்னை, பனை மரங்கள் நடவேண்டும் என்ற எண்ணம் மக்களிடையே உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, பனை மரப் பொருள்களிலிருந்து பயன் தரத்தக்கவைகளைத் தயாரித்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு பல பொருள்களைச் செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி இருந்தாலும், அந்த மரங்களிலே ஏறி அந்தப் பொருள்களைக் கொண்டுவருகின்ற தொழிலாளர்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அதுவும் மரங்கள் உயரமாக இருப்பதால், அத்தகைய காலகட்டத்தில் கடினமான உழைப்புக்கு மக்கள் கிடைக்காத நிலை இருப்பதாலும், பலர் அந்தப் பனைமரத் தொழிலிலே ஈடுபடுவது அரிதாக இருக்கின்றது. ஆகவே அதிலே லிப்ட் மூலமாக ஏறுவதற்கு சிறிய இயந்திரம் ஏதாவது கண்டுபிடிக்க ஏற்பாடு செய்வார்களா ? இன்னும் கோயம்புத்தூர் விவசாயப் பல்கலைக்கழகம் மூலம் இந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்து பனை மரத்திலே கூட குறைந்த காலத்தில் பலன் தருகின்ற அளவுக்கு, 7 அல்லது 10 ஆண்டுகளில் பலன் தரத்தக்க அளவுக்கு அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : தலைவர் அவர்களே, பனை மரத்திலே ஏறுவதிலே அவர்கள் கையாளுகின்ற முறைகளை நவீனப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் கடலூரிலே மற்றும் பல இடங்களிலே அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து வந்தாலும்கூட, பனை மரம் ஏறுகின்றவர்கள் அந்த முறைகளைப் பின்பற்ற மாட்டோம் என்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் பழைய முறைகளையே கையாளுகிறார்கள். எதிர்காலத்திலேயாவது வருகின்ற இளைஞர்கள் இப்படிப்பட்ட முறைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று இந்த வாரியம் முயற்சி செய்துகொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பனை மரத்தை குட்டை மரமாகவும், குறைவான காலத்திலே பலன் கொடுக்கக்கூடிய அளவிலும் செய்ய முயற்சி செய்யுமா என்று கேட்டார்கள், இதைத்தான் ஸ்ரீவில்லிப்புத்தூரில் உள்ள ஆராய்ச்சி நிலையம் விவசாயக் கல்லூரியின் சார்பாகச் செய்து கொண்டுவருகிறது. விரைவிலே நல்ல பலன் கொடுக்கக்கூடிய அளவுக்கு தென்னை மரத்தையும் பனை மரத்தையும் கிராஸ் செய்து, அதிலிருந்து கிடைக்கின்ற கொட்டையை வைத்து புதிய ரகத்தில் பனைமரம் உருவாக்க முயற்சி நடைபெற்று வருகிறது. அந்த ஆராய்ச்சி வெற்றி பெற்றுவிட்டால், 12 மாதமும் பதநீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் நிரந்தரமான வேலை கிடைக்கும் வாய்ப்பும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 26

### கதிரே இல்லாத நூற்புக் கருவிகள்.

*328 வினா.—திரு. க. அருணாசலம் : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் கதிரே இல்லாத நூற்புக் கருவிகள் இயங்குகின்றன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அக்கருவிகளின் உற்பத்தித் திறன் யாது ?

(உ) இதனைத் தமிழகம் முழுவதும் விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : (அ) ஆம். கதிரே இல்லாத நூற்புக் கருவிகள் டப்பா இராட்டை (Pot charkha) நாங்குனேரி சர்வோதய சங்கத்தினரால் பனங்குடியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(இ) இக்கருவி ஒன்று, ஒரு மணி நேரத்தில் 1 சிட்டம் (1,000 மீட்டர்) போடும் திறனுடையது. ஒரு நாளைக்கு ஒரு இராட்டையில் 8 முதல் 12 சிட்டங்கள் வரை நூற்கப்படுகிறது.

(உ) மேற்படி கதிரே இல்லாத நூற்புக் கருவிகளை இயக்கும் திட்டத்திற்கு கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் நிதியுதவி அளிக்கப்படுவதில்லை. இந்த ஆணைக் குழு நிதி உதவி வழங்க வந்தால், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் இத்திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்துவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. க. அருணாசலம் : தலைவர் அவர்களே, ஆணைக்குழு உதவி செய்தால் தான் இது விஸ்தரிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்திலே முரட்டு நூல்களும் முரட்டுத் துணிகளும் தேவைப் படுகின்றன. அதற்காக ஆலைகள் கூட அமைக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இப்போது வருகின்ற துப்பட்டி, ஜமக்காளம், பர்னிசிங் கிலாத் போன்றவைகள் எல்லாம் வேறு மாநிலத்திலேயிருந்து இறக்குமதியாகிக்கொண்டிருக்கின்றன. இதை அனுசரித்து நம்முடைய மாநிலத்திலே டப்பா ராட்டைகளை உற்பத்தி செய்து, அதை அதிகமாகப் பரவலாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1983 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. சொ. நீ. இராசேந்திரன் : தலைவர் அவர்களே, இதில் கிடைக்கின்ற நூலைத்தான் போர்வை, டவல், கோட்டிங் ரகங்களுக்குப் பயன் படுத்துகின்றார்கள். இதைத் தயாரிப்பதற்கு மட்டுமல்ல, எந்த ஒரு புதிய முறை என்றாலும், முயற்சி என்றாலும், காதி கமிஷனுடைய அனுமதி வேண்டும். அப்படி அனுமதித்தால்தான் செய்ய முடியும். இதிலே கதர் வாரியம் முயற்சி எடுத்தாலும்கூட, காதி கமிஷன் அனுமதித்தால்தான் தமிழக அரசு நிறைவேற்ற முடியும். அப்படி அவர்கள் அனுமதித்தால், தமிழக அரசு அமல்படுத்தத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அருணாசலம் : தலைவர் அவர்களே, காதி கமிஷன் பணம் கொடுத்தால்தான், வாரியம் செய்யும் என்ற நிலை இல்லை. நம் மாநிலத்திலேகூட பண உதவி செய்திருக்கிறார்கள். இப்போது ஆறு, ஏழு மில்கள் ஆரம்பிப்பதாகச் சொல்கின்றார்கள். அப்படி ஆரம்பிப்பதற்குச் செலவாவது ரூபாய் 7 கோடி என்றால், அதிலே 2½ கோடி ரூபாய்க்கு மேல் அரசாங்கம் கொடுக்க இருக்கின்றது. அதிலே ஒரு மில்லை நிறுத்தி வைத்தால் கூட, அமைச்சர் அவர்கள் சொல்வதிலிருந்து, மில்லின் உற்பத்தித் திறனைவிட இந்தத் தொழிலாளர்கள் இந்த முறையில் உருவாக்குகின்ற பொருள்களின் உற்பத்தித் திறன் அதிகமாக இருக்கிறது என்ற நிலை தெரிகிறது. ஆகவே ஏன் இப்போது 25 ஆயிரம் கதிர் ஓடுகின்ற மாதிரி ஒரு திட்டத்தை நிறைவேற்றி அதன் மூலம் அந்தத் தொழில் உள்ள தொழிலாளர்களுக்கும் பரவலாக வேலை கொடுத்து பலருக்குக் கூலிகிடைக்கின்ற அளவுக்குச் செயயக்கூடாது என்பம் அதற்கான ஆராய்ச்சிகளை ஏன் செய்யக்கூடாது என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சொ. நீ. இராசேந்திரன் : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். காதி கமிஷன் அனுமதி கொடுத்து பணம் வழங்கினால், இந்தத் திட்டத்தைப்பற்றிப் பரிசீலனை செய்து நிச்சயமாக நடைமுறைக்குக் கொண்டுவர வாரியம் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

உரிமைப் பிரச்சினையில் தீர்ப்பு குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் 12—2—1983-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருந்தேன். இன்றைக்கு 2 மாதங்களுக்கு மேல் ஆகின்றது . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் உட்கார வேண்டும், சொல்கிறேன். நான் சொல்வதைக் கேட்க வேண்டும். நாம் எல்லாம் நமக்கு உபயோகமானவரை, இந்த அவையினுடைய விதிமுறைகளை ஒழுங்காகப் பயன்படுத்திக்கொள்கிறோம். ஆனால் தலைவருடன் ஒத்துழைக்கின்ற இடங்களிலே அவையின் விதிமுறைகளை மறந்து விடுகிறோம். இந்த மாதிரி விஷயங்களைக் கேட்பதாக இருந்தால், அவைத் தலைவர் அறையிலே வந்து கேட்க வேண்டும். நேற்று முன்னாள் அறையிலே வந்து உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இந்தக் கூட்டத்திலேயே ஒன்றிரண்டு நாட்களில் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கின்றேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் இருக்கிறது, அதனால்தான் கேட்டேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது எனக்கும் தெரியும். அதற்குப் பின்னாலே போகாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் கேட்டேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேட்க வேண்டும் என்பதற்காகத்தான் கேட்டேன் என்றால், அதில் அர்த்தம் இல்லை. அது நடவடிக்கைக் குறிப்பிலே ஏறக்கூடாது என்றுதான் சொல்லவேண்டியிருக்கும். வேறு என்ன பண்ண முடியும்? நான் அப்போதே சொன்னேன். நான் தீர்ப்பு கொடுத்துவிடுகிறேன். அதில் ஒன்றும் அவசரம் இல்லை. நாளை சொல்லி விடுகிறேன்.



## 3. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்தி குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :

(1) தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1983).

(2) தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1983).

(முற்பகல் 10-10)

## 4 கவன ஈர்ப்பு.

கும்பகோணம் ஆடவர்-மகளிர் அரசுக் கலைக் கல்லூரியைச் சேர்ந்த பி.எஸ்ஸி. மாணவர்களுக்குச் சான்றிதழ் வராதது குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

“ கும்பகோணம் ஆடவர்-மகளிர் அரசுக் கலைக் கல்லூரியைச் சேர்ந்த பி.எஸ்ஸி. மாணவர்கள் எழுதிய III, IV and V பருவத் தேர்வுகளுக்குரிய மதிப்பெண் குறித்த சான்றிதழ்கள் வராதது குறித்தும், அதனால் அம்மாணவர்கள் ஏற்கெனவே எழுதிய பருவத் தேர்வு முடிவுகளை சரிவரத் தெரிய முடியாத நிலையில் தற்போது வரவிருக்கும் தேர்வுகளை எழுத வேண்டியிருப்பதால் அவர்கள் அடையும் பெருந்துயர் குறித்தும்.”

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

---

@ ஆம் 353 பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, விவர அறிக்கையில் கும்பகோணம் ஆண்கள் அரசு கல்லூரியைச் சேர்ந்த 18 மாணவர்களுக்கும், பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த 20 மாணவியருக்கும் மூன்றாவது மற்றும் ஐந்தாவது பருவத் தேர்வுகளின் முடிவுகள் தெரியாததால், அவர்கள் திரும்பவும் அந்தத் தேர்வுகளை எழுதும் நிலை இருக்கிறதென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு ஒரு காரணம் சொல்லப்பட்டுள்ளது. விடைத் தாள்களைத் திருத்துபவர்களிடமிருந்து விடைத் தாள்கள் திருத்தி வரப்பெறவில்லை என்பதால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறதென்றும், அவர்களுக்கு நினைவூட்டுக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறதென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. 4-வது, 6-வது செமஸ்டருக்குப் பணம் கட்டுவதற்கு முன்னாலேயே இந்த முடிவுகள் வந்திருக்க வேண்டும். அப்படி முடிவுகள் வராமல் இருக்கும் வகையில் விடைத் தாள்களைத் திருத்துவதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறதென்றால், காலதாமதம் ஏற்படுத்தியவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். விவர அறிக்கையில் 1, மாணவர்கள் முடிவு அறிவிக்கப்படாத பாடங்களில் தேர்வு எழுதலாமென்றும், அதற்குள் தேர்வு முடிவுகள் கிடைத்து இவர்கள் வெற்றி பெற்றிருந்தால், மீண்டும் தேர்வு எழுதச் செலுத்திய தொகை திரும்பத் தரப்படுமென்றும் தெரிவித்திருப்பது முறையாகுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இதிலே இருக்கும் சங்கடத்தை அரசு நன்கு உணர்கிறது. இது பல்கலைக் கழகம் தொடர்பான ஒரு காரியமாகும். இதிலே, ஆசிரியர்கள் விடைத் தாள்களைத் திருத்தி மதிப்பெண் பட்டியலை அனுப்பவில்லை என்பதுதான் எனக்குத் தரப் பட்டுள்ள விவரமாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் எப்படி நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றி போதுமான அதிகாரம் இல்லாததால், அவர்கள் மறுபடியும் கடிதங்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மார்க் ஷீட் அனுப்பினால்தான், இவர்களால் தேர்வு முடிவுகளை வெளியிட முடியும். அவர்கள் அனுப்பவில்லை. அதனால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக் கிறது. இந்தச் சூழ்நிலையில் இன்னொரு தேர்வு வந்துவிடுகிறது. எனவே இந்த மாணவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில், அவர்கள் இரண்டாம் முறை இந்தத் தேர்வை எழுதலாம் என்றும், அப்படி முதலிலே எழுதிய தேர்வுகளின் மார்க் ஷீட் வந்து, அதில் அவர்கள் வெற்றி பெற்றிருந் தால், அதை எடுத்துக்கொள்ளலாம் என்ற முறையில் ஒரு வாய்ப்பு தர,



பல்கலைக் கழகம் இந்தச் சலுகையை அறிவித்திருக்கிறது. தவறு, ஆசிரியர்கள் மார்க் ஷீட் அனுப்பாததுதான் என்பதைக் குறிப்பாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, இங்கே வந்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே கும்பகோணம் கல்லூரி பற்றிச் சொல்லியிருந்தாலும், மாநிலத்திலே பல பகுதிகளிலே இந்த நிலை இருக்கிறது. 1982லே என்னுடைய கல்லூரியிலே ஒரு வகுப்புக்கு இதுமாதிரி தேர்வுத் தாள்கள் திருத்தி வராததால், அப்போது பொறுப்பில் இருந்த துணை முதல்வரை மாணவர்கள் கண்டு, அவர் மாணவர்களிடத்தில் எந்தெந்தப் பாடத்தில் சந்தேகமாக இருக் கிறதோ, அந்தப் பாடத்திற்கு மட்டும் பணம் கட்டுங்கள் என்று சொன்னதை, ஒரு குற்றச்சாட்டாக வைத்து, போராட்டம் சில ஆசிரியர்களாலே தூண்டப் பட்டு, நடந்தது. செமஸ்டர் தேர்வு எழுதியிருந்தும், மீண்டும் தேர்வு எழுதச் சொல்லிக் கட்டாயப்படுத்துகிறார்கள் என்று துண்டுப் பிரசுரம் போட்டார்கள். சில ஆசிரியர்கள் வேண்டுமென்றே திருத்தாததால், இது ஒரு போராட்டமாக உருவாவதற்கு வழிவகை செய்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்படித் திருத்தாமல் இருந்துவிடுவது, அதற்குப் பரிகாரமாக ஏதாவது நடவடிக்கை எடுக்கும் போது, ஆசிரியர்கள் அதை ஒரு போராட்டமாக ஆக்க முயற்சிப் பார்களானால், திருத்தி மதிப்பெண்ணைத் தராமல் இருக்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வில்லை என்றாலும், அதைப் போராட்டமாக ஆக்கும் முயற்சிகளில் ஈடுபடும் ஆசிரியர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதிலே அரசுக்கு எந்த விதமான கருத்து வேறுபாடுமில்லை. தேர்வுகளைப் பொறுத்த மட்டில், இப்படி விடைத் தாள்களை வாங்கி, திருத்தி அனுப்பாமல் இருக்கும் ஆசிரியர்களுக்கு ஒரு தண்டனை என்று வந்தா லொழிய, அவர்கள் இதை உடனடியாக அனுப்பும் நிலைக்கு வரமாட்டார்கள் என்பதைத்தான் இப்போது அனுபவங்கள் காட்டுகின்றன. சென்னைப் பல்கலைக் கழகம் இப்படி ஆசிரியர்களுக்கு அனுப்புவதைவிட, மையத் திருத்த முறையைப் பின்பற்ற இருக்கிறார்கள். அதிலே இந்தப் பிரச்சினை வராது. அந்த அடிப்படையிலே அவர்களுக்குத் தரப்படுகிற விடைத் தாள்களைத் திருத்தித் தந்துவிட்டுத்தான் போக முடியும். அதனால் இந்தக் குறைபாடு நீங்க வழி இருக்கிறதென்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இருந்தாலும் ஆசிரியர்கள் விடைத் தாள்களைத் திருத்திவிட்டு, மார்க் ஷீட்

தரவில்லை என்று 40, 50 ஆசிரியர்களின் பெயரை, ஒரு லிஸ்டைத் தந்திருக்கிறார்கள். ஆண்கள் கல்லூரிகள் சம்பந்தமாக 31 ஆசிரியர்கள், பெண்கள் கல்லூரிகளைப் பொறுத்து 24 ஆசிரியர்கள் என்று மாநில முழுவதும் பரவியிருக்கிறார்கள். ஆகவே இவர்கள்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்து, நடவடிக்கை எடுக்கச் சொல்லி அரசு வற்புறுத்தும்.

### 5. அரசின் தீர்மானங்கள்.

(1) சட்டப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

" 1983-84 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற

1. திரு. ஏ. ஆர். தாமோதரன்,
2. திரு. சி. இராமலிங்கம்,
3. திரு. எஸ். ஆர். இராதா,
4. திரு. ஆ. நல்லசிவன்,
5. திரு. ம. சங்கரலிங்கம்

ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் " என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" 1983-84 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற

1. திரு. ஏ. ஆர். தாமோதரன்,
2. திரு. சி. இராமலிங்கம்,
3. திரு. எஸ். ஆர். இராதா,
4. திரு. ஆ. நல்லசிவன்,
5. திரு. ம. சங்கரலிங்கம்

ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



(2) சட்டப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர்களே,

" 1983-84 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற

1. திரு. பா. ரா. தாமஸ்,
2. திரு. ஆர். டி. சீத்தாபதி,
3. திரு. செ. முத்துசாமி,
4. திரு. பி. முனுசாமி,
5. திரு. சோ. ஆறுமுகம்

ஆகிய ஐந்து மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் " என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

" 1983-84 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற

1. திரு. பா. ரா. தாமஸ்,
2. திரு. ஆர். டி. சீத்தாபதி,
3. திரு. செ. முத்துசாமி,
4. திரு. பி. முனுசாமி,
5. திரு. சோ. ஆறுமுகம்

ஆகிய ஐந்து மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) சட்டப் பேரவையின் துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களை நியமனம் செய்தல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"1983-84ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற

1. செல்வி ஆ. லீலாவதி.

1. திரு. வலம்புரி ஜான்,

2. திரு. வலம்புரி ஜான்.

4. திரு. ஈ. எஸ். மியாகான்

5. திரு. ஜே. எம். மியாகான்

ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்களை நியமிக்க வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"1983-84ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை துணைச் சட்ட ஆய்வுக் குழுவில் பணியாற்ற

1. செல்வி ஆ. லீலாவதி.

2. திரு. வலம்புரி ஜான்.

3. திரு. ஏ. ஜே. தாஸ்,

4. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்

5. திரு. ஜே. எம். மியாகான்

ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்களை நியமிக்க வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



(4) சட்டப் பேரவையின் பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"1983-84ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற

1. திரு. காடுவெட்டி கண்ணப்பன்,

2. டாக்டர் இரா. சனார்த்தனம்,

3. திரு. க. இராமமூர்த்தி,

4. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்,

5. திரு. ம. சங்கரலிங்கம்

ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்"
என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"1983-84 ஆம் நிதியாண்டிற்குரிய சட்டப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற

1. திரு. காடுவெட்டி கண்ணப்பன்,

2. டாக்டர் இரா. சனார்த்தனம்,

3. திரு. க. இராமமூர்த்தி,

4. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்,

5. திரு. ம. சங்கரலிங்கம்

ஆகிய ஐந்து சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்",

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 6. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**(1) தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1983).**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1983)@ ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1983) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

(முற்பகல் 10-20)

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, நான் தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு கடன் நிவாரண திருத்த சட்ட முன்வடிவை வரவேற்று அமர்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, நான் தமிழக அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு கடன் நிவாரண திருத்த சட்ட முன்வடிவை வரவேற்கிறேன். கடன் வாங்கிய ஏழையெளிய மக்களுக்கு பல வகையிலும் நிவாரணம் கொடுப்பதற்காக, உதவி செய்யும் நோக்கத்தோடு இது கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்பதால், இதை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். கடனில் சிக்கி தவிப்பவர்களுக்கு இது ஓரளவு நிவாரணம் கொடுக்கிறது என்றாலும்கூட இன்னொரு வகையில் ஏழை எளிய மக்கள் அதிக வட்டிக்குக் கடன் வாங்குகின்ற நிலைமையும் அதன் காரணமாக அதிக அளவு வட்டி கொடுக்கின்ற காரணத்தால், வட்டி சுமை காரணமாக அவர்கள் அதைத் திருப்பி தர முடியாத நிலையில் அவர்களுடைய சொத்துக்களையும், நிலையான பொருள்களையும் இழக்கக்கூடிய நிலைமைகளும் இன்றைக்கும் கூட நாட்டில் பல இடங்களில் நிலவி வருகின்றன

@ 354 ஆம் பக்கங்களில் இணைப்புII ஆக அச்சிடப்பட்டுள்ளது.



என்பதை அரசும் நிச்சயமாக உணர்ந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். ஆகவே கடன் நிவாரணச் சட்டத்தின் மூலமாக ஏற்கெனவே கடன்பட்டவர்களுக்கு ஒரு நிவாரணம் என்கிற வகையில் இது வந்தாலும்கூட, இன்னொரு வகையில் கடன்பட்டிருக்கிற ஏழையெளியவர்கள் மேலும் கடன்படுகிற நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்து, இதற்குச் சரியான பரிகாரம் காண வேண்டும். இப்போதும் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள் போன்றவைகள் பல வகையிலும் ஏழையெளியவர்களுக்கு உதவி செய்கின்றன என்றாலும்கூட, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பரந்த அளவில், விரிந்த அளவில் கொடுப்பதுபோல், கடன் கொடுக்கிற திட்டங்களை நம்முடைய கூட்டுறவு அமைப்புகள் நீட்டி ஏழையெளிய மக்களுக்கு விவசாயக் கடன் என்று கொடுப்பதோடு மாத்திரமல்லாமல், கன்சியூமர் லோன்ஸ் என்கிற வகையிலும், இன்னும் இதுபோன்று இருக்கிற கடன் வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். குறிப்பாக வருமானம் குறைந்த அளவில் உள்ளவர்களுக்கும் பல வகையிலும் உதவுகின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு வழிவகை காண வேண்டும்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதன் மூலம் அதிக அளவுக்குக் கடன் கொடுக்கின்ற நிலைமையும், அதிக அளவு வட்டிபோன்ற பிரச்சினைகளில் சிக்கி ஏழையெளியமக்கள் தவிக்கின்ற நிலைமையும் மாறும் என்பதோடு மாத்திரமல்லாமல் சமுதாயத்தில் வருமானம் குறைந்த நிலையில் இருக்கின்றவர்களுக்கும் பேருதவி செய்வதாக அது அமையும் என்று கூறி அமர்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** துணைத் தலைவரவர்களே, இதற்கு முன்புகூட கடன் நிவாரண திருத்த சட்ட முன்வடிவுகள் கொண்டுவரப்பட்டபோது எல்லாம், நிறைவேற்றப்பட்டபோது எல்லாம் நாங்கள் வரவேற்றிருக்கிறோம். மேலும் இதற்குக் கால நீட்டிப்பை வழங்குவதன்மூலம் இதன் பலனை ஏழையெளியவர்களுக்கு நீட்டித்துக் கொடுக்கிறோம் என்கிற வகையில் இன்றைய கால கட்டத்தில் மிக மிகத் தேவையான ஒன்று என்பதை உணர்கின்ற நிலையில் நான் இதை வரவேற்கிறேன். என்னைக் கேட்டால், இன்னும் கொஞ்சம் கூட சலுகைகளைக் கொடுக்கலாம். வறட்சி காரணமாக பாதிக்கப்பட்டிருக்கிற மற்றவர்களுக்கும் விஸ்தரிக்கிற வகையில் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும். முன்பு ஏழையெளிய மக்களின் நலன் கருதி, அவர்களுக்காக கடன் நிவாரண திருத்த சட்ட முன்வடிவு என்று கொண்டு வந்து நிறைவேற்றிய சட்ட முன்வடிவை, இன்னும் அவர்களுக்கு

அதே சலுகையை 6 மாத காலத்திற்கு அளிக்க வேண்டுமென்ற வகையில் மேலும் 6 மாதத்திற்கு நீட்டித்திருக்கிறோம். இப்போது விவசாயிகள் வறட்சியின் காரணமாக பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஓரளவுக்கு நெல் விவசாயிகள் நெல் பயிரேற்ற முடியாத நிலையில், பயிரேற்றினாலும் கூட சரியாக பயிர்களிலிருந்து விளைச்சல் பெற முடியாத நிலையில், மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பது குறுகிய காலத்திற்குத்தான். ஓராண்டு அல்லது ஈராண்டுகளுக்கு விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட நிலைமை இருக்கும். ஆனால் இன்றைக்கு தோட்டத் தொழில்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு, 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் அவர்களுடைய தோட்டத் தொழில்கள் எல்லாம் அழிந்து விடுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மழையின்மை காரணமாக, வறட்சி காரணமாக தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாக பாக்கு மரங்கள் எல்லாம் பட்டுவிட்டன. சாதாரணமாக பாக்கு மரங்கள் 20 ஆண்டுகள் பலன் அளிக்கக்கூடியவை. மலைப் பகுதிகளை எடுத்துக்கொண்டால், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. நமது மாநிலத்திலேயே அதிக அளவு ரப்பர் கன்னியாகுமரி மாவட்டத்தில் தான் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த 8, 9 மாதங்களாக இதுவரை இல்லாத அளவுக்கு, மழை பெய்யாத காரணத்தால், ரப்பர் மரங்கள் எல்லாம் பட்டுப் போய்விட்டன. ரப்பர் பயிர் பெருமளவில் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. இனிமேல் ரப்பர் மரங்களிலிருந்து பலன் ஏற்பட முடியாத வகையில், ஏற்கெனவே 50 சதவிகிதத்திற்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. இன்னும் ஓரிரண்டு மாதங்களில் மழை பெய்யாவிட்டால், இருக்கிற எஞ்சிய மரங்களும் பாதிக்கப்படக்கூடிய நிலை வரும். அதுபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராம்பு அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. அந்தப் பயிரைப் பொறுத்தவரையிலும்கூட, 50 சதவிகிதத்திற்கு மேல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அதுபோல் மா, பலா போன்ற மரங்களிலிருந்து வரக்கூடிய விளைச்சலும் பாதிக்கப்பட்டு, இன்றைக்கு இம்மரங்களிலிருந்து விளைச்சலை எதிர்பார்த்துக்கொண்டிருந்த விவசாயிகளுக்கு 25 ஆண்டுகள் முதல் 50 ஆண்டுகள் வரை பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு வறட்சியின் காரணமாக விவசாயிகளுக்குக் கஷ்டம் நிரம்பிய ஏற்பட்டிருந்தாலும்கூட காரணமாக விவசாயிகளுக்குக் கஷ்டம் நிரம்ப ஏற்பட்டிருந்தாலும்கூட



ஏற்பட்டிருக்கக் கூடிய நஷ்டம் தான் இது. ஆனால் நீண்ட காலம் பயிரிடக் கூடிய விவசாயிகள், அதாவது நெல் பயிரைத் தவிர வேறு வகையில் தோட்டத் தொழில் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குறுகிய காலப் பயிர்களைப் பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு இன்னும் 2, 3 ஆண்டுகளுக்கு வறட்சியின் காரணமாக பாதிப்பு இருக்கும் என்கிற அளவில் அவர்களுக்கு பல்வேறு அமைப்புகள் வாயிலாக கடன் நிவாரணம் தரப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இவர்களுக்கும் நிவாரணம் தரலாம் என்பது ஒரு முறை. மற்றபடி பிளான்டர்ஸ், எஸ்டேட் ஓனர்ஸ் என்று சொல்லக்கூடியவர்கள் கூட இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பலவிதத்தில் பாதிப்புக்கு உள்ளாகி, பல்வேறு அமைப்புகளிலிருந்து கடன் பெற்றிருக்கிறார்கள். அங்கு ரப்பர் பயிர் போன்ற பயிர்கள் எல்லாம், தோட்டப் பயிர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இத்தகைய தோட்டப் பயிர்களும் பாதுகாக்கப்படுகிற முறையிலே, இதுதொடர்பாக விரிவான ஒரு சட்ட முன்வடிவை மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்கள் விரைவில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு, இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் கடன் நிவாரண திருத்த சட்ட முன்வடிவை வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : துணைத் தலைவரவர்களே, 'டெட் ரிலீப்' என்று சொல்லப்படுகிற கடன் நிவாரணச் சட்டத்தைப் பொறுத்தவரையில், 1980 ஆம் ஆண்டில் 13வது சட்டமாக இது கொண்டுவரப்பட்டது, பிறகு படிப்படியாக ஒவ்வொரு ஆண்டும் நீட்டிக்கப்பட்டு, தற்போது மேலும் 6 மாத காலத்திற்கு இந்தச் சட்டம் நீட்டிக்கப்பட வேண்டுமென்ற முடிவிற்கு இந்த அரசு வந்திருக்கிறது. அந்த வகையில் இன்றைக்கு தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு கடன் நிவாரண திருத்த சட்ட முன்வடிவு என்கிற பெயரில் இங்கே தற்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், குறிப்பாக பட்டி தொட்டிகளில் வாழ்கின்ற மக்கள் கூட போதிய அளவிற்கு இந்தச் சட்டத்தினுடைய பலாபலன்களைப் பெற வேண்டும், அவர்களுக்கு இதிலுள்ள நன்மைகளை உணர்த்த வேண்டுமென்கிற முறையில் இது தற்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சென்ற ஆண்டு கூட வானொலி போன்ற விளம்பர சாதனங்கள் மூலமாக போதிய விளம்பரங்களை இதுகுறித்து நாங்கள் மேற்கொண்டோம். அந்த வகையில் பலரும் இது குறித்து அறிந்துகொள்ள

[திரு. சி. பொன்னையன்] [1983 ஏப்ரல் 26

முடிந்தது. இருந்தபோதிலும் இன்னும் பலர் கடன் தொல்லையாலே பாதிக்கப்பட்டிருக்கிற நிலை இருக்கிறபடியால், சாதாரண மக்கள், ஏழையெளிய மக்கள், ரூ. 4800-க்குக்கீழே வருமானமுள்ள மக்கள், 10 ஏக்கர்வரை வைத்திருக்கக்கூடிய அன்-இரிகேடட் லேண்ட் என்று சொல்லக்கூடிய தண்ணீர் பாய்ச்சப்படாத நிலத்திற்கு சொந்தக்காரர்கள், ஐந்து ஏக்கர் வரை தண்ணீர் பாய்ச்சக்கூடிய நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிற நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் கடன் நிவாரணம் அளிக்கவேண்டும் என்கிற முறையில் இப்போது இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் இன்னும் ஒரு ஆறு மாத காலத்திற்கு நிவாரணம் தர வேண்டும் என்ற வகையில், தக்க விளம்பரப்படுத்த வேண்டுமென்கிற முறையில் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது.

தற்போது கடன் நிவாரணச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற அதிகாரி வட்ட ஆட்சியாளர். வட்ட ஆட்சியாளர் தனக்கு ஏற்கெனவே இருக்கின்ற பணிகளோடு இப்பணியையும் செய்து வருகிறார். அவருக்கு ஏற்கெனவே பலவித வேலைப் பளு இருக்கிற காரணத்தால், இச் சட்டத்தை அல்லது இது சம்பந்தப்பட்ட பணியை அவரால் சரிவரச் செய்ய முடியவில்லை என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அதை அரசு உணர்ந்திருக்கின்ற காரணத்தால், தற்போது வர இருக்கின்ற ஆறு மாத காலத்திற்கு வட்ட ஆட்சியாளர் தன்னுடைய பல்வேறு பணிகளுக்கு இடையே கடன் நிவாரணப் பணியையும் செய்ய வேண்டும் என்ற நிலையை மாற்றி, இந்த நோக்கத்தை நிறைவேறச் செய்வதற்காக மட்டும் என்றே வட்ட ஆட்சியாளர் தரத்திலே தனி அதிகாரி ஒருவரை, முழு நேர அதிகாரியாக ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒருவர் வீதம் நியமிக்க வேண்டும் என்ற முடிவை மேற்கொண்டிருக்கிறோம். அவருக்கு கடன்பட்டோர் சார்பாக உறுதுணையாக இருந்து உதவும் முகத்தான், வழக்கறிஞர் மற்றும் ஊரிலேயுள்ள பொது வாழ்விலே ஈடுபட்டிருக்கின்ற மக்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டு ஒவ்வொரு வட்டத்திலும் எந்தவிதமான குறைபாடுகளும் இல்லாமலிருக்கும் வகையில், நலிந்தவர்களுக்கு உதவும் வகையில் அக்குழு ஆலோசனை கூறும் வசதிபடைத்தவர்கள் எப்படியும் நலிந்தவர்களைச் சரிக்கட்டி விடலாம் என்கிற எண்ணத்தோடு செயல்படுவதோ, அதிகாரிகளுடைய துணையோடு முறைகேடுகளைச் செய்து அதன் காரணமாக தங்கள் வாழ்க்கையை வளம் பெறச் செய்து விடலாம் என்கிற மனப்பான்மையோ இனிமேல் வளர முடியாது. இப்படிப்பட்ட நிலைகளை வளர விடாமல் இந்தக் குழுக்கள் தடுத்து நிறுத்தி, நலிந்த மக்களுக்கு உதவும் என்கிற அளவில்தான் மக்கள் குழுக்களை அமைக்க இச் சட்ட முன்வடிவு கால நீட்டிப்பு வேண்டி இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது.



1983 ஏப்ரல் 26] [திரு. சி. பொன்னையன்]

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் பேசுகிறபோது, அதிகப்படியான வட்டிக்கு ஏழையெளிய மக்கள் கடன் வாங்குகிற நிலையும், அதனால் அவர்கள் பாதிக்கப்படுகின்ற நிலையும் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருப்பதாக இங்கே சொன்னார். இந்நிலையை நீக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சொன்னார். தற்போது இருக்கிற பான் புரோக்கர்ஸ் ஆக்ட் மற்றும் மணி லெண்டர்ஸ் ஆக்ட் என்கிற இரண்டு சட்டங்களிலும் தக்க சட்டத் திருத்தங்களைக் கொண்டுவந்து, சற்று கடுமையான பிரிவுகளை அவைகளிலே சேர்த்து, குறிப்பாக லைசென்ஸ் பெறாமல் முறை தவறி ஈட்டி வட்டிக்கடை என்கிற பெயரால் வட்டிக்கடைகளை நடத்திக் கொண்டிருக்கிறவர்கள்மீது, கந்து வட்டிக் கடை என்கிற பெயரால் வட்டிக் கடைகளை நடத்திக் கொண்டிருப்பவர்கள்மீது, கிராமப்புறத்து ஏழை எளிய மக்களை, நலிந்த பிரிவினரை எல்லாம் சுரண்டுகின்ற நிலையை மேற்கொண்டிருக்கிறவர்கள் மீது, கடுமையான நடவடிக்கை எடுக்கும் முகத்தான் இந்த அரசு சட்டமுன்வடிவைக் கொண்டுவர இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

(முற்பகல் 10—30)

அதுமட்டுமல்லாமல், கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள் அதிகப்படியான அளவுக்கு நிரந்தரமாகக் கடன் தர வேண்டுமென்று சொன்னார்கள். ரிசர்வ் வங்கியின் ஒரு பிரிவாக அமைக்கப்பட்டிருக்கிற 'நபார்ட்' (NABARD) என்று சொல்லக்கூடிய அமைப்பு, மாநில அரசின் கோரிக்கைகளை ஆய்ந்து வந்திருக்கிறது. கூட்டுறவு வங்கிகள் non-productive purposes என்பவற்றிற்குக் கடன் தரக்கூடாது என்றுசொன்னதைக் கடைப்பிடித்திருக்கிறோம் Productive investment இருக்க வேண்டும் என்பது அகில இந்தியாவில் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் கொள்கை. நமது மாநில அரசு சென்ற ஆண்டு அனுப்பிய கோரிக்கையை அந்த அமைப்பு ஆய்ந்துவருகிறது. மற்ற பிரிவினருக்கும் இந்தக் கடனை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னதையும் ஆய்ந்து வருகிறார்கள். இன்னும் சொல்லப் போனால் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு நகைக்கடன் சென்ற ஆண்டு ரூ. 169 கோடிக்குக் கொடுத்திருக்கிறோம். வரும் ஆண்டில் கிட்டத்தட்ட அதே அளவில் நகைக் கடனை கூட்டுறவு அமைப்புகள் மூலம் தரவேண்டும் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது. Refinancing facility இருந்தால்தான், வட்டிக்கடைக் காரர்களிடம் என்று முடிவெடுத்திருக்கிறோம்.

செல்லாமல், குறைந்த வட்டிக்குக் கடன் பெற்று பயன் அடைய முடியும்

[திரு. சி. பொன்னையன்] [1983 ஏப்ரல் 26

மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசுகிற போது இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று, அதே நேரத்தில் ஒரு பிரச்சினையை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். நேரடியாக இந்தச் சட்ட முன்வடிவோடு அதையும் தொடர்புபடுத்தக்கூடிய நிலை இல்லை என்றாலும்கூட, இரண்டு பருவமழை முழுவதும் பொய்த்துவிட்ட பிறகு, பாக்கு, தென்னை, இரப்பர், பலா, மா போன்றவைகள் எல்லாம் அதிகப்படியான பாதிப்புக்கு உள்ளாகிற போது, சிறு விவசாயிகளானாலும் சரி, பெரிய நரத்தர விவசாயிகளானாலும் சரி, அந்தப் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகிற காரணத்தால், கிராமப்புற பொருளாதாரம் ஸ்தம்பிக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்பதை அரசு உணருகிறதா? அரசு இதற்காக இப்போது ஒரு பூர்வாங்க ஆய்வை நடத்தி அந்த ஆய்வின் அடிப்படையில் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரத்தைக் கண்டிப்பாக அளிக்க நடவடிக்கை எடுக்கும் என்று கூறி, சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்ட முன்வடிவை இந்த மேலவை ஏற்குமாறு நான் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1983) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.



1983 ஏப்ரல் 26]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1983) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, கடன் நிவாரண, (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1983) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

2. தமிழ் நாடு 1983ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1983).

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1983) @ ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன் மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1983) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

---

@ ஆக அச்சிடப்பட்டுள்ளது பக்கத்தில் இணைப்பு

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். இதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருப்பதைப்போல, குறித்த நேரத்தில் ஆறு மாதத்திற்குள்ளேயே தேர்தலை நடத்தி விடுவார்கள் என்று நான் நம்புகிறேன். அப்படி விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தனியாகக் கவனம் செலுத்தி துரித நடவடிக்கை எடுக்க அவர்களுடைய முயற்சி பெருவாக இருந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அந்த அளவில் தேர்தலையும் ஆறு மாதத்தில் நடத்தினால் அது நிச்சயமாக ஒரு சாதனையாகவே இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய கூட்டுறவுச் சட்டத்தின் விதிகள் அநேகமாக தயாராக இருக்கும் என்றே நம்புகிறேன். சட்டத்தின் பல்வேறு பிரிவுகளில் நாம் எதை எதிர் பார்த்தோமோ, எதை விரும்பினோமோ அந்த அடிப்படையில் நிச்சயமாக விதிகள் அமைந்திருக்கும் என்றும் நம்புகிறேன். காரணம் அமைச்சர் அவர்கள் பல்வேறு உணர்வுகளை நேரடியாக இருந்து பார்த்தவர்கள் என்ற காரணத்தால், இந்த விதிகள் அப்படி அமைந்திருக்கும் என்று நம்புகிறேன். சட்டத்தின் நோக்கங்களை பிரதிபலிக்கிற வகையில், ஈடேற்றுகிற வகையில்தான் விதிகள் அமையும் என்று எதிர்பார்க்கிறேன். கூட்டுறவுச் சட்டத்தில் ஒரு வாய்ப்பு உண்டு. ஒரு சட்டத்தின் பிரிவுகளைத் தோற்கடிக்க அதில் உள்ள விதிகளே போதும். அந்த விதிகளுக்கு அவ்வளவு வல்லமை உண்டு. அதாவது அந்த விதிகளைச் செயல்படுத்துகிறவர்கள் அவற்றை செயல் படுத்துகிற முறையால் சட்டப் பிரிவுகளைத் தோற்கடிக்க முடியும், இந்த விதிகள் தெளிவாக சட்டத்தின் உயரிய நோக்கங்களை ஈடேற்றும் என்று நம்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக அதற்கான பாதுகாப்பை அளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்ததாக ஆறு மாத அவகாசத்திற்குள் இந்தத் தேர்தல் நடக்க இருக்கிறது. புதிய சட்டத்தின் அடிப்படையில், பல்வேறு தகுதிகளின் அடிப்படையில், யார் யார் போட்டியிடலாம் என்கிற முறைகளை வைத்திருக்கிறார்கள். இதற்கிடையில் இயங்கிக் கொண்டிருக்கிற கூட்டுறவுச் சங்கங்களில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எனக்குக் கிடைத்திருக்கிற தகவல் ஒன்றை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அது தெளிவாக இருந்தால், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்த வங்கியுமே, சட்டப்பூர்வமாக முறையில் அந்தத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு கலைக்கப்படுகிற



போது, அதில் பணியாற்றிய நிர்வாகிகள், இயக்குநர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் அந்த வங்கி கலைக்கப்படுவதற்கு நேரடியாகக் காரணமானவர்களாக இருந்தால், முறையாக அந்த வங்கியைச் செயல்படுத்த முடியாத அளவுக்குக் காரணமானவர்களாக இருப்பார்களானால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுவது சாதாரணமாக வழக்கம். அப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது, அதன் அடிப்படையில் அவர்கள் தேர்தலில் தொடர்ந்து நிற்பது தடை செய்யப்படுகிறது. இப்படிஎடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பூர்வாங்கமான பிறகு. இறுதி ஆணை போடாததால், சில பேரைத் தப்ப வைக்க முடியும். அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. திருவண்ணாமலையில் இது போன்ற ஒரு நிலைமை நடந்திருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. திருவண்ணாமலை கோவாப்பரேட்டிவ் அர்பன் பாங்கில் 22—4—1982-ல் 'On the basis of certain serious irregularities found by the Special Investigation Squad attached to the Registrar of Co-operative Societies' என்ற வகையில் கடுமையான தவறுகள் நடந்திருக்கின்றன என்ற அடிப்படையில், இதுபோன்ற குறைகளைப் பரிசீலனை செய்ய ஒரு குழு அமைத்து, இதைப்பற்றி அந்தக் குழு பரிசீலித்து, அதைக் கலைக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். அங்கிகளுக்கு உதவி செய்கிற நிதி நிறுவனங்கள் கூட இது போன்ற நிலைமைகளை ஆய்ந்து, அதைக் கலைக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இதுவரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இதிலே நான் மற்ற எல்லாவற்றையும் சொல்ல அவசியம் இருக்காது என்று நம்புகிறேன். ஊர் பெயரைக்கூடச் சொல்ல வேண்டாமென்றுதான் நினைத்தேன். ஆனால் பாங்கின் பெயரிலேயே அந்த ஊர் வந்துவிட்டதால் சொல்லியிருக்கிறேன். இப்படி கலைக்க வேண்டிய அளவுக்கு அந்த விசாரணைக் குழு சிபாரிசு செய்த பிறகு, நடவடிக்கை எடுக்காமல், ஒரு ஆண்டுக்காலம் காலம் கடத்தினால், அவர்கள் எதைத்தான் செய்யமாட்டார்கள் என்று நான் எண்ணிப் பார்க்கிறேன். இன்னொரு சங்கடம் என்னவென்றால். கலைக்கப்படுகிற நிலை வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு, அந்த இயக்குநர் மீது, அதை நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாததால், அந்தத் தவறைச் சுட்டிக்காட்டியவர்கள் மீது அல்லது இந்தத் தவறு நடைபெற்றிருக்கிறது என்று சொன்னவர்கள் மீது எப்படி பழி வாங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

[திரு. க. இராமமூர்த்தி] [1983 ஏப்ரல் 26

(முற்பகல் 10—40)

கூட்டுறவு வங்கிகள் என்பவை சமுதாயத்தில் பாவப்பட்டவர்களைக் கைகொடுக்கவும் இருக்கின்றன. ஆனால் இன்றைய தினம் உண்மையில் காப்பாற்றவும், கஷ்டத்தில் உள்ளவர்களுக்குத் துணை செய்யவும் அவர்களுக்குக் அவர்களெல்லாம் பழி வாங்கப்படுகிற நிலைதான் இருக்கிறது. இந்தக் கூட்டுறவு வங்கியைப் பொறுத்தவரையில், சாட்டப்படுகிற மிகப் பெரிய குற்றச்சாட்டு என்னவென்றால், அந்த வங்கியில் கடன் வாங்கிய பலர் மீண்டும் வட்டிக்கடை முதலாளிகள் போல் மற்றவர்களுக்கு அந்தக் கடன் தொகையை வட்டிக்கு விடுகிறார்கள் என்பதுதான். இது எவ்வளவு. பெரிய கொடுமை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் செய்யப்படுகிற மிகப் பெரிய மோசடி என்றுதான் இதைச் சொல்ல வேண்டும். கூட்டுறவு வங்கியைத் தாங்களே கையில் வைத்துக்கொண்டு வட்டிக் கடை முதலாளிகளைப் போல் தங்களை உருவாக்கிக் கொள்கிற அளவுக்கு அவர்கள் வளர்ந்திருக்கிறார்கள். இதைப்பற்றி திருவண்ணாமலையிலிருந்து எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அதில் நான் அதிகமாக உள்ளே சென்று பேச விரும்பவில்லை என்றாலும். இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஸ்குவாடு கொடுத்த அறிக்கை சரியில்லையென்றால், இப்படி தவறான அறிக்கை கொடுத்த ஸ்குவாடு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப்போலவே அந்த வங்கியைக் கலைக்கச் சொன்ன "ஃபைனான்சிங் பேங்க்" மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவின் அங்கங்கள் என்பவை இப்படி தெளிவில்லாமல், முறையில்லாமல் தவறுதலாகச் செயல்படுகின்றன என்பதையாவது நாட்டு மக்களுக்குக் காட்ட வேண்டும். இல்லையென்றால் அவர்களின் அறிக்கைகள் உண்மையானவை என்றால், வங்கியின் நிர்வாகிகள் மீதாவது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல் கூட்டுறவுத் துறை மீதே மக்கள் சந்தேகம் கொள்கிற அளவுக்கு நிலைமைகளை உருவாக்க வேண்டாம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். புதிதாகச் சட்டம் கொண்டு வரப்படுகிறது, அதன் காரணமாக கூட்டுறவு இயக்கமே சிறந்த முறையில் செயல்படப் போகிறது என்ற எதிர்பார்ப்பு இன்றைய தினம் நாட்டு மக்களிடத்தில் இருக்கிறது. ஆனால் இடையில் இத்தகைய சிறு சிறு சம்பவங்கள் நல்ல சூழ்நிலையையே பாழாக்கிவிடுமோ என்ற ஐயம் ஏற்படுகிறது என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில்



1983 ஏப்ரல் 26] [திரு. க. இராமமூர்த்தி]

முறையான நடவடிக்கை மேற்கொள்ளுவார்கள் என்று எதிர்பார்த்து, விரைவிலேயே சட்டத்தை முறையாகச் செயல்படுத்த ஆவன செய்வார்கள் என்று எண்ணி, அமைச்சர் அவர்களைப் பாராட்டி, அமைகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

1976 ஆம் ஆண்டு முதல் இப்படி கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தனி அதிகாரிகள் நியமிக்கப்படுகிற அவசியம் ஏற்பட்டது என்பதைக் குறிப்பிடுவதோடு அதைத் தொடர்ந்து கூட்டுறவுத் துறை எப்படி இயங்க வேண்டும், கூட்டுறவுச் சட்டதிட்டங்கள் எவ்வாறு இருக்க வேண்டும், அதிலும் உறுப்பினர்களாக இருப்பதற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும், எவ்வளவு ஆண்டுக் காலம் அவர்கள் இருக்கலாம் என்பதைப்பற்றியெல்லாம் ஆய்கிற குழுவில் இடம் பெறும் வாய்ப்பைப் பெற்றிருந்த காரணத்தால், இன்றைய தினம் கூட்டுறவுத் துறையைப் பற்றி நான் ஓரளவுக்கு அறிந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் மற்றும் ஆதிக்க நோக்கத்தோடு இருப்பவர்கள் ஆகியோரின் கையில் கூட்டுறவு இயக்கம் போய்விட்ட காரணத்தால், அதில் மாற்றம் காண வேண்டும் என்ற அடிப்படையில் மாற்றுச் சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. ஒரு காலத்தில் கோவையைச் சார்ந்த திரு. இராமலிங்கம் மற்றும் சென்னையைச் சார்ந்த திரு. நடேசன் போன்ற பெரியார்களின் பெரிய சாதனையின் காரணமாக, கூட்டுறவுத் துறை சமுதாயத்திற்கு ஒரு பெரிய சேவை செய்ய முடியும் என்று உரைக்க முடிந்தது. ஆனால அப்படிப்பட்டவர்கள் இருந்த இடத்தில் வேண்டாத சிலர் உள்ளே நுழைந்து அதை ஒரு தொழிலாக, வியாபாரமாக, குடும்பச் சொத்தாக மாற்றும் நிலை ஏற்பட்டதால், பாதிப்புகள் உண்டானது என்பதும் அதன் காரணமாகவே தனியதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள் என்பதும் நாம் அறிந்த ஒன்றாகும்.

தற்போது நாம் புதிய சட்ட முன்வடிவை இங்கே நிறைவேற்றி இருக்கிறோம் என்றாலும், அதன் அடிப்படையில் விதிகளை உருவாக்க இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள் ஆகலாம். அதோடு நிறைவேற்றப்பட்ட இந்தச்

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1983 ஏப்ரல் 26

சட்ட முன்வடிவு ஜனாதிபதி அவர்களின் ஒப்புதல் பெறுகிற காலம், அதற்குப் பிறகு நடத்த வேண்டிய தேர்தல்கள் ஆகியவற்றிற்கெல்லாம் ஓராண்டுக் காலம் இடையிலே தேவைப்படுகிறது என்பதை மனதில் கொண்டுதான் இன்றைய தினம் தனியதிகாரிகளின் காலத்தை நீட்டிக்க வேண்டிய அளவுக்கு இந்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு நான் இதை வரவேற்கிறேன். இன்னொன்றையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டதன் காரணமாக கூட்டுறவுத் துறை வளர்ந்திருக்கிறதா என்பதையும் இந்த நேரத்தில் நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழகத்தில் சுமார் 29 மாவட்ட விற்பனைச் சங்கங்கள் இருக்கும் என்று நினைக்கிறேன். இவைகளுக்கெல்லாம் தனியதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். 1975 ஆம் ஆண்டுக்குப் பிறகு அவற்றின் செயல்முறைகளைக் கணக்கில் எடுத்துப் பார்த்தால், ஏற்கெனவே அவைகள் எல்லாம் நட்டத்திலே செயல்பட்டுக் கொண்டிருந்த அமைப்புகளாக இருந்து வந்தன. 29-ல் 27 அமைப்புகளாவது அவ்வாறு நட்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்தன. இன்றையதினம் அந்த அமைப்புகள் எல்லாமே லாபத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது, தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டதன் மூலம் இந்த நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதை நம்மாலே உணர முடிகிறது. எனவே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், ஒரு சிறந்த மறுமலர்ச்சிப் பணியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே செய்திருக்கிறார்கள். அந்த வகையில் புதிய சட்டம் அங்கீகாரம் பெற்று, விதிகள் முறையாக அமைக்கப்பட்டு, தேர்தல்கள் நடைபெறும் வரை தேவைப்படும் இந்த காலகட்டத்திற்கு தனி அதிகாரிகளின் காலம் நீட்டிக்கப்பட வேண்டிய அவசியம் இருப்பதால், இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று, அமைகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன் உள்ள இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிற நேரத்தில், கூட்டுறவு இயக்கமும், அந்த இயக்கத்தால் ஏற்படுகிற பலன்களும் தனிப்பட்ட ஒரு சில குடும்பங்களின் சொத்தாகக் கருதப்பட்ட காலத்தையே மாற்றுகிற வகையில் ஒரு புதிய விரிவான கூட்டுறவுச் சட்டம் சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற இருக்கிறது என்பதை எண்ணும்போது உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். அவ்வாறு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று அதற்கு ஏற்ற வகையில் விதி முறைகள் உருவாக்கப்பட்டு,



1983 ஏப்ரல் 26] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அந்தச் சட்டம் முழுமையாக அமுலாக்கப்படுவதற்கு இடையே உள்ள காலத்தில் தற்போதுள்ள தனியதிகாரிகளின் காலம் நீட்டிக்கப்பட வேண்டிய அவசியம் இருப்பதால், இந்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பொறுத்த வரையில்; சாதாரணமாக அந்த ஒப்புதல் தானாக வந்துவிடும் என்றில்லாமல், கூட்டுறவுத் துறையானது சில சிறப்பு முயற்சிகளை எடுத்துக்கொண்டு, புது டில்லிக்குச் சென்று அங்கே பார்க்க வேண்டியவர்களைப் பார்த்து, அதை விரைவு படுத்துகிற காரியத்தில் ஈடுபட்டால்தான், நாம் விரும்புகிற காலத்திற்குள்ளாக குடியரசுத் தலைவரின் அனுமதியே கூட கிடைக்கும். எனவே விரைவில் கூட்டுறவுத் துறை அதிகாரிகள் டெல்லி சென்று தொடர்புடையவர்களைக் கண்டு, ஒப்புதலைப் பெற்றுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம் இப்போதெல்லாம் டெல்லிக்கு நேரில் சென்று சில பல அதிகாரிகளைப் பார்த்தால்தான், காரியங்கள் நடக்கும் என்ற நிலை இருக்கிறது. அந்த முயற்சிகளை கூட்டுறவுத் துறை மேற்கொண்டு இந்தப் புதிய சட்டத்தை அமுல்படுத்துவதற்கான நிலையை விரைவில் உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். புதிய சட்டத்தின் காரண காரியங்களைப்பற்றி சென்ற முறையே விரிவாக மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துப் பேசி விவாதித்திருப்பதால், அதைப்பற்றி அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஆனால் தனி அதிகாரிகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரே ஒரு விஷயத்தை மட்டும் கொண்டுவர விரும்புகிறேன். நான் எல்லோரையும் சொல்லவில்லை, குறிப்பிட்ட ஒரு சிலரை மட்டும் நான் சொல்லுகிறேன். அதாவது தனி அதிகாரிகளாக இருந்த சிலர் தமிழகத்தின் குடியரசுத் தலைவர் ஆட்சி அமுல் செய்யப்பட்டபோது, இந்தச் சட்ட முன்வடிவு பொறுக்குக் குழுவின் ஆய்வில் இருந்தது, எனவே இந்தச் சட்ட முன்வடிவு இதோடு தீர்ந்துவிட்டது என்று நினைத்து, அதற்காக மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. இனி நாமே தொடர்ந்து பரம்பரை பரம்பரையாக இந்தத் துறையில் இருந்து கொண்டிருக்கலாம் என்று நினைத்து அற்ப சந்தோஷம் அடைந்தார்கள். இதை நான் உணர்ந்தவன் என்ற முறையில் மட்டுமல்லாமல், பலர் சொல்லவும் கேட்டிருக்கிறேன். மீண்டும் ஒரு ஆட்சி வரும், இது பொறுக்குக் குழுவுக்கு விடப்பட்டு சட்ட முன்வடிவாக வரும் என்று அவர்கள் நினைக்கவில்லை. இப்படி அற்ப சந்தோஷம் அடைந்த அதிகாரிகள் இன்னும் இருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒன்றை மட்டும் வேண்டு

கோளாக் வைக்க விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று அமுல்படுத்துவதற்கு முன்பு ஏற்படும் இடைக் காலத்தைப் பொறுத்த வரையில், யார் யார் தவறு செய்தார்கள் என்று தனி அதிகாரிகளைப்பற்றிய தகவல் அரசுக்கு வந்திருக்கிறதோ அவர்களை யெல்லாம் தயவு தாட்சண்யம் பாராமல் வேறு இணையான பதவிகளுக்கு மாற்றி, வேறு சில நல்ல அதிகாரிகளை அவர்களிடத்தில் போட்டு, நல்ல நிர்வாகத்தை உறுதி செய்ய வேண்டும். இதைத் துணிவாகச் செய்வதற்கு முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். துணிவைப் பொறுத்த வரையில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் யாருக்கும் சளைத்தவர் அல்ல. இருந்தாலும் தயவு தாட்சண்யம் இன்றி, நல்ல அதிகாரிகளையெல்லாம் அந்த இடங்களில் போட்டு நல்ல நிர்வாகத்தை உறுதி செய்ய வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

இன்னுமொன்று. மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளிக்கூடங்களில் உள்ள மாணவர்களுக்குப் புத்தகங் களையும் நோட்டுப் புத்தகங்களையும் விநியோகிக்கிறார்கள். அதிலே ஒரு சங்கடம் இருக்கிறது. மாணவர்களிடமிருந்து பணம் வசூலித்து முன்பணமாகக் கொடுத்து, கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும் வாங்கிக் கொடுக்கக் காலதாமதம் ஏற்படுகிறது. பணம் இருப்பதால், தனியார் வியாபாரிகள் தங்கள் பணத்தை வைத்து புத்தகங் களையும், நோட்டுப் புத்தகங்களையும் வாங்கி விற்பதால், மாணவர்கள் அதை வாங்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இந்தச் சமயத்தில் புத்தகங் களுக்குக் கிராக்கி ஏற்பட்டால், அவர்கள் கூடுதலான விலைக்கு விற்கும் நிலைமையும் சில மாவட்டங்களில் இருக்கிறது. ஆகவே வருகின்ற ஜூன் மாதத்தில் அத்தகைய இடர்ப்பாடுகள் இல்லாமல், மாணவர்கள் அவதிக்குள்ளா காமல் இருக்க, மைய கூட்டுறவுச் சங்கங்கள் பணம் செலுத்துவதற்கு கால அவகாசம் கொடுத்தால். உரிய காலத்திலே மாணவர்களுக்கு நியாயமான விலையில் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் போய்ச் சேரும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரிஃப்ட் சொசைட்டியை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசு ஊழியர் களும், ஆசிரியர்களும் விரும்புகிறார்கள். வருவாய் மாவட்டம் என்பது மிகப் பரந்த அளவில் இருப்பதால், கல்வி மாவட்டம், அல்லது வருவாய்





வட்டம் என்று தனித்தனியாக அமைத்தால், சரியான முறையில் செயல்படும் என்று கருதி அதற்குரிய அதிகாரிகளை அணுகும் போது, ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிற சங்கத்திடமிருந்து "நோ-அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்" வாங்கி வந்தால்தான், ஆரம்பிக்க அனுமதி கொடுக்க முடியும் என்று சொல்லி முட்டுக்கட்டை போடுவதால், வட்ட அளவிலே, கல்வி மாவட்ட அளவிலே பரவலாக இத்தகைய நோக்கம் செயல்படுவது தடையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்தத் தடையை நீக்க அமைச்சர் அவர்கள் உரிய ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளிலும், தனியார் கல்லூரிகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க உரிய உற்சாகத்தை அதிகாரிகள் கொடுப்பதில்லை. ஏனென்றால் அவர்களிடமிருந்து பணம் வசூலிப்பது கடினம் என்று அஞ்சுகிறார்கள். இப்போது தமிழக அரசு தனியார் பள்ளிகளுக்கும், தனியார் கல்லூரி களுக்கும் முழு ஊதிய மானியத்தைக் கொடுப்பதால், அரசு அலுவலகம் வழியாக ஆசிரியர்களுக்கு ஊதியம் செல்வதால், தொடர்புடைய கல்வி அதிகாரி களிடம் உறுதிமொழி வாங்கிக்கொண்டு அவர்கள் வாங்குகிற கடனைத் திருப்பிச் செலுத்த நிச்சயமாக நடவடிக்கை எடுக்க தற்போது வழிவகை இருக்கிறது. அதைப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். இப்படிப்பட்ட திரிஃப்ட் சொசைட்டிகளை அமைக்க தனியார் பள்ளிகளுக்கும், தனியார் கல்லூரிகளுக்கும் அதிகாரிகள் ஊக்கம் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக ஓராண்டுக் காலத்திற்கு அவர் களுடைய பதவியை நீட்டித்தாலும், அதற்கு முன்பாகவே எல்லோரும் மகிழத்தக்க வகையில் நிச்சயமாக தேர்தல் வரும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருப்பதால், தேர்தலை விரைவாக நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை மேலும் ஆறு மாத காலம் நீட்டிக்க வேண்டிய கட்டாய நிலை என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள் என்று

[திரு. சி. பொன்னையன்] [1983 ஏப்ரல் 26

கருதுகிறேன். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு ஒரு முன்மாதிரியான கூட்டுறவுச் சட்டத்தை நாம் நம்முடைய இரு அவைகளிலும் நிறைவேற்றியிருக்கிறோம். பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று அங்கு கூட்டுறவு இயக்கம் எப்படி வளர்ச்சி பெற்றிருக்கிறது, குறைபாடுகள் என்னென்ன இருக்கின்றன என்பதை ஆய்ந்து நிறைகளை ஏற்று நலிந்தோர் நலன்களுக்காக, உழவர்களின் உய்விற்காக அமைய வேண்டும் என்ற கருத்தைக் கொண்டு நாம் பல புதிய மாற்றங்களைச் செய்து பல புதிய பிரிவுகளை இந்தச் சட்ட முன்வடிவிலே கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கெனவே இந்த அவையில் நான் கூறியவாறு, நல்லதொரு சிறப்பான சட்டத்தை, ஏனைய மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கக் கூடியதொரு சட்டத்தை நம்முடைய மாநிலத்தில் நிறைவேற்றுவதற்கு பேருதவியாக இருந்த அனைத்து இயக்கங்களையும், அமைப்புகளையும் சேர்ந்தவர்களுக்கும், சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலவை உறுப்பினர்களான அன்புச் சகோதரி திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திரு. திண்டிவனம் இராமமூர்த்தி, திரு. வீரபாண்டி ஆறுமுகம், திரு. லெட்சுமிகாந்தன், திரு. மியாகான், திரு. நல்லசிவன், திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் ஆகியவர்கள் இந்தச் சட்டம் மற்ற மாநிலங்களில் உள்ள சட்டத்தைவிட செம்மையாக, சிறந்ததாக அமைய பேருதவியாக, பெருந்துணையாக இந்த அரசுக்கும் எனக்கும் இருந்தார்கள் என்பதற்காக என்னுடைய உளங்கனிந்த நன்றியை இங்கே கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையிலே சட்டத்தை ஈடேற்றியிருக் கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசுகின்ற போது, சட்டம் எவ்வளவுதான் சிறந்ததாக இருந்தாலும் அந்தச் சட்டத் தினுடைய நோக்கத்தை நடைமுறைப்படுத்துகிறபோது விதிகளை எப்படி வேண்டுமென்றாலும் செயல்படுத்த முடியும் என்று சொன்னார்கள். அது உண்மைதான்.

Unless the bye-laws and the rules framed under the Act are in consonance with the Act, the main purpose will be defeated. என்பதை நானும் உணர்கிறேன். அப்படி உணர்ந்த காரணத்தாலேதான், விரைவிலே விதிகளை அமைத்து மாண்புமிகு உறுப்பினர்களைக் கலந்து. எந்தவித குறைபாடும் இல்லாத விதிகளாக, அந்த விதிகள் தமிழ் நாட்டிற்குப் பலன் அளிக்கக்கூடிய வகையில் அமைய உதவியை நாடுவேன் என்று ஏற்கெனவே இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். நான் எதிர்பார்த்ததைவிட சற்று



1983 ஏப்ரல் 26] [திரு. சி. பொன்னையன்]

முன்கூட்டியே கிட்டத்தட்ட 99.9 சதவீதம் முடிவுற்ற நிலையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய எண்ணங்களையொட்டி இருக்கின்றதா என்பதைப்பற்றி அரசுத் தரப்பிலே ஆய்ந்து கொண்டிருக்கிறோம். மாண்பு மிகு உறுப்பினர்கள் சபை முடிந்து வெளியே இருந்தாலும் கூட, அவர்களை யெல்லாம் ஒரு வாரத்திற்குள்ளாகவோ, பத்து நாட்களுக்குள்ளாகவோ அழைத்து ஓரிரு தினங்கள் உட்கார்ந்து இவைகளை ஆய்ந்து அந்த அடிப் படையிலே முடிவு செய்யவிருக்கிறோம். இந்தச் சட்ட முன்வடிவு குடியரசுத் தலைவருடைய இசைவைப் பெற வேண்டியிருக்கிறது. குடியரசுத் தலைவருடைய இசைவைப் பெறுவதிலே எந்தவிதப் பிரச்சினையும் இராது என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. கூட்டுறவு இயக்கத்திலே செம்மை மிளிர வேண்டும் என்று மைய அரசு அக்கறையோடு இருக்கின்ற காரணத்தால், நாம் கொண்டு வந்திருக்கிற திருத்தங்களுக்கு மைய அரசு மறுப்பு தெரிவிக்காமல் உடனே ஏற்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதற்காக தனியாக அதிகாரிகளை டில்லிக்கு அனுப்பி அங்கேயே இருந்து நேரிடையாக விரைவிலே இசைவைப் பெற்றுவர அரசு ஏற்பாடு செய்திருக் கிறது.

ஓராண்டுக் காலத்திற்கு தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டித்தால், தேர்தலை நடத்த உதவியாக இருக்கும் என்ற முறையில் ஆரம்பத்தில் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தோம். மாண்புமிகு உறுப் பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னதற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களும் "ஓராண்டுக் காலம் வேண்டாம், கூட்டுறவு இயக்கம் கண்டிப்பாக தேர்தலை சந்தித்தாக வேண்டும்" என்று அறிவித்த பிறகு, அவருடைய ஆணையைப் பெற்று "ஓராண்டுக் காலம் வேண்டாம், ஆறு மாதங்களே போதும்" என்று சட்டமன்றப் பேரவையிலே 'அஃபிஷல் அமென்ட்மென்ட்' கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம். ஆறு மாத காலத்திற்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்று முதல்வர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று பேரவையிலே அறிவித்திருக்கிறேன். அந்த அடிப் படையிலே தேர்தல் வரவிருக்கிறது. வரவிருக்கின்ற கூட்டுறவு அமைப்பு களில் உழவர்கள் நலனில் அக்கறை உள்ளவர்கள், நெசவாளர்கள் நலனில் அக்கறை உள்ளவர்கள், நலிந்தோர் சமுதாயத்தின் நலனில் அக்கறை உள்ள வர்கள் அதிகமாக வர முடியுமே ஒழிய, பண வசதி படைத்தவர்கள், ஆக்கச் சக்திகள், அரசியல்வாதிகள் ஆகியவர்கள் வந்து தங்கள் வசம் எடுத்துச் செல்ல முடியாது என்ற நிலையில், அனைத்து அரசியல் இயக்கங்கள், மற்றும்

பொறுக்குக் குழு உறுப்பினர்கள் ஆகிய அனைவரின் ஒப்புதலையும் பெற்று, புதிய சட்ட முன்வடிவை நிறைவேற்றியிருக்கிறோம். அந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்குள் கண்டிப்பாகத் தேர்தல் வரவிருக்கிறது.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு உறுப்பினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் பேசுகின்றபோது, "திருவண்ணாமலை கூட்டுறவு வங்கியில் பல முரண்பாடுகளும் குறைபாடுகளும் உண்டாகி, 'இன்வெஸ்டிகேஷன் செல்' தனி ஆய்வினை மேற்கொண்டு குறைபாடுகளைக் கண்டுபிடித்திருக்கிறது; அப்படி கண்டு பிடித்த பின்பும், அந்த வங்கி கலைக்கப்படவில்லை அல்லது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை" என்பதை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் முழுமையாக அந்தக் கோப்புக்களைப் பார்த்து, ஆராய்ந்து, 'இன்வெஸ்டிகேஷன் செல்' அத்தகைய பரிந்துரையைச் செய்திருக்குமானால், அப்படிச் செய்திருக்கும் என்று நம்புகிறேன். கண்டிப்பாக அதற்கு முட்டுக்கட்டையாக எந்த அதிகாரி இருந்தாலும் அதற்கு அரசு இடம் தராது, அதற்கு உடன்படாது என்றும், தூய்மை கூட்டுறவுத் துறையிலே மலர வேண்டும் என்ற அளவிலே தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். அந்த நோக்கோடு செயல்படுவோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசுகின்றபோது, பள்ளிக்கூடங்களிலே இருக்கின்ற மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்களை வழங்குகின்றபோது காலதாமதம் ஏற்படுவதாகவும் கூட்டுறவுச் சங்கங்களில் அவற்றைக் காலதாமதமாகத் தரக்கூடிய சூழ்நிலை ஏற்படுவதால், தனியார்கள் அதைப் பயன்படுத்தி அதிக விலைக்கு நோட்டுப்புத்தகங்களை விற்கக்கூடிய நிலைமைகள் உருவாகியுள்ளன என்றும், அதனால் ஏழை மாணவர்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே இதுகுறித்து மனு கூட ஆறு மாதத்திற்கு முன்னால் கொடுத்தார்கள். அதை ஆய்வுக்கு அனுப்பினேன். டெக்ஸ்ட்புக் சொசைட்டியிலே இந்தப் புத்தகங்களைக் கொடுக்கின்றபோது, சற்றுக் காலதாமதம் ஆகிவிடுவதாகவும், எப்படியோ தனியார்கள் விரைந்து பெற்றுவிடுவதாகவும் தெரிந்து அதன் பிறகு கல்வித் துறை தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. வரும் ஆண்டிலே மாணவர்களுக்கென்று நோட்டுப் புத்தகங்களைக் கொடுக்கும்போது தனியார்களுக்கு முந்தி கொடுப்பதையும் கூட்டுறவுச்



சங்கங்களுக்குப் பிந்தி கொடுப்பதையும் தவிர்த்து, மாணவர்கள் எல்லாம் பாதிப்புக்குள்ளாகின்ற நிலையில்லாத அளவுக்கு தக்க நடவடிக்கையை ஏற்கெனவே எடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசுகின்றபோது, திரிப்ட் சொசைட்டியைப் பொறுத்தவரைக்கும், அவற்றை ஆர்.டி.ஓ. அல்லது டி.ஆர்.ஓ. அளவிலே கேட்கப்படுமானால், அதுவும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது என்று ஒரு கருத்தை சொல்லியிருக்கிறார்கள். 'நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்' மாவட்ட அளவிலே டி.ஆர்.ஓ. அளவில் கொடுக்கப்படவேண்டும் என்றால், கண்டிப்பாக அவர்கள் ஒத்துவரமாட்டார்கள். அவர்களுக்குக் கிடைக்காது. காரணம் அவர்களுடைய வருமானம், லாப நிலையை எண்ணுவார்கள் என்பதை அரசும் உணர்கிறது. ஒரு மாவட்டத்தில் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்குச் சென்று இந்தப் பணியாளர்கள் எல்லாம் கடனைப் பெறச் செல்வது என்றால், அவர்களுக்குப் பணம் செலவாகும், நேரம் ஆகும். அதை அரசு உணர்கிறது. இதுகுறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

தனியார் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த அதிகாரிகள் முனைய வேண்டும். அதனால் பாதிப்பு ஏற்படாத காரணத்தால், முழு ஊதியத்தையும் அரசு பொறுப்பேற்றுக்கொடுப்பதால், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தலாம் என்று ஒரு கருத்தை உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்து ஒரு நல்ல கருத்து. அந்தக் கருத்தை அரசு ஆய்வு செய்யும் என்று தெரிவித்துக்கொண்டு இந்தச் சட்டமுன்வடிவை ஏற்கவேண்டுமென வேண்டுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அவை முன் உள்ள பிரச்னை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1983) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1983ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1983) நிறைவேற்றப்பட வேண்டும்."
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1983ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1983) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 7. 2—8—1983 அன்று ஓய்வு பெறும் உறுப்பினர்களுக்குப் பாராட்டுரை பகர்தல்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் சிறப்பிற்குரிய பணியாற்றி ஆகஸ்ட் இரண்டாம் தேதியன்று பிரிகின்ற மாண்புமிகு உறுப்பினர்களைப் பாராட்டி மீண்டும் வர வாழ்த்தி நான் பேச இருக்கிறேன். அந்த வரிசையில் எழுவர் என்று இருந்தாலும், அந்த எழுவரும் திரும்ப வரவேண்டும் என்ற என் ஆசியைச் சொல்லும்போது, இந்த மன்றத்தில் அவர்கள் ஆற்றிய பணி நாட்டிற்கு எவ்வளவு சிறப்பாக அமைந்தது என்பது அதற்குரிய காரணம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



இந்த மன்றம் தமிழகத்தின் சிறப்புமிக்க பல பெரியவர்களைச் செயல் புரியச் செய்து அவர்களுடைய அரிய பணியிலே எல்லாம் இந்த நாட்டிற்கு அவர்கள் ஒரு ஒளி விளக்காக அமையச் செய்தது. அது மட்டுமல்லாமல், ஜனநாயகத்திலே மேலவை சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. ஜனநாயகம் சிறப்பிற்குரியதாக இருப்பதற்கு இத்தகைய மன்றங்கள், மேலவைகள் சீரிய இடத்தைப் பெற்று செயல்பட்டிருக்கின்றன. ஒருவேளை சில மாநிலங்களிலே இந்த மன்றங்களே இல்லாமல் இருந்தாலும்கூட, சுதந்திரம் பெற்ற பிறகு, சில மாநிலங்களிலே இத்தகைய இரண்டாவது மன்றம் தேவையில்லை என்று ரத்து செய்யப்பட்டாலும், நமது மன்றம் செயல்படுகின்ற முறையை அவர்களும் தெரிந்து, ஒருவேளை அவர்களுடைய மாநிலத்திலேயும் இரண்டாவது மன்றத்தைத் தோற்றுவிக்கும் எண்ணம்கூட அவர்களுக்கு நாளாவட்டத்தில் உருவாகும் என்று நம்புகிறேன். "ஒரு முறைக்கு இரு முறை சிந்தனை செய். ஒரு முறைக்கு பல முறைகள் சிந்தனை செய். ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன்னால் சிந்தனை செய்" என்று நாம் சொல்வது சாதாரண வழக்கம் தான். ஒரு நாட்டிலே உள்ள மக்களுடைய நலன் கருதி, சமுதாய நலன் கருதி, ஏதாவது பிரச்சினைகள் என்று வருகின்றபோது, இந்த இரண்டு மன்றங்களிலும் மாறி மாறிச் சந்தித்து அமுல்படுதத்துவது தேவையானது. அது வரவேற்கத்தக்கது. அதை நம்முடைய மன்றத்தினுடைய செயல்பாடாக நாடு முழுவதுமே ஏற்றுக்கொள்கிறது. அப்படி அமைய வேண்டுமென்ற நிலை இந்த மன்றத்திற்கு உருவாகிக்கொண்டிருக்கிறது. நான் இந்த மன்றத்திலே 20 ஆண்டுகளுக்கு முன்பு, வருவதற்கு முன்னால், இந்த மன்றத்தினுடைய செயல்பாடுகளைப்பற்றி பத்திரிகைகளிலே படித்திருக்கிறேன். பல பெரியவர்கள் இருந்திருக்கின்றார்கள் என்று தெரிந்திருக்கிறேன். இந்த மன்றம் எவ்வளவு சிறப்பு மிக்கது, இந்த மன்றத்திலே இருந்தவர்கள் எவ்வளவு சீரிய முறையில் பணியாற்றினார்கள், ஒரு அணுவளவும் குறையில்லாமல் நடத்தினார்கள், என்று அறிவோம். இவைகள் எல்லாம் இந்த மன்றத்தை, அதன் தகுதியை உயர்த்தியது. இந்த மன்றத்தினுடைய சிறப்பை உயர்த்துகின்ற முறையில் நாம் செயல்பட்டு வரவேண்டும். ஜனநாயகம் உண்மையில் அதன் தகுதியோடு செயல்பட்டாலும்கூட, பொருளாதாரத் தத்துவம், சமூக மாற்றங்கள், இவைகளிலே நாம் பலவிதமான கருத்துக்கள் கொண்டிருந்தாலும், அவைகளை அமுல்படுத்துகின்றபோது ஜனநாயக நெறியிலே நிறைவேற்றும் உணர்வை உருவாக்குவதற்கு செயல்பட்டுக்கொண்டிருக்க வேண்டும். அதற்கு இந்த மன்றத்திலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்பதை மறந்து விடக் கூடாது. சமுதாயத்திலே மாற்றங்கள் வரவேண்டியது மிகவும் இன்றியமையாதது. வரவேண்டிய மாற்றங்களை, மக்கள் விரும்புகின்ற

மாற்றங்களை ஜனநாயக நெறியில் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் கொண்டு வரும் ஓர் அமைப்பாக இந்த மன்றம் இருக்கின்றது. அந்தப் பணிகளை ஏற்று இது செயல்பட்டுக்கொண்டிருப்பதை நாம் மறுப்பதற்கில்லை. இந்த முறையில் இந்த மன்றத்திலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களும் செயல்பட வேண்டும். மிகச் சிரிய முறையில், நல்ல முறையில் கடந்த ஆறு வருடங்களாக பணியாற்றிக்கொண்டிருக்கின்ற நம்முடைய உறுப்பினர்கள், ஆகஸ்ட் மாதம் ஓய்வு பெறுகிறார்கள். அவர்கள் ஓயவு பெறுகின்றார்கள் என்று 'உணர்கின்ற போது, உண்மையில் நாம் அவர்களைப் பாராட்டிப் பிரிகிறோம் என்ற உணர்வு இல்லாமல், மீண்டும் அவர்கள் இந்த அவைக்கு வரவேண்டும் என்ற ஆசியோடு, ஆர்வத்தோடு நான் அவர்களைப் பாராட்ட முறைகிறேன்.

முதலில் நம் அவை முன்னவர் திரு. இராசா முகமது அவர்கள் இந்த மன்றத்திலே ஆறு ஆண்டுகளாக நல்ல பணியாற்றுகின்ற பொறுப்பை ஏற்று அதிலேயும் குறிப்பாக அமைச்சராகவும் இருந்து, இந்த அவையினுடைய முன்னவராகவும் இருந்து சரியான முறையிலே, அவருக்கே உரிய பணிவோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன். அவர்களும் இந்த அவைக்கு வந்து மீண்டும் இதே பொறுப்பிலே அவர்கள் நீடித்திருந்து, இந்த நாட்டிற்கு உறுதியாகத் தொண்டாற்ற வேண்டும் என்ற என் ஆசியைத் தெரிவித்து, நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

(முற்பகல் 11-10)

அடுத்து, நமது அறநிலையைத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள். பெரியாருடைய பள்ளியிலே தன்னுடைய வாழ்வைத் தொடங்கி, நல்ல சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை உருவாக்கி, இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்து, அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற துறை அற நிலையத் துறையாக இருந்தாலும், அந்தக் கருத்துக்கள் எல்லாம் அந்தப் பகுதியிலும் மிளிரச் செய்து, நல்ல எண்ணத்தோடு, நல்ல முறையில் இந்த மன்றத்தின் உறுப்பினராக இருந்து, பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மீண்டும் அவர்கள் இந்த அவைக்கு வந்து, அந்தப் பொறுப்பேற்று, பணியாற்றி, சிறக்க வேண்டுமென்று அவர்களையும் வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அமைச்சராவதற்கு முன்பு இந்த அவையில் உறுப்பினராகவும் இருந்தார்கள். உண்மையிலேயே அமைச்சர் ஆவதற்கு முன்னாலே உறுப்பினராக இருந்து, அமைச்சரானால் தான் உறுப்பினராக இருந்த முறையாகச் செயல்பட வாய்ப்பாக இருக்கு



மென்று நான் நம்புகிறேன். ஆனால் நான் முன்னால் பாராட்டிய அமைச்சர்கள் இந்த அவைக்கு வந்தார்கள், அமைச்சர்கள் ஆகிவிட்டார்கள், எனவே அந்தப் பொறுப்பிலே அவர்கள் செயலாற்றும்போது, இந்த மன்றத்தினுடைய உறுப்பினராகச் செயலாற்ற முடியாத சூழ்நிலை ஒரு தடங்கலாக இராது என்றாலும், பொறுப்பின் காரணமாக சில எண்ணங்களை அவர்கள் எடுத்துச் சொல்ல முடியாத நிலை ஏற்படுகிறதென்ற உணர்வு உண்டு. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அப்படியல்ல. தொழிலாளர் தலைவராக இருந்து, தொழிலாளர் நல இயக்கங்களில் ஈடுபட்டு, மிக வேகமாக ஈடுபட்டு, செயல்பட்டுக் கொண்டிருந்தவர் அவர். இந்த மன்றத்தின் உறுப்பினராக இருந்து செயல்படுகிற நிலையைப் பார்க்கும் பேறு பெற்றவன் நான். அவர் அமைச்சரான பிறகு, அந்தப் பதவி அவருடைய உணர்வுகளை எடுத்துச் சொல்ல அவருக்குத் தடையாக இருக்கிறதென்று அவர்கள் எண்ணவில்லை என்று கருதுகிறேன். இந்த மன்றத்திலே தொழிலாளர் நலத்தைக் காக்கும் உரிமையோடும், வேகத்தோடும் செயல்பட முடியுமென்று காட்டி, சிறந்த பணி ஆற்றியிருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் இந்த அவைக்கு உறுப்பினராக வந்து, இதே பொறுப்பை ஏற்று, சிறப்பாகத் தொண்டாற்ற வேண்டும், நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்று கூறி, அவரை வாழ்த்துகிறேன்.

அடுத்து, இந்தப் பகுதியிலே எங்களுடைய கட்சியின் துணைத் தலைவர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்களும் ஆகஸ்டு 2 ஆம் தேதி ஓய்வு பெறுகிறார்கள். அவர்கள் இந்த அவைக்கு வருவதற்கு முன்னால் சட்டமன்றப் பேரவையிலே 2 முறை உறுப்பினராக இருந்து, மிக வேகமாக, சிறப்பாக எல்லோரும் போற்றுகிற முறையில் அங்கே பணி புரிந்தவர். அந்த மன்றத்தில் அவர்கள் ஆற்றிய பணியைப் பலர் பார்த்து, அவர் இந்த மன்றத்திற்குப் பொருத்தம் உடையவர்தானா என்று ஐயுறுகிற நிலையில் அவர்களைக் கருதினார்கள். இந்த மன்றத்திற்கு வந்த பிறகு, இந்த மன்றத்திற்கே அவர்கள் பொருத்தமுடையவர்கள் என்று எண்ணும் விதத்தில் அவர்கள் செயல்பட்டுக் காட்டியதை, நமது மாண்புமிகு உறுப்பினராக இருக்கும் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சென்ற முறை பாராட்டுரைக்கு ஓய்வு பெற்றவர்கள் சார்பாகப் பதிலுரையாற்றும்போது, குறிப்பிட்டார்கள்.

"Those who have watched the proceedings of this House will realise that even my hon. Friend Thiru Veerasami has gradually mellowed and has become part of the tradition and atmosphere of the House, displaying none of the fiery spirit with which he entered this House."

என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் இந்த அளவுக்கு

வருகிறபோது எந்த அளவிற்கு வேகமான, தீப் பறக்கும் உணர்வுகளைக் கொண்டிருந்தார்களோ, அவைகளையெல்லாம் நாளாவட்டத்தில் (mellowed) குளிரச் செய்து, இந்த மன்றத்திற்கு ஏற்ப செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று பாராட்டினார்கள். அதிலே ஒரு திருத்தம் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் அந்தக் கருத்துக்களை எல்லாம் மாற்றிக் கொண்டவர்களல்ல. அப்படி எல்லாம் செயல்படத் தெரியாதவர்களும் அல்ல. எங்கே, எப்படிச் செயல்பட வேண்டுமென்று தெரிந்தவர்கள்தான். He has not mellowed down but he has adjusted himself to this House. என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். அவருடைய ஆற்றல், அவருடைய வீரம், அதே நிலையில்தான் இருக்கிறது. இங்கு எப்படிச் செயல்பட வேண்டுமென்ற உணர்வை அவர்கள் காட்டி, இந்த அவையிலே அப்படிச் செயல்பட்டு, நமக்கெல்லாம் வழி காட்டியிருக்கிறார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களும் ஓய்வு பெறுகிறார்கள். அவர்கள் மீண்டும் பேரவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவைக்கு வந்து, நம்மோடு இருந்து, நல்ல பணியாற்ற வேண்டுமென்று வாழ்த்து தெரிவித்து, அவர்களையும் பாராட்டுகிறேன்.

அடுத்து, எங்களுடைய கட்சியின் உறுப்பினராகவும், கட்சியில் அமைப்புச் செயலாளராகவும் இருக்கிற திரு. நீலநாராயணன் அவர்கள் மிக நீண்ட அரசியல் பாரம்பரியத்தோடு இருப்பவர்கள். பெரிய பொறுப்பான பணிகளை கட்சியிலே ஏற்று நடத்தும்போது, அவர்களிடத்திலே இருக்கும் அடக்கம், பணிவு இவைகளையெல்லாம் இந்த அவையில் அவர் உறுப்பினராக இருந்த போதும், காட்டி, அதே சமயத்திலே தன்னுடைய கருத்துக்களை அழுத்தமாகவும், ஆணித்தரமாகவும் எடுத்து வைக்க ஒவ்வொரு முறையும் அவர்கள் ஈடுபட்ட நிலை, நாம் எல்லோரும் அவரைப் பாராட்டச் செய்கிறது. அவரைப் பாராட்டி, அவர்களும் மீண்டும் இந்த அவைக்கு வந்து, பணியாற்ற வேண்டுமென்ற ஆசைகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய அவையிலே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே, அதனுடைய மாநிலச் செயலாளரான திரு மாணிக்கம் அவர்கள் ஆறு ஆண்டுகளாக உறுப்பினராக இருந்து, சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறார்கள். இந்த அவையில் கலந்துகொண்டு, ஆற்றிய உரையின் பாங்கினைப் பார்த்தால், நாம் எல்லோரும் பாராட்டுகின்ற விதத்திலே, மிகவும் அழுத்தமாக, மிகவும் உறுதியாக சமுதாய மாற்றக் கொள்கைகளை இனிமையாக, எல்லாரும் ஏற்றுக்கொள்ளும் வகையிலே சொல்லும் திறமையைப் பெற்றிருந்தார்கள். மிகுந்த விவாதத் திறமையோடு, ஆரவாரம் இல்லாமல், அமைதியாக, சாந்தமாக



நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்கள். அவர்களைப் போன்றவர்கள் அந்தக் கட்சியின் கருத்துக்களை இந்த அவையிலே சொல்லி, எல்லோரையும் ஈர்க்கும் அளவுக்குத் திறமை பெற்றிருந்தார்கள். சில நேரங்களில் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடன் மோதல் இருந்தாலும், அது கொள்கை மோதலே தவிர வேறல்ல.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**: அதற்கு மேலே என்ன மோதல்?

**திரு. ம. சங்கரலிங்கம்**: ஒருவரையொருவர் மிஞ்சி நின்று, நான் மாணிக்கத்தைவிட அதிக ஆர்வமாக, வேகமாக நல்லது செய்வேன் என்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சொல்லுமளவுக்கு இருந்ததே தவிர, மாறுபட்ட கருத்தல்ல. இந்த அவையிலே தனக்கே உரிய முறையில் அவர்கள் கருத்துக்களை எடுத்து வைத்து, ஆற்றிய பணி பாராட்டுக்குரியது. அவரும் இந்த அவைக்கு மீண்டும் வந்து, உறுப்பினராகப் பணியாற்ற வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

இறுதியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. எஸ். துரைசாமி அவர்கள் தூய கதராடையில், பணிவான தோற்றத்தோடு, இனிமையாகப் பழகும் பண்புடையவர். இந்த அவையிலே எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகியவர்கள். தன்னுடைய கருத்துக்களை ஆணித்தரமாகவும், அழுத்தமாகவும் எடுத்துச் சொல்லி, ஒரு இயக்கத்தில் இருந்துகொண்டு எப்படிப் பணியாற்ற வேண்டுமென்பதற்கு இலக்கணமாக இருந்து, அவர் பணியாற்றி, நம்மை எல்லாம் வியப்புக்குள்ளாக்கி இருக்கிறார்கள். அப்படி அமைதியாக இருந்து பணி புரிகிறவர்கள் இருக்க வேண்டியது இந்த அவை என்ற முறையில் அவர்களும் இருந்துகொண்டு, பணியாற்றி இருக்கிறார்கள். அவர்கள், இந்த அவைக்குப் பேரவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து, தொடர்ந்து நம்மோடு பணியாற்ற வேண்டுமென்ற பேரார்வத்தைத் தெரிவித்து, இந்த 7 உறுப்பினர்களும் மீண்டும் வந்து நம்மிடையே பணியாற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடும், நல்லெண்ணத்தோடும் அவர்களை வாழ்த்துகிறேன். ஆறு ஆண்டுக் காலம் அவர்கள் செய்த பணி, இந்த அவைக்குச் சேர்ந்த பெருமை. அவர்கள் பேசிய பேச்சுக்கள் எல்லாம் இந்த அவைக்கும், நாட்டுக்கும், ஜனநாயகத்திற்கும் ஒரு இலக்கணமாக, அணிகலனாக அமைந்துள்ளன என்று எடுத்துக் கூறி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 8 உறுப்பினர்களையும் பாராட்டி, அவர்கள் மறுபடியும் வர வேண்டுமென்ற என்னுடைய ஆசையைத் தெரிவித்து, அமைகிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1983 ஏப்ரல் 26

(முற்பகல் 11-20)

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய மன்றத்தினுடைய பெருமைக்குரிய உறுப்பினர்களாகத் திகழ்ந்து, தம்மோடு பணியாற்றி சிறப்புக்குரியவர்களாக விளங்கிய 7 மாண்புமிகு உறுப்பினர்கள் ஓய்வுபெறும் நிலைக்கு, பதவிக் காலம் முடிவடைகிற நிலைக்கு வந்திருக்கிறார்கள். மீண்டும் அவர்கள் இந்த அவையிலே வந்து பணியாற்ற வேண்டுமென்ற உண்மையான, உரிமையான விருப்பத்தினைத் தெரிவித்து அவர்களுக்குப் பாராட்டுரை பகர்கின்ற நிலையிலே இங்கே நான் நின்றுகொண்டிருக்கிறேன்.

இந்த அவையிலே நம்முடைய மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையே குறைந்திருக்கின்ற நிலையில், எந்தக் குறையும் வெளியே தெரியாத அளவுக்கு அவையினுடைய மேலான நடவடிக்கைகள் எல்லாம் வெளி உலகத்திற்கு நல்ல முறையில் தெரிகின்ற அளவுக்கு, இந்த அவையினுடைய முக்கியத்துவம் சிறப்பாகத் தெரிகின்ற அளவுக்கு இந்த அவை கடமை உணர்வோடு, கண்ணியத்தோடு கடந்த காலங்களிலே செயல்பட்டுக் கொண்டு வந்திருக்கிறது. இதிலே இந்த முறை ஓய்வுபெறுகின்ற 7 மாண்புமிகு உறுப்பினர்களும் தனித் தனி முறையிலே மிகச் சிறப்பாக தங்களுடைய பணிகளை ஆற்றியிருக்கிறார்கள், செயல்பட்டிருக்கிறார்கள் என்பதோடு மாத்திரமல்ல, இந்த 6 ஆண்டுக் கால வரலாற்றிலே தாங்கள் திறமையானவர்கள் என்பதை தங்களுடைய செயல் திறன் மூலமாக நிரூபித்துக்காட்டியவர்கள். பொதுவாகவே ஜனநாயகத்தினுடைய பெருமை எதிலே திகழ்கிறது என்றால், எடுத்து வைக்கின்ற வாதங்களிலே தான். ஜனநாயகத்தினுடைய முழுமையான வெற்றியும் அதிலே தான் அடங்கியிருக்கிறது. எப்படிப்பட்ட வாதங்கள் மக்களவையிலே வைக்கப்படுகின்றன, அவை எப்படி மக்களால் வரவேற்கப்படுகின்றன என்பதிலே தான் ஜனநாயகத்தின் வெற்றியே அடங்கியிருக்கிறது. அதுதான் ஜனநாயகத்தினுடைய அளவுகோலாகக் கூட விளங்குகிறது. அந்த வகையில் நிச்சயமாக தமிழகத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய மேலவைக்குச் சிறப்பான இடம் உண்டு. அந்தச் சிறப்பான இடத்தை 6 ஆண்டு காலத்திலே பெற்றுத் தந்தவர்களிலே முதன்மையான இடத்திலே திகழ்ந்தவர்கள் இந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தான் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இடையாது



1983 ஏப்ரல் 26] [திரு. க. இராமமூர்த்தி]

நம்முடைய மேலவை சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. சிறப்பான வரலாற்றைப் படைத்திருக்கிறது. இந்த மேலவையிலே அமர்ந்து யாரெல்லாம் பணியாற்றி பெருமை படைத்திருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே எண்ணிப்பார்க்கிறேன். இந்த அவையிலே உறுப்பினராகி, முதலமைச்சராக இருந்து பணியாற்றி அவையின் பெருமையை உயர்த்தியவர் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்—இராஜாஜி அவர்கள். அதேபோல இந்த அவையிலே உறுப்பினராகி, முதலமைச்சராக இருந்து பணியாற்றியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் நான் பெருமையோடு எண்ணிப்பார்க்கிறேன். இந்த அவையினுடைய எதிர்க் கட்சி வரிசையிலே அல்லது எதிர்க் கட்சி உறுப்பினர் என்கிற முறையில் இல்லையென்றாலும் கூட, அரசுப் பொறுப்பிலே ஒன்றும் இல்லையென்றாலும் கூட, சாதாரண உறுப்பினர் என்கின்ற முறையில் எப்படிப்பட்ட பெரியவர்கள் எல்லாம் இங்கே அமர்ந்து செயலாற்றியிருக்கிறார்கள் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன். அந்த வகையில் நான் ஓர் உறுப்பினர் என்கிற முறையில் பெருமைப்படுகிறேன்.

நம்முடைய உச்சநீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த நீதிபதி பதஞ்சலி சாஸ்திரி துவங்கி நீதிபதி இராஜமன்னார் அவர்கள் வரை பல நீதிபதிகள் இந்த அவையில் அமர்ந்து இந்த அவை சிறப்படையச் செய்திருக்கிறார்கள். அது போல் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் இந்த அவையில் அமர்ந்து பணியாற்றியிருக்கிறார்கள். இப்படி மிகப் பெரிய சிறப்புக்குரிய பெரியவர்கள் எல்லாம் அமர்ந்து பணியாற்றிய அவை இந்த மேலவை. அதோடு மாத்திரமல்லாமல் நம்முடைய மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே கூட இந்த அவையினுடைய உறுப்பினராக பல காலத்திற்கு முன்பு அமர்ந்து பணியாற்றியிருக்கிறார்கள். இவை எல்லாம் இந்த அவையினுடைய கடந்த காலப் பெருமைகளை நமக்கு நினைவுபடுத்துகின்றன. அந்த அளவுக்கு நாமும் சிறப்புக்குரிய பெருமைகளைக் காத்திருக்கின்றோம் அல்லது காத்து வருகின்றோம் என்பதை நிலைநிறுத்துவதற்குரிய ஒரு நிகழ்ச்சியாக இன்றைய நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஓய்வு பெற இருக்கின்ற உறுப்பினர்களில் நம்முடைய அவை முன்னவர் மாண்புமிகு திரு. கா. இராசாராம் அவர்கள் முதல் இடத்தைப் பெறுகிறார்கள். அவர்கள் இந்த அவையில் உறுப்பினராக ஆகி, அவை முன்னவராக ஆனது ஒரு சிறப்பான வாய்ப்பு. யாருக்குமே கூட இல்லாத வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்த மேலவையைப் பொறுத்தவரையில்,

பெரியவர்கள் இருக்கின்ற அவை என்கின்ற அளவில் சில நேரங்களில் வயதானவர்கள் இருக்கின்ற அவை என்று கூட சொல்வதுண்டு. ஆனால் இளைஞரான அவர் இந்த அவையின் முன்னவர் என்கிற பொறுப்பை ஏற்று, எந்த அளவுக்கு மிகச் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார் என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதிலே யாருக்கும் ஐயப்பாடில்லை. இந்தப் பொறுப்பிலே இருக்கிறவர்களுக்குச் சில சங்கடங்கள் உண்டு. எல்லோருக்கும் பொதுவாக இருந்துகொண்டு அதேநேரத்தில் அரசின் நிலையையும் காத்தாக வேண்டும். அதேசமயத்தில் அவை நடவடிக்கைகளையும் நல்ல முறையில் கொண்டு செல்லும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமையும் அவருக்குண்டு. இவை எல்லாவற்றையும் கூட அவையிலே இருக்கின்ற அத்தனை அரசியல் கட்சிகளோடும் தொடர்புகொண்டு, அத்தனை பேரையும் அணைத்து இழுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தில் வேறு அவை முன்னவர் இருக்கிறார். இவை எல்லா அம்சங்களையும் சரியாகக் கடைப் பிடித்து, சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் இடத்தைப் பெற்றுக்கொண்டிருப்பவர் தான் நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். இதை நான் பெருமையோடு எண்ணிப்பார்க்கிறேன். இங்கே இந்த அவையிலே நாம் என்ன தான் அரசியல் ரீதியாக கருத்து வேறுபட்டாலும் சரி, அல்லது மாறுபட்டாலும் சரி, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காத நிலை இருந்தாலும் சரி, அவை என்று வரும்போது தான் அப்படிச் செய்கிறோமே தவிர, தனிப்பட்ட முறையிலே எந்தப் பிரச்சினையையும் அத்தகைய ஒரு கண்ணோட்டத்திலே அணுகுவதே கிடையாது. இந்த அவை முடிந்ததற்குப் பிறகு, அவைக்கு வெளியே கிடையாது. இந்த அவை முடிந்ததற்குப் பிறகு, அவைக்கு வெளியே நாங்கள் எல்லோரும் எத்தகைய நண்பர்களாக இருந்து கொண்டிருக்கிறோம என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்தகைய ஒரு நல்ல வரலாறுடைய நம்முடைய மன்றத்தை அதே வழி நின்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் நடத்திக்காட்ட துணை நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்த்து நான் பெருமைப்படுகிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் தந்தை பெரியாரிடம் இருந்து பணியாற்றியவர்கள். அதற்குரிய பெருமையைப் பெற்றவர்கள் அவர்கள் என்பதோடு மாத்திரமல்லாமல் பகுத்தறிவு உணர்வோடு செயல்பட்டவர்கள். இந்த அவைக்கு அவர்கள் வருவதற்கு முன்பும், வந்ததற்குப் பிறகும் அவர்கள் தன்னுடைய கடமைகளை எப்படி ஆற்றியிருக்கிறார்கள் என்பதை என்னால் சுட்டிகாட்டாமல் இருக்க முடியவில்லை. அவர் எடுத்து வைக்கிற வாதங்



களிலே எவ்வளவு தீவிரமாக, அழுத்தந்திருத்தமாக இருந்திருக்கிறார் என்பதை நாம் பல முறை கண்டிருக்கிறோம். அவர் எந்தக் கருத்துக்களை இங்கே அழுத்தந்திருத்தமாக எடுத்து வைக்கிற நேரத்திலேயும், கொள்கையிலே தாக்குதல் இருக்குமே தவிர, அதைக் கொண்டு வருகிறவர்கள் மேல் அல்லது கருத்து மாறுபட்டவர்களுக்கு எதிராக எந்தவிதத் தாக்குதலும் இருக்காது, தனிப்பட்டவர்களைப் பற்றிப் பேசுவதும் கிடையாது. அவர் எப்போது அவைக்கு வந்தாலும், அமைச்சராக அவையினுள் நுழைந்து உட்கார்ந்த உடனேயே அவருடைய கவனம் முழுவதும் கேள்விக்கு பதில் சொல்வதிலும், தனக்கு என்று முறை வருகின்றபோது வாதத்திற்குத் தகுந்த பதில் சொல்வதிலும்தான் இருந்திருக்கிறது. அது இல்லையென்றால், அவருடைய முழு கவனமும் பைல்களிலே இருக்கும். இப்படி அவர்களுடைய முழு கவனமும் தன்னுடைய துறை சம்பந்தப்பட்ட விஷயங்களிலே இருக்குமே தவிர, வேறு எந்தப் பிரச்சினைகளிலும் அவர்கள் ஈடுபட்டதில்லை. அந்த வகையில் அவர்கள் இந்த அவைக்குப் பெரிதும் உதவி செய்தவர்களாவார்கள்.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களைப் பொறுத்தவரையிலும், அவர்களை நான் மிகச் சிறிய வயதிலேயிருந்தே அறிந்தவன். என்னை அவர் தெரிந்திருக்க நியாயமில்லை. நான் பள்ளிச் சிறுவனாக இருந்த காலத்திலேயே அவர்கள் எங்கள் பகுதியிலே விழுப்புரத்திலே ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டராக இருந்திருக்கிறார்கள். அந்தச் சமயத்திலேயே சமுதாயச் சீர்திருத்தத்திலே அக்கறை எடுத்துக்கொண்டு, தொழிற் சங்கங்களிலே அக்கறை எடுத்துக்கொண்டு, எங்கள் பகுதியிலே நடைபெற்ற பல நிகழ்ச்சிகளிலே கலந்துகொண்டிருக்கிறார்கள். அந்தக் காலத்திலேயே அவர்கள் பொதுக் கூட்டங்களில் பேசுகிறபோது, மிகவும் வேகமாகப் பேசுவார்கள். இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகும் கூட, அந்த வேகம் உண்மையிலேயே கொஞ்சமும் குறையாமல் பேசுகின்றவர்கள் என்று சொன்னால், வயது என்பது உற்சாகத்திற்கும் வேகத்திற்கும் எந்த வகையிலும் தடையாக இல்லை என்பதை அவர்களுடைய செயல் மூலம் நிரூபித்து வருகிறார்கள் என்பதை எண்ணிப்பார்த்து என்னால் பெருமைப்படாமல் இருக்க முடியவில்லை. அது மாத்திரமல்லாமல், அவருடைய துறையைப்பற்றிப் பரிபூர்ணமாக உணர்ந்திருக்கிறார். அதை உணர்ந்து பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கின்ற வகையில் வலிமையான அணுகுமுறைகளை மேற்கொள்ளும் திறமை படைத்த அவர்கள் ஓய்வுபெற இருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. எஸ். துரைசாமி அவர்களைப் பொறுத்த வரையில், இந்த அவையில் அவர் ஓர் சைலன்ட் மெம்பர். (Silent

அவர் இங்கே பேசுவது குறைவு என்றாலும் கூட, பேசுகின்ற அவசியத்தை அவர் உருவாக்கிக் கொள்கின்றபோது, நியாயமான காரணங்களுக்காக அவர் அப்படி உருவாக்கிக்கொள்கிறார் என்பதை நாம் காண முடிந்திருக்கிறது. அப்படி அவர் தன்னுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்லும் போது, மிகத் தெளிவாக எடுத்துச்சொல்லியிருக்கிறார். தனி உரிமைக்காக இருந்தாலும் சரி, அல்லது சமுதாயத்திற்குத் தேவைப்படுகிற ஒருசில பிரச்சினைகளுக்காக வேண்டி அவருடைய கருத்துக்கள் இருந்தாலும் சரி அவற்றை இந்த அவை பரிபூரணமாக ஏற்க வேண்டுமென்ற முறையிலே அவர் தெளிவாகச் சொல்லி அரசு செயல்படுத்த வேண்டுமென்று வாதாடியிருக்கிறார்.

(முற்பகல் 11-30)

இந்த அவையின் உறுப்பினர்கள் இந்த அவையில் மட்டுமல்ல, அவைக்கு வெளியிலும் சிறப்பாக ஆற்றியிருக்கிற பணிகள் பாராட்டுக்குரியவை. மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்களைப் பொறுத்த வரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தில், அதற்கு முன் திராவிட இயக்கத்தோடு நீண்ட நெடுங்காலத் தொடர்பு கொண்டவர்கள். அவர்களுடைய கட்சியைக் கடந்து, எல்லோராலும் மதிக்கப்படுகிற, பாராட்டப்படுகிற அளவுக்கு எளிமையான நிலையில் இருந்து, தான் ஏற்றுக்கொண்ட கொள்கையை நிலை நாட்டியவர். பொது வாழ்க்கையில் அவர் இந்த அவையில் இருக்கிற காலத்திலேயே மணி விழாக் கண்டவர். அப்படி பெருமைக்குரியவர், பாராட்டுக்குரியவர் இந்த மேலவையிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவர் திரும்ப வரவேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களைப் பொறுத்த வரையில், அவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தமிழ் மாநிலப் பொதுச் செயலாளர். அந்தப் பதவியில் இருப்பவர் நம்முடைய அவையில் பொறுப்பு ஏற்றிருந்தது நமக்குப் பெருமையாகும். அவருடைய செயல் முறையால் எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கிற தன்மை படைத்தவர். இந்த அவையில் அவருடைய கருத்தை எடுத்து வைப்பதில் அழுத்தமாக இருந்தார்கள். அதே அளவிற்கு மற்றவர்களுடைய கருத்தையும் மதிக்கத் தெரிந்த அளவுக்கு இங்கே செயல்பட்டிருக்கிறார்கள். இந்திய நாட்டின் சரித்திரத்தைப்பற்றி அவர்கள் வைத்திருக்கிற ஞாபக சக்தி மிகவும் சிறப்புக்குரியது. அவர்களுடைய விவாதங்கள் எளிமையானது மட்டுமல்ல, வல்லமையானதும் கூட, அவர்கள் பேசும்போதெல்லாம், தன்னுடைய கட்சியை மட்டுமல்ல, தமிழகத்தின் நலனையே இந்த அவையில் காத்திருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கலாம்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்களைப் பொறுத்த வரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக் கழகச் செயலாளராக இருக்கிற அவர், இந்த அவையிலே பல மணி நேரம் அழுத்தமான வாதங்களை எடுத்து வைத்து உரையாற்றக் கூடியவர்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**: 'பல மணி நேரம்' என்பதை அழுத்தமாகச் சொல்லுங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி**: நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டுக் காட்டியதைப் போல, இந்த அவையில் அவர் எப்படிப் பணியாற்றப் போகிறார் என்று வெளியிலே எதிர்பார்த்தது கூட உண்டு. 1967-ல் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்திலும், நான் காங்கிரசிலும் சட்டமன்றத்தில் பணியாற்றிய போதும் கூட, அப்போதே இப்படித்தான் பணியாற்றுவார் என்று எனக்குத் தெரியும். சில சூழ்நிலைகளை மிகச் சுலபமாக தனக்குச் சாதகமாக்கிவிடுகிற தன்மை அவருக்கு உண்டு. அதை இங்கே மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி இருக்கிறார். அதற்கும் மேலாக தான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்கு ஒரு தொய்வு வருகிறது என்றால், அல்லது தான் ஏற்றுக் கொண்ட தலைமைக்குச் சில சங்கடங்கள் வருகிறபோது, எவ்வளவு வல்லமையாக அதை எதிர்த்து நின்று, துணை நிற்க முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டு திரு. வீராசாமி அவர்கள். அவர் மற்ற துறைகளிலும் எப்படி பணியாற்றுகிறார் என்பது நாம் அறிந்த ஒன்று. அதற்கு மேலாக இந்த அவையில் நின்று, அவருடைய இயக்கத்திற்கே பெரும் வலிமையூட்டுகிற பணியில் இருந்தார்கள் என்பதை நாம் அறியலாம். மேலவை என்பது அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிற ஒன்றாகும். அரசியல் கட்சிகள் தேர்ந்தெடுத்து அனுப்புகிற தங்களுடைய உறுப்பினர்கள் மூலம் தங்களுடைய கொள்கையை வெளிக்கொணர முடியும் என்பதற்கு திரு. வீராசாமி அவர்கள் ஒரு எடுத்துக்காட்டு. திரு. வீராசாமி அவர்கள் அதை முழுச் சிறப்பாகச் செய்து காட்டியிருக்கிறார் என்றே நான் கருதுகிறேன்.

கடைசியாக, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையில் உணர்ச்சிகள் கொந்தளித்தது உண்டு. இந்த அவையில் ஆழமான விவாதங்கள் நடந்தது உண்டு. கடுமையான மாறுபாடுகளையும் வேறுபாடுகளையும் கண்டது உண்டு. ஆனால் இந்த அவையின் நடவடிக்கைகள் எந்தவிதமான விமரிசனத்திற்கும் ஆளாகியது அல்ல என்ற நிலையில் இந்த அவையை நடத்திச் சென்றிருக்கிறோம். அதற்குரிய பெருமை ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் உண்டு என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவிற்கு தங்கள் தங்கள் கட்சித் தலைமையுடன் தொடர்பினைக் கொண்டு

[திரு. க. இராமமூர்த்தி] [1983 ஏப்ரல் 26

இங்கே கட்சி உறுப்பினர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். இந்த மேலவை சிறப்பான விவாதங்களின் மூலமாக இந்திய ஜனநாயகத்திற்கே ஒரு எடுத்துக் காட்டாக விளங்கியிருக்கிறது. அத்தகைய சூழ்நிலைகளை ஏற்படுத்திய மாண்புமிகு உறுப்பினர்களில் இந்த ஏழு பேர்களும் மிகப் பெரிய பங்கினை ஏற்றிருக்கிறார்கள். அவர்கள் மீண்டும் இங்கே திரும்ப வர வேண்டும். பல்வேறு பொறுப்புகளில் இருக்கும் அவர்களுக்கு இது வழியனுப்பு விழாவாக இல்லாமல், மீண்டும் வருகிற வரவேற்பு விழாவாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பேச்சு இன்னும் சுருக்கமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்கள் நான் பேசும்போது தான் சீக்கிரம் முடிக்க வேண்டுமென்று அறிவிப்பார்கள். (சிரிப்பு) இந்த அவையில் பணியாற்றிய 7 பேர்களின் பதவிக்காலம் முடிய இருப்பதால், அவர்கள் 7 பேர்களுக்கும் நான் என்னுடைய கட்சியின் சார்பில் பாராட்டுதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மூத்தவர்கள் சபை (எல்டர்ஸ் கவுன்சில்) என்று சொல்லப்படுகிற இந்த சபைக்கு, முன்னவராக வயதில் இளையவர் பொறுப்பேற்று, 6 ஆண்டுக் காலம் அதைத் திறம்பட நடத்தி வந்திருக்கிறார்கள். இந்த அவையில் எனக்கு முன்பு பேசிய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னதைப்போல, திரு. வீராசாமி போன்றவர்கள், என்னைப் போன்றவர்கள் இங்கே பொறுப்பேற்ற போது, திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதைப்போல, சில சமயங்களில் சூடான விவாதம் வந்தபோது கூட நிலைமைகளைச் சமாளிக்க அவர்கள் இளைஞர் என்ற முறையில் கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிற பெருமை, இந்த சபைக்கு மேலும் கண்ணியத்தைச் சேர்த்தது என்ற வகையில் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் மிகச் சங்கடமான நிலையில் பொறுப்பை ஆற்றினார்கள். மத சார்பற்ற இந்த நாட்டில், நாத்திகத்தையே கொள்கையாகக் கொண்ட ஒரு கட்சியின் சார்பில், மெஜாரிட்டி இந்து மக்களுடைய இந்து சமய அற நிலைய ஆட்சித் துறையை நிர்வகிக்கிற பொறுப்பை அவர்கள் ஏற்றபோது, அவர்கள் சொல்கிற பல கருத்துக்கள், ஒருவேளை ஆத்திகராகவே மாறிவிட்டாரோ என்று நினைக்கக்கூடிய



1984 ஏப்ரல் 26]

அளவுக்கு பல சங்கடமான நிலையில் இந்தப் பொறுப்பை நிறைவேற்றினார்கள். ஆனால் நான் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியது கேள்விகளுக்கு பதில் சொல்லும்போதோ, அல்லது மசோதா சம்பந்தப்பட்டவைகள் வரும்போதோ, அல்லது அவர்கள் சம்பந்தப்பட்ட செய்திகளைச் சொல்லும்போதோ, இந்த அவையில் இருப்பவர்களுக்கும், வெளியில் இருப்பவர்களுக்கும் சுருக்கமான பேச்சில் சிறந்த முறையில் பிரமுக்கியமான விஷயங்களைப் பேசுகிறபோது, அவர்களுடைய பேச்சுத் திறமை குறித்து, எனக்கே பொறாமையாக இருக்கும் அப்படி ஒரு பேச்சை நான் இங்கே கண்டேன். மேலும் அவருடைய காலத்தில் தமிழ்நாடு விளம்பரத் துறை பெரிதும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அரசுடைய சாதனைகள் ஒன்றுகூட சொல்லாமல் விடப்பட்டதில்லை. சில சமயங்களில் அதிகமாகவே சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கக்கூடிய அளவுக்கு இருந்தது. அரசின் சாதனைகளைச் சொல்ல வேண்டியது அவசியம்தான். அந்தக் காரியத்தைச் சிறப்பாகச் செய்தார்கள்.

அடுத்தபடியாக, என் நண்பர், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள். நாங்கள் இரண்டு பேரும் பேசுகிறபோது, அவையில் இருக்கிற பலருக்கு எங்கே இது சண்டையில் போய் முடியுமோ என்று நினைக்கிற நிலை ஏற்பட்டாலும் கூட, அது எங்களுக்குள் 2 பேருக்குள் இருக்கிற பொதுச் சண்டையாக இருந்தது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவைத் தலைவருக்கு அதை விட சங்கடமாக, இங்கே இருந்தாக வேண்டிய கட்டாயத்தில் இருந்தது உண்டு.

**திரு. ஆ. நல்லசிவன் :** ஆகவே நாங்கள் பொதுப் பிரச்சினைக்காக சண்டை போட்டிருக்கிறோம். தொழிற் சங்க விஷயத்தில் சேர்ந்து நின்றும் போராடியிருக்கிறோம், எதிர்த்தும் போராடியிருக்கிறோம். 1974-75-ல் பஞ்சாலைப் போராட்டத்தில் நானும் அவரும் ஒரே போராட்டக் கமிட்டியில் இருந்தாலும் கூட, அந்தக் கமிட்டியிலிருந்து என்னை வெளியேற்ற வேண்டிய நிலையில்

(முற்பகல் 11-40)

அவர்கள் இருந்தார்கள். பள்ளிப்பாளையம் போராட்டத்தின்போதும் நாங்கள் இருவரும் சேர்ந்து பணியாற்றி இருக்கிறோம். இப்படி இரண்டு அனுபவங்களும் உண்டு. அதாவது சேர்ந்து போராடிய அனுபவமும் உண்டு. ஒருவருக்கொருவர் கொள்கை காரணமாக எதிர்க்க வேண்டிய நிலையில் இருந்து எதிர்த்துக் கொண்டதும் உண்டு. இவ்வளவு தூரம் போராடினாலும் கூட, தனிப்பட்ட முறையில் எனக்கு அவர்மீது எந்தச் சந்தர்ப்பத்திலும்

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 26

கோபமோ அல்லது பகைமை உணர்வோ ஏற்பட்டதில்லை. பல நேரங்களில் நான் அவையில் மிகவும் கடுமையாகப் பேசி முடித்த பிறகு வெளியே வந்த போது அவரிடத்தில் பேசிக் கொண்டிருந்திருக்கிறேன். அவரும் என்னிடம் சாந்தமாகவே பேசிக் கொண்டிருந்திருக்கிறார். இப்படி அவைக்குள்ளே நடப்பதெல்லாம் நாங்கள் ஏற்றுக்கொண்ட கொள்கையின் காரணமாக ஏற்படுகிற பிரதிபலிப்புகளே தவிர, வேறொன்றுமில்லை. இதை நான் அவையில் சொல்லிக்கொள்வதற்குக் காரணம், இப்படி நாங்கள் அவையில் கடுமையாகப் பேசிக்கொள்வதைப் பார்க்கிறவர்கள் ஏதோ எங்களுக்குள் தனிப்பட்ட முறையில் மோதல் ஏற்படுகிறது என்று சந்தேகிப்பார்களோ என்ற சந்தேகம் எனக்கு உண்டு. எனவேதான் தொழிற் சங்கத்திலும் சரி, சட்டமன்றத்திலும் சரி, இப்படிப்பட்ட இருவகை அனுபவங்கள் உண்டு என்பதை மட்டும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களைப் பொறுத்த வரையில், எனக்கு ஒரு ஆச்சர்யமே ஏற்பட்டது உண்டு. அவையில் என்ன தான் புரோவகேஷன் வந்தாலும், பொறுமையோடு தன்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதைப் பார்த்து, நான் பொறாமைப்பட்டிருக்கிறேன். இங்கே வந்த பிறகு, அவருடைய போக்கிலும் பேச்சிலும் மிகவும் 'மெல்லோடு' ஆகிவிட்டார் என்று குறிப்பிட்டார். அவர் அவைக்கு வருவதற்கு முன்பாக மிகவும் "ஃபையரி ஸ்பீக்கர்" என்று சொல்லப்பட்டவர். ஆனால் அப்படிப் பட்டவர் தன்னுடைய கொள்கையை எந்த வகையிலும் விட்டுக் கொடுக்காமல் எப்படிப்பட்ட இன்டர்வென்ஷன்கள் வந்தாலும் பொறுமையோடு அவற்றிற் கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டு, காட்டிய பொறுமையைப்பற்றி நானே பொறாமை கொண்டிருக்கிறேன். காரணம் நானே பல நேரங்களில் பொறுமையை இழந்திருக்கிறேன். அவரைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் பாராட்டுக்குரியவர் என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தோழர் திரு. மாணிக்கம் அவர்கள் ஓய்வுபெற இருக்கிறார். அவரைப்பற்றி ஒன்றைக் குறிப்பிடுவதற்கு நான் விசேஷமாகக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் உண்மையில் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்தவர். 1943 ஆம் ஆண்டில் தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக அப்போது அவர் படித்துக்கொண்டிருந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். 1944 ஆம் ஆண்டு முதல் 1964 ஆம் ஆண்டு வரை அவர் தன்னுடைய சொந்த மாவட்டமான தென்னார்க்காடு மாவட்டத்திற்குச் செல்லா



1984 ஏப்ரல் 26]

மல், என்னுடைய மாவட்டமான திருநெல்வேலி மாவட்டத்திற்கு வந்திருந்து அங்கே எங்கள் கட்சியை வளர்த்தார்கள். அவரிடம் நான் பயிற்சி பெற்றவன். அந்த வகையில் அவர் என்னுடைய கட்சி ஆசான் என்றுகூட சொல்லிக்கொள்வதில் பெருமை அடைகிறேன். அப்படிப்பட்ட தோழருக்கு நான் பாராட்டுரை வழங்க வேண்டிய சந்தர்ப்பத்தில் இருக்கிறேன். அவர் இன்றையதினம் அவையில் இல்லை என்றாலும், அவருக்கு நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. எஸ். துரைசாமி அவர்களைப் பொறுத்த வரையில், அவையில் மிகவும் அடக்கமாகத் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கூடியவர். அதுவும் சொல்ல வேண்டிய நேரத்தில் மிகவும் அழுத்தத் திருத்தமாகச் சொல்லுவார். அவர் பெரும்பாலும் சபையில் ஒரு "சைலென்ட் ஸ்பெக்டேடர்" ஆக இருந்தாலும், ஆளும் கட்சிக்குத் தன்னுடைய அடக்கத்தின் மூலமாகவும், பொறுமையின் மூலமாகவும் பெருமை தேடிக் கொடுத்த ஒரு உறுப்பினராக இருந்தார் என்ற முறையிலும் அவருக்கு நான் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு ஓய்வு பெறும் அனைவருக்கும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு, வாய்ப்பு அளித்த தங்களுக்கும் நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்

THIRU J. M. MIAKHAN : Hon. Chairman, Sir, on behalf of my Party, the Indian Union Muslim League, I associate myself with the sentiments expressed by the other hon. Members.

Seven hon. Members—Thiru Manickam, Thiru Arcot Veerasami, Thiru Neela Narayanan, the Hon. Thiru R. M. Veerappan, the Hon. Thiru Raja Mohamed, the Hon. Thiru Raghavanandam and Thiru Duraisami—are retiring. They have kept up the tradition of this House. In this House, we do have heated discussions. We have discussed very many things and we have differed on very many things. But, we never quarrel. No Member was obstructed from saying what he wanted to say. Sometimes, if a Minister wanted to intervene and say something, the bell might be rung. But, if aa Member felt that he had something to say, he was never prevented from doing so and he had his say. No Member was prevented from saying what he wanted to say. Every Member used to be waiting to hear the other Member's point of view. During interventions also, proper decorum has always been observed.

[Thiru J. M. Miakhan] [1983 ஏப்ரல் 26

Sir, this is my first and only experience as a Legislator. I have never been a Legislator before. I have always been very much impressed by the conduct of proceedings in this House. Even before coming to this House, I had been closely watching the proceedings of the Assembly and the Proceedings of the Council. I know that very many veterans have adorned this House. We, the present Members of this House, have in no way been less vigilant and less careful in keeping up the prestige and the dignity of this House. Thiru Veerasami, Thiru Manickam and Thiru Neela Narayanan have, on all occasions without exception, kept up the dignity of the House. They might have differed from the views of the other side. They might have put forth their views very forcefully. But, they have never quarrelled. They have never resorted to things like throwing paper-weights, making gesticulations and shouting. They never went to the well of the House and gheraoed the Presiding Officer. They have never done such things. They have always kept up the dignity of the House to a very great extent.

Sir, I hope that their services will again be available to this House so that the country and the State may be benefited. I hope that they will be re-elected so that our House may be benefited by their services. Thank you, Sir.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேலவையைச் சார்ந்த மூன்று அமைச்சர்கள் உள்பட 7 மாண்புமிகு உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடைகிற நிலையில், அவர்களுக்கெல்லாம் பாராட்டுதல்களைக் கூறுகிற வகையிலும், அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைக்கு வர வேண்டும் என்று நம் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்ற முறையிலும், மற்ற பிற அணிகளைச் சார்ந்த தலைவர்கள் பேசிய கருத்துக்களோடும், உணர்வுகளோடும் ஒன்றி, நானும் சில கருத்துக்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

மேலவையைப் பொறுத்த வரையில், இதை ஒரு "ஹவுஸ் ஆப் எல்டர்ஸ்" என்று சொல்வது உண்டு. ஆனால் அதைவிட இதை "ஹவுஸ் ஆப் இ என்லைட்டென்டு" என்று சொல்லுவது சாலப் பொருத்தமாக இருக்கும் என்றுதான் நான் கருதுகிறேன். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் இங்கே மிகவும் இளைஞராக இருக்கிற நம் அவையின் முன்னவர் அவர்கள் மிகவும் 'என்லைட்டென்டு' ஆக இருப்பதால் அவ்வாறு சொல்லுவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1984 ஏப்ரல் 26] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

நம்முடைய மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுடைய தலைமையில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற நம் அவையின் முன்னவர் அவர்களைப் பார்க்கிறபோது, ஆசிரியர் பிரதிநிதியாகிய நான் பல சமயங்களில் பொறாமைப்படுவதுண்டு. இந்த இளைய வயதில் தம்முடைய உணர்வுகளையெல்லாம் கட்டுப்படுத்திக்கொண்டு அருமையான செந்தமிழில் தனனுடைய கருத்துக்களை இங்கே எடுத்து வைப்பதைப் பார்க்கும்போது, நாமும் அந்த அளவுக்கு வளரவில்லையே என்று ஏங்குவது உண்டு. அதோடு மாணபுமிகு கல்வியமைச்சர் அவர்கள் எவ்வாறு நாங்கள் சொல்லுகிற கருதளதையெல்லாம் மிகுந்த பொறுமையோடு கேட்கிறாரோ அதைப் போல் மேலவையின் முன்னவர் என்ற முறையில் அனைத்துத் துறைகளைப்பற்றிய கருத்துக்களையும் இங்கே தொடர்ந்து அமர்ந்துகொண்டு கேட்டு குறிப்பு எடுத்துக்கொள்ளும் கடமை காரணமாக, அவர் பல்வேறு துறைகளைப்பற்றிய அடிப்படை அறிவையும அனுபவத்தையும் மிகுந்த அளவுக்குப் பெற்றிருக்கிறார். எனவே அவருடைய சீரிய பணிக்காக நான் என்னுடைய பாராட்டுதல்களையும், ஆசிரியர் பட்டதாரிகள் முற்போக்கு முன்னணியின் சார்பான பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில், அவர்களின் திறமையைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களே மிக அழகாகக் குறிப்பிட்டார்கள். அவர் அவையில் வினாக்களுக்கு விடையளிக்கும்போதும், கருத்துக்களை எடுத்துச் சொல்லும்போதும் மிகவும் தெளிவாகவும், விளக்கமாகவும் நாமெல்லாம் திருப்தியடைகிற அளவில் சொல்வது உண்டு. துணைக் கேள்வியானாலும் சரி, மூலக் கேள்வியானாலும் சரி, அவர் நமக்கு விடை தருகிற திறமை உள்ளபடியே என் போன்றோருக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது என்பது மட்டுமல்ல, அது என் போன்றவர்களுக்கு ஒரு "இன்ஸ்பிரேஷனாக" அமைந்திருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து, நிர்வாகத் திறமையில்கூட ஒரே ஒரு நிகழ்ச்சியை மட்டும் நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அறநிலையத் துறையோடு தொடர்புடைய அரசினர் உயர்நிலைப் பள்ளி ஒன்றின் பிரச்சினை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் காலை 9 மணி அளவில் அணுகி பிரச்சினையை எடுத்து விளக்கினேன். காலை 10½ மணியளவில் அந்தப் பிரச்சினையைத் தீர்க்கிற வகையில் ஒரு அரசாணையைப் பெற முடிந்தது. இது ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல் அமைந்தது. அவருடைய நிர்வாகத் திறமைக்கு இதை நான் ஒரு சான்றாக எடுத்துக் கொண்டேன். அந்த அளவுக்கு நிர்வாகத் துறையில் மிகுந்த அனுபவத்தையும் அறிவையும் பெற்றவர்கள் என்ற முறையில் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1983 ஏப்ரல் 26

அடுத்து, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கூட ஓய்வு பெறுகிறார்கள். கைத்தறித் தொழிலாளர்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட கூட்டாய்வுக் குழுவில் பணியாற்றிய போது, அவர் ஏழை எளிய மக்களோடு பழகிய பாங்கினை நான் நேரில் பார்க்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. பழகிய மக்களைச் சந்திக்கிறபோது அவர்களோடு தன்னை இணைத்துக்கொள்கிற வகையில், அவர் ஒரு அமைச்சராக இருந்தாலும்கூட, பழகுகிற தன்மையைப் பார்த்து நான் வியந்து போனேன் இப்படிப்பட்ட அமைச்சர்களெல்லாம் மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மேலவைக்குத் தங்களுடைய திறமைகளையும் அறிவாற்றல்களையும் நல்கி அவைக்குப் பெருமை தேடிக் கொடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாகவே என்னைப் போன்றவர்கள் அவர்களிடமிருந்து நிறையக் கற்றுக்கொள்ள வேண்டிய வகையில் எங்களுக்கெல்லாம் ஒரு வகையான பயிற்சியை அளித்திருக்கிறார்கள் என்றால், அது மிகையாகாது.

(முற்பகல் 11-50)

ஆசிரியப் பிரதிநிதியாக உள்ள என்னைப் போன்றவர்கள் ஒரு வரைமுறைக்குள், ஒரு கட்டுப்பாட்டிற்குள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த வரைமுறை, எல்லை, கட்டுப்பாட்டை மீறக்கூடாது என்ற நியதியைக் கடைப் பிடிக்க நாங்கள் விரும்புகிறோம். அந்த வகையிலே எல்லைக்குள், கட்டுப்பாட்டுக்குள் சிறப்பாகச் செயல்படுவது என்பதைப் பொறுத்த வரையில், இந்த மூன்று அமைச்சர்களிடமிருந்து நாங்கள் கற்றுக்கொண்ட பாடம் அதிகம். அந்த வகையில் மூன்று அமைச்சர்களையும் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மீண்டும் அவர்கள் உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் வர வேண்டும் என்று இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் மற்றவர்கள் ஆச்சரியப் படத்தக்க அளவிற்கு, மற்றவர்களுக்கு பிரமிப்பு ஊட்டுகிற அளவிற்கு பல்வேறு துறைகள் தொடர்பான செய்திகளைப் பெற்று வந்து பேசுகிறபோது நாமும் உறுப்பினராக இருக்கிறோமே, ஒரு செய்தியும் கிடைக்கவில்லையே என்று எண்ணியதுண்டு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவரிடமிருந்து வாங்கிக் கொள்வது தானே ?



1984 ஏப்ரல் 26] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஜனநாயகக் கடமைகளை ஆற்றும்போது, அப்படி பல்வேறு செய்திகளைப் பெற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. நாடாளுமன்றத்தில் புகழ்பெற்ற உறுப்பினர்கள், செய்திகளைப் பெறுவதற்காகவே பெரிய அலுவலகத்தை வைத்துக் கொண்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதைப் போலவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பல்வேறு துறைகளின் செய்திகளைப் பெற்று மேலவைக்குப் பெருமை தேடித்தருகிற வகையிலே செய்திகளை எடுத்துச் சொல்லும்போது எங்களைப் போன்றவர்கள் அவரிடமிருந்து இந்தத் திறமையை, வழியைக் கற்றுக்கொள்ள முடிகிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. ப. மாணிக்கம் அவர்கள் ஒரு காந்திய கம்யூனிஸ்ட். கதர் சட்டை போட்ட கம்யூனிஸ்ட். காந்திய கம்யூனிஸ்ட் என்று சொல்லும்போது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதை அவர் ஒப்புக்கொள்கிறாரா ?

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** சில போராட்டங்கள், ஆசிரியர்கள் சம்பந்தமான போராட்டங்களை நடத்துகிறபோது, லாபியில் உட்கார்ந்து விவரங்களைக் கேட்டு சில அறிவுரைகளைக் கூறுவார்கள். அதிக வேகமாக, தீவிரமாகப் போகக்கூடாது என்று அறிவுரை சொல்லுவார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள், ஆசிரியர் இயக்கங்கள் செய்ய வேண்டிய கடமை, ஆசிரியர்கள் இயக்கங்கள் எந்த அளவோடு, எந்த எல்லைக்குள், எந்தக் கட்டுப்பாட்டுக்குள் செயல்பட வேண்டும் என்ற நிலைமைகளைத் தெரிந்து வைத்திருப்பதோடு மட்டுமல்லாமல் அவ்வப்போது தக்க அறிவுரைகளையும் கொடுப்பார்கள். ஆகவேதான் காந்திய கம்யூனிஸ்ட் என்று சொன்னேன்.

என்னுடைய பக்கத்திலே உட்கார்ந்துள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. நீல நாராயணன் அவர்கள் பேசத் துவங்கும் இரண்டு நிமிடங்களுக்கு முன்பு குறிப்பைப் பார்த்துவிட்டு உடனே பேசத் துவங்குவார். முன்கூட்டியே எந்தவித தயாரிப்பும் இல்லாமல் குறுகிய நேரத்தில் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லக்கூடிய ஆற்றலையும், அனுபவத்தையும் பெற்றவர்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. எஸ். துரைசாமி அவர்கள் சுருங்கப் பேசக்கூடியவர். சுருக்கமாகப் பேசுகின்றவர்கள் அதிகமாகக் காரியங்களைச் செய்வார்கள் என்று பொதுவாகச் சொல்லுவார்கள். அப்படிப்பட்ட பெயர் பெருந்தலைவர்

திரு. காமராஜ் அவர்களுக்குக் கூட உண்டு. ஆகவே அவைக்குள் குறை வாகப் பேசி அவைக்கு வெளியே பணிபுரிந்து பல்வேறு காரியங்களைச் சாதித்து பல நன்மைகளைத் தேடித்தரும் வாய்ப்பு அவருக்கு இருந்தது. அந்த வகையிலே குறைவாகப் பேசி நிறைய சாதித்திருக்க வேண்டும் என்று கருதி, அவருக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். மீண்டும் 7 உறுப்பினர்களும் இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், அமைச்சர்களாக இருக்கின்றவர்கள் மீண்டும் அமைச்சர்களாக வர வேண்டும் என்று விரும்புகிறேன். நான்கு அமைச்சர்கள் இந்த அவையின் உறுப்பினர்கள் என்ற பெருமை நமக்குண்டு.

சில நேரங்களில் தவிர்க்க முடியாத காரணங்களாலே சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டுச் செயல்பட முடியாத நிலைமை இருக்கும்போது, மேலவையும் கூடக்கூடாது என்று அரசியல சட்டத்திலே இருக்கிறது. ஆகவே இது குறித்து அரசியல் சட்டத்திலே தக்க திருத்தங்கள் வர வேண்டும் என்பதற்காக நாம் எல்லோரும் பரிந்துரைக்க வேண்டும். இங்குள்ள உறுப்பினர்கள் சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள், பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள், ஆசிரியர்களால் தேர்ந் தெடுக்கப்பட்டு வருகிறார்கள், உள்ளாட்சித் துறையினரால் தேர்ந்தெடுக்கப் பட்டு வருகிறார்கள். இப்படிப் பல்வேறு அமைப்புகளின் மூலமாகத் தேர்ந் தெடுக்கப்பட்டு வருகிறவர்கள் தங்கள் கருத்துக்களைக் கூற வாய்ப்பு இல்லை. ஆகவே அரசியல் அமைப்புச் சட்டத்திலே குறைபாடு இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அந்தக் குறைபாடுகளை நீக்குகிற வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவர நாம் எல்லாம் முனைய வேண்டும். சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்டதற்குப் பிறகு, மாநிலத் தேவைகள் நாடாளுமன்றத் திலே விவாதிக்கப்படுவதற்குப் பதில், மேலவை உள்ள மாநிலங்களில் அந்த மாநிலத்துப் பிரச்சினைகளை விவாதிக்கும் உரிமை அந்த மேலவைக்கு இருக்க வேண்டும் என்ற வகையில் அரசியல் சட்டத்திலே திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று நாம் எல்லோரும் இணைந்து பாடுபட வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இது வழி அனுப்புவது அல்ல. வாழ்த்தக்கூடியதும் பாராட்டுவதும், மீண்டும் வரவிருக்கின்றவர்களுடைய செயல் திறனை எண்ணிப் பார்க்கிற நிகழ்ச்சி யாகக் கருதுகிறேன். மேலவைக்கு ஒரு பெருமை இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள், டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள், சர். ஏ. டி. பன்னீர்





செல்வம், திரு. பதஞ்சலி சாஸ்திரி, டாக்டர் முகமது உஸ்மான், டாக்டர் பி. வி. ராஜமன்னார், டாக்டர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் போன்ற பெரியவர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். தங்களைப் போன்ற தலைவர் இருக்கின்ற கால கட்டத்திலே நாம் உறுப்பினராக இருந்து மற்றவர்களுடைய செயல்திறனை, ஆற்றலை எண்ணி மகிழ்ச்சி அடையக் கூடிய வழியனுப்புகிற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுவதில் நான் மகிழ்ச்சியடை கிறேன். இம்மன்ற முன்னாள் உறுப்பினர்களை வழி அனுப்பியபோது, இரண்டு பெரியவர்கள் பேசிய பேச்சை இப்போது நினைப்பது பொருத்தம் என்று கருதுகிறேன்..

டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் ஒரு முறை வழி அனுப்புகிறபோது குறிப்பிட்ட கருத்துக்களிலிருந்து இந்த அவையின் பெருமையை எந்த அள விற்கு உலகத்திற்கு உணர்த்தியிருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

"As one who has been associated with this Council since its formation after Independence, may I say how much I have appreciated being a Member of this House? I have considered this position as of much greater importance and of much greater dignity than any position that I have ever occupied, because here we are as representatives of the people, although in a limited measure, giving expression in the best way we can, to our views on the work of this Council. May I say this also? I have been present at the meetings of different Council and Assemblies from time to time, and I have stated and I shall repeat it now, that no Council in the whole of India has a greater reputation than the Madras Legislative Council."

என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த அவையைப்பற்றி அவ்வளவு பெருமையாகக் கருதினார்கள் என்று எண்ணுகிறபோது, அவை உறுப்பினர்களாக இருந்தவர்களும் இருப்பவர்களும் இப்போது அவ்வாறு பெருமைப்படலாம்.

அதைப் போலவே பேரறிஞர் அண்ணா அவர்கள் அதைப் போன்றதொரு நிகழ்ச்சியில் குறிப்பிட்டதைக் குறிப்பிட விரும்புகிறேன்,

(டாக்டர் இரா. சனார்த்தனம்) [1983 ஏப்ரல் 26

"தலைவர் அவர்களே, நம்முடைய அவையிலே உள்ள மதிப்புமிக்க உறுப்பினர்களிலே சிலர் விலகுகிறார்கள் என்கிறபோது அவர்களிலே மிகப் பலர் மறுபடியும் திரும்பி இந்த அவையிலே வர வேண்டும் என்று இந்த அவையிலே உள்ள மற்றவர்கள் எல்லாம் விரும்புவது உண்மையிலேயே அவர்களிடத்திலும், அவர்கள் ஆற்றியிருக்கிற தொண்டினிடத்திலும் இந்த அவை வைத்திருக்கிற நல்ல மதிப்பை சரியாக எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது. அவர்கள் விலகிச் சென்றாலும் அவர்களிலே பலர் திரும்ப வரப்போகிறார்கள் என்ற நிலை நிச்சயமாக ஏற்பட வேண்டும் என்று நாமெல்லாம் விரும்புகிறோம். ஏனென்றால் அவர்கள் எல்லாம் பெற்றிருக்கிற அறிவாற்றல், இந்த அவையினுடைய தரத்தை உயர்த்துவதற்கு இது வரையில் மிக அதிகமான அளவுக்குப் பயன்பட்டு வந்திருக்கிறது.

மேலவை, கீழவை என்று இரண்டு வேண்டுமா என்பதைப்பற்றி பல இடங்களில் விவாதங்கள் நடைபெற்ற நேரத்தில்—நான் அதைப் பற்றிய பல ஏடுகளைப் படித்திருக்கிறேன். ஒரு ஆங்கில ஏட்டிலே படித்தேன். மேலவை எதற்கு என்று ஒருவர் கேள்வி கேட்க அதற்கு மற்றவர் பதில் அளித்து இருக்கிறார். நீங்கள் காப்பி அருந்துகிறபோது காப்பி ஊற்றி வைத்திருக்கிற கோப்பை இருக்கிறதே அதைத் தாங்க வைத்துக் கொண்டிருக்கும் சாசர் ஒன்று வைத்திருக்கிறீர்களே அது எதற்கு என்று கேட்டார்கள். காப்பி கொஞ்சம் கொதிப்பாக இருந்தால் அதை சாசரில் ஊற்றி ஆற வைக்கவும், காப்பி குடிக்கிறபோது கோப்பையிலே இருந்து சிந்திவிட்டால் அது உடையிலே படாமல் தாங்கிக் கொள்ளவும் சாசர் இருக்கிறது என்று சொன்னார்கள். அதே போல மேலவை இருப்பதும் அதற்குத்தான். கொஞ்சம் கொதிப்பு ஏற்பட்டால் அதைச் சுகப்படுத்துவதற்கும், அதை நல்ல முறையில் ஆராய்ந்து பார்ப்பதற்கும் இருப்பதுதான் மேலவை. மேலவை இதற்காகத் தான் இருக்கிறது என்று பதில் அளித்தார்கள் என்று படித்தேன். இதை நான் படித்த நேரம் மேலவைகள் எல்லாம் இருக்கக்கூடாது என்று எண்ணிக் கொண்டிருந்த நேரம். நானே அந்த மேலவையின் தயவில் தான் மந்திரி சபையில் இருக்க முடியும் என்ற எண்ணம் ஏற்படாத நேரத்தில், மேலவை பற்றி நான் அறிந்து கொண்டிருந்த அரிய கருத்துக்கள் இந்த மேலவையில் வீற்றிருக்க நேரிட்ட இந்த ஓராண்டுக் காலத்தில் இன்னும் அதிகமான முறையில் உறுதிப்பட்டு இருக்கின்றன." என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.



1983 ஏப்ரல் 26] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

அதே போல அவையில் பல்வேறுபட்ட எண்ணம் உடையவர்கள் இருந்தாலும் உறுப்பினர்களிடம் இருக்கின்ற தோழமை உறவைப் பற்றி அவர்கள் சொன்ன வாசகத்தையும் நினைவுபடுத்திக்கொள்வது பொருத்தம் என்று கருதுகிறேன்.

"பேசுகின்ற பேச்சில் ஆர்வம் கொந்தளிப்பதை நான் வரவேற்கிறேன். ஆர்வம் இருக்கலாம், ஆர்வம் இருக்கின்ற அளவிற்கு பிடிப்பும் இருக்க வேண்டும். இந்த ஆர்வத்தை நான் வரவேற்கிற நேரத்தில் ஒன்றே ஒன்றைக் கவனிக்க வேண்டும். இன்னுமொரு கட்சியில் இருப்பவர்களும் இதே ஆர்வத்தோடு இருப்பார்கள். இன்னுமொரு கட்சியில் உள்ளவர்களும் இதே பிடிப்போடு இருப்பார்கள். இன்னுமொரு கட்சியில் இருப்பவர்களும் எந்த அளவிற்குத் தியாகம் செய்திருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட உணர்வை இந்தியா முழுவதும் அல்ல, தமிழகத்திலாவது நிறைவேற்றி ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்குத் துணையாக இருப்பேன்" என்று தெரிவித்திருக்கிறார். இந்த நிலையில் அனைத்து உறுப்பினர்களும் கட்சி மாச்சரியம் இல்லாமல் மனம் திறந்து பாராட்டுகிற நிலை உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய காரியமாகும்.

மாண்புமிகு அமைச்சர் திரு. இராசா முகமது அவர்கள் மாணவப் பருவத்திலேயிருந்து 18 ஆண்டுக் காலமாக எனக்கு நெருங்கிய நண்பர். அவர் பாடம் படித்த மாணவராக இருந்தபோது மாணவர்களுக்கே பாடமாக விளங்கினார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே அவர் ஈடுபட்டதும், பாளையங்கோட்டை சிறை சென்றதும் ஒரு வீரவரலாறு ஆகும்.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. ஆர்.எம்.வீ. அவர்களைப் பற்றி நான் சொல்வதற்குக் கொஞ்சம் கூச்சப்படுகிறேன். ஏனென்றால் பேச்சு அதிகப் பிரசங்கித்தனமாகப் போகக்கூடாது என்பதற்காக வீரம் பேரிலே மட்டுமல்ல அவர்கள் வீரமும் விவேகமும் மிக்கவராக விளங்குகின்றார்கள்.

'நிலையற்று அடங்கியான் தோற்றம் அதைக்காட்டிலும் உயர் மலையினும் மாணப்பெரிது' என்ற அளவிற்கு அவர்களுடைய அடக்கம் அவர்களுக்கு உயர்வைத் தந்திருக்கிறது என்பதையும் எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு எல்லாம் அவர்களுடைய செயல்திறன் ஒரு வழிகாட்டியாக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. இராகவானந்தம் அவர்கள் 1961 ஆம் ஆண்டு வரை ரெயில்வே இலாகாவிலே பணியாற்றினார்கள். அப்போது பேரறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்த நேரத்திலேகூட அரசியலில் ஈடுபட்டு, திராவிடர் இயக்கத்திலே ஈடுபட்டு, மேடையிலே முழங்கினார்கள். வேலையை அந்த நேரத்திலே இழப்பது என்பது ஒரு சுமையாக இருந்த காலத்திலேகூட, அறிஞர் அண்ணா அவர்களிடம் பேசி வேலையிலேயிருந்து விடுபட்டு கலந்துகொண்டார்கள். அதே அளவுக்கு தொழிலாளர்கள் இயக்கத்திலும் அவர்கள் ஈடுபட்டு, இன்று தொழிலாளர்கள் நலனுக்காக அவர்களுக்கு உறுதுணையாக இருந்துகொண்டிருக்கின்றார்கள்.

அடுத்து, எதிர்க் கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கும் திரு. வீராசாமி அவர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, நான் அவர்களுடைய பேச்சினுடைய வாசகங்களைக் கவனிப்பது உண்டு. அவர்கள் எவ்வளவு முறைகள் 'ஆனால், இருக்குமானால், சொல்லுகின்றவர்கள்' என்றெல்லாம் சாக்கிரதையாக வார்த்தைகளைப் பயன்படுத்தி அவர்கள் சொல்லவேண்டியதை எல்லாம் சொல்லி முடிக்கின்ற தன்மையை நான் ரசிப்பதுண்டு. சில நேரங்களிலே உறுப்பினர்கள் வேகமாகப் பேசினால், அவர்களுக்கு அமைதி வர கொஞ்ச நேரம் ஆகும். ஆனால் இவர்களுக்கு பேசி முடித்த உடனேயே முகம் மலர்ந்து இருக்கும். அதைப் பார்க்கும்போது அவருடைய பேச்சிலே நமக்கு ஏற்படுகின்ற கோபம் எல்லாம் தணிந்துவிடும். அந்தத் தன்மையை அவருடைய பேச்சாற்றலிலே என்னாலே காண முடிகிறது. அதே போல திரு. நீலநாராயணன் அவர்கள்.

'ஒருபடை தொடுமுறை தொடுமனம்பூசி உவப்பச் செலல் பல நலம் நல்கும்' என்பது போல நாஞ்சில் நாட்டினுடைய நல்ல கலையான பேச்சும் சொல்லாற்றலும் அவர்களிடம் உண்டு. அவருடைய வேகங்களைப்பற்றிச் சொல்கின்றபோது, அவர் மாவட்டச் செயலாளராக இருந்தபோது, நான் ஒரு மாணவத் தோழனாக இருந்து, நான் அவர்களிடம் சில நேரத்திலே அறிவுரை பெற்றபோது அவர் சில போராட்ட முறைகளைச் சொன்னபோது, நான் பயந்தே போனேன். அந்த அளவுக்கு அவர்கள் வேகம் இருந்தது. அந்த வேகம் இந்த அவைக்கு வந்திருக்கும்போது குறைந்து, அடக்கமாக இருக்கிறது என்று சொல்கின்றபோது, இன்னொன்றை நாம் நினைத்துக்கொள்ள வேண்டும். இந்த அவை முதியவர்கள் அவை என்று வழங்கப்பட்டு வந்தாலும், இங்கே 50 வயதிற்கு உட்பட்ட எங்களைப் போன்றவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் இங்கே அடக்கத்தோடு இருப்பதற்கு பெரியவர் தலைவர் அவர்கள் பாராட்டு சொல்ல வேண்டும். அதனாலே இளமை என்பதை ஒரு 50 வயதிற்கு



உட்பட்டு இருப்பதென்றும், தாங்கள் எல்லாம் நடுத்தர வயதினர் என்றும் கணக்கு எடுத்துக் கொண்டால், இன்றைக்கு முதியவர்கள் நாட்டில் இல்லை என்றே சொல்லலாம். அதனாலே தலைவர் அவர்களைப் போன்ற, இடைநிலை வயதுடைய தலைவர்கள் எல்லாம், எங்களை வழிநடத்திக் கொண்டு போகின்றவர்கள் எல்லாம் இந்த அவையிலே இருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் இருக்கின்ற அவையிலே நாங்களும் இருக்கின்றோம.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இளைஞர்களும் இந்தக் கிழத்திற்கு வழிகாட்டி நடத்த வேண்டும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களைப்பற்றி நான் சொல்வதைக் காட்டிலும், அவருடன் பல போராட்டங்களிலே தோழமையுடனும், அதே உணர்வுடனும் செயல்பட்டு வரும் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசுகின்றபோது உருக்கமாகச் சொன்னார்கள். அந்த உருக்கம்தான் தோழமை உணர்வு. அதைத்தான் நான் எண்ணி எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் 'மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள்' என்று பேசுகின்றபோது, வேடிக்கையாகச் சொன்னார்கள். 'கேட்கப்பட்டது போதும், இதை கேட்டதற்கே அவர்கள் கஷ்டப்படுகிறார்கள், இன்னும் அதிகமாக கேட்பது என்' என்று சொன்னார்கள். அதிலே அவருக்குள்ள அடக்கத்தை அவருடைய பேச்சிலே பார்த்தபோது, நான் மனமகிழ்ந்தேன்.

அடுத்து, திரு. ஓ. எஸ். துரைசாமி அவர்கள்பற்றிச் சொல்கிறேன். அவர்கள் வேடுவர்கள் சமுதாயத்தினுடைய தலைவராக விளங்குகின்றார்கள். லட்சம் பேர்கள் அந்த சமுதாயத்திலே இருக்கிறார்கள் என்பதும், பெரியார் மாவட்டம், சேலம் மாவட்டம், திருச்சி மாவட்டம் போன்ற இடங்களிலே கூலி வேலை செய்து வருகின்றார்கள் என்பதும் நமக்குத் தெரியும். அவர்கள் வேட்டை ஆடுகின்றவர்கள். அந்தப் பழக்கவழக்கங்கள் உடையவர்கள். இன்னும் சொல்லப்போனால், கண்ணப்பர் பரம்பரை என்று சொல்கின்ற அந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். பாசத்திற்குக் கண்ணப்பரைவிட வேறு உதாரணம் இருக்க முடியாது என்று மாண்புமிகு தலைவர் அவர்கள்கூட பல நேரங்களிலே சொல்லியிருக்கின்றார்கள். அந்த அளவுக்குப் பாசம் உடையவர்கள் அவர்கள். இந்த அவையிலே அவர்கள் நல்ல முறையில் பணியாற்றினார்கள். இப்படிப்பட்ட பெரியவர்கள் எல்லாம் இருக்கின்ற இந்த அவையிலே நாமும் இருக்கிறோம் என்பதையும் அவர்கள் இந்த அவைக்குத் திரும்ப வந்து அதே முழக்கங்களை, அதே வழக்கங்களை, அதே கருத்துக்களை வைத்து எங்களுக்கு எல்லாம் நல்ல வழிகாட்டிகளாக இருப்பார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அது போலவே, மாண்புமிகு உறுப்பினர்

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1983 ஏப்ரல் 26

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னதுபோல, இந்த அவைக்குத் தொடர்ந்து உயிர் இருக்கின்ற காரணத்தினாலே, கிழவை இல்லை என்றால்கூட, இந்த அவை கூடுகின்ற நிலை நிச்சயமாக வேண்டும். அந்த அவையில்லாத நேரத்திலே நியமிக்கப்படுகின்ற அதிகாரிகளே அமைச்சர் அவையினுடைய அந்தஸ்த்திலே இருக்கின்றார்கள். அதனாலே, அவர்களை வைத்து திட்டங்களை இங்கே விவாதிக்கின்ற ஒரு காலம் வருகின்ற நிலை இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஒரு காலத்திலே இந்த அவையிலே இருக்கின்ற முதியவர்கள் எழுந்திருக்க ஒரு அரை மணி நேரம் ஆகும். நடந்துபோய் காரிலே ஏறுவதற்கு இன்னொரு அரை மணி நேரம் ஆகும். அப்படியெல்லாம் ஓய்வாக நடந்து கொண்டிருக்கின்ற அவை. இப்போது எங்களைப் போன்றவர்கள் எல்லாம் வந்து தங்களுடைய அறிவுரையின் வழியிலே நடத்திச் செல்கிறோம். ஆகவே தலைவர் அவர்கள பாராட்டுகின்ற நேரத்தில் எங்களையும பாராட்டுங்கள் என்று வேண்டி மாண்புமிகு அமைச்சர்களையும் மற்ற உறுப்பினர்களையும் பாராட்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, may I express my happiness at this opportunity that has been afforded to us to bid a temporary farewell to seven Members of this House who will be retiring shortly? Mahatma Gandhi was very fond of a song : "Ragupathi Raghava Rajaram" ; and, strangely enough, I have used this sentence for the three Members of the Treasury Bench to whom we are bidding farewell, namely, my friend the Hon. Thiru Raghavanandam, the Hon. Thiru Rama. Veerappan and the Hon Thiru K. Raja Mohamed. While these gentlemen will undoubtedly continue to play their part in the affairs of this Council and perhaps with increased responsibilities, may I express my very great appreciation of the way in which our young Leader of the House has conducted the affairs of this August assembly? Thiru Raja Mohamed, in spite of his comparative youth, has been the Leader of this House and except on very stray occasions when he might have lost his temper under grave provocations, he has conducted himself with much remarkable dignity and given us such encouragement that I cannot but place my deep appreciation of the manner in which he has treated the Members of this House.



1983 ஏப்ரல் 26] [Thiru A. R. Damodaran]

Thiru Rama. Veerappan is one of the most well-informed of Ministers whose views we have heard with pleasure because he speaks with such authority on his subject. May I express the hope that he will also continue to be, as he is certain to be, an August member of this House so that we may have the pleasure of receiving his guidance on many important matters connected with the affairs of the State?

To my good friend, the Hon. Thiru Raghavanandam, what words can I use! Many years ago, he had been our colleague on this side of the Bench. Now, on the other side also, he has been sometimes the solitary Member of the Treasury Bench who has always attended the sittings of this House. When others have become a little tired after the deliberations of the Assembly, we would always find the Hon. Thiru Raghavanandam sitting patiently, in spite of the fact that at 1-30 p.m., the pangs of hunger would drive him, indesperation, to look at the clock. He has always been so active in the affairs of this House that it has been a pleasure for us to watch him in action on many occasions, when the Debates of this House have taken place.

Thiru Duraisami has represented so forcefully—as my hon. Friend Dr. Janarthanam stated—the cause of the backward communities and the manner in which Government should extend help that it has been a great pleasure for us to be acquainted with him.

As for the hon. Members Thiru Neela Narayanan, Thiru Arcot Veerasami and Thiru Manickam, I hope they will be back with us. Especially, Thiru Manickam, who is a thinker and theoretician of the Communist Party, has, in the Debates that have taken place in this House, shown us how, even though he is a Member of a very radical Party, he could contribute in so brilliant a manner to the Debates that have taken place. On many occasions, he has kindled new ideas. We are particularly grateful to him for having been a Member of this House in company with his equally distinguished Friend, Thiru Nallasivan, who, I reckon, will continue until the next Budget Session. Both of them represent the viewpoints of very

[Thiru A. R. Damodaran] [1983 ஏப்ரல் 26

important Parties and they have put it in such language that they have rarely caused offence to the other Members of the House.

Thiru Arcot Veerasami's style is original. Nobody can ever hope to achieve his eminence in the field of Debates. He has

(பிற்பகல் 12-10)

a deep study of facts and figures. His one-line statement in the beginning saying that he will support the Bill and his half-hour speech later on trying to destroy every feature of that Bill is a peculiar art which he alone possesses in an abundant measure. His contributions have been significant. Even though in the initial stages when he became a Member of this House, he was bringing a considerable amount of heat, we find that after the lapse of six years, he has also fitted into the groove of this House of Elders, as my hon. Friend Dr. Janarthanam mentioned, and has been a source of inspiration to the Opposition Benches. This House has become seriously depleted in strength. We are only 42 Members out of 63 Members and we hope that the remaining 21 Members representing the rural and backward areas of our State will soon be represented on this Council. But one worry that faces all of us is that this retirement of a bunch of elders was not contemplated in the Constitution. In addition to the seven Members who are retiring shortly, three Members retire in December and 18 of us will be retiring also in April 1984, which means that 28 Members of this House would be retiring and 21 new Members will retire once in six years. Hence, almost 49 Members of the House would have to retire at the same time. This is a problem, that I believe, is attracting the attention of the Election Commission. I hope that some solution would be offered, because for this House to continue in existence, only one-third of the Members should retire and not 49 Members at one and the same time.

I would like to congratulate the Members retiring, with the hope that it is only a temporary farewell and we hope to see many of them back in this House and I hope that the new House which we will have will continue to have the benefit of their advice and leadership.



1983 ஏப்ரல் 26]

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, மேலவையில் ஏழு உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைகிற நிலையிலே, அவர்கள் செய்த சேவையைப் பாராட்டுகின்ற ஒரு நிகழ்ச்சியை ஏற்படுத்தி, அதிலே பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலவை உறுப்பினர்கள் என்ற முறையிலே மூன்று அமைச்சர்களுக்குப் பதவிக் காலம் முடிவடைகிறது. அவர்கள் மீண்டும் இந்த அவைக்கு வருவார்கள் என்று முழுமையாக நம்புகிறேன். இதிலே மிகவும் இளைஞராக உள்ளவர் மாண்புமிகு அமைச்சர் திரு. கா. இராசா முகமது அவர்கள் ஆவார்கள். அவர்கள் அவை முன்னவராகவும் இருக்கிறார்கள். முதலிலே அவருடைய அறையிலே அவரைச் சந்தித்தபோது, அவருடைய வயதைப் பார்த்துக் கொஞ்சம் ஆச்சரியப்பட்டேன். வயது அதிகமானவராக இருக்கக்கூடும் என்று எதிர்பார்த்தேன். அவர் எம். பி. பதவிக்குப் போட்டியிட்ட பிறகு பார்த்த நேரம் அது. அவர் அமைச்சராக வந்த பிறகு முடிந்த அளவுக்குத் தெளிவாகவும் நல்ல அடிப்படையிலும், வேகப்படாமலும், பணியாற்றி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னது போன்று சில நேரங்களில் வயது காரணமாகத் தவறிப் போய் இரண்டொரு நிகழ்ச்சிகள் இருந்தாலும், பொதுவாகப் பல நேரங்களில் தெளிவாகப் பேசியது இந்த அவைக்குப் பெருமை சேர்ப்பதாகும். அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன். அவர்கள் மீண்டும் இந்த அவைக்கு வர வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள். அவர்களைப் பொறுத்த அளவில் ஆரம்ப காலத்தில் அதிகமாக எனக்குத் தெரியாது. அவர்கள் கட்சிக்கு வந்த பிறகு அவருடைய கருத்துத் தெளிவுகளைப் பார்த்து, ஆச்சரியப்பட்டேன். அவர் சினிமாத் துறையிலே இருந்து வந்து மிகத் தெளிவாகக் கருத்துக்களை வைத்தபோது, முதலிலே அவருடைய பேச்சை பத்திரிகையிலே பார்த்து, ஆச்சரியப்பட்டேன். அவர் அவைக்கு வந்து, பதட்டப்படாமல், உணர்ச்சி வயப்படாமல், தெளிவுபட மிகச் சிறந்த அடிப்படையிலே ஒவ்வொரு பிரச்சினையையும் அணுகும் அவருடைய தன்மை, ஒரு அமைச்சருக்குரிய இலக்கணமாகவும், மேலவைக்கு உரிய தன்மையாகவும் இருந்திருக்கிறது. அவரை நெஞ்சாரப் பாராட்டுகிறேன். மீண்டும் அவர் இந்த அவைக்கு வந்து, தமிழ் நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

[திரு. செ. முத்துசாமி] [1983 ஏப்ரல் 26

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் எப்போதுமே இந்த அவைக்கு வந்து, தவறாமல் உட்கார்ந்திருப்பார்கள். அவர் உண்டு, அவர் பணி உண்டு, ஃபைல் உண்டு. இடையறாத 'ப்ரசென்ஸ்' இங்குண்டு. அதுமட்டுமல்லாமல், இந்த வயதிலே அவர் உடலை எப்படி இப்படி வைத்துக்கொண்டிருக்கிறார் என்று நான் பல நேரங்களில் நினைப்பது உண்டு. அமைச்சராக வந்த பிறகும்கூட, சிலம்பம் எல்லாம் பயிற்சி செய்து உடல் வளத்தைப் பாதுகாத்து வருகிறார். அதனுடைய இரகசியத்தை எல்லோருக்கும் சொன்னார்களானால், அதை எல்லோரும் அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். அந்த அளவுக்கு உடல் வளமுள்ளவர்கள். ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசும் ஆற்றலுடையவர்கள். எத்தனையோ டிகிரிகள், பட்டங்கள் வாங்கியவர்கள் எல்லாம் ஆங்கிலம் பேசும்போது தடுமாறக்கூடிய காலகட்டத்தில், சரளமாக ஆங்கிலம் பேசும் ஆற்றல் மிக்கவர்கள். இன்றைக்கு அவர்கள் தொழிலாளர் நல அமைச்சராக இருக்கிறார்கள். அவர்களையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒ. எஸ். துரைசாமி அவர்களைப் பற்றிச் சொல்ல எனக்கு அதிகமாக முடியவில்லை. அவர் வாழும் பகுதிக்குச் செல்லும்போது, அந்தப் பகுதியில் இருக்கும் மக்கள் மத்தியிலே அவர் ஒரு சிற்றரசர் போலக் கருதப்படுகிறார் என்பதை நான் அறிந்தேன். அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அவரிடம் காட்டும் அன்பை சமீபத்தில் என்னால் அறிய முடிந்தது. ஒரே ஒரு முறைதான் அவர்கள் பேசினார்கள் நான் அறிந்தவரையில். இரண்டொரு வார்த்தைகள் பேசினாலும், அதிகமாகக் காரியங்களைச் செய்யும் செயல்பாடுடையவர்கள் அவர்கள். அவர்கள் பேசுவதற்குக் கூச்சப்படும் நிலைமையைப் பார்க்கிறேன். அவர்களும் இந்த அவைக்கு மீண்டும் வர வேண்டுமென்று என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் உணர்ச்சி வயப்படாமல் எப்போதும் எந்தப் பிரச்சினையையும் அணுகுவதில் திறமை பெற்றவர்கள். திரு. எம். கே. அவர்களை ஆரம்ப காலம் முதல் நான் அறிவேன். ஆனால் திரு. மாணிக்கம் அவர்களை பொதுச் செயலாளராக, மேலவைக்கு உறுப்பினராக வந்த பிறகுதான் அறிவேன். அவர் பிரச்சினையை எடுத்து வைக்கும்போது, என்னைப் போன்றவர்கள் வேகமாகச் சொல்லுவதற்கு மாறாக, பழுத்த அனுபவத்தின் காரணமாக மிகச் சிறப்பாகச் சொல்லுமளவிற்கு அவரின் நற்பண்புகளைப் பாராட்டுகிறேன்.



1983 ஏப்ரல் 26] [திரு. செ. முத்துசாமி]

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்களோடு கமிட்டி கூட்டங்களில் பழகக்கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. எனக்கு சேலம் என்றால் திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் என்று நினைவு இருக்குமானால், சென்னை என்றால் மாவட்டச் செயலாளர் திரு. நீலநாராயணன் நினைவு வரும். சிறு வயது நினைவுகளெல்லாம் அப்படியே மனதிலே இருக்கின்றன. சென்னை என்றாலே அவர் நினைவு தான் வரும். அந்த அளவிற்கு ஒரு கட்சியிலே நல்ல தொண்டராக, அதிலே உறுதி குன்றாமல் இருக்கும் அவருடைய செயலைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் ஓய்வு பெற இருக்கிறார்கள். நான் அவரைப்பற்றி கருத்து வெளியிடுவது நியாயமாக இருக்கும். பேரவையிலே இருக்கும்போது, அங்கே அவர் பேசுவது எனக்குப் பிடிக்காது. உண்மையைச் சொல்கிறேன். அவர் மேலவைக்கு வந்த பிறகு, அவருடைய தெளிவான கருத்துக்கள், பிரச்சினைகளில் அணுகுமுறை எல்லாமே நேர் தலைகீழாகிவிட்டது கண்டு நான் ஆச்சரியப்பட்டிருக்கிறேன். அதுபற்றி பல நண்பர்களிடத்திலே மனம் திறந்து பேசியிருக்கிறேன். பேரவையில் அவ்வளவு கடுமையாகப் பேசி விட்டு, மேலவைக்கு வந்த பிறகு, மேலவைக்குத் தக்காற்போல் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கும் நிலைமையைச் சொல்லியிருக்கிறேன். இந்த அவையிலே எத்தனையோ பெரியவர்கள், விற்பன்னர்கள், பெரிய-பெரிய தலைவர்கள் அமர்ந்திருந்து, பணியாற்றிச் சென்றிருக்கிறார்கள். தலைவர் பொறுப்பிலே டாக்டர் பி. வி. செரியன் போன்ற பெரிய தலைவர்கள் எல்லாம் இருந்து நல்ல பாரம்பரியத்தை உடையதாக மேலவை இருந்திருக்கிறது. அப்படிப்பட்ட பாரம்பரியம் மிக்க இடத்திலே சாதாரணமாக இருக்கும் நான் முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தபோது, எனக்கு வயது 33. அப்போது நான்தான் மிக இளைஞனாக இருந்தேன். ஒரு முறை போராட்டம் நடந்தபோது, மக்கள் மன்றத் தலைவர் திரு. குசேலர் அவர்கள், 'நீங்கள் எல்லாம் அசெம்பிளிக்குப் போக வேண்டியவர்கள், மேலவைக்கு ஏன் வந்தீர்கள்?' என்று கேட்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவ்வளவு பவுருஷமாகப் பேசவில்லையே, உங்களைப் பார்த்துச் சொன்னாரா?

**திரு. செ. முத்துசாமி:** ஆதலால், இந்த அவை பெரிய அவை. இப்போது ரிடையர் ஆகும் அத்தனை பேர்களும் மீண்டும் வந்து, சேவை செய்ய வேண்டுமென்று மகிழ்ச்சியோடு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. செ. முத்துசாமி] [1983 ஏப்ரல் 26

மேலவை இருக்க வேண்டுமா, கூடாதா என்பது பிரச்சினையல்ல. இருக்கும்வரை நல்ல சேவை புரிவோம், மக்களுக்குத் தேவை என்று மக்களாட்சி முடிவு எடுக்கும்போது, அது தேவை; தேவையில்லை என்று மக்களாட்சி முடிவு எடுக்கும்போது, தேவையில்லை. மேலவை என்பது நல்ல கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. ஆசிரியர்களைப் பொறுத்த அளவில், மிகச் சிறப்பாக தங்களுடைய

(பிற்பகல் 12-30)

பிரச்சினைகளைக் கொண்டு வந்து வைப்பதற்கு உரிய ஒரு நல்ல அமைப்பாக மேலவையை அரசியல் சட்டத்திலே உருவாக்கியிருப்பதை நான் பாராட்டு கிறேன். இது பெருமைக்குரிய, சிறப்புக்குரிய ஒரு சிறந்த அம்சமாகும். அப்படிப்பட்ட பெருமைக்குரிய அம்சங்கள் இருந்த காரணத்தினால் தான், பெரிய பெரியவர்கள் எல்லாம் வந்து அமர்ந்திருக்கக்கூடிய அவையிலே ஒரு சாதாரண முத்துசாமி, கொல்லிமலை அடிவாரத்திலே பணியாற்றிக் கொண்டிருந்த ஒரு சாதாரண ஆரம்பப் பள்ளி ஆசிரியர் முத்துசாமி, இந்த அவைக்கு வரக்கூடிய ஒரு சந்தர்ப்பம் வந்தது. என்னுடைய பாம்பரையோ அல்லது சுற்று சூழ்நிலைகளோ நான் வருவதற்குரிய சக்தியுடையதல்ல. சாதாரணமாக, தேவையின் அடிப்படையிலே ஆசிரியர்களாலே அனுப்பி வைக்கப்படுகிற ஒரு பெருமைக்குரிய நிலைமையாகும் இது என்பதைச் சொல்லி, இந்தப் பெருமைக்குரிய அவையிலே ஒரு தமிழ் ஆய்ந்த தலைவர் அவர்கள் தலைவராகவும் வீற்றிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய அம்சமாகும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்து, ஓய்வுபெற இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களை வாழ்த்தி விடைபெறுகிறேன்.

**புலவர் புலமைப்பித்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பேசுகிற வாய்ப்புகளை எடுத்துக் கொள்ளாதவர்களைக் கூட பேச வைக்கிற அளவுக்கு

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்று சொன்னதைப் போல, எண்ணங்களை நெஞ்சிலே தாங்கிக்கொண்டு, ஒரு வகையிலே இது பாராட்டி வழி அனுப்புகின்ற விழாவாக இருந்தாலும், மற்றொரு வகையிலே வாழ்த்தி வரவேற்கிற விழாவாகவும் இதனைக் கருதி, சில மாதங்கள் பிந்தி ஓய்வு எடுத்துக்கொள்ளப்போகிற 'நான், 4 மாதங்கள் முந்தி ஓய்வெடுக்கும் உறுப்பினர்களை தற்காலிகமாகப் பாராட்ட முன் நிற்கிறேன்.



1983 ஏப்ரல் 26] (புலவர் புலமைப்பித்தன்)

நான் இந்த அவைக்கு உள்ளே வந்த பின்னாலே 'நான் ஒரு மன்ற உறுப்பினர்' என்று என்னை நான் கருதிக் கொண்டதைக் காட்டிலும், பிறகு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னாலே துணைத் தலைவர் என்று நான் என்னைக் கருதிக் கொண்டதைக் காட்டிலும், என்னை நான் இந்த மேலவை என்கிற பல்கலைக் கழகத்தில் ஒரு மாணவனாகவே கருதிக் கொண்டு வந்திருக்கிறேனே தவிர, வேறு எண்ணங்கள் எனக்கு இருந்ததில்லை. நான் ஒவ்வொரு உறுப்பினரைப் பார்க்கிறபோதும், ஒவ்வொரு துறையிலே எனக்கு அறிவைப் புகட்டுகிற ஆசான்களாகவே அவர்களைப் பார்த்து வந்திருக்கிறேனே தவிர, வேறு விதமாக நான் எண்ணிப்பார்க்கிற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டதில்லை.

முதலிலே, நம்முடைய முன்னவராக இருக்கின்ற என்னுடைய அன்புக்குரிய சகோதரர், நல்ல இளைஞர், கொள்கை உரம் வாய்ந்தவர். அவர் இந்த அவையினுடைய முன்னவராக இருந்து செயல்பட்ட விதத்தைப் பார்க்கிறபோது, அவையிலே பிரச்சினைகள் எழுகிறபோது, எப்படி அனுபவமும், முதிர்ச்சியும் வாய்ந்த ஒருவர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமோ அந்த அளவுக்கு அவர் எழுந்து நின்று பேசுகிறதைப் பார்க்கிறபோது, நான் அவருடைய அறிவை வியந்து பாராட்டியிருக்கிறேன். அவருக்கு இருக்கிற அறிவையும், அவருக்கு உள்ள கொள்கையிலே இருக்கிற உறுதிப்பாட்டையும் நான் தனியாக இருந்து பேசுகிறபோது, தூரத்திலே இருந்து பார்க்கிறபோது, நன்றாக ஏற்கெனவே அறிந்திருக்கிறேன். அவருடைய அறிவும், ஆற்றலும், அவர் கொண்டிருக்கிற கொள்கையிலே இருக்கிற ஆர்வமும் இந்த நாட்டிற்குத் தொடர்ந்து பயன்பட வேண்டும் என்கிற காரணத்தாலே, நான் அவரைத் தற்காலிகமாக வழி அனுப்புவதாகக் கருதி வாழ்த்தினாலும், மீண்டும் இந்த அவைக்கு வருக என்று சொல்லி, ஒரு தமிழ் நெஞ்சம் வரவேற்கிறது என்கிற அடிப்படையில் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய அன்புக்குரிய அண்ணன் அறநிலையத் துறை அமைச்சராக இருக்கின்ற அவர்களை நான் திரைப்படத் துறையிலே ஈடுபட்ட காலத்திலேயிருந்து நன்றாக அறிந்தவன். அவர்களோடு அந்தக் காலத்திலேயிருந்தே நெருங்கிப் பழகுகிற வாய்ப்பினைப் பெற்றவன். பெரும்பாலும் நான் மெய்யாகவே அவர்களை என்னுடைய அன்புக்குரிய அண்ணனாகவே ஏற்றுக் கொண்டு பழக்கப்பட்டுப் போய்விட்டவன். அந்த அடிப்படையில் எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் அவரைப் பாராட்டிச் சொன்னார்கள். அவர் தான் ஏற்றுக்கொண்டிருக்கிற துறையைப்பற்றி எவ்வளவு தெளிவான கருத்தினைக்

கொண்டிருக்கிறார் என்பதை நானேகூட மனதுக்குள்ளே வியந்து வியந்து பாராட்டிக் கொண்டதுண்டு. நான் கல்லூரியிலே படித்துக் கொண்டிருந்த போது, ஒரு பேராசிரியர் தான் இரவு முழுப்பாடத்தையும் படித்து அதன் பிறகு தான் வகுப்புக்குச் சென்று பாடங்களைச் சொல்கிற வாய்ப்பினை உண்டாக்கிக் கொண்டிருந்தார். அவரைப்போல நம்முடைய அமைச்சர் அவர்கள் தன்னுடைய துறையைப்பற்றித் தெளிவான கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு, தெளிவான சிந்தனையோடு கூடிய ஒருவராக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவ்வளவு தெளிவான சிந்தனையோடு வருகிறவர்களாலேதான் தெளிவான கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியும் என்பதை வலியுறுத்திக் காட்டுகிற வகையில் அவருடைய வாதங்கள், அவருடைய உரைகள், பதில் உரைகள் அமைந்திருப்பதைப் பார்க்கிறபோது, நான் மெய் சிலிர்த்துப் போன நாட்கள் உண்டு. அந்த அடிப்படையிலே அவரைச் சொல்லி, அவரும் இந்த மேலவையிலே திரும்பத் தொடர்ந்து பணியாற்றுவார் என்கிற நம்பிக்கையோடு இதனைச் சொல்லி, அவர் வர வேண்டும் என்கிற அடிப்படையில், நல்வாழ்த்தை ஒரு தம்பி என்கிற அடிப்படையில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல தொழிலாளர் நல அமைச்சராக இருக்கின்ற, 67 வயதானாலும் இதயத்தினாலே 27 வயதாக இருந்துகொண்டிருக்கிற அன்புக்குரிய அண்ணன் இராகவானந்தம் அவர்கள் ஒரு நல்ல கட்டான உடலை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் என்ன சாப்பிடுகிறார் என்று திரு. முத்துசாமி கேட்டார். அருள்கூர்ந்து யாருக்கும் அதைப்பற்றிச் சொல்ல வேண்டாம். காரணம் அதைச் சொல்லிவிடுவார்களேயானால், அவர்களுக்குள்ள தனித்தன்மைகள் போய்விடும். கூடுமானவரை அதைச் சொல்லாமல் இருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். அவருக்குள்ள அந்த இரகசியத்தை நான் மட்டுமே அறிவேன். (சிரிப்பு) அவருடைய உள்ளம் என்பது மிக காதல் நினைவுகளோடு இளமையாகவே வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரு உள்ளம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவரவர்கள் இஷ்டப்படி இருப்பார்கள். (சிரிப்பு)

**புலவர் புலமைப்பித்தன் :** நான் சொல்கிற கருத்தை ஒரு நல்ல தம்பி சொல்கிற கருத்தாகக் கருதி ஏற்றுக்கொள்ளலாம். ஆகவே அவர் இன்னமும் தொடர்ந்து தொழிலாளர் நலத் துறைக்குத் தொண்டாற்ற வேண்டும். அவருக்கு அதற்குரிய பொறுப்பும் கடமையும் இருக்கிற காரணத்தாலே, அவரும் திரும்ப இந்த அவைக்கு வர வேண்டும். அந்த வகையில் அவருக்கும் என்னுடைய வாழ்த்துதலையும், வரவேற்பையும் தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்து, அருமை நண்பர் திரு. ஓ. எஸ். துரைசாமி அவர்கள். கொங்கு நாட்டுக்குரிய விருந்தோம்பல் தன்மையில் அவர் எவ்வளவு சிறப்பானவர் என்பதை அவரோடு பழகியவர்கள்தாம் அறிய முடியும். நல்ல அடக்கம், ஆற்றல் மிக்க தன்மை, மற்றவர்களுக்கு உதவி செய்வதிலே, மற்றவர்களை மேலாண்மை செய்வதிலே மிகச் சிறப்பான ஈடுபாடு கொண்டவராக இருந்து கொண்டிருக்கிறார். அவரைப் பார்க்கின்றவர்கள் எல்லாம் பாராட்டுகிற அளவுக்கு நல்ல பண்பு உள்ளவராகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார். அது ஒன்று மட்டுமே அவருடைய சான்றாண்மைத் தன்மைக்கு எடுத்துக்காட்டாக நாம் பார்க்கிற அம்சமாகத் திகழ்கிறது. அப்படிப்பட்ட அண்ணன் திரு. ஓ. எஸ். துரைசாமி அவர்களும்—அவர் எந்த சமுதாயத்தைச் சார்ந்தவர் என்று நம்முடைய கொறடா அவர்கள் குறிப்பிட்டார்களோ, அந்த வேட்டுவர் சமுதாயத்திலேயிருந்து வந்தவராக நான் கருதவில்லை—என்னைப் போன்ற பாட்டுவர் சமுதாயத்தைச் சார்ந்தவராகவே அவரைக் கருதி அவரும் இங்கே திரும்ப வர வேண்டுமென்ற என்னுடைய வரவேற்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமை நண்பர் மாணிக்கம் அவர்கள் பொதுவுடைமை சித்தாந்தத்திலே ஊறித் தழைத்தவர். அந்தத் துறையிலே ஆழ்ந்த சிந்தனையுடைய நம்முடைய அன்புக்குரிய உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பாராட்டுகிற போது, என்னதான் அழுத்தமான இதயங்களைக் கொண்டவர்களாக இருந்தாலும் கூட, கல்லுக்குள்ளே ஈரம் இருக்கிறது என்பதைக் காட்டுகிற வகையிலே அவர் நெகிழ்ந்து போன நிகழ்ச்சியை நான் பார்த்தபோது, உள்ளபடியே நல்ல மாணிக்கமாக வாய்த்திருக்கிற அந்த மாணிக்கத்தின்மீது திரு. நல்லசிவன் அவர்கள் எத்தனை பேரன்பு கொண்டிருக்கிறார்கள் என்பதை நம்மால் காண முடிந்தது. இதை நான் எண்ணிப் பார்த்து வியந்து போனேன். திரு. மாணிக்கம் அவர்கள் ஒவ்வொரு முறையும் பேசுகிறபோதும், அவரை நல்ல இலக்கியவாதியாக நான் பார்த்துக் கொண்டிருக்கிறவன். ஒருமுறை அவர் பேசுகிறபோது, நான் அவையிலே தலைவருடைய இடத்திலே உட்கார்ந்து கொண்டிருந்தேன். அவர் அப்போது பேசிய ஒன்றை நான் குறித்து வைத்துக்கொண்டிருக்கிறேன். ஓராண்டுக்கு முன்னாலே அவர் பேசுகிறபோது, ஒரு கருத்தைச் சொன்னார். ஒவ்வொரு அரசும் தான் வாக்களிப்பதை உள்ளபடியே நிறைவேற்றியிருக்குமேயானால், இந்த இந்தியத் துணைக் கண்டம் இதற்குள் சொர்க்க பூமியாக மாறியிருக்கும் என்று சொன்னார். அவர் அப்படிச் சொல்லியிருக்கின்றார் என்றால், எவ்வளவு தெளிவாகச் சிந்திக்கிறார் என்பதை நான் எண்ணிப் பார்த்தேன்.

அதை நான் எழுதி பைக்குள்ளே, பாக்கெட்டிலே வைத்துக்கொண்டு இன்றைக்கும் டைரியிலே பத்திரமாக வைத்திருக்கிறேன். இதை நான் சொல்கிறபோது, உங்களை எல்லாம் எப்படி ஆசிரியர்களாக நான் மதித்துக் கொண்டிருக்கிறேன் என்பதற்கு இது ஒன்று மட்டுமே ஆதாரமாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்த வகையிலே அவரும் 4 மாதங்களுக்கு உள்ளாக இன்னும் 4 மாதங்கள் இருக்கிற காரணத்தினாலே திரும்பவும் இந்த அவைக்கு வந்து இந்த அவையிலே அவருடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அண்ணன் நீலநாராயணன் அவர்கள் என்னுடைய அன்புக்கு நீண்டகாலமாகப் பாத்திரமானவர்கள். எங்கு இருந்தாலும் வாழ்க என்று வாழ்த்திய அந்த இதயத்தை எல்லோரும் பங்கு போட்டு வைத்துக்கொண்டிருக்கிற தன்மையிலே அவர்கள் அங்கேயும் நாங்கள் இங்கேயும் அமர்ந்திருந்தாலும், இடங்கள் இதயங்களைப் பிரிக்க முடியாது என்பதற்கு எடுத்துக்காட்டாக அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் அன்புக்குரிய திரு. நீலநாராயணன் அவர்களை நான் பார்த்து அடிக்கடி பாராட்டிக்கொள்வது என்னவென்றால், எந்தப் பேச்சை அவர்கள் தொடங்குகிறபோதும், அவருக்குத் திருக்குறள் மீது இருக்கிற தீராத, தணியாத ஆர்வம் காரணமாக, பற்று காரணமாக ஒரு திருக்குறளையாவது மேற்கோள் காட்டிப் பேசுவதைத் தவிர்ப்பதே இல்லை என்கிற அளவுக்கு அவர்கள் அந்தத் துறையிலே ஈடுபாடு காட்டி வருவதை நான் மனதாரப் பாராட்டியிருக்கிறேன்.

(பிற்பகல் 12-30)

திரு. நீலநாராயணன் அவர்களுக்கு 60 ஆண்டுகள் முடிந்து மணிவிழா நடந்திருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவையின் அனுமதியோடு நிகழ்ச்சிகள் முடிகிறவரை அவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

**புலவர் புலமைப்பித்தன் :** அவரும் திரும்ப இந்த அவைக்கு வந்து பெருமை சேர்க்க வேண்டுமென்ற வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக என் அருமைச் சகோதரர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். நான் கூட அவர்களைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டிருந்தேன். தவறாக நினைப்பதற்கு அவர் காரணமாக இருந்திருந்தால், அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. நான் காரணமாக இருந்திருந்தால், அதற்காக மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர் சட்டமன்றப்



பேரவையில் பேசியதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இங்கு அவர் வந்த பிறகு, எவ்வளவு சூடாக இருப்பவர்கள் கூட இங்கே உள்ளே வருகிறபோது எவ்வளவு குளிர்ச்சியாக மாறிவிடுகிறார்கள் என்பதை உணர முடிந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னதைப் போல அவர்களுக்குச் செய்திகள் எங்கிருந்துதான் கிடைக்கிறதோ என்று வியக்கிற அளவுக்கு, ஏராளமான செய்திகளை ஆணித்தரமான வகையில் எடுத்துச் சொல்கிற அளவுக்கு அவர்கள் பேச்சுக்கள் இருந்ததைப் பார்க்கிறபோது, ஒரு மன்ற உறுப்பினராக இருப்பவருக்கு என்ன தகுதி வேண்டும், எதையெதைத் தேடி வர வேண்டும் என்று தேனீக்கள் சுற்றிப் பறந்து பறந்து தேனைச் சேகரித்து நமக்குத் தருவதைப் போல, அவர் ஆதாரங்களைத் தேடித் தேடி, புள்ளி விவரங்களைத் தேடி, நுணுக்கமாகப் பேசுகிற அந்தப் பாங்கினைப் பார்க்கின்றபோது, சட்டமன்றத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு, எப்படிப்பட்ட தகுதி வேண்டுமென்ற அளவுக்கு சான்றாகத் திகழ்கிறார் என்று நான் மனமாரப் பாராட்டுகிறேன். அவரைப்பற்றி நான் பலரிடம் சொன்னபோது அவர்கள் நம்பவில்லை. நீங்கள் எந்த வீராசாமியைச் சொல்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அறிமுகம் தொடங்கி, இப்போது குளிர்ச்சியாகப் பாராட்டுகிற அளவுக்கு இருக்கிறது என்பதை மகிழ்ச்சியாக நினைவுகூர்ந்து, அவர்களும் இந்த அவைக்கு நிச்சயமாக வர வேண்டுமென்று வரவேற்பு கூறி, இந்த வாய்ப்பை எனக்குத் தந்தமைக்காக மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஓய்வு பெறுபவர்களில், எதிர்க்கட்சிகளின் சார்பில் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் ஏற்புரை கூறுவார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 2—8—1983 அன்று ஓய்வு பெற இருக்கும் உறுப்பினர்களுக்கு நம்முடைய தலைவர்கள் இங்கே பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்திருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு தலைவர்கள் குறிப்பிட்டதைப் போல, இன்றையதினம் அவையின் முன்னவராக இருக்கக்கூடிய மாண்புமிகு திரு. இராசா முகமது அவர்கள் இளைஞராகவும் இருந்து, அதே நேரத்தில் பொறுப்புக்களை கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டோடும் ஆற்றி, எதிர்க் கட்சியில் இருக்கக்கூடிய எங்களை அரவணைத்துச் சென்ற பாங்கினை எண்ணிப் பார்க்கிற நேரத்தில், இப்படிப்பட்ட நேரத்தில் அவருக்கு நான் நன்றி சொல்வது மிகப் பொருத்தமாக இருக்கும்.

அதைப்போலவே, நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, உழைப்பால் உயர்ந்து இன்று அமைச்சராக இருக்கிற அவர்கள், ஓய்வு பெறுகிறார் என்று எண்ணவில்லை. இப்போது சம்பிரதாயப்படி ஓய்வு பெற்றாலும், சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய தொண்டை அவர் தொடர்ந்து செய்வார் என்றே நம்புகிறேன்.

அதைப் போலவேதான் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அண்ணன் இராகவானந்தம் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். இளமைக் காலந்தொட்டே உழைக்கும் வர்க்கத்திற்காகவே உரத்த குரல் கொடுத்து, அதன் மூலம் இன்றையதினம் அமைச்சராகி, அமைச்சரானதற்குப் பின்பும் உழைக்கும் வர்க்கத்திற்குப் பின்னாலே நின்று, அவர்களுக்கு உரிமைகளை வழங்கக்கூடிய நிலையில் இருக்கிற அவர் சம்பிரதாயப்படிதான் ஓய்வு பெறுகிறார் என்று கருதுகிறேன். எங்களுடைய இயக்கத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர், சென்னை மாவட்டச் செயலாளராக இருந்தவர் திரு. நீலநாராயணன் அவர்களைப்பற்றி மாண்புமிகு தலைவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அடக்கத்தின் இருப்பிடமாகவும், அமைதியின் இருப்பிடமாகவும் இருப்பவர்கள், தங்களுக்கே உரிய பாணியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை எடுத்துச் சொல்கிற நேரத்தில், நிதானமாக அழுத்தத்தோடு இங்கே எடுத்துச் சொல்லும் பாங்கினை நினைத்துப் பாராட்டினார்கள். அவர் சார்பிலும் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

உழைக்கும் வர்க்கத்தினுடைய ஒரு தனிப் பெருந் தலைவராக இருக்கும் திரு. ப. மாணிக்கம் அவர்கள் ஓய்வு பெறுகிறார் என்றாலும்கூட, உழைப்பவர் பக்கத்தில்தான் உலகம் இருக்கிறது என்ற காரணத்தால், அந்த இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந்து, இன்னும் பல பணிகளை ஆற்ற வேண்டியவராக இருப்பதால், அவர் சம்பிரதாயப்படி ஓய்வு பெற்றாலும், அரசியல் வாழ்வில் ஓய்வே இல்லாத உலகத்தில் இருக்கிற காரணத்தால். அவர் மீண்டும் இந்த அவைக்கு வந்து பணியாற்றுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர், திரு. துரைசாமி அவர்கள் ஆளும் கட்சியில் இருந்தாலும், அதிகமாக இந்த அவையில் பேசாவிட்டாலும், ஆனால் பேசுகிற கருத்துக்களை உன்னிப்பாகக் கவனித்து தன்னுடைய வாழ்க்கையில் சில இலட்சியங்களைப் பதிய வைத்துக்கொண்டு, அவர் ஏற்றிருக்கிற இலட்சியத்





திற்காக எந்தத் தியாகத்தையும் செய்பவராக இருக்கிறார் என்பதை எண்ணுகிற நேரத்தில், இப்படிப்பட்டவர்கள் எல்லாம் ஓய்வு பெறுகிறார்களே என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

இங்கே ஒன்றைத் திரும்பத் திரும்ப என்னைப் பற்றிச் சொன்னார்கள். சட்டசபையில் இருந்தபோது, எப்படி இருந்தேன் என்பதைப்பற்றியும், இந்த அவைக்கு வந்த பிறகு, எப்படி மாறியிருக்கிறேன் என்பதையும் எடுத்துச் சொன்னார்கள். இதற்கு அடிப்படையாக இங்கே அவைத் தலைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு சிலம்புச் செல்வர் அவர்களை முதல் காரணமாகச் சொல்லியாக வேண்டும். நான் இங்கே உறுப்பினராக வந்து உரையாற்ற முன்வந்த நேரத்தில், ஆதாரங்களை அவர்களிடத்தில் காட்டி, அனுமதி பெற முயற்சித்த நேரத்தில், அவர்கள் ஓர் ஆசிரியர் மாணவனுக்குச் சொல்வதைப் போல, என்னை உட்கார வைத்துக்கொண்டு சொன்னார்கள். இது சட்டசபை அல்ல, நீங்கள் எவ்வளவு ஆதாரங்களை வேண்டுமானாலும் எடுத்துப் பேசுங்கள். ஆனால் அதற்காக ஆத்திரப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று மிக அழகான முறையில் எடுத்துச் சொன்னார்கள். அன்று முதல் இன்று வரையில் அவர்களுடைய அறிவுரையை நான் ஏற்றுச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன் என்று அவர்கள் நம்புவார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது நான் பேசுகிறபோதல்லவா தெரியும் ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அதைப்போலவே எங்களுடைய கட்சியின் தலைவராக இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு திரு. சங்கரலிங்கம் அவர்கள், நான் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவைக்கு வந்தபோது, அவர் அறிவுரைகளை வழங்கினார்கள். "சட்டமன்றப் போலவை. சூடான, சுவையான விவாதங்களைக் கொண்டதாக இருக்கும். இந்த அவை டாக்டர் ஏ. எல். முதலியார் போன்றவர்கள், டாக்டர் ஜான் போன்றவர்கள், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் இருந்த அவை. ஆகவே நீங்கள் ஆத்திரப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் எப்படிப்பட்ட சூடான வாதங்களை எடுத்து வைத்தாலும், அதற்கேற்றாற்போல சுவையான பதிலைச் சொல்ல பழகிக் கொள்ளுங்கள்" என்று அவர் எடுத்துச் சொன்னார். அதையும் நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். இங்கே இந்த அவையைப் பொறுத்தவரையில், எனக்கிருக்கிற மகிழ்ச்சி எல்லாம் நான் ஓய்வு பெறுவதாகக் கூட கருதவில்லை—ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுவது என்பது சம்பிரதாயமாக இருந்தாலும் கூட, சில மாண்புமிகு உறுப்பினர்கள் சென்று மீண்டும் வர வேண்டுமென்று

சொன்னார்கள். இன்னும் நாமே திரும்பத் திரும்ப வரவேண்டுமென்று நினைக்கவில்லை. இன்னும் இந்த நாட்டில் நம்மைவிட அறிஞர்கள், சிறந்தவர்கள் இந்த அவைக்கு வருவதன் மூலம் அவர்களுடைய அறிவுரைகள் இந்த நாட்டுக்குப் பயன்படக்கூடும் என்ற நிலையில் இருந்து நான் எண்ணிப் பார்க்கிறேன். இந்த அவையில் குறிப்பாக உறுப்பினராக இருந்த நேரத்தில், நம்முடைய சிலம்புச் செல்வர் அவர்கள் இந்த அவையின் தலைவராக இருந்து கொண்டிருக்கிற நேரத்தில் இருந்தோமே என்று உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். நாம் ஓய்வு பெறுகிறோம் என்ற உணர்வு வராததற்குக் காரணம் அவர்கள் இந்த வயதில்கூட, பக்கத்தில் இருக்கிற கேரளாவில் இருக்கக்கூடிய ஆலயத்திற்கு தமிழனுடைய நிலைமை என்ன என்பதை, அவருடைய உணர்வு, நினைவையெல்லாம் உணர்த்தி, தான் வகிக்கிற பதவியைக்கூட மறந்து, அப்படிப்பட்ட சூழ்நிலையிலே தாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை இரண்டு நாளைக்கு முன் அறிக்கையாக வெளியிட்டதிலிருந்து, இந்த வயதில் கூட, சமுதாயத்திற்காக, இந்த நாட்டுக்காக தொண்டாற்ற வேண்டுமென்ற உள்ள உறுதிபடைத்த தலைவருடைய தலைமையில் இந்த அவையின் உறுப்பினராக இருந்தோமே என்று எண்ணிப் பார்க்கிற நேரத்தில், இந்த நாட்களை என்னுடைய வாழ்நாளில் மிகப் பெருமைக்குரிய நாட்களாக எண்ணுவதில் பெருமையடைகிறேன். அதைப்போலவே என்னுடைய நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள். அவருக்கு என்று சில கருத்துக்கள், சில கொள்கைகள் இருந்தாலும் கூட, தேசிய நீரோட்டத்தில் இருந்தாலும், தன்னை அதில் இணைத்துக் கொண்டிருந்தாலும் கூட, மற்றவர்களுக்கு இருக்கிற உணர்வுகளை மதித்து, அதே நேரத்தில் வாதங்கள் சூடாக ஆகிற நேரத்தில், அந்த சூட்டுக்கு இடம் தராமல் சுவையைக் கூட்டித் தருகிற அந்த உறுப்பினர்கள் இருந்த காலத்தில் நாமும் இந்த அவையில் உறுப்பினராக இருந்தோமே என்று எண்ணி நான் மகிழ்ச்சியடைகிறேன்.

(பிற்பகல் 12—40)

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் போன்றவர்கள் அவையில் பேசும்போது, என்றைக்காவது நான் வராமல் இருந்துவிட்டால் அல்லது அவருடைய பேச்சைக் கேட்கக்கூடிய வாய்ப்பைத் தவற விட்டிருந்தால், நான் அதற்காக வருந்துவது உண்டு. காரணம், நாமெல்லாம் அரசியல் துறையில் இருந்துகொண்டு அரசியல் நோக்கத்தோடு சில பிரச்சினைகளை அணுகுகிறபோது, அரசியலுக்கு அப்பாற்பட்ட ஆன்றோர்களின் எண்ணங்கள் எப்படி இருக்கின்றன என்பதை எடுத்துக் கூறக்கூடிய அளவுக்கு அவருடைய பேச்சுக்கள் இருக்கும். அதுவும் அவருக்கே உரிய ஆங்கில நடையில் மிகவும் அழகான முறையில் அந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் பாங்கினை





நான் எண்ணி எண்ணி வியந்து மகிழ்ந்திருக்கிறேன். அதைப்போலவே இங்கே எல்லோருடைய பெயரையும் நான் இங்கே குறிப்பிடாமல் இருப்பதற்குக் காரணம் நேரமின்மையே தவிர, அத்தகைய மாண்புமிகு உறுப்பினர்களின் ஆற்றலையும் மாண்புகளையும் குறைத்து மதிப்பிடுகிறேன் என்று யாரும் தவறாகக் கருதக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த 10 ஆண்டுகளாக நான் சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பேசும்போது, நான் சட்ட மன்றப் பேரவையில் பேசிய பேச்சு தனக்குப் பிடிக்கவில்லை என்று குறிப்பிட்டார். அதுவும் ஆளும் கட்சியில் இருக்கிற நேரத்தில்—அவருக்கு அந்த அனுபவம் இருந்திருந்தால் இவ்வாறு சொல்ல மாட்டார்—எதிர்க் கட்சிக்காரர்கள் எடுத்து வைக்கிற குற்றச்சாட்டுகளுக்கும், குறைகளுக்கும் ஆளும் கட்சியில் இருக்கிற இளமைத் துடிப்புள்ள உறுப்பினர்கள் அப்படித்தான் பேச வேண்டியிருக்கும். அப்படி இருந்தாலும் கூட, இங்கே எதிர்க் கட்சியில் இருந்து கொண்டு ஆளும் கட்சியின் குறைபாடுகளை—மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டபடி—மிகுந்த புள்ளி விவரங்களோடு நான் இங்கே எடுத்துச் சொன்னாலும்கூட, தனிப்பட்ட முறையில் எந்த அமைச்சரையும் நான் குறை கூறியதில்லை, அப்படிப்பட்ட முறையில் அப்படிப்பட்ட நோக்கத்தில் நான் பேசியதில்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு எதிர்க்கட்சி தன்னுடைய கடமையைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் செய்யப்பட்ட காரியங்களே தவிர—ஒரு ஜனநாயக நாட்டில் ஆளும் கட்சியின் குறைகளைச் சுட்டிக்காட்டுவதுதான் வரவேற்கத்தக்கது என்ற முறையில் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களே தவிர—வேறு எந்த முறையிலும் நான் இங்கே குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொல்லவில்லை என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பாக எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக இந்த அவையில் நான் பேசும்போது, யாருடைய மனமாவது புண்படும்படியாகப் பேசியிருந்தால், அத்தகைய நிகழ்ச்சிகளுக்காக இந்த நேரத்தில் நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவிக்க விரும்புவதோடு, என்னை தயவுசெய்து அவர்கள் மன்னிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். யாருடைய மனதையும் புண்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் நான் எதையும் சொல்ல விரும்பிய

இல்லை, அப்படிச் சொல்லப்பட்டவைகளில் யாருடைய மனமாவது புண்படும்படியான கருத்துக்கள் இருந்திருந்தால், அப்படிப்பட்ட உரைகளை ஆற்றியதற்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன்.

பொதுவாக இங்கே பேசிய அனைத்துத் தலைவர்களும் எங்களுக்குத் தகுதி இருக்கிறதோ இல்லையோ, ஆற்றல் இருக்கிறதோ, இல்லையோ, எங்கள் மீது வைத்திருக்கிற பற்றின் காரணமாகவும், பாசத்தின் காரணமாகவும், பாராட்ட வேண்டிய மரபு காரணமாகவும் எங்களைப் பற்றி அதிகமாகவே பாராட்டியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக மாண்புமிகு மேலவையின் துணைத் தலைவர் அவர்கள் அவருக்கே உரிய இலக்கிய நயத்தோடு எங்களுக்கெல்லாம் பல பாராட்டுரைகளை வழங்கியிருக்கிறார்கள். அவருக்கெல்லாம் நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிற அதே நேரத்தில், நம்முடைய அவைத் தலைவர் அவர்களுக்கும், இப்படிப்பட்ட வாய்ப்புக்களை எங்களுக்கு உருவாக்கித் தந்தமைக்காக நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், நான் மிகவும் சிறப்பாக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அவையில் பேசுவதற்காக நான் அவரிடம் நேரம் கேட்ட போதெல்லாம் மிகவும் தாராள மனத்தோடு நேரத்தைத் தந்து என்னை உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள். இப்படிச் சொல்லியிருக்கிற காரணத்தால், அவரிடம் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் தவறான எண்ணம் கொள்ள மாட்டார்கள் என்றே கருதுகிறேன். ஏனென்றால், ஜனநாயகத்தில் எதிர்க் கட்சிக்கு மரியாதை தர வேண்டும் என்ற நல்ல உணர்வோடு அவர் நேரத்தைத் தந்தார்களே தவிர, ஏதோ வீராசாமிக்கு ஆதரவாக அளித்ததாக நான் அதை நினைக்கவில்லை. அந்த வகையில் நான் எவ்வளவோ பேசியிருந்தாலும் கூட, அவர் எனக்குக் கொடுக்க வேண்டிய நேரத்தைவிட அதிகமான நேரத்தை அல்ல—நேரமே குறிப்பிடாத அளவுக்கு ஒருமுறை—அனுமதித்தார்கள். அதற்காக நான் குறிப்பாக இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது இந்த அவையின் விவாதம் நடைபெற்றபோது 3/4 மணி நேரத்தில் முடித்துக் கொள்ளுங்கள் என்று முதலில் என்னிடம் சொல்லி, பிறகு 1 மணி நேரம் வரை பேசுங்கள் என்று அனுமதித்து விட்ட நிலையில், நான் பேச ஆரம்பித்ததும், என்னுடைய பேச்சின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு இடையில் பேச்சை நிறுத்த வேண்டாம், தொடரலாம்



என்று சைகை காட்டி 1 மணி நேரம் அல்ல, 1½ மணி நேரம் நான் என்னுடைய உணர்வுகளையெல்லாம் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பைத் தந்த அவையின் தலைவர் அவர்களுக்கு என்னுடைய தனிப்பட்ட சார்பில் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இப்படிப்பட்ட ஆன்றோர்கள் அடங்கிய இந்த அவையிலிருந்து பணியாற்றியதை நான் என்னுடைய வாழ்நாளில் கிடைத்த மிகப் பெரிய பெருமையாகக் கருதி, எதிர்க் கட்சியின் சார்பிலிருந்து விடைபெறுகிறவர்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அடுத்து அவையின் முன்னவர் அவர்களை, அவையின் முன்னவர் என்ற முறையில் ஓய்வு பெறுகிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பாராட்டுரை வழங்கவும், ஓய்வு பெறுகிறவர்களில் அவரும் ஒருவராக இருப்பதால் அந்த முறையில் பாராட்டுரைகளுக்கு ஏற்புரை கூறவும் அழைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெற இருக்கிற மாண்புமிகு மேலவை உறுப்பினர்களை வாழ்த்தவும், அவர்கள் ஆற்றிய பணியை நினைவு கூர்ந்து பாராட்டுகிற அதே நேரத்தில் இது மற்றவர்களுக்கும் ஒரு பாடமாக அமையவும், திரும்பவும் அவர்களே இந்த அவைக்கு வரக்கூடிய வாய்ப்பு இருந்தாலும் இல்லையென்றாலும், இம்மாதிரியான பாராட்டுரைகளை வழங்குவது என்பது பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஒரு புத்துணர்ச்சியைத் தருகிறது என்ற அளவில் இது மிக நல்ல நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், அன்பின் காரணமாகவும் தங்களின் தோழமை காரணமாகவும், சம்பிரதாயம் என்பதைக்கூட மறந்து, சில உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். அப்படிப் பேசும்போது, பொதுவாக ஓய்வு பெறும் உறுப்பினர்கள் அனைவரும் திரும்ப அவைக்கு வர வேண்டும் என்றே கருத்துத் தெரிவித்தார்கள். அதில் ஒரு சிலருக்குத்தான் கட்டுப்பாடு இல்லை என்கிற நிலைமை இருக்கிறது. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் போன்றவர்கள் ஓய்வு பெற்றால், மீண்டும் திரும்பத் திரும்ப அவைக்கு உறுப்பினராக வரக்கூடிய நிலையில் சுயேச்சையான அமைப்பு அவருக்கு இருக்கிறது. ஆனால் மற்றவர்களைப் பொறுத்த வரையில், கட்சி என்ற ஒன்று இருக்கிறது. ஒரு கட்சி என்று இருக்கும் போது, அது எப்படியும் கருதலாம். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், மேலவையில் இடம்பெற்றுப் பணியாற்றினால்தான், பொது

வாழ்க்கை நிறைவுபெறும் என்று நாம் நம்முடைய எண்ணங்களைக் குறுக்கிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இது ஒரு மாறுபட்ட சந்தர்ப்பம் அவ்வளவுதான் a purely different opportunity. அப்படிப்பட்ட மாறுபட்ட சந்தர்ப்பத்தில் இங்கே நாம் நுழைகிறபோது, நிலைமைகளுக்குத் தக்கபடி, நன்மை நாமே மாற்றிக் கொண்டு தேவைகளுக்குத் தக்கபடி நம் எண்ணங்களையும் மாற்றிக்கொண்டு, மக்களுக்குப் பணியாற்ற வருகிறோம், பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

அதிலும் குறிப்பாக, மாண்புமிகு தலைவர் அவர்களைப் பார்க்கும்போது ஓய்வு என்பது தேவையில்லாத ஒரு வார்த்தை என்றே நான் கருதுகிறேன். இதை ஓய்வு என்று சொல்லவும் முடியாது. காரணம் நாம் சட்டமன்றத்தை விட்டு ஒதுங்கியிருக்கிற சூழ்நிலை வரலாம், சில சந்தர்ப்பங்களில் வேறு ஒரு அவைக்குச் செல்லக்கூடிய வாய்ப்பும் வரலாம். நம்முடைய இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால், ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவரே மாநிலங்களின் அவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கே சென்று பணியாற்றியிருக்கிறார்கள், பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடியும். கட்சி ஒவ்வொருவருக்கும் ஒரு கட்டளை இடும்போது அதை ஏற்றுச் செயல்படுகிற போது, இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவது சாதாரணம். அத்தகைய வாய்ப்பைத்தான் நாம் பொதுவாகப் பெற்று வருகிறோம்.

அருமை நண்பர் திரு. வீராசாமி அவர்களானாலும் சரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்களானாலும் சரி, அவர்களின் கட்சித் தலைவரும், கட்சியின் செயற்குழுவும் என்ன கருதுகிறதோ அதன்படி நடக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நாளைக்கு இங்கே யார் வர வேண்டும் என்று அவர்களின் கட்சி கருதுகிறதோ அவர்கள்தான் இங்கே வந்து பணியாற்ற முடியும். அப்படி கட்சியின் பிரதிநிதிகளாக நாம் இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். மக்களுடைய பிரதிநிதிகள் என்பது பொதுவான நிலையாக இருந்தாலும்கூட, கட்சியின் பிரதிநிதி என்கிற சிறப்பான நிலையில்தான் நாம் இங்கே வந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் கட்சி என்ன கருதுகிறது என்பதைப் பொறுத்துத்தான் எந்த நிலையிலும் நாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

என்னைப் பொறுத்தவரையில், எடுத்த எடுப்பிலேயே மேலவைக்கு வர வேண்டும், அதுவும் இங்கே வந்து பெரும் பொறுப்புக்களைச் சுமக்க வேண்டும் என்ற ஒரு நிலை வந்தபோது, அலாதியான சிறப்புக்குரிய உணர்வுகள் எனக்கு வந்துவிட்டன. இந்தச் சந்தர்ப்பத்தை எந்த அளவுக்குச்





சிறப்பாகப் பயன்படுத்தி மற்றவர்கள் நம்மைப் போற்றும்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வோடு நான் செயல்படுவதற்கு இது பெரிய வாய்ப்பாக அமைந்துவிட்டது. இந்த வாய்ப்பைக் கொடுத்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக நன்றி சொல்லும்போது, ஈன்று புறந்தந்த தாய்க்கும், சான்றோனாக்கிய தந்தைக்கும், ஆன்றோர் அவையில் முன்னவராக்கி அவனிக்கு என்னுடைய பணி சிறக்க வாய்ப்பு தந்த என்னுடைய புரட்சித் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் அதற்கெல்லாம் மேலாக, தமிழாய்ந்த தாங்கள் தலைவராக இருக்கிற இந்த மன்றத்தில் பணியாற்றக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு நான் உள்ளபடியே பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். அதோடு தங்களுக்கு உற்றுழி உதவி துணை புரிந்திட, துணைத் தலைவராக தமிழாய்ந்த இன்னொரு பெரும்புலவர் அவர்களின் தோழமையோடு, நாட்டு அக்கறையைப் பொறுத்தவரையில், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் பணியாற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்னை மகற்கிடையே ஒருவருக்கொருவர் வாழ்த்துவது கூடாது என்பதன் அடிப்படையில், நாம் ஒருவருக்கொருவர் வாழ்த்துத் தெரிவித்துக் கொள்வதைவிட, மக்கள் நம்மை வாழ்த்துகிறார்களா என்று பார்க்க வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே அவைக்குள் நடந்து கொள்வதைப்போல் வெளியேயும் நடந்து கொள்ளக்கூடிய சூழ்நிலை ஒன்று உருவாகுமானால், எவ்வளவு பெரிய ஆரோக்கியமான சூழ்நிலை இந்த நாட்டில் ஏற்படும், பொதுவாழ்வில் எத்தகைய சிறப்பான நிலை ஏற்படும் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன். காரணம் ஒரு சில நேரங்களில் வேதனைப்படக் கூடிய சம்பவங்கள் சட்டமன்றத்தில் நடைபெற்று விடுகின்றன. இங்கே அப்படிப்பட்ட சம்பவம் எப்போதும் நடைபெற்றதில்லை. இங்கே அனைவருமே பெருமைப்படத் தக்க அளவுக்குப் பொறுமையோடு பணியாற்றி வருகிறோம். ஆனால் இங்கே சிலபேரைப் பார்க்கிறபோது, சந்தேகம் வந்திருக்கலாம். திரு. ஆற்காடு வீராசாமி இங்கே வந்து விட்டாரே, அவரெல்லாம் இங்கே வரலாமா அல்லது என்னைப் போன்றவர்களெல்லாம் இங்கே வந்து அமரலாமா என்று ஒரு காலத்தில் நினைத்திருக்கலாம், ஆனால் நாம் நிச்சயமாக இந்த அவைக்கு

(திரு. கா. இராசா முகமது) [1983 ஏப்ரல் 26

(பிற்பகல் 12-50)

மேலும் பெருமை சேர்க்கக்கூடியதாக இதை மாற்றியிருக்கிறோம். இதற்கு முன்பு இருந்தவர்கள் பெருமையைச் சேர்த்தார்கள். அதற்கு மேலும் பெருமையைச் சேர்க்கக் கூடிய அளவிற்கு நம்முடைய நடவடிக்கைகள், போக்குகள் எல்லாம் அமைந்து சிறந்த முறையில் செயலாற்றிக் கொண்டிருக் கிறோம். ஆனால் பொதுவாக பொது வாழ்க்கையில் பதட்டங்கள் அதிக மாக வருகின்றன. சுறுசுறுப்பாக இருக்கிறோம் என்று காட்டுவதற்காக பதட்டப்பட ஆரம்பித்து சில நேரங்களில் தவறிவிடுகிறார்கள். அது தேவையற்ற ஒன்று. அதே போல பொறுமையாக இருக்க வேண்டுமென்றால், சோம்பேறித்தனமாக இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. இந்த இரண்டையும் மனதிலே கொண்டு நடுநிலையோடு பொதுவாக நாம் பணியாற்றி வருகிறோம். எல்லோரும் அவரவருக்குரிய நிலையில் சிறந்த முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாறி மாறி வரக்கூடிய நிலைமை இருப்பதால், ஆறாண்டுகளுக்கு ஒரு முறை சிலர் வெளியே போவதும், சிலர் திரும்ப வருவதுமான நிலை இருக்கிறது. சம்பிரதாயத்திற் காக எல்லோரையும் வாழ்த்துகிறபோது, திரும்ப வர வேண்டும் என்று நம்முடைய ஆசைகளைச் சொல்கிறோம். பாதிக்கு மேற்பட்டவர்கள் திரும்ப வராமல் வேறு சில பணிகளில் இருப்பதைப் பார்க்கிறோம். பொது வாழ்க்கை என்பது நிரந்தரமானது. கடைசி வரை இருந்து கொண்டே இருக்கும். அதிலே இங்கே கிடைத்த அனுபவம் மிகவும் முக்கியமானது. ஆறாண்டுக் காலம் முடிந்துவிட்டதா என்று எண்ணும்போது, எனக்கே ஆச்சரியமாக இருந்தது. இந்த ஆறாண்டுக் காலத்தில் என்ன சாதித்துவிட்டோம் என்று எண்ணும்போது எனக்கே ஆச்சரியமாக இருப்பதுண்டு. அதற்காக இன்னும் சில ஆண்டுகள் இருக்க வேண்டும் என்று அர்த்தம் இல்லை. இந்த ஆறாண்டுக் காலத்திலே நமக்குக் கிடைத்த அனுபவம் மகத்தானது. அது வெளியே பயன்படும். இந்தத் தோழமை வெளியே இருக்க வேண்டும். மேடைகளில் இந்த கண்ணியம் காக்கப்பட வேண்டும். தமிழகத்திலே உள்ள நற்பண்பு பிற மாநிலங்கள் எண்ணி வியக்கத்தக்க அளவிற்கு வர வேண்டும் என்று விரும்புகிறேன் நான். பல சந்தர்ப்பங்களில் நண்பர்களோடு பேசுகின்ற போது, இதற்கென்று விதிமுறைகளை வகுத்துக் கொள்ளக்கூடாதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். சில நேரங்களில் வீட்டிலே தன்னுடைய மனைவியிடம் அன்பாக, ஒழுங்காக நடந்துகொள்ள முடியாத பலபேர் பெண்ணுரிமை மாநாட்டிலே தலைமை தாங்கிப் பேசுவதைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமை பொது வாழ்க்கையில் வரக்கூடாது. பொது வாழ்க்கையிலே உள்ளவர்களுக்கு, சட்டமன்றத்திற்



1983 ஏப்ரல் 26] [திரு. கா. இராசா முகமது]

குள்ளே இருந்தாலும் சரி, வெளியே இருந்தாலும் சரி நியதி ஒன்றுதான். இங்கேதான் அவை அடக்கத்தோடும், அமைதியோடும் பேச வேண்டும், ஆனால் வெளியே எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்பது இருக்கக் கூடாது. பொதுவாக வளர்ந்து வருகிற தலைவர்களுக்கு, பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு நாம் வழி காட்டியாக இருக்க வேண்டும் என்ற அளவிலே இந்த உணர்வுக்கு இங்கே ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதை எல்லா உறுப்பினர்களும் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டினார்கள்.

பதவி விலக வேண்டிய நிலையில் உள்ள உறுப்பினர்கள், குறிப்பாக எதிர்க் கட்சி வரிசையில் உள்ள திரு. ஆற்காடு நா. வீராசாமி முதற்கொண்டு திரு. நீலநாராயணன் வரையில் நான் அரசுத் தரப்பிலேயிருந்து பார்க் கிறேன். - - எங்களுக்கெல்லாம் "ஸ்கூல் ஆஃப் தாட்" என்று ஒன்று இருக்கிறது. "நிழல் யுத்தம்" போல நிலைமைகள் ஏற்பட்டிருக்கலாமே தவிர, அவரவர்களுடைய கருத்துக்களை உணர்ந்து சொல்லியிருக்கிறார்களே தவிர, மற்றப்படி பொது வாழ்க்கையில் எவ்வளவு சோதனைகளைக் கடந்து வந்து மக்களுக்காகப் பணியாற்ற வேண்டும் என்ற உணர்வைப் பெற்றிருக் கிறோம் என்பதை அவர்களும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். மிகச் சிறப் பான முறையில் கருத்துக்களைச் சொல்லி இங்கே பணிகளைச் சிறப்பாக ஆற்றியிருக்கிறார்கள்.

அதேபோல கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. மாணிக்கம் அவர்கள் பற்றிய ஒரு சிறப்பான கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக கம்யூனிஸ்ட் கொள்கையைப்பற்றி உலக அரங்கில் தவறான அபிப்பிராயத்தைத் தொடர்ந்து பரப்பி வருகிறார்கள். கம்யூனிஸ்ட் என்றால் கொடுமை யானவர்கள், ஆயுதம் சுமந்து கொண்டிருப்பவர்கள், மூர்க்கத்தனமாகப் பேசக் கூடியவர்கள் என்று முதலாளித்துவ நாடுகளுடைய சக்திகள் பிரச்சாரம் செய்வதைப் பார்க்கிறோம். ஆனால் கம்யூனிஸ்ட்காரர்கள் எவ்வளவு எளிமையானவர்கள் என்பதைப் பார்க்கிறோம். அவர்கள் உறுதியாக இருக் கிறார்கள் என்பதற்காக வேகப்பட்டுவிடுகிறார்கள் என்று கருத முடியாது. பலாத்காரம் என்பது கம்யூனிஸ்ட் மீது திணிக்கப்படுகிறதே தவிர கம்யூனிஸ்ட் என்பது பலாத்காரம் அல்ல என்ற அந்தக் கொள்கையை உணர்ந்தவன் நான். திரு. மாணிக்கம் அவர்கள் பேசுகின்றபோது, அவருடைய நடவடிக்கையைப் பார்க்கின்றபோது, இதிலே கிஞ்சிற்றும் சந்தேகம் வந்துவிட முடியாது. பலாத் காரவாதி என்று அவரை எப்படிச் சொல்வது ? கொள்கைக்கேற்ப மிகவும் அற்புதமாக விஷயங்களைச் சொல்லக் கூடிய பாங்கினைப் பார்க்கிறோம். அப்படிப்பட்டவர்களுடைய பணியும் இங்கே இருந்துகொண்டேயிருக்க

[திரு. கா. இராசா முகமது] [1983 ஏப்ரல் 20

வேண்டும். முரண்பாடான கொள்கைகள் இருக்கலாம். ஆனால் மனிதர்கள் எதிரிகள் அல்ல. மார்க்ஸ் அவர்கள் சொன்னதைப் போல், நிச்சயமாக மனிதர்கள் எதிரிகள் அல்ல. இந்த நிலையில் திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி, மனிதர்கள் நமக்கு எதிரிகள் அல்ல. அவர்களுடைய கொள்கையில் முரண்பாடு இருக்கலாம். அவர்கள்கூட தங்களுடைய கொள்கை தான் இந்த நாட்டுக்கு நல்லது என்று கருதுகிறார்கள். ஆனால் நாம் வேறு கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக நாம் நண்பர்கள், பாசத்தோடு பழக வேண்டியவர்கள் என்ற உணர்வோடு இந்த அவையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படி வருகிறபோது ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு கால கட்டத்திலே ஒரு வாய்ப்பு ஏற்படுவதைப் போல இங்கே பணியாற்றுவது ஒரு நல்ல வாய்ப்பு. இந்த வாய்ப்பு தொடர்ந்து இருக்குமா இருக்காதா என்பது வேறு விஷயம். கண்ணியத்திற்குரிய பெருந்தலைவர் இந்த அவையை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் இங்கிருந்து நாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம், நம்மால் முடிந்த நல்ல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறோம். அதிலே ஒன்றிரண்டு தவறு இருக்கக்கூடும். "யானைக்கும் அடி சறுக்கும்" என்பதைப் போல இரண்டு சம்பவங்கள் நடந்திருக்கின்றன. மற்ற சம்பவங்களில் எல்லாம் பொறுமையாக இருந்திருக்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, பொறுமையாக இருக்க வேண்டும் என்பதற்காக சோம்பேறியாக இருக்க விரும்பவில்லை; சுறுசுறுப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகப் பதட்டப் பட்டு மாட்டிக் கொள்பவனும் நான் அல்ல. இரண்டு சந்தர்ப்பங்களில் நடந்தவைகளை நான் எண்ணிப் பார்க்க விரும்புகிறேன். ஒன்று, சட்டப் பேரவையில் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு கருத்தை என் மீது சொல்ல நான் கொஞ்சம் உணர்ச்சி வயப்பட்ட சம்பவம். பிறகு அதை அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்து விட்டார்கள். புரட்சித் தலைவர் அவர்கள்கூட, "கலைஞர் மீது ஏன் அவ்வளவு கோபம்?" என்று கேட்டார்கள். என்னுடைய வீட்டிலேகூட என்னுடைய தந்தை "கலைஞரோடு அப்படிப் பேசியிருக்கக் **கூடாது" என்று** சொன்னார்கள். அதற்குப் பிறகு அவர் என்ன பேசினாலும் பதில் பேசுவதில்லை என்று சபதம் எடுத்துக்கொண்டு கூடுமானவரையில் இருந்தேன். எனக்குள்ள ஒரு வசதி, அப்படிப்பட்ட நேரத்தில் மேலவைக்கு வந்துவிடுவேன் என்பது. பிறகு அவர்களும் விட்டுவிட்டார்கள்.



1984 ஏப்ரல் 26] [திரு. கா. இராசா முகமது]

அதற்குப் பிறகு இந்த ஆறாண்டுக் காலத்திலே கடைசி சந்தர்ப்பத்தில் நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் விஷயத்தில் சிறிது வேகம் வந்து விட்டது. அது தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்திலே ஏற்பட்டது. அவரும் அப்படி விரும்பிச் சொல்லியிருக்க முடியாது. அன்று அவர் அப்படிப் பேசுவார் என்று எதிர்பார்த்துக்கொண்டு நானும் உட்கார்ந்திருக்கவில்லை. வெளியே ஏதோ காரியமாக எழுதிக் கொண்டிருந்தேன். Slip of the tongue என்பதைப் போல அவர் சொல்லியது என்னுடைய காதில் விழுந்தது. ஆகவே உணர்ச்சிவயப்பட்டேன். அப்போதுகூட உணர்ச்சி வயப்பட்டு விட்டேன் என்பதால், உடனே பேசாமல் இருந்துவிட்டேன். அதற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் பதில் சொன்னார்கள். பிறகு நான் கட்டுப்பாட்டிற்கு வந்த பிறகு, பதில் சொல்ல வேண்டி வந்தது. இந்த இரண்டு சம்பவங்களையும் நினைத்துப் பார்த்துச் சில சமயங்களில் நான் வெட்கப்பட்டிருக்கிறேன். இதைச் சொல்வதில் தவறு இல்லை. கடைசி வரையில் ஒரு முறையைக் கையாள வேண்டும் என்ற பிடிவாதம் மிறப்பட்டு தவிர்க்க முடியாத சூழ்நிலையில் இந்தச் சம்பவம் நடந்ததற்காக வருத்தப்படுகிறேன். அதுவும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களிடத்திலே நடந்து கொண்டது எனக்கே கஷ்டமாக இருந்தது. நண்பர் என்ற முறையில், சகோதரர் என்ற முறையில், தோழர் என்ற முறையில் அதைப் பெரிதாக எடுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த நிலையில் இருந்தாலும், பொதுவாழ்க்கையில் பல விஷயங்களுக்காகப் பாடுபட வேண்டியவர்களாக, போராட வேண்டியவர்களாக ஐக்கிய இந்தியாவினுடைய பலத்தை உறுதிப்படுத்த வேண்டியவர்களாக மற்ற நாடுகள் வியக்கத்தக்க அளவிற்கு சமூகப் பொருளாதார மாற்றங்களைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். பதவியில் இருக்கிறோம், அந்தஸ்து கிடைத்தது, தேவை கிடைத்தது, புகழ் கிடைத்தது என்று எண்ணிக் கொண்டிருக்காமல், பதவியைச் சுமையாகக் கருதி மக்களுக்காகப் பாடுபட வேண்டும். நமக்கு ஓய்வு இல்லை. நாம் ஓய்வு இல்லாத கடற் பறவைகள். தொடர்ந்து பல்வேறு நிலைமைகளில் பணியாற்றிக் கொண்டிருப்போம், தலைமையின் கட்டுப்பாட்டிற்குட்பட்டு பணியாற்றுவோம். திரும்பவும் மேலவையில் பணியாற்றக் கூடிய வாய்ப்பு கிடைக்குமானால், அதற்காக நிச்சயமாக மேலும் பெருமைப்படுவோம். அதற்காக உங்களுடைய வாழ்த்துக்கள் துணை நிற்கும் என்ற நம்பிக்கையோடு நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். எந்தச் சூழ்நிலையிலும் இந்தச் சம்பவங்களையெல்லாம்

[திரு. கா. இராசா முகமது] [1983 ஏப்ரல் 26

மறந்துவிட முடியாத அளவிற்கு வரலாற்றுச் சம்பவங்களாக நினைத்துப் பார்க்கக் கூடிய அளவிற்கு பொது வாழ்க்கையில் எல்லோருக்கும் முன் மாதிரியாக நடப்போம் என்ற உறுதிமொழியை மட்டும் இந்த நேரத்தில் விலகுகிற உறுப்பினர்கள் சார்பில், இந்த அவைக்குத் தெரிவித்து, உங்களுடைய தலைமையில் பணியாற்றிய நாளை நிச்சயமாக நாங்கள் மறக்க மாட்டோம் என்று திரும்பத் திரும்பச் சொல்லி வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, நம்மிடமிருந்து சம்பிரதாயமாக விடை பெறுபவர்களின் **எண்ணிக்கை** ஏழு தான். அதற்காக அவை முழுவதையும் ஈடுபடுத்த வேண்டாமே, இரு தரப்பிலும் ஒவ்வொருவராக வைத்து முடித்து விடலாம் என்று நான் நினைத்தேன். எதிர்க் கட்சித் தரப்பிலும்கூட நான் விரும்பியதற்கு கட்சித் தலைவர்கள் இசைந்தார்கள். ஆனால் என் தவறு, காங்கிரஸ் கட்சித் தலைவரைக் கலந்து கொள்ளவில்லை. அதனால் இவ்வளவு நேரம் நீட்டிக்க வேண்டியதாயிற்று. இருந்தாலும் உண்மையில் பிரிவு உபசாரம் என்பது எல்லோருக்கும் மன நிறைவு தருவதால், நேரம் போனதில் கவலையில்லை. அவைத் தலைவர் என்பதால், முறைப்படி ஏழு பேரையும் எப்படி அணுகுவது என்று முதலிலே நினைத்தேன். பொறுப்பு வகிப்பவர்கள் என்ற முறையில் அவை முன்னவர் அவர்களிடமிருந்து துவக்கலாம் என்று நினைத்தேன். இருந்தாலும் வயதானவர்களுக்குள்ள பலகீனம் முதியவர்களிலிருந்து துவக்கலாமே என்பது. மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள்தான் ஓய்வு பெறக்கூடிய ஏழு பேர்களிலே முதியவராக இருக்கிறார். இளையவராக இருப்பவர் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். முதியவர் அந்தக் கோடியிலே இருக்கின்றார். இப்போதுதான் கொஞ்சம் இடம் மாறி இருக்கின்றார்.

(பிற்பகல் 1-00)

தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களுக்கும் எனக்கும் இந்த அவைக்கு வெளியிலே அதிக பழக்கம் இல்லை. சுருக்கமாகத்தான் பழக்கம் இருந்தது. இந்த அவைக்கு வந்த பிறகு இன்னும் நெருக்கமாகப் பழக்கம் வந்து, நாங்கள் நெருங்கிய நண்பர்கள் ஆகிவிட்டோம். அவர்கள் ஒரு வகையில் தொழிலாளராக இருந்து அமைச்சராக ஆனவர்கள். நானும் ஒரு தொழிலாளியாக இருந்து இந்தத் தலைமைப் பதவிக்கு வருகின்ற அளவுக்கு வளர்ந்துகொண்டு வந்தவன். நான் தொழிலாளி என்பதிலே கை உழைக்கும் தொழிலாளியாக இருந்தவன். அவர் அறிவுத் தொழிலாளியாக இருந்திருக்கிறார். அவருக்கு என்னுடைய மனமார்ந்த



1984 ஏப்ரல் 26] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் பேசுகிறபோது அல்லது அவர் துறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசுகின்றபோது, நான் அவையிலே இருப்பதை ஒரு விரதமாக எடுத்துக் கொண்டு இருப்பவன். நான் இதற்கு முன்பு இங்கேயே இருப்பதற்கு எனக்கு சாத்தியமானதாக இருந்தது. அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, இந்த மாதிரி வெய்யில் நேரத்தில் இங்கேயே இருப்பது, அதிக நேரம் இருப்பது என்பது முடியவில்லை. இப்போது கொஞ்சம் பலஹீனமாக இருப்பதால், முடியவில்லை. ஆதலாலே ஒன்றுமில்லை. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே திறமையாக நன்றாகவே நடத்துகின்றார்கள் என்ற மன நிறைவு இருப்பதாலும், நான் இங்கே வருவதைக் குறைத்துக் கொண்டேன். அறுவைச் சிகிச்சைக்குப் பிறகுதான் அப்படி இருக்கிறேன். அதற்குக்கூட விலக்குக்கொடுத்து அவர்கள் பேசுகின்றபோது, நான் இருப்பது வழக்கம். நான் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. இந்த அவையினுடைய மாண்புக்கு ஏற்ப, மாண்பு குறையாமல்தான் அவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோபத்தைத் தணிக்கலாம் என்ற அளவிலேதான் நான் இங்கே இருப்பது. துணைத் தலைவர் அவர்களால் முடியும் என்றாலும்கூட, நான் முதியவன் என்ற காரணத்தினால், என்னுடைய ஆணையை அவர்கள் கேட்பார்கள் என்று நான் அறிந்திருக்கிறேன். அவர்கள் தொழிலாளியாக இருந்தவர்கள். தொழிலாளர்கள் இயக்கத்தில் ஈடுபாடு உடையவர்கள் என்ற அளவில்தான் அந்த உணர்ச்சி வேகம் அந்த இரண்டு பேர்களுக்கும் இருக்கின்றது. அவர்களுக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. மாணிக்கம் அடுத்த வரிசையில் வருகிறார். நான் சொல்வதிலேயிருந்தே வயதைப்பற்றி ஆராய்ச்சி பண்ணிப்போகாமல், நான் சொல்வதிலேயிருந்தே உறுப்பினர்கள் தெரிந்துகொள்ளலாம். திரு. மாணிக்கம் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களை என் சார்பிலேயும் அவையின் சார்பிலேயும் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லோரும் சொன்னதுபோல, கருத்து வேற்றுமைக்கு இடம் இல்லாமல் வார்த்தைகளை அளந்து, நேரத்தை மனதில் நினைத்து, கருத்துக்களை உறுதியாகச் சொல்வதிலே நண்பர் திரு. மாணிக்கம் காட்டும் பொறுமையையும் உறுதியையும் நாம் பாராட்ட வேண்டும். அது எல்லோருடைய பாராட்டிற்கும் உரியது என்பதை உங்களோடு சேர்ந்து சொல்லிக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1983 ஏப்ரல் 26

அடுத்து, நண்பர் திரு. நீலநாராயணன் அவர்களைப் பற்றியும் எல்லோரும் சொன்னார்கள். அவரும் நானும் ஏறத்தாழ ஒரே பேட்டை வாசிகளாக இருப்பவர்கள். நான் ஐஸ் அவுஸ்-ல் இருந்தபோது அவர் திருவொற்றியிசுவரன்பேட்டையில் இருந்தார். கொஞ்சம் கிட்டே கிட்டே இருந்தவர்கள். இன்னொன்று நான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்களோடு சேர்ந்து கன்னியாகுமரியை மீட்டுக்கொண்டு வந்த முறையிலே, அப்படி மீட்கப்பட்ட பகுதியினுடைய குடிமகன் என்ற முறையிலே திரு. நீலநாராயணன் அவர்களுக்கு என்னிடம் தனி அன்பும், அவர்களிடம் எனக்கு ஒரு தனி அன்பும் இருந்தது. அந்த அன்புக்கு மாறுபாடான நிலையும் வந்தது உண்டு. பக்கத்துப் பக்கத்து டிவிஷன் என்ற முறையிலே சட்ட மன்றத் தேர்தல் வரும் காலத்திலே, மாநகராட்சித் தேர்தல் வரும் காலத்திலே அவருடைய ஆர்ப்பாட்டமான போராட்டத்தை நான் சந்திக்க வேண்டிய கட்டமும் எனக்கு ஏற்பட்டதுண்டு. எனக்கு நன்றாக நினைவில் இருக்கின்றது. திருவொற்றியீசுவரன்பேட்டையில் ஓட்டுப் பதிவு நடந்துகொண்டிருக்கும் நேரம். இப்போதெல்லாம் அப்படி இல்லை. நாம் எல்லோரும் நல்லவர்களாக ஆகிவிட்டோம். ஒன்றும் இல்லை என்பதை ஒத்துக்கொள்வோம். அந்தக் காலத்திலே மாநகராட்சித் தேர்தலிலே பதிவு முடிகின்ற நேரத்திலே, அந்த மாலை நேரம் இருக்கிறதே அப்போது தான் கனல் பறக்கும். அவர் இருந்த தெருவில் நான் நுழைந்தேன். நிலையைப் பற்றிப் பார்ப்பதற்காக என்று போனேன். அங்கே நுழையவே விடுவதில்லை என்று சத்தியாக்கிரகம் செய்தார்கள். இந்த நேரத்திலேயும் அதை என்னால் மறக்க முடியவில்லை. அப்படியும் கஷ்டமில்லாமல் நுழைந்து வந்தேன். அவ்வளவு கஷ்டம் இல்லை. அந்த அளவுக்கு அவர்கள் கட்சியில் ஈடுபாடு உண்டு. அவரையும் நான் மனமுவந்து பாராட்டுகிறேன்.

அடுத்து, இங்கே வயது வரிசையில் வருகின்றவர் அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. வீரப்பன் அவர்கள். அவர்கள் வகிக்கின்ற துறையின் காரணமாக வேறு அமைச்சர்களைவிட அவரோடு அதிகத் தொடர்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. பல கோயில்களிலே நாங்கள் சந்திக்கிறோம். அரசியலிலே சந்திப்பதற்கு நாங்கள் இருக்கும் இடம் இடந்தரவில்லை என்றாலும், கோயில்களிலே அறநிலையப் பணித்துறையிலே நாங்கள் நிறையச் சந்திக்கிறோம். அதிலே நான் ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையின்கீழ் இங்கே ஆட்சி வந்தபோது, நான் அவரைக் கேட்டேன். பல துறைகளை அவர்கள் தன் கையிலே வைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களிடம் வேறு எதையும் பற்றிக் கேட்கவில்லை. கல்வித் துறையைக் கொடுத்துவிட்டார். யார் கல்வி அமைச்சர் என்று எனக்குத் தெரிந்தது. அடுத்து உள்ள அறநிலையத் துறையை, எனக்கு அக்கறையுள்ள அறநிலையத் துறையை யாரிடம் கொடுக்கப்போகிறார்கள் என்று கேட்டேன். அவர்கள் என்னைப் புரிந்துகொண்டே சொன்னார்கள். "நான் கொடுக்கின்றபோது தெரிந்து கொள்வீர்கள். அதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்" என்று சொன்னார். பிறகு அவர்தான் அறநிலையத்துறைக்குப் பொறுப்பு என்று தெரிந்தபோது அவ்வளவு பழக்கம் இல்லை. என்றாலும் போகப் போகத்தான் பார்க்க வேண்டும் என்று எண்ணினேன். அவர்கள் மன நிறைவோடுதான் அதை நடத்துகின்றார்கள். ஏனென்றால் இரண்டு பக்கத்திலிருந்தும் அவரைத் தாக்குகிறார்கள். அதனால் அவர் சரியாக நடத்துகின்றார் என்பதற்கு அதுவே சான்று என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. நான் பலமுறை அவருக்காகப் பரிந்து பேசியிருக்கிறேன். அவருக்கு வக்கீலாக இருந்துகொண்டிருக்கிறேன். சங்கராச்சாரியார் சுவாமிகள் நடத்திய அந்த மகாநாட்டிற்குப் போகின்றபோது நான் அங்கே அவர்களிடம் சொன்னேன். "நீங்கள் இருக்கும்போது, அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை ரொம்ப சோதித்துவிடாதீர்கள். அவருக்கு அந்தப் பக்கத்திலும் நெருக்கடி இருக்கிறது. நீங்களும் இங்கே நெருக்கடியை உருவாக்க வேண்டாம், நம்முடைய ஒத்துழைப்பு இருக்க வேண்டும். அப்போது தான் இரண்டு பேரும் நடுநிலைக்கு வருவதற்கு அவரை நாம் பாலமாக வைத்துக்கொண்டு அவரைப் பயன்படுத்தலாம். ஆதலால் அவரை அதிகமாக சோதிக்காதீர்கள்" என்று சொன்னேன். அப்படியே இந்த வாய்ப்பைப் பயன் படுத்திக்கொண்டு ஒன்றைச் சொல்கிறேன். அவர் சார்ந்துள்ள திராவிடர் இயக்கத்தில் கிளைகள் பல இருக்கின்றன என்றாலும்கூட, அவரை வைதீகராகவோ, தீவிர மடாதிபதியாகவோ சொல்வதிலே சுவையாகக் காணலாம். அவர் இருக்கின்ற இடத்திலே இருந்துகொண்டு அவருடைய பணியைச் செய்துகொண்டு அவருடைய இயக்கத்திற்கு மதிப்பு தேடுவார் என்று நாம் நம்ப வேண்டும்.



1984 ஏப்ரல் 26] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

சோவியத்து நாட்டிலே, ரஷ்ய நாட்டிலே ஜார் ஆட்சி நீங்கி சோஷலிச ஆட்சி தோன்றியபோது, அவர்களுக்கும் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது. அங்கே ரோசா லக்சம்பர்க் என்ற அம்மையார்,—நான் சொல்கின்ற அந்தப் பெயர் சரியாகத்தான் இருக்கும் என்று திரு. நல்லசிவன் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.—அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவினர் "மசூதி கூடாது, சர்ச்சே கூடாது" என்று ஒரு கிளர்ச்சியைத் தொடங்கியபோது, மாபெரும் தலைவர் லெனின் அவர்கள் சொன்னது எனக்கு

நினைவுக்கு வருகிறது. அவர் சொன்னார். "நீங்கள் சொல்வது கொள்கை அளவில் எனக்கு உடன்பாடு. ஆனால் நாம் இப்போது பாட்டாளி ஆட்சியை இங்கே நிர்மாணித்திருக்கிறோம். அந்தப் பாட்டாளி வர்க்கம் அதிலே நம்பிக்கை வைத்திருக்கிறது. இப்போது நீங்கள் போராடி அதை அழித்துவிட விரும்பினால் உலகத் தொழிலாளிகளே ஒன்று படுங்கள் என்று சொல்வது அந்தத் தொழிலாளர் வர்க்கத்தை திடமாக சிதைக்கும். ஆதலால் சமர்சமாகத் தீர்க்க வேண்டும் என்றால் மத உரிமைப்படி அவரவர்கள் நம்புகின்ற தெய்வத்தை வழிபட உரிமையுண்டு. மனச்சாட்சிப்படி தெய்வ நம்பிக்கை தவறு என்று பிரச்சாரம் செய்வதற்கு பகுத்தறிவாளர்களுக்கு உரிமை இருக்கிறது" என்று சொன்னார்கள். அந்த ஆட்சியிலே இன்றைக்கும் சொல்கின்றேன், அறநிலையத்துறை அமைச்சர் உண்டு. அறத்துறை உண்டு. அதற்கு அமைச்சர் உண்டு. அங்கேயும் அதற்காக துறை இருக்கின்றது. உலகம் நமக்கு வழிகாட்டியாக இருக்கிறது. அவர்கள் அதைச் சிறப்பாக நடத்துகின்றார்கள். ஆகவே அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள். மீண்டும் சொல்கிறேன் அவர் துறை நான் சம்பந்தப்பட்ட துறை. எனக்கு விருப்பமான துறை. ஆகையால் இந்த விளக்கத்தை இங்கே நான் சொல்லவேண்டியதாக உள்ளது.

அடுத்து வருபவர் திரு. ஓ. எஸ். துரைசாமி அவர்கள். அவர் நன்றாகப் பேசுகிறார்களே, இன்னும் கொஞ்ச நேரம் பேசவேண்டுமே என்று நான் நினைத்துக்கொள்வேன். ஆனால் அவர்கள் கொஞ்ச நேரம் பேசி நிறுத்திக் கொள்வார்கள். அவர்கள் விஷயங்களை அமைதியாகச் சொல்கின்றார்கள். இன்னும் கொஞ்ச நேரம் அவர்கள் பேசியிருக்கலாமே என்று நினைப்பதுண்டு. அவர்கள் மீண்டும் வந்தால், அவருக்கு அதிக நேரம் கொடுத்து பேசவைக்க அவருக்கு இப்போதே உறுதி கொடுக்கிறேன்.

அடுத்து, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. வீராசாமி அவர்கள். அவருக்கு எப்படியெல்லாம் நேரம் கொடுத்தேன் என்பதைப் பற்றியெல்லாம் அவர்கள் இங்கே சொன்னார்கள். நானும் சொல்வேன். அவர்கள் என்னிடத்திலே கேட்காது நேரத்தை எடுத்ததில்லை. முன்னாலேயே எனக்கு இவ்வளவு நேரம் வேண்டும் என்பார்கள். இரண்டு பேர்களும் நாங்கள் பரஸ்பரம் விட்டுக்கொடுத்துக்கொள்வோம். அதே நேரத்திலே நாங்கள் உடன்படிக்கை செய்தால், அந்த உடன்படிக்கையை அவர் மீறியது இல்லை என்பதை ஒரு நற்சான்றிதழாகவே கொடுக்கிறேன். இன்னமும் ஒன்றைச் சொல்கிறேன். மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் நானும், அவரும் அவருடைய கட்சித் தலைவர் அவர்கள், என்னுடைய மதிப்பிற்குரிய டாக்டர்





கலைஞர் அவர்களும் சேர்ந்தாற்போல் ஓரிடத்தில் சந்திக்க நேர்ந்தபோது, அவர்கள் என்னைக் கேட்டார்கள். "எப்படி இருக்கின்றார், வீராசாமி?" என்று கேட்டார்கள். நான் சொன்னேன். "எனக்கு நல்ல ஒத்துழைப்பு தருகிறார். நல்லபடியாக இருக்கின்றார்" என்று சொன்னேன். "ஒரு வேளை உங்களை விரும்பமாட்டாரோ என்று நினைத்தேன்" என்று அவர்கள் சொன்னார்கள். "அதற்காகத்தான் அங்கே அனுப்பி வைத்திருக்கிறேன். உங்களிடம் அனுப்பிவைத்திருக்கிறேன். கோபம் வந்தால் தணிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அனுப்பியிருக்கிறேன்" என்றார். அவர்களுக்கும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். நானும் ஒரு அரசியல் வாதியாக இருந்தவன். போராட்ட வாதியாக இருந்தவன். இப்போது தலைவர் பதவியில் இருந்துகொண்டிருக்கிறேன். நான் நம் நாட்டிலே ஒரு உறுப்பினனைப்போல இருந்து நான் விரும்புகின்ற கொள்கைகளை விட்டுவிடமாட்டேன். அதே நேரத்திலே இந்தப் பொறுப்புக்குரிய கடமைகளையும் செய்வேன். அந்த நிலையில் நடப்பதற்கு ஒத்துழைத்தமைக்காகப் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. இராசா முகமது அவர்கள்பற்றிச் சொல்கிறேன். சில நேரங்களில் ஏதாவது சங்கடமான நிலை வரும்போது அவர்கள் எனக்கு சைகை காட்டிவிடுவார்கள். இவர்கள் நமக்கே சைகை காட்டுகின்றார்கள் என்று நினைப்பேன். அவர்கள் பொறுமையாக இருக்க வேண்டும் என்ற அளவில் இருப்பவர்கள். அவர்களிடமிருந்து பலர் அவருடைய பொறுமையைக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அதற்கு அவர்கள் சான்றாக இருக்கிறார்கள். அவர்கள் முன்னவர் என்ற முறையிலே அவருடைய பரிபூரணமான ஒத்துழைப்பைத் தருகிறார்கள். நான் சில நேரங்களில் ஆலோசனை செய்ய வேண்டும் என்று நினைப்பேன். அப்போது அவர்களோடும் ஆலோசனை கலப்பதுண்டு. அத்தகையவர் நம்மிடையே இருந்து விடைபெறுகின்ற சடங்குக்குரியவராக இன்று இருக்கின்றார்கள். அவரையும் நான் பாராட்டுகிறேன். எல்லோரும்

(பிற்பகல் 1-10)

சொன்னதையே நான் திரும்பவும் சொல்கிறேன். விடை பெறுபவர்கள் எல்லாம் திரும்பி வர வேண்டுமென்று நான் விரும்புகிறேன். வசிஷ்டர் வாயால் பிரும்ம ரிஷி என்பதுபோல எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், அன்பர் திரு. வீராசாமி அவர்களும் 'பொறுப்போடு வாருங்கள்' என்று சொல்லும்போது, நான் ஏன் அதைச் சொல்லத் தயங்க வேண்டும்? ஆகவே ஏழு பேரும் திரும்பவும் வர வேண்டுமென்று விரும்பி, அவர்களுக்கு வாழ்த்துக் கூற விரும்புகிறேன்.

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1983 ஏப்ரல் 26

இந்த நேரத்தில் மற்றும் ஒன்றை நான் இங்கு சொல்ல வேண்டும். மேலவைக்கு உரிய போக்கைப்பற்றிச் சொன்னார்கள். அந்த அவை இல்லையானாலும்கூட, இந்த அவை செயல்பட வேண்டுமென்று சொன்னார்கள். எந்த நாட்டிலும் அது சாத்தியமில்லை. எந்தக் காலத்திலும் அது சாத்தியமில்லை. இந்த அவை இல்லாமல் அந்த அவை செயல்பட முடியும். அப்போதுகூட இதைக் கலைத்துவிட்டுத்தான். இதைக் கலைத்துவிட்டால், அது மட்டும் செயல்பட முடியும். ஆனால் அது இல்லாமல் இது மட்டும் செயல்பட முடியாது. அதைக் கலைக்க நமக்கு அதிகாரமில்லை. அந்த நிலையும் வேண்டாம். ஆகவே இந்த அவை அப்படி வர முடியாது. ஒன்று மட்டும் நான் எண்ணியது உண்டு. ஜனாதிபதி ஆட்சி வந்த போது, மத்திய அரசு ஒரு ஆலோசனைக் குழுவை நியமித்தது. அதிலே இந்த மாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே இருந்தார்கள். அதை நான் விரும்பவில்லை. அப்போது ஓர் அறிக்கை விட்டேன். சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருவேளை, கலைக்கப்பட்ட மன்றம் என்ற காரணத்தால் இல்லை என்றாலும், கலைக்கப்படாத மன்றமாகிய மேலவையின் உறுப்பினர்கள் அந்த ஆலோசனைக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதுதான் நியாயம் என்று கூறினேன். மேலவை இயங்காத ஒரு மன்றமே தவிர, இறந்துபோன மன்றமல்ல. இயங்காத மன்றத்தின் உறுப்பினர்களைச் செயல்பட இயலாமல் வைப்பது தப்பு. இப்போது நான் சொல்வது, நடவடிக்கைக் குறிப்பில் பதியும். ஆதலால் எதிர் காலத்திற்கு அந்த விபத்து வர வேண்டாம். **வந்தாலும், இது** பயன்படுமென்று நம்புகிறேன்.

உறுப்பினர்கள் எல்லோரையும் மனமுவந்து பாராட்டுகிறேன். அடக்கத்திற்குச் சொல்லவில்லை. இந்த அவைக்குரிய மதிப்போடு எல்லோரும் நடந்துகொண்டு, எனக்கு ஒரு சிக்கலும் வைக்கவில்லை. ஒன்றை மட்டும் நாம் நினைக்க வேண்டும், மற்ற அவைகளுக்கும் நமக்கும் ஒரு வேற்றுமை உண்டு. இங்கே 21 உறுப்பினர்கள் உள்ளாட்சித் துறையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருபவர்கள் அல்லது பட்டதாரி, ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருபவர்கள் கட்சிச் சின்னங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல. அதை நாம் இங்கே நினைப்பில் வைத்துக் கொண்டு நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அது முக்கியம். கட்சியினுடைய தேர்தல் பிரகடனத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறவர்கள் அல்ல. கட்சிக்காரர்களாக அவர்கள் இருக்கலாம். ஆனால் தேர்தல் களத்திலே அந்த நிலை இல்லை என்பதைப் பார்க்கிறோம். பட்டதாரி,



1984 ஏப்ரல் 26] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து வருகிறவர்களும் அப்படித்தான் வருகிறார்கள். ஆகவே எந்த அவையும் நடப்பதற்கு இந்த அவை வழிகாட்டியாக இருக்க வேண்டுமே தவிர, வேறு முறையில் இருக்கக் கூடாது. அதிலே இரண்டு விஷயங்கள் முக்கியமானது. ஒன்று வெளி நடப்பு செய்வது. வெளி நடப்பு இந்த அவைக்கு ஏற்ற முறையிலே இருக்க வேண்டும். நாம் வெளி நடப்பு செய்துதான் தீர வேண்டுமென்ற ஆத்திரமோ, உள் உணர்வோ ஏற்படும் போது, அந்த மரபைக் கடைப்பிடிப்பது தவறல்ல. டெல்லி மாநிலங்கள் அவைகூட நமக்கு வழிகாட்டியல்ல. அங்கே கட்சி சார்பில், மாநிலச் சட்டப் பேரவைகளிலிருந்துதான் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, செல்லுகிறார்கள். அங்கே விசேடப் பிரதிநிதிகள் கிடையாது. மாநில மேலவை அப்படியல்ல. இங்கே விசேடப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். இன்னும் ஆசிரியர் பிரதிநிதிகள், மற்றவர்களுக்கு வழி காட்டியாக இருக்க வேண்டும். வாத்தியார்கள் அல்லவா ? அதை, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி உட்பட, எல்லோரும் ஏற்பார்கள் என்று நினைக்கிறேன். எனக்கு வாத்தியார்கள் மீது எந்தக் கோபமும் இல்லை. ஏனென்றால் இரண்டாம் வகுப்போடு படிப்பை நிறுத்தியவன் நான். அதனாலே வாத்தியார்கள் எனக்கு ஒரு தொல்லையும் பண்ணவில்லை, நானும் வாத்தியார்களுக்கு ஒரு தொல்லையும் கொடுக்கவில்லை. ‘ஆசிரியர்கள் என்றால் உட்கார் என்று சொல்லுகிறார்’ என்று சொன்னார்கள். அவர்கள்மீது எனக்கு என்ன கோபம் ? அவர்களிடம் தொடர்பு வைத்துக்கொள்ள முடியாத வரலாற்றைப் படைத்தவன் என்பதுதான் என்னுடைய வருத்தம். திரும்பவும் சொல்கிறேன், இந்த அவையிலே நடந்த இந்த நடவடிக்கை நம் எல்லோருக்கும் மன நிறைவைத் தரும் ஒன்று. மீண்டும், மீண்டும் எத்தனை நாட்களுக்குத் தொடர்பு இருக்கிறதோ, அத்தனை நாட்கள்வரை நம்முடைய நட்பு உறுதிப்படும். நட்பு, இந்த மன்றத்திற்கு வெளியேகூட, அதில் உறுதிப்பாடு நீடிக்கும். விடை பெறுவதற்கான சம்பிரதாயங்களுக்கு உரியவர்களோ அல்லது விடை பெறுகிறவர்களோ, அவர்களுக்குச் சொல்கிறேன், இனி ஓராண்டுக்குப் பிறகு எனக்கு பிரிவு உபசாரம் சொல்ல நீங்கள் திரும்பி வந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன் என்று கூறிக்கொள்கிறேன்.

மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து மீண்டும் 27—4—1983 புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

**(பிற்பகல் 1-14)**

8. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

265. Notification issued with G.O. Ms. No. 3222, Home (Transport), dated the 28th December 1982 regarding cancellation of certain Notifications already issued in that Department in various numbers. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

*B. Reports, Notifications and other Papers.*

* 172. The Tamil Nadu Debt Relief (Amendment) Bill, 1983 (L.A. Bill No. 16 of 1983), as passed by the Assembly.

* 173. The Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Bill, 1983 (L.A. Bill No. 29 of 1983), as passed by the Assembly.

174. Supplement to Demand No. 57—Capital Outlay on Public Health Sanitation and Water Supply, 1983-84. (Tamil and English).

175. Demand No. 4—Tamil Nadu General Sales Tax and Other Taxes and Duties. (Tamil and English).

---

* Circulated to all M.L.Cs. on 23rd April 1983.



இணைப்பு

267ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

சென்னைப் பல்கலைக் கழகம் தந்துள்ள விவரப்படி, கும்பகோணம் ஆண்கள் மற்றும் பெண்கள் அரசுக் கல்லூரிகளில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாணவ, மாணவிகளின் 1982-ல் நடந்த தேர்வு முடிவுகள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

ஆண்கள் அரசுக் கலைக் கல்லூரி, கும்பகோணம்.

| பி.எஸ்ஸி. பட்டப்படிப்பு தேர்வுகள் | தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படாத மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 3-வது செமஸ்டர் | 12 |
| 5-வது செமஸ்டர் .. | 6 |
| | 18 |

பெண்கள் அரசுக் கலைக் கல்லூரி, கும்பகோணம்.

| பி.எஸ்ஸி. பட்டப்படிப்பு தேர்வுகள் | தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படாத மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 3-வது செமஸ்டர் | 11 |
| 5-வது செமஸ்டர் | 9 |
| | 20 |

2. தேர்வுத்தாள் திருத்தும் சில அலுவலர்களிடமிருந்து இன்னும் மார்க்கு பட்டியல் கிடைக்கப் பெறாததால் தான் இம்மாணவ, மாணவிகளது தேர்வு முடிவுகள் வெளியிடப்படவில்லை என பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது.

3. இத்தேர்வுத்தாள் திருத்தும் அலுவலர்கள் யாவருக்கும் நினைவூட்டுக்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் முடிவு அறிவிக்கப்படாத பாடங்களில் அவர்கள் விரும்பினால் மீண்டும் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் தேர்வு முடிவு கிடைக்கப்பெற்றதும் இவர்களது நிலையினை ஆய்வுசெய்து இவர்கள் தேர்வு பெற்றிருந்தால் மீண்டும் தேர்வு எழுத செலுத்திய தொகையினை திரும்பத்தர ஏற்பாடு செய்துள்ளதாக பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது.

4. பொதுவாக இவ்வாறு தேர்வு முடிவுகள் கால தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க தக்க நடவடிக்கை எடுக்க பல்கலைக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## இணைப்பு II

[274 ஆம் பக்கத்தில் இனம் 6 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. BILL No. 16 OF 1983.

(As passed by the Assembly)

*A Bill to amend the Tamil Nadu Debt Relief Act,* 1982.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Debt Relief (Amendment) Act, 1983.

(2) It shall be deemed to have come into force on the 24th day of February, 1983.

2. *Amendment of section* 5, *Tamil Nadu Act* 50 *of* 1982.—In Section 5 of the Tamil Nadu Debt Relief Act, 1982 (Tamil Nadu Act 50 of 1982) (hereinafter referred to as the principal Act,—

(i) in sub-section (1), in clause (c),—

(*a*) for the expression "six months", the expression "twelve months" shall be substituted; and

(*b*) in the proviso thereunder, for the expression "seven months", the expression "thirteen months" shall be substituted.

(ii) in sub-section (3), for the expression "seven months", the expression "thirteen months" shall be substituted.

3. *Amendmeht of section 7, Tamil Nadu Act 50 of* 1982.—In section 7 of the principal Act,—

(i) in sub-section (1), in clause (*c*),—

(*a*) for the expression "six months", the expression "twelve months" shall be substituted; and

(*b*) in the proviso thereunder, for the expression "seven months", the expression "thirteen months" shall be substituted;

(ii) in sub-section (3), in clause (*a*), for the expression "seven months", the expression "thirteen months" shall be substituted.



## இணைப்பு III

281-ஆம் பக்கத்தில் இனம் 6(2) க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. BILL No. 29 OF 1983.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Act,* 1976.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Act, 1983.

(2) It shall come into force at once.

2. *Amendment of section* 4, *President's Act* 25 *of* 1976.—In the Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Act, 1976 (President's Act 25 of 1976), in section 4, in sub-section (1), for the words "seven years", the words "seven years and six months" shall be substituted.

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

[ISSUED 19—12—1983

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

WEDNESDAY 27th APRIL 1983

Volume CC (No. 4)

© GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

Price *Rs.* 2.75 *Paise*]

## பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள் | 357—374 |
| 2 உரிமைப் பிரச்சினை— | |
| சத்துணவுப் பொறுப்பாளர்களிடம் கணக்கை ஒப்படைப்பது குறித்து 7—2—1983 அன்று மேலவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூற்று குறித்து. .. .. | 374—876 |
| 3 அறிவிப்புகள்— | |
| (1) ஆளுநரிடமிருந்து செய்தி .. .. | 376 |
| (2) பேரவையிலிருந்து செய்தி .. .. | 377 |
| 4 மேலவை விதி 82-ன்படி அமைச்சரின் விளக்க உரை— | |
| கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குக் கொண்டு வருவது தொடர்பாக, ஆந்திர மாநில அரசுடன் ஏற்பட்ட உடன்படிக்கை குறித்து | 377—383 |
| 5 அரசின் சட்ட முன்வடிவுகள்— | |
| (1) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்—பல்வேறு விதித்துறைகள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1982) .. | 383—428 |
| (2) தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1983) .. .. .. | 429—448 |
| 6 அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்— | 448 |



143188

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாறு ஆராய்ச்சி
5 ஜூப 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008


D 2C 32—1

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

புதன்கிழமை, 1983, ஏப்ரல் 27.

சித்திரை 14, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு-2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பின்தங்கிய வகுப்பினர் மாணவர்கள் விடுதி

*329 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு, நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977 ஆம் ஆண்டு ஆதி திராவிட வீட்டுவசதி வாரியம், தர்மபுரியில் பின்தங்கிய வகுப்பினர் மாணவர்கள் தங்குவதற்கு மூன்று மாடி மாணவர்கள் விடுதி ஒன்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருந்தது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், கட்டிட வேலை எப்பொழுது தொடங்கி, எப்பொழுது முடிவடைந்தது?

(உ) தற்பொழுது எத்தனை மாணவர்கள் அங்கு தங்கி வருகின்றனர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) தர்மபுரியில் பிற்பட்ட வகுப்பு கல்லூரி மாணவர் இல்லம் கட்டுவதற்காக 1974 ஆம் ஆண்டில் அரசு நிருவாக ஒப்புதல் அளித்தது. பின்னர், தருமபுரியில் ஆதி திராவிட கல்லூரி மாணவர்களுக்கும், பிற்பட்ட வகுப்பு கல்லூரி மாணவர்களுக்கும் பொதுவான இல்லம் கட்டுவதற்கு அரசு 1976-77-ல் ரூ. 10.875 இலட்சங்கள் அனுமதித்தது.

(இ) இப்பணி, 1976 ஜூலை திங்களில் தொடங்கப்பட்டு 1978 மார்ச் திங்களில் முடிக்கப்பட்டது.

(உ) இந்த மாணவர் இல்லத்தில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் 400 பேர்; தற்போது 380 கல்லூரி மாணவர்கள் தங்கியுள்ளனர்.

திரு. ம. சங்கரலிங்கம்: 1977 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கட்டிடம் இது. ஆதி திராவிட வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் கல்லூரி மாணவர்கள் தங்குவதற்கு கிட்டத்தட்ட முதல் மாடிக் கட்டிடம் 1978 ஆம் ஆண்டு முடிக்கப் பட்டதாகவும் அதில் 50 மாணவர்கள் தங்குவதற்கு வசதியிருந்தும், பேக்வர்ட்

கிளாஸ் ஆபிசர் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இரண்டு இடங்களில் அதை நடத்த முடியாது என்றும் சொல்லி, அந்தக் கட்டிடத்தில் மாணவர்களைச் சேர்க்கவில்லை என்றும், பிறகு 1973 ஆம் ஆண்டு 4.29 இலட்சம் ரூபாயில் இரண்டு மாடிக் கட்டிடம் கட்டுவதற்கு அந்தத் துறை சிபாரிசு செய்தும் 1981 வரை அதற்கு ஒப்புதல் அளிக்கப்படவில்லையென்றும் இதுவரை முதல் மாடிக் கட்டிடம் பயன்படுத்தப்படவில்லை என்றும் 1979-80 ஆம் ஆண்டைய . காம்ட்ரோலர் அன்ட் ஆடிட்டர்-ஜெனரல் ஆப் இந்தியா அவர்களுடைய ரிப்போர்ட்டிலே பக்கம் 21, பாரா 2-ல் சொல்லப்பட்டிருப்பது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? அதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** 1974 ஆம் ஆண்டிலேயே அங்கே இல்லம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் எதிர்பார்த்த அளவிற்கு நிதிவசதி இல்லை. பிறகு வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் ரூபாய் 25 இலட்சம் முன்பணம் தந்து, மீதி பணத்தை வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்தும் பெறுவது என்று எதிர்பார்த்து, 150 இல்லங்கள் கட்ட திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் எதிர்பார்த்த உதவி அங்கிருந்து கிடைக்காத காரணத்தாலே, அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அதற்குப் பிறகு தான் 1976-77 ஆம் ஆண்டிலே மீண்டும் துவக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. முதலிலே ஆதி திராவிடர் பழங்குடியினர் 81 பேர்களும், பிற்பட்ட மாணவர்கள் 120 பேர்களும், ஏனைய வகுப்பு மாணவர்கள் 3 பேர்களும் சேர்க்கப்பட்டிருந்தார்கள். ஆக மொத்தம் 204 பேர் சேர்க்கப்பட்டிருந்தார்கள். 6—9—1982-லிருந்து 57 ஆதி திராவிட மாணவர்களும், 53 பிற்பட்ட வகுப்பு மாணவர்களும், 3 ஏனைய வகுப்பைத் சார்ந்த மாணவர்களும் ஆக மொத்தத்தில் 113 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். 20—10—1982 அன்று 63 பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதித்ததன் அடிப்படையில், 63 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். ஆக எல்லோரையும் சேர்த்து இப்போது 380 மாணவர்கள் இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற அந்த நிலைமைகள் ஏன் ஏற்பட்டன என்பதுபற்றி என்னிடம் விளக்கக் குறிப்புகள் இல்லை. அதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், முழு விவரத்தையும் தரலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இதையொட்டி தனிக் கேள்வி போடுகிறேன். ஆனால் இந்திய ஆடிட்டர்-ஜெனரல் அவர்களுடைய 1979-80 ஆம் ஆண்டு ரிப்போர்ட்டிலே பக்கம் 21, பாரா 2-ல் இந்தக் கட்டிடம் 1978 ஆம் ஆண்டு



முடிக்கப்பட்டிருந்தும், முதல்மாடி மூன்று ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் அப்படியே இருந்திருக்கிறது என்றும், அங்குள்ள டிஸ்ட்ரிக்ட் பேக்வர்ட் கிளாஸ் ஆபிசர் இரண்டு இடங்களிலே இந்த விடுதியை நடத்த முடியாது என்று மறுத்துவிட்ட காரணத்தினால் இதுவரையிலும் விடுதி பயன்படவில்லை என்றும், பிறகு 1973 ஆம் ஆண்டு 4.29 இலட்சம் ரூபாய்க்கு ஒரு துறை விடுதியைக் கட்ட அனுப்பிய மதிப்பீடு 1981 ஆம் ஆண்டுவரை ஒப்புதல் பெறாமலேயே காத்திருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதுபற்றி அரசு நடவடிக்கை எடுத்து ஏதேனும் செய்ததா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய விளக்கக் குறிப்புகள் எல்லாம் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற ரிப்போர்ட் பற்றியும் அதிலே சொல்லியுள்ள அம்சங்கள்பற்றியும் துறையினர் மனதிலே கொண்டு ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது என்பதற்கான விளக்கங்களைக் கேட்டு, தேவைப்பட்டால், வாய்ப்பு ஏற்படும்போது. அதற்கான விளக்கங்களைத் தரலாம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இதைப் போன்ற மாணவர் இல்லங்கள் கட்டப்படும்போது, சமயத்தில் காலதாமதம் ஏற்படுவதைக் கருதி, தனியார் கட்டிடங்களை வாடகைக்கு எடுத்து, இதுபோன்ற மாணவர் இல்லங்கள் கட்டி முடியும்வரை, மாணவர்கள் தங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வசதி செய்வார்களா? மேலும் தர்மபுரி போன்ற இடங்களைப் பொறுத்த வரையில், நிறைய இடம் இருக்கிற பகுதிகளில் மூன்று மாடிக் கட்டிடங்களைக் கட்டுவதற்குப் பதில் மாணவர்களுடைய பாதுகாப்பு கருதி, தரை மட்டத்திலேயே கட்டிடங்களை வைத்துக்கொள்வது மாணவர்களுக்கு வசதியாக இருக்குமே. இனி எதிர்காலத்தில் அந்த அடிப்படையில் மாணவர் இல்லங்கள் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** தரைக்கு மேலேயே இல்லையா?

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** ஆம். மாணவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிற நிலைமையில் கீழே இருக்கிற மாணவர்களுடைய தலையிலே எதையாவது போடக் கூடிய நிலைமையைத் தவிர்க்கலாம். அந்த வகையில் தரை மட்டத்திலேயே கட்டிடம் கட்டுவது அவசியம் தேவை என்பதுபற்றி அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பெரும்பாலான இடங்களில் பிற்பட்ட மாணவர் இல்லங்கள் தனியார் கட்டிடங்களில்தான் இருக்கின்றன. பிறகச் பிறகுத்தான் சொந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஆனால்

மாணவர் இல்லங்கள் ஒரு பகுதிக்கு அவசியம் தேவை என்கிற நிலை வரும்போது, முதல் கட்டமாக தனியார் இல்லங்களை வாடகைக்கு எடுத்து அதிலே வசதி குறைவாக இருந்தாலும் கூட, அந்த மாணவர்கள் எப்படியும் படித்துத் தேற வேண்டுமென்ற அளவுக்கு அத்தகைய இல்லங்களை நாம் அமைத்துக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். ஆண்டுதோறும் ஒதுக்கப் படுகின்ற நிதியின் அடிப்படையில், எவ்வளவு விடுதிகளைக் கட்ட இயலுமோ அந்த அளவுக்கு விடுதிகளைக் கட்டுவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டு, எந்தெந்த இடங்களுக்கு முன்னுரிமை தருவது என்கிற அடிப்படையில் முன்னுரிமை கொடுக்க வேண்டியவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து கட்டிக்கொண்டு வருகிறோம். ஆனால் பெரும்பாலான இல்லங்கள் தனியார் இல்லங்களில்தான் இருந்துகொண்டிருக்கின்றன.

## குடும்ப அட்டைகள்

*330 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறு ஒன்றியத்தைச் சேர்ந்த தலைஞாயிறு, மணக்குடி, காடாந்தேத்தி, ஆய்மூர் ஆகிய கிராமங்களில் 3—9—1982 அன்று வரை, நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்படவில்லை என்பதனை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், இதுகுறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 25—5—1982-க்கு முன் கணக்கெடுப்பு செய்தபடி வேதாரண்யம் வட்டத்தில் உள்ள கீழ்க்கண்ட கிராமங்களில் வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள் விவரம்:—

| | |
|---|---|
| 1. மணக்குடி | 461 |
| 2. ஆய்மூர் | 414 |
| 3. தலைஞாயிறு முதல் சேத்தி | 712 |
| 4. காடாந்தேத்தி | 189 |
| ஆக கூடுதல் .. | 1,776 |



(இ) 25—5—1982-க்குப்பின் குடும்ப அட்டைகள் பெறவில்லை என்று மனுக்கள் பெறப்பட்டதன் பேரில் கீழ்க்கண்டவாறு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன:—

| | |
|---|---|
| 1. மணக்குடி | 59 |
| 2. ஆய்மூர் | 82 |
| 3. தலைஞாயிறு முதல் சேத்தி | 26 |
| 4. காடாந்தேத்தி | 31 |
| ஆகமொத்தம் .. | 198 |

## பிற்பட்டோர் வகுப்புக் குழு

*331 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் தற்போதுள்ள பின்தங்கியோர் பட்டியலை ஆராய்ந்து இரண்டு மாதங்களுக்குள் கமிஷன் ஒன்று நிறுவுமாறு சுப்ரீம்கோர்ட் தமிழக அரசுக்கு உத்திரவிட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அக்கமிஷன் எப்போது நிறுவப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) உச்சநீதி மன்றத்தின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு அரசு தற்போது வழக்கிலிருக்கும் பிற்பட்டோர் பட்டியலை ஆய்வு செய்து தொகுக்க இரண்டாம் பிற்பட்டோர் குழுவை ஓய்வு பெற்ற இந்திய அரசுப் பணி அதிகாரியும், தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் முன்னாள் தலைவருமான திரு. ஜே. ஏ. அம்பாசங்கர் அவர்கள் தலைமையின்கீழ் 13—12—1982 அன்று அமைத்து ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்ட அந்தக் குறிப்பிட்ட வழக்கு எந்தக் காரணத்திற்காக யாரால் போடப்பட்டது? அந்த வழக்கினுடைய தீர்ப்பின் மிக முக்கியமான விவரங்கள் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த வழக்கு போட்டவர் களுடைய முழு விவரங்களும் இங்கே இல்லை. தனிக் கேள்வி கேட்டால், விவரம் தரப்படும். ஆனால் முக்கியமான விவரங்கள் என்னவென்று சொன்னால் ஒன்பது ஆயிரம் ரூபாய் உச்சவரம்பு என்று கட்டி அதற்குக் கீழே இருப்பதை மட்டும் வைத்துக்கொள்வது தவறு என்பது ஒன்று. 31 சதவீத இடங்கள்தான்

(முற்பகல் 9-40)

பிற்பட்டவர்களுக்கு என்று ஒதுக்கியதை எந்த ஒரு காரணமும் இல்லாமல் 50 சதவீதம் ஆக்கியது தவறு, அது 31 சதவீதம் ஆகவே இருக்க வேண்டுமென்று கேட்டார்கள். பிற்பட்டோர் பட்டியலில் இருக்கும் சில சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வசதியுடையவர்களாக இருப்பதால், அவர்களை அந்தப் பட்டியலிலிருந்து நீக்கிவிட்டால், மீதமுள்ள உள்ளபடியே பிற்பட்டவர்கள் பயன் அடையலாம் என்று சட்டநாதன் குழு பரிந்துரை செய்ததன் அடிப்படையில், சில பிற்பட்ட இனங்களை நீக்கியிருக்க வேண்டு மென்று எடுத்துச் சொல்கிற அளவுக்கு வழக்குகள் தொடுத்தார்கள். ஆகவே தான் இதிலே ஏதாவது காணப்பட்டதா என்ற நிலையில் இரண்டாவது ஆய்வுக் குழு ஒன்று வைத்து புதிதாகச் சேர்க்கப்படுகிறவர்களாக இருந்தாலும் சரி, அல்லது இருப்பவர்களிலிருந்து எடுக்கப்படுகிறவர்களாக இருந்தாலும் சரி, இவையெல்லாவற்றையும் கவனிக்கிற அடிப்படையில்தான் திரு. அம்பா சங்கர் அவர்கள் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசால் அமைக்கப்பட்ட இந்தக் குழு அனுப்பியுள்ள வினாத்தாள் (Questionnaire) சாதாரண மக்களால் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு மிகக் கடுமையான வார்த்தைகளைக் கொண்டதாக இருக்கிறது. அதை எளிமைப்படுத்த வேண்டும். இந்தக் குழுவினுடைய அறிக்கை கிடைப்பதற்கு நீண்ட காலம் தாமதம் ஆகும் என்று எதிர்பார்ப்பதால், அதற்குள் இடைக்கால அறிக்கை ஒன்று பெறப்படுமா? அப்படிப் பெற்று அதில் உள்ள சில பரிந்துரைகளை உடனடியாக அரசு அமுல் படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையை ஓராண்டுக் காலத்திற்குள் தரவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்குத் தேவைப்படுகின்ற புள்ளிவிவரங் களை சென்சஸ் ரிப்போர்ட்டிலிருந்து பெற முடியாது என்ற நிலை இருக்கிறது என்று எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, சென்சஸில் ஜாதி போன்றவைகள் குறிப்பிடப்படுவதில்லை என்று முடிவானதற்குப் பிறகு அதிலே விபரங்களை எடுப்பதற்கு இல்லை, வினாத்தாள் மூலமாக பதில்கள் வேண்டுகின்ற அளவுக்கு



பல்வேறு துறைகளில் இருக்கும் நான்கு ஆயிரம், ஐந்து ஆயிரம் பேர்களுக்கு அந்த வினாக்கள் அனுப்பப்பட்டு, புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட வேண்டு மென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது கடினமானதாக இருந்தால், அதை எளிமைப்படுத்த ஆலோசனைகளை அந்தக் குழுவிற்கு அறிவிக்கலாம். காலவரையறையை இப்போது மே 16 வரையில் நீட்டித்திருக்கிறார்கள். அந்தக் குழுவின் அறிக்கை வந்த பிறகு, அதை ஆராய்ந்து எந்தெந்த அளவுக்கு அதை ஏற்படுத்துவது, நடைமுறைகளையெல்லாம் எப்படிக் கொண்டுவருவது என்பதையெல்லாம் 1—1—1985-க்குள் முடிக்க வேண்டுமென்றும், 1—1—1985-க்குள் அறிக்கை பெற்று, நடவடிக்கை எடுக்காவிட்டால், 1—1—1985-க்குப் பிறகு அந்த 31 சதவீதம் என்று போட்ட உத்தரவு நிற்கும் என்றும், ரூ. 9,000 என்று போட்டதும் நிற்கும் என்றும் சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டிருக்கிறது. ஆகவேதான், எந்த முடிவாக இருந்தாலும், திட்டவட்டமாக இரண்டு ஆண்டு காலத்திற்குள், அதாவது 1—1—1985-க்குள் எடுத்துத் தீர வேண்டியிருக்கிறது. ஆக, ஓராண்டுக் காலத்திற்குள் இந்த அறிக்கை வந்தாலும் எல்லாவற்றையும் பரிசீலித்து, ஆய்ந்து, சிந்தித்து செயலாக்க முடியும்.

திரு. ப. மாணிக்கம் : தலைவர் அவர்களே, இந்தக் கமிஷனின் கேள்வித்தாள் 13 ஆம் தேதி வந்து 15 ஆம் தேதிக்குள் பதிலைக் கேட்டிருக்கிறார்கள். இப்போது மே 1 வரை காலம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. மே 15 வரை நீட்டித்தாலும் உறுப்பினர்கள் பல விபரங்களைச் சேகரிக்க முடியும். அப்படி காலத்தை நீட்டிக்க கமிஷனுக்கு அரசு ஆலோசனை சொல்லுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பலபேர் காலம் போதாது என்று சொன்ன காரணத்தால், மே 16 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. மே 16-க்குள் அனுப்பலாம்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் குழு மாவட்ட அளவில் சென்று மக்களுடைய சமுதாயங்களைப் பற்றி அறிய தங்களுடைய பணியை எப்போது துவக்க இருக்கிறது? அதோடு இவர்களாகவே தொழிற்சாலைகள், கல்லூரிகள் ஆகிய இடங்களுக்குச் சென்று அங்கே இருப்பவர்களுடைய கருத்தை அறிய இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தப் பணியை அந்தக் குழுதான் முடிவு செய்ய வேண்டும். ஆனால் முதலில் புள்ளிவிவரங்களைத் திரட்டி, ஆய்வு செய்வதற்காக மாவட்டங்களுக்குச்

செல்வார்கள். அப்படி மாவட்டங்களுக்குச் செல்ல உரிமை இருக்கிறது. அதற்கான வாய்ப்பு வசதி செய்யப்படும் என்று ஆணையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, இந்தக் குழு எடுக்க வேண்டிய முடிவு ஒரு முக்கியமான பிரச்சினையை ஒட்டியும், தமிழகத்தின் எதிர் காலத்தையும், சமுதாயத்தின் உயர்வையும் பற்றி அமைந்திருப்பதால். அவர்கள் மக்கள் கணக்கு எடுப்புப் புள்ளிவிவரங்களிலிருந்து முழு விபரங்களைச் சேகரிக்க முடியாமல் இருப்பதாலும். இந்தக் கேள்வித் தாள் அனுப்பப்பட்ட இந்த நான்கு ஆயிரம் பேர்கள் தங்களுக்குத் தெரிந்ததை மட்டும் தருவதால், ஆதாரம் அவ்வளவு சரியாக இருக்காது என்பதால், இவர்களே தனியாக ஒரு செல் (பிரிவை) ஏற்படுத்தி, இந்தப் புள்ளிவிவரங்களை தமிழ் நாடு முழுவதற்கும் எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளுமாறு அரசு அவர்களுக்குச் சிபாரிசு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அவர்கள் பல்வேறு கல்வி நிறுவனங்கள், தனிப்பட்ட நிறுவனங்கள் அதைத் தவிர தனியாரிடம் கேட்டு வாங்கி, அதற்கு பதில் அனுப்ப முயன்றாலும், அதற்கும் இடமளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்குப் பின்னால். அந்தக் குழு அதை ஆய்ந்து தங்களுக்குக் கிடைத்திருக்கிற புள்ளிவிவரங்கள் போதுமானதாக இல்லையென்று சொன்னால், தனியாக ஒரு செல் அமைக்க முடியுமா என்ற யோசனையைச் செய்யலாம். அந்தக் குழு அப்படி ஒரு யோசனையைத் தெரிவித்தால், அதற்கேற்றவாறு அரசு அளிப்பதாக இருக்கிறது.

## *Diploma in Pharmacy Course.*

*332. *Q.*—Dr. T. R. JANARTHANAM (on behalf of Thiru G. Swaminathan): Will the Hon. the Minister for Health be please to state:

(*a*) whether it is a fact that registration could not be granted to the candidates, who have completed the Diploma in Pharmacy Course from the Goverment Headquarters Hospital Tiruchirappalli, due to non-recognition by the Pharmacy Council of India;

(*b*) if so, the number of students so affected; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter?





**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) மதுரை மருத்துவக் கல்லூரியில் மருந்தாளுநர் பட்டயப் படிப்புப் படித்துத் தேர்வு பெற்றுள்ள திருச்சி பிரிவை சேர்ந்த மாணவர்களை பதிவு செய்வதற்கு இந்திய மருந்தாளுனர் கழகம் (Pharmacy Council of India) இப்போது ஒப்புதல் அளித்துள்ளது. எனவே தமிழ் நாடு மருந்தாளுநர் கழகம் அம்மாணவர்கள் எப்போது அக்கழகத்தை அணுகினாலும் அவர்களுக்குப் பதிவு அளிப்பதற்கு ஆட்சேபணை கிடையாது.

(இ) ஒருவருமில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, இந்த மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற்று எத்தனை ஆண்டு ஆகிறது ? அவர்களுக்கு பதிவு செய்கிற உரிமை எத்தனை ஆண்டுகளாக மறுக்கப்பட்டிருக்கிறது ? அப்படி பதிவு செய்கிற உரிமை கொடுக்கப்பட்டால், அதற்கு 'ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, மொத்தம் திருச்சியில் 1980-ல் 100 பேர் சேர்க்கப்பட்டு, 72 பேர் முழுமையாகத் தேர்ச்சி பெற்று டி. பார்மசி பட்டம் பெற்றனர். இதில் 39 பேர் பதிவு செய்ய மனு செய்தனர். ஐந்து பேர்களின் மனுபற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. காரணம் அவர்கள் திருச்சியில் அனுமதிக்கப்பட்டனர் என்பது. அவர்கள் படித்த விவரங்களிலிருந்த நிலைமை மதுரையில்தான் இருக்கிறது என்ற காரணத்திற்காக அப்படி செய்யப்பட்டிருக்கிறது. மதுரைக்கு மாற்றப் பட்டிருப்பது தேவையில்லை என்று நாம் பிறகு வாதாடினோம். அவர்களுக்கும் அனுமதி கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, தனியார் மருந்தகங் களில் கடை வைப்பதற்கு மருந்தாட்சியல் பட்டம் பெற்ற ஒருவரை வேலைக்கு வைக்கவேண்டியிருக்கிறது. கிராமங்களில் மற்றும் வெளியூர்களில் இந்தத் தொழிலில் 10 ஆண்டு அனுபவம் பெற்றவர்கள் இந்தக் கடைகளை நடத்தலாம் என்று முன்பு இருந்தது. அது இப்போது நடைமுறையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, அப்படி முன்பு இருந்தது. அதிலே குறிப்பாக புதுவை மாநிலத்தில் இவர்களுக்கு ரிஜிஸ்டிரேஷன் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பல பேர் இங்கே பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அந்தத் தகுதி பெறாமல் அதே நேரத்தில் அனுபவம்

பெற்றவர்கள் இங்கே வேலை செய்தவர்கள் பாண்டிச்சேரிக்குச் சென்று அங்கே சேர்ந்து அந்த சர்டிபிகேட்டை வாங்கினார்கள். இப்போது அந்தப் பிரச்சினை வரவில்லை. இப்போது டி.பார்மசி பட்டம் பெற்றவர்கள் இங்கேயே நிறைய இருக்கிறார்கள். இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளில் இந்தப் பற்றாக்குறையே இல்லாமல் போகக்கூடிய நிலை இன்னும் கொஞ்சநாளில் வந்துவிடும்.

### பல்லவன் போக்குவரத்துக் கழக (பெருநகர்) பணிமனை

*333 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை திருவல்லிக்கேணி—அண்ணா சாலை பகுதிகளில் பல்லவன் போக்குவரத்துக் கழக (பெருநகர்) பணிமனை ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### பேருந்து கட்டணச் சலுகைகள்

*334 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாணவர்கள் அல்லாத பலர் தங்களை மாணவர்கள் என்று சொல்லிக்கொண்டு, அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணச் சலுகைகளைப் பயன்படுத்துவதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், இதுபோல் நடவாதிருக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) இந்தக் கல்வி ஆண்டிலிருந்து மாணவர் சலுகைக்கான விண்ணப்பங்கள் கல்வி நிலையத்தின் மூலம் மட்டுமே மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. அதேபோல் முதன்முறையாக பதிவு செய்வதும், முதன் முறையாக பயணச்சீட்டு விற்பனை செய்வதும் கல்வி நிலையத்தின் மூலம் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. கல்வி நிலையங்கள் எந்த மாணவருக்கு எந்த எண் உடைய அடையாள அட்டை வழங்கியுள்ளது என்பதைக் குறித்து



வைக்கவும், அதன் மறு பிரதியினை பாதுகாப்பாக வைக்கவும் உத்தரவு இடப்பட்டுள்ளது. மாணவர் அல்லாதாரும் டோக்கன்களை மாணவர்களிடமிருந்து பெற்று சலுகைகளைத் தவறுதலாக உபயோகிப்பதைத் தவிர்க்கும்படி, டோக்கன்களின் எண்ணிக்கை 60 ஆக தேவைக்கேற்ற அளவிற்கு வரையறுக்கப்பட்டு, கல்வி நிலையம் செல்லவேண்டிய அத்தியாவசிய பயணத்திற்கு பேருந்து மாறிச் செல்வதற்கும் வசதி உடைய துளையிடும் அட்டை தரப்பட்டுள்ளது. அத்துடன் கல்வி சம்பந்தமாக இதர இடங்கள் செல்ல அவசியமில்லாத பள்ளி மாணவர்களுக்கு (10-வது வகுப்புக்குக் கீழ் படிக்கும் மாணவர்களுக்கு) டோக்கன்கள் வழங்கப்படாமல் துளையிடும் அட்டை மட்டும் தரப்பட்டுள்ளது. தவறு செய்வதைத் தவிர்க்கும் பொருட்டு தவறாக சலுகையைப் பயன் பயன்படுத்த உடந்தையாக இருக்கும் மாணவர்கள், கல்வி நிலையப் பயன்படுத்த உடந்தையாக இருக்கும் மாணவர்கள், கல்வி நிலையப் பணியாளர்கள் போன்றவர்களின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-50)

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவர் அவர்களே, அட்டைகளைத் தருவதோடு, மாணவர்களுடைய சட்டையிலேயே ஒரு அடையாளத்தையும் குத்திக்கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா? மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட இத்தகைய யோசனையை அளித்தார்கள். எனவே அப்படிப்பட்ட முறையில் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், மாணவர்களுக்கு ஒரு அடையாளச் சின்னத்தைக் கொடுத்து, அதை அவர்கள் சட்டையில் போட்டுக்கொள்ள வேண்டும் என்று சொல்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** அட்டையை மாற்றுகிறவர்கள் சட்டையில் குத்திக் கொள்வதை மட்டும் மாற்ற மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்க முடியும்? எனவே இருக்கிற முறையின் அடிப்படையில் தவறுகள் நடைபெறும்போது, நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, மாணவர்களுக்கான பயணச் சீட்டுகள் வழங்கப்படும்போது, அவர்களின் புகைப்படம் ஒட்டப்பட்ட அட்டைகள் அவர்கள் பயிலும் பள்ளி அல்லது கல்லூரிகளில் வழங்கப்பட்டு, மாணவர்கள் பயணம் செய்யும்போதும், அதைக் கண்டிப்பாக எடுத்துச் செல்ல வேண்டும் என்ற விதியைப் புகுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இந்தக் கருத்துக்களையெல்லாம் மனதில் கொண்டுதான் அந்தந்தக் கல்வி நிலையங்களே அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று சொன்னோம். அப்போதுதான் யார் உண்மையான மாணவர்கள் என்பது தெரியவரும். எனவே தற்போது அந்த அடிப்படையில் மாற்றி அமைத்திருக்கிற முறையில் தவறுகள் நடைபெற்றால், அல்லது கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டால், வேறு பல வழிகளைப்பற்றி அரசு ஆராயும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. மாணிக்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தவறாகப் பயன்படுத்துகிறவர்கள்மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எவ்வளவு பேர் மீது அத்தகைய கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன என்று தெரிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் 4,711 பேர் போலி அட்டைகளைப் பயன்படுத்தியதாகத் தகவல் கிடைத்துள்ளது. அவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே 480 மாணவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அட்டைகளை வைத்திருந்தார்கள் என்பதற்காக அவர்கள்மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 716 மாணவர்கள் கல்வி முடிந்த பிறகும் பயணச் சீட்டுகளை வைத்துக்கொண்டு பயன்படுத்தி வந்தார்கள் என்பதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எத்தனை பேர் மீது கிரிமினல் வழக்குகள் போடப்பட்டன என்பதற்கான விவரம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் தரப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## தூத்துக்குடியில் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகப் பிரிவு

*335. வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தூத்துக்குடியில் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகப் பிரிவு ஒன்றைத் தொடங்குவதுபற்றி செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.





திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் தொழில்களைத் துவக்குவதற்கான மூலப் பொருள்கள் கிடைக்கிற காரணத்தால், அங்குள்ள நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்தி, தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஒரு பிரிவைத் தொடங்கினால் இலாபகரமாக அமையும் என்பதைக் கருத்தில் கொண்டு, வருங்காலத்திலாவது அதைக் குறித்து அரசு பரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : டிட்கோ என்றழைக்கப்படும் தொழில் வளர்ச்சிக் கழகம் பொதுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் தொழில்களை நிறுவி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அதை மனதில் கொண்டு கேட்கிறாரா என்று புரியவில்லை. அல்லது சிப்காட் என்கிற தொழில் பேட்டைகளை உருவாக்கி அங்கே அடிப்படை வசதிகளை உருவாக்கிக் கொண்டிருக்கிற அந்த நிறுவனத்தைப்பற்றிக் கேட்கிறாரா என்று தெரியவில்லை. டிட்கோ எனப்படும் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ஏற்கெனவே அங்கே ஸ்பிக் மற்றும் தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் என்ற இரண்டு நிறுவனங்கள் நடந்தப்படுகின்றன. ஸ்பிக் நிறுவனத்திற்கு ரூபாய் ஐந்து கோடி டிட்கோவின் பங்கு மூலதனம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே ஆல்கலி கெமிக்கல்ஸ் நிறுவனத்திற்கு டிட்கோவின் பங்கு மூலதனம் ரூபாய் ஒன்பது கோடியாகும். தூத்துக்குடியில் சிப்காட் மூலமாக ஒரு தொழிற்பேட்டையை உருவாக்க அதற்காகத் தேவைப்படும் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. ஆனால் நில உடைமையாளர்கள் அதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போய் தடை உத்தரவு வாங்கியிருப்பதால், அந்தப் பணி தடைப்பட்டு நிற்கிறது. அதற்குப் பிறகு அங்கே பணிகள் தொடங்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, ஸ்பிக் நிறுவனத்தில் தமிழக அரசின் பங்கு எத்தனை சதவீதம் என்று தெரிவிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, தமிழக அரசின் பங்குத் தொகை 25 சதவீதமாகும்.

## தொழில் எதுவும் இல்லாத மாவட்டங்கள்

*336 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழில் எதுவும் இல்லாத மாவட்டம் என 87 மாவட்டங்களை மத்திய அரசு அகில இந்திய அளவில் அறிவித்திருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவற்றில் தமிழ் நாட்டில் எவையேனும் உள்ளனவா?

(உ) இல்லை எனில், இதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** (அ) ஆம்.

(இ) மற்றும் (உ) பல்வேறு பகுதிகளுக்கிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சரி செய்து பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதே மைய அரசின் முக்கிய குறிக்கோளாகும். மைய அரசின் கொள்கையின் அடிப்படையில் இதற்கு முன்பு 87 மாவட்டங்களை அனைத்திந்திய அளவில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள் இல்லாத மாவட்டங்களாகத் தேர்ந்தெடுத்திருந்தார்கள்.

ஆனால் சமீபத்தில் நாடாளுமன்றத் தொடர்க் கூட்டத்தின்போது, 118 மாவட்டங்களை "ஸீரோ இன்டஸ்ட்ரீஸ் டிஸ்ட்ரிக்ட்" என்ற முறையில் அனைத்திந்திய அளவில் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக, அப்படி அறிவிக்கப்பட்ட 118 மாவட்டங்களில் ஒரு மாவட்டம்கூட தமிழகத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த 87 மாவட்டங்களிலும்கூட ஒரு மாவட்டம்கூட தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, மத்திய அரசால் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறிவிக்கப்பட்ட இரண்டு பட்டியல்களிலும் தமிழகத்தைச் சார்ந்த ஒரு மாவட்டம்கூட இல்லை என்பது மிகவும் வருந்தத் தக்கதாகும். எனவே இதுகுறித்து மத்திய அரசோடு நம் அரசு தொடர்பு கொண்டு, நம் மாநிலத்திலும் அப்படிப்பட்ட மாவட்டங்களைத் தேர்ந்தெடுக்க முயற்சித்ததா? அதற்கு மத்திய அரசு என்ன பதில் சொன்னது?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, சமீபத்தில் மைய அரசு சில பல சலுகைகளை அறிவித்திருக்கிறது. ஏற்கெனவே 15 சதவீத மூலதன மான்யம்—உச்சபட்சமாக ரூ. 15 லட்சம் வரை சப்சிடி கொடுப்பது—என்று தாலுக்காக்களை அடிப்படை யூனிட்களாக வைத்து, இந்திய நாடு முழுவதும் அறிவித்திருந்தார்கள். அப்போது 87 மாவட்டங்களை இந்தியா முழுவதும் தேர்ந்தெடுத்து, அவைகளைப் பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறிவித்தார்கள். இப்போது மீண்டும் 118 மாவட்டங்களை "ஸீரோ இன்டஸ்ட்ரீஸ் டிஸ்ட்ரிக்ட்ஸ்" என்று ஒரு தொழிலும் இல்லாத மாவட்டங்கள் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் தொழில் துவங்குகிறவர்களுக்கு 25 சதவீதம் மான்யமும், ரூ. 25 லட்சம் வரை உச்சபட்ச சப்சிடியும் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த 118 மாவட்டங்களையும் ஏ, பி, சி என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து முதன் முறையாக 25 லட்சம்



ரூபாய் வரை சப்சிடி தரப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஏ பிரிவின்கீழ் தமிழ் நாட்டில் ஒன்றுகூட வரவில்லை. அதாவது 118 மாவட்டங்களில், ரூ. 25 லட்சம் வரை சப்சிடி வாங்கும் திட்டத்தின் அடிப்படையில் தமிழகத்தில் ஒரு மாவட்டம்கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதற்கு அடுத்து 15 லட்சம் ரூபாய் சப்சிடி என்று உச்ச வரம்பு வைத்து, 15 சதவீதம் மான்யம் பெறுவதை 'பி' பிரிவாக அமைத்திருக்கிறார்கள். அதில் எற்கெனவே 33 வட்டங்கள் தமிழ் நாட்டில் இடம் பெற்றிருக்கின்றன. இதை மத்திய அரசுதான் அறிவித்திருக்கிறது. இந்த இரண்டும் இல்லாததை 'கன்செஷனல் பைனான்ஸ் ஏரியா' என்று 'சி' பிரிவாக அமைத்திருக்கிறார்கள். அதாவது இந்த இரண்டுக்கும் உட்படாத பகுதியில் ரூ. 10 லட்சம் வரை உச்சபட்சமான சப்சிடி என்று வைத்திருக்கிறார்கள். அதில் சில மாவட்டங்கள் தமிழ் நாட்டில் இடம் பெற்றிருக்கின்றன. இப்படி மூன்று பிரிவுகளையும் கணக்கில் கொண்டு பார்க்கிறபோது, 'பி' மற்றும் 'சி' பிரிவுகளைப் பொறுத்தவரையில், எற்கெனவே இருந்த சலுகை அப்படியே தொடரப்பட்டிருக்கிறது. 'ஏ' பிரிவைப் பொறுத்தவரையில்—அதாவது ரூ. 25 லட்சம் சப்சிடி பெறுகிற அந்தக் கேட்டகரியைப் பொறுத்தவரையில், தமிழகத்தைச் சேர்ந்த மாவட்டம் எதுவும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதற்கு மத்திய அரசு சொல்லுகிற காரணம் என்னவென்றால், இந்த 118 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற நிலையில், தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஒரு மீடியம் அல்லது மேஜர் இன்டஸ்ட்ரி இல்லாத மாவட்டம் எதுவுமே இல்லை என்பதாகும். ரூபாய் 20 லட்சம் வரையில் சிறு தொழில்கள் என்ற தலைப்பில் வந்து விடுகின்றன. ரூபாய் 20 லட்சத்திற்கு மேல் உள்ள தொழில்களைப் பொறுத்தவரையில் மீடியம் அண்டு மேஜர் இன்டஸ்ட்ரீஸ் என்று கேட்டகரைஸ் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட தொழில்கள் ஒன்றுகூட இல்லாத மாவட்டம் தமிழகத்தில் எங்கேயும் இல்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். நம்மைப் பொறுத்தவரையில். இது ஒரு நியாயமான தேர்வு அல்ல என்கிறோம். காரணம் மாவட்டங்கள் என்று பார்க்கும்போது, ஏரியா அளவில் பார்த்தாலும் சரி, மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தாலும் சரி, வட மாநிலங்களில் உள்ள மாவட்டங்கள் மிகவும் சிறிய மாவட்டங்களாக இருக்கின்றன. குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைப் போன்றே அங்கெல்லாம் இருக்கின்றன.

(முற்பகல் 10-00)

இராமநாதபுரம், மதுரை, திருச்சி. வட ஆற்காடு, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்கள் பெரிய மாவட்டங்கள். மாவட்ட மக்கள் தொகையை வைத்து தனி நபர் வருமானத்தைக் கணக்கிட்டு, அதற்கேற்ப வைத்துக்

கொண்டிருந்தோம். அதற்கிணங்கவில்லை என்றால், பஞ்சாயத்து யூனியன் அளவில் பிளாக்குகள் அடிப்படையில் பின்தங்கிய வட்டங்களை அறிவிக்க வேண்டும் என்று மைய அரசைத் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம்.

முப்பத்திமூன்று தாலுக்காக்களில் சென்ட்ரல் சப்சிடி கொடுப்பதாக ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். அந்த 33 பின்தங்கிய தாலுக்காக்களில் 89 பஞ்சாயத்து யூனியன் பிளாக்குகள் வருகின்றன. அந்த 89 பிளாக்குகளில் 40 பிளாக்குகளில் எந்தவிதமான தொழிலும் இல்லை. புதிதாக 118 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு வந்துள்ள திட்டத்தால், முறையாக தொழில் வளர்ச்சி அடைவதற்கு வழியில்லை. அது சரியாக இருக்காது என்பதால்தான் பிளாக் அளவில் சீரோ இண்டஸ்ட்ரீஸ் பிளாக் என்று எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மைய அரசை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்கள் அதைப் பரிசீலிக்க வேண்டும். பரிசீலிப்பார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** நாலே முக்கால் கோடி மக்கள் தொகை கொண்டுள்ள இந்த மாநிலம் 16 மாவட்டங்களைக் கொண்டதாக உள்ளது. ஐந்து கோடி மக்களைக் கொண்ட பீகார் மாநிலம் 33 மாவட்டங்களைக் கொண்டதாக உள்ளது. ஆகவே நம்முடைய அரசு பிளாக் லெவலில் கருத வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்துவதைவிட பெரிய மாவட்டங்களில் தொழிலே இல்லாத தாலுக்காக்களை ஒன்று சேர்த்து புதிய மாவட்டமாக உருவாக்கி அந்த சலுகையைப் பெற இந்த அரசு வேண்டிய நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** இதனால் பல்வேறு நிர்வாகச் சிக்கல்களும், பொதுமக்களுக்கு இடையூறுகளும் ஏற்படும். உதாரணத்திற்கு இராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அதை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று ஏற்கெனவே புரபோசல் இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்திலே திருவாடானையில் ஆரம்பித்து தொடர்ச்சியாகத் தொழிலே இல்லாத தாலுக்கா என்று ஒரு தாலுக்காகூட இல்லை. திருவாடானையில் ஆரம்பித்து திருநெல்வேலி எல்லை வரை சென்றால், அப்படி ஒன்றிரண்டு தாலுக்காக்கள் இருக்கலாம். ஆகவே கிழக்கு இராமநாதபுரத்தில் ஒரு தாலுக்காவையும், மேற்கு இராமநாதபுரத்தில் ஒரு தாலுக்காவையும், திருச்சியில் உள்ள ஒரு தாலுக்காவையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு மாவட்டமாக ஆக்கினால், அதனால் மாவட்ட நிர்வாகத்தில் இடையூறுகள் வரும். அது நிர்வாக ரீதியாகச் சரியாக இருக்காது. ஆகவேதான் பிளாக் அளவில் என்று கோருகிறோம். உத்திரப் பிரதேசம், பீகார், இமாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன என்று கருதினால்,



அந்தப் பகுதிகளில் அதிகமான பிளாக்குகளைப் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கலாம். தமிழ் நாட்டில் பத்து பிளாக்குகள் என்று அறிவிக்கும்போது, இமாச்சலப் பிரதேசத்தில் 20 பிளாக்குகள் என்று அறிவிக்கட்டும். ஆகவேதான் பிளாக்குகளை மையமாகக் கொண்டு தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் இதற்காக புது மாவட்டங்களை ஏற்படுத்தினால், நிர்வாக ரீதியாக கஷ்டம் வருகிறது. இது நடைமுறை சாத்தியமல்ல.

**திரு. ப. மாணிக்கம்:** நம்முடைய மாநில அரசு பிளாக்குகளை அடிப்படையாகக் கொண்டு பின்தங்கிய நிலைமையை மதிப்பிட வேண்டும் என்று கோருகிறது. இது மட்டுமே போதுமானது என்று அரசு கருதுகிறதா? அப்படியில்லாமல் குறிப்பிட்ட பிராந்தியத்தில் இயற்கை வளம் குறைவாக இருப்பதை ஆதாரமாகக் கொண்டு ஒரு புதிய அடிப்படையை உருவாக்க மத்திய அரசிடம் மாநில அரசு வாதாடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, பதில் கொஞ்சம் நீண்டு கொண்டே போவதற்காக பொருத்தருள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கொள்கை பற்றிய பிரச்சினையாக இருப்பதால், கேள்வி சுருக்கமாக இருந்தாலும், பதில் நீளமாக இருக்கிறது. ஏற்கெனவே 118 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்ததுகூட, மாநில அரசினுடைய கருத்திற்கேற்ப எந்தெந்த மாவட்டங்களில் தொழில்கள் இருக்கின்றன என்ற கணக்கை நம்மிடத்திலே பெற்று, தனி நபர் வருமானம் எங்கே அதிகமாக இருக்கிறது, எங்கே இயற்கை வளங்கள் இருக்கின்றன என்ற கணக்கையெல்லாம் நம்மிடமிருந்து பெற்று அதன் அடிப்படையில் ஆய்வு செய்து முடிவை மேற்கொள்ளவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நூற்றுப்பதினெட்டு மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை நாடாளுமன்றத்தில் மைய அமைச்சர் திரு. திவாரி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக சிவராமன் கமிட்டி என்ற தனி நபர் குழு நாடு முழுவதும் உள்ள பின்தங்கிய நிலைமைகளை ஆய்ந்து பரிந்துரை செய்திருக்கிறது. அது மைய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதன் அடிப்படையிலே இப்போது இந்த மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்று மாண்புமிகு மைய அமைச்சர் திரு. திவாரி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். 'அந்தக் குழுவைக்கூட நாங்கள் போடவில்லை. ஜனதா ஆட்சிக் காலத்திலே போட்டார்கள்' என்று தெரிவித்தார்கள். அந்தச் சமயத்தில் ஜனதா ஆட்சியினர் போட்ட எத்தனையோ குழுக்களைக் கலைத்ததைப் போல, இதையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று

சொன்னோம். இப்படி 118 மாவட்டங்களைத் தேர்ந்தெடுக்கிறபோது, பல்வேறு விதமான பிரச்சினைகளைக் கவனத்திலே கொண்டு தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்குப் பதிலாக 20 இலட்சம் ரூபாய்க்கு மேல் உள்ள தொழில் என்ற கணக்கை வைத்துக்கொண்டு தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது, தமிழ் நாடு நிச்சயமாகப் பாதிக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் ஏற்கெனவே பரவலாகத் தொழில்கள் வந்துவிட்டன என்பதற்காக தண்டனை கொடுப்பதைப் போல இருக்கிறது இந்தப் புதிய திட்டம். ஆகவே இது நியாயமான ஒன்று அல்ல. புதிய திட்டங்கள் மட்டுமல்லாமல், விரிவுபடுத்தக்கூடிய திட்டங்கள்கூட இந்த 118 மாவட்டங்களுக்குத் தான் போக வேண்டும் என்று விரும்புகிறார்கள். உதாரணத்திற்கு இந்தியா ரேடியேட்டர்ஸ் விரிவுபடுத்துவதற்காக அனுமதி கேட்டிருக்கிறார்கள். அதற்கு டில்லியில் இருந்து கடிதம் எழுதியிருக்கிறார்கள், அந்தக் கடிதத்தை என்னிடம் காட்டினார்கள். அதில் அந்த 118 மாவட்டங்களுக்குள் போனால்தான், எக்ஸ்பான்ஷனுக்கும் அனுமதி கொடுக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். லாபத்திலே நடைபெறுகிற தொழில்கூட காலப் போக்கிலே சில மாறுதல்களைச் செய்யவில்லையென்றால், மற்றவர்களோடு போட்டி போடுகிறபோது, நஷ்டம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். பிறகு லாபமாக இயங்கும் தொழில் கூட தொடர்ந்து லாபம் பெற முடியாது. எனவே ஏற்கெனவே உள்ள முறை தவறான முறையாகும், இதையெல்லாம் கருத்தில்கொண்டு மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். நாடாளுமன்றத்திலே தொழில் மானியத்தின்மீது பேசும்போது, இதைப்பற்றி பல்வேறு உறுப்பினர்கள் வற்புறுத்திப் பேசியிருக்கிறார்கள். ஆகவே தொடர்ந்து பிளாக்கை பேசிக் யூனிட்டாக வைத்துத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமைப் பிரச்சினை.

**சத்துணவுப் பொறுப்பாளர்களிடம் கணக்கை ஒப்படைப்பது குறித்து 7—2—1983 அன்று மேலவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூற்று குறித்து.**

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 12—2—1983 அன்று மேலவையில் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்.

### சத்துணவுப் பொறுப்பாளர்களிடம் கணக்கை ஒப்படைப்பது குறித்து 7—2—1983 அன்று மேலவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூற்று குறித்து

 (மாண்புமிகு மேலவைத் தலைவர்)

7—2—1983 ஆம் தேதியன்று இந்த அவையில் உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் பேசும்போது, சத்துணவுப் பொறுப்பாளர்களிடம் கணக்கை ஒப்படைப்பது குறித்து அவர், 'பொதுவாக அரசிடமிருந்து அல்லது அதிகாரிகளிடமிருந்து செல்கிற ஆர்டர்கள், உத்தரவுகள் தெளிவாக இல்லை' என்று தாம் பேசியதற்கு, முதல் அமைச்சர் அவர்கள், "அரசாங்கத்திடமிருந்து உத்தரவுகள் தெளிவான முறையிலே இருக்கின்றன" என்றும் "உத்தரவுகள் சரியில்லை என்று சொல்லுவது சரியில்லை" என்றும் கூறியதைக் குறிப்பிட்டு, தாம் கூறிய கூற்று சரி என்பதற்கு தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அலுவலர் 1—2—1983 ஆம் தேதியன்று பள்ளிக் கல்வி ஆய்வாளர்களுக்கு அனுப்பிய கடிதத்தைச் சுட்டிக்காட்டி, அதிலே 'முழு பொறுப்பையும் ஒப்படைக்கத்தக்க விளக்கமான அறிவுரைகள் பின்னர் அறிவிக்கப்படும். அதுவரை தலைமை ஆசிரியரே பொறுப்பினை வகித்துவர வேண்டும்' என்றுள்ள வாசகத்தைச் சுட்டிக்காட்டி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு ஒரு தவறான தகவலைத் தந்துள்ளார் எனக் குற்றஞ்சாட்டினார்.

இதுகுறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எனக்கு அனுப்பிய விளக்கத்திலுள்ள பிரதான பகுதியில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார் :—

". . . சிறுபான்மையோர், தனியார் பள்ளிகள் நீங்கலாக பிற அரசு, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்குத் தேர்வு செய்யப்பட்ட அமைப்பாளர்களுக்கு நியமன ஆணைகள் வழங்கும்படி, 22—1—1983 முதல் அரசு ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் உத்தரவு பிறப்பித்தது. இதன்படி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 1—2—1983-ல் துவங்கி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைப்பாளர்களை நியமனம் செய்தனர் . . ."

". . . சத்துணவு மைய அமைப்பாளர்கள் நியமனம் விரைவில் செய்யப்பட வேண்டுமென்று ஆசிரியர்கள் சங்கங்கள் அரசை வலியுறுத்தி வந்ததாலும், "விரைவில் நியமிக்கப்படவில்லையென்றால் போராட்டத்தில் இறங்குவோம்' என்று அவர்கள் தெரிவித்ததாலும் அமைப்பாளர்களை நியமிப்பதற்காக ஆணைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு டெலக்ஸ் மூலம் தெரிவிக்கப் பட்டன. அதன்படி, பணியில் சேருவதற்கான முறையான நியமன உத்திரவுகளை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு வழங்கினர். பொதுவாக, அரசுப் பணியாளர்களுக்கு நியமன உத்தரவுகள் வழங்கப்பட்டவுடன் அவர்கள் நியமிக்கப்பட்ட இடத்திற்குச் சென்றதும், அதுவரை அப்பணியை வகித்து வந்தவர்கள் புதிதாக வந்தவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைப்பார்கள். சத்துணவு மைய அமைப்பாளர்

களிடம் நியமன ஆணைகள் இருந்தன. அவர்கள் பணியில் சேர்ந்து செயல்பட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அரசு ஆணைகள் இருந்தன. இவைகளைத்தான் உத்தரவுகள் இருந்தன என குறிப்பிட்டேன் ...”

முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ள விளக்கத்திலிருந்து அரசிடமிருந்து சென்ற உத்தரவுகள் தெளிவான முறையில் இருந்தன என்றுதான் குறிப்பிட்டுள்ளார் என்பது புலனாகும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள், தஞ்சாவூர் முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதம் ஒன்றைச் சுட்டிக்காட்டி, அதில் உத்தரவுகள் தெளிவாக இல்லையென்று கூறியுள்ளார்.

திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சுட்டிக்காட்டிய தஞ்சாவூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் உத்தரவில் கூட, “ . . . முதல் அமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் செயல்படும் ஒன்றியப் பள்ளிகள் அனைத்திற்கும் மையப் பொறுப்பாளர்கள் 1—2—1983 அன்று சத்துணவு மையங்களில் பொறுப்பேற்க உள்ளார்கள்” எனப் பார்வையில் காணும் தந்திச் செய்தியில் மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

“அமைப்பாளர்கள் பணியேற்க வரும்போது அவர்களைப் பணியேற்க தலைமை ஆசிரியர்கள் அனுமதிக்கவேண்டுமென்றும், உணவு தயாரிக்கும் பணியை மேற்பார்வையிடல், உணவு அளித்தல ஆகியவற்றைக் கண்காணிக்க அவர்களை அனுமதிக்க வேண்டும்” என்றும் கல்வி அதிகாரி தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, முதல் அமைச்சர் அவர்கள் அரசு ஆணை குறித்து எந்தவிதமான தவறான தகவலையும் அவைக்கு அளிக்கவில்லை என்று நான் கருதுகிறேன். இதில் உரிமைப் பிரச்சினை எதுவும் இல்லை என்றும் தீர்ப்பளிக்கிறேன்.

(முற்பகல் 10-10)

3. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் அவர்கள் தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்—பல்வேறு விதித் துறைகள் சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



(2) பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்-பல்வேறு விதித்துறைகள் சட்ட முன்வடிவினை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1982) மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1983) பிரதியினை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

4. மேலவை விதி 82-ன்படி அமைச்சரின் விளக்க உரை.

கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குக் கொண்டுவருவது தொடர்பாக ஆந்திர மாநில அரசுடன் ஏற்பட்ட உடன்படிக்கை குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விதி 82-ன்கீழ் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை நகரத்திற்குக் குடிநீர் கொண்டுவருவது தொடர்பாகவும், ஆந்திர மாநில அரசுடன் ஏற்பட்ட உடன்படிக்கை குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாக ஒரு விவரமான அறிக்கை @ இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கை குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கை மீது ஒரு விவாதம் தேவைப்படுகிறது. காரணம் அரசு சார்பிலே வைக்கின்ற அறிக்கை ஒரு விவாதப்பொருளாக இல்லாமல் இருந்தால் விவாதம் தேவையில்லை. ஆனால் . . .

---

@ 449—464 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு குறிப்பைச் சொல்லிவிட்டால், உபயோகமாக இருக்கும் என நினைக்கிறேன். விதி 82-ன்கீழ் அறிக்கை கொடுக்க இருக்கின்றார்கள். அந்த விதி 82-ன்படி வைக்கின்ற எந்த அறிக்கையின் மீதும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் விவாதம் அனுமதிக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் அதற்கென்று தனியாக முறைகள், வழிகள் இருக்கின்றன. அதிலே முயலலாம். அது இப்போது விவாதத்திற்குரியதாக இல்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, விதி 82-ன்கீழ் வைக்கப்படுகின்ற அறிக்கை ஒரு விவாதத்திற்குரிய பொருளுடையதாக இருக்கக்கூடாது என்பதுதான் விதி. ஆகவே விவாதத்திற்குரிய பொருளாகவும், இதற்கு முந்திய அரசுகளைக் கண்டிக்கின்ற நிலையிலும், தவறான செய்திகளைத் தாக்கூடிய அறிக்கையாக இருப்பதால் இதை விவாதிக்க அனுமதிப்பதானால், அதைப்பற்றி விவாதிப்பதற்குத் தயாராக இருக்கிறோம், அப்படியில்லாமல் மறுப்பதானால், மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களின் தீர்ப்புக்கு அல்ல, அந்த அறிக்கையைக் கண்டித்து வெளிநடப்பு செய்கிறோம்.

(திரு. ம. சங்கரலிங்கம் மற்றும் தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்ய எழுந்தனர்)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது அரசாங்கம் எதிர்க் கட்சிக்கான பிரச்சினையல்ல. இது ஒரு விதிமுறைப் பிரச்சினை. இந்த விதி 82-ன்கீழ் வைக்கப்படுகின்ற அறிக்கைமீது எந்தக் காரணத்தை முன்னிட்டும் விவாதம் அனுமதிக்கக்கூடாது என்று இருக்கிறது. ஆனால் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்றபடி, விவாதத்திற்கு உரியதாக ஆக்கப்பட்டு விட்டால், அதற்கு வேறு வழிமுறைகள் இருக்கின்றன. அந்த முறையிலே முயன்றால், அதை விவாதத்திற்குக் கொண்டு வரலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, விவாதத்திற்குரிய பொருளாக ஆக்கப்பட்டுவிட்டதால், நாங்கள் விவாதம் வேண்டும் என்று சொல்வதால், இப்போதே விவாதத்திற்கு நேரம், நாள் எல்லாம் குறிப்பிடுவது நல்லது. அதைத்தான் நான் கேட்கிறேன்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அதைப்பற்றி இப்போதே எப்படிச் சொல்வது? விதி 82-ன் கீழ் சொல்லியிருப்பது. 'பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப்பற்றி, தலைவரின் இசைவினைப் பெற்று, அமைச்சர் அறிக்கை ஒன்றை வெளியிடலாம்; ஆனால், அவ்வறிக்கையின் மீது அப்போது எவ்வித வினாவும் எழுப்பப்படலாகாது." திருப்பிச் சொல்கிறேன். நாம் இந்த விதியைத்தான் இப்போது கடைப்பிடிக்க முடியும். அதற்கு மேலே முறை என்ன என்பதை நீங்கள்தான் பேசிக்கொள்ள வேண்டும். பல முறைகள் இருக்கின்றன. அதைப்பற்றி நான் சொல்ல முடியாது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, விதியைப் பொறுத்த வரையிலே, மிகத் தெளிவாக இருக்கின்றது. ஒரு அறிக்கை இந்த விதியின் கீழ் வைக்கும்போது, வினா எழுப்பக்கூடாது என்று இருக்கிறது. அப்படி இருக்கின்ற ஒரு விதியைத் துணையாகக் கொண்டு ஒரு சக்தியைத் தடுக்க அரசியலைப் பண்ணுகின்ற அறிக்கையை இந்த அரசு அந்த விதிக்குள்ளே ஒளிந்து கொண்டு சமர்ப்பிப்பது கண்டிக்கத்தக்கது என்று நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(திரு. ம. சங்கரலிங்கம் மற்றும் தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மேலவைத் தலைவா அவர்களே. இந்த 82-வது விதியின்கீழ் இந்த அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த அவையிலே நாங்கள் கேட்பது, அரசு ஒப்புக்கொண்டதுகூட. கிருஷ்ணா நதிநீர் பற்றிய ஒப்பந்தத்தின் நகலை இங்கே வைக்கப்படுவதற்குத்தான். அதைத்தான் நாங்கள் கேட்டோம். ஆனால் அரசாங்கம் அந்த ஒப்பந்தத்தை இங்கே வைக்கவில்லை. அதற்கு மாறாக ஒரு அறிக்கை தருகிறது. அந்த அறிக்கையிலே 1831 ஆம் ஆண்டிலேயிருந்து பல்வேறு நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையைத் தருகிறது. அதிலே நாங்கள் கேள்வி கேட்க முடியாது, அது 82 வது விதியின் கீழ் வைக்கப்படும்போது. அதை பற்றி வினா எழுப்பவோ விவாதிக்கவோ முடியாது. ஆகவே அரசாங்கம் என்ன கொடுக்கிறதோ அதை . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன். 82வது விதியின் கீழ் அறிக்கை வைக்கலாம். அறிக்கை வைக்கின்றபோது, அதன் பேரிலே வினா எழுப்புவதோ விவாதமோ நடத்தக் கூடாது என்று இருக்கிறது. இந்தப் பொருள்பற்றி விவாதம் வேண்டும் என்று கருதினால், அதற்கு என்று தனி விதிமுறைகள் இருக்கின்றன. அதன் கீழ் விவாதிக்க வேண்டும் என்று

நிர்மானம் கொண்டுவந்து, அதை அலுவல் ஆய்வுக் குழுவிலே வைத்து அதற்குப் பிறகு முடிவெடுத்து, அதற்கு நாள் சொல்கின்றபோது, அந்த நாளில் விவாதிக்கலாமே தவிர, இப்போதே விவாதிக்க வேண்டும் என்று சொல்வது சரியாக இருக்காது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதை யாரும் மறுக்கவில்லை. இந்த விதியின்கீழ் அப்படி விவாதம் எழுப்ப முடியாது. ஆனால் அதை அணுகுகின்ற முறையைப் பற்றித்தான் இப்போது பிரச்சினையே தவிர, அதிலே வேறு ஆட்சேபனை ஒன்றும் கிடையாது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் சொன்னது விதி 82 இன் கீழ் விவாதிக்க முடியாது என்பது தான். அதற்கு என்று தனி விதிமுறைகள் இருக்கின்றன. அந்தத் தனி விதிகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று திரும்பத் திரும்பச் சொன்னதற்குக் காரணம் அதுதான். அதை வைத்து விவாதிக்க வேண்டுமென்றால், அதற்கு அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி, ஒரு நாள் அல்லது ஒரு மணி நேரம் அல்லது ஒரு அரை மணி நேரம் விவாதம் வேண்டும் என்பதைப்பற்றி முடிவுசெய்து விவாதிக்கலாமே தவிர, வேறல்ல. இப்போது விவாதிக்க முடியாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, நான் இதில் விவாதத்திற்கு வரவில்லை. (I am not taking up this subject.) விதியைப்பற்றித் தான் கேட்கிறேன். இங்கே நாங்கள் கேட்டது 'அக்ரிமெண்ட்' தான். அதைத்தான் கேட்டோம். விதி 82-லே.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஏற்கெனவே தெரிந்த ஒன்றைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு நேரம் எடுக்கின்றார்கள். நாங்கள் இரண்டு பேர்களும் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அணுகுமுறையிலே தான் வித்தியாசம். இந்த விதியின்கீழ் விவாதம் வேண்டாம். வேறு ஒரு விதிமுறையை அணுகி அதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று சொல்லி ஆயிற்று. அதை நீங்கள் ஒத்துக்கொள்கின்றீர்களா இல்லையா என்று சொல்லலாமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அதற்கு மேலும் திரும்பத் திரும்ப விவாதம் செய்தால், எப்படி என்று கேட்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** நான் கிருஷ்ணா நதி நீரைப்பற்றி இப்போது விவாதம் கேட்கவில்லை. நான் கேட்கிறது எல்லாம் இதுதான். இந்த 82 வது விதியின்கீழ் அரசாங்கம் ஒரு அறிக்கை கொடுக்கிறது. முன்னால் நாங்கள் கேட்ட அந்த அடிப்படையிலேதான் அது வந்திருக்கின்றது.



அரசாங்கம் அந்த விதியைப் பயன்படுத்துகிறது. அப்போது நாங்கள் அந்த ஒப்பந்தத்தின் நகலை வைக்க முடியுமா என்று கேட்டோம். அதற்கு அரசாங்கம் ஒப்புக்கொண்டு 'வைக்கும்' என்று சொன்னார்கள். ஆனால் அப்படி வைக்கவில்லை. அப்படி அரசு வைக்காமல் 82-வது விதியைப் பயன்படுத்துகின்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது. மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள், அலுவல் ஆய்வுக்குழுவிலே இதை நிர்மானிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அலுவல் ஆய்வுக் குழுவிலே வைத்துத் தீர்மானிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. வேறு வழிமுறைகள் இருக்கின்றன என்றுதான் சொன்னேன். அந்த முறையிலே கொண்டுவரலாம் என்று சொன்னேன். அலுவல் ஆய்வுக் குழுபற்றி நான் சொல்லவில்லை. வழிமுறையை விதியாகவே நான் சொல்லிவிட முடியாது. அதனாலேதான் சொன்னேன். இரண்டு பேரும் பேசி முடிவு செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இரண்டு நாட்கள்தான் அவை நடக்க இருக்கிறது. ஆகவே அதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறது. இப்போது இந்த 82 வது விதியின்கீழ் அதை வைத்திருப்பதால், அதைப்பற்றி மேலும் விவாதிக்க முடியாது. அதை 82-வது விதியின்கீழ் கொண்டுவந்திருப்பது தவறு. அப்படி வாய்ப்பு இல்லாத சூழ்நிலையிலே இந்த நதிநீர் ஒப்பந்தம்பற்றி வேறு விதி எதையும் பயன்படுத்திக்கொள்ளத் தயாராக இல்லாத சூழ்நிலையில், இந்த நதிநீர் ஒப்பந்த அறிக்கையிலே கட்டளைக் கால்வாய் பற்றியும் அது தொடர்பாக ஒரு வார்த்தையும் குறிப்பிடாத சூழ்நிலையிலும், அவர்களுக்குச் சாதகமாக மட்டும் ஒரு அறிக்கையை வைத்திருக்கின்ற சூழ்நிலையிலும், அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டு விவாதம் இல்லாமல் இந்த அவையிலே இருப்பதற்கு மனம் ஒத்துக்கொள்ளவில்லை. ஆகவே வெளிநடப்பு செய்கிறோம்.

(திரு. க. இராமமூர்த்தி அவர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

**திரு. ப. மாணிக்கம் :** இந்த அவையில் இப்படிப்பட்ட ஒப்பந்தத்தைப் பற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பே அளிக்காத நிலைமையில் விதி 82-ன் கீழ் இதைச் சமர்ப்பித்திருப்பது முறையற்றது என்று கருதி, என் ஆட்சேபணையைத் தெரிவித்துக்கொண்டு, வெளிநடப்பு செய்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களுக்கு ஒரு வார்த்தை. இங்கே திரும்ப வாருங்கள், சொல்கிறேன். உறுப்பினர் அவர்கள் தவறான முறையில் சொல்கின்றார்கள். 'வாய்ப்பு அளிக்காத முறையில்' என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்க முடியும்?

(மாண்புமிகு மேலவைத் தலைவர்) [1983 ஏப்ரல் 27

நான் சொன்ன பிறகும், நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன பிறகும், 'வாய்ப்பு அளிக்காத முறையில்' என்று சொல்கின்றார்கள். 'இன்றைக்கு அளிக்காத முறையில்' என்று சொன்னால், அதற்கு விதியில்லை என்று சொல்லி ஆயிற்று. வாய்ப்பே அளிக்கமாட்டோம் என்று யாரும் சொல்லவில்லை. அப்படி இருக்கும்போது இந்த மாதிரி அனுபவம் உள்ளவர்களே அப்படிச் சொன்னால், நாங்கள் என்ன பண்ணுகிறது?

**திரு. ப. மாணிக்கம்:** நாளை அவைக் கூட்டம் முடிய இருக்கிறது. அதனாலேதான் வாய்ப்பு இல்லை என்று சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இங்கே ஒரு விளக்கம் தர மீண்டும் மீண்டும் சொல்கிறேன். 82 வது விதியின் கீழ் அறிக்கை அளிக்கப்படுகின்றது. இந்தப் பொருளின் மீது பேசுவதற்கு வேறு ஒரு பிரிவைக் காண்பித்து அந்தப் பிரிவின் அடிப்படையிலே ஒரு விவாதம்—ஒரு நாள் விவாதம், ஒரு மணி அல்லது அரை மணி நேர விவாதம் கேட்க உரிமையுண்டு. அதைப்பற்றி அலுவல் ஆய்வுக் குழு முடிவு செய்து ஒரு நாளில் வைக்கலாம். அவர்கள் எந்த ஒரு விதியின்கீழ் ஏற்றுக்கொள்ளவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொல்லவில்லை. ஏதாவது ஒரு விதியைச் சொல்லியிருந்தால் அல்லவா நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்வதற்கு. அதற்கு என்று ஒரு விதி இருக்கின்றது. ஆனால் விதி 82-ன்கீழ் விவாதம் இல்லை. வேறு விதி இருக்கின்றது. அதன்கீழ் ஒரு நாள் விவாதம் வேண்டுமென்று சொன்னால், அந்த விதியின் அடிப்படையிலே கேட்டால், அதைப்பற்றி அலுவல் ஆய்வுக் குழு முடிவு செய்யலாம். அதற்கு நேரம் ஒதுக்க தலைவர் அவர்கள் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டலாம்.

(முற்பகல் 10-20)

Thiru J. M. MIAKHAN: Mr. Chairman, Sir, we have not been given an opportunity to discuss this matter. The Hon. Minister himself could have found a way out for this. We do not know under what rule a discussion can be had.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லுகிறேன். முடிவிற்கு வாருங்கள். நான் முடிவைச் சொன்னபிறகும் விவாதமாக்கினால் எப்படி?

Thiru J. M. MIAKHAN: The Hon. Minister could have used his discretion and arranged for a discussion. Therefore, I am also joining the other hon. Members in the walk-out.

**(Thiru J. M. Miakhan staged a walk-out)**



1983 ஏப்ரல் 27]

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** விதியிலே சாதகமாக இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மீண்டும் நான் ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். விவாதிக்க வாய்ப்பு அளிக்கவில்லை என்று சொல்லுவது தவறு. வாய்ப்பு அளிக்காமல் இல்லை. விவாதிக்க வாய்ப்பு இருக்கிறது. வாய்ப்பைக் கேட்க வேண்டிய முறையில் கேட்டு, கேட்க வேண்டிய விதியின்கீழ் கேட்டு. விவாதிக்க வேண்டிய நேரத்தில் விவாதிக்க வேண்டுமென்று மீண்டும் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நானும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் இந்தப் பிரச்சினையின்மீது விவாதமே இல்லை என்று சொல்லவில்லை. அவர்கள் சொல்வது, 82 ஆம் விதியின்கீழ் அறிக்கை வைக்கப்பட்டிருந்தால், அது விவாதத்திற்கு உரியதாக வருவது வழக்கமில்லை, ஆனால் விவாதத்திற்கு உரியதாகப் பண்ணியிருக்கிறார்கள் என்பதுதான். அதையும் கூட ஒப்புக்கொண்டுதான், பின்னால் விவாதிக்கலாமென்று சொல்லுகிறோம். இதிலே மாறுபாடு கிடையாது. அதற்குப் பிறகு அவர்கள் வெளி நடப்பு செய்தால், என்ன செய்வது? என்னுடைய நிலையும், அரசின் நிலையும் தெளிவாக இருக்கிறது. விவாதத்திற்கான பிரச்சினையில் அணுகுமுறையில்தான் எதிர்க் கட்சி வேறுபட்டிருக்கிறது. நானும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் விவாதத்தையே அனுமதிக்க முடியாது என்று முற்றுப்புள்ளி வைத்துச் சொல்லவில்லை.

## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**(1) தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்—பல்வேறு விதித் துறைகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1982).**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983ஆம் ஆண்டு, தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்—பல்வேறு விதித்

துறைகள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளபபட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்—பல்வேறு விதித் துறைகள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1982) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் பல்வேறு விதித் துறைகள் சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில், இந்தச் சட்டமுன்வடிவின் நோக்கங்களில் சொல்லியிருக்கிற தமிழ் மொழியின்பால் உள்ள ஆர்வத்தால் அல்லது தமிழ் வளர்ச்சியைப் பாது காக்க அல்லது தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக் காத்திடத் தங்கள் துணிவையும் சான்றாண்மையையும் வெளிப்படுத்துகிற ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதமும் ரூபாய் 150 அல்லது ரூபாய் 10.000 மானியம் அல்லது இரண்டுமே தருவது என்ற வகையிலே ஒரு சலுகையினையும், அவர்கள் குடும்பத்தைச் சார்ந்திருப்பவர்ளுக்கு மாதம் 150 ரூபாய் உதவித் தொகை என்ற சலுகை யினையும், புலமைப் பரிசில் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி 5,000 ரூபாய்க்கு மேற்படாமல் பரிசளிப்பது என்ற திட்டத்தினையும் இந்தச் சட்ட முன்வடிவு மூலமாக அறிமுகப்படுத்தியிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அதை வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் இந்தச் சட்ட முன்வடிவு பக்கம் மூன்றில், இறுதிப் பத்தியில் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. யார் யாருக்கு இதைக் கொடுக் கலாமென்று வரையறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே தமிழ் மொழி யில் ஆன்ற புலமையை அல்லது சிறந்த திறனைப் புலப்படுத்தியுள்ள மாண வர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

---

@ 464-468 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



தமிழ் மொழியில் ஆன்ற புலமையை அல்லது சிறந்த திறனைப் புலப்படுத்திய மாணவர்களுக்கு புலமைப் பரிசிலை வழங்குகின்ற அதே நேரத்தில் தமிழைப பயிற்று மொழியாகக் கொண்டு, தாய் மொழி மூலமாகக் கல்வியைப் பெறு கின்ற மாணவர்களில் சிறந்த மாணவர்களாக வருகின்றவர்களுக்கு அல்லது சிறந்த திறனைக் காண்பிக்கிறவர்களுக்கு இந்தத் திட்டத்தின் பலன்கள் சென்று சேரும் வகையில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் பயிற்று மொழி என்பது தமிழக அரசின் கொள்கை. இந்தச் சட்டமுன்வடிவின் காரண-நோக்க விளக்கத்தில் காந்தி யடிகளின் நிர்மாணத் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டு, அதற்கேற்ப தமிழ் மொழி வளர்ச்சியில் தமிழக அரசு ஆர்வம் காட்டி வருகிறதென்று சொல்லி யிருக்கிறார்கள்.

Thiru A. R. DAMODARAN: On a point of order. Mr. Deputy Chairman, I think there is no quorum in the House.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, காரண-நோக்க விளக்கத் தில் காந்தியடிகளின் நிர்மாணத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தாய் மொழி மூலம் கல்வி பெறும் அந்தக் கருத்தை காந்தியடிகள் ஆணித்தரமாக வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே. நாமும் சில பல கல்லூரிகளில் தமிழை, பயிற்று மொழியாக அறிமுகப்படுத்தியிருக்கிறோம். இன்றைய உண்மையான நிலைமை, தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு கல்வி பெற நாம் எதிர்பார்க்கும் அளவுக்கு மாணவர்கள் வந்து சேரும் நிலைமை இல்லை. ஆங்கில மொழியில் பயிற்றுவிக்கும் பள்ளிகளை நாடும் நிலைமை ஒரு புறம் வேகமாக பொது மக்களிடையேயும், மாணவர்களிடையே யும் வளர்ந்து வருகிறதென்பதைப் பார்த்து வருகிறோம். கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்று மொழியாக அளிக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அதிக அளவிற்கு மாணவர்கள் வராத சூழ்நிலை வேதனைக்குரியது. நான் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படித்தவன். தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு அறிவைப் பெறுவதில், கல்வியைப் பெறுவதில் எந்த விதமான குறையையும் கண்டவர்களல்ல. நாங்கள் ஆங்கிலப் பயிற்று மொழித் திட்டத்திலே இல்லாத நிறைகளை இதிலே கண்டவர்கள். அதில் இல்லாத நிறைகளை தமிழ் பயிற்று மொழித் திட்டத்தில் கண்டு, அதிலே பயிற்சி பெற்று வந்த மாணவர்கள், நாங்கள். ஏன் இப்போது அந்தத் திட்டத் தில் மாணவர்கள் அக்கறை, ஆர்வம் காட்டவில்லை என்பது ஆராய்ச்சிக்குரிய

செய்தியாக இருப்பதால், இந்தச் சட்டமுன்வடிவின் பலன்களை, தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் பயிற்று மொழித் திட்டத்தைச் செயல்படுத்துகிற கல்லூரிகளைப் பொறுத்தவரையில், கலைக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்றுமொழியாகப் புகுத்துவது எளிதானது. அறிவியல், கணிதம், பொறியியல், மருத்துவம் போன்றவற்றிலும் தமிழிலே பயிற்றுவிக்க முடியுமென்று சொல்லி, முன் வருகிற கல்வி நிலையங்களுக்கு, அப்படிச் செய்து காட்ட முடியுமென்று நிரூபித்துக் காட்டுகிறவர்களுக்கு இந்தச் சட்ட முன்வடிவின் பலன்களை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வட மாநிலங்களில் இந்தி மொழியில் காட்டும் ஆர்வம் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது அல்லது வளர்க்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை அறிய வேண்டும், அதை உணர வேண்டும். அங்கே பொறியியல் கல்வியைக்கூட இந்தியிலே போதிக்கும் அளவிற்கு, சொல்லித் தரும் அளவிற்கு அந்த மொழியை வளர்த்திருக்கிறார்கள் என்றால், மிகத் தொன்மையான மொழி, கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ் என்று பெருமைப் பட்டுக்கொள்ளும் மொழி—இதை அறிவியல் மொழியாக வளர்க்க முடியும், உலகம் எங்கும் பரப்ப முடியும் என்று நிரூபித்துள்ள நாம், உயர் கல்வியிலே தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டுவர உரிய திட்டங்களை இந்தச் சட்டமுன்வடிவின் மூலமாக சில திருத்தங்களைக் கொண்டு வந்து, அதன் மூலமாக அவர்களுக்கு ஊக்கம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்

(முற்பகல் 10-30)

கிறேன். ஏனென்றால் ஒருபுறம் தமிழ் பயிற்சி மொழிக்கு நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு ஆதரவில்லாமல் இருக்கிறது. இன்னொரு புறத்திலே ஆங்கிலப் பயிற்று மொழிக்கு ஆர்வம் பெருகியிருக்கிறது. இதைப் பார்த்துக் கொண்டு நம்முடைய அரசு சும்மா இருக்கக் கூடாது. தமிழ் பயிற்று மொழியை ஊக்குவிக்க மேலும் இப்படிப்பட்ட திட்டங்களைச் சேர்க்க வேண்டும். உதவித் தொகை கொடுப்பதை வரவேற்கும் அதே நேரத்தில் தமிழ் ஆர்வத்தில் அதுசம்பந்தமான பணியில் ஈடுபட்டிருக்கிற அறிஞர்கள், தமிழ் மொழிக்காக உயிர் நீத்த தியாகிகள், இவர்களைச் சார்ந்திருக்கின்ற குடும்பத்தினருக்கு அரசு உதவி செய்ய வேண்டும். குறிப்பாக அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்க வேண்டும். வேலைவாய்ப்பு தருவதில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இதற்கான சட்டத் திருத்தங்களை அரசு கொண்டுவர வேண்டும்.



எனவே தமிழ் பயிற்று மொழி வளர வேண்டுமானால், அதற்குத் தேவையான நூல்கள் வெளியிடப்பட வேண்டும். அறிவியல், கணிதவியல், பொறியியல், மருத்துவக் கல்வி போன்ற எந்தக் கல்வியாக இருந்தாலும், எந்த அறிவியல் துறையைச் சார்ந்த கல்வியாக இருந்தாலும், பயிற்சி மொழித் திட்டம் நல்லமுறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்றால், மாணவர்கள் விரும்புகின்ற தமிழ் நூல்கள் வெளியிடப்பட வேண்டும். அப்படிப்பட்ட நூல்களை வெளியிடுகின்ற முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அரசு தக்க பலன் தருகிற வகையில் சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும். பொதுவாகவே தமிழில் நூல்களை எழுதுகின்றபோது, அவைகள் மாணவர்களுக்குப் புரியாத வகையில் அமைந்துவிடுவது அவ்வளவு நல்லதல்ல. நான் தமிழ் பயிற்சி மொழியின் மூலம் என்னுடைய படிப்பைப் படித்தவன் என்கிற அடிப்படையில், தமிழில் சில கடுமையான வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டுள்ளதை நானே அறிவேன். இப்படிப்பட்ட கடுமையான சொற்களைக் கொண்ட தமிழில் படிப்பதை விட ஆங்கிலத்தில் படிக்கலாமே என்கிற ஒரு எண்ணம் மாணவர்கள் மத்தியில் உருவாகிவிடக் கூடாது. அப்படிப்பட்ட நிலையில் நம்முடைய தமிழ் நூல்கள் இருந்துவிடக் கூடாது. சாதாரணமாக நாம் வழக்கில் பயன்படுத்திக்கொண்டிருக்கிற சாதாரண தமிழ் சொற்களைப் பயன்படுத்தி, எளிய தமிழில் நூல்கள் எழுதப்பட வேண்டும். அந்த வகையில் நம்முடைய தமிழ் நூல்கள் வெளியிடப்பட்டால், மாணவர்கள் அனைவரும் தமிழ் பயிற்சி மொழி மூலம் படிக்கின்ற நிலை ஏற்படும். அப்படிப்பட்ட நூல்களை வெளியிடுகின்றவர்களுக்கு, அதற்கான முயற்சியை மேற்கொண்டு புதிய தமிழ் சொற்களைக் கண்டுபிடிக்கின்றவர்களுக்கு உதவும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென்று சொல்லி, தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்—பல்வேறு விதித்துறைகள் சட்ட முன்வடிவை ஆதரித்து அமர்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: திரு. தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்-பல்வேறு விதித் துறைகள் பற்றிய சட்டமுன்வடிவை நான் ஆதரிக்கின்ற அதே நேரத்தில், தமிழக அரசு தமிழ் மொழியின்பால் எவ்வளவு அக்கறை காட்டுகின்றது, தமிழ் அறிஞர்கள்பால் எவ்வளவு அக்கறை காட்டுகின்றது என்பதைத்தான் இந்தச் சட்ட முன்வடிவு வெளிப்படுத்துகின்றது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வரலாற்றில் அந்தக் காலத்தில் தமிழ் மன்னர்கள் இந்த பூமியை ஆண்ட நேரத்தில் தமிழ்ப் புலவர்கள் அவர்களால் பாதுகாக்கப்பட்டார்கள். அல்லது

போற்றப்பட்டார்கள். ஒரு புலவன் சோர்வுற்ற நேரத்தில் மன்னன் ஒருவனுடைய முரசுக் கட்டிலிலே படுத்திருந்த நேரத்தில், எந்தப் பஞ்சப் பாமரி படுத்து உறங்குகிறான் என்று வேகத்தோடு வந்த மன்னன் கேட்க, அவன் புலவன் என்று அறிந்துகொண்ட உடனேயே வெஞ்சாமரம் வீசிக் கொண்டிருந்ததாக நாம் படித்திருக்கின்றோம். மன்னர்கள் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் அந்த வகையில் புலவர்கள் போற்றப்பட்டார்கள். கால ஓட்டத்திலே மீண்டும் அவர்களுடைய நிலை கவனிப்பாரற்றுப் போயிற்று. இப்போது நம்முடைய தமிழக அரசு எப்படி தமிழ்ப் புலவர்களை மன்னர்கள் போற்றி வந்தார்களோ அதே அடிப்படையில் போற்றுகிற முயற்சியில், உதவி செய்கிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. தமிழ் அறிஞர்கள் புலமையிலேயே தங்கள் கவனம் முழுவதையும் செலுத்திக்கொண்டிருந்த நிலை இருந்த காரணத்தாலே, தாங்கள் ஈட்டக்கூடிய பொருளைப்பற்றி மறந்தார்கள். தமிழ் அறிவை தங்களுடைய பொருளாக ஆக்கினார்கள். அப்படிப்பட்ட புலவர்களுக்கு; தமிழ் அறிஞர்களுக்கு, முதிய வயதிலே பாதுகாப்பற்ற நிலையிலிருந்த அவர்களுக்குப் பாதுகாப்பு என்கிற அளவில் உதவித் தொகை அல்லது மானியம் என்று இந்த அரசு வழங்க முன்வந்திருப்பது போற்றி பாராட்டுதற்குரிய மகத்தான செயல்.

சில வரையறைகளை முறைப்படுத்துகிற நிலை என்று வருகிறபோது, தொகை வழங்கப் பெறுபவர் தொடர்ந்து மூன்று திங்கள் கால அளவுக்கு மேல் தமிழ்நாட்டில் இல்லாதபோது, இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகையை அல்லது புலமைப் பரிசிலை அரசு ரத்து செய்யலாம் என்று இருக்கிறது. 'மூன்று மாதங்கள் வெளி மாநிலங்களில்' என்பதற்கு பதில் 'மூன்று மாதங்கள் வெளிநாடுகளில்' என்று மாற்றிக்கொண்டால், பொருத்தமாக இருக்கும். காரணம் வெளிநாடுகளுக்கு இவர்கள் போய் விட்டால். ஒருவேளை இவர்களுக்கு இந்த உதவித் தொகை தேவை இல்லாமல் கூட இருக்கலாம். ஆனால் பக்கத்து மாநிலங்களுக்கு இவர்கள் சென்றிருந்தால் அவசியம் இந்த உதவித் தொகையை நீட்டித்துக் கொடுப்பதற்கான வழிவகை களைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் பயிற்று மொழிபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் சொன்னார். தமிழ் பயிற்று மொழி மூலம் படிக்கிறவர்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்கிற அருமையான எண்ணத்தை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். இந்த எண்ணத்தை வளர்க்க அரசு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார். தமிழ் பயிற்று மொழியைப் பொறுத்தமட்டில். தமிழை நடைமுறைப்படுத்துவதைப் பொறுத்தவரையில், இந்த அரசு வந்ததற்குப்



பிறகு, இந்தக் கால கட்டத்திலே அது எப்படி எப்படி எல்லாம் வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் சிந்தித்துப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டக் கல்லூரியிலே தமிழிலோ ஆங்கிலத்திலோ தேர்வை எழுதலாம் என்கிற நிலையை ஏற்படுத்தியிருக்கும் போது, தமிழில் அதிகமான மாணவர்கள் தேர்வை எழுத முன்வருகிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தாய்மொழியில் மட்டும்தான் எண்ணங்களைத் தெளிவாக எளிதில் சொல்கிற வாய்ப்பு இருக்கிறது. அதேபோல பல்கலைக் கழகங்களிலே பி.எச்.டி. ஆராய்ச்சி செய்கின்ற பலர் இன்றையதினம் தமிழ் பயிற்று மொழி மூலமாகப் படித்துக் கொண்டிருக்கிறார்கள், ஏராளமான பேர் படித்து வந்தும் இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டுகிறபோது, தமிழ் மொழி மூலம் எந்த அளவுக்கு அவர்கள் வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. இது நம்முடைய தாய்மொழிக்கு, தமிழ் மொழிக்கு, உயர்தனிச் செம்மொழிக்கு ஏற்பட்டிருக்கிற வெற்றி என்று சொன் னால், இதிலே இரண்டுவித கருத்துக்கள் ஏற்பட முடியாது. அதேநேரத்தில் ஆங்கில மொழியில் அவர்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள், இவர்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள் என்று அங்கலாய்ப்பவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். திருவிழாவிற்கு குழந்தையை அழைத்துச் செல்கிற போது, குழந்தை கேட்பதை தகப்பன் வாங்கிக் கொடுப்பது. ஆசைப்படுவதை வாங்கிக் கொடுப்பது தவறல்ல. அதுபோல் இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையிலும், ஆசைப்படுகிறதால் இப்படி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், எந்த மொழி மூலம் எண்ணங்களை முழுமையாக வெளிப்படுத்த முடிகிறது என்கிற நிலையைப் பார்க்கிறபோது, அல்லது மாணவர்களுக்கு ஆதரவாக எந்த மொழி இருக்கிறது என்று பார்க்கிறபோது, அல்லது அரசு எந்த மொழிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து உற்சாகப்படுத்துகிறது என்று பார்க்கிற போது, நிச்சயமாக அது நம்முடைய தாய்மொழியான தமிழ்மொழி என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்த வகையில் இன்றைக்கு ஏராளமான மாணவர்கள் தமிழ் பயிற்று மொழி மூலம் கற்க முன்வந்திருப்பதும், அரசு அவர்களுக்காக பல்வேறு சலுகைகளை அளிக்க முன்வந்திருப்பதும் ஒரு மாபெரும் வெற்றிக்கு அறிகுறிகளாகும் என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

ஸ்ரீலங்கா, மருத்துவக் கல்லூரியிலே தமிழ் பயிற்று மொழி மூலம் கற்றுக் கொடுக்கிற ஒரு முயற்சியை மேற்கொண்டு அதில் வளர்ச்சியும் அடைந்திருக் கிறார்கள். மருத்துவ நூல்களை தமிழில் நடைமுறைக்குக் கொண்டு வருவது,

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1983 ஏப்ரல் 27

அல்லது படிப்பது சாத்தியமா, முடியுமா என்றெல்லாம் ஆங்கிலத்திற்குப் பழைய காலத்தில் இருந்த பெருமைகளைப் பற்றியே திரும்பத் திரும்ப இந்தக் கால கட்டத்திலேயும் பேசிக் கொண்டிருப்பது உள்ளபடியே நன்றன்று. அந்தந்த மாநில மொழியை வளர்க்க ஊக்கமளித்து படிப்படியாக அதையே மாநில ஆட்சி மொழியாகக் கொள்வதுதான் நமது தேசப் பிதா அண்ணல் காந்தியடிகள் தமது நிர்மாணத் திட்டத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு வகுத்துத் தந்த கொள்கையாகும். ஆனால் சுதந்திரம் வாங்கித் தந்ததாகக் கூறிக் கொண்டிருப்பவர்கள் அண்ணல் காந்தியடிகள் நமக்கு வகுத்துத் தந்த நிர்மாணத் திட்டத்தையே மறந்து விட்டார்கள். அன்றைக்கு அந்தந்த மாநில மொழியை வளர்க்க ஊக்கமளிக்க வேண்டுமென்று சொல்லி, மக்களிடத்தில் ஆங்கிலத்தில் மூழ்கவிட்டுக் கொண்டிருந்த நிலையை மாற்றிவிட்டு, மாநில ஆட்சி மொழியாக அந்தந்த மாநில மொழி வர வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, பிறகு அதன் அடிப்படையில் மக்களிடத்தில் செல்வாக்குப் பெற்றவர்கள், சுதந்திரம் பெற்ற பிறகு அந்த நிலையை, காந்தி வழிவந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தவர்கள் மறந்து விட்டார்கள்.

ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் மொழியின் தலையாய வெற்றிக்கு வித்திட்டார்கள். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு முதல்படியாக எதைச் செய்ய வேண்டுமோ அதைக் கருத்திலே கொண்டு, தமிழை சாதாரண ஏழையெளிய மக்கள் அறியும் வண்ணம் அதனை அவர்கள் மத்தியில் உணர்த்த உறுதுணையாக இருந்தார்கள். அந்த வகையில் தனித் தமிழை அவர்கள்தான் காப்பாற்றினார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில்தான் தமிழ் வாழ்வும் வளமும் பெற்றது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு எந்த வகையில் எல்லாம் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்களோ அதே முயற்சிகளில் இந்த அரசும் ஈடுபட்டு, தமிழ் மொழிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பது உள்ளபடியே நமக்கெல்லாம் மகிழ்ச்சியை அளிக்கிறது. இது பாராட்டத்தக்க அம்சம்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல், தமிழ் அறிஞர்களுக்கும் புலவர்களுக்கும் உதவி அல்லது மானியம் என்பதோடு மாத்திர மல்லாமல், அவர்கள் எழுதியிருக்கிற நூல்களையும் அரசு வெளியிடுவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். இப்படிப்பட்ட பெரியவர்கள் எழுதியிருக்கும் நூல்களை வெளியிட அச்சகம் அவர்களுக்கு நிச்சயமாகத் துணை வராது. மேலும் இனிமேல் காலங்கடத்தாமல் தமிழ் அறிஞர்கள் எழுதியிருக்கின்ற நூல்களைச் செல்லரிக்க விடாமல் பாதுகாக்க வேண்டும். இப்போது [illegible] அப்படிப்பட்ட நூல்களை அரசு வெளியிடாவிட்டாலும்கூட



1983 ஏப்ரல் 27] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

எதிர்காலத்திலே அவைகளை வெளியிடலாம் என்கிற அடிப்படையில், அனைத்து நூல்களையும் தொகுத்து திரட்டி, அரசின் கைவசம் பாதுகாப்பாக வைக்க வேண்டும். அரசு நூலகத் துறையைப் பொறுத்தவரையில், அவர்கள் எத்தகைய நூல்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று வைத்திருக்கிற வரையறைகளைப் பார்க்கிறபோது, நிச்சயமாக நம்முடைய தமிழ் அறிஞர்கள் ஏதாவது நூல்களை எழுதி வைத்திருந்தால், அந்த நூல்களை வாங்குகின்ற அளவுக்கு அவர்களுடைய விதிமுறைகள் தமிழ் அறிஞர்களுக்குத் துணை புரியாது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழினுடைய பெருமையைக் காக்க, தமிழ் அறிஞர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்த அரசு இந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும். தமிழ் எம்.ஏ. போன்ற பாடங்களைப் படிக்கிறபோது, இப்படிப் பட்ட தமிழ் அறிஞர்களுடைய நூல்களைப் படிப்பதன் வாயிலாக, அறிவை மேலும் விசாலமாக ஆக்குவதற்கான வாய்ப்புகள் உண்டு. அந்த வகையில் தமிழ் அறிஞர்களின் நூல்களை வெளி உலகுக்குக் கொண்டுவருவது என்பது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு நல்லமுறையில் ஆக்கமும் ஊக்கமும் தருவதாக அமையும். தமிழ்ப் பெரியோர்களை இந்த அரசு மதிக்கின்றது என்பதற்கு அறிகுறியாக, தமிழ் மொழியின் வளர்ச்சி கருதி தமிழ் அறிஞர்களை அடிக்கடி அழைத்து அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்பதற்கான ஒரு சூழ்நிலையை அரசு உருவாக்க வேண்டும். தமிழ் மொழி என்பது தமிழ் நாடு என்கிற அளவிலே அடங்கிவிட்ட ஒரு மொழி அன்று.

ஸ்ரீலங்கா, மலேசியா போன்ற நாடுகளில் எல்லாம் விரிந்த அளவில், பரந்த அளவில் நம்முடைய தமிழ் மொழி பேசப்படுகிறது. வெளி நாடுகளில்கூட தமிழ் அறிஞர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். வெளிநாடுகளில் வாழ்கிற தமிழ் அறிஞர்களுக்கு எல்லாம் நாம் உதவித் தொகை வழங்கா விட்டாலும்கூட, அவர்களுடைய பெருமைகளைப்பற்றி உலகம் அறியச் செய்யலாம்.

இன்றைக்கு எழுத்துச் சீர்திருத்தம்பற்றி நாம் பேசுகிறோம். எழுத்துச் சீர்திருத்தம்பற்றி ஆலோசனை நல்க மலேசியாவில், ஸ்ரீலங்காவில் எல்லாம் இதற்காக குழு அமைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட எழுத்துச் சீர்திருத்தம் அமைகிற வேளையில் அது தமிழ் நாடாக இருந்தாலும் சரி, ஸ்ரீலங்கா வானாலும் சரி, அல்லது மலேசியாவானாலும் சரி, நன்றாகத் தமிழ் அறிந்த தமிழ் அறிஞர்களுடைய, தமிழ்ப் பெரியோர்களுடைய உதவியும் ஒத்துழைப்பும் நிச்சயம் நமக்குத் தேவை. அப்போதுதான் எல்லோருக்கும் பொதுவாக அமையும் வகையில் எழுத்துச் சீர்திருத்தம் அமையும்.

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1983 ஏப்ரல் 27

இன்றைக்கு இந்த அரசு தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றினை அமைத்து நம்முடைய எண்ணங்கள் எல்லாம் ஈடேறும் வகையில் தமிழ் அறிஞர்களுடைய ஒத்துழைப்புடன் தமிழ் மொழியை வேகமாக வளர்க்கின்ற முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி வெற்றி பெற்றிருக்கிறது. அடுத்த உலகத் தமிழ் மாநாடு சிங்கப்பூரில் நடைபெற இருக்கிறது. இந்த மாநாடும் செம்மையாக நடைபெற, வெற்றி பெற, தமிழக அரசு உறுதுணையாக இருக்கும். காரணம் அப்படிப்பட்ட ஒரு அடிப்படையில் தமிழுக்காக ஒரு அரசு செய்கிற காரியம் இது.

மிகுந்த மன நெகிழ்ச்சியை ஏற்படுத்துகிற ஒன்றை, என்னைப் போன்றவர்கள் எண்ணி எண்ணிப் பெருமைப்படத் தக்க ஒரு காரியத்தை இன்றைக்கு இந்த அரசு செய்திருக்கிறது. "தமிழ் மொழியின்பால் உள்ள ஆர்வத்தால் அல்லது தமிழ் வளர்ச்சியைப் பாதுகாக்க அல்லது தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக் காக்க தங்கள் துணிவையும் சான்றாண்மையையும் வெளிப்படுத்துபவர்களுக்கு உதவித் தொகை அல்லது மானியம் அல்லது புலமைப் பரிசில் வழங்கவும், தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் வளர்ப்பதில் பேரார்வம் காட்டியவர்களின் குடும்பத்தினருக்கும். தமிழ் மொழிபால் அதிக ஆர்வம் காட்டுவதில் அல்லது தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக் காப்பதில் இன்னுயிர் நீத்தவரின் குடும்பத்தினருக்கும் உதவித் தொகை அல்லது மானியம் வழங்கவும் இச்சட்ட முன்வடிவு வகை செய்கிறது என்றும் இத்திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு சுமார் 50 இலட்சம் ரூபாய் செலவாகுமென்று எதிர்பார்க்கப்

(முற்பகல் 10-40)

படுகிறது" என்றும் சொல்லியிருக்கிறார்கள். உலக மொழிகளிலே தங்கள் தாய் மொழிக்காக உயிரையும் உடலையும் துறந்தவர்கள் இருக்கிறார்கள் என்றால், நாம் வரலாற்றை மறக்க முடியாது. மொகிமிய மொழியில் நாகரீகம் திணிக்கப்பட்டபோது, லவ்ஜான் என்ற பெருமகன் இறப்புக்கு ஆளானான். அதுகூட அவனது விரோதிகள்தான் அவன்மீது பெட்ரோலை ஊற்றி எரித்தார்கள். இங்கே தமிழ் நாட்டில் தங்களது தங்க உடல்மீது அவர்களே பெட்ரோலை ஊற்றி எரித்துக் கொண்டு, தமிழுக்காக வாழ்ந்தோம், தமிழுக்காகச் சாகிறோம் என்று காட்டிய இந்த மண்ணில் தமிழ் மொழிக்காக, தமிழ் அறிஞர்களுக்காக, வாழ்கின்ற அறிஞர்களை வாழ வைப்பதற்காகவும், அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் எடுக்கின்ற செயலாக இது அமைந்திருக்கிறது என்று சொல்லி, இந்தத் தீர்மானத்தை வரவேற்று அமைகிறேன்.



1983 ஏப்ரல் 27]

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு இரண்டாண்டுகளுக்கு முன்பே வந்திருக்க வேண்டும். அந்த வகையில் காலம் கடந்தாவது வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். யார் யாருக்கு இந்த உதவித் தொகை தரப்படும் என்று இந்தச் சட்ட முன்வடிவில் விரிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் ஆறு நிபந்தனைகள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. இந்த நிபந்தனைகளைப் பொறுத்தவரையில், பொருத்தமானதுதான் என்றாலும்கூட, இதிலே தமிழ் வளர்ச்சிக்கு, தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கு பாடுபட்டவர்கள், தமிழ் மொழியைக் காக்க, வளர்க்கப் பாடுபட்டவர்களுக்கு நிச்சயமாக உதவித் தொகை வழங்கப்பட வேண்டும். ஆனால் வரையறுக்கப்பட வேண்டிய ஏனைய காரணங்கள், பொதுவாகக் குறிப்பிடப்பட்டதால், சங்கப் பலகை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சங்கப் பலகையில்கூட தகுதியானவர்களுக்குக் கொடுக்கப் படுவது என்று இருந்ததாகத்தான் வரலாறு. அதே நேரத்தில் தகுதியானவர் களுக்குத் தரப்படுவதில் தவறு நடந்து விடக்கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இன்னொன்று, பொதுவாக இந்தத் தகுதி உள்ளவர்கள் உதவி பெறுவதற்கான நடைமுறைகளைப் பார்க்கும்போது, தியாகி மானியங்களைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களைப் போல இதையும் பூர்த்தி செய்து அத்தாட்சி பெற்று வாங்குவதற்குள் இடுப்பு ஒடிந்து போய்விடும். எதிலும் அவசரமும் வேண்டாம், அதே நேரத்தில் தகுதியுடையவர்களுக்குத் தடையும் வேண்டாம். ஆக அந்த விதிமுறைகளை எளிமைப்படுத்தி உண்மைகளைக் கண்டுபிடிக்க சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால், ரொம்ப கடினமாக இருக்கும். தருவதோ தாமதமாகத் தருகிறோம். அதிலே இன்னும் தாமதம் ஏற்படக்கூடாது. தவறும் ஏற்பட்டுவிடக்கூடாது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு நல்லசிவன் என்ற எழுத்தாளர் நீண்ட நாட்களாக தமிழ் எழுத்திற்காக சேவை செய்யக்கூடியவர் இருந்தார். அவர் தமிழ் நாட்டில் எழுதி வாழ்ந்த எழுத்தாளன் கிடையாது என்று ஒரு கடிதம் எழுதினார். அப்படிப்பட்ட சிறந்த பல எழுத்தாளர்கள் பட்டினியால், வறுமையால் வாடி, இறந்து போனார்கள். பின்னால்தான் அவர்களுக்குப் புகழ் கிடைத்தது. பாரதி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினோம். ஆனால் அவர் வாழ்ந்த காலத்தில் அவர் பட்ட துன்பத்திற்கு அளவே கிடையாது. அப்படி 1940 ஆம் ஆண்டில் புகழ் பெற்ற எழுத்தாளர், தமிழ் நாட்டில் சமூக இலக்கியங்களை உருவாக்குவதில் புகழ்பெற்ற புதுமைப்பித்தன். தமிழுக்காக நன்றாகப் பாடுபட்டவர். அவர் குடும்பம் கடைசி காலத்தில் சந்தியில் நின்றது.

[திரு. ப. மாணிக்கம்] [1983 ஏப்ரல் 27

அவ்வளவு பாராட்டியவர்கள், அவருடைய எழுத்தைப் புகழ்ந்தவர்கள் ஒன்றுகூடி கொஞ்சம் நிதி தந்தார்கள். இப்படியாக கு. ப. ராஜகோபால் குடும்பத்திற்கும் ஏற்பட்டது. அவர்கள் எல்லாம் தமிழ்நாட்டு நல்ல எழுத்தாளர்கள். தமிழ் நாட்டில் நல்ல எழுத்தாளர்கள் பலர் இப்போதும் இருக்கிறார்கள். அவர்களில் பலர் நன்றாக இருக்கிறார்கள். அது அவர்களுடைய திறமை. எனவே, எழுதி வாழ்கிற எழுத்தாளர்கள் இக் குறைவில் தமிழ் சமுதாயம், தமிழ் மக்கள் வாழ வேண்டுமென்று பல்வேறு முறைகளில் தியாகம் செய்தவர்களை உண்மையிலேயே கௌரவிக்க வேண்டும். அவர்களுடைய குடும்பங்கள் தவிக்கின்றன என்பது உண்மை. ஆகவே அவர்கள் உதவி பெறும் வகையில் விதிகளை எளிமைப்படுத்தி, தகுதியுள்ளவர்களுக்கு காலத்தில் கிடைக்க வேண்டுமென்று வலியுறுத்திக்கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு மானியம் வழங்குவதற்கு, அதற்கான அத்தாட்சிகளை வாங்கிக் கொடுப்பதற்குள் அவர்களின் இடுப்பு ஒடிந்து விட்டது. நான்கூட அப்படித்தான் சுதந்திர வீரர் மானியம் வாங்கி வருகிறேன். இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடக்காமல் விதிகள் செய்யும்போது பொறுப்பில் இருப்பவர்கள் தமிழ்மீது அக்கறை கொண்டவர்களாகவும் போட வேண்டும். அந்த அதிகாரிக்கு வருகிற மனுவைப் பார்த்து உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணம் இல்லையென்றால், அரசு நடவடிக்கைகள் கேலிக் குரியதாகிவிடும். நான்கு கேள்வியைக் கேட்டு அந்த விண்ணப்பத்தைத் திருப்பி விட்டால், உண்மையிலேயே தியாகம் செய்தவன்கூட வாங்க முடியாமல் போய்விடும் என்றும், அப்படி ஏற்பட்டுவிடக்கூடாது என்றும் கூறி, இந்த விதிகளை எளிமையாக, திருத்தமாக அமைக்க வேண்டுமென்று சொல்லி, இந்தத் திருத்தங்களை வரவேற்று, அமைகிறேன்.

திரு. வலம்புரி ஜான்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியுடைய, மொழி இலக்கிய வளர்ச்சிக்காக இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை உணர்ச்சி பூர்வமாக உள்ள பூர்வமாக, மகிழ்ச்சியோடு நான் வரவேற்கிறேன்.

இந்த மன்றத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கருத்துக்களைச் சொல்லியிருக்கிற மரியாதைக்குரிய உறுப்பினர்களின் கருத்துக்களை எல்லாம் ஒட்டு மொத்தமாக நினைத்துப் பார்க்கிறபோது, எவ்வளவு அதிகமாக ஆர்வத்தோடு, என் உணர்ச்சியோடு, உற்சாகத்தோடு, மொழிக்கான பிரச்சினைகள் வருகிறபோது குரல் கொடுக்கவேண்டியிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டேன்.



1983 ஏப்ரல் 27] [திரு. வலம்புரி ஜான்]

நான் இந்த மாமன்றத்திற்கு வருவதற்கு முன்பாக, எப்போதும் ஒலிக்காத இலக்கியத்திற்காக ஒருவன் பேசக் கடமைப்பட்டிருக்கிறான் என்பது மாத்திரமல்ல, மொழி என்று சொல்லும்போது சிலபேருக்கு வேண்டுமானால், அது வழியாக இருக்கலாம். ஆனால் இந்த நாட்டு சரித்திரத்தை நேசித்துப் படித்தவர்களுக்கு மொழி என்பது வழியாக இருப்பதற்கு இயலவே இயலாது. மொழி என்பது ஒரு கருவி என்று சொல்வதை அறிவியல் பார்வையில் சொல்கிறார்கள். அவர்கள் அறிவில் ஆழம் இல்லாதவர்கள் என்று கருதுகிறேன். மொழி என்பது வழி அல்ல. அதுவும் இந்த நாட்டு வரலாறு, இந்த நாட்டு சரித்திரம் என்று பார்க்கிறபோது, தமிழ் மொழியைப் பொறுத்தவரையில், அது ஒரு வழியாக இருக்க இயலாது. அது கருத்துக்களைத் தெரிவிக்கிற வாய்க்காலாக, ஊடகமாக இருக்க வேண்டுமேயானால், எப்போதெல்லாம் இந்த மொழி பாதிக்கப்பட்டிருக்கிறதோ, எப்போதெல்லாம் இந்த மொழிக்கு பாதகம் வந்திருக்கிறதோ அப்போதெல்லாம் தமிழருடைய வாழ்க்கை, தமிழருடைய சரித்திரம் தாழ்ந்து கிடக்கிறது, நெருக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். ஆகவே எண்ணங்களை வெளிப்படுத்துகிற ஒரு கருவிதானே, எண்ணங்களை வெளிப்படுத்துகிற வாய்க்கால்தானே, வழிதானே, அதற்காக என் இப்படி அடித்துக் கொள்கிறார்கள் என்று சில சிரஞ்சீவி சிந்தனையாளர்கள் ஆங்காங்கே நின்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் காலம் கருணையோடு கவனிக்கும் என்ற நம்பிக்கை நமக்கு இருந்தாலும், எனக்கு ஏற்படுகிற உணர்வெல்லாம் தமிழ் பயிற்று மொழி என்று பேசுகிறபோது, இந்த மன்றத்தில் இருக்கிற சில மரியாதைக்குரிய உறுப்பினர்கள், ஏதோ தவறுதலாக எதிர் காலத்தைப் பற்றிய ஆய்வே இல்லாமல் உணர்ச்சி வயப்படுகிற காரணத்தால், நான் சில செய்திகளைச் சொல்லவேண்டியவனாகிறேன். நான் அவர்களுக்குத் தெளிவோடும், வணக்கத்தோடும் ஆயிரம் முறை அல்ல, இங்கும், மேடைகளிலும், எழுத்திலும், எங்கெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அப்போ தெல்லாம் உயிரைப் போல நான் இந்தக் கொள்கைகளைக் கருதுகிறேன் என்று சொல்வேன். நாம் தமிழ் பயிற்று மொழி என்று, மொழியைக் காத்தவர்களுக்கெல்லாம் உதவி வழங்க முன்வருவதற்குக் காரணம், ஏதோ தமிழ் ஒரு புராதன மொழி, பண்டைக்கால மொழி, அதிலே இலக்கியம் இருக்கும், நக்கீரனும், நற்பூதனும், நன்னாகனும், நப்பசலையும், ஒக்கூர் மாசாத்தியும், ஒன்சாத்தனும் எழுதிக் காட்டியிருக்கிறார்கள் என்பதற்காக அல்ல, பலபேர் இது தமிழ் மொழியின் சிறப்பு, பழமை என்று பேசி தமிழர்களைத் தொட்டிலில் இட்டு தூங்க வைப்பதற்கான ஒரு முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்

[திரு. வலம்புரி ஜான்] [1983 ஏப்ரல் 27

என்றெல்லாம்கூட பேசுகிறார்கள், கருதுகிறார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன், இந்தச் சட்டமன்றம் எல்லாம் மக்களாட்சி முறையை ஏற்றுக் கொண்டு செயல்படுகிறது. சட்டமன்றத்திற்குள் உறுப்பினர்களாக இருப்பவர்களே தமிழ் பயிற்று மொழியை எதிர்த்துப் பேசுகிறார்கள் என்றால், இந்த மன்றத்தை அவமதிக்கிறார்கள் என்று அர்த்தம். அதற்கு அடிப்படையான காரணம் இந்த நாட்டில் இந்த மொழி தொன்மையான மொழி, பழமையான மொழி, இலக்கண இலக்கியம் செறிந்த மொழி என்பது அல்ல. இந்த நாட்டில் இருக்கிற 80 விழுக்காடு மக்கள் பேசுகிற மொழி இது. ஆகவே அந்த மொழிக்கு ஏற்றம் தரவில்லையென்றால், அந்த மொழிக்கு நீங்கள் வாழ்வு தரவில்லையென்றால், அந்த மொழிக்கு வருகிற வசந்த காலத்தை உங்களில் சிலபேர் ஒத்திப் போட முயற்சி செய்கிறீர்கள் என்றால், நீங்கள் இந்த நாட்டு மக்களை அவமதிக்கிறீர்கள் என்று அர்த்தம். எண்பது விழுக்காடு மக்கள் பேசுகிற மொழிக்கு ஏற்றம் தருவதற்கு அரியாசனம்தான் தரவில்லையென்றால், சரியாசனம் தருவதற்குக்கூட இங்கே இருப்பவர்களுக்கு இதயத்தில் நோவு இருக்கும் என்றால், அவர்கள் இந்த 80 விழுக்காடு மக்களை அவமதிக்கிறார்கள் என்று அர்த்தம். வேறு மாதிரியாக எனக்குச் சொல்ல

(முற்பகல் 10-50)

வரவில்லை. மன்னிக்க வேண்டும். ஆகவே, மீண்டும் சொல்லுகிறேன் தமிழ் மொழியின் ஏற்றம் என்றும், எழுச்சி என்றும் பேசுவதெல்லாம் ஏதோ வார்த்தைகளை வளர்ப்பதற்காக அல்ல, வசீகரமான சொற்றொடர்களாலே வாய்ப்பந்தல் போடுவதற்காக அல்ல. மக்களாட்சி முறையில் மக்களாட்சி மலர் குலுங்க வேண்டும் என்பதில் அடிப்படையான நம்பிக்கை இருந்தால், அந்த நாட்டு மக்கள் பேசுகிற மொழி ஏற்றம் பெற்றாக வேண்டும். இன்றைக்கு இல்லாவிட்டால் நாளை வரலாம். நாளை இல்லாவிட்டாலும் நாளை மறுநாள் வரலாம். நாளை மறுநாள் இல்லை என்றாலும், என்றைக்காவது ஒரு நாள் வானம் விடிந்து போகும். எப்போது பார்த்தாலும் ராத்திரிகள் விடிகின்றன. ஒரு ராத்திரி விடியாவிட்டால்கூட நான் அவர்கள் சொல்வதை நம்புவேன். ஆனால் எல்லா ராத்திரிகளுமே விடிகின்றன. ஆகவே விடியற்காலம் என்பது நிச்சயம் என்று சொல்லி 1965 ஆம் ஆண்டில் நீக்ரோக்களின் எழுச்சிக்காக மார்ட்டின் லூதர் கிங் வடித்துக் கொடுத்த அந்தப் பாடலை நான் இந்த மன்றத்திலே சொல்லுவதில் பெருமை அடைகிறேன். ஆக, நம்முடைய மொழியின் ஏற்றத்திற்காகக் குரல் கொடுக்கிறபோது, "ஏதோ ஒரு வெறியில், ஒரு மயக்கத்தில் இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்" என்றெல்லாம்



1983 ஏப்ரல் 27] [திரு. வலம்புரி ஜான்]

பேசுகிற சான்றோர்களுக்கு நான் பணிவன்போடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கில்லாவிட்டால் நாளை; நாளை இல்லா விட்டால் நாளைக்கு மறுநாள்; நாளைக்கு மறுநாளும் இல்லாவிட்டால் என்றைக்காவது ஒரு நாள் வானம் விடிகிறபோது, இங்கே மக்கள் மொழிதான் கோலோச்சப் போகிறது. இது எல்லா நாடுகளிலும் பார்க்கக் கூடிய வரலாறு. பிரெஞ்சு நாடாக இருந்தாலும் சரி, சோவியத்து சொர்க்க பூமியாக இருந்தாலும் சரி, முதலில் அங்கெல்லாம் வேற்று மொழிகள் ஆதிக்கம் செலுத்தி, ஆட்சி செலுத்திய பிறகு, சொந்த நாட்டு மக்களின் மொழிதான் இறுதியிலே சிங்காசனம் ஏறியிருக்கிறது. எல்லா நாடுகளின் சரித்திரத்திலும் இப்படிப்பட்ட எதிர்ப்பாளர்கள் இருந்தார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், "என்று பிறந்தனள், என்றும் மாறாத இயல்பினள் எங்கள் தாய்", என்று பாடினான் பாரதி. அதற்காக மட்டுமல்ல, இது மக்களுடைய மொழி. ஆகவே, மக்களாட்சித் தத்துவத்தை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக இங்கே தமிழ் மொழி கோலோச்சியாக வேண்டும்.

ஏறத்தாழ, ஒரு திங்களாக, குறிப்பாக ஆங்கிலச் செய்தித் தாள்களில் வருகிற "வாசகர்களின் கடிதங்களை" எல்லாம் நான் வரிசைப்படுத்திப் பார்த்தபோது, எந்த அளவுக்குத் தமிழ் மொழி பயிற்சி மொழியாவதைக் கீழ்த்தரமாகச் சொல்கிறார்கள், எந்த அளவுக்கு மோசமான அளவுக்குப் படம் பிடித்துக் காட்டுகிற முயற்சியில் ஈடுபடுகிறார்கள் என்பதை என்னாலே பார்க்க முடிந்தது

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் நெஞ்சாரச் சொன்னவைகளை நேசித்து, அவர் சொன்ன வாசகங்களையெல்லாம் நெஞ்சத்திலே வைத்துப் பூசிக்கிறேன். அந்த அளவுக்கு ஒரு மூன்று மாத காலமாகத் தொடர்ந்து சிலர் வலுக்கட்டாயமாகக் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு கன்னித் தமிழ் மொழிக்கு ஏதாவது ஒரு களங்கம் கற்பிக்கலாமா என்றெல்லாம் கருதிக் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதெல்லாம் உண்மைதான்.

"ஆளே சேரவில்லை" என்கிறார்கள். அதுவா உண்மை? சட்டக் கல்லூரிக்குள் சென்று பாருங்கள். அந்த மாணவர்களோடு இன்றைக்கும் தொடர்புள்ளவன் நான். முதுகலைப் பட்டப் படிப்பிற்காக நான் இன்றைக்கும் அங்கே சென்று கொண்டிருக்கிறேன். அந்த மாணவர்களைப் பார்த்து, "ஆங்கிலத்தில் எழுத வேண்டுமா? அல்லது தமிழில் எழுத வேண்டுமா?" என்று கேட்டால், "தமிழில் எழுதுவோம்" என்று சொல்கிறார்கள். அப்படிச்

சொல்லுகிற மாணவர்கள்தான் அங்கே அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட ஒளிமயமான இடத்தையெல்லாம் காட்டாமல் எங்கே இருள் இருக்கிறதோ, எங்கே இருட்டுப் பகுதி இருக்கிறதோ அவைகளை மாத்திரம் எடுத்துக் காட்டி, தமிழ் பயிற்சி மொழி என்று வைத்தால், அதில் சேருவதற்கு ஆளே இல்லை, தமிழ் மொழிக்கு நாதியே இல்லை, ஒருவரும் சேரவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கேட்கப்படுகிற நேரத்தில் எல்லாம் எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. இப்படிப்பட்ட கூக்குரல் இந்தக் காலத்தில் மட்டும் கேட்கவில்லை. எல்லா நாடுகளிலும் எல்லா நூற்றாண்டுகளிலும் கேட்ட குரல்தான் இது. அந்தக் குரல்தான் இன்றைக்கு நம்முடைய நாட்டிலேயும் கேட்டுக்கொண்டிருக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டில் மத்திய தரைக் கடல் நாடுகளில் கேட்ட கூக்குரல்தான் இன்றைக்கு நம் நாட்டிலே கேட்கிறது என்பதைப் பார்க்கும்போது, நான் வரலாற்றைப் படிக்கிறவன் என்ற காரணத்தால், எனக்கு இதில் அதிசயம் ஏதும் ஏற்படவில்லை; ஆதங்கம் ஏதும் உண்டாகவில்லை.

நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னாலேயே வேதநாயகம் பிள்ளை அவர்கள் எவ்வளவோ அருமையாக ஆங்கிலத்தில் எழுதப்பட்ட தீர்ப்புகளை எல்லாம் தமிழில் ஆக்கி "சித்தாந்த சங்கரகம்" என்ற பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். இப்படி 150 ஆண்டுகளுக்கு முன்னாலே மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சி இன்றைக்கும்கூட வெற்றிபெறவில்லை என்பது உண்மைதான். ஆனால் வெற்றிபெறவில்லை என்பதற்காக அது சரியல்ல என்று அர்த்தமல்ல. இன்றைக்கு வெற்றி பெறவில்லை. ஆனால் என்றைக்காவது ஒரு நாள் கண்டிப்பாக வெற்றி பெறும்.

இன்றைக்கும் நாம் நீதிமன்றங்களை "நீதிமன்றங்கள்" என்று சொல்வதில்லை. வழக்கு மன்றங்கள் என்றுதான் சொல்லுகிறோம். அவைகள் சில நேரங்களில் வழக்கு மன்றங்களாகக்கூட இல்லாமல் வழக்காடு மன்றங்களாகச் செயல்படுகின்றன. அதுமட்டுமல்ல, வெறும் பட்டி மன்றங்களைப் போல் வாதப் பிரதிவாதங்களை வளர்த்துக் கொண்டு வழக்கறிஞர்கள் அங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கொலைக் குற்றம் சாட்டப்பட்ட கந்தசாமியோ நின்று கொண்டே இருக்கிறான். மூன்று மாதங்கள், நான்கு மாதங்கள் ஆனதற்குப் பின்னாலே, மேலாண்மை மனு செய்த பின்னாலே வழக்கு நடக்கும்போது "உனக்குத் தூக்குத் தண்டனை தந்திருக்கிறார்கள்" என்று சொல்லுகிறபோதுதான், தன்னைச் சுற்றி நடப்பதையே அவன் தெரிந்து கொள்கிற வாய்ப்பு ஏற்படுகிறது. நீதித் துறையின்



நிர்வாகத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது, நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். விசாரிக்கிற நீதிபதிகளைவிட, வாதாடுகிற வழக்கறிஞர்களைவிட குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்குத்தான் வழக்கிலே அதிகமான அக்கறை இருக்கிறது. காரணம் அவர்கள்தான் பாதிக்கப்பட்டவர்கள். எனவே ஆங்கிலத்தில் தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைக்கூட தெரிந்து கொள்ள முடியாத நிலையில் அவர்களுக்கு இருக்கிற உரிமையை இல்லாமல் செய்கிறோம், அந்த உரிமையை மறுக்கிறோம் என்றால், அவனை மனிதனாக அல்ல, விலங்கு என்கிற ஜாதியில் சேர்க்கிறோம், அடிமைப்படுத்துகிறோம் என்றுதான் அர்த்தமே தவிர வேறல்ல. ஆனால் மெல்ல மெல்ல அந்த நிலைமை இன்றைக்கு மாறி வருவதைப் பார்க்கிறோம். எல்லாம் தமிழ் மொழியில் வந்து, தன்னைச் சுற்றி இதுதான் நடக்கிறது என்று அவன் உணர ஆரம்பித்திருக்கிறான். உரிமை படைத்த ஒரு நாட்டில், விடுதலை அடைந்த ஒரு நாட்டில் இப்படி அவன் தெரிந்து கொள்ளுகிற நிலை வந்தால்தான், மக்களுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது. அந்த அடிப்படை எங்கே இருந்து தொடங்க வேண்டுமென்று கேட்பீர்களானால், அது சட்டக் கல்லூரியிலிருந்தே தொடங்க வேண்டுமென்றுதான் நான் சொல்லுவேன். சட்டக் கல்லூரியில் ஆங்கிலத்தில் பயின்று விட்டு வழக்கு மன்றங்களில் எல்லாம் தமிழில் நடக்கும் என்று சொன்னால். அது முறையாக இருக்காது. பெரும்பாலான மாணவர்கள் தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் முன் வருகிறார்கள். தமிழ் மொழியில் நூல்கள் பல வெளி வருகின்றன. அதிகமாக வரவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தகைய முயற்சிகள் நிச்சயமாகப் பலனளிக்கத்தான் போகின்றன. இந்த நிலைமை மற்ற துறைகளிலும் வர வேண்டும் என்று சொல்லுகிறபோது, குறிப்பாக, மருத்துவத் துறையில் வர வேண்டும் என்று சொல்லுகிறபோது, இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்ட வாசகத்தை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். தமிழ் மொழியில் படித்தால், மூளை வளர்ச்சி பெறாது என்ற கருத்தை அவர் இங்கே தெரிவித்தார். அவருக்கு இருக்கிற கருத்தாக வேண்டுமானால் அது இருக்கலாம். நாமெல்லாம் ஆங்கிலத்தை எதிர்க்கிறோம் என்பதல்ல இதன் பொருள். ஒருவேளை நாம் ஆங்கிலத்தை எதிர்க்கிறோம் என்ற உணர்வில் அவர் நினைத்துச் சொல்லியிருக்கலாம் என்று கருதுகிறேன். உள்ளபடியே சொல்ல வேண்டுமென்றால். நாங்கள் ஆங்கிலம் பேசி அவர்கள் கேட்டிருக்க முடியாது. ஆங்கிலம் என்பது நமக்கு வராத மொழியல்ல. ஆங்கிலத்தை, சுகந்தமாக, ஒரு சொர்க்க மொழியைப் போல் பேசுகிற ஆற்றல் நமக்குப் பள்ளிப் பருவ காலத்திலேயே உண்டு. ஆனாலும் ஆங்கிலத்திற்கு ஏன் சிறப்புக் கொடுக்கக் கூடாது என்று சொல்லுகிறோம்

[திரு. வலம்புரி ஜான்] [1983 ஏப்ரல் 27

என்றால், இந்திய மொழிகளிலேயே ஒன்றான இந்தி மொழியையே நாம் எதிர்க்கிறபோது, இந்த நாட்டுக்கு அந்நிய மொழியான ஆங்கிலத்தை நாம் ஒத்துக்கொள்ளக்கூடாது என்பதில் திடமாக இருக்கிறோம். அது தமிழ் மொழியையே ஒரு காலத்தில் பாழாக்கிவிடக் கூடும்.

அண்மையில் சுமார் ஒரு வார காலத்திற்கு முன்பாக, மேலவையின் சார்பாக டெல்லிக்குச் சென்று அங்கே வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி ஆராய்கிற மாநாட்டில் கலந்து கொள்கிற வாய்ப்பைப் பெற்றிருந்தேன். அங்கே ஆங்கிலத்தை அழகோடு பேசத் தெரிந்தவர்கள்—ஆலென் கார்டினர் போன்றவர்கள் எழுதிய 'Samples of good English" என்ற புத்தகத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் போல், இந்தியாவில் நல்ல ஆங்கிலம் பயில வேண்டுமென்றால், பண்டித நேரு அவர்களின் பேச்சையும். ஆர். கே. நாராயணன் எழுதிய புத்தகங்களையும் படித்துப் பாருங்கள் என்று மேற்கத்திய நாடுகளில் இருப்பவர்கள்கூட சொல்லுவார்கள்—அந்த அளவுக்குச் சிபாரிசு செய்கிற அளவுக்குப் புகழ்பெற்ற அந்தப் பெருமக்களோடு நேரடித் தொடர்பு கொண்டிருந்தவர்கள்கூட, ஆங்கில மொழியை அற்புதமாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தவர்கள்கூட அந்த மாநாட்டில் ஆங்கிலத்தில் பேசாமல் இந்தி மொழியில் பேசினார்கள். அதைத்தான் நான் இநத மன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அப்படி ஆங்கில மொழியில் நல்ல புலமை பெற்றவர்கள்கூட இந்தி மொழியில்தான் பேச வேண்டும் என்ற முடிவுக்கு வந்தால், இன்றைக்கு இருக்கிற இந்த மாய்மாலத்தை வெட்ட வெளிச்சமாக ஆக்க வேண்டும். வடக்கே இருப்பவர்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இந்தி மொழிக்குத் தமிழ் நாடுதான் தடையாக இருக்கிறது என்று நம்புகிறார்கள். இந்திக்குத் தடையாக இருக்கிறவர்கள் தமிழர்கள்தான். எனவே இங்கேதான் நம்முடைய தோல்வி தொடங்குகிறது என்று நம்புகிறார்கள். நம்ப வைக்கிறார்கள். உண்மையில் இந்திக்கு எதிர்ப்பு என்பது தமிழ் நாட்டில் மட்டுமல்ல. வங்கம் வன்மையாக எதிர்த்துக் கொண்டிருக்கிறது. கேரளத்தில் இதற்காக என்றே ஒரு தனி இயக்கம் கண்டு கொண்டிருக்கிறார்கள். இதுதான் உண்மை. நான் அந்த மாநாட்டில் சொன்னேன்: "ஆங்கிலம் தெரிந்திருந்தபோதும்கூட, நீங்கள் இந்தியில்தான் பேசுவோம் என்று முடிவுக்கு வந்துவிட்டால். நாங்களும் தமிழில்தான் பேசுவோம். அதைப் போலவே இந்த மேடையில் மலையாளி மலையாளத்தில்தான் பேசுவான். பிறகு கருநாடக மொழியும் இங்கே கேட்கும். தெலுங்கு மொழியும் கேட்கும். வங்க மொழியும் கேட்கும், மராட்டிய மொழியும் கேட்கும். இன்னும் அரசியல்



1983 ஏப்ரல் 27] [திரு. வலம்புரி ஜான்]

சட்டத்தின் ஷெட்யூலில் ஏற்றுக் கொள்ளப்படாத மொழியாக இருந்தாலும், சிக்கிமைச் சேர்ந்த நண்பர்கள் நேபாள மொழியில்தான் பேசுவார்கள்" என்று சொன்னேன். "மொழி பெயர்ப்பாளர்கள் இருக்கிறார்கள், ஆகவே அவரவர்களும் தம் தம் சொந்த மொழியில்தான் பேசுவார்கள்" என்று குறிப்பிட்டேன். இதை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், இங்கே ஒரு நூல் வெளி வந்திருக்கிறது. அதாவது "டிபார்ட்மெண்ட் ஆப் அபீஷியல் லேங்குவேஜஸ்" என்ற அந்தப் புத்தகத்தைப் பார்க்கிறவர்களின் மனம் கொதித்துப் போகும், ரத்தம் சுண்டிப் போகும். அந்த அளவுக்கு இந்தி மொழி வளர்ச்சிக்கு என்று—அந்த மொழியைத் திணிக்க வேண்டும் என்று—என்னென்ன முயற்சிகளையெல்லாம் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர முடியும். இங்கேயிருந்து டெல்லித் தலைநகருக்கு ஒரு முறை சென்று வந்துவிட்டால், தமிழ் நெருப்பு என்றைக்கும் அணைந்துவிடாதபடி அவ்வளவு நெய்யைக் கொட்டி விடுகிறார்கள். எப்படியாவது தமிழ் நெருப்பு அணைந்து விடக்கூடாது என்பதற்காக விறகு சுமக்கிறவர்களும், நெய் வார்க்கிறவர்களும் டெல்லியில் இன்றையதினம் பெருமளவில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த உணர்வுகளின் அடிப்படையில் பார்க்கிறபோது, நிச்சயமாக இந்தச் சட்ட முன்வடிவு பாராட்டத் தக்கதாக அமைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. எனவே நான் நெஞ்சத்து உணர்வு பூர்வமாக இதை வரவேற்கிறேன். தமிழ் மொழியை வளர்க்கவும், தமிழ்ப் பண்பாட்டை வளர்க்கவும், அதைப் பேணிக் காக்கவும் ஆன பேரார்வத்தால் தங்களின் துணிவை வெளிப்படுத்தியவர்கள்—மொழிப் போரில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள்—இனி மீண்டும் மொழிப் போர் வந்தாலும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள இருப்பவர்கள்—ஆகியோருக்கெல்லாம் எந்த அளவுக்கு இந்த அரசு மரியாதை செய்கிறது என்பதை இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் உணர முடிகிறது. அதே நேரத்தில் இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். புலவர் பெருமக்களும் மற்றவர்களும்தான் தமிழ் மொழிக்குப் புதிய வார்த்தைகளைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்றில்லாமல், மற்றவர்களும் தமிழ் மொழிக்கு நிரம்ப வார்த்தைகளைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். ஒரு மொழியை ஒவ்வொரு துறையிலும் பயன்படுத்தினால்தான், அதிகமான சொற்கள் வந்து சேரும். ஆங்கில மொழியை எடுத்துக் கொண்டால், 30 ஆண்டுகளுக்கு முன்னால் இல்லாத சொற்களெல்லாம் இன்றையதினம் புழக்கத்தில் வந்துள்ளன. விண் வெளித் துறையில்கூட ஆங்கிலம் பயன்படுத்தப்படுகிறது. இப்படி எல்லாத் துறைகளிலும் பயன்படுத்துகிற காரணத்தால்தான், புதிய புதிய சொற்கள் அதில் நாள்தோறும் சேர்ந்து கொண்டிருக்கின்றன. அதைப்போலவே தமிழ்

மொழி அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்தப்பட்டால்தான், புதிய சொற்கள் வந்து சேரும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல், ஆங்கில ஏடுகளில் வந்த கடிதங்களையெல்லாம் நான் சேகரித்து வைத்துள்ளேன். அவைகளில் சொல்லப்பட்டவைகள் ஒருவேளை உண்மையாக இருக்குமானால், நாம் நம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும். அதாவது தமிழ் மொழி பயிற்சி மொழியாக ஆக்கப்பட்டாலும்கூட, தமிழ் மொழியில் பயிற்சி பெற்று வருகிறவர்களுக்கு எந்தவிதமான ஊக்கமும் தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமானால், உடனடியாக நாம் நம்மைத் திருத்திக்கொண்டு அத்தகைய மாணவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கான உடனடி முயற்சிகளில் ஈடுபட்டாக வேண்டும். பொறியியல் கல்லூரிகளிலும், சட்டக் கல்லூரியிலும்கூட பயிற்சி பெற்றுகொண்டிருக்கிற ஒவ்வொரு மாணவனையும் பார்த்து, ஏறத்தாழ 1,000 சொற்களைத் தமிழ் மொழிக்குப் புதிதாகக் கொண்டுவந்து சேர்க்க வேண்டுமென்று கேட்கலாம். இதை மாணவர்கள் எப்படிச் செய்ய முடியும் என்று பலர் இங்கேகூட கேட்கலாம். இதை மாணவர்கள் செய்ய முடியாது என்றால், நிச்சயமாக, சத்தியமாக ஆசிரியர்களாலே செய்ய முடியாது. அந்த அளவுக்கு ஆற்றல் பெற்ற மாணவர்கள் பலர் இருக்கிறார்கள். அதையெல்லாம் நாம் சரியாக அறியாமல் இருக்கிறோம். காரணம் நாம் தராசை 'இப்படியே' பிடித்து வைத்துப் பார்க்கிறோம். தராசைத் தூக்கிப் பிடிக்காத வரை எடை எவருக்குமே சரியாகத் தெரியாது என்பதை நாம் நெஞ்சார நினைக்க வேண்டும்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

(முற்பகல் 11-00)

கல்லூரிகளில் கேட்கலாம். இந்த ஆண்டு தேர்வு முடித்து வெளியே செல்லுகிற போது, உங்களுக்குத் தேர்வில் வெற்றி கிடைக்க வேண்டும் என்றால், நூறு மதிப்பெண்கள் கிடைக்க வேண்டும் என்றால், ஆயிரம் வார்த்தைகளைத் தந்தாக வேண்டும் என்று கேட்கலாம். இது மற்ற நாடுகளில் நடந்திருக்கிறது. அண்மையில் கிரீன்ஸ் என்பவர் ஒரு மொழியியல் அறிஞர், அவர்தான் தலைமை அதிகாரி. மிகச் சிறந்த ஆராய்ச்சியாளர் என்று உலகத்திலே போற்றப்படுபவர்.

காலாகாலமாக ஒரு குற்றத்தைச் சொல்லுகிறார்கள். "வட இந்தியாவில் உள்ள இந்தி மொழியில் உள்ள 'க'-வை நான்கு வகையாக உச்சரிக்க முடிகிறது, தமிழில் அப்படி உச்சரிக்க முடிகிறதா? அப்படியே உச்சரிக்க



முடிந்தாலும் அதற்கு வரிவடிவம் இருக்கிறதா?" என்று கேட்கிறார்கள். இது எவ்வளவு பேதமையான எண்ணம், எவ்வளவு தவறான எண்ணம் என்று அவர் சொல்லுகிறார். "Simplification is the indication of refinement." என்று அவர் சொல்லுகிறார். ஒரு மொழியில் நான்கு மாதிரியாக உச்சரிக்க முடிகிறது, ஆனால் எழுத்து ஒன்றுதான் என்பதே அது ஒரு சிறந்த மொழி என்பதற்கு அடையாளம். ஆங்கிலத்திலே உள்ள வல்லமையே அதுதான். இதைத்தான் கிரீன்ஸ் போன்ற அறிஞர்கள் எல்லாம் சொல்லுகிறார்கள் என்றால், தமிழ் மொழி எத்தனை ஆண்டுகளுக்கு முன்பாகவே அந்த ஆங்கில மொழியினுடைய சிறப்பை எய்திவிட்டது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். இதையெல்லாம் மறைக்கின்றார்கள். இது பாமர மொழி என்பதைப் போலவும், இழிந்த மொழி என்பதைப் போலவும், தங்களுக்குள்ளே கசப்பை வைத்துக் கொண்டு பேசுகிறார்கள், தமிழ் மக்களை அவமதிக்கிறார்கள். இன்றைக்கு இல்லாமல் இருக்கலாம். நாளைக்கு அது வளரலாம். வெறும் வார்த்தைகளை வைத்துக் கொண்டு முன்னேற்றிவிட முடியுமா என்று கேட்கிறார்கள். தமிழ் மொழி தொன்மைவாய்ந்த மொழி. வேற்று நாட்டினருடைய ஆதிக்கத்தால் வெள்ளைக்காரர்கள் கொடி யாம் இருந்தபோது வீழ்ந்து கிடந்து, சிதைந்து கிடந்தது. ஆனால் சோவியத் நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். 1917 ல் அந்த நாட்டில் இர்கீஸ் என்ற மொழி இருந்தது. அதைப் பேசலாம், ஆனால் வரிவடிவம் இல்லையென்ற நிலை இருந்தது. இந்த ஐம்பது ஆண்டுக் காலத்திலே அந்த அரசாங்கம் செய்த முயற்சிகளின் காரணமாக இந்த மொழியிலே இப்போது எழுதுகிறார்கள். அதற்கென்று வரிவடிவம் இருக்கிறது. எழுதுகிறார்கள் என்றால், டாக்டர் சனார்த்தனம் அவர்கள் சொன்னதைப் போல, ஆராய்ச்சிப் புத்தகங்களை எழுதுகிறார்கள். அந்த அளவிற்கு சோவியத் சொர்க்கத்திலே உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். அது போல இந்த மொழியிலும் சொற்களைத் தரலாம். மக்கள் ஆட்சி நடைபெறுகிற மாநிலத்தில் இந்தக் காரியங்களைச் செய்வதில் நாம் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் எழுத்தாளர்களாக இருந்து எழுதி வாழ்ந்தவர்கள் இல்லை என்று சொன்னார்கள். பத்திரிகைத் துறையில் இருப்பதால் நான் சொல்லுகிறேன், 'எழுதி வாழ்ந்தவர்கள் இல்லை என்பதல்ல. இப்போதும் சிலபேர் எழுதியே வாழ்கிறார்கள். அது அவர்கள் என்ன எழுதுகிறார்கள் என்பதைப் பொறுத்தது.' பதிப்பாளர்களிடமிருந்து எழுத்தாளர்களைக் காப்பாற்ற வேண்டும். எனக்குத் தெரிந்த ஒருவர் எழுத்தாளராக இருக்கிறார். அவர் நன்றாக எழுதுகிறார். அவருடைய

எழுத்து நன்றாக இருக்கிறது. ஒரு கதை எழுத வேண்டும் என்றால் 400, 500 பக்கங்கள் அவரால் எழுத முடிகிறது. 400, 500 பக்கங்கள் எழுதியும் அவருக்குப் பெயர் வரவில்லை. அவர் 100 புத்தகங்கள் வரை எழுதியிருக்கிறார். அப்படியிருந்தும் அவர் தாழ்ந்திருப்பதற்குக் காரணம் என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பதிப்பாளர்கள் 16 பக்கங்கள் கொண்ட ஒரு பாரத்திற்கு பத்து ரூபாய் என்று சொன்னால் அவருடைய சரித்திர நாவலில் முதல் பக்கத்திலே தொடங்குகிற ஆற்றங்கரை குதிரை தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்க வேண்டும். முதல் பாரத்திலேயே நின்று போனால் அவருடைய வீட்டிலே அடுப்பு எரியாது. அதனாலேதான் முதல் பக்கத்திலே தொடங்குகிற குதிரை 400, 500 பக்கங்கள்வரை ஓடிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அந்தக் குதிரை ஓடிக் கொண்டே இருக்கிறது. அந்தக் குதிரை களைத்துப் போகிறதோ இல்லையோ, அதைப் படிக்கிற மக்கள் களைத்துப் போகிறார்கள். அதனாலே அவர் பெயர் போகிறது. ஆகவே பதிப்பாளர்கள் எழுத்தாளர்களை வஞ்சிக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்து, அவர்களைக் காப்பாற்ற வேண்டும். மொழிக்காக நிற்கிறவர்கள் மொழிக்காக மாத்திரம் இல்லாமல் எழுத்து என்பதற்கு இலக்கியம் அடிப்படையாக இருப்பதால், மிகப் பிரதானமாக இருப்பதால், எழுதுகின்ற எழுத்தாளர்கள் வஞ்சிக்கப்படுகிற நிலையில் அவர்கள் மீட்கப்பட்டாக வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ்ப் புலவர்களுக்கும், சான்றோர்களுக்கும், தமிழ் மொழியினுடைய உரிமைகள், உணர்வுகள் என்றைக்கும் காக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில், செய்யப்படுகிற இந்த வரலாற்று நிகழ்ச்சி இன்றைக்கு ஒரு செய்தியாக இருந்தாலும், காலம் கடந்த பிறகு உலகம் வியக்கத்தக்க அளவுக்கு இருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ் மொழி வளர்ச்சிக்காக வகை செய்கின்ற இந்த மசோதாவை நான் வரவேற்பதிலே பெருமைகொள்ளுகிறேன். தமிழ் மொழியினுடைய சிறப்புகளை எண்ணி, அதனுடைய பழமையை எண்ணி, அதனுடைய தொன்மையை எண்ணி அதை நாம் தாய்மொழியாகக் கொண்டிருக்கிறோம் என்பதால், அம்மொழி வளர்ச்சி பெற ஒரு சட்டம் கொண்டுவர வேண்டிய நிலை எற்பட்டிருக்கிறது. அதை மனமுவந்து வரவேற்றாலும்கூட, இவ்வளவு வன்மையும், தொன்மையும், வளமையும் பெற்றதொரு மொழி ஆட்சியில், கல்வியில் எல்லாம் நடைபெற வேண்டிய சரித்திரக் கட்டாயம் இருக்கிறபோது, உலக மொழிகளிலே சிறப்பு



பெற்ற ஒரு சில மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என்று எண்ணத்தக்க சிறப்பு பெற்ற ஒரு மொழியை, விடுதலை பெற்று 35 ஆண்டுகளுக்குப் பிறகு இப்படிப்பட்ட ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து காக்க வேண்டிய சூழ்நிலை தமிழ் நாட்டு மக்களுக்கு வந்ததற்காக அந்த நிலையை எண்ணி நான் வருந்துகிறேன்.

அண்மையில் உள்ள கேரளத்தில் உள்ள மொழி தோன்றி 200, 300 ஆண்டுகள்தான் ஆகின்றன. அந்த மொழியின் வளர்ச்சிக்காக அங்கே இருக்கின்ற எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் பேசுகின்ற பாங்கினைப் பார்க்கிறபோது, தமிழ் மக்களுக்கு தன் தாய்மொழிப்பற்றை வளர்க்க வேண்டிய கால கட்டத்திலே இருக்கிறோம். அங்கே இங்கே போய் இரண்டு வார்த்தைகளை ஆங்கிலத்திலே பேசினால்தான் மரியாதை என்று இன்னும் நம்மிலே பலர், நான் உட்பட, இங்குள்ள பலர் உட்பட நினைக்கிறோம். தமிழ் நாட்டிற்கு உள்ள பண்பு என்னவென்றால் தமிழ்மொழி தெரியாத ஒருவர் நம்மிடம் பேச வந்தால், அவருக்குத் தெரிந்த மொழியிலே நாம் பேசுவது என்பதுதான் தமிழர்களுக்கே உரிய பண்பு. மற்ற பகுதிகளிலே சென்றால், அவர்கள் மற்றவர்களைப்பற்றிக் கவலைப்பட்டால் தங்களுக்குத் தெரிந்த மொழியிலேதான் பேசுகிறார்கள். பிறருக்காக வாழக்கூடிய பண்பு நம்மிடம் இருக்கிறது. ஆகவே தமிழ் மொழியை, போர்க் கால நடவடிக்கை மூலமாக காப்பாற்ற கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு மொழியின் வளத்தை, இலக்கியச் சிறப்பை எந்த மொழியின் ஆதிக்கமும் வந்து அழிக்க முடியாது. வட புலத்திலிருந்து வந்த சமஸ்கிருத மொழியின் படையெடுப்பு நம்முடைய மொழியின் வன்மையைத் தடுத்து நிறுத்தியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வலம்புரி ஜான் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, தமிழில் விஞ்ஞானக் கல்வியும், தொழில் நுட்பக் கல்வியும், சட்டக் கல்வியும் கற்பிக்கப்பட வேண்டும் என்று ஒரு சட்டமே வர வேண்டும். ஒரு நாட்டை மற்றொரு நாடு அடிமைப்படுத்துகிற நேரத்தில்கூட, புரட்சிகரமாகப் போராடி வெற்றி கண்டுவிட முடிகிறது. ஆனால் எந்தப் பகுதி மொழியும் நம்முடைய மொழியை அடிமைப்படுத்த முடியாத அளவிற்கு சட்டரீதியாகத் தடுத்து நிறுத்த வேண்டிய காலக் கட்டம் இருக்கிறது. ஆங்கில மொழியினுடைய சிறப்புகளைப்பற்றி நமக்குத் தெரியும். அதிலே கருத்து வேறுபாடு கிடையாது. ஆங்கிலம்தான் நம்முடைய மொழியை பிற மொழிகளின் தாக்குதலிலிருந்து அரணாக இருந்து தடுக்கிறது என்று யாரும் கருதத் தேவையில்லை என்பது என்னுடைய எண்ணம். அதற்காக ஆங்கிலம் தேவையில்லை. ஆனால் ஆங்கிலத்தையே தாய்மொழியாகக் கொண்ட ஆங்கிலோ இந்தியன்ஸ் இருக்கிறார்கள். இந்திய

மொழிகளில் ஆங்கிலமும் ஒன்றாக இருக்கிறது. வட மேற்கு மாநிலங்களில் ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இருப்பதால், ஆங்கில மொழியைத் தடுக்க வேண்டியதில்லை.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், எல்லாம் தமிழில்தான் நடைபெற வேண்டும். சட்டம் இயற்றுதல், சட்டக் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி, விஞ்ஞானக் கல்வி ஆகியவை எல்லாம் தமிழிலே நடைபெற்று, தமிழிலேயே சிந்தித்துச் செயல்படுகிறார்கள் என்றால், அதனால் அதிகமான அறிவாற்றல் கிடைக்கிறது. கிளிப் பிள்ளை மாதிரி வேறு மொழியில் படிக்கின்றபோது. சிந்தனை செய்கின்றபோது, அறிவாற்றல் அவ்வளவு அதிகமாக வருவதில்லை. கல்விக் கூடங்களில் தாய்மொழியில் சிந்திக்கிற ஆற்றலை விட்டுவிட்டு, 18 வயது வரையில் ஆங்கிலத்தைப் படிப்பதிலேயே கவனம் செலுத்தி விட்டு, ஆங்கில இலக்கணத்தைப் படிப்பதில், ஆங்கில புரபோசிஷன்களைப் படிப்பதில் காலத்தைச் செலுத்திவிட்டு அதற்கு மேல் அறிவு வளர்ச்சியில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம். இதைப் போன்ற ஒரு கிரிமினல் வேஸ்ட் கிடையாது. இதை விட நம்முடைய முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு வேறு தடை ஒன்றுமே கிடையாது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

(முற்பகல் 11-10)

இங்கிலாந்து நாட்டிலேகூட, அந்த வரலாற்றைப் பார்க்கின்றபோது, அவர்கள் ஒரு காலத்திலே பிரஞ்சு மொழியைப் பயின்றுகொண்டு இருந்தார்கள். ஆனால் இங்கிலாந்து பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற பிறகு, ஒரு சட்டமே கொண்டுவந்து பிரஞ்சிலே பேசக்கூடாது என்று சொன்னார்கள். பிரஞ்சிலே அரசு ஆவணங்களை எழுதக்கூடாது என்று அவர்கள் நாட்டிலே கூட ஒரு சட்டமே கொண்டுவந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை நாம் இன்னும் கொண்டுவரவில்லை. ஆங்கிலத்திலே படித்தால் தான், தொழில் நுட்ப அறிவைப் பெற முடியும் என்று மாணவர்கள் நினைக்கவே இல்லை. ஆசிரியர்களில் சில பேர் அப்படி அவர்கள் பயின்று விட்டதாலே, தமிழ் சொற்களைக் கண்டுபிடிப்பதைவிட, ஆங்கிலத்திலேயே, கிளிப்பிள்ளை சொல்வதைச் சொல்லும் என்பார்களே, அதைப் போல அப்படி ஒப்பித்துவிடலாம் என்று நினைக்கின்றார்கள். பெற்றோர்கள் மத்தியிலே ஒரு மாயை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்திலே படித்தால்தான் அவர்களுக்கு அந்த அறிவு வரும் என்று நினைக்கிறார்கள். ஆங்கிலமே தெரியாத பெற்றோர்கள்கூட "மகன் இங்கிலீஷ் மீடியம் கேட்கின்றார். இங்லீஷ் மீடியமே கொடுங்கள்" என்று கேட்கின்றார்கள் அது என்ன கடையிலே வாங்கிக்கொள்கின்ற பொருளா என்று



சொன்னாலும் கூட, அவர்கள் கேட்பதில்லை. ஆனால் கல்லூரிகளிலே முதல் ஆண்டு பி.ஏ. அல்லது பி.எஸ்ஸி. போன்ற வகுப்புகளில், அவர்களுக்குத் தமிழில் தான் சொல்லிக் கொடுக்கவேண்டியிருக்கின்றது. அவர்கள் எல்லாப் பாடங்களிலும் ஆங்கிலத்தில் தேர்வு எழுதினாலும், அவர்களுக்குத் தமிழிலேதான் சொல்லிக்கொடுக்கவேண்டியிருக்கின்றது. அவர்களுக்கு ஆங்கிலத்திலே சொன்னால் புரிவதில்லை. ஏதோ பாடங்களை எழுதிவைத்துப் போகின்றார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை. தமிழ் வழி படித்தவர்களுக்கு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வில் 10 மார்க்குகள் கூடுதல் என்று போட்டீர்களேயானால், இந்தப் பிரச்சினை தீர்ந்து விடும். இதற்கு இதுபோன்ற பிரசங்கங்கள் தேவையில்லை. இதில் அரசு முறையாக அணுகி செயல்படவேண்டும்.

தமிழிலே எம்.பி.பி.எஸ். படித்துவிட்டுவந்தால், அவர்களுக்கு முதலில் வேலை, என்று இருக்க வேண்டும். அவர்கள் என்ன இங்கிலீஷ்காரர்களிடமா சென்று பாடம் படிக்கப்போகிறார்கள்? அவர்கள் எம்.பி.பி.எஸ். படித்து விட்டு வந்து தமிழ் நாட்டிலே இருக்கின்ற தமிழ் மக்களுக்கு இருக்கின்ற நோயைத் தெரிந்துகொண்டு அதற்கு மருந்து கொடுக்கப் போகிறார்கள். இங்கேயிருந்து எம்.பி.பி.எஸ். படித்துப் போகின்றார்கள். எம்.எம்.ஏ.எம்.எஸ். என்று உயர்படிப்பு இருக்கிறது. அது எம்.எஸ். க்குச் சமமானதாகச் சொல்கின்றார்கள். அந்தப் பட்டத்தை அதற்கு ஈக்குவலாக வைத்திருக்கிறார்கள். அதை மெட்ராசிலும் எழுதுவார்கள். திருவிதாங்கூரிலும் எழுதுவார்கள். பிராக்டிக்கலுக்கு டெல்லிக்குப் போக வேண்டும். அங்கே இருக்கின்ற பேஷன்ட் இந்திகாரர் என்று வந்துவிடுகிறார். பிராக்டிகல் எக்சாமினேஷனுக்குப் போகின்றபோது பேஷண்ட் இந்திகாரர். அதுவும் தமிழ் தெரிந்த பேஷண்டாக இருந்தாலும் கூட, அவருடைய பேச்சில் இந்தியின் 'ஆக்சண்ட்' இருக்கும். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் அந்தப் பையன் அந்த நோயாளியின் நோயை அறிந்து கொள்ள வேண்டும். ஆனால் அங்கே 15 நிமிடங்கள்தான் தருகின்றார்கள். இந்த மொழிச் சிக்கல் இருக்கின்றது. அந்த நேரத்தில் அவர் விடை எழுத வேண்டும். இந்த மொழிச் சிக்கலில் அந்த நேரம் முடிந்துவிடுகின்றது. ஆக அங்கே அந்தத் தொல்லைகள் இருக்கின்றன. இதையெல்லாம் என்னால் புரிந்து நன்கு சொல்ல முடியவில்லை. ஆகவே அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்துவிட்டு அமைதியாக இருந்தால் போதாது. இத்துடன் தமிழ் மொழியிலே படித்தவர்களுக்குத் தான் உத்தியோகம் என்று வையுங்கள். அதை அடுத்து, இங்கிலீஷ் மீடியம் கேட்கின்றார்களா என்று பாருங்கள். யாரும் கேட்கமாட்டார்கள். பப்ளிக் சர்வீசில் இங்கிலீஷ் மீடியத்திலே

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 ஏப்ரல் 27

என்று அவர்கள் நினைக்கின்றார்கள். பி.ஏ. படித்தவர்களுக்கு 'பிரிபரன்ஸ்' அந்த இன்டர்வியூவை நடத்துகின்றவர்கள்கூட, அவர்களுக்குத் தமிழ் தெரிந் திருந்தால்கூட, ஆங்கிலேயர் உடையிலே இருந்து ஆங்கிலத்திலே பேசினால் தான் மதிப்பு என்று நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் ஆங்கிலத்திலேயே கேள்வி கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே தமிழ் மீடியத்தில் படித்தவர்களுக்கு பப்ளிக் சர்வீசிலே 15, 20 மார்க்குகள் கூட போடுவோம் என்று இருக்க வேண்டும். தொழில் நுட்பக் கல்லூரிகளிலே தமிழிலே கேள்வி கேடடு அப்படி தமிழில் படித்தவர்களுக்கு முதல் உரிமை என்று சட்டம் கொண்டுவர வேண்டும். அதை நாம் அமுல்படுத்த வேண்டும். இன்னொன்று தமிழ் வளர்ச்சியிலே, தமிழ் புலவர்களுடைய கண்ணோட்டம் மாற வேண்டும். சில சொற்களையெல்லாம் வழக்காற்றுக்கு ஏற்ப வேகமான விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப அந்தச் சொற்றொடர்களை எடுத்து கையாளு கின்ற ஆற்றல் இருக்க வேண்டும். இப்போது மலையாளம் எவ்வளவு வேக மாக வளர்ந்திருக்கிறது என்பதை ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். அவர்கள் எல்லா பிறமொழி சொற்களையும் ஏற்றுக்கொண்டு போகின்றார்கள். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் உயிரோடு வழ்ந்தபோது, ஒன்றைச் சொல்லுவார்கள். "காப்பி" தமிழ் 'coffee' ஆங்கிலம் அதை 'காலைக் குடிநீர்', 'கொட்டைச் சாறு குடிநீர்' என்று சொன்னால் அது தமிழும் இல்லை. அது தேவையும் இல்லை. 'coffee' என்பதற்கு 'காப்பி' என்பது தமிழ் உச்சரிப்பு. 'காஃபி' ஆங்கிலம். அதற்கு 'காபி' தமிழ், போதும். இதற்காக புலவர் தமிழை இதில் கொண்டு வராதே என்பார்கள். அரசவையிலே புலவர் பெருமக்கள் எல்லாம் இருந்து ஆராய்ந்து கொண்டிருந்த தமிழை இப்போது சாதாரண கூலிவேலை செய் கின்ற, கல் உடைக்கின்ற, தோட்டத்தில் வேலை செய்கின்ற தமிழ் மக்கள் மத்தியிலே கொண்டு வரத் தேவையில்லை என்றும் சொன்னார்கள். நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்களோ என்னவோ என்று எனக்கு ஒரு அச்சம் உண்டு, ஏனென்றால் அவர்கள் புலமை மிக்கவர்கள், புலவர் தமிழ், 'கேஸ்ட்' தமிழ் என்று அவர்கள் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். பாமரர் தமிழ் என்று ஒன்று இருக்கின்றது. நம்முடைய சமுதாய வளர்ச்சிக்காக அந்த வேகத்திலே தமிழை வளர்க்க வேண்டும் என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் சொல்வார்கள். அவர்களோடு, வித்வான் சாத்தான்குட்டிப்பிள்ளை என்று செய்குதம்பி பாவலர் அவர்களின் சிஷ்யர் இருந்தார்கள். அவருக்கும் இவருக்கும் அடிக்கடி தகராறு நடக்கும். நாங்கள் எல்லாம் சிறுவர்களாக இருந்தோம். அப்



1983 ஏப்ரல் 27] [திரு. ம. சங்கரலிங்கம்]

போது போய் அதைப் பார்த்துக்கொண்டிருப்போம். அவர் 'காபி' என் பதை எப்படி தமிழ் என்று சொல்ல முடியும் என்று பாவலர் அவர்களிடம் கேட்பார்கள். 'காபி' தான் தமிழ் அய்யா என்று அவர்கள் சொல்வார்கள். "தமிழ் சாதாரண மனிதனுக்காக இருக்கின்றது. கொட்டை சாறுநீர், குடி நீர் என்பதை எல்லாம் யார் படித்துக்கொண்டிருப்பார்கள். யார் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அப்படியானால் தமிழ் என்பது ஒரு குழாத்திடம் தான் அடைபட்டு இருக்கும்" என்று புரட்சிகரமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதுபோலவே பேராசிரியர் இலக்குவனார் நாகர்கோயில் இந்து கல்லூரியில் முதல்வராக இருந்தபோது, அவரும் தூய தமிழிலேதான் பேசிக்கொண்டிருப்பார்கள். ஆகவே தமிழ் வளர்ச்சிக்கு தமிழ்ப் புலவர்கள் உயர்ந்த இலக்கண வழு கெடாத ஒரு தமிழை ஒரு அலங்காரமாகத்தான் வைத்துக்கொண்டிருக்க முடியும். பாமரர்களுக்கு ஏற்ற நிலையில் கல்வி நிலையில், விஞ்ஞானக் கல்வியில் விஞ்ஞானச் சொற்றொடர்களையும் எடுத்துக் கையாள வேண்டும் என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் சொல்வார்கள். நாம் இப்போது விஞ்ஞானச் சொற்களை மாற்றிக் கொண்டிருக் கிறோம். ஆடி, காடி என்றெல்லாம் மாற்றிக்கொண்டிருக்கிறோம். அதுகூட வேண்டாம். மோட்டார் என்றால் மோட்டார் என்று சொல்லலாம். அதற்குப் போய் நான்கு சக்கர வண்டி என்று சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னார்கள். எந்த நாட்டிலே கண்டுபிடித்தார்களோ அவர்கள் அந்தப் பெயரை வைத்திருக்கிறார்கள். உலகம் முழுவதும் அதைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். சைக்கிளை சைக்கிள் என்றே சொல்லலாம். 'சைக்கிள் வண்டி ஓடுதுபார்' என்றுதான் பாடினாரே தவிர வேறல்ல. இப்படியெல்லாம் அவர் எண்ண ஓட்டம் இருக்க வேண்டும் என்றார்கள். நான் அதையே முடிந்த கருத்தாகச் சொல்லவில்லை. இந்த எண்ணத்தைச் சிந்திக்கவைக்க வேண்டும் என்பதற்காகத்தான் எடுத்துச்சொல்கின்றேன். இந்த எண்ண ஓட்டம் தமிழ் அறிஞர்களிடையே, தமிழ்ப் புலவர்களிடையே இருக்கலாம். ஆனால் அது தமிழ் விஞ்ஞானிகளிடம் வரவேண்டியதில்லை. அதற்குத் தேவையில்லை. விஞ்ஞானம் வேகமான முறையிலே வளர வேண்டும். நைட்ரோஜனை நைட்ரோஜன் என்றே வைத்துக்கொள்ள வேண்டும். அதிலே வேண்டு மென்றால் கொஞ்சம் கொஞ்சம் மாற்றிக்கொள்வோம். ரேடியோ என்பதை வானொலி என்று வைத்திருக்கிறோம். அந்த ரேடியோ என்ற சொல், மக்களிடையே வானொலி என்று மாறி எல்லோருக்கும் தெரிகின்ற அளவிலே இன்று தூய தமிழிலே வந்திருக்கிறது. அப்படி தமிழ் சொற்களை வழக்காற்றுக்குக் கொண்டு வந்து எல்லோரும் பயன்படுத்துகின்றபோது,

நாளாவட்டத்திலே மாற்றிக் கொள்ளலாம். மெல்ல மெல்ல மாற்றிக்கொள்ள வேண்டுமே தவிர முதலிலேயே இது ஒரு தடைக்கல்லாக இருக்கக்கூடாது என்று தெளிவாகச் சொல்லவேண்டும்.

நாங்கள் திருவிதாங்கூர் சமஸ்தானத்திலிருந்து வருவதற்கு முன்னாலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு பெரிய போராட்டத்தை நடத்திக் கொண்டிருநதோம், தமிழகத்தோடு சேர்வதற்கு 'சேர்ந்தால் தாய் தமிழகத் திலே சேர்வோம்' என்று நாங்கள் எல்லாம் சொல்வோம், இது தாய் தமிழகம் ஆகவும், நாங்கள் சேய் தமிழகமாகவும் இருந்தோம். இந்த இரண்டு தமிழகமும் ஒன்று சேர்ந்துவிட்ட பிறகும் இங்கே இருக்கின்றவர்கள் அங்கே யிருக்கின்றவர்களை மலையாளப் பகுதியில் இருக்கின்ற மாதிரி எண்ணுகின்ற நிலை இருக்குமோ என்ற சந்தேகம்கூட எனக்கு இருக்கிறது. ஏனென்றால் எங்களுடைய பேச்சிலே இருக்கின்ற அந்த ஆக்சன்ட் கொஞ்சம் வேறுபாடாக இருக்கலாம். அந்தப் பகுதியிலே நாங்கள் சேர்கின்றபோது நடந்த ஒரு சம்பவத்தைப்பற்றி இந்த சந்தர்ப்பத்திலே நினைவுக்குக்கொண்டுவர விரும்புகிறேன். பட்டம் தாணுப்பிள்ளை இங்கே வந்து சேரக்கூடாது என்று எதிர்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் நாகர்கோவிலிலே வந்து பேசினார்கள். நாங்கள் உடனே சொன்னோம். தமிழிலேதான் பேசவேண்டும் என்று சொன்னோம். அவர்கள் மலையாளத்திலேதான் பேசினார்கள். மலையாளத்திலே பேசியபோது சொன்னார்கள். தமிழிலே பேசவேண்டும் என்று யாராவது சொன்னால், அதையும் மலையாளத்திலே சொன்னார்கள்.

'ஞான் மலையாளத்தில்தன்னே சம்சாரிக்கும், கேட்டெங்கில் கேட்கட்டும். இல்லையெங்கில் போனம்' என்று மலையாளத்தில் சொன்னார்கள். இப்படிச் சொன்ன பிறகு, நாங்கள் கூட்டத்திலே கலாட்டா பண்ணி அவரை அனுப்பி விட்டோம். அதற்குப் பிறகு கொஞ்சநாள் கழித்து, மூன்று மாதங்கள் கழித்து, திரு. பொன்னூஸ் அவர்கள் வந்தார்கள். அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர். அவர்கள் வந்து பேசினார்கள். அப்போது நாங்கள் எல்லாம் இளைஞர்கள். யார் வந்தாலும் தமிழிலேதான் பேச வேண்டும் என்று சொல்வோம். அவர்கள் மலையாளத்திலே சொன்னார்கள். என்னுடைய சகோதரர்கள், 'என்னோட சிறுசுகள்', அதுதான் மலையாளத்தில் சகோதரர்கள் என்பதற்குள்ள வார்த்தை, அதைச் சொல்லி சொன்னார்கள். தமிழிலேதான் பேச வேண்டுமென்று சொல்கின்றார்கள். எனக்குத் தமிழ் பாஷையிலே அளவு கடந்த பற்றுதல். நான் தமிழிலே பேசினேன் என்றால், தமிழ் பாஷையைக் கொலை பண்ணுகின்ற மாதிரியாகிவிடும். நான் அதைக்



கொலை பண்ணக்கூடாது என்பதனாலேயே அப்படிச் சொல்கிறேன் என்றார்கள். சரி, இந்த ஆள் அப்படியே பேசிவிட்டுப் போகட்டும் என்று விட்டுவிட்டோம். பரவாயில்லை என்று விட்டுவிட்டோம். இந்த ஆள் பரவாயில்லை என்று விட்டுவிட்டோம். அடுத்து, பனம்பள்ளி கோவிந்த மேனன் அவர்கள் வந்தார்கள். அவர்கள் காங்கிரஸ்காரர். அதற்கு ஒரு மூன்று மாதம் கழித்து வந்தார்கள். அதே இடத்திலே வந்து பேசினார்கள். அவர்களிடம் 'தமிழிலே பேசுங்கள்' என்று கேட்டோம். ஒரே சத்தம் போட்டோம். தமிழிலே பேச வேண்டும் என்று கேட்டோம். அவர்கள், "என்னுடைய சகோதரர்கள் எல்லாம் தமிழிலே பேச வேண்டும் என்று சொல்கின்றார்கள். நான் தமிழிலேதான் பேசுகிறேன். அதுதான் எரணாகுளம் தமிழ்" என்றார்கள். ஆக மூன்று பேர்களும் ஒரே பிரச்சினையில், அந்த மூன்று தலைவர்களும் அணுகுகின்ற முறையைப் பார்க்க வேண்டும். அதற்காகத்தான் சொன்னேன். தமிழ் நாட்டிலேகூட கன்னியாகுமரியிலே பேசுகின்ற தமிழுக்கும், திருவிதாங்கூரிலே பேசுகின்ற தமிழுக்கும், இங்கே சென்னையிலே பேசுகின்ற தமிழுக்கும் வித்தியாசம் உண்டு. எங்கள் பக்கத்திலே எல்லாம் டாக்ஸ் என்பதற்கு வரி என்றும், கிஸ்தி என்றும் சொல்வோம். குடிசை என்று இங்கு ஓலைக்குடிசையைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அந்தப் பக்கத்திலே அந்த வரியை, டாக்சையும், டாக்ஸ் அரியர்சையும் குடிசை என்று சொல்வோம். நம்முடைய மாண்புமிகு திரு. மதியழகன் அவர்கள் நிதியமைச்சராக இருக்கின்றபோது, கன்னியாகுமரி மாவட்டத்திலே இருந்து ஒரு சட்டமன்ற உறுப்பினர் திரு. சிதம்பரநாதன் அவர்கள் அங்கே இருந்தார்கள். அவர் அங்கே

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-20)

அமைச்சராக் இருந்தவர். அவர், "கன்னியாகுமரி மாவட்டத்தில் தண்ணீர் இல்லை, வறட்சியாக இருக்கிறது, ஆனால் தாசில்தார்கள் எல்லாம் வரிக் குடிசைகளைப் பிரிக்கிறார்கள்" என்று சொன்னார்கள். உடனே அப்போது அமைச்சராக இருந்த திரு. மதியழகன் அவர்கள், 'வரிசையாக இருக்கிற குடிசைகளைப் பிரிக்க தாசில்தார்களுக்கு எங்கே அதிகாரம் இருக்கிறது?' என்று கேட்டார். வரி என்றால் டாக்ஸ், குடிசை என்பது பாக்கி; எனவே 'வரிக் குடிசை' என்றார் அவர். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், தமிழகத்திலே ஒரு பகுதியிலே இருக்கும் மக்கள் பேசும் 'டையலாக்', வழக்காற்றுச் சொல் இன்னொரு பகுதியில் மாறுபட்டிருக்கிறது. இதையெல்லாம் ஒருங்கிணைக்கும் பணி இருக்கிறது. அதைப் புலவர்கள், அறிஞர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எல்லா இடங்களிலும் 'கல்லோகியல்'

என்று சொல்லுமளவிற்கு இல்லாமல், சிறந்த தமிழை நாளாவட்டத்தில் பரப்பும் பணியை அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். விஞ்ஞான ரீதியான சொற்களைத் தமிழ் படுத்தும் பணியை விட்டுவிட்டு, விஞ்ஞானச் சொற்கள் வேகமாகத் தமிழோடு கலந்து, தொழில் நுட்ப வளர்ச்சிக்கு, விஞ்ஞான வளர்ச்சிக்கு வழி காட்ட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கு தமிழ் வளர்த்த, தமிழ் மொழி வளர்த்த, தமிழினத்தைக் காத்த பெருமக்களுக்கெல்லாம் மானியமும், ஓய்வூதியம் 150 ரூபாய் கொடுப்பதற்கும் வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. இவர்களில் ஒருவர்கூட விடப்படாமல் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் மொழி வளர்ச்சிக்காக இன்னுயிரை நீத்தவர்கள், தமிழ் மொழிக்காகப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள், தமிழ் நாட்டு எல்லைகளை ஒன்றாகச் சேர்த்து நல்ல தமிழகத்தை அமைக்கப் பாடுபட்டவர்கள் ஆகிய அனைவருடைய பட்டியலைத் தயாரிக்க வேண்டும். இதற்கு முந்தைய அரசு தாய் மொழி காத்தவர்களுக்கு உதவித் தொகை கொடுத்தது, அது குறித்து உச்ச நீதி மன்றத்தில் வழக்காடி, அவர்கள் 'இந்தி எதிர்ப்புப் போராட்டம்' என்று சொன்னார்கள். எந்த மொழிக்கும் எதிர்ப்பில்லை. இந்தி மொழிக்கு பதில் வேறொரு மொழி வந்தாலும் விடப் போவதில்லை. தமிழ் மொழியைப் பாதுகாக்கும், தமிழ் நாட்டைப் பாதுகாக்கும், தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் அனைவருக்கும் இந்த உதவியை வழங்க வேண்டும். இந்த உதவித் தொகை 150 ரூபாய் என்று இருப்பது குறைவு. அதை 250 ரூபாயாகவாவது உயர்த்த வேண்டும். மேலும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு மானியம் வழங்கி, சிலருக்குச் சிறப்பு செய்யும் நிலையை உருவாக்க வேண்டும். இன்னும் மொழியை வளர்க்கும் பணி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அதிலேதான் எழுத்தாளர்கள், புலவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களையும் வரிசைப்படுத்தி, உதவி அளிக்க வேண்டும். இப்போது 50 லட்சம் ரூபாயை இதற்காக ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அது போதுமானதல்ல. இன்னும் கூடுதலாக ஒதுக்கீடு செய்து, நல்ல முறையிலே இதை அமுல்படுத்துவதன் மூலம் அவர்களுக்குச் சிறப்பு செய்கிறோமென்பதல்ல, நம்முடைய எதிர்காலத்தை உருவாக்குகிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்த சட்டமன்றத் தொடரில் எல்லாத் தொழில் நுட்பக் கல்வியையும், விஞ்ஞானக் கல்வியையும்—முதுகலைப் பட்டம் வரையில்—தமிழில் கற்பிக்க வேண்டுமென்ற நிலையை உருவாக்க வேண்டும். பிற மொழியில் படிக்க வேண்டு



மென்றால், வேறு இடங்களுக்குப் போய் படிக்கட்டும். வேண்டுமென்றால் சென்னையில் ஒரு இடம் மதுரையில் ஒரு இடம் என்று இருக்கட்டும். அவர்கள் வெளி நாடு போக நாம் தடையாக இருக்க வேண்டாம் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ் மொழிக்கு ஆக்கம் தேடி பல்வேறு பணிகளிலே ஈடுபட்டவர்களுக்கும், ஈடுபட்டு வருகிறவர்களுக்கும் உதவித் தொகை வழங்குவது என்கின்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவினை ஒட்டி, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய சீரிய கருத்துக்கள் பலவற்றைத் தெரிவித்திருக்கிறார்கள். இன்று பேசிய உறுப்பினர்கள் அனைவருமே, இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து, பாராட்டு தெரிவித்து, சீரிய பரிந்துரைகள் பலவற்றை நல்கி, இது மேலும் சிறப்பு பெற வேண்டுமென்று, செம்மை பெற வேண்டுமென்று கூறினார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் அரசின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி ஒரு சட்ட முன்வடிவு சிலபல ஆண்டுகளுக்கு முன்னாலேயே வர வேண்டுமென்று பெரு விருப்பம் நமக்கு இருந்தாலும், அது இன்று வருகின்ற சூழ்நிலை ஏற்பட்டது என்பதற்காக உள்ளபடியே நாம் மகிழ்ச்சி அடைய வேண்டியவர்களாக இருக்கிறோம். இது பெருமைக்குரியது, நாமெல்லாம் பூரிப்பு அடையத்தக்க நிகழ்ச்சியாக இது அமைந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். ஆக மொழியைப் பொறுத்தவரையிலும், அதற்கு எப்படி ஆக்கம் தர வேண்டுமென்பதற்கான விளக்கங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே சிறப்பாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். மொழி எவ்வளவு இன்றியமையாத ஒன்றாக அமைந்திருக்கிறது என்பதும், அதிலும் தமிழகத்திற்குரிய மொழியாகவும், தமிழகத்திலுள்ள மக்களுக்குத் தாய் மொழியாகவும் அமைந்துள்ள தமிழ் மொழி எத்துணை சிறந்து விளங்குகிறது என்பதற்கான தன்மைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். அந்த வகையிலேதான் இந்திய நாட்டின் வரலாற்று அடிப்படையிலே பார்க்கும்போது, மொழிக்கு முக்கியத்துவம் அளித்து, மொழியைப் பொறுத்து இனம் அமைவதையும், மொழியைப் பொறுத்து நாகரீகம் அமைவதையும், மொழியைப் பொறுத்து பண்பாடுகள் அமைவதையும், மொழியைப் பொறுத்து மக்களை அடையாளம் காட்டி, பிரிக்கும் தன்மைகள் இருப்பதையும் நாம் நன்றாகக் காண்கிறோம். அந்த வகையிலேதான் மக்களின் மொழிக்கேற்ப மாநிலங்கள் அமைய வேண்டு

மென்ற கருத்து உருவாக்கப்பட்டது. அதுவே தேசியக் கொள்கையாகக் கொள்ளப்பட்டு, அதுவே காந்தியடிகளின் தேசிய நிர்மாணத் திட்டத்தில் வற்புறுத்தப்பட்டு வந்தது என்பதை அனைவரும் அறிவார்கள். மாநில மொழி வளர்ச்சியடைந்தால்தான், அதன் மூலமாக மாநிலங்களுடைய உரிமைகள், மற்றவைகள் சிறப்பு அடையும் என்ற தன்மையின் அடிப்படையிலே பல்வேறு வரலாற்று மாற்றங்கள் ஏற்பட்டு வந்திருப்பதைக் காண்கிறோம். ஆகவே அந்த தேசியக் கொள்கைக்கேற்ப, தமிழ் மொழி மாநில அரசின், தமிழகத்தின் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும், ஆங்கில மொழி அதனுடைய இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்பதே தமிழ் நாடு அரசின் கொள்கையாக இருந்து வந்துள்ளது என்பது மட்டுமல்லாமல், இதன் அடிப்படையிலேதான் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் இருக்கிறார்கள் என்பதை அவையினர் நன்கு அறிவார்கள். இந்தக் கருத்துக்கு ஆக்கம் தேடும் முறையில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்; தமிழ் எங்கும் இருக்க வேண்டும், எதிலும் இருக்கவேண்டும், என்றும் இருக்கவேண்டும்; ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்று கூறுகிறோம். இந்தக் கொள்கைக்கு ஊறு விளைவிக்கும் முறையில் வேறு எந்த மொழிக் கொள்கை வந்தாலும், அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற தன்மையின் அடிப்படையிலே கட்டிக் காத்தவர்கள், அதற்காக தங்களுடைய இனிய வாழ்வை ஈந்தவர்கள், இன்னுயிரை ஈந்தவர்கள், தங்களுடைய உடமைகள், உறுப்புகளை இழந்தவர்கள் ஆகியவர்களை இந்த அரசு மதிக்கிறது. தமிழகப் பெருங்குடி மக்களின் சார்பாக அமைந்துள்ள அரசு அவர்களைப் போற்றுகிறது, பாராட்டுகிறது என்ற வகையிலே அவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டிய இன்றியமையாத தேவையை உணர்ந்து, இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம்.

தமிழ் மொழியில் திறமையும் அறிவும் இருந்து, அத்திறமையையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துகிறவர்களுக்கு ஊக்கம் தர வேண்டும், அவர்களுக்கு ஆக்கங்கள் பயக்க வேண்டுமென்ற நோக்கத்தை இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றும் தன்மையில் அமைந்திருக்கிறது. தமிழ் மொழிக்காக தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தவர்கள் குடும்பத்தினருடைய வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டும். அவர்களுக்கு உதவி நிதி வழங்க வேண்டுமென்பது இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கமாகும். தமிழ் மொழியின்பால் உள்ள ஆர்வத்தால் அல்லது தமிழ் வளர்ச்சியைப் பாதுகாக்க அல்லது தமிழ்ப் பண்பாட்டை கட்டிக் காத்திடத் தங்கள் துணிவையும் சான்றாண்மையையும்





வெளிப்படுத்துகிற ஒவ்வொருவருக்கும் உதவித் தொகை அல்லது மானியம் அல்லது இவை இரண்டையும் அளிப்பது இந்தச் சட்ட முன்வடிவின் முக்கிய நோக்கமாகும். தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் வளர்ப்பதில் சிறந்த ஆர்வம் காட்டினார்கள் நம்பியிருப்பவருக்கும் தமிழ் மொழியின்பால் அதிக ஆர்வம் காட்டுவதில் அல்லது தமிழ் வளர்ச்சியைப் பாதுகாப்பதில் அல்லது தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக் காப்பதில் இன்னுயிர் நீத்தவர்களை நம்பியிருப்பவருக்கும் உதவித் தொகை அல்லது மானியம் அல்லது இவை இரண்டையும் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவை தவிர, தமிழில் ஆன்ற புலமையை வெளிப்படுத்துகிற மாணவர்களுக்கும், தமிழில் பேரார்வம் காட்டுகிற ஆசிரியர்களுக்கும், தன்னிகரற்ற புலவர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் புலமைப் பரிசில் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவைகள் இந்தச் சட்ட முன்வடிவின் முக்கிய நோக்கங்களாகும். இவற்றை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் முழு மனதோடு ஆதரித்து பல்வேறு சீரிய கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலே இங்கே மொழியின் சிறப்பைப்பற்றிச் சொல்லும்போது அதற்கு ஆக்கம் தராத சூழ்நிலையிலே சிலர் பேசியும், எழுதியும் வருகிறார்கள் என்பதையும், குந்தகம் விளைவிக்கிறார்கள் என்பதையும் சுட்டிக் காட்டினார்கள்.

(முற்பகல் 11-30)

ஆனால் ஒன்றை நாம் உணர வேண்டும். மனிதன் கண்டுபிடித்த கருவிகளில் எல்லாம் தலையாயதது, மிக மிக தலையாயதது மொழி தான். மொழி தான் மனிதனின் சிந்தனையை வெளிப்படுத்துகிறது. மொழி தான் மனிதனின் சிந்தனையைத் தூண்டுகிறது. மொழி தான் மனிதனைச் சொல்ல வைக்கிறது. மொழி தான் மனிதனை எண்ண வைக்கிறது. மொழி தான் மனிதனின் செயலுக்குக் காரணமாக அமைகிறது. மொழி தான் மனிதன் சிந்தனைக்கும், சொல்லுக்கும், செயலுக்கும் காரணமாக அமைகிறது. மொழி தான் மனிதனின் நாகரிகத்தை வளர்க்க, பண்பாட்டை வளர்க்க காரணமாக அமைந்திருக்கிறது. வரலாற்று அடிப்படையில் பார்த்தால் கூட, ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு அடிப்படையே மொழி தான். மொழி இல்லையென்றால், மனிதன் காட்டுமிராண்டிகளைப் போல், விலங்குகளைப் போல் இருந்து இருப்பான். ஆக, மனிதன் கண்டுபிடித்த எல்லாவற்றிலும், மிக மிக தலையாயதது, முக்கியமானது, எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருப்பது மொழி தான். மற்ற எல்லாம் மொழிக்குப் பின்னாலே தான். 2 ஆயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த மக்களைப்பற்றி அல்லது பல மாற்றங்களை நாம் அறிந்து

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 27

கொள்ள துணையாக இருப்பது மொழி தான். ஆக, எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருப்பது மொழி தான். ஆகவே தான் தமிழ் மொழிக்கு ஊக்கம் அளிப்பதிலே நாம் முனைப்போடு இருக்கிறோம். தமிழ் மொழி நல்லமுறையில் காப்பாற்றப்பட வேண்டுமென்கிற அளவுக்கு இன்றைக்கு தமிழ் உணர்வு வளர்ந்திருக்கிறது. தமிழ் உயிரோடு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, தமிழ் மொழி காப்பாற்றப்பட வேண்டிய நேரத்தில் காப்பாற்றப்பட்டிருக்குமானால், இன்னும் சிறப்பாக வளர்ந்திருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, காப்பாற்றப்பட வேண்டிய நேரத்தில் தமிழ் மொழி காப்பாற்றப்பட்டிருந்தால், தென்னகத்தில் இருக்கிற 14 கோடி மக்களும் இன்றைக்கு தமிழ் மொழியைப் பேசியிருப்பார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டுகிறேன். ஆனால் அது காப்பாற்றப்பட வேண்டிய நேரத்தில் வடநாட்டு படையெடுப்பு போன்றவற்றின் காரணமாக காப்பாற்றப்பட முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. ஆயிரம் ஆண்டுகளுக்கு உள்ளாக, 500 ஆண்டுகளுக்கு உள்ளாக உள்ள வரலாற்றைப் பார்ப்போமேயானால், தமிழ் மொழியிலிருந்து எப்படி கன்னடம் என்றும், தெலுங்கு என்றும், மலையாளம் என்றும் வட நாட்டு படையெடுப்பு போன்ற காரணங்களால் தனித் தனியாகப் பிரிந்தது என்பதை நாம் அறிய முடிகிறது. அந்த வகையில் எப்படி எல்லாம் தமிழுக்கு திருமண நலுங்குப் பாடல், சிற்பக் கலை போன்றவற்றிலும் எல்லாம் முக்கியத்துவம் தந்து ஆக்கமும் ஊக்கமும் தந்திருக்கிறார்கள் என்பதையும் நாம் காண முடிகிறது. ஆனால் அதே நேரத்தில் காப்பாற்றப்பட வேண்டிய நேரத்தில் மொழிகளைக் காப்பாற்றததால் ஏற்பட்ட விளைவை, வரலாற்றுப் பின்னணியை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு காலத்தில் உலகத்தில் இருந்த செம்மொழிகளில் ஒன்றாக லத்தீன் மொழி இருந்திருக்கிறது. ஆனால் ஜூலியஸ் சீசர் காலத்திலே பேச்சு வழக்கிலே இருந்த அந்த மொழி இன்றைக்கு பேச்சு வழக்கிலே இல்லை. அறவே இல்லை. அங்கு வேறு மொழி இப்போது நடைமுறையில் இருக்கிறது. லத்தீன் மொழியில் சட்டங்கள், இலக்கியங்கள், சாஸ்திரங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் லத்தீன் மொழியைப் புரிந்துகொண்ட மக்கள் இப்போது பெரும்பாலும் இல்லை. அதைப் பற்றி நன்றாகப் படித்தவர்கள் தான் புரிந்துகொள்கிறார்கள். அது போல் டெமாஸ்தனிஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்கள் எழுதிய மொழி இன்றைக்கு பேச்சுவழக்கில் அறவே இல்லை. அந்த நாடுகளில் எல்லாம் வேறு ஒரு மொழி தான் இப்போது பேசப்பட்டு வருகிறது. அது போல் ஏசுநாதர் காலத்தில் இருந்த ஹீப்ரு மொழி இப்போது பேச்சுவழக்கில் இல்லை. இப்போது இந்த மொழியை மறுபடியும் கொண்டுவர இஸ்ரேல்



1983 ஏப்ரல் 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நாட்டு மக்கள் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் முயற்சி செய்து வருகிறார்கள். அதுபோல் சமஸ்கிருத மொழி கூட பேச்சுவழக்கில் இல்லை. 'சமஸ்' என்றால் நன்றாக 'கிருதம்' என்றால் செய்யப்பட்டது என்று பொருள். ஆகவே சமஸ்கிருதத்தைப் பொறுத்தவரையில், நன்றாகச் செய்யப்படாத நிலை அதற்கு இருந்திருக்கிறது. அப்படி என்றால், ஒன்றைப் பார்த்துத் தான் அதை சரிபண்ண வேண்டுமென்று அர்த்தம். தானாக ஒன்று வளர்ந்தால் அதற்கு வளர்ச்சி, டெவலெப்மென்ட், எவலூஷன் என்று பெயர். விற்பன்னர்கள், வல்லுநர்கள், அறிஞர் பெருமக்கள், புலவர் பெருமக்கள் இப்படிப்பட்டவர்கள் பயன்படுத்துகிற ஒரு மொழி இது. ஆனால் இந்த மொழி பேச்சு வழக்கில் சாதாரண மக்களிடத்தில் இல்லை.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களும் மற்றவர்களும் சுட்டிக்காட்டியதைப் போல எப்படிப்பட்ட நிலையிலும் தன்னுடைய செழுமை கொஞ்சமும் குறையாமல் வளர்ந்துகொண்டிருப்பது தமிழ் மொழி. இந்த மொழியை நல்லமுறையில் காப்பாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் இந்த அரசு அதற்கான ஆக்கமும், ஊக்கமும் அளிக்க வேண்டுமென்கிற எண்ணத்தில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ் மொழிக்காக பல போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் இருக்கிறார்கள். சிறை சென்றவர்கள் இருக்கிறார்கள். தன்னுடைய இன்னுயிரை தமிழுக்காக ஈந்தவர்கள் இருக்கிறார்கள். இன்னமும் அப்படிப்பட்ட உணர்வைக் கொண்டவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் தமிழ் மொழி இன்னமும் வளர வேண்டுமென்ற உணர்வோடு இருப்பவர்கள். இவர்களையெல்லாம் அரசு மதிக்க கடமைப்பட்டிருக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு தமிழ் மொழியைக் காப்பாற்ற தியாகம் செய்ய முன்வருகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அப்படிப்பட்டவர்களை நாமும் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் தான் இந்தத் திட்டம் இன்றைக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட தியாகிகளுக்கு என்ன என்ன வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றனவோ அதே வசதிகளை இவர்களுக்கும் செய்து கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் நாம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். தேச விடுதலைக்காக தியாகம் செய்தவர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகையின் தன்மையில் இவர்களுக்கும் நாம் அளிக்க வேண்டும். அந்த வகையில் தான் சட்டத்தின் விதி முறைகள் எல்லாம் வகுக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தமிழ் மொழியினுடைய வளர்ச்சி பற்றியும், பயிற்று மொழிபற்றியும் சொன்னார்கள். அதுபோல் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சங்காலிங்கம், வலம்புரிஜான், லெட்சுமிகாந்தன்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 ஏப்ரல் 27

போன்றவர்கள் பயிற்று மொழிபற்றி தங்கள் கருத்துக்களை எடுத்துச்சொன்னார்கள். தமிழ் மொழிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க வேண்டும் என்றும் தமிழ் மொழி பயிற்று மொழியாக வர வேண்டும் என்றும் சொன்னார்கள். வெவ்வேறு வழிகளிலே இதற்கு நாங்கள் ஆக்கமும் ஊக்கமும் அளித்திருந்தாலும், தமிழ் மொழிக்காக பாடுபட்டவர்களுக்கு, தமிழ் மொழிக்காக உழைத்தவர்களுக்கு, தமிழ் மொழிக்காக தங்களையே ஒப்படைத்திருப்பவர்களுக்கு இப்போது தான் நாம் உதவி செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம். அந்த வகையில் இது இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. உள்ளபடியே தமிழில் புலமை பெற்றவர்களுக்கு, தமிழில் சிறந்து விளங்குகின்றவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 250 ரூபாய் வீதம் 500 பேர்களுக்கு 4 அல்லது 5 ஆண்டுகளுக்குத் தருகிற முயற்சி தனியாக வேறு நடந்துகொண்டிருக்கிறது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய பெயராலே விருது வழங்குகின்ற ஒரு முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு, 10 ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற ஒரு முயற்சி தனியாக தமிழுக்கு ஊக்கம் தருகின்ற வகையில் நடந்துகொண்டிருக்கிறது. அதுபோல் தமிழ் தென்றல் திரு. வி. க. அவர்களுடைய பெயரால் விருது வழங்கி 10 ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது நமக்கெல்லாம் தெரியும். திருக்குறளார் திரு. முனுசாமி அவர்களுக்கு அது வழங்கப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் மொழிக்கு ஆக்கமும் ஊக்கமும் பெருமளவில் தந்தார்கள். சாதாரண ஏழையெளிய மக்கள் மத்தியில் தமிழ் மொழி வளர மூலகாரணமாக பேரறிஞர் அண்ணா அவர்கள் விளங்கினார்கள். அண்ணா அவர்களுடைய பெயரால் முக்கியமானவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் விருது வழங்கப்படுகிறது. அந்த வகையில் தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்படுகிறது. கலைஞர்களுக்கு நாம் ஏற்கெனவே உதவி செய்து வருகிறோம். அதையொட்டி தமிழ் அறிஞர்களுக்கு உதவி செய்யும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதுபோல் தமிழ் மொழியைப் பயிற்று மொழியாக எடுத்துப் படிக்கின்றவர்களுக்கு, குறிப்பாக பி.ஏ., பி.எஸ்ஸி. போன்ற படிப்பைப் படிக்கின்றவர்களுக்கு, பாடநூல்கள் வாங்க உதவித் தொகை தருகிறோம். ஆனால் இந்தப் படிப்பைப் படிக்கின்ற மாணவர்கள் ஆங்கிலத்திலே படித்தால், அவர்களுக்கு இந்தச் சலுகை கிடையாது. அதுபோல் பிளஸ் 2 என்று எடுத்துக்கொண்டால், அங்கே தமிழ் பயிற்று மொழி மூலமாகப் படிக்கிறவர்களுக்கு சம்பளம் அல்லது பீஸ் இல்லை, ஆங்கிலத்தில் படிக்கிறவர்கள் சம்பளம் கட்ட வேண்டுமென்ற நிலையை வைத்திருக்கிறோம். இவையெல்லாம் தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதற்காக அரசு மேற்கொண்டுள்ள ஒருசில சலுகைகள். இவையெல்லாம் போதாது,



1983 ஏப்ரல் 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இன்னும் தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சங்கரலிங்கமும், லெட்சுமிகாந்தனும் எடுத்துச்சொன்னார்கள்.

தமிழ் மொழி வளர உறுதுணையாக இருக்கிறவர்களுக்கு, இன்றைக்கு இல்லையென்றாலும் என்றைக்காவது சலுகைகளைத் தந்து தான் ஆக வேண்டும். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்கிற நிலை மெல்ல மெல்ல வர வேண்டுமென்ற அடிப்படையில், அதை மனதிலே கொண்டு, உறுதியாக நிலை நாட்டுவதற்காக இந்த அரசு காரியங்களை நிறைவேற்ற முனைந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் பயிற்று மொழி மூலம் படித்து வருகின்றவர்களுக்கு ஏற்படுகின்ற சிக்கல்களைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். படிப்படியாக அதற்கான வழிவகைகளை நாம் வெளிப்படையாக ஏற்படுத்த வேண்டும். தமிழ் பயிற்று மொழி மூலம், தமிழ் தாய் மொழி மூலம் பயிற்சி பெற்று வருகின்றவர்களுக்குத் தான் முதலிடம் உண்டு என்கிற ஒரு தன்மையை நாம் உருவாக்கிவிட்டால், மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்ட குறைகள் எல்லாம் ஏற்பட வாய்ப்பிருக்காது. அப்படி ஒரு நிலையை நாம் உருவாக்கிவிட்டால், தமிழ் மொழிக்கு அந்தஸ்து ஏற்படும், ஆட்சித் திறமையை அது பெற்றுவிடும். அப்படி வந்துவிட்டால், அந்தந்தப் பொறுப்புகளிலே இருப்பவர்களும் தமிழ் மொழியைப் பயன்படுத்த வேண்டுமென்ற உணர்வை வளர்ப்பார்கள். அதற்கான முயற்சிகளையும் திட்டமிட்டு, ஓரளவுக்கு நாளுக்கு நாள் செய்து கொண்டு தான் வருகிறோம். அந்த வகையில் தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குகின்ற திட்டம் இப்போது வந்திருக்கிறது. மற்ற சிலபல தன்மைகளும் அப்படித்தான் வந்துகொண்டிருக்கின்றன.

வரலாற்றை எடுத்துக்கொண்டால், குறிப்பாக இங்கிலாந்து நாட்டினுடைய வரலாற்றை எடுத்துக்கொண்டால், 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் காலம் வரை அங்கே எங்கும் எதிலும் லத்தீன் மொழியும் பிரஞ்ச் மொழியும் தான் ஆதிக்கம் செலுத்தின. அந்தக் காலத்தில் ஆங்கில மொழி நம்முடைய தமிழ் மொழியைப் போல அங்குள்ள சாதாரண மக்களால் பேசப்பட்டது. வழக்கு மன்றங்களிலும் லத்தீன் மொழி தான். சர்ச்சுகளிலும் லத்தீன் மொழி தான். அதற்குச் சமமாக ஆங்கில மொழி மதிக்கப்படவில்லை. வழக்கு மன்றத்திலிருந்து, பள்ளிக்கூடங்களிலிருந்து, மேல் படிப்பிலிருந்து, பல்கலைக் கழகப் படிப்பு வரை லத்தீன் மொழி என்கிற நிலை இருந்தது. அதுமட்டுமல்லாமல், லத்தீன் மொழியைச் சொல்லித் தந்துகொண்டிருந்த ஆக்ஸ்போர்ட் பல்கலைக்

கழகத்திலிருந்து படித்து டிகிரி வாங்கி வருவது தான் பெருமை என்கிற நிலை கூட அந்தக் காலத்தில் இருந்து வந்தது. அதைப் படிப்படியாக முயன்றுதான்

(மூற்பகல் 11-40)

அவர்கள் மாற்றியிருக்கிறார்களே தவிர, தானாகவே ஆங்கிலத்திற்கு வந்து விடவில்லை. 1731 வது ஆண்டு மூன்றாம் ஜார்ஜ் மன்னர் அங்கே இருக்கிற போது, ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். அந்தச் சட்டம் என்னவென்றால், இங்கிலாந்தில் இருக்கிற எல்லா நீதிமன்றங்களும் 1733 ம் ஆண்டு முதல் ஆங்கிலத்தைத் தான் பயன்படுத்த வேண்டும், அது எந்த வழக்காக இருந்தாலும் சரி, ரிட், அப்பீல் போன்ற எல்லாவற்றிலும் ஆங்கிலம் தான் பயன்படுத்தப்பட வேண்டும்; 1733 க்குப் பிறகு யாராவது ஆங்கிலத்தைப் பயன்படுத்தாமல் பிரெஞ்சு, லத்தீன் போன்ற மொழிகளைப் பயன்படுத்தினால், ஒவ்வொரு தவறுக்கும் 50 பவுண்டு அபராதம் என்று சொல்லி, சட்டத்தைக் கொண்டு வந்த பிறகுதான், ஆங்கிலம் நீதி மன்றங்களுக்கு வந்து, நாளடைவில் இங்கிலாந்து நாட்டிலே முழு அளவில் ஆங்கிலம் இடம் பெற்றது. மக்கள் தானாக ஏற்றுக் கொள்வார்கள் என்றால், சில வகையில் நியாயம், நேர்மை, அவசியம் என்று கருதப்படுவனவற்றை எல்லாம் நாம் வறுபுறுத்தித்தான் நிலை நாட்ட வேண்டும். பிறகு காலப் போக்கில் தானாக ஏற்றுக்கொள்வார்கள். ஒன்றைத் தான் நாம் கவனிக்க வேண்டும். வேண்டுமா, வேண்டாமா என்பது தான் முக்கியமே தவிர, வேண்டும் என்று முடிவுக்கு வந்துவிட்டால், பிறகு முடியுமா, முடியாதா என்ற கேள்விக்கே இடமில்லை. முடியும் என்பதற்கான சான்றுகளை நாம் உலகம் எங்கும் கண்டுகொண்டிருக்கிறோம். அது மேலும் வளர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் கூறியதைப் போன்று மலையாள மொழி அண்மைக் காலத்தில்தான் தோன்றி, அதற்கு இலக்கியம், இலக்கணம் கூட அண்மையில்தான் வந்தன. என்றாலும் கூட, தமிழ் மொழியின் வளர்ச்சியோடு அது இருப்பதைக் காண்கிறபோது, அது விரைவான வளர்ச்சியைப் பெற்றுவருவது தெரிகிறது என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அது ஒரு வகையில் உண்மைதான். இலக்கியத் துறையிலாகட்டும், எழுத்துத் துறையிலாகட்டும், கட்டுரைகள் கவிதைகள் எல்லாம் மிக விரைந்து வளருகிற பாங்கினைத்தான் மலையாள மொழியைப் பொறுத்தவரையில் காண்கிறோம். அந்த வகையில் தமிழுக்கு வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்று அவர்கள் தெரிவித்தார்கள். அந்த வகையில் தமிழ்ப் பேராசிரியர்களும்; தமிழ் அறிஞர்களும் மற்றவர்களும் இதற்கு உறுதுணை புரிய வேண்டுமென்று சொல்வது கூட உண்மைதான். கலையைப் பொறுத்தவரையில், தமிழில் எடுத்துச் சொல்வதில், ஒரு இடர்ப்பாடும்



கிடையாது. இன்னும் சொல்லப்போனால், இலக்கியக் கலை, நாட்டியக் கலை, இசைக் கலை ஆக எந்தக் கலையானாலும், வேறு நாட்டோடு, அது எந்த நாட்டுடனாலும் சரி, போட்டியிட்டு, மிஞ்சி, விஞ்சி நிற்கக் கூடிய திறமையை தமிழகம் பெற்றிருக்கிறது. தமிழ் மூலமாக அதனை நிறைவேற்ற முடியும்.

ஆனால் அறிவியலைப் பொறுத்தவரையில், போட்டியிடுகிற சூழ்நிலை வருகிறபோது, தமிழால் அது இயலுமா, தமிழால் முடியுமா என்ற கேள்வியைக் கேட்கிற நிலைமையை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால் அந்தக் கட்டத்தில் தான், அதை எப்படி நீக்குவது, எப்படிப் போக்குவது என்பதில் நாம் கவனம் செலுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம். அதுதான் உள்ளபடியே முறையே தவிர, அந்த முறையின் மூலமாகத்தான் தமிழை வளர்ப்பதற்கான தன்மையையும் நாம் நாளடைவில் பெறவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அடிப்படைத் தன்மையைப் பார்ப்பீர்களேயானால், சொற்கள் வளரத்தான் செய்யும். அவர்கள் சொன்னது போல், ‘ காஃபி ’ என்பதை ‘ காப்பி ’ என்றுதான் ஆக்க வேண்டும். அதைத் தமிழிலேயே கொண்டு வந்துவிடவேண்டியதுதான். அதற்குப் புதிய புதிய சொற்களைக் கண்டுபிடித்து, அது கம்ப ராமாயணத்தில் வருகிறதா, அகநானூற்றில், புறநானூற்றில் வருகிறதா என்று பார்த்தால், அந்தக் காலத்தில் காப்பியே கிடையாது, அதற்குப் பொருள் இருக்காது என்பதுதான் தெரியவரும். ஆனால் கூடுமான வரையில் மொழி பெயர்க்கக் கூடியதை, புதிய சொற்களாகவே மொழி பெயர்க்க வேண்டியதுதான். இருக்கிற சொற்களைப் பயன்படுத்துகிற வரைக்கும் பயன்படுத்தி, இரண்டாவதாக, மொழி பெயர்க்கக் கூடியவைகளை எளிதாக, இயல்பாக மொழி பெயர்த்துக்கொள்ள வேண்டியது தான். ஆகவே இருக்கிற சொற்களைப் பயன்படுத்தவும் முடியாமல், பயன்படுத்துவதற்கும் வழி இல்லாமல், மொழி பெயர்ப்பையும் செய்ய இயலாமல் உள்ள நேரத்தில் தழுவிக்கொள்ளத்தான் வேண்டும். ‘அதற்குத் தொல்காப்பியனாரே இலக்கணம் வகுத்து வைத்திருக்கிறார். ஆகவே ஓசைகளை மற்றவைகளை எல்லாம் தமிழ் ஒலிக்கேற்ப மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும். ‘காஃபி’ என்ற ஓசை ஆங்கிலத்தின் ஓசைக் குறிப்பு. அதைத்தான் திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் சொன்னது மாதிரி, காப்பி என்று மாற்றும்போது தமிழ் ஓசைக்கேற்ப வந்து விடுகிறது. ஆக தழுவிக் கொள்கிற முறை சிறந்ததாக இருப்பதைக் காண்கிறோம். இப்போது ‘ கார் ’ என்று வந்துவிட்டபிறகு, அதைக் ‘ கார் ’ என்றுதான் எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர, இனிமேல் ‘அதற்கு மொழி பெயர்க்கிறேன்’ என்று சொல்லி, அதை சிற்றுந்து என்றும் உதையுந்து என்றும் சொல்லிக்கொண்டிருப்போமேயானால், நமது நேரம், சிந்தனை எல்லாம் இதிலேதான் போய்விடுமே தவிர வளர்ச்சிக்கு இடம்

இராது. அதேமாதிரி, சைக்கிள், பென்சிலின்—இவற்றிற்காவது ஓரளவுக்குக் கண்டுபிடித்துச் சொல்லிவிடலாம்—ஆனால் ஆரோமைசின், அக்ரோமைசின், ஆஸ்ப்ரோ இவைகளுக்கெல்லாம், நாம் எங்கே போய் தமிழிலே பெயர் கண்டு பிடித்து, எப்போது சொற்களைப் பேசி, எப்போது மருந்து வாங்குவது? வேறொரு சொல்லைக் கண்டுபிடித்தாலும், வேறொரு மருந்தை அவன் எடுத்துக் கொடுப்பானே தவிர, இந்த மருந்தை எடுத்துக் கொடுப்பானா என்பது நமக்கு ஐயப்பாடாக இருக்கும். இவற்றிற்கெல்லாம் தழுவிக் கொள்ளவேண்டுமே தவிர, அந்த முறையில்தான் தமிழ் வளர முடியுமே தவிர, அதற்காக இருக்கிற சொல்லைப் போக்கவேண்டுமென்பது அல்ல. அதற்காக 'சர்க்கிள்' என்று சொல்ல வேண்டியதில்லை, ''வட்டம்'' என்று இருக்கிறது. அதற்காக 'டயாமீட்டர்' என்று எழுதவேண்டியதில்லை, 'விட்டம்' என்று இருக்கிறது. 'கார்னர்' வேண்டாம், 'மூலை' என்று சொல்லலாம், 'லைன்' என்று வேண்டிய தில்லை, 'கோடு' என்று இருக்கிறது. எது எதைத் தழுவ வேண்டியிருக் கிறதோ அதைத் தழுவி, தழுவ முடியாத கட்டத்தில் நமது மொழியையே பயன் படுத்தலாம். அப்படித் தழுவிக்கொள்கிற நிலை இருக்குமேயானால், அறிவியல் துறையிலும் மற்ற துறைகளிலும் எளிதாக வளர்வதற்கான சூழ்நிலை, தமிழைப் பொறுத்தவரையில், வரமுடியும்.

அறிவியல் வளரவேண்டுமானால், ஒன்றை நாம் எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். நான் கல்வித் துறை அமைச்சராக இருந்த காலத்திலிருந்து தொடர்ந்து ஒன்றைச் சொல்லிக்கொண்டு வருகிறேன். இன்றைக்கும் சொல் கிறேன். தமிழ் ஆக்கமும் ஊக்கமும் பெறவேண்டும் என்பதில் அழுத்தமான கருத்தைக் கொண்ட நான்தான் அதைச் சொல்கிறேன். தமிழ் எதிலே வளர வேண்டுமென்றால், கட்டுரையின் மூலமாக, கவிதையின் மூலமாக, நாடகத்தின் மூலமாக, எழுத்தின் வாயிலாக, பல்வேறு சிறு கதைகளின், பெருங்கதைகளின் மூலமாக, இலக்கியங்களின் மூலமாகத்தான் தமிழ் வளர முடியும் ஆனால் தமிழை அறிவியல் மூலமாக வளர்க்கிறோம்' என்றால் வளராது. ஆங்கிலத்தை எடுத்துக்கொண்டால் கூட, ஷேக்ஸ்பியர், மில்ட்டன், வோர்ட்ஸ்வொர்த், ஷெல்லி, கோல்ட்ஸ்மித், ஜான்ஸன் போன்றவர்கள் மூலமாகத்தான் ஆங்கிலம் வளர்ந்திருக்கிறதே தவிர, ஃபிசிக்ஸ் மூலமாகவோ, கெமிஸ்ட்ரி மூலமாகவோ, ஜுவாலஜி மூலமாகவோ ஆங்கிலத்தை வளர்க்க யாரும் நினைக்கவில்லை. ஆனால் அறிவு பெறவேண்டுமென்பதற்காகத்தான்; அறிவியலை எல்லாம், தமிழில் சொல்லிக் கொடுக்கிறோமே தவிர, அதன் காரணமாக தமிழ் வளர வேண்டுமென்பதற்காக அல்ல. தமிழ் வளர்வது, கவிதைகளில் புதிய, புதிய



சொற்களை உருவாக்கி, புதிய உவமைகளைச் சொல்லி, உருவகங்களைக் கண்டு பிடிப்பதாலும், கவிதைகள், கட்டுரைகள் மூலமும் தான் வர முடியும் ஃபிசிக்ஸ் டெக்ஸ்ட் புக் மூலமாகவோ, ஜுவாலஜி டெக்ஸ்ட் புக் மூலமாகவோ ஆங்கிலமே வளரவில்லை என்பதைப் பார்த்தோம். நாம் ஏன் தமிழில் அவை இருக்க வேண்டுமென்று சொல்கிறோம் என்றால், அறிவு பெறத்தான். தமிழைப் பயில்வது என்பது ஒன்று; தமிழால் பயில்வது என்பது ஒன்று; தமிழைக் கொண்டு பயில்வது என்பது ஒன்று. தமிழகத்தில் எதிலும் தமிழ், எங்கும் தமிழ், என்றும் தமிழ் என்பதற்கு தமிழைப் பயின்றேயாக வேண்டும். தமிழால் முடிந்தவற்றையெல்லாம் தமிழில் பயில வேண்டும். தமிழைக் கொண்டு பயில வேண்டுமென்றால், இப்போது இருக்கிற அறிவியல் முறைகளைப் பயில முன்வர வேண்டும். அப்படி வந்தால்தான் முடியும். நான் ஏன் இதைச் சொல்ல வருகிறேன் என்றால், ஜப்பான் அப்படித்தான் வளர்ந்திருக்கிறது. நான் ஜப்பானுக்குப் போயிருந்தபோது, 5 நாட்கள் தங்கி மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகளில் எப்படிப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்று கவனித்தபோது, புரியவைக்க ஜப்பான் மொழியைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் டெக்னிகல் டெர்ம்ஸைப் (Technical Terms) பொறுத்தவரையில் இன்டர்நேஷனல் டெர்ம்ஸைத்தான் International Terms பயன்படுத்துகிறார்கள். அவைகளை ஜப்பான் மொழியில் மொழிபெயர்த்து குழப்பம் விளைவிக்கிற நிலையில் அவர்கள் இல்லை.

உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். $H^{2}O$ என்று Chemistry யில் இருக்கிறது. $H^{2}O$ என்றால் Water ஐக் குறிக்கிற ஒரு சொற்றொடர். $H^{2}O$ என்ற இந்த formula, symbol, equation, அறிவியலில், ஆங்கிலத்தில்தான் இருக்கிறது. இது தமிழில் வரவில்லை என்று சொல்வதன் காரணமே இந்த formulas என்பவை symbol ஐப் பொறுத்து equation ஐப் பொறுத்து அமைகின்றன. இந்த மூன்றிலும் International Terms ஐ அப்படியே கண்டுபிடித்தோம் என்றால் தமிழ் மூலம் புரியவைத்து, அது வளருகிற நிலைமை வந்தால், நாம் ஜப்பானுக்கு ஈடாக தமிழகத்தை வளர வைக்க முடியும். $H^{2}O$ வுக்கு நாம் 'H என்றால் நீர்வாயு, O என்றால் உயிர்வாயு, நீர்வாயுவில் 2 உயிர் வாயுவில் 1' என்று சொல்லிக் கொண்டு நின்றால் நாம் எங்கேபோய் எப்படிச் சேருவது? ஆகவே $H^{2}O$ என்றால் Hydrogen 2 atom, Oxygen 1 atom சேர்ந்தது என்று இந்த சொல்லிலேயே காண்பித்துவிட்டார்கள். $H^{2}O$ என்பதை அப்படியே கற்றுக் கொள்ள வேண்டியது தான். எப்படியும் நாம் ஆங்கிலம் கற்றுக் கொள்ளத் தான் போகிறோம். தமிழை மட்டுமே கற்றுக்கொண்டு ஆங்கிலத்தைக் கற்காமல் இருந்து விடப்போவதில்லை. $(A+B)2$ என்றால் 'அ' மற்றும் 'ஆ' வின் இரட்டிப்பு; ஆக 2 'அ' 2-ஆ' வன்னா, அப்புறம்

'அ' வுடைய இரட்டிப்பு 'ஆ' வன்னாவின் இரட்டிப்பு, இரண்டு அ-வன்னா இரண்டு ஆ என்று சொல்லிக்கொண்டே இருக்க வேண்டியது தான். முதல் வாக்கியத்தை ஏதோ தட்டுத் தடுமாறி சொல்லிவிட்டேன். ஆனால் Higher Mathematics ல் M.Sc., (Maths) க்குப் போகும் போது, இப்படிச் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. $(A+B)^2$ என்று அப்படியே எடுத்துக் கொண்டுதான் ஆகவேண்டும். $(A+B)^2 = A^2 + B^2 + 2AB$ என்று போய்க் கொண்டேயிருக்க வேண்டியதுதான். அப்படிப் போனால்தான் ரஷியா போன்ற நாட்டு விஞ்ஞானிகளுடன் Compete பண்ண முடியும்.

(முற்பகல் 11-50)

தமிழ் மொழி ஆங்கிலத்தை விட எளிமையான மொழி; ஆனால் நாம் அதைக் கடினமாக ஆக்கிக் கொண்டிருக்கிறோம். இதை நான் சொல்வதற்குக் காரணம், தமிழ் மொழியில் எழுத்துக்கு என்ன உச்சரிப்போ அதுதான் சொல்லுக்கு உச்சரிப் பாக இருக்கிறது 'அ' 'வ' 'ன்' என்று மூன்று எழுத்துக்களையும் கூட்டினால் அவன் என்று தான் வரும். 'கா' என்ற எழுத்தையும் 'டு' எழுத்தையும் கூட்டினால் காடு என்றுதான் வரும். அதைப் போலவே 'ஓ' என்கிற எழுத்தையும் 'டு' என்கிற எழுத்தையும் கூட்டினால் 'ஓடு' என்றுதான் வரும். 'கூ' என்னும் எழுத்தையும் 'ட்' என்னும் எழுத்தையும், 'ட' என்னும் எழுத்தையும் 'ம்' என்னும் எழுத்தையும் கூட்டினால் 'கூட்டம்' என்றுதான் வரும். அதைப் போலவே 'அ' என்னும் எழுத்தையும் 'வை' என்னும் எழுத்தையும் கூட்டினால் 'அவை' என்றுதான் வரும். இப்படி எழுத்துக்கு என்ன உச்சரிப்போ அதுதான் சொல்லுக்கும் அமைவது தமிழ் மொழியின் சிறப்பு. ஆனால் ஆங்கிலத்தில் அப்படி அல்ல, எழுத்து என்று சொல்லும்போது ஆங்கிலத்தில் 'R' 'e' 'a' 'd' என்று வருகிற எழுத்துக்கள் ஒன்றாகச் சேர்ந்து சொல்லப்படும் போது, அதாவது வார்த்தை என்று வரும்போது, 'read' என்று வருகிறது. ஆங்கிலத்தில் 'P' 'u' 't' என்றால் 'Put' என்கிறோம். ஆனால் 'b' 'u' 't' என்றால் 'but' என்று சொல்ல வேண்டும். இப்படி ஆங்கிலத்தில் ஒவ்வொரு சொல்லை யும் தனித்தனியாகக் கற்றுக்கொள்ள வேண்டும். இதைப் போலவே. c, h, a, i, r, என்ற எழுத்துக்கள் ஒன்றாகச் சேர்ந்தால் Chair ஆகிறது. ஆனால் c, h, a, r, a, c, t, e, r, என்ற எழுத்துக்கள் சேரும்போது அதன் உச்சரிப்பு character என்று ஆகிறது. Chair என்னும் வார்த்தையில் c h என்ற எழுத்துக்கள் சேர்ந்தால் 'சே' என்ற சத்தத்தைக் கொடுக்கிறது. ஆனால் அடுத்த வார்த்தையில் அதே c h என்ற எழுத்துக்கள் ஒன்றாகச் சேர்ந்து 'கே' என்ற சத்தத்தைக் கொடுக்கிறது. இப்படி நம்மை அறியாமலேயே ஒவ்வொரு வார்த்தையையும் ஆங்கிலத்தில் கற்றுக்கொண்டு அந்த மொழியைப் பார்த்து சுலபமான மொழி என்கிறோம்.



நம்முடைய தமிழ் மொழியைப் பார்த்து கடினமான மொழி என்கிறோம். உண்மையில் தமிழைப் போல் சுலபமான மொழியே இல்லை. இப்படியே நான் வகுப்பு நடத்த ஆரம் பித்தால், அதற்கு அவையின் நேரம் இடம் தராது என்ப தால் விட்டுவிடுகிறேன்.

தமிழ் மொழியைப் பொறுத்த வரையில். தமிழ் எழுத் துக்களை மட்டும் கற்றுக் கொண்டால். சொல் உச்சரிப்பு தானாகவே வந்து விடும். ஆனால் ஆங்கில மொழி அப்படி யல்ல. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், "பைனான்ஸ்" என்று ஒரு வார்த்தை இருக்கிறது. அதை "பைனான்ஸ்" என்றும் உச்சரிக்கிறார்கள், 'பினான்ஸ்' என்றும் உச்சரிக்கிறார்கள். இதில் யார் சொல்லுவது சரி என்று யாருக்குமே தெரியவில்லை. அதைப் போலவே p, i, n, என்றால் பின் என்கிறோம். ஆனால் p, i, n, e, என்றால் பைன் என்கி றோம். இப்படி ஒவ்வொரு சொல்லாகக் கற்றுக் கொண்டுதான் ஆங்கிலத்தைப் பேச வேண்டும். தமிழ் மொழி அப்படியல்ல.

எனவேதான் சொல்லுகிறேன், தமிழ் மொழியில் தூய்மையாக இருக்கிற சொற்களை, எளிமையாகப் பயன்படுத்தக்கூடிய முறையில் உள்ள சொற்களை அப்படியே பயன்படுத்த வேண்டும். இது முதல் கடமை. 'மைக்ரோபோன்' என்ற இந்தக் கருவியை ஏற்கெனவே கண்டுபிடித்துவிட்டார்கள். தமிழ் மொழி யில் இருக்கிற சிறப்பு என்னவென்றால் இங்கேதான் ரூட் வேர்டு என்று சொல்லப்படும் மூலச் சொற்களும் பெயர்ச் சொற்களும் இருக்கின்றன. தமிழ் மொழியில் ஒலி, பெருக்குதல் என்ற இரண்டு வார்த்தைகளை வைத்துக் கொண்டு இதற்கு 'ஒலி பெருக்கி' என்ற பெயரை வைத்திருக்கிறோம். இப்படி உருவாக்குகிற தன்மை தமிழ் மொழிக்கு மட்டும்தான் உண்டு. எனவே இந்த வகையில் மொழி பெயர்க்கக் கூடியவைகளை மட்டுமே மொழி பெயர்க்கலாம். இந்த இரண்டும் இல்லாத இடங்களில் தழுவிக் கொள்ளத்தான் வேண்டும் என்றால், அதைச் செய்துதான் ஆக வேண்டும். அதாவது சிம்பல்ஸ், ஈக்வே ஷன்கள், பார்முலாக்கள், போன்ற சமன்பாடுகள், வாய்ப்பாடுகள் போன்றவை களை அப்படியேதான் உபயோகிக்க வேண்டும். பை, ஆல்ஃபா, பீட்டா, காமா என்பனவற்றையெல்லாம் அப்படியேதான் உபயோகிக்க வேண்டும். அதைப் போலவேதான் $(A+B^2)$ என்பதை அப்படியேதான் சொல்ல வேண்டும் $CO_2$-ஐ கார்பன் டையாக்சைடு என்று சொல்லுகிறோம். அதைப் போய் க-1, உ-2 என்று சொல்லிக் கொண்டிருந்தால் அந்த இடத்தைவிட்டு நகரவே மாட்டோம்.

எனவே இப்படிப்பட்ட முறைகளில் நாம் முயலுவோமானால், நாம் உண்மையிலேயே முன்னேற முடியும். ஜப்பான் மொழி எப்படி இன்டர்நேஷனல் டெர்ம்ஸ்—அகில உலகக் கலைச் சொற்களை—அப்படியே ஏற்று வழங்கி வளர்ந்திருக்கிறதோ அப்படி, தமிழ் மொழியும் ஏற்று வழங்கி வளர்ந்தால் தான் நல்லது. அப்போதுதான் எல்லாத் துறையிலும் நாம் முன்னேற முடியும். அப்படிச் செய்வோமானால், ஜப்பானைவிட நாம் மேலான முறையில் வளர முடியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னபடி, எதிர்காலத்தில் அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதும் உண்டு. இல்லையென்றால் இடர்ப்பாடுகள் தான் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. இப்போது வெளியிடப்படும் பல நூல்களில் இரண்டு பக்கங்களைக்கூட சேர்ந்தாற்போல் படிக்க முடியாத அளவுக்கு அவற்றின் மொழி பெயர்ப்புகள் அமைந்திருக்கின்றன. இது சரியல்ல. இவைகளெல்லாம் எளிதாக்கப்பட வேண்டும். இந்த வகையில் அரசு பல்வேறு முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டிருக்கிறது என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்தச் சட்ட முன்வடிவுக்கு நல்ல ஆதரவைத் தந்து ஆதரித்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மொழி காத்த தியாகிகளுக்கு உதவித் தொகை வழங்குவது பற்றிய இந்த மசோதா நிறைவேறும் இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடமிருந்து ஒன்றை மட்டும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். கடந்த 45, 50 ஆண்டுக் காலமாகவே தமிழ் மொழியைக் காக்க உயிர் நீத்தவர்களும், சிறை சென்றவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இந்த உதவித் தொகையைப் பெறுவதற்கு முன்னால், அதற்கான சான்றிதழ்களை ஒப்படைக்க வேண்டுமென்று நடைமுறையில் கேட்பார்கள். அத்தகைய சான்றிதழ்களை நீதிமன்றங்களிலோ அல்லது சிறைச்சாலைகளிலோ அல்லது வேறு எங்கிருந்தோ பெற்றுக் கொடுத்தால் தான், உதவித் தொகை கிடைக்கும். இல்லையென்றால் அதைப் பெறமுடியாத நெருக்கடியான நிலை ஏற்படும். எப்படி விடுதலை இயக்கத்தில் ஈடுபட்ட தியாகிகள், சான்றிதழ் பெற முடியாத நிலையில், பிற தியாகிகள் அல்லது தங்களோடு சிறைச்சாலையில் இருந்த பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது பொது நலனில் அக்கறை கொண்டவர்கள் அல்லது அரசியல் வாதிகள் ஆகியோரிடமிருந்து சான்றிதழ் பெற்று உதவித் தொகை பெறுகிறார்களோ அதைப்போல, மொழிப் போரில் ஈடுபட்ட தியாகிகளும் மொழிப் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக்



கொண்ட இயக்கத்தைச் சார்ந்த அமைப்புகளிடமிருந்து பரிந்துரை செய்யும் கடிதங்கள் பெற்றால், அவைகளை ஏற்றுக்கொண்டு உதவித் தொகை வழங்குவதற்கான முறையில் எளிய முறையை உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆறுமுகம் அவர்களும், திரு. மாணிக்கம் அவர்களும் இதைக் குறித்து கருத்து தெரிவித்திருக்கிறார்கள். உதவித் தொகையைப் பெறுவதில் அதிகமான இடர்ப்பாடுகள் இல்லாமல் இருக்க வழிவகை செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதே எண்ணத்தைத்தான் அரசும் கொண்டிருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்ட பிறகு, இதற்கான விதிமுறைகள் தயாரிக்கப்பட இருக்கின்றன. அந்த வகையில் விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்போது, சிக்கல்கள் அல்லது இடையூறுகள் அல்லது மற்றவைகள் வந்தால், மீண்டும் அவற்றைத் திருத்துவதற்கான நடைமுறையைக் கொண்டு வரலாம்.

விடுதலைப் போராட்ட தியாகிகளுக்குக் கூட, முதலில் சான்றிதழ் சிறைச்சாலையில் இருந்து பெற வேண்டும் என்றும் 3 மாதம் சிறையில் இருந்திருக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. பிறகு அது 1 மாதம் என்று ஆனது. அதற்குப் பிறகு அது 3 வாரம் என்று ஆக்கப்பட்டது. அதுமட்டுமல்ல. 1921, 1931 ஆம் ஆண்டுகளில் சிறைக்குச் சென்றவர்களைப் பொறுத்த வரையில், சான்றிதழ்கள் பெறுவது என்பது எளிதல்ல, அவைகள் கிடைக்காது, அன்மைக் காலத்தைச் சார்ந்தவைகள் மட்டும் கிடைக்கும் என்ற காரணத்தால், அவர்களோடு கூட இருந்த பெரியவர்கள், நம்பிக்கைக்கு உரியவர்கள் 'தங்களோடு இவர்களும் இருந்தார்கள்' என்று சொன்னாலே போதும் என்ற அளவுக்குச் செய்திருக்கிறோம். அதைப்போல நடைமுறையில் விதிகள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும்போது எழும் பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வுகளைக் காணலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொல்வதைப் போல், தளர்த்த வேண்டிய அவசியம் வந்தால், நியாயம் கிடைக்கும் வகையில் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யலாம். இதில் பல கட்சிகளையும் சார்ந்தவர்கள் பங்கேற்று இருக்கிறார்கள். எனவே அத்தனை பேருக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தான் இந்தச் சட்டமே கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே விதிமுறைகள் வகுக்கப்படும்போது, இந்தக் கருத்து கவனத்தில் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 ஏப்ரல் 27

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்-பல்வேறு விதித் துறைகள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1982) பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்-பல்வேறு விதித் துறைகள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1982) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, தமிழ் அறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்-பல்வேறு விதித் துறைகள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1982) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1983).**

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1983) @ ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

---

@ 428—473 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1983 ஏப்ரல் 27]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1983) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

(நண்பகல் 12-00)

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டமுன்வடிவு மீது பேசுகின்ற நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காக நான் தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தமிழகத்திலுள்ள நகராட்சித் தலைவர்கள் பதவிகளில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட ஆதி திராவிடர்களுக்கும், 15 சதவீதம் பெண்களுக்காகவும் இந்தச் சட்டத்தின் மூலமாக ஒதுக்கியுள்ளார்கள். இதை பொதுவாக தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்கள் வரவேற்கிறார்கள்.

சென்னை நகரம் சாதாரண பஞ்சாயத்தாக இருந்ததை மாநகராட்சியாக மாற்றுகிற சட்டத்தை 1920 ஆம் ஆண்டு கொண்டு வந்தார்கள். இன்றைக்கும் சென்னை மாநகரம் பெருகி இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் வந்து செல்லுகிற சூழ்நிலையில் தண்ணீர் பற்றாக்குறையோடு இருக்கிறது. சென்னை நகர தண்ணீர் பற்றாக்குறையைப் போக்குவதற்காக இன்று 27—4—1983 தமிழக முதல்வர் அவர்களும், ஆந்திர முதல்வர் திரு. என்.டி.ஆர். அவர்களும் காலை 11.55 மணிக்கு அடிக்கல் நாட்டுகிறார்கள். இந்த மகிழ்ச்சிகரமான நன்னாளில் நான் பேசும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். 1920 ஆம் ஆண்டு மாநகராட்சிச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியது இந்த மாமன்றத்தில்தான். அப்போது சர். பி. டி. தியாகராய செட்டியார் அவர்கள் இங்கே இருந்தார்கள். அந்தச் சட்டத்தை நிறைவேற்றிய நாளிலிருந்து 1923ஆம் ஆண்டு வரையில் அவர் சென்னை மாநகராட்சியினுடைய தலைவர் பொறுப்பேற்று பல அரிய, நல்ல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார். சர். பி. டி. தியாகராய செட்டியார் அவர்கள் பிறந்த நாளான இன்று தமிழக முதல்வர் அவர்கள் சென்னை நகரத்திற்குத் தண்ணீர் கொண்டுவர கால்கோள் விழா எடுத்து வருகிறார்கள். சர் பி. டி. தியாகராய செட்டியார் அவர்கள் இதே நன்னாளில் பொறுப்பை ஏற்றார்கள் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் கிட்டத்தட்ட 41 ஆண்டுகள் சென்னை

மாநகராட்சியின் உறுப்பினராக இருந்திருக்கிறார். அதிலே மூன்று ஆண்டுகள் மாநகராட்சியின் தலைவராக இருந்து செய்த மாபெரும் சேவைகளை இன்றைக்கு நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர் இறந்த தேதி 1925 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதி ஆகும். வெள்ளைக்காரர்கள் ஆதிக்கத்திலே படித்தவர்கள்தான் உத்தியோகத்திலே இருக்க முடியும் என்ற அந்தக் காலத்தில் சர் பி. டி. தியாகராய செட்டியார் அவர்கள் தென் இந்தியர் நல உரிமைச் சங்கத்தை ஆரம்பித்து, அது படிப்படியாக முன்னேறி, பிறகு ஜஸ்டிஸ் கட்சியாகி, பிறகு திராவிடர் கழகமாகி, பிறகு திராவிட முன்னேற்றக் கழகமாகி, அதற்குப் பிறகு அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக மாறியிருக்கிறது. அந்த நல்லவருடைய பிறந்த நாளில் குடிதண்ணீர் பிரச்சினை தீர்வதற்காக கால்கோள் விழா வருவதும், இந்தச் சட்டம் வருவதும் சிறப்பு மிக்கதாகும். சட்டமன்றப் பேரவையில் நேற்றே வந்திருக்கலாம். ஆனால் மேலவையில் இன்றைக்குத்தான் வந்திருக்கிறது. 1920 ஆம் ஆண்டு இதே நாளில் இந்த அவையில் அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அப்போது பேரவை இல்லை, மேலவைதான் இருந்தது. இந்த சிறப்புமிக்க நாளில் புரட்சித் தலைவர் அவர்கள், ஆந்திராவிலிருந்து வரும் "தெலுங்கு கங்கை"-க்காக கால்கோள் விழா நடத்துவதை இந்த நேரத்தில் நினைவுகூரி, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைக் கூறி, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று, வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன்.

வணக்கம்.

(மாற்றுத் தலைவர் திரு. ஜே. எம். மியாகான் தலைமை)

Thiru A. R. DAMODARAN: Mr. Vice-Chairman, Sir, I rise to welcome this Bill because we have been expecting this for a long time. While we have had reservation in our Municipalities for Scheduled Castes and Scheduled Tribes and also for women, one important extension of the principle of reservation here is that the number of Scheduled Castes and Scheduled Tribes is sought to be increased in all Municipalities. For example, even in Cuddalore in a Municipal Council of 32 Members, we are to have two seats reserved for the Scheduled Castes and Tribes and two seats for women.

As far as Scheduled Castes and Tribes are concerned, they were elected from single member constituencies and as far as women are concerned, they were standing along with men for election to Municipal Council, if my memory is not incorrect, because it is such a long time since we had elections that we have almost



forgotten what it was like. As I said, I am glad the principle of reservation is being extended because we want to help the weaker section. While it may be a little difficult to get adequate number of women to contest all these elections, still it is a progressive sign and as I said, we are in such a desperate stage today that even if the Hon. Minister had wanted to provide for reservation for Eskimos, Camels and Kangaroos, we would also have accepted. It is because we want elections to be conducted. Therefore, Sir, I am happy that the Minister has brought this Bill.

I would like to point out one or two difficulties that are likely to arise and there is no use of appealing to political parties not to go to Court. Every citizen in this country can go to Court and no political party can handcuff him and say that he should not go to Court. Therefore, I wish to express a caution in this because we are now proceeding on the basis of enumeration done in 1979 or 1980—I do not remember the exact year. It is mentioned that it is 1978. From what I heard from the Special Officers, they have advertised that all those persons who have reached the age of 18 should register themselves as voters because this Government have reduced the eligibility age to 18. So far as delimitation of wards is concerned, there are certain new areas which have come into the Municipal areas after 1979 or 1978. One possible area which may give room for disagreement is this. How are the Government going to attach these new areas to the existing wards that exist? I mention this because I would like the Hon. Minister to have a discussion with officials of the Local Administration Department on this question. If there is a ward having 5,000 voters and there is an adjacent ward having 4,800 voters, how will the Government include the new area with a population of 1,500? How will the Government add on the new population of the new colony that has come into the Municipal area to the existing ward? If it is done on some rough-and-ready principle, some citizen in that particular ward may go to Court. It is only because I wish to avoid unnecessary litigation that I would like the Hon. Minister to have a discussion with his officials because hardly any time is left. I would very much wish that this delimitation of wards also is completed as quickly as possible so that objections received may be heard quickly.

Sir, one important factor that is to be borne in mind—and this is of some special significance to the Legislative Council—is that even if the Hon. Minister has elections to the 96 Municipalities, we will still not be able to elect representatives to the Legislative Council.

[Thiru A. R. Damodaran] [1983 ஏப்ரல் 27

Twenty-one Members have to come here from the Local Authorities Constituencies. Of them, one has to come from the Madras Corporation Constituency. That one Member can possibly come in if elections to the Madras Corporation are going to be held. As far as the remaining 20 Members are concerned, they have to be elected, not only by the Municipalities, but also by the Panchayat Unions and the Panchayats that are to be brought into existence after elections. As far as this House is concerned, until the Hon. Minister and the Government are able to expedite polls to Panchayats and Panchayat Unions, there is no chance of 20 representatives from the local bodies being able so sit in this August House. The Hon. the Chief Minister has been able to give us an assurance and I would like to thank him very much for his assurance. He has said that, even if people should go to Court in one or two areas, he will not conduct elections in those specific areas but he will see to it that elections are conducted in other areas. The manner in which people will go to Court and how the Courts may interpret the legislation is a matter that I can leave only to the Courts to decide. But I do hope that this assurance that has been given by the Hon. the Chief Minister will be implemented faithfully and that, even if there are difficulties in one or two wards of a particular Municipality, the remaining elections to the other Municipalities will not be stayed on account of such Court action because, as I have been pointing out, it is very necessary for us to have representatives on all these bodies so that the work of local administration may proceed smoothly and in the fashion in which we want it to proceed.

(பிற்பகல் 12-10)

The Hon. Minister has made some special reservations also in the matter of election of Chairmen of Municipalities. They may be Chair-women also though that term has not been used. He is making a very special provision by reserving 15 per cent for women. So, we may hereafter have Chairmen or Chair-women in the Municipalities. But that is a different question. Here again, I was under one very pleasant impression which arose when the Hon. Minister introduced the Policy Note on Municipal Administration. When we discussed that Policy Note, the hon. Members of the House would have noted that Udumalpet was included in all the schemes. Now, I am sorry that Udumalpet has not been listed for reservation, at least for women candidates. I am sure that the Hon. the Minister for Local Administration, in keeping with his philosophy of giving



1983 ஏப்ரல் 27] [Thiru A. R. Damodaran]

Udumalpet the maximum importance, will also ensure that Udumalpet at least is reserved for women. He will be doing a great service to the principle which the Hon. the Chief Minister has explained, in that he should set an example by reserving his own Municipality. I am sure that there must be many lady candidates available.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ரிசர்வேஷன் செய்வதில் அதிக பெண்கள் இருக்கின்ற பகுதி, அதிக ஆதி திராவிடர்கள் இருக்கின்ற பகுதி என்று அந்த மாதிரி கணக்கெடுத்தால், உடுமலைப்பேட்டையில் பெண்கள் அதிகமாக இருக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் : அங்கே பெண்கள் அதிகமாக இருக்கின்ற மாதிரிதான் நான் கேள்விப்படுகிறேன். அப்படி இல்லை என்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவருடைய பதிலில் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

I only mention this because he will be able to answer in his reply. I am sure he will give my request every consideration it deserves. I would only like to thank the Government very sincerely for carrying out the assurance which they have given and I hope there will be no impediment to the conduct of the elections. We are all anxious that elections should be held. There is no question of challenge at all even as far as political parties are concerned. I would like the Hon. Minister to clearly remember, irrespective of what we commented, that we fully realise that all political parties are ready to contest the elections. It is good, Sir, because we may be able to judge our strength in those areas. I am sure the ruling party also will be able to achieve success in many areas and it is left to the electors and there is no question of any challenge. We are only interested that local bodies should come back to life and that our Corporations, Municipalities, Panchayat Unions and Panchayats should be able to play their legitimate part in building up and developing the rural economy. Thank yau, Sir.

செல்வி ஆ. லீலாவதி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு பற்றி ஒரு சில வார்த்தைகளை நான் கூற எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவை நான் மனமார வரவேற்கிறேன். ஏனென்றால், இந்தச் சட்டமுன்வடிவிலே நகராட்சியில் உள்ள வார்டுகளில், நகர மன்றத் தலைவர் பதவியிலே எல்லாம்

தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் மலைவாழ் பழங்குடி மக்களுக்கு 18 பேர்களுக்கு மிகாமல், 15 பெண்களுக்கு மிகாமல் இட ஒதுக்கீடு செய்து தந்த பிறகு, நகராட்சித் தேர்தலை நடத்தலாம் என்று அரசு முடிவெடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். பெண்களுக்கென்று தனிப்பட்ட இடம் ஒதுக்கீடு கொடுத்திருப்பது ஒரு புரட்சிகரமான திட்டம். பெண்களுக்கு அதிகமான வாய்ப்புக்கள் கொடுக்க, அவர்கள் இதில் போட்டிக்கு வரமாட்டார்கள் என்ற நிலையை மாற்ற, அரசு அவர்களை இதிலே ஈடுபடுத்தி அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இட ஒதுக்கீடு செய்து கொடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். பெண்கள் அதிகமாக நாட்டிற்குச் சேவை செய்ய முன்வர வேண்டும் என்று கருதுகிறார்கள். ஒரு குடும்பத்திலே ஒரு பெண் சாமர்த்தியமான பெண்ணாக இருந்தால், அந்தப் பெண் முன்னுக்கு வருவதற்கு இந்த மாதிரி நிலைமைகளை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த சாமர்த்தியமான பெண் ஒரு தலைவர் பதவியிலே அல்லது பொறுப்புள்ள பதவியிலே இருக்கும்போது, அதை ஏற்றுக்கொள்ளும்போது, அந்த நாடு நிச்சயமாக முன்னேறும் என்பதை யாரும் ஒப்புக்கொள்ள முன்வருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

பெண்களுக்கு என்று இவ்வாறு ஒதுக்கீடு செய்வது மட்டுமல்லாமல், அவர்களை ஊக்குவிக்கவும் அரசு முன்வர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பெண்கள் மிகச் சாமர்த்தியமானவர்களாக இருந்தால், அவர்கள் இந்தத் தேர்தலில் நின்று அவர்கள் வெற்றி பெற்று வருவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். அந்த முறையிலே உதவியாக இருக்க வேண்டும். அவர்கள் வெற்றி பெற்று வந்த பிறகும் அவர்களுக்கு அரசு உதவியாக, நல்ல உறுதுணையாக இருக்க வேண்டும். அப்படி உறுதுணையாக இருந்து அவர்கள் நல்ல காரியங்களைச் செய்ய வரும்போது, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பெண்கள் வெளியில் வருவது என்பது மிகவும் அரிதான ஒரு காரியமாக இருக்கிறது. நம்முடைய பாரதியார் அவர்கள் 100 ஆண்டுகளாக பெண்கள் வெளியில் வந்து பெண்கள் நாட்டிற்காகச் சேவை செய்ய வேண்டும் என்று கூறியபோதும், பெண்கள் அவர்கள் என்னதான் படித்திருந்தாலும், நாட்டின் சேவைக்கு வாாமல் இருப்பது ஒரு பெரிய துர்ப்பாக்கியமானதாக இருக்கிறது. ஒருவேளை அவர்கள் அவர்களுடைய சேவையைச் செய்ய வருகின்றபோது, அவர்களுக்குப் பல இடர்ப்பாடுகள் இருக்குமோ என்று பயந்துதான் இருப்பார்கள் என்று கருதுகிறேன். மிகச் சாமர்த்தியமாக இருக்கின்றவர்களுக்கு, அவர்களுக்கு ஆர்வமும்,



ஆற்றலும் இருந்தால்கூட, வெளியிலே வரத் தயக்கம் இருக்கிறது. அதனால் அவர்கள் வரத் தயங்குகின்றார்கள். என்னுடைய கசப்பான அனுபவத்திலே சொல்கிறேன். பெண்கள் பதவிக்கு வரும்போது, எந்தெந்த அளவுக்கு அவர்கள் துன்பங்கள் அனுபவிக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அந்தத் துன்பங்களை எல்லாம் களைய அரசு முன்வர வேண்டும். அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று வந்தால், அவர்கள் பதவியில் காரியங்களை ஆற்ற அரசு அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் நிச்சயமாக நம்முடைய தமிழகத்திலே ஒரு சில ஆண்டுகளில் அவர்கள் பெரிய காரியங்களில் ஈடுபடுவார்கள். இப்படிப்பட்ட நிலையில், பெரிய புரட்சிகரமான திட்டங்களில் ஈடுபட்டு நாட்டை முன்னேற்றப் பாடுபடுவார்கள். நாடும் முன்னுக்கு வரும் என்பதில் நமக்குத் சந்தேகம் இல்லை என்பதைக் கூறிக்கொண்டு, இந்த சட்டமுன்வடிவை வரவேற்று நான் அமைகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். பெண்களுக்கும் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கும் இட ஒதுக்கீடு செய்து அவர்களும் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் தேர்வு பெறுகின்ற வாய்ப்பினைப் பெற்று பதவிகளை அடைந்து அவர்கள் ஜனநாயகக் கடமைகளைச் செய்வதற்கு ஒரு நல்ல வழியைச் செய்கின்ற இந்தச் சட்ட முன்வடிவைப் பாராட்டுகிறேன். இப்படிச் செய்கின்ற ஒதுக்கீடுகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலம் வரை என்று வரையறை செய்து, இவர்கள் எல்லாம், பெண்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள் வந்து பொதுவாழ்க்கையிலே பங்கு ஏற்பதற்கு ஊக்கமும் ஆக்கமும் தருகின்ற வகையில் வசதிகள் அவர்களுக்கு இந்தச் சட்டமுன்வடிவின் மூலமாகக் கொடுக்கப்படும் என்று இருக்க வேண்டும். அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குச் சலுகையைக் கொடுத்து ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குப் பிறகு பெருவாரியாக தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியினர் ஆகியோர் பொது வாழ்க்கையிலே ஈடுபட ஆரம்பித்த பிறகு, அதை நிறுத்திவிடக் கூடிய ஒரு எல்லைக்கோட்டை வைக்க வேண்டும். எல்லோருக்கும் சம வாய்ப்பு உள்ள வகையில் பல ஆண்டுகளுக்குப் பிறகு அதை நடைமுறைப்படுத்த வேண்டும். ஜனநாயகத் தத்துவத்தின் அடிப்படையிலேதான் சொல்கிறேன். பெண்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் பொது வாழ்வில் வரும்போது, சில தடைகள் இருக்கின்றன. அந்த முட்டுக்கட்டைகளை எடுக்கின்ற வகையில், போக்குகின்ற வகையில் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவருவதை நான் பாராட்டுகிறேன். இதிலே ஒரு

மாநிலம் ஒரு யூனிட்டாக இருக்கிறது. நகராட்சி மன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில், ஒதுக்கீடு என்று இப்போது ஒரு எல்லையாக வைத்து அதன் அடிப்படையிலே நகராட்சி மன்றத் தலைவர் பதவிகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. அதைச் செய்யும்போது சில மாவட்டங்களில் குறைவாகவும் சில மாவட்டங்களில் அதிகமாகவும் வந்துவிட்டால், என்ன செய்வது? அந்த ஏற்றத்தாழ்வைப் போக்குகின்ற வகையில் அனைத்து மாவட்டங்களுக்கும் ஏற்றவகையில் ஒரு சீரான வகையிலே டிஸ்டிரிபியூஷன் என்று சொல்வார்களே, அந்த வகையிலே செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று இந்தச் சட்ட முன்வடிவில் ஒரு சொற்றொடர் இருக்கிறது. அதாவது நகராட்சி மன்றத் தலைவர் பதவிக்கு ஏற்றதாக, வார்டுக்கு ஏற்றதாக இருந்தாலும், நடைமுறைக்கு இயன்ற வகையிலே என்று ஒரு சொற்றொடர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12—20)

சட்டமுன்வடிவில் பக்கம் 3, 7(சி) பிரிவில் முதல் பத்தியில் கடைசிப் பகுதியில் 'நடைமுறைக்கு இயன்ற வரையில்' என்று இல்லாமல் 'இயன்ற வரையில்' என்று இருக்கிறது. அச்சுப் பிழை காரணமாக அந்தச் சொல் விடப்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சரவர்கள் சரி பார்த்துச் சொல்ல வேண்டும். முந்தைய பிரிவுகளில் எல்லாம் 'நடைமுறைக்கு இயன்ற வரையில்' என்று இருக்கிறது. ஆனால் மேலே குறிப்பிட்ட ஒரு பத்தியில் மட்டும் 'இயன்ற வரையில்' என்று இருக்கிறது. அதனுடைய பொருளை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். ஒருகால் அது அச்சுப் பிழையாக இருந்தால், அதைச் சரி செய்ய வேண்டும். தமிழில்தான் அப்படி இருக்கிறது. ஆங்கிலத்தில் அப்படியில்லை. 'நடைமுறைக்கு இயன்ற வரையில்' என்ற சொற்றொடரை எடுத்துக் கொண்டாலும், அதை எப்படி செயல்படுத்தப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. இதன்மூலம் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுக்கு தலைவலி ஏற்படுத்துமளவிற்கு பிரச்சினைகள் வரும். அந்த ஒதுக்கீடுகளைச் செய்து, முன் அறிவிப்பாக அறிவிக்கும்போது, 'என்னுடைய தொகுதியில் ஒதுக்கீடு வேண்டாம், வேறு தொகுதிக்கு மாற்றுங்கள், சரியான முறையில் புள்ளி விவரங்கள் கொடுக்கப் படவில்லை' என்று எல்லாம் முறையீடுகள் வந்து, அதை மாற்றுங்கள், இதை மாற்றுங்கள் என்று பல்வேறு கட்சிகளிலிருந்து முறையீடுகள் வரும். எனவே இதைத் திட்டவட்டமாகச் செய்வது நல்லது. அந்தச் சொற்றொடருக்குப் பதிலாக, 'ஆதி திராவிட பழங்குடி மக்கள் மிக அதிக அளவிற்கு எங்கெங்கு



இருக்கிறார்களோ அந்த வரிசைப்படி'; 'பெண்கள் எங்கெங்கு அதிகமாக இருக்கிறார்களோ அந்த வரிசைப்படி' என்று போட்டுவிட்டால், பிரச்சினை வராது. இல்லையென்றால் பலவிதமான பிரச்சினைகள் வரும். ஏற்கெனவே உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுக்கு அந்த அனுபவம் உண்டு. இதைத் தெளிவாக, உறுதியாக வரையறை செய்து, விதியை நிர்ணயித்து, இதில் மாற்றம் இல்லை என்ற கோட்பாட்டைப் பின்பற்றினால், ஒதுக்கீடு செய்யும் போது, வேறு பிரச்சினைகள் வராமல் இருக்கும். எனவே 'நடைமுறைக்கு இயன்ற வரையில்' என்ற சொற்றொடருக்குப் பதிலாக 'மக்கள் தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப' என்று மாற்றினால், அரசுக்கு வரும் ஆட்சேபணைகள் குறையும் என்று இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

இன்னும் ஒன்று. எந்த வாக்காளர் பட்டியல் அடிப்படையில் தேர்தல்கள் நடைபெறும் என்பதை அமைச்சரவர்கள் சொல்ல வேண்டும். தேர்தல்கள் நடைபெறும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் திட்டவட்டமாகத் தெளிவாக்கிவிட்ட காரணத்தால், இதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எந்தத் தேதியில் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியல் அடிப்படையில், இந்தத் தேர்தல்கள் நடைபெறும் என்பதை அறிய விரும்புகிறேன். பழைய பட்டியல்படியா? அல்லது புதிய பட்டியல்படியா? எந்தத் தேதியில் தயாரிக்கப்பட்டது என்பதை அமைச்சரவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நகராட்சிகளுக்குத் தேர்தல்கள் விரைவாக நடத்தப்படுமென்ற செய்தியை வரவேற்கும் நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் கூறியதுபோல், மாநகராட்சிகளுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் மிக விரைவாகத் தேர்தல்களை நடத்தி, இந்த மன்றத்தில் காலியாக உள்ள 21 இடங்களையும் பூர்த்தி செய்து, இந்த மன்றம் செம்மையாக நடைபெற வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று கூறி, அமைகிறேன்.

**திரு. ப. மாணிக்கம்** : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் திருத்தச் சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பெண்களுக்கும் வகுத்திருக்கக்கூடிய ஒதுக்கீடுகள் இன்றைய சமூகத் தேவைக்கு பொருத்தமானதாகும். இதை நிறைவேற்றும்போது, பல காரணங்களுக்காக நீதி மன்றத்திற்குப் போகலாம். அப்படிச் சென்றாலும்கூட, தேர்தல்களை நடத்துவதற்கான முறையிலே, அதற்கான வாய்ப்புகள் உறுதியாக்கப்படும் முறையிலே சட்டமுன்வடிவிலே சில உத்தரவாதங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

இருந்தாலும் உள்ளாட்சித் துறையிலே, குறிப்பாக நகராட்சிகளுக்குத் தேர்தல்கள் நடந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. தேர்தல் இல்லாத காரணத்தாலே, தேர்தலே வராது என்ற பழக்கத்திற்கு மக்கள் ஆளாகிவிட்டார்கள். தேர்தல் வராது, அதிகாரிகளுடைய ஆட்சிதான் என்ற முறையிலே நிலை பெற்ற எண்ணமாக அது இருக்கிறது. அதை மாற்றுவதற்கு சட்டத் திருத்தங்கள் கொண்டு வந்தாலும், நடப்பில் மாறுதல் செய்து காட்டினால்தான், மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். எனவே அந்த நம்பிக்கையை ஏற்படுத்தும் முறையிலே நகராட்சிகளுக்கு உடனடியாகத் தேர்தலை நடத்துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது பல்வேறு சட்டங்களை அரசு போடலாம். அது நிறைவேறுவதில்லை. பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. பல சட்டங்களைப் போடுகிறார்கள். அவற்றை நகராட்சிகளிலே சரிவர நிறைவேற்ற முடியாது. நான் திரும்பத் திரும்ப ஒரு விஷயத்தைச் சொல்லி வருகிறேன். ஒரு குறிப்பிட்ட கம்பெனியிலிருந்து கொசுத் தொல்லையை ஒழிப்பதற்கான ஒரு குறிப்பிட்ட மருந்தை வாங்கக் கூடாது என்று அரசாணை இருக்கிறது. அப்படி அரசாணை போட்டு 2, 3 வருடங்கள் கழித்து, அந்தக் கம்பெனியிலேயே வாங்குகிறார்கள். அந்தக் கம்பெனி அதிகாரிகளைச் சந்தித்து தர வேண்டியதைத் தந்து, பெற வேண்டியதைப் பெற்றிருக்கிறது. இதன் விளைவு, கொசு ஒழியவில்லை, கம்பெனிக்கு வியாபாரமாகிறது. இதைத் தட்டிக் கேட்க முடியவில்லை. எல்லாவற்றையும் அரசிலே உள்ள தலைமை அதிகாரிகள் அல்லது அமைச்சர் பார்க்க முடியாது. தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இருந்தால், அதைக் கண்காணிக்க முடியும். ஆகையால் ஜனநாயகம் என்று வரும்போது, ஸ்தலத்திலேயே கண்காணிக்க உத்தரவாதம் இருப்பதால்தான், அதுவேண்டும் என்று சொல்லுகிறோம். அதை உத்தரவாதம் செய்ய இந்தத் திருத்தம் உதவுமென்று நம்புகிறேன்.

நகராட்சிகள் என்று சொல்லும்போது, பெண்கள் வரமாட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் வருவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தினால்தான், அவர்கள் வர முடியும். பொதுவாகப் பெண்கள் பற்றித் தமிழ் நாட்டில் இலக்கியத்தில் உயர்வாகப் பேசப்படுகிறது. அதை நாம் செய்ய வேண்டுமென்று சொல்லும்போது, சங்கடமாக இருக்கிறது. பாரதியார் பாடல் ஒன்று இருக்கிறது. ஊரிலே, நாட்டிலே காதல் என்று வரும்போது, ஆர்வமாக அதை வரவேற்போம்; நம்முடைய வீட்டிலேயே கிணற்றடியிலே காதல் என்றால் அதை நம்மால் வரவேற்க முடியாது; நம்முடைய வீட்டிலே காதல் வந்தால் சங்கடமாக இருக்கிறது என்ற பொருளிலே அந்தப் பாட்டு வரும். பெண்கள்—



முன்னேற்றம் என்று பொதுவாகச் சொல்லலாம். நம் ஊர் முனிசிபாலிட்டிக்கு பெண் வந்தால் என்ன செய்வது என்ற சங்கடம் இருக்கிறது. மதுரையை ஆண்ட மீனாட்சி என்று எல்லோரும் பாடுகிறார்கள். அங்கே ஒரு பெண் மேயராக வருவது என்பது சுலபமல்ல. மங்கம்மா திருச்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்கிறார். காவிரிக்காக சண்டை போட்டிருக்கிறார். அப்படிப்பட்ட திருச்சியிலே பெண் சேர்மனாக வர முடியுமா? சென்னையிலே படித்த பெண்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் சென்னை மாநகராட்சிக்கு பெண் மேயர் வரவில்லை. இரண்டு பேர்கள் மேயர்களாக இருந்தார்கள். அதுவும் ரொம்ப காலத்திற்கு முன்பு. மங்கம்மா ஆண்ட நாடு என்று காவியங்கள், இலக்கியங்கள் கூறுகின்றன. அது இப்போது நடக்க வேண்டும். நம் ஊரிலே, நம் காலத்திலே இது நடக்குமா என்று பார்க்க வேண்டும். மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் பெண்கள் தலைவர்களாக வர வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். பெண்கள் வருவதை கொள்கை அளவிலே எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. கார்ப்பரேஷன் பொறுத்த சட்டமுன்வடிவு தனியாக வருகிறது. இருந்தாலும் முன்கூட்டியே சொல்கிறேன். பெண்கள் வருவதை ஊக்குவிக்க வேண்டும். சில கட்சிகள், பெண்களை வேட்பாளர்களாக நிறுத்த முடியும், சில கட்சிகளால் முடியாது. ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும்போது, அதை ஏற்கக்கூடிய மனோநிலை வேண்டும். நம்முடைய காலத்தில் பெண்கள் கவுன்சிலர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் சேர்மனாக வருவது முக்கியம். அதனாலேயே அந்த முறையில் மாற்றுவதற்கு அரசு உதவி செய்ய வேண்டும். தேர்தல் நடத்தினால்தான் அவர்களும் வரமுடியும். தேர்தல் நடைபெறுமா என்கிற பிரச்சினை வேறு இருக்கிறது.

(பிற்பகல் 12-30)

VICE-CHAIRMAN (Thiru J. M. MIAKHAN): With the permission of the House, the time is extended till the discussions are over.

திரு. ப. மாணிக்கம்: நல்ல நோக்கங்களை எப்போதுமே அறிவிப்பது சுலபம். இப்படி நல்ல நோக்கங்களை அறிவிப்பதிலே இந்தியாவிலே உள்ளவர்கள் புகழ்பெற்றவர்கள். அதிலும் தமிழகத்தைப் பொறுத்தவரையில், நல்ல திட்டங்கள் எல்லாம் அறிவிக்கப்படுகின்றன. ஆனால் திட்டங்கள் நிறைவேற்றப் படுவதில்லை. அந்தமுறையில்தான் இந்தச் சட்ட முன்வடிவும் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. உள்ளபடியே, இந்தத் தேர்தலை சீக்கிரம் நடத்த

வேண்டும். பெண்களுக்கு அதற்குரிய வாய்ப்பு அவசியம் அளிக்கப்பட வேண்டும். இதைத் தீவிரமாக அரசு நிறைவேற்ற வேண்டும். இதிலே உறுதியாக இருக்க வேண்டும். குறிப்பாக உள்ளாட்சித் துறையினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து உறுதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுடைய ஊரிலேயே இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதாகச் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். இருப்பினும் மதுரை, திருச்சி, சென்னை போன்ற இடங்களிலும் பெண்கள் தலைவர்களாக வருவதற்கான வாய்ப்பினை அளிக்க வேண்டுமென்று சொல்லி, அரசு விரைவில் தேர்தலை நடத்த வேண்டுமென்ற என் எண்ணத்தைச் சொல்லி, இச் சட்ட முன்வடிவை ஆதரித்து அமர்கிறேன்.

**திரு. ம. சங்காலிங்கம்:** மாற்றுத் தலைவரவர்களே, மாவட்ட நகராட்சிகள் திருத்த சட்ட முன்வடிவின்மீது என்னுடைய சில கருத்துக்களை எடுத்து வைக்க விழைகின்றேன். சமூகத்திலே நலிந்த பிரிவினராக காணப்படுகின்ற தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள், பெண்கள் இப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் உண்மையிலேயே இட ஒதுக்கீடு செய்து, அவர்கள் நாட்டுப் பணியிலே, சமூகப் பணியிலே, ஆட்சிப் பணியிலே ஈடுபட வேண்டும், பொறுப்பேற்க வேண்டும் என்கிற அளவிலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்கிற அடிப்படையில் நான் இதனை வரவேற்கிறேன். இன்றைக்கு நாட்டிலே பல ஆண்டுகளாக நகராட்சிகளிலே தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லாதிருக்கின்ற நிலையில், மக்களுக்கு ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளை எல்லாம் இங்கே எடுத்துச்சொன்னார்கள். இந்த இடர்ப்பாடுகளை சமுதாயத்திலுள்ள எல்லாத் தரப்பு மக்களும் வேறுபாடு இல்லாமல் அனுபவித்து வருகிறார்கள் என்று சொல்லப்பட்ட கருத்திலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. குறிப்பாக வறட்சிப் பணிகள் நடைபெறுகிற இந்தக் கால கட்டத்தில் நாம் நினைக்கின்றதை முழுமையாக அமுல் படுத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இது மக்களாட்சி முறையிலுள்ள அமைப்புகள் இல்லாததால் ஏற்பட்ட ஒன்று. சரியான மக்களாட்சி முறை நடைமுறையில் இல்லாததால் ஏற்பட்ட குறை இது என்பதை நாமெல்லாம் உணர்கிறோம். இப்போது நமக்கு மிக மிக வேண்டியது தேர்தல்தான். சிக்கல் இருக்கிறது, ஆகவே தேர்தலை நடத்த முடியவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிற நிலையைவிட, பழைய முறையிலே தேர்தலை நடத்தினால், எல்லோரும் பாராட்டுவோம். பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்கிறோம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்கிறோம் என்று சொல்வதை எல்லாம் நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இன்றைக்கு



நாடு இருக்கின்ற கால கட்டத்தில் இவை எல்லாவற்றையும்விட உடனடியாகத் தேர்தலை நடத்துவதுதான் மிகவும் அவசியமான ஒன்று. மிக விரைவிலே மக்களாட்சி முறை எல்லாப் பஞ்சாயத்துக்களிலும், நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் அமுல்படுத்தப்படுமானால் அதுவே பெரிய சாதனையாக இருக்கும் என்று நாட்டு மக்கள் கருதுகிற கால கட்டத்துக்கு வந்திருக்கிறோம்.

குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில், விரைவில் இது நடத்தப்பட வேண்டும் என்பதிலே இந்த மேலவை பெரிதும் அக்கறை கொண்டிருக்கிறது. இந்தத் தேர்தல் விரைவில் நடத்தப்படுவதன் வாயிலாக 21 உறுப்பினர்கள் இந்த அவையில் வந்து அமர்ந்து நாட்டுப் பணியாற்ற வேண்டியிருக்கிறது. அப்படி தேர்தல் மூலமாக, உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாக வருவதன் மூலமாக நாட்டிலேயுள்ள பல்வேறு கிராமங்களில் இருக்கிற சிக்கல்களை, நிலைமைகளை உணர்வுடன் எடுத்துச் சொல்கிற வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையில் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண்பதற்கான வாய்ப்பிருக்கிறது. பல ஆண்டுகளாக ஜனநாயக அமைப்பு முறை இந்த நாட்டிலே இல்லாதிருப்பதால், இந்த் அவையினுடைய ஆற்றல் குறைந்து, உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்து, செயல்பாடு திறன் மூன்றில் ஒரு பங்கு ஆகி பொதுவாகவே அனைத்துச் செயல்களும் முடக்கப்பட்டிருக்கிற நிலையை நாம் காண்கிறோம். இந்த நிலையை நாம் உண்மையிலேயே உணர்ந்திருப்பதால், விரைவில் தேர்தல் வர வேண்டுமென்று சொல்கிறோம். இதிலே இரண்டுவிதமான கருத்துக்கள் இருக்க முடியாது. இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். இருக்கின்ற சிக்கலைச் சுட்டிக் காட்டியோ வேறு எந்தக் காரணத்தைக் கொண்டோ தேர்தலை முடக்கி வைக்கிற நிலை இனிமேல் வரக்கூடாது. இதனை நான் பகிரங்கமாகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன். தேர்தலைக் கட்டாயம் நடத்துவோம் என்று என்னதான் அரசுத் தரப்பிலிருந்து சொன்னாலும்கூட, இந்தத் தேர்தல் நடந்து முடியும் வரை எங்களாலே இதனை நம்ப முடியாது.

பஞ்சாயத்துக்களுக்கு எல்லாம் இட ஒதுக்கீடு செய்தார்கள். அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்குப் போய், உச்ச நீதிமன்றம் வரை போய் தடை வாங்கியிருக்கிறார்கள். இந்தத் தடையை 'வெக்கேட்' செய்ய எத்தனை முறை இந்த அரசு உச்சநீதிமன்றம் வரை போய் 'அட்வான்ஸ் பெட்டிஷன்' போட்டிருக்கிறது. அல்லது நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பது போன்ற விவரங்களை இங்கே எங்களுக்குத் தெரிவிக்கவில்லை. நான் கேட்கிறேன்.

அவர்கள் உயர்நீதிமன்றத்திற்கு, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று 'ஸ்டே' வாங்கினார்கள். ஸ்டேயை 'வெக்கேட்' செய்ய இந்த அரசு இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இது ஏற்கெனவே விவாதப் பொருளாகி, உச்ச நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். 1982 ஆம் ஆண்டு நவம்பரில் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தை இந்த அரசு கூட்டியது. அனைத்துக் கட்சித் தலைவர்களும் சொல்லிய கருத்துக்கு அனுசரணையாக ஒரு மனுவை உடனடியாக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் இந்த வழக்கை எவ்வளவு சீக்கிரம் எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இந்த நிலையிலே இன்னும் தொடர்ந்து வழக்கை விரைவுபடுத்தி தேர்தலை எவ்வளவு சீக்கிரம் நடத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நடத்த வேண்டும். இந்தத் திருத்தத்தின் காரணமாக, எல்லா அரசியல் கட்சிகளும் தேர்தலை தடுக்கிற முறைக்கு போகக் கூடாது என்கிற வேண்டுகோளை இங்கே விடுத்திருக்கிறார்கள். நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களோடு சேர்ந்து இந்த விஷயத்தில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திச் சொல்கிறேன். இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குழித்துறை நகராட்சியும், நாகர்கோவில் நகராட்சியும் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் குறிப்பிட்ட நகரங்களைப் பொறுத்தவரையில், அங்கு பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அடுத்த தேர்தல் வரும்வரை அவர்கள் தலைவர்களாக பணியாற்று வார்கள். தேர்தல் நடந்து முடிந்து, பெண்கள் தலைவர்களாக வந்துவிட்ட நிலையில், யாராவது கோர்ட்டுக்குப் போய் அடுத்த தேர்தலில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்கின்ற முறையை மாற்றுங்கள் என்று சொல்லி வழக்கு மன்றத்திற்குப் போகலாம். அப்படிப் போகிற நிலைமையில்கூட அடுத்த தேர்தல் வரும்வரை, அந்தப் பெண்கள் தலைவர் பொறுப்பை ஏற்று—அவர்கள் யாராக இருந்தாலும் சரி, தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, மலைவாழ் பகுதி மக்களாக இருந்தாலும் சரி அல்லது பெண்களாக இருந்தாலும் சரி தேர்ந்தெடுக்கப்படுவது மக்களாட்சி அமைப்பின் மூலமாக என்கிற வகையில்—மக்களுக்கு தொடர்ந்து நன்மைகளைச் செய்துகொண்டு வர முடியும். அப்படி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, எந்த நிலையிலும் அவர்கள் மீது வழக்கு போடுகிற நிலை வரக்கூடாது என்கிற கருத்தை நானும்



(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

அமைச்சருடைய எண்ணத்தோடு சார்ந்து வெளிப்படுத்துகிறேன். ஆனால் நீதிமன்றத்திற்கு மக்கள் போவதை நாம் கட்டுப்படுத்த முடியாது. எல்லாப் பிரஜைகளும் நீதிமன்றங்களுக்குச் செல்லலாம் என்கிற உணர்வு அல்லது உரிமை இருக்கிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், இப்பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஒரு யூனிட்டாக வைத்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட நகரத்தில் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்துவிட்டார்கள், அது தவறு என்று சொல்லி, ஒரு பிரிவினர் கோர்ட்டுக்குப் போய்விட்டால், அவர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பு வரும் நிலையில், ஏற்கெனவே அரசு இட ஒதுக்கீடு செய்திருந்த நகராட்சியைப் பொறுத்தவரையில், அது ரத்தாகும் நிலையில் அவர் எந்த நகராட்சியின் மூலம் மறுபடி வர வேண்டுமென்று சொல்லி அவர் கோர்ட்டுக்குப் போகும் நிலையில்—அப்படிப்பட்ட சிக்கல் வருகின்ற இடங்களைப் பொறுத்தவரையில், நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக காத்திருக்க வேண்டிய நிலைமைகூட வரலாம்.

Thiru A. R. DAMODARAN: It is also possible that a lady in a particular Municipality may say, 'This Municipality should have been reserved for women.' It may very well come up even in Udumalpet. A lady there may say, 'This Municipality should have been reserved for women.' So this is likely to come up from the women also whom we wish to help. That is what I want to say.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்கு உதவியதற்கு நன்றி. அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்தது தவறு என்றுகூட அல்ல. எங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யாமல் போய்விட்டார்கள் என்று சொல்லி நீதிமன்றம் போய் ஒருவர் தடை பெற்றுவிட்டால், தற்காலிகமாக இந்தச் சட்டத்தைத் தள்ளி வைத்துவிட்டு பழைய தேர்தல் சட்டத்தின்படி தேர்தலை நடத்த அரசு உறுதியாக இருக்க வேண்டும். ஒருவர் ஒரு மன்றம் குறித்து ஒதுக்கீடு தவறு என்று நீதிமன்றத்திற்குப் போனாலும்கூட, அந்த இடம் வேறு ஒரு மன்றத்தின் மூலம் மறுபடியும் நிரப்பப்படக் கூடிய நிலை இருக்கிறது. அப்படிச் செய்கின்றபோது வேறு ஒருவர் அதை எதிர்த்து வழக்கு மன்றத்திற்குப் போகலாம். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டாலும்கூட, இந்த அரசு தற்காலிகமாக புதிய சட்டப்படி தேர்தலை நடத்தாமல், உடனடியாக பழைய தேர்தல் சட்டப்படி தேர்தலை நடத்த வேண்டும். அதற்கான உறுதிமொழியை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 ஏப்ரல் 27

தேர்தலை எப்படியும் குறிப்பிட்ட காலத்திற்குள் நடத்தியே தீருவோம் என்று திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும். இதே நிலையை ஒரு வருடத்திற்கு முன்பு அரசு எடுத்திருந்தால், பாராட்டியிருக்கலாம். ஆனால் ஜூலையில் தேர்தல் என்று சொல்லி ஏப்ரலில் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து நிறைவேற்றுகின்ற நிலையைப் பார்க்கின்றபோது, தேர்தல் நடைபெறுமா என்று கேட்டால், எனக்குச் சிக்கலாகவும், கலக்கமாகவும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஒரு சட்டம் நிறைவேற்றிய பிறகு, வருங்காலத்திலே பழைய சட்டத்திற்குப் போகிறோம் என்று சொல்வது,

(பிற்பகல் 12-40)

சட்டச் சிக்கலில் கொண்டுபோய்விடும், அதற்கு அதிகாரம் இல்லை, அப்படிப் போக முடியாது இதற்காக அவசரச் சட்டம் போடலாம் என்று நினைக்கலாம். ஒரு சட்டத்திற்கு ஒரு திருத்தம் போடுவதுதான் வழக்கம். "இந்தச் சட்டம் போட வேண்டிய தேவை இருக்கிறது. சட்டமன்றம் இல்லை. ஆகவே நாங்கள் புதிய சட்டம் போடுகிறோம்" என்று ஒரு அவசரச் சட்டம் போடலாம். எப்படியும் ஜூலைக்கு முன்பு சட்டமன்றம் கூட வாய்ப்பு இல்லை. ஆகவே இந்தச் சட்டத்தில் ஏதாவது தடை வருமானால், இதிலே ஒரு பிரிவை ஏற்படுத்தி, அதாவது இந்தச் சட்டத்தை தற்காலிகமாக நிறுத்திவிட்டு, பழைய சட்டமே செல்லும் என்று செய்தால் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. அதை சட்டத் துறையோடு கலந்து எப்படியாவது தேர்தல் நடத்த வேண்டுமென்பதை வலியுறுத்தி, இந்தச் சட்டம் அரசுடைய நல்ல நோக்கத்திற்குத் தடையாக இருக்கக்கூடாது என்பதை அழுத்தமான வேண்டுகோளாகச் சொல்லி, என் கருத்துக்களைச் சொல்லி முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல நாளில் இந்தச் சட்ட முன்வடிவை இந்த மேலவையில் நிறைவேற்றுகிற நல்ல வாய்ப்பை ஏற்படுத்தியதற்காக நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அனகாபுத்தூர் திரு. இராமலிங்கம் அவர்கள் இங்கே இந்த நாள் எப்படிப்பட்ட நாள் என்பதையும், பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்று சொல்வதைப் போல, இந்த நாளில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம், இப்போது 11-55 மணிக்கு ஆந்திர நாட்டில் தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களும் தெலுங்கு தேசக் கட்சியின் தலைவரும் ஆந்திர மாநிலத்தின் மாண்புமிகு முதலமைச்சர் திரு. என்.டி.ஆர். அவர்களும் கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கிற இந்த நல்ல நேரத்தில், அதுவும் திராவிடப் பாரம்பரையின் சொத்தாகவும் வித்தாகவும் இருந்து தென்னிந்திய நல உரிமைச்



1983 ஏப்ரல் 27] [திரு. ப. குழந்தைவேலு]

சங்கத்தினுடைய தலைவராக வாழ்ந்த சர் தியாகராயர் அவர்கள் பிறந்த இந்த நன்னாளில் இந்தச் சட்ட முன்வடிவை இந்த அவையின் ஆய்வுக்கு வைத்து, அதை எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் ஒட்டுமொத்தமாக ஆதரிக்கிற சூழ்நிலையில் இந்தச் சட்ட முன்வடிவை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக ஒரு புதிய திருப்பத்தை உள்ளாட்சி மன்றங்களின் தேர்தல்களில் நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். 1920 ஆம் ஆண்டுச் சட்டத்தின் அடிப்படையில், ஒதுக்கீடுகள் ஆதி திராவிட மக்களுக்குச் செய்யப் பட்டிருந்தாலும், பெண்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தாலும், மொத்தமாக 25 சதவீத ஒதுக்கீடுகள் வராமல்தான் இருந்தது. அந்த நிலை இன்றையதினம் மாறி, நகராட்சிகளின் தலைவர்களாக, தலைவிகளாக அவர்கள் வரக்கூடிய வாய்ப்பு இந்தச் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் இருக்கக்கூடிய நகராட்சிகளில் பெண்கள் தலைவிகளாக, ஆதி திராவிடர்கள் தலைவர்களாக வர முடியாத நிலை இருந்தது. அது இப்போது மாறி, வரக்கூடிய வாய்ப்பை இப்போது ஏற்படுத்தித் தந்திருக்கிறோம்.

இன்று தமிழகத்தில் 98 நகராட்சிகள் இருக்கின்றன. அதில் நாம் தேர்தல் நடத்தப்போவது 91 நகராட்சிகளுக்குத்தான். காரணம், திருச்சி, சேலம், திருநெல்வேலி போன்ற நகராட்சிகளை எல்லாம் மாநகராட்சிகளாக மாற்றுவதற்குரிய சட்டங்களை அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் கொண்டு வர இருக்கிறோம். அதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அறிக்கைகள் எல்லாம் அரசாங்கத்திற்கு வந்து, அவைகள் அரசின் பரிசீலனையில் இருப்பதால், திருச்சி, திருச்சியைச் சார்ந்த பொன்மலை நகராட்சியும், சேலமும், சேலத்தைச் சார்ந்த சூரமங்கலம் நகராட்சியும், திருநெல்வேலியும், அதைச் சார்ந்த மேலப்பாளையம், பாளையங்கோட்டையும் ஆக ஏழு நகராட்சிகளுக்கு இப்போது தேர்தல்கள் நடத்தப்படப்போவதில்லை. மீதமுள்ள 91 நகராட்சிகளுக்கு மட்டும் நாம் இந்தத் தேர்தலை நடத்த இருக்கிறோம். இந்த 91 நகராட்சிகளிலும் 18 சதவீத இடங்கள் ஆதி திராவிடர் களுக்கு (16 நகராட்சிகள் ஆதி திராவிடர்களுக்கு), ஒதுக்கப்பட்டிருக்கின்றன. பதினைந்து சதவீத இடங்கள் (அதாவது 13 நகராட்சிகள்) பெண்களுக்கு என்று தனியாக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்தச் சட்ட முன்வடிவை நாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசும்போது, பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். எல்லோரும் இந்தச் சட்டத்தை வரவேற்றாலும்கூட, ஒரு சிலருக்கு மட்டும் சந்தேகம் இருக்கிறது. முன்பு பல சட்டச் சிக்கல்கள்

வந்ததன் காரணமாக, இப்போது தடை ஏற்பட்டு விடுமோ, அதனால் தேர்தல் வராமல் போய் விடுமோ என்ற சந்தேகம் சிலருக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், உண்மையில் சந்தேகம் என்பது ஒரு வியாதி. அந்த வியாதி அவரை பிடித்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வதுதான் அவருக்கு நல்லது. எதற்கெடுத்தாலும் சந்தேகம் என்று வந்துவிட்டால், எதுவுமே நடக்காது. ஒரு கட்சியின் தலைவனுக்குத் தொண்டன் மீது சந்தேகம் வந்துவிட்டால், கடைசியில் அந்தத் தொண்டன் கட்சியிலிருந்து வெளியே போவதில்தான் போய் முடியும். ஒரு கணவன், மனைவி சந்தேகம்கூட, எப்படிப்பட்ட குழப்பங்களை குடும்பத்தில் ஏற்படுத்தும் என்று நாம் அறிவோம். ஆகவே நாம் . . .

**திரு. ப. மாணிக்கம் :** ஏன், எதற்கு என்று சந்தேகப்பட்டுக் கேட்டால் தான், ஞானம் பிறக்கும் என்பது உலகப் பழமொழி.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** கேட்கவேண்டிய நேரத்தில் சந்தேகம் வந்தால் பரவாயில்லை. எதற்கெடுத்தாலும் சந்தேகம் வருகிறபோது தான், அதைப் பரிசீலிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில், இந்த அரசாங்கம் இந்தத் தேர்தலை நடத்துமா என்ற கேள்வியை எழுப்பினார்கள். இந்த அரசின் நல்ல நோக்கங்கள்பற்றி யாருக்கும் சந்தேகம் வேண்டாம். ஏனென்றால் தமிழகத்தின் வரலாற்றில் சிறப்பான திருப்பத்தை ஏற்படுத்துகிற வகையில் இதுபோன்ற ச்ட்டங்களைக் கொண்டு வருகிற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்றார்கள். இந்தச் சட்ட முன்வடிவின் அடிப்படையில், கண்டிப்பாகத் தேர்தல் நடத்தப்படும். அதற்கு அனைத்துக் கட்சிகளுடைய ஒத்துழைப்பும் இருக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அப்படி சட்டச் சிக்கல்கள் வந்தாலும், பழைய சட்டத்தின்படி இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்றுதான் நினைக்கிறோம். ஒரு கொள்கையாக இந்தத் திருத்தங்களைக் கொண்டுவருவதன் காரணம், இந்த ஒதுக்கீடு தேவை என்பது தான். 13—3—1983-ல் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டம் கூட்டினோம். அவர்களும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அதன் அடிப்படையில் இந்தத் தேர்தலை நடத்த இருக்கிறோம். அதே நேரத்தில் இட ஒதுக்கீடும் தேவை என்று அரசாங்கம் விரும்புகிறது. இந்த நேரத்தில் யாராவது இதை எதிர்த்து, தடை பெற்றாலும், பழைய சட்டத்தை வைத்து இந்தத் தேர்தலை நடத்தவும் தயாராக இருக்கிறோம். அப்படி பழைய சட்டத்திற்குக்கூட யாராவது தடை வாங்கினாலும், அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால், இதற்காகவே சட்டமன்றத்தைக் கூட்டி, எல்லாக் கட்சித்



தலைவர்களையும் அழைத்து அவர்களின் எண்ணத்தை அறிந்து, அதன்படி கண்டிப்பாக நடத்துவோம் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன் இந்தத் தேர்தலை நடத்தியே ஆகவேண்டுமென்ற சூழ்நிலைக்கு வந்து விட்டோம். அதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. அதற்கு அனைவரும் ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் ஒரு திருத்தத்தைச் சொன்னார்கள். 7 (சி) என்ற பிரிவில் 'இயன்றவரை' என்று இருக்கிறது. அதை நடைமுறைக்கு என்று இருக்க வேண்டும். தமிழில் 'நடைமுறைக்கு' என்று இல்லாமல் போய்விட்டது. இயன்றவரை என்பதை மாற்றி 'நடைமுறைக்கு' என்று படித்துக்கொள்ளும்படி நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆங்கிலப் புத்தகத்தில் சரியாக இருக்கிறது. இந்தச் சட்டத் திருத்தத்தை, அதுவும் இந்த இட ஒதுக்கீடுகளை எல்லாக் கட்சிகளும் வரவேற்றிருக்கிறார்கள். அதற்காக நான் மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து, இந்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1983) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4, பிரிவு 1, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1983) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1983) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 28—4—1983 வியாழக்கிழமை அன்று காலை 9.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-51)

### 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory rules and orders.*

266. Notification issued with G.O. Ms. No. 3219, Home (Transport), dated the 28th December 1982 regarding cancellation of certain notifications already issued by the Department in various numbers. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motorf Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

267. Sixth Annual Report of the Tamil Nadu Handicrafts Development Corporation Limited for the year 1978-79 (Tamil and English). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

### B. *Reports, notifications and other papers.*

*176. The Tamil Nadu Payment of Pension to Tamil Scholars and Miscellaneous Provisions Bill, 1983 (L.A. Bill No. 47 of 1982) as passed by the Assembly.

*177. The Tamil Nadu District Municipalities (Amendment) Bill, 1983 (L.A. Bill No. 31 of 1983), as passed by the Assembly.

---

* Circulated to all M.L.Cs. on 26th April 1983.



## இணைப்பு I

(377 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீரை சென்னைக்கு குடிநீர் வசதிக்காகக் கொண்டுவருவதில் ஆந்திர அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையே ஓர் இறுதி ஒப்பந்தம் 18—1—1983 அன்று ஏற்பட்டுள்ளதென்பதை முன்பே இந்த அவையில் அறிவித்தேன். இந்த அவையிலுள்ளவர்களும், சென்னை நகர மக்களும், தமிழக மக்களனைவரும் மகிழ்வடையும் இந்த ஒப்பந்தம் ஒரு வரலாற்றைப் பின்னணியாக கொண்டதும், வரலாற்றுச் சிறப்புடையதுமாகும். நானும், ஆந்திர முதலமைச்சரும் கையொப்பமிட்ட இந்த ஒப்பந்தம் ஒரு நூறாண்டு கால முயற்சியின் முத்தாய்ப்பாகும். யார் யார் எப்படியெல்லாம் இந்த நல்ல திட்டத்திற்கு முயற்சி செய்தார்கள், உதவினார்கள் என்பதையெல்லாம் மீண்டும் நன்றியோடு நினைவுகூரும் வகையில் அந்த நிகழ்ச்சிகளைச் சுருக்கமாக உங்கள் முன்பு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

2. சென்னை நகருக்குக் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்ய கிருஷ்ணா நதியிலிருந்து நீர் வழங்கும் திட்டம் பற்றி முதன்முதலாகக் கருத்தை வெளியிட்ட பெருமை கர்னல் எல்லிஸ் என்ற ஆங்கிலேயரைச் சாரும். 1881 ஆம் ஆண்டில் அவரால் இந்தத் திட்டம் முறையாக வகுக்கப்பட்டது. கிருஷ்ணா நதியை பெண்ணாற்றுடன் இணைத்து வழிநெடுகிலும் நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவதையும், சென்னை நகருக்கு குடிநீர் வழங்குவதையும் இத்திட்டம் முக்கிய அம்சங்களாகக் கொண்டிருந்தது. இத்திட்டம் நிறைவேற்றப் பட்டிருந்தால் செங்கல்பட்டு, தென்னாற்காடு மாவட்டங்கள் கூடுதலான பாசன வசதி பெற்றிருக்கும். ஆனால், ஆங்கிலேய அரசாங்கம் எப்போது இதைப் பற்றி நடவடிக்கை எதும் எடுக்கவில்லை. பிறகு, 1947-ல் சென்னை மாகாண அரசு ஒரு முழுமையான திட்டத்தை தயார் செய்து மத்திய அரசுக்கு சமர்ப்பித்தது. இதுதான் கிருஷ்ணா-பெண்ணாறு திட்டம் என்பதாகும். இத்திட்டம் செயல்படுத்தப்பட்டிருந்தால் தற்போதைய ஆந்திர மாநிலத்தில் பிற்பட்ட பகுதிகளாகிய இராயலசீமா, மேற்கு கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர் ஆகிய மாவட்டங்களிலும், தமிழ் நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்திலும் மொத்தமாக 36 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பயனடைந்திருக்கும். இது தவிர, இத்திட்டத்தின் மூலம் சென்னை நகருக்கும் தேவையான குடிநீர் கிடைத்திருக்கும். ஆனால் அதுவும் நிறைவேறவில்லை.

3. கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களுக் இடையே கிருஷ்ணா நதி நீர்ப் பங்கீடு குறித்து பிரச்சினைகள் ஏற்பட்டன. 1951-ல் கிருஷ்ணா நதி நீர்ப் பங்கீடு பற்றி மத்திய திட்டக்குழு ஒரு முடிவை அறிவித்தது. அதில், தமிழ் நாட்டின் பாசனத் தேவைகளும், சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையும் இடம்பெற்றிருந்தன. இருப்பினும் இந்த முடிவை மற்ற மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னர், மத்திய அரசால் 1953-ல் கிருஷ்ணா, கோதாவரி ஆகிய ஆறுகளைப் பயன்படுத்தும் திட்டங்களைப் பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட 'கோஸ்லா கமிட்டி' கொடுத்த அறிக்கையில், சென்னை நகரக் குடிநீர்த் திட்டமும் அடங்கி யிருந்தது. 1956-க்குப் பிறகு மத்திய அரசு, கிருஷ்ணா, கோதாவரி நதிகளில் கிடைக்கும் நீரைப்பற்றி ஆராய குல்ஹாத்தி கமிஷனை நியமித்தது. தமிழ்நாடு அரசு, இக்கமிஷன் முன்னால் தனது பாசனம் மற்றும் குடிநீர்த் தேவைகளைப்பற்றி விளக்கியுள்ளது. இக்கமிஷனின் அறிக்கையில் கிருஷ்ணா ஆற்றில் கட்டப்பட்டுவரும் நாகார்ஜுன சாகர் நீர்த்தேக்கத்திலிருந்து சென்னைக்கு ஒரு கால்வாய் அமைத்து 15 டி.எம்.சி. நீர் சென்னைக் குடிநீர்த் தேவைக்காகக் கொடுக்கவேண்டுமென்று பரிந்துரைத்தது.

4. 1963 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 23 ஆம் தேதியன்று மத்திய அரசின் பாசன அமைச்சர் திரு. ஹபீஸ் முகமது இப்ராஹீம் அவர்கள் மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சென்னை நகரின் குடிநீருக்காக ஆண்டொன்றுக்கு தலா 5 டி.எம்.சி. தண்ணீர் தரச் சம்மதித்துள்ளதாக நாடாளுமன்றத்தில் அறிவித்தார். இந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக 1965 ஆம் வருடம் பெண்ணாற்றில் சோமசீலா நீர்த்தேக்கம் கட்டுவது பற்றித் திட்டமிடும்போது சோமசீலா திட்டத்திலிருந்து சென் னைக்கு முதலில் 5 டி.எம்.சி. தண்ணீரைக் கொடுக்கவேண்டும் என்றும், பிறகு கிருஷ்ணா ஆற்றிலிருந்து பெண்ணாற்றுக்கு இணைப்பு ஏற்படும்போது மீதமுள்ள 10 டி.எம்.சி. தண்ணீரைக் கொடுக்க வேண்டும் என்றும் தமிழக அரசு கேட்டுக் கொண்டதை அன்றைய ஆந்திர அரசு ஏற்றுக் கொண்டது. ஆந்திர மாநில பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. ஏ. சி. சுப்பாரெட்டி அவர்கள் தமிழக முதலமைச்சர் பெருந்தலைவர் திரு. காமராசர் அவர்களுக்கு 25—4—1965 நாளிட்ட கடிதம் மூலம் இதனைத் தெரிவித்திருந்தார். அதன்பின் இதுபற்றி அதிகாரிகள் மட்டத்தில் ஓரிரு முறை பேச்சுவார்த்தை நடந்தும் பலனேதுமில்லை. அப்போது ஆந்திராவைத் தவிர்த்து மற்ற மாநிலங்களுடன் சென்னை குடிநீர் தேவை பற்றி பேசப்பட்டதாகத் தெரியவில்லை. 15—11—1967 அன்று சென்னை நகருக்கு 15 டி.எம்.சி தண்ணீர் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைத் துரிதப் படுத்தும்படி மைய அரசின் பாசனத்துறை செயலாளருக்கு ஒரு கடிதம் தமிழக அரசிடமிருந்து அனுப்பப்பட்டது.



5. கிருஷ்ணா நதி பாயும் மாநிலங்களான மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் மாநிலங்களிடையே அந்த நதியின் நீரைப் பங்கீடு செய்து கொள்வது சம்பந்தமான பிரச்சினை நடுவர் மன்றத்துக்கு விடப்பட் டிருப்பதாக 1968ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் செய்திகள் வந்தன. 10—4—1969 அன்று இந்தப் பிரச்சினை நடுவர் மன்றத்துக்கு விடப்பட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இந்த நடுவர் மன்றம் கிருஷ்ணா நதி நீரை அது பாயும் மாநிலங்களான மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிடையே எந்தெந்த அளவுக்குப் பிரித்துக் கொள்ள வேண்டும் என்பதை முடிவு செய்வதற்காகவே நியமிக்கப்பட்ட தால், கிருஷ்ணா நதி நீர் பாயாத மாநிலமான தமிழ்நாடு அந்தப் பிரச்சி னையில் சம்பந்தப்படவில்லையென்றும், ஆகவே தமிழ்நாடு அதிலே ஒரு வாதியாக (party) கருதப்பட முடியாது என்றும், எனவே அந்த நடுவர் மன்றத்தின் முன் தமிழ்நாட்டின் சார்பாக தமிழக அரசு தன்னைச் சேர்த்துக் கொள்ளும்படி கேட்க வேண்டியதில்லையென்றும், அன்றைய முதல்வர் திரு. கருணாநிதி அவர்களின் தலைமையில் இருந்த அரசு முடிவு செய்தது. சென்னை நகரத்திற்கு 15 டி.எம்.சி. தண்ணீர் தருவது பற்றிய கோரிக்கையை நடுவர் மன்றத்தின் முன் எழுப்ப வேண்டிய அவசியம் இல்லையென்றும், அதற்குப் பதிலாக ஏற்கெனவே (1963-ல்) ஆந்திரம், மகாராஷ்டிரம், கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்களும் 15 டி.எம்.சி. தண்ணீரை சென்னைக்குத் தருவது பற்றி ஒப்புக்கொண்டதை அப்படியே தொடர்ந்து நீடிக்க ஏற்பாடு செய்யும்படியும் அதற்கேற்ப சம்பந்தப்பட்ட மாநிலங்கள் சென்னைக்கு தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யும்படியும் மைய அரசுக்குக் கடிதம் எழுதுவதே போதும் என்றும் 20—10—1969-இல் முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவினையொட்டி 5—12—1969 அன்று மைய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது. அதாவது கிருஷ்ணா நதி நீர் தமிழ் நாட்டிற்குள் பாயாததாலும், சென்னை நகருக்கான குடிநீர்த் தேவையை கிருஷ்ணா நதி நீர்ப் பங்கீடு பிரச்சினையாக எழுப்புவதற்கு அடிப்படையில்லை யென்றும் எனவே தமிழ்நாடு அந்தப் பிரச்சினையில் தன்னை ஒரு வாதியாக சேர்க்க வேண்டியதில்லை என்றும் அப்போது முடிவு செய்யப்பட்டது.

6. 1951-ல் மத்திய திட்டக்குழு கிருஷ்ணா நதியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருவதை கிருஷ்ணா நதி நீர்ப் பயன்படுத்தும் திட்டங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டது; 1953 இல் நியமிக்கப்பட்ட 'கோஸ்லா கமிட்டி' சென்னை நகர குடிநீர்த் திட்டத்தைப் பரிந்துரைத்தது. 1956 இல் நியமிக்கப்பட்ட குல்ஹாத்தி கமிஷன் கிருஷ்ணா நதியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டத்தை வலியுறுத்தி, சென்னைக்குக் குடிநீர் கொண்டு வருவதற்கான பல திட்டங்களில், கிருஷ்ணா திட்டம்தான் மிகவும்

சிறப்பானது எனக் குறிப்பிட்டது. இப்படியெல்லாம் நடந்திருந்தும் 1969இல் கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்சினைக்கு நடுவர் மன்றம் நியமிக்கப்பட்டபோது மட்டும் ஏன் இந்தப் பிரச்சினையை அதன்முன் கொண்டுபோக வேண்டிய அவசியம் இல்லை என முடிவு செய்யப்பட்டது எனத் தெரியவில்லை. தவறான ஆலோசனையின்மீது எடுக்கப்பட்ட இந்த முடிவு கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தம் ஏற்படுவதில் உண்டான காலதாமதத்திற்கு ஒரு முக்கியமான காரணம் எனக் கூறலாம்.

7. 1969 இல் இவ்வாறு முடிவு செய்யப்பட்ட பின் 1972 வரை சென்னைக்குக் கிருஷ்ணா நீர் கொண்டுவருவதுபற்றி அன்றைய தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

8. அதன்பின், 11—3—1972 அன்றுதான் அப்போதைய முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்களால் மத்திய அரசின் நீர்ப்பாசனத்துறை அமைச்சருக்கும் (டாக்டர் கே. எல். ராவ்) மத்திய அரசின் திட்ட அமைச்சருக்கும் (திரு. சி. சுப்பிரமணியம்) நிலைமையை விளக்கி ஆந்திர, கர்நாடக, மகாராஷ்டிர மாநிலங்கள் ஏற்கெனவே ஒப்புக்கொண்டபடி கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி. எம். சி. தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யும்படி அன்றைய தமிழக அரசால் கடிதம் எழுதப் பட்டது. இந்தக் கடிதத்தில் சென்னை நகரத்துக்கு அப்போது நாளொன்றுக்கு 37 மில்லியன் காலன் தண்ணீர் கிடைப்பதாகவும், 2001-வது ஆண்டில் 105 மில்லியன் காலன் தண்ணீர் தேவைப்படும் என்றும், வீராணம் திட்டத்தின் மூலம் 40 மில்லியன் காலன் தண்ணீர் கிடைக்குமென்றும், எனவே எதிர்காலத் தேவையை உத்தேசித்து விரைவில் கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி. எம். சி. தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யும்படியும் கூறப்பட்டிருந்தது. அப்போதைய மைய திட்ட அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடமிருந்து வந்த 16—4—1972 நாளிட்ட கடிதத்தில் சோமசீலா நீர்த் தேக்கத்தில் இருந்து ஐந்து டி.எம்.சி. தண்ணீரைக் கொண்டு வருவது பற்றி ஆந்திர மாநில முதலமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தும்படியும், அதற்கு தன்னாலான உதவியைச் செய்வதாகவும், கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்சினை ஏற்கெனவே நடுவர் மன்றத்திடம் விடப்பட்டுள்ளதால் கிருஷ்ணா நதியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவதுபற்றி தமிழக அரசை நடுவர் மன்றத்தோடு நேரடியாகவோ அல்லது ஆந்திர மாநிலத்தின் மூலமாகவோ அணுகும்படியும் தெரிவித்திருந்தார். அன்றைய மைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் தனது 4—4—1972 நாளிட்ட கடிதத்தில் கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்சினை நடுவர் மன்றத்தின் முன் இருப்பதால், நடுவர் மன்றத் தீர்ப்பு கிடைத்த பின்னர் சென்னைக்குக் குடிநீர் கொண்டு



வருவது பற்றி மைய அரசு சம்பந்தப்பட்ட மாநில அரசுகளோடு தொடர்பு கொள்வதுதான் முறையாக இருக்குமென்று கருத்து தெரிவித்தார். திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் பதிலிலிருந்து நடுவர் மன்றத்திடம் தொடக்கத்திலேயே அதாவது 1969-லேயே தமிழ்நாட்டை ஒரு வாதியாக்கிக் கொண்டு விவாதத்தில் கலந்து கொண்டிருப்பின் கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குக் கொண்டு வரும் பிரச்சினை நமக்குச் சாதகமாக முடிவாக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணவும் இடமளிக்கிறது. திரு. கே. எல். ராவ் அவர்களின் கடிதமும்கூட இந்தக் கருத்தை உறுதிப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

9. இந்தக் கடிதங்கள் கிடைத்தபின் கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்சினை சம்பந்தப்பட்ட நடுவர் மன்றத்தில் தமிழ்நாடு ஒரு வாதியாக ஆஜராக வேண்டிய அவசியம் இல்லையென்று ஏற்கெனவே எடுத்த முடிவை மறு பரிசீலனை செய்து பாதிக்கப்பட்ட மாநிலம் என்ற முறையில் தமிழ்நாட்டின் கோரிக்கையை நடுவர் மன்றத்திடம் விடும்படி மைய அரசுக்கு வேண்டுகோள் விடுத்து கடிதம் எழுதலாமென்று முடிவு செய்யப்பட்டு 21—8—1973 அன்று கடிதம் எழுதப்பட்டது. இந்த முடிவிலிருந்து, முன்பு (1969-ல்) தன்னை நடுவர் மன்றத்தின் முன்பு ஒரு வாதியாகச் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளாததும், ஒதுங்கியிருந்ததும், ஒரு தவறான கொள்கை முடிவு என்பது தெளிவாகிறது. மேலே குறிப்பிட்ட தமிழக அரசின் கடிதத்துக்கு அப்போதைய மைய பாசனத் துறை அமைச்சர் திரு. கே. சி. பந்த் அவர்கள் எழுதிய 31—1—1974 ஆம் நாளிட்ட பதில் கடிதத்தில், கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்சினைப் பற்றி நியமிக்கப்பட்ட நடுவர் மன்றத்தின்முன் சென்னை நகரக் குடிநீர்ப் பிரச்சினையை விடுவதற்கு நடைமுறை சாத்தியமில்லை. நடுவர் மன்றம் தனது பணியினை முடித்து தீர்ப்பளிக்கும் நிலையில் இருப்பதால் கர்நாடகம். ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம் மாநில முதலமைச்சர்களைத் தங்கள் பங்கிலிருந்து மொத்தம் 15 டி.எம்.சி. தண்ணீரைச் சென்னைக் குடிநீருக்குத் தரும்படி தான் கேட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

10. 1973-ல் எடுத்த முடிவை 1969-லேயே எடுத்து செயல்படுத்தியிருந்தால் ஒருவேளை இந்நேரம் கிருஷ்ணா நதி நீர்த் திட்டப் பணிகள் முடிக்கப் பட்டிருக்கும் என்று கூடச் சொல்லலாம்: திட்டச் செலவும் குறைவாக இருந்திருக்கும்.

11. இதற்கிடையில் 1972 அக்டோபர் மாதம் சோமசிலா நீர்த்தேக்கத் திட்டத்துக்கு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டதாகத் தெரியவந்தது. ஆனால், ஏற்கெனவே ஒப்புக்கொண்ட 5 டி. எம். சி. தண்ணீரைப் பெறுவது சம்பந்தமாக தமிழக அரசு ஆந்திர அரசோடு உடனே தொடர்பு கொள்ள

வில்லை. மாறாக 14—7—1974 அன்றுதான் அன்றைய தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் ஆந்திர முதல்வர் அவர்களுக்கு 20 மாதங்களுக்குப் பிறகு ஆந்திரத்தின் பங்காக 5 டி. எம். சி. தண்ணீரை சோமசிலா நீர்த்தேக்கத்திலிருந்து சென்னை நகருக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அன்றைய ஆந்திர முதல்வர் திரு. வெங்கல்ராவ் அவர்கள் 7—8—1974 நாளிட்ட பதில் கடிதத்தில், கிருஷ்ணா நதி நீர் பற்றிய நடுவர் மன்றத் தீர்ப்பில் சில வரையறைகள் இருப்பதாலும், ஆந்திர மாநிலத் தேவைக்கே தண்ணீர் போதாதென்பதாலும், ஆந்திரத்திலிருந்து சென்னைக்கு தண்ணீர் கொடுக்க முடியாதென்று கூறியிருந்தார். இருப்பினும், மகாராஷ்டிரா, கர்நாடக மாநிலங்கள் அவர்களுடைய பங்கிலிருந்து சென்னை நகருக்குத் தண்ணீர் கொடுத்தால் அந்தத் தண்ணீரை சென்னை நகருக்குக் கொண்டுபோக ஆந்திர மாநிலம் ஒத்துழைக்கும் என்று அவர் எழுதியிருந்தார். 20—11—1975 அன்று தமிழ்நாட்டின் அன்றைய முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள், மத்தியப் பாசன அமைச்சருக்கும் (திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள்) மகாராஷ்டிர, கர்நாடக, ஆந்திர மாநில முதலமைச்சர்களுக்கும் கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை மாநகருக்கு 15 டிஎம்.சி. தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று கடிதங்கள் அனுப்பினார். மத்தியப் பாசனத் துறை அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில், கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்சினைக்கான நடுவர் மன்றம் தன் தீர்ப்பை மறுபரிசீலனை செய்து கொண்டிருந்ததால் தமிழகத்தின் கோரிக்கையை நடுவர் மன்றத்தின் முன்வைத்து சென்னைக்கு குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்யும்படி வலியுறுத்தப்பட்டிருந்தது. 20—11—1975-ல் தமிழகத்தின் கோரிக்கையை வற்புறுத்தியவர்கள் 1969-ல் இதே முயற்சியை மேற்கொண்டிருந்திருப்பின் இன்றைய சென்னை நகரக் குடிநீர்ப் பிரச்சினையே ஏற்பட்டிருக்காது. ஆனால் அன்றைய மத்தியப் பாசனத் துறை அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் கிருஷ்ணா ஆற்றுப் பிரச்சினையில் மத்திய அரசு ஒரு வாதியாக இல்லாததால் அதுபற்றி மத்திய அரசு நடுவர் மன்றத்திடம் எதும் கூறமுடியாதென்று 19—1—1976 அன்று பதில் அளித்தார். 25—11—1975 அன்று கர்நாடகத்தின் அன்றைய முதல்வர் மறைந்த திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் மற்ற இரண்டு மாநிலங்களும் அவர்களது பங்கிலிருந்து சென்னை நகரத் தேவைக்குத் தண்ணீர் கொடுத்தால் கர்நாடகமும் கொடுக்கும் என்று பதில் அளித்தார். மகாராஷ்டிர முதல்வர் திரு. எஸ். பி. சவான் அவர்கள் சென்னை நகரக் குடிநீருக்கு மகாராஷ்டிரத்தின் பங்கிலிருந்து தண்ணீர் ஏதும் கொடுக்கமுடியாதென்றும், கிருஷ்ணா ஆற்றுக்கு கோதாவரியிலிருந்து கூடுதலாக தண்ணீர் கொடுக்கப்பட்டால் அதுபற்றி யோசிப்பதாகவும் 29—1—1976 அன்று பதில் அளித்தார்.



12. 1969-ல் நடுவர் மன்றத்தில் தமிழக அரசும் வாதியாக இடம் பெற்று தமிழகத்தின் சார்பாக தனது கருத்தைத் தெரிவிக்கத் தவறியதன் காரணமாக, பிரச்சினை குழப்பமடைந்து சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் கிடைக்காது என்ற அச்சத்துக்கு சென்னை வாழ் மக்கள் ஆளாக்கப்பட்டனர். இந்நிலையில் 31—1—1976 அன்று தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவரின் ஆட்சி கொண்டுவரப்பட்டது. மகாராஷ்டிரம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்களின் சம்மதத்தையும் பெற்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீர் சென்னை நகரக் குடிநீர்த் தேவைக்குக் கொடுக்கப்படுமென்று 15—2—1976 அன்று சென்னையில் அறிவித்தார்கள். இவ்வறிப்பையொட்டி இம்மூன்று மாநில அரசுகளும், தமிழக அரசும் 14—4—1976 அன்று ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. இந்த ஒப்பந்தத்தின்படி மூன்று மாநிலங்களும் கிருஷ்ணா நதி நீரில் தத்தம் பங்கிலிருந்து 5 டி. எம்.சி. விதம் மொத்தம் 15 டி.எம்.சி. தண்ணீரைச் சென்னைக்குத் தருவதென்றும் இந்தத் தண்ணீரை எங்கிருந்து எடுப்பது, எப்படிக் கொண்டு செல்வது போன்ற விவரங்களைப் பின்னர் பேச்சு வார்த்தை மூலம் தீர்மானிக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. பின்னர் அதிகாரிகள் மட்டத்தில் நடந்த பேச்சு வார்த்தைகளின்போது குழாய்களின் மூலம்தான் சென்னைக்கு குடிநீர் கொண்டு செல்ல வேண்டுமென்று மகாராஷ்டிர அரசும், கர்நாடக அரசும் வற்புறுத்தின.

13. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், மத்திய வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் தலைமையில் 27—10—1977 அன்று ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி ஜூலை முதல் அக்டோபர் வரையிலான கால அளவில் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து, திறந்த கரை பூசப்பட்ட கால்வாய் மூலம் ஆண்டொன்றுக்கு 15 டி.எம்.சி. நீரை எடுத்துக்கொள்ள ஏற்பாடுகள் செய்து ஒப்புக்கொள்ளப் பட்டது.

## வீராணம் திட்டம் கைவிடப்பட்டது ஏன்?

14. நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் சென்னைக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தி வந்த அதேநேரத்தில், ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசால் துவக்கப்பட்டு நிறுத்தப்பட்ட வீராணம் திட்டத்தைப் பற்றியும் பரிசீலித்து முடிவு எடுக்க முழு முயற்சியில் ஈடுபட்டது. நாளொன்றுக்கு 40 மில்லியன் காலன் தண்ணீரை அதாவது ஆண்டொன்றுக்கு சுமார் 25

டி.எம்.சி. தண்ணீரை வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு குழாய் மூலம் கொண்டுவரும் வகையில் தீட்டப்பட்ட திட்டம் வீராணம் குடிநீர்த் திட்டமாகும். இத்திட்டத்திற்கான குழாய்கள் தயாரிக்கும் பணியும் அவற்றை பூமிக்குள் பதிக்கும் பணியும் துவக்கப்பட்டு 1975 ஆம் ஆண்டு அப்பணி இடையில் நிறுத்தப்பட்டுவிட்டது. 1975 ஆம் ஆண்டு சென்னையில் ஏற்பட்ட வறட்சியின்போது குடிநீர் வசதிக்காக திருவான்மியூரிலிருந்து வீராணம் திட்டத்திற்கு தயாரிக்கப்பட்ட குழாய்கள் மூலம் சோதனை அடிப்படையில் நீர் ஏற்றப்பட்டபோது (Pump) அழுத்தம் தாங்காமல் குழாய்களில் வெடிப்பு ஏற்பட்டது. இந்தத் திட்டத்துக்குத் தேவையான குழாய்களின் தரம் குறித்தும், எத்தகைய குழாய்களை உபயோகிக்கலாம் என்பது பற்றியும் ஆய்வு செய்து அறிக்கை தருவதற்காக சென்னை விஞ்ஞான தொழில் ஆராய்ச்சி நிலையத்தின் கீழுள்ள "ஸ்டிரெக்சுரல் என்ஜினியரிங் ரிசர்ச் சென்டர்"-ன் இயக்குநராக இருந்த புரொபசர் ஜி. எஸ். ராமசாமி அவர்களைத் தலைவராகக் கொண்டு ஒரு தொழில் நுட்பக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு 1976 ஆம் ஆண்டு மே மாதம் தனது அறிக்கையை அரசுக்கு அளித்தது. இந்த அறிக்கையில், ஏற்கனவே தயாரிக்கப்பட்ட 10,586 குழாய்களில் 6,000 குழாய்கள்தான் ஏற்கத்தக்கவை, மற்றவை பழுது பார்க்கப்பட்டு மறுபரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவை என்றும்; ஏற்கனவே புதைக்கப்பட்ட குழாய்களை மீண்டும் தோண்டி எடுத்து சோதித்த பின்புதான் பயன்படுத்த வேண்டுமென்றும், வேக்ரிட் முறைப்படி தயாரிக்கும் குழாய்கள்தான் தொழில் நுட்ப ரீதியாக தரமானவை என்றும், ஆனால் இந்த முறைப்படி குழாய்கள் இந்தியாவில் எங்கும் தயாரிக்கப்படாததால், வேக்ரிட் நிறுவனம் இந்தக் குழாய்களின் தரத்திற்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

15. வீராணம் திட்டத்தைப் பற்றி ஆய்வு செய்த பொது நிறுவனங்கள் குழு தனது 1977-79 ஆம் ஆண்டுக்கான 6-வது அறிக்கையில் இத்திட்டத்தைப் பற்றியும், திட்டம் துவக்கப்பட்டது முதல் செயல்பட்ட விதத்தைப்பற்றியும் கீழ்க்கண்டவாறு கடுமையாக விமர்சித்துள்ளது.

(1) இந்தத் திட்டத்திற்குத் தேவையான நீர் கிடைக்குமா என்பதையும் இந்த அளவு நீரை வாங்கி வழங்குவதற்கு வீராணம் ஏரிக்குக் கொள்திறன் தொடர்ந்து இருக்குமா என்பதையும், ஒரு குறிப்பிட்ட **காலத்திற்**காவது வீராணம் ஏரி திட்டத்திற்குப் பயன்படுமா என்பதையும் (முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்களின்) அரசு முழுமையாக **ஆய்வு** செய்திருக்க வேண்டும்.



(2) கெட்டியாக்கப்பெற்ற கான்க்ரீட் குழாய் தயாரித்துப் பதித்தல் குறித்த ஒரு மாபெரும் ஒப்பந்தம் எவ்வகையிலும் தகுதியற்ற ஒரு நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பெற்று, பணிகள் சரியாக நிறைவேற்றப்படாமல் ஒரு குழப்பமான நிலை உருவாகி அரசுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.

(3) திட்டமிடுதல், வடிவமைத்தல், தயாரிப்பு முறை ஆகியவை பற்றிய நடைமுறை வரைபடங்களுக்கும், கலவை விகிதாச்சாரங்களுக்கும் துறையின் ஒப்புதல் அளிக்கப் பெறாமலேயே பணிகளைத் தொடங்கியது; Indian Standard Specification தரத்தின்படி நீர் அழுத்தத்தைத் தாங்கும் சக்தி குழாய்களுக்கு இருப்பதை உறுதி செய்து கொள்ளத் தவறியது; குழாய்களின் மேலுறையில் விரிசல் ஏற்படாது இருப்பதை உறுதி செய்து கொள்ளத் தவறியது ஆகிய முறைகேடுகள் நிகழ்ந்துள்ளன.

(4) மேலும், ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருக்கும் பல்வேறு சோதனைகளை நடத்தத் தவறியமை;

கான்க்ரீட் சோதனைக்கு எடுத்துக்கொள்ளப் பெறும் சோதனை சிலிண்டர்கள் குழாய்க் கான்க்ரீட் தயாரிக்கப்பெறும் நிலையிலேயே தயாரிக்கப்பெறுவதை உறுதி செய்துகொள்ளத் தவறியமை; கான்க்ரீட் வலு எம். 450 தரத்தை எய்தவில்லை என்பது தெரிந்திருந்தும் குழாய் தயாரிப்பதைத் தொடர்ந்து நடத்தியது ஆகிய முறைகேடுகள் நிகழ்ந்துள்ளன.

(5) ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒப்பந்தக்காரருக்கு ஆதாயம் ஏற்படும் வகையிலேயே வடிவமைப்பிலும், ஒப்பந்த நிபந்தனைகளிலும் மாறுதல்கள் செய்யப் பட்டுள்ளன என்பது குறித்து தனது அதிருப்தியைத் தெரிவிக்கிறது.

(6) மேலும் அவ்வறிக்கையில் இத்திட்டத்தில் செய்யப்பட்ட மற்றொரு தவறு பெருவாரியான தொகை ஒப்பந்தக்காரருக்குக் கொடுத்ததுதான் என்றும், அரசு இத் திட்டத்திற்கென்று ஒதுக்கிய மொத்தத் தொகையான ரூ. 16.55 கோடியில் திட்டத் தொடக்கத்திலேயே பொருளாகவும், முன்பணமாகவும் ஒப்பந்தக்காரருக்குக் கொடுத்தது ரூ. 13.25 கோடி என்றும், இது போன்று வேறு எந்த வேலைக்கும் ஒப்பந்தக்காரருக்கு இவ்வளவு பெருந் தொகையினை அளித்ததாக அரசின் வரலாற்றில் இல்லையென்றும் தெரிவித்துள்ளது.

இந்தக் குழு தனது அறிக்கையின் இறுதியில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது :—

"இத்திட்டத்தின் அனைத்து ஒப்பந்தங்களில் உள்ள ஒப்பந்த விதிகளும் சரியாக எம்மட்டத்திலும் ஆரம்பத்திலிருந்தே நிறைவேற்றப்படவில்லை. இதன் விளைவாகத் திட்டமே தோல்வியுற்றது. இந்தத் திட்டத்தை மறு

முறையும் சரி செய்து உற்பத்தி செய்யப்பட்டுள்ள குழாய்களைச் சரிபார்த்து இந்தத் திட்டத்தை மேற்கொண்டு நடத்த இயலுமா என்பதும் ஒரு கேள்விக் குறியாகவே தெரிகின்றது. குழாய்களை உற்பத்தி செய்யும் முறை நம் நாட்டிற்கு உகந்ததாக இல்லாததினால் மறுமுறையும் "வாக்குவம்" முறை செயல்படுத்த முடியுமா என்பதும் சந்தேகமாக உள்ளது. அவ்வாறே செயல்படுத்த முடியுமானால் கூட, இதுவரையிலும் தயார் செய்த குழாய்களில் பெருமளவு உபயோகிக்க முடியாது என்று கூறப்பெறுகிறது. ஆகவே, இதற்கு மேலும் பல கோடி ரூபாய் செலவிட வேண்டி வரும். இத்திட்டம் வெற்றி பெறாததுடன், செலவிடப்பட்ட தொகை எவ்வளவு தேறுமென்பதற்கும் குழு தனது கருத்தைத் தெரிவிக்க இயலவில்லை".

"சென்னைக்குக் குடிதண்ணீர் கொண்டு வரும் இம்முயற்சி பயன் அளிக்காததினால் காலம் தாழ்த்தப்பட்டு சென்னை குடிதண்ணீர் பிரச்சினை இன்னும் தீராமல் உள்ளது. எனவே அரசு இத் திட்டத்தை மேற்கொண்டு தொடர்ந்து நடத்துவது பற்றியோ அல்லது கைவிடுவது பற்றியோ உடனடியாக ஒரு முடிவிற்கு வர வேண்டும். சென்னை குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால், இத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கோ அல்லது வேறு திட்டத்தை உருவாக்குவற்கோ அரசு உடனடியாக முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது".

16. மேலும் உலக வங்கிக் குழு தனது பரிந்துரையில் இத் திட்டத்திற்குக் கடனுதவி செய்வதாயின் சிமெண்ட் குழாய்களுக்குப் பதில் உருக்குக் குழாய்களைத்தான் பயன்படுத்த வேண்டுமென்றும் நிபந்தனை விதித்தது. இவ்வாறு உருக்குக் குழாய்களைப் பயன்படுத்தினால் திட்டச் செலவு ரூ. 205 கோடியாகும் என்று மதிப்பிடப்பட்டது. இவ்வாறு 205 கோடி ரூபாய் செலவில் சுமார் 2.5 டி.எம்.சி. தண்ணீரைமட்டுமே கொண்டு வரும் வீராணம் திட்டம் சிக்கனமற்றதெனக் கருதப்பட்டு கைவிடப்பட்டது. இன்று வீராணம் ஏரியில் இன்று குடிக்க ஒரு சொட்டு நீர் கூட இல்லையென்பதும் சேறு கலந்த தண்ணீர் இரண்டடி அளவிற்கு உள்ளது, காவிரி நதியில் ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைப்பது நிலையற்றதாகிவிட்டது என்பதும் சிந்திக்கத்தக்கது.

### கட்டளைக் கால்வாய்த் திட்டம்.

17. இது தவிர வேறு சில மாற்றுத் திட்டங்களும் பரிசீலிக்கப்பட்டன. திருச்சி மாவட்டத்தில் காவிரி நதியில் கட்டளை அணைக்கட்டிற்கருகிலிருந்து சுமார் 203 கோடி ரூபாய் செலவில், 450 கி.மீ. நீளத்திற்குக் கால்வாய் வெட்டி



நாளொன்றுக்கு 995 மி.லி. தண்ணீரை (சுமார் 13 டி.எம்.சி.) சென்னை மாநகருக்குக் கொண்டுவருவதற்கான திட்டம் பரிசீலிக்கப்பட்டது. வீராணம் திட்டத்தைப்போல் உருக்குக் குழாய்களுக்கென்று கோடிக்கணக்கான ரூபாய்களை வெளிநாட்டுக்குக் கொடுக்காமல், கால்வாய் வெட்டுவதன் மூலம் மனித உழைப்பிற்காகச் செலவு செய்வதினால் இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு வேலை கிடைக்கும் என்ற காரணத்தால் இந்தக் கட்டளைக் கால்வாய்த் திட்டத்தைப் பரிசீலிக்க விரும்பினோம். மேலும், வீராணம் திட்டத்தில் தண்ணீரைக் குழாய்களின் வழியாக விசையேற்றம் (Pump) செய்வதன் மூலமே சென்னைக்குக் கொண்டுவர முடியும். ஆனால், கட்டளைக் கால்வாய்த் திட்டத்தில் நில மட்ட வித்தியாசத்தின் காரணமாக ஈர்ப்புச் சக்தியினாலேயே Gravity தண்ணீர் தானாகக் கால்வாய் வழியே சென்னை வந்து சேரும். இத் திட்டம் பரிசீலிக்கப்பட்டபோது இதற்காகக் கர்நாடகத்திடமிருந்து அதிகத் தண்ணீர் கேட்டுத்தான் இதை நிறைவேற்ற வேண்டும் என்று உத்தேசிக்கப்படவில்லை. காவிரியிலிருந்து கிடைக்கும் தண்ணீரிலேயே சிறு பகுதியும், தமிழகத்திற்குள் காவிரிப் பகுதியில் பெய்யும் மழையையும், மற்ற ஆறுகளிலிருந்து வரும் நீரையும் கணக்கிட்டுத்தான் இத் திட்டத்தைப் பரிசீலித்தோம்.

ஆனால், இத் திட்டத்தினால், திருச்சி, தஞ்சாவூர் மாவட்ட காவிரி நதி நீர்ப்பாசன ஆயக்கட்டு நிலங்கள் பாதிக்குமென்று அம் மாவட்ட விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். தங்களது பிடிவாதம் நாட்டு நலனைவிடப் பெரிதென்று கருதும் ஒரு சில தலைவர்கள் இத் திட்டத்திற்குக் கர்நாடகம் ஒப்புக் கொள்ளுமா, விவசாயிகள் அனுமதிப்பார்களா என்றெல்லாம் பேசி, சிக்கலை உருவாக்கி, இதையொரு விவாதப் பொருளாக்கி கர்நாடக மாநிலத்திற்கு யோசனையும் கூறினார்கள். இந்தக் கட்டளைக் கால்வாய்த் திட்டத்திற்கு யோசனை தந்தவரே பின்னால் உத்தரவாதம் தருவதற்கு மறுத்து விட்டார். இவ்வாறான சூழ்நிலைகளில் இத் திட்டமும் கைவிடப்பட்டது.

### கிருஷ்ணா நீர்த் திட்டம் பற்றி தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகள்.

18. இவ்வாறு மாற்றுத் திட்டங்கள் பற்றி பரிசீலித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில், கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் பற்றியும் தொடர்ந்து ஆந்திரப் பிரதேச அரசுடன் இந்த அரசு பேச்சுவார்த்தைகள் நடத்தி வந்தது. ஆந்திரப் பிரதேச அப்போதைய முதலமைச்சர் டாக்டர் திரு. சென்னா ரெட்டி அவர்களும், நானும் 15—6—1978 அன்று ஹைதராபாத்தில் இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தினோம். இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எடுத்த மறு முயற்சிக்கு டாக்டர் சென்னா ரெட்டி அவர்களுக்கு பெரும் பங்குண்டு.

அவருடன் நான் நடத்திய பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இத் திட்டத்தின் தொழில்நுட்ப சாத்தியக் கூறுகளைப் பரிசீலிப்பதற்காக ஆய்வு செய்யும் பணிகள் உடனடியாகத் தொடங்கப்பட வேண்டுமென்றும், இரு மாநிலங்களின் அதிகாரிகள் அடங்கிய தொடர்புக் குழு ஒன்று இந்த ஆய்வுப் பணியின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க வேண்டுமென்றும் இருசாரரும் முடிவு செய்யப்பட்டது.

19. ஆந்திரப் பிரதேச அரசும், தமிழ்நாடு அரசும் இத் திட்டம் குறித்து மேற்கொண்ட ஆய்வில் இத் திட்டம் தொழில்நுட்ப ரீதியில் சாத்தியமானது என்பது உறுதிப்படுத்தப்பட்டது. ஆந்திரப் பிரதேச அரசின் அறிக்கை நவம்பர் 1982 ஆம் ஆண்டில் தமிழக அரசிற்குக் கிடைத்தது. இதையடுத்து, இத் திட்டத்தை மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் ஏற்படுத்துவது பற்றி இரு மாநில அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தைகள் நடந்தன. சென்னையில் ஆந்திர முன்னாள் முதல்வர் திரு. பவனம் வெங்கட்ராம் அவர்கள் தங்கள் அதிகாரிகளுடன் சென்னை வந்து என்னுடனும் நமது அதிகாரிகளுடனும் பேசி ஒரு முடிவு எடுக்கப்பட்டது.

### கிருஷ்ணா நீர் ஒப்பந்தம் 18—4—1983.

20. இறுதியாக, 18—4—1983 அன்று ஐதராபாத்தில் ஆந்திர மாநில முதலமைச்சர் என் உடன் பிறப்பு மாண்புமிகு திரு. என்.டி. ராமராவ் அவர்களிடம் நானும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களும், அதிகாரிகளும் பேச்சு வார்த்தை நடத்தினோம். இக் கூட்டத்தில் சென்னைக்குக் கிருஷ்ணா நதியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சங்கள் கீழ்க்கண்டவையாகும் :—

(1) சென்னைக் குடிநீர் கால்வாய், ஆந்திரப் பிரதேசம், கடப்பா தாலுக்காவிலுள்ள சென்னமுக்கப்பள்ளி என்ற கிராமத்தின் அருகிலிருந்து வெட்டப்படும். ஸ்ரீசைலத்திலிருந்து சென்னமுக்கப்பள்ளி வரை தண்ணீர் கொண்டு வருவதற்குச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை ஆந்திரப் பிரதேசம் முடிவு செய்யும்.

(2) சென்னமுக்கப்பள்ளியிலிருந்து பெண்ணாற்றில் உள்ள சோமசீலா நீர்த்தேக்கம் வரை தமிழ் நாட்டிற்காக ஒரு தனிக் கால்வாய் வெட்டப்படும்.

(3) தற்போது கட்டப்பட்டுவரும் இந்த சோமசீலா நீர்த்தேக்கம் சென்னை நகரக் குடிநீர்த் திட்டத்திற்கும் பயனளிக்கும் வகையில் விரிவாக்கப்படும்.





(4) சோமசீலா நீர்த்தேக்கத்திற்குக் கீழ், 54 டி.எம்.சி. கொள்ளளவு உள்ள கண்டலேரு நீர்த்தேக்கம் அமைக்கப்படும். இந்நீர்த் தேக்கம் ஆந்திர மாநிலத்தில் பாசனத்திற்கு மட்டுமல்லாமல் சென்னை நகரக் குடிநீர்த் திட்டத்திற்கும் நீரைச் சேமித்து வைப்பதற்கு பயனுள்ளதாக இருக்கும்.

(5) கண்டலேரு நீர்த்தேக்கத்திலிருந்து தமிழ் நாடு—ஆந்திரப் பிரதேச எல்லை வரை ஆந்திர மாநிலத்தில் பாசனத்திற்கும், சென்னை நகரக் குடிநீர்த் திட்டத்திற்கும் பயனளிக்கும் வகையில் ஒரு கால்வாய் வெட்டப்படும்.

(6) ஆந்திரப் பிரதேசத்தின் எல்லைக்குள் சென்னை நகரக் குடிநீர் வழங்கும் திட்டக் கட்டுமானப் பணிகளை ஆந்திர அரசு நிறைவேற்றும். அப் பணிகளுக்கான செலவு, ஒவ்வொரு பணியினாலும் இரு மாநிலங்களும் அடையும் பயன்களின் விகிதாசாரப்படி பகிர்ந்து கொள்ளப்படும். இதே போல், இப்பணிகளைப் பராமரிப்பதற்கான செலவும் இதே விகிதாச்சாரப்படி பகிர்ந்து கொள்ளப்படும்.

(7) ஒவ்வொரு வருடமும் தமிழ்நாடு அரசால் வகுக்கப்பட்ட முறைப்படி வருடத்தில் 8 மாதங்களில் (நவம்பர், டிசம்பர், மே, ஜுன் நீங்கலாக) குறிப்பிட்ட அளவு தண்ணீரை ஆந்திர அரசு, தமிழ்நாட்டின் எல்லையில் கொடுக்கும்.

(8) இப்படிக் கொடுக்கப் போகும் அளவு, வழியில் ஏற்படும் நீரிழப்பையும் சேர்த்து ஒரு வருடத்திற்கு 15 டி.எம்.சி. ஆகும். நீரிழப்பு ஒரு வருடத்திற்கு 3 டி.எம்.சி.க்கு மேல் கணிக்கப்படாதென்றும் ஆந்திர பிரதேச அரசு ஒப்புக்கொண்டுள்ளது. நீரிழப்பு அதிகமாயின் அதை குறைக்க ஏற்படும் செலவை ஆந்திரப் பிரதேச அரசும், தமிழ்நாடு அரசும் ஏற்கெனவே வகுத்த முறையில் பகிர்ந்து கொள்ளும்.

(9) பணிகளை நிறைவேற்றும்போது நீரைக் கொண்டுவரும் கால்வாயின் தரைமட்டம், முழு நீர்மட்டம், முதலியவற்றில் ஏதேனும் மாற்றம் தேவைப்பட்டால் இம்மாறுதல்கள் இரு மாநிலங்களின் அதிகாரிகள் அடங்கிய தொடர்புக் குழுவின் அனுமதியுடன்தான் நிறைவேற்றப்படும்.

(10) இத்தொடர்புக் குழு பணிகளின் முன்னேற்றத்தையும், பணிகள் முடிந்த பிறகு திட்டம் செயல்படும் முறையையும் கண்காணிக்கும்.

(11) இத்திட்டத்தின்படி கிடைக்கும் நீரை சென்னை நகரின் குடிநீர்த் தேவைக்குத் தவிர வேறு எதற்கும் தமிழ்நாடு அரசு பயன்படுத்தாது.

[1983 ஏப்ரல் 27

(12) இத்திட்டத்தை மூன்று முதல் ஆறு ஆண்டுகளில் முடிக்க முடியும் என்று இரு அரசுகளும் கருதுகின்றன.

(13) இதை விரைவாகவே நிறைவேற்றுவதற்கு தமிழ்நாடு அரசு பணிகளின் முன்னேற்றத்தைப் பொறுத்து முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ. 60 கோடி வரை ஆந்திர அரசுக்குத் கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளது.

(14) இந்த ஒப்பந்தம் காலவரம்பற்றது; நிரந்தரமானது.

21. ஆந்திர மாநிலத்தில் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து தமிழகத்தின் எல்லைவரை தண்ணீர் கொண்டு வருவதற்கு 354 கி.மீ. நீளத்திற்கு வாய்க்கால்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளன. இவை தவிர, சென்னை நகரக் குடிநீர் திட்டத்திற்குத் தமிழ்நாட்டின் எல்லைக்குள் பல வேலைகள் செய்ய வேண்டியுள்ளன. தமிழ்நாடு எல்லையிலிருந்து பூண்டி நீர்த்தேக்கம் வரை 25 கி.மீ. நீளத்தில் ஒரு கால்வாயும், பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கம் வரை 25 கி.மீ. நீளத்திற்கு மற்றொரு கால்வாயும் வெட்டப்பட வேண்டியுள்ளது. மேலும் கிருஷ்ணா நதியிலிருந்து பெறப்படும் நீரை முறைப்படி சேமித்து வழங்க பூண்டி, புழலேரி, செம்பரம்பாக்கம் இம்மூன்று நீர்த்தேக்கங்களிலும் நீர்மட்டத்தை 2 அடி உயர்த்துவதோடு இத்தண்ணீரைச் சென்னை நகருக்குள் குடிநீர் உபயோகத்திற்குப் பயன்படுத்த குழாய்கள் அமைப்பதும், மற்றும் வடிகால்களை அமைப்பதும், அவசியம். இதற்குச் சுமார் ரூ. 236 கோடி ஆகும் என்று மதிப்பிடப்படுகிறது. ஆந்திரப் பிரதேச எல்லைக்குள் செய்யப்பட வேண்டிய வேலைகளுக்குத் தமிழ்நாட்டின் பங்கு இப்போது சுமார் ரூ. 200 கோடி இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

22. சென்னை நகரில் இன்னும் 20 ஆண்டுகளில் வளரும் மக்கள் தொகையின் நீர்த்தேவையை முழு அளவில் சரிக்கட்ட நாளொன்றுக்கு 1294 மில்லியன் லிட்டர் தண்ணீர் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. தற்சமயம் கிடைக்கக் கூடிய நீரின் அளவு 299 மில்லியன் லிட்டர்தான். நாளொன்றுக்குக் கூடுதலாகத் தேவைப்படும் தண்ணீர் 995 மில்லியன் லிட்டர். ஏற்கெனவே வகுக்கப்பட்டு, வேலைகளும் தொடங்கப்பட்டு கைவிடப்பட்ட வீராணம் திட்டம் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டரையே, அதுவும் நீரேற்றத்தின் மூலமாகத்தான் கொடுத்திருக்கும். எனவே சென்னை நகருக்குத் தேவையான தண்ணீரை நிரந்தரமாகப் பெறுவதற்கு கிருஷ்ணா ஆற்றிலிருந்து தண்ணீரைப் பெறும் இத்திட்டமே சிறந்தது. ஆந்திரப் பிரதேச அரசுடன் நிறைவேற்றப்பட்ட இந்த ஒப்பந்தம், இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட்டு சென்னைக்குக் குடிநீர் கிடைக்க வகை செய்யும். அதேசமயம்



1983 ஏப்ரல் 27]

ஆந்திரப் பிரதேசத்தின் பின்தங்கிய பகுதிகளும் நீர்ப்பாசனத்தை விரிவுபடுத்துவதன் மூலம் பெரும் பயனடையும். இத்திட்டத்தின் மூலம் இரு மாநிலங்களிலும் பெருமளவில் வேலை வாய்ப்புகள் ஏற்படும். இந்தியாவிலேயே, இரு மாநிலங்களுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் ஒரே நாளில் பேசி உருவாக்கப்பட்டு, இருமாநில மக்களுக்கும் ஒரே நேரத்தில் சம அளவில் பயன் பெறும் திட்டம் இது ஒன்றுதான் என்பதில் சந்தேகமில்லை.

23. இவ்வொப்பந்தம் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்த பாரதப் பிரதமர் அவர்களுக்குத் தமிழக, குறிப்பாகச் சென்னைவாழ் மக்களும், தமிழக அரசும் பெரிதும் நன்றி கூறிக்கொள்ளுகின்றோம். கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆந்திரம் ஆகிய இம் மூன்று மாநிலங்களையும் அவர்கள் அன்று (15-2-1976) சம்மதிக்கச் செய்ததினாலேயே இன்று இவ்வொப்பந்தம் உருவாகியுள்ளது என்பதையும் இந்நேரத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். மகாராஷ்டிரா, கர்நாடக, ஆந்திர மாநில அரசுகளுக்கு நமது நன்றி உரித்தாகுக. அவர்கள் சம்மதம் தாராதிருப்பின் இவ்வொப்பந்தம் ஏற்பட்டிருக்குமா என்பது சந்தேகமே! இப்பேச்சு வார்த்தைகளில் தமிழக அரசின் தரப்பில் கலந்து கொண்ட மின்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம், தலைமைச் செயலாளர் (பொறுப்பு) திரு. சொக்கலிங்கம், பொதுப் பணித் துறைச் செயலாளர் திரு. மாதவ சர்மா, சட்டத் துறைச் செயலாளர் திரு. வடிவேலு, தலைமைப் பொறியாளர் திரு. மோகன கிருஷ்ணன், எனது செயலாளர் திரு. எம். பரமசிவம் முதலானவர்களுக்கும், ஆந்திர அரசின் தரப்பில் கலந்து கொண்ட ஆந்திர மாநில நிதியமைச்சர் மாண்புமிகு திரு. பாஸ்கர ராவ், பாசன அமைச்சர் மாண்புமிகு திரு. ஸ்ரீநிவாசலு ரெட்டி, தலைமைச் செயலாளர் திரு. இராமன், பாசனத் துறைச் செயலாளர் திரு. நடராஜன், நிதித் துறைச் செயலாளர் திரு. மாதவ ராவ், முன்னாள் பாசனச் செயலாளர் திரு. ராஜா ராவ், சட்டத் துறைச் செயலாளர் திரு. ராவ், தலைமைப் பொறியாளர் திரு. ராஜேந்திரகுமார் முதலானோர்க்கும் தமிழகத்தின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இறுதியாக, பேச்சு வார்த்தைகளில் அவ்வப்போது ஏற்படும் சிறு பிரச்சினைகளைப் பரந்த மனப்பான்மையுடன் தீர்த்து ஒப்பந்தம் ஏற்பட வாய்ப்பளித்த என்றும் எனது அருமை உடன்பிறப்பான ஆந்திர முதல்வர் மாண்புமிகு திரு. என். டி. ராமாராவ் அவர்களுக்கு என் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் நன்றியையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒருவேளை இதை விடச் சிறப்பாக வேறு யாராவது இந்த ஒப்பந்தத்தை செய்ய முடிந்திருக்கலாம். எனினும் என்னை வாழவைக்கும் தமிழகத் தாய்மார்களின், பெரியோர்களின்,

சென்னைவாழ் மக்களின் நீண்டகாலத் தேவையான குடிநீர்ப் பிரச்சினைக்கு அவசர, அவசிய நோக்கோடு என்னால் முடிந்த அளவு, எனது கடமையை அண்ணா வழியில், என்னை இந்நிலையில் வைத்துள்ள தமிழகத்திற்குச் செய்து முடித்துள்ளேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு என்னை ஆளாக்கிய அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், தமிழக மக்களுக்கும் மீண்டும் ஒருமுறை எனது வணக்கத்தைக் காணிக்கையாக்குகிறேன்.

வாழ்க அண்ணா நாமம்!

## இணைப்பு II

[384 ஆம் பக்கத்தில் இனம் 5(1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

L.A. Bill No. 47 of 1982

(As passed by the Assembly.)

*A Bill to provide for the sanction of pension or grant or scholarships to those who have exhibited courage or nobility in their zeal to preserve the growth of Tamil language or Tamil culture or exhibited conspicuous talents in Tamil language and to provide for the sanction of pension or grant to the families of persons who have evinced remarkable enthusiasm for Tamil language or Tamil culture, and while striving to uphold their enthusiasm for Tamil language or for the preservation of Tamil culture, lost their life.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows:—

1. *Short title, extent and commencement*.—(1) This Act may be called the Tamil Nadu Payment of Pension to Tamil Scholars and Miscellaneous Provisions Act, 1983.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall come into force on such date as the Government may, by notification, appoint.

2. *Definitions*.—In this Act, unless the context otherwise requires,—

(a) "dependant" means the wife or husband, as the case may be, and includes—

(i) sons who have not attained the age of eighteen years;

(ii) unmarried or widowed daughters;



(iii) parents;

(iv) brothers who have not attained the age of eighteen years;

(v) unmarried or widowed sisters;

of a person or martyr and who had been wholly dependant on such person or martyr, as the case may be;

(b) "Government" means the State Government;

(c) "grantee" means a person to whom pension, grant or scholarship has been sanctioned under this Act;

(d) "martyr" means a person who has evinced remarkable enthusiasm for Tamil language and Tamil culture and while striving to uphold his enthusiasm for Tamil language or in his zeal to preserve the growth of Tamil language or to presrve the Tamil culture, has lost his life.

3. *Sanction of pension, grant of scholarship.—The Government may sanction a pension of one hundred and fifty rupees per mensem, or a grant not exceeding ten thousand rupees or both*—

(a) to every person who has exhibited conspicuous courage and nobility in his enthusiasm for the Tamil language or in his zeal to preserve the growth of Tamil language or to preserve the Tamil culture;

(b) to the dependant of every martyr.

Provided that where there are more than one dependant of a martyr, the pension or grant shall be sanctioned only to one of such dependants and for purpose of such sanction of pension, preference shall be given to a dependant in the order specified in clause (a) of section 2 and where there are more than one dependant of the same category specified therein, the pension or grant shall be apportioned among such dependants in such manner as may be prescribed.

(2) On the death of a person who has been sanctioned pension under clause (a) of sub-section (1), the *Government may sanction a pension of one hundred and fifty rupees per mensem to the dependant of such person*:

Provided that where there are more than one dependant of such person, the pension under this sub-section shall be sanctioned to only one of such dependants and for purpose of such sanction of

pension, preference shall be given to a dependant in the order specified in clause (*a*) of section 2 and where there are more than one dependant of the same category specified therein, the pension or grant shall be apportioned among such dependants in such manner as may be prescribed.

(3) *The Government may sanction scholarships not exceeding five thousand rupees* in such number of instalments and in such manner, as may be prescribed, to—

(i) students who have exhibited conspicuous talents or marked skill in Tamil language ;

(ii) teachers who have evinced notable interest to the preservation and growth of Tamil language ;

(iii) poets and writers of outstanding merit in Tamil language ; and

(iv) persons engaged in research work in Tamil language or Tamil culture.

4. *Application for pension, etc.*—(1) Any person who is eligible for sanction of pension, grant or scholarship under this Act may make an application to the Government in such form and in such manner, as may be prescribed.

(2) The application under sub-section (1) shall be accompanied by a certificate from such officer, in such form, and in such manner, as may be prescribed.

(3) On receipt of an application under sub-section (1), the Government may cause such enquiries as they may deem necessary, to be made regarding the eligibility or otherwise of the applicant and may sanction the pension, grant or scholarship, as the case may be, in accordance with the provisions of this Act and the rules made thereunder.

(4) The Government, while sanctioning pension [other than the pension referred to in sub-section (5)], grant or scholarship under this Act, shall take into consideration the following factors, namely :—

(i) the remarkable skill or conspicuous talent in the Tamil language exhibited by the applicant or the martyr, as the case may be ;



(ii) the outstanding merit of the applicant or the martyr, as the case may be, in contributing to the growth of Tamil language and the preservation of Tamil culture;

(iii) the courage and nobility exhibited by the applicant in his zeal to preserve the growth of Tamil language or to preserve the Tamil culture ;

(iv) the remarkable enthusiasm for Tamil language and his zeal to preserve Tamil culture, evinced by the martyr ;

(v) the nature of the suffering either by way of imprisonment or other undergone by the applicant or the martyr, as the case may be; or

(vi) such other factors as may be prescribed.

5. The Government, while sanctioning pension under sub-section (2) of section 3, shall take into consideration the financial position of the applicant and such other factors as may be prescribed.

5. *Sanction of pension or scholarship to lapse in certain cases.*—(1) On the death of the grantee, the sanction of pension or scholarship to such grantee shall from the date of his death including unpaid arrears, lapse:

Provided that the Government may, if they deem fit, make the payment of such arrears in exceptional circumstances, to a claimant who shall be a dependant of such grantee.

(2) The sanction of pension under clause (*b*) of sub-section (1) of section 3 or under sub-section (2) of that section shall lapse,—

(i) where the grantee is the daughter or sister of the martyr or of the person referred to in clause (*a*) of sub-section (1) of section 3, on his attaining the age of eighteen years.

(ii) where the grantee is the son or brother of the martyr or the person referred to in clause (*a*) of sub-section (1) of section 3, on his attaining the age of eighteen years.

6. *Cancellation of pension, etc., in the event of the grantee ceasing to reside in the State.*—Notwithstanding anything contained in this Act, the Government may cancel the pension or scholarship sanctioned under this Act, if the grantee is absent from the State of Tamil Nadu for a continuous period exceeding three months:

Provided that if the grantee has returned to the State of Tamil Nadu at any time and continues to reside there, the Government may revive the payment of pension or scholarship as the case may be, after due verification in such manner as may be prescribed.

7. *Cancellation of pension, etc., sanctioned on misrepresentation or fraud, etc.*—If the Government are satisfied, either on a reference made to them in this behalf, or otherwise that—

(*a*) any pension, grant or scholarship sanctioned under this Act, has been obtained by misrepresentation or fraud; or

(*b*) any pension, grant or scholarship has been sanctioned to any person under this Act under a mistake of fact; then the Government may, by order in writing, cancel the pension, grant or scholarship, as the case may be, so sanctioned:

Provided that no such order shall be made except after giving the person affected a reasonable opportunity of making his representations.

8. *Finality of the decision of the Government.*—The decision of the Government under this Act shall be final.

9. *Power to make rules.*—(1) The Government may make rules for the purpose of carrying into effect the provision of this Act.

(2) In particular and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for—

(*a*) the procedure for, and the manner of, enquiring in respect of the eligibility of a person who has applied for pension, grant or scholarship under this Act;

(*b*) the manner of verification of applications for pension, grant or scholarship under this Act;

(*c*) the procedure to be followed by the authorities for sending the enquiry report to the Government;

(*d*) any other matter which is to be, or may be, provided for by rules under this Act.

(3) All rules made under this Act shall be published in the *Tamil Nadu Government Gazette*, and unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published.



(4) Every rule made under this Act shall, as soon as possible, after it is made, be placed on the table of both Houses of the Legislature, and if, before the expiry of the session in which it is so placed or the next session, both Houses agree in making any modification in any such rule or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be, so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule.

I certify that this is a Money Bill.

K. RAJARAM,
*Speaker*,
*Tamil Nadu Legislative Assembly.*

Fort St. George,
Madras,
Dated : 26th April 1983.

இணைப்பு

[428 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 31 of 1983.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Tamil Nadu District Municipalities Act, 1920.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu District Municipalities (Amendment) Act, 1983.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section 7, Tamil Nadu Act V of 1920.*—In section 7 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920) (hereinafter referred to as the principal Act),—

(i) for sub-sections (3), (3-A) and (4), the following sub-sections shall be substituted, namely:—

"(3) In every municipality, the State Government shall, by notification, from time to time, reserve for the members of the Scheduled Castes and Scheduled Tribes, such number of wards not exceeding eighteen per cent of the total number of wards in that

municipality and for the purpose of such reservation, each municipality shall be a separate unit. Such reservation shall, as far as practicable, be made only in wards where the proportion of population of the Scheduled Castes and Scheduled Tribes to the total is comparatively large.

(4) In every municipality, the State Government shall, by notification, from time to time also reserve for women such number of wards not exceeding fifteen per cent of the total number of wards in that municipality and for the purpose of such reservation shall as far as practicable, be made only in wards where the proportion of population of women to the total is comparatively large.

(ii) in sub-section (5), for the words "any community", the words "the Scheduled Castes and Scheduled Tribes" shall be substituted;

(iii) after sub-section (5), the following *Explanation* shall be added, namely:—

"*Explanation.* For the purposes of sub-sections (3) and (4) of this section, sub-section (1) of section 7-B and sub-section (1) of section 7-C, the expression "population" means the population as ascertained at the last preceding census of which the relevant figures have been published.".

3. ***Insertion of new sections 7-B, 7-C, 7-D, 7-E and 7-F in Tamil Nadu Act V of*** 1920.—After section 7-A of the principal Act, the following sections shall be inserted, namely:—

"***7-B. Reservation of seats for members of the Scheduled Castes and Scheduled Tribes in the office of Chairman of municipal councils.***—(1) The State Government shall, from time to time, by notification, reserve for the members of the Scheduled Castes and Scheduled Tribes such number of office of the chairmen of municipal councils not exceeding eighteen per cent of the total number of such office in the State and for the purpose of such reservation, the entire State shall be the unit. Such reservation shall, as far as practicable made only in municipalities where the proportion of population of the Scheduled Castes and Scheduled Tribes to the total is comparatively large:

Provided that no person who is not a member of the Scheduled Castes or Scheduled Tribes shall be qualified for election as chairman of any municipal council, if the office of the such chairman is deserved for the members of the Scheduled Castes and Scheduled Tribes under this sub-section.



(2) Nothing contained in sub-section (1) shall be deemed to prevent the members of the Scheduled Castes and Scheduled Tribes from standing for election to the office of the chairman of any municipal council where no such reservation has been made.

7-C *Reservation of seats for women in the Office of the Chairmen of Municipal Councils.*—(1) The State Government shall, from time to time, by notification, reserve for women such number of office of the chairmen of municipal councils not exceeding fifteen per cent of the total number of such office in the State and for the purpose of such reservation the entire State shall be the unit. Such reservation shall, as far as practicable, be made only in municipalities where the proportion of popuation of women to the total is comparatively large:

Provided that no person who is not a woman shall be qualified for election as chairman of any municipal council, if the office of such chairman is reserved for women.

(2) Nothing contained in sub-section (1) shall be deemed to prevent any woman from standing for election to the office of the chairman of any municipal council where no such reservation has been made.

7-D. *Publication of preliminary notification regarding reservation.*—(1) Before issuing any notification reserving wards in any municipality and the office of the chairmen of municipal councils for the members of the Scheduled Castes and Scheduled Tribes and for women under sub-sections (3) and (4) of section, sub-section (1) of section 7-B and sub-section (1) of section 7-C, the State Government shall publish a draft of the notification proposed to be issued in the *Tamil Nadu Government Gazette* and also in such other manner as they deem fit.

(2) Within fifteen days from the date of publication of the draft notification in the *Tamil Nadu Government Gazette*, any objection to anything contained in the draft notification so published shall be submitted to the State Government through such authority as may be specified in the draft notification.

(3) After the expiry of fifteen days from the date of publication of the draft notification and after considering the objections, if any, the State Government shall confirm the draft notification, if there is no modification. The notification as so confirmed shall be finally published in the *Tamil Nadu Government*

*Gazette*, under sub-section (3) or sub-section (4) of section 7, sub-section (1) of section 7-B or sub-section (1) of section 7-C, as the case may be.

(4) (*a*) Where in pursuance of any objection, the draft notification published under sub-section (1) is proposed to be modified, the draft of the modified notification shall be published in the *Tamil Nadu Government Gazette* and also in such other manner as the State Government may deem fit.

(*b*) Within fifteen days from the date of publication of the draft of the modified notification in the *Tamil Nadu Government Gazette*, any objection to anything contained in the draft of the modified notification so published shall be submitted to the State Government through such authority as may be specified in the said notification.

(*c*) After the expiry of fifteen days from the date of publication of the draft of the modified notification and after considering the objections, if any, the State Government shall confirm the said notification, if there is no further modification. The notification as so confirmed shall be finally published in the *Tamil Nadu Government Gazette* under sub-section (3) or sub-section (4) of section 7 or sub-section (1) of section 7-B or sub-section (1) of section 7-C, as the case may be.

(*d*) Where the modified notification is proposed to be further modified, the provisions in clauses (*a*), (*b*) and (*c*) shall apply and accordingly the procedure in the said clauses shall be followed in respect of each such subsequent modified notification.

7-E. *Duration of reservation.*—(1) The reservation made for the members of the Scheduled Castes and Scheduled Tribes under sub-section (3) of section 7 and sub-section (1) of section 7-B or for women under sub-section (4) of section 7 and sub-section (1) of section 7-C shall be in force for a period of five years from the date of ordinary election to the office of the councillors and chairmen of municipal councils.

(2) After the expiry of the said period of five years, the State Government shall, while making fresh reservation under the sections aforesaid, ensure that the reservation is distributed by rotation.



7-F. *Disregarding fraction in determining the number of wards in the municipalities and the office of the chairmen of the municipal councils.*—While determining the number of wards in the municipality and the office of the chairmen of the municipal councils for the purpose of reservation for the members of the Scheduled Castes and Scheduled Tribes under sub-section (3) of section 7 and sub-section (1) of section 7-B, or for women under sub-section (4) of section 7 and sub-section (1) of section 7-C, in the case may be, any fraction thereof shall be disregarded".

4. *Amendment of section* 43, *Tamil Nadu Act V of* 1920.—In section 43 of the principal Act, in sub-section (1), clauses (*b*) and (*c*) shall be omitted.

பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள். | 475—488 |
| 2. உரிமைப் பிரச்சினை—மேலவை உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி பேரவை உறுப்பினரும், முதலமைச்சருமான திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மீது அவர்கள் பேரவையில் பேசிய பேச்சின் மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளது குறித்து. | 489—493 |
| 3. அறிவிப்புகள்— | |
| (1) பேரவையிலிருந்து செய்தி | 494 |
| (2) நடப்புக் கூட்டத் தொடரில் நடைபெற்ற அலுவல் குறித்து சில விவரங்கள் .. | 571—572 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| (1) அரசு மானியம் பெறும் பள்ளிகளிலுள்ள எஸ். எஸ். எல். சி. கல்வித் தகுதி உடைய பதிவு எழுத்தர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ. 6.00 கொடுக்கப் படாமை குறித்து .. .. .. | 494—495 |
| (2) தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு பட்டப்படிப்பு முடிய இலவசக் கல்வி அளிப்பது பற்றி .. .. | 496—498 |
| 5. அரசின் சட்ட முன்வடிவுகள்— | |
| (1) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக பயன்படுத்தலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1983) | 498—569 |
| (2) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1983) .. .. .. | 570 |
| 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. | 573 |



ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008


D 2 C 33—1

143188

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

வியாழக்கிழமை, 1983 ஏப்ரல், 28.

சித்திரை 15, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு—2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Incentive increments to B.T Assistants.*

*337—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether it is a fact that, as per the Proceedings of the Director of School Education, Rc. No. 28557/K3/79, dated 7th March 1979, B.T. Assistants handling Higher Secondary Classes, are not eligible for drawal of incentive increments sanctioned in G.O. Ms. No. 42, Education, dated 10th January 1969; and

(b) if so, the reasons therefor ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) வினாவில் குறிப்பிட்டுள்ள 7—3—1979 நாளிட்ட நடவடிக்கைகளை மாற்றி 27—4—1979 அன்று பள்ளிக் கல்வி இயக்குநர் திருத்திய வரன்முறைகளை வெளியிட்டுள்ளார். அதன்படி, (1) ஒரு உயர்நிலைப்பள்ளி வகுப்பு ஆசிரியர் அவர் மேல்நிலைப்பள்ளி வகுப்பு நடத்தும் ஆசிரியராக உட்படுத்தப்படுவதற்கு முன்னர் எம்.ஏ. (எம்.எஸ்ஸி., எம்.காம்.) அல்லது எம்.எட் தகுதிபெற்று இருந்து, அவற்றுக்கான ஊக்க ஊதிய உயர்வு அடைந்திருந்தால், அப்பலனை தொடர்ந்து பெற்றுவரலாம் என்றும், (2) அவ்வாறு அந்த நியமனத் தேதிக்கு முன்னர் அத்தகைய தகுதிபெற்றிருந்தும் ஊக்க ஊதிய உயர்வு யாதொரு காரணத்தினால் ஒருவருக்கு கொடுக்கப்படாமல் இருந்தால், அத்தகுதிபெற்ற தேதியில் இருந்து ஊக்க ஊதிய உயர்வு கொடுக்கலாம் என்றும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

மேல்நிலைப்பள்ளி வகுப்பு நடத்தும் ஆசிரியராக நியமனம் அடைந்த தேதிக்குப்பின்னர் பெறும் பட்டமேற்படிப்புத் (எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்.காம்.) தகுதிக்கு, ஊக்க ஊதிய உயர்வு கிடையாது, காரணம் அத்தகுதி பெற்றவுடன் (அது அவ்வாசிரியர் மேல்நிலைப்பள்ளி வகுப்பில் கற்றுத்தரும் பாடத்திற்குரியதாக இருக்கும் பட்சத்தில்) அவர் உயர் சம்பள விகிதமான மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் சம்பள விகிதத்தில் ஊதியம் பெற அருகதை உடையவர் ஆகிறார்.

மேல்நிலைப்பள்ளி வகுப்பு ஆசிரியராக நியமனம் பெற்ற தேதிக்குப் பின்னர் எம்.எட். பட்டம் பெற்றால் அதற்கு ஊக்க ஊதிய உயர்வு தரலாமா என்பது அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கூறியவாறு, 7—3—1979 நாளிட்ட நடவடிக்கைகளை மாற்றி இடப்பட்டுள்ள புதிய ஆணை பல இடங்களில் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே சரியான முறையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று தக்க அறிவுரைகளை அனைத்து கல்வி முதன்மை அலுவலர்களுக்கும் வழங்க கல்வியமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இது சம்பந்தமாக கீழ்க்கண்டவாறு விளக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன :—

"உயர்நிலைப் பள்ளி ஆசிரியருக்கு (மேல்நிலைப் பள்ளியில் நியமனம் பெறுவதற்கு முன்பு) முதுகலைப்பட்டம் பெற்றதற்காக ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருந்தால் அதனை நிறுத்தவோ, அளிக்கப்பட்ட பணத்தைச் சம்பளத்தில் பிடித்தம் செய்யவோ கூடாது.

சில காரணங்களினால் முதுகலைப்பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்குண்டான ஊக்க ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டிருந்தால் (மேல்நிலைப் பள்ளியில் முதுநிலைப்பட்டதாரி ஆசிரியராக பணியேற்பதற்கு முன்பு) அவ்வாசிரியர் முதுகலைப்பட்டம் பெற்ற நாளிலிருந்து அவருக்கு ஊக்க ஊதிய உயர்வினை அளிக்கலாம்"

என்று விளக்கம் பிறகு தரப்பட்டிருக்கிறது. இவைகளிலே ஆசிரியர்கள் யாராவது பாதிக்கப்பட்டிருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால், அதன்மீது அரசு மேல் நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மேல்நிலைப் பள்ளிகளில் பாடம் நடத்துகிற முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் எம்.எட். பட்டம் பெற்றால், அவர்களுக்கு ஊக்க ஊதியம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள்.





ஆனால் பட்டதாரி ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளிகளில் பாடம் நடத்துகிறவர்கள் எம்.எட். பட்டம் பெற்றிருந்தால், அவர்களுக்கு ஊக்க ஊதியம் உண்டு. இப்படி புதிதாக நியமனம் செய்யப்படும் முதுகலை ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் இல்லை என்பது முரண்பாடான கருத்தாகும். ஆகவே அவர்களுடைய கோரிக்கையை பரிவுடன் அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஏற்கெனவே பரிசீலனைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் எம்.ஏ., எம்.எட். பட்டம் பெற்றிருந்தால், பி.டி.-க்குப் பிறகு எம்.எட். பட்டம் பெற்றால், ஆட்டோமாடிக்காக அவர்களுக்கும் ஊக்க ஊதியம் கொடுக்க வேண்டியதாகிறது. இதிலே காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன? பரிசீலனை செய்வதில் காலதாமதம் இருப்பதன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மேல்நிலைப் பள்ளிகள் புதிதாக வந்ததன் காரணமாக அதற்குப் புதிய தகுதிகளை ஏற்படுத்தியிருக்கிறோம். புதிதாக எம்.எட். படிக்க வேண்டும் என்பது மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பொருந்துமா அல்லது பொருந்ாதா என்பதைத்தான் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதுகுறித்து பரிசீலனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

*Promotion to Agricultural Instructors with B.T Qualification.*

* 338 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state, with reference to the answer given to Question No. 183 on the floor of the Council on 14th March 1979;

(a) whether the Government have arrived at any decision in the matter of making Agricultural Instructors with B.T Qualification, eligible for promotion as Headmasters; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) ஆம். விவசாய போதனையாளர்களுக்குரிய தகுதியோடு பட்டப்படிப்பும், பி.டி. பட்டமும், பி.டி. பட்டம் பெற்ற பின்னர் அரசால் அங்கீகரிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளியில் ஐந்து ஆண்டு காலம் பணியாற்றிய தகுதியுள்ள விவசாய போதனையாளர்களின் பெயர்களையும், தலைமை ஆசிரியர் நியமனத்துக்குரிய தேர்ந்த பட்டியலில் சேர்க்கலாமென், அரசாணை நிலை எண் 1039, கல்வி, நாள்

10—6—1980-ல் அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கேற்ப தமிழ் நாடு கல்வி சார்புப் பணி விதிகளை திருத்துவது குறித்தும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : 10—6—1980-ல் ஆணை வெளியிடப் பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் கல்வித் துறை அதிகாரிகள், தலைமையாசிரியர்களுக்கான பணிமூப்புப் பட்டியலுக்குப் பெயர்களைச் சேகரிக்கும்போது, பட்டதாரி ஆசிரியர்களின் பெயர்களை மட்டும் கேட்டுப் பெறுகிறார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் என்று குறிப்பிட்டு ஆணையில் சொல்லுவதன் மூலமாக பள்ளிக்கூடங்களில் பட்டதாரி ஆசிரியர்களின் பெயர்களை மட்டும் அனுப்புகிறார்கள். "பி.டி. பட்டம் பெற்ற விவசாயப் போதனையாளர்கள் உட்பட அனைத்து பட்டதாரி ஆசிரியர்களும்" என்று தெளிவாகக் குறிப்பிட்டு ஆணை அனுப்பினால், அவர்கள் பெயரும் அந்தப் பட்டியலில் இடம் பெற முடியும். அந்த வகையிலே தெளிவான குறிப்புகளை வழங்க தக்க நடவடிக்கையை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள ஆணை சரியாக இல்லையென்று அவர்களுக்குப் படுமானால், தெளிவுபடுத்தி மேற்கொண்டு விளக்கங்களைத் தர தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டக் கல்லூரி

* 339 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டக் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) இம்மாநிலத்தில் சட்டக் கல்லூரிகள் சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் இயங்கி வருகின்றன. திருச்சியிலும், கோயம்புத்தூரிலும் 1979-80-ம் ஆண்டில்தான் இக்கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. திருச்சியிலும், கோயம்புத்தூரிலும் தொடங்கப்பட்ட சட்டக் கல்லூரிகள் செவ்வனே இயங்கி வருவதைப் பொறுத்தும் சட்டக் கல்லூரிகளில் சேருவதற்கு வரும் விண்ணப்ப



தாரர்களின் எண்ணிக்கையை அனுசரித்தும் கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாக சட்டக் கல்லூரி தொடங்குவது பற்றி பரிசீலனை செய்யலாம் என அரசு முடிவெடுத்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டக் கல்லூரி இக்கல்வியாண்டிலிருந்து ஆரம்பிக்கப்படவில்லை.

திரு. ம. சங்கரலிங்கம் : இப்போது சட்டக் கல்வியிலே ஐந்தாண்டு பட்டப் படிப்புத் திட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. முதல் இரண்டாண்டுக் கால சட்டக் கல்வி முன்படிப்பாக வரையறை செய்யப்பட்டிருக்கிறது. எனவே அத்தகைய முன்படிப்பாக உள்ள பகுதியையாவது படிக்கக் கூடிய வகையில் கன்னியாகுமரி மாவட்டத்திலேயோ, திருநெல்வேலி மாவட்டத்திலேயோ ஒரு கல்லூரியை ஏற்படுத்தினால், பன்னிரெண்டாவது வகுப்பை முடித்த பிறகு, மாணவர்கள் இரண்டாண்டுக் காலம் அங்கேயே படிக்க முடியும். பிறகு மேற்படிப்புக்கு வரும்போது, மதுரையிலோ கோயம்புத்தூரிலோ படிக்க வாய்ப்பு ஏற்படுத்தலாம். அந்த நிலையில் அரசு பரிசீலனை செய்யுமா ?

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த ஐந்து ஆண்டு சட்டக்கல்வியை வருகின்ற ஆண்டிலே அமல் செய்யலாமென்று பல்கலைக்கழகம் முடிவெடுத்திருக்கிறது. அது எப்படி நடத்தப்படுகிறது என்பதைப் பார்த்து, அதை விரிவாக்குவது பற்றியோ மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோன்ற யோசனைகளை ஆராய்வது பற்றியோ நாம் பரிசீலனை பண்ணவேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, புதிய கல்லூரிகள் தொடங்குவதில் சிரமம் இருந்தாலும், இருக்கின்ற கல்லூரிகளில் மாலை வகுப்புகள் தொடங்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மாலை வகுப்புகள் நடத்தக்கூடாது என்று 'பார் கவுன்சில்' சொன்னதற்கு இணங்கத்தான் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். வேறு சில மாநிலங்களில் அதைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். அதனாலே நாமும் ஏன் நடத்தக்கூடாது என்று கருதி, நாம் மறுபடியும் பார் கவுன்சிலைக் கேட்டு அதை நடத்துவதற்கு சட்டக் கல்வி இயக்குநர் அவர்களிடம் சொல்லியிருக்கிறோம்.

## தற்காலிகமாகப் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள், முதல்நிலைத் தமிழாசிரியர்களுக்குச் சிறப்புத் தேர்வு

*340 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) அரசுப் பள்ளிகளில் தற்காலிகமாகப் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள், முதல்நிலைத் தமிழாசிரியர்கள் ஆகியோருக்காக, தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு 1980-81-ல் சிறப்புத் தேர்வு ஏதேனும் நடத்தியதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) அரசுப் பள்ளிகளில் தற்காலிகமாக பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதல்நிலைத் தமிழாசிரியர்கள் ஆகியோருடைய பணியினை வரன்முறைப்படுத்தும் பொருட்டு சிறப்புத் தேர்வுக்கான நேர்முகத் தேர்வினை தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு 1980-இல் நடத்தியது. தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் பட்டியல் 1982-ம் ஆண்டு பிப்ரவரி திங்களில் பள்ளிக்கல்வி இயக்குநரால் பெறப்பட்டுள்ளது. ஆனால் இத்தேர்விற்கு அனுமதிக்கப்பட்டது குறித்து உயர்நீதிமன்றத்தில் இரு ஆசிரியர்கள் வழக்கு தொடுத்துள்ளதால் அதில் தீர்ப்பாகும்வரை தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பணிவரன்முறை செய்யப் பட்க்கூடாது என தேர்வாணைக்குழு தெரிவித்துள்ளது. வழக்குத் தொடுத்துள்ள இருவருக்கு இரு பணியிடங்களை காலியாக வைத்துவிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மற்றவர்களின் பணியினை வரன்முறை செய்யலாமா என்பது குறித்து தேர்வாணைக்குழுவுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. இந்நிலையில் சில ஆசிரியர்கள் தனியே தொடுத்த ரிட்மனுக்களின்மீது ஆணை வழங்கிய உயர்நீதிமன்றம் ஏற்கனவே நிலுவையிலுள்ள இரு ரிட்மனுக்களின் மீதான முடிவுக்குக் கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களின் பணியினை வரன்முறை செய்வதில் எவ்வித தடையுமில்லை என கருத்து தெரிவித்துள்ளது. இதனடிப்படையில் தமிழ் நாடு பணியாளர் தேர்வாணைக் குழுவின் ஒப்புதலைப் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களின் பணியினை வரன்முறை செய்யுமாறு பள்ளிக்கல்வி இயக்குநருக்கு அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன.



திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியவாறு, அண்மையில் உயர்நீதிமன்றம் அந்த ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி வரன்முறை செய்யப்படுவதுபற்றி தீர்ப்பு கூறியது. ஆனால் அந்தத் தீர்ப்பை அமுல்படுத்துவதற்கு என்று சரியான முறையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த இரண்டு ஆசிரியர்கள் வழக்கைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு வேலை வேண்டு மென்பதுதான். அதுகுறித்து அந்த இரண்டு ஆசிரியர்கள் இலாகாவில் கேட்ட போது, அந்த வேலையை அளிக்க அவர்கள் ஆயத்தமாக இருக்கின்றார்கள் என்று உறுதி கூறியதாகத் தெரிகிறது. இந்தப் பிரச்சினை இப்படி நீதி மன்றத்தில் ஒரு வழக்காக இருப்பதால், தேக்க நிலையில் இருக்கின்றது. துறையிலேயே இந்தப் பிரச்சினை தீர்கின்ற அளவில் இருக்கின்றபோது, இந்த வழக்கை விரைவாக முடிக்கவும், அந்தப் பணி வரன்முறையை தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து ஆசிரியர்களுக்கும் செய்யவும் அரசு ஆணை பிறப்பித்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இந்த வழக்கு தேர்வாணைக் குழு தேர்வு சம்பந்தப்பட்டது. பள்ளிக்கல்வி இயக்குநர் ஒத்துக்கொண்டதால் அல்லது அரசு ஒத்துக்கொண்டதால், இந்த வழக்கு தீர்ந்துவிடப்போவதில்லை. தேர்வாணைக் குழுவில் அவர்கள் தேர்ந்தெடுத்த முறையை எதிர்த்து அவர்கள் வழக்கு தொடர்ந்திருக்கின்றார்கள். அதிலே தேர்வாணைக் குழு ஒத்துக்கொள்கின்றதா என்பது நமக்குத் தெரியவில்லை. அதைப் பொறுத்துத்தான் அந்த வழக்கு முடிய இருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, 1980-81-ல் நடை பெற்ற சிறப்புத் தேர்வில் கலந்து கொண்ட பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் எத்தனை பேர்? இந்தத் தேர்விலே தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் எத்தனை பேர்? தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் எத்தனை பேர்கள்? அதுபற்றி விவரம் ஏதாவது இருக்கின்றதா? அதைப்பற்றி அறிந்து கொள்ளலாமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 1,174 பேர்கள் விண்ணப்பித்ததில் 1,142 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள். இது தான் இங்கே தரப்பட்டிருக்கின்ற விவரம். அதிலே இந்த இரண்டு பேர்களும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம் பல இருக்கலாம். அவர்கள் அந்த இண்டர்வியூவிலே சரியாக பதில் சொல்லாமல் இருக்கலாம் அல்லது வேறு ஏதாவது காரணங்களாக இருந்தாலும் இருந்திருக்கலாம். அந்த அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பணிகள் தருவதில் எந்த

விதமான சிரமமும் இல்லை. தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் அந்த வழக்கிலே வெற்றிபெற்றால்தான் தரலாம். தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் தேர்வாணைக் குழுவின் முடிவை எதிர்த்துதான் வழக்குப் போட்டிருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் எண்ணிக்கையைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களில் எத்தனை பேர்கள் எத்தனை ஆண்டுகள் அரசுப் பள்ளிகளிலே தற்காலிகமாக வேலை செய்திருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அதிலே 1974-க்குப் பிறகு பணிநீக்கம் பெற்றவர்களும் இருக்கிறார்கள். அதற்கு முன்னாலேயே ஏழு ஆண்டுக் காலம், எட்டு ஆண்டுக் காலம் பணியாற்றியவர் களும்கூட அதிலே இருக்கின்றார்கள். ஆகவே அதையெல்லாம் அடிப்படையாக் வைத்து அரசு ஒரு முயற்சி எடுத்துக்கொண்டதன் விளைவுதான் இந்தச் சிறப்புத் தேர்வு. அந்தத் தேர்வு நடத்தப்பட்டது. அதிலே நாம் எதிர்பார்த்த அளவுக்கு பெரும்பான்மையானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள். அதிலே கொஞ்சம் பேர்கள் விடுபட்டிருக்கிறார்கள். அவர்களும் தேர்ந் தெடுக்கப்பட வேண்டுமென்றுதான் அரசு ஆசைப்படுகிறது. அவர்கள் வெளியிலே போக வேண்டும் என்று அரசு விரும்பவில்லை. தேர்வாணைக் குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கின்றபோது, அவர்கள் விதிமுறைகளுக்கு ஏற்ப அல்லது அவர்கள் இன்டர்வியூவிலே, நேர்முகப் போட்டியிலே கேள்விகள் கேட்டு பதில்கள் பெற்று அதன் அடிப்படையிலே அல்லது வேறு காரணங்களை யொட்டி அவர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் இருக்கலாம். அதை எதிர்த்துத் தான் இந்த ஆசிரியர்கள் வழக்குப் போட்டிருக்கிறார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளில் தற்காலிகமாகப் பணியாற்றுகின்ற இந்தப் பட்டதாரி ஆசிரியர்கள், முதுநிலைத் தமிழாசிரியர்கள் தொடர்பாக அரசு மேற்கொண்ட முயற்சியைப் போல், இப்போது தற்காலிகமாகப் பணி ஆற்றுகின்ற தமிழாசிரியர்கள் நிரந்தரம் செய்யப்படாதவர்கள், இடைநிலை ஆசிரியர்கள் இவர்கள் எல்லாம் கூட மிக நிறைவாக இருக்கிறார்களே. அவர்களுக்கு இந்தச் சிறப்புத் தேர்வை நடத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ? இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், சிறப்புத் தேர்வு தேவையில்லை, தேர்வாணைக் குழுவிற்குச் செல்லவேண்டிய அவசியம் இல்லை. அப்படி இருந்தும் இடைநிலை ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் சிரமப்படுகின்றார்களே. அவர்கள் நாற்றுக் கணக்கில் இருக்கின்றார்கள். அந்த நிலையை மாற்ற அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அரசு நேரடியாகத் தேர்ந்தெடுத்தாலே கூட போதும். அது அரசு தேர்ந்தெடுத்தது போன்றதுதான். அதைப்பற்றி அரசு ஒரு நல்ல முடிவை மேற்கொள்ளும். மற்றவர்களைப் பொறுத்தவரையில், அங்கே ஏற்படுகின்ற சூழ்நிலைக்கு ஏற்பத்தான் பிரத்தியேகமான நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர, அவர்களில் பலர் ஓராண்டு, இரண்டு ஆண்டுகள் என்று எப்படியும் பணியில் இருந்துதான் இருப்பார்கள். இந்த வருடம்கூட ஆசிரியர்களை அப்படி எடுத்தாலும் எடுக்கலாம். எப்படியும் ஒரு ஆண்டு ஆனவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். அதற்காக நாம் ஒரு நிரந்தரமான தீர்வைப்பற்றி இங்கே நாம் பேச ஆரம்பித்துவிட்டால், அதற்குப் பிறகு தேர்வாணைக் குழுவிற்கு வேலை இல்லை என்பதுபோல ஆகிவிடும். அதற்கு தேர்வாணைக் குழுவினர் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். சிக்கல் ஏற்படும்போது, அரசு அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு ஒரு சிறப்பான நடவடிக்கையை எடுக்கலாமே தவிர, சிறப்பான நிலையை எடுப்பதையே ஒரு நிரந்தரமானதாகச் செய்து எப்போதும் இப்படித்தான் என்று நாம் சொல்லி விட்டால், தேர்வாணைக் குழுவிற்கு இருக்கின்ற வேலையை நாம் எடுத்துக் கொண்டதுபோல ஆகிவிடும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளிலே ஆசிரியர்களை நியமனம் செய்து, அவர்களைப் பணி வரன்முறை செய்வதற்கு தேர்வாணைக் குழுவினுடைய 'கன்கரன்ஸ்' தேவைப்படுகிறது. அதிலே நான்கு ஆண்டுகள், ஐந்து ஆண்டுகள் ஆகி, தேர்வாணைக் குழு அவர்களுக்கு 'கன்கரன்ஸ்' கொடுக்காவிட்டால், அவர்களுடைய நிலை பரிதாபமாக ஆகிவிடுகிறது. எனவே இந்த அரசுத் துறைகளிலே 10-ஏ (1) என்ற விதியின் கீழ் நியமிக்கப்படுகின்றவர்களுக்கு அந்த போஸ்ட்டிலே பணி செய்த ஒரு ஆண்டுக்காலத்திற்குள் தேர்வாணைக் குழுவை அணுகுகின்ற ஒரு நிலையான உத்தரவை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அப்படி ஒரு உத்தரவு, ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், இருக்கின்றது. ஆசிரியர்களே "எங்களை வேலைநீக்கம் செய்யவேண்டாம். நாங்கள் தொடர்ந்து இருக்க வேண்டும்" என்று வந்து கேட்கின்றார்கள். ஆகவே ஒரு சந்தர்ப்பத்திலே ஆசிரியர்களுக்காகப் பரிந்துரைத்துப் பேச ஆரம்பித்ததன் விளைவாக நிலைமை இப்படி நிற்கிறது. இந்த நிலையில் நாம் தேர்வாணைக் குழுவைப் பாதிக்காமல் அல்லது இருக்கின்ற நடைமுறைகளை மீறாமல் தீர்வு காண வேண்டுமே தவிர, வேறு அல்ல. அதையும் நாம் மீறுவது என்ற நிலை இருந்தால், கடைசியிலே அவர்களுக்கு இருக்கின்ற சலுகைகள் போய்விடும்.

அதைத்தான் நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அவர்களுடைய கருத்துப்போல சொல்கின்றார்கள். அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றால், இப்போது நாம் அவர்களுக்கு தந்திருக்கின்ற சலுகைகளை எடுக்க வேண்டியதாக வந்துவிடும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தற்காலிகமாகப் பணியிலே சேர்க்கப்பட்டு பணி வரன்முறை செய்யப்படாத நிலையிலே அவர்கள் பாதிப்புக்கு ஆளாகக் கூடாது என்ற வகையிலேதான் அரசு சிறப்புத் தேர்வை நடத்தி, அவர்களை பணியிலே இருக்கச் செய்வதற்கு முயற்சித்திருக்கிறது. அது பரிவோடு கூடிய நிலை. ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அப்படி வாய்ப்புத் தந்து அனுப்பப் பட்டவர்கள் 400 பேர்கள். இந்த 400 தமிழாசிரியர்களும் தற்காலிகமாகப் பணியாற்றியவர்கள். அதிலே ஒரு 50 பேர்கள் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள். ஏறத்தாழ 350 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஏறத்தாழ 50 பேர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் பணியிழப்புக்கு ஆளாகின்ற நிலை ஏற்பட்டது. அதை நான் சுட்டிக்காட்டியபோது, அந்த ஆசிரியர்கள் பணியிழப்புக்கு ஒரு நிலையை மேற்கொள்வது என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே யாவரு அவர்களுக்கு அந்தச் சிறப்புந் தேர்விலிருந்து ஏதாவது ஒரு விதிவிலக்கு அளித்து அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, அரசைப் பொறுத்தமட்டில், அவர்களுக்கு என்னென்ன முறையில் உதவ முடியுமோ அந்த வகையில் அதை அரசு செய்யும். அத்தகைய நடவடிக்கைகளைப் பரிசீலித்து அரசு முடிவெடுக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கேட்ட துணைக் கேள்வியின் கருத்து, 10-எ (1) விதியின்படி நியமிக்கப்படும் ஆசிரியர்கள் தேர்வாணைக் குழுவால் பணி வரன்முறை செய்யப்படுவதற்கு மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. நான்கு, ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. 1980-81 ஆம் ஆண்டு அறிவித்தது இன்னும் முடியாமல் இருக்கிற சூழ்நிலையில்தான் இந்தக் கேள்வியே எழுப்பப்பட்டது. தேர்வாணைக் குழு செய்யும் காலதாமதத்தால் ஆசிரியர்களுக்குப் பாதிப்பும். அமைச்சரவர்கள் குறிப்பிட்டதுபோல முறையீடுகளும் வந்து சேருகின்றன. ஆகவே 10-எ (1) விதியின்கீழ் செய்யப்படும் நியமனங்கள் அனைத்தும் அந்தந்த ஆண்டே தேர்வாணைக் குழுவால் வரன்முறை செய்யப் பட வேண்டுமென்ற ஒரு தெளிவான ஆணையைப் பிறப்பித்து, அதற்கு



தேர்வாணைக் குழுவுடன் தக்க முறையில் தொடர்புகொண்டு, ஒவ்வொரு ஆண்டும் தேக்க நிலை இல்லாமல் இதைச் செய்துவிட்டால், அமைச்சரவர்கள் குறிப்பிட்ட அந்தப் பிரச்சினை எழாது. அந்த வகையில் காலதாமதத்தைத் தவிர்க்க உரிய நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, மூன்று, நான்கு ஆண்டுக் காலம் ஆகிறதென்றால், அலுவலகத்தில் யாரும் வேலை செய்யாமல் இருக்கிறார்கள் என்று அர்த்தமல்ல. அதற்கு முன்னால், நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள ஆசிரியர்கள்பற்றி கவனித்து வருகிறார்கள். அவர்கள் பணி வரன்முறையைப்பற்றி ஆராய்ந்துகொண்டு, பரிசீலித்துக்கொண்டு, முடிவு எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இது பல ஆண்டுகளாகத் தொடர்ந்து இருந்து வருகிற தேக்க நிலை. அதை இன்று நாம் எடுத்துக்கொண்டு, செயல் படுத்திக் கொண்டு வருகிறோம். இருக்கின்ற பிரச்சினைகளைக் கொஞ்சம் வேகமாகச் செயல்படுத்துவதன் மூலமாகத்தான் இதைத் தீர்க்க முடியுமே தவிர, இந்த ஆண்டு வந்தவர்களை இந்த ஆண்டே வரன்முறை செய்ய வேண்டுமென்று சொன்னால், இதற்கு முன்னால், நான்கு ஆண்டுகளாக உள்ள ஆசிரியர்கள் அப்படியே நின்று விடுவார்கள். அந்த வேலையை அவர்கள் செய்ய மாட்டார்கள்.

### சாரணியர் இயக்கம்

* 341 வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சாரணியர் இயக்கத்திற்காக, பள்ளி மாணவர்களிடமிருந்து சிறப்புக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

(உ) பள்ளிகளில் 6, 7, 8 வகுப்பு மாணவர்களிடமிருந்தும் இத்தகைய சிறப்புக் கட்டணம் வசூலிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) ஆறு முதல் எட்டு வகுப்புக்கள் வரை சிறப்புக் கட்டணம் இல்லை. ஒன்பது முதல் பத்து வரை தலைக்கு ரூ. 0.50 வீதமும் மற்றும் மேல்நிலை வகுப்புகளுக்கு தலைக்கு ரூ. 1.00 வீதமும் ஆண்டொன்றுக்குத் தனிக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

(உ) ஆம்.

[1983 ஏப்ரல் 28

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, இவ்வாறு சாரணியர் இயக்கத்திற்காக வசூலிக்கப்படுகிற சிறப்புக் கட்டணம் சாரணியர் இயக்கத்திற்காக மட்டுமே செலவழிக்கப்பட வேண்டுமென்று ஒரு தெளிவான விதி முறையை நாம் பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டும். காரணம், சில நேரங்களில் எக்ஸ்கர்ஷன் போன்றவைகளுக்கு இந்த நிதியைப் பயன்படுத்தி, சாரணியர் இயக்கத்திற்காகப் பயன்படுத்தாத நிலை ஏற்படுகிறது. ஆறு முதல் எட்டு வகுப்புவரை இதற்காக சிறப்புக் கட்டணம் வசூலிப்பது குறித்து அரசின் பரிசீலனையிலே கருத்துக்கள் என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, ஆறு முதல் எட்டாம் வகுப்புவரை 50 பைசாவும், ஒன்பது முதல் பத்து வகுப்புவரை ஒரு ரூபாயும், 11 முதல் 12 வகுப்புவரை இரண்டு ரூபாயும் வசூலிக்கலாமென்றும் அதில் 75 விழுக்காடு சாரணியர் இயக்கத்திற்காக என்றும் ஒரு கருத்துருவை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, தமிழகம் சாரணியர் இயக்கத்திலே இந்தியாவிலேயே முதன்மையாக இருப்பது குறித்து கல்வித் துறைக்கும், அரசுக்கும் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை மேலும் செம்மைப்படுத்த, சீர்படுத்த இந்த இயக்கம் இன்னும் பரவலாக்கப்பட வேண்டும். என்.எஸ்.எஸ்., என்.சி.சி. போன்றவற்றுக்குக் கொடுக்கப்படும் ஆதரவு, அவற்றுக்கு ஒதுக்கப்படும் நிதி போலவே சாரணியர் இயக்கத்திற்கும் அதிக நிதி, ஆதரவு தரப்பட வேண்டும். அந்த வகையில் மேலும் சாரணியர் இயக்கத்தை வளர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் என்.சி.சி., என்.எஸ்.எஸ். பயிற்சி ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 50 ரூபாய் சிறப்பு ஊதியம் கொடுப்பதுபோல, சாரணியர் பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கும் கொடுப்பது குறித்து அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, சாரணியர் இயக்கம் என்பது ஒரு வாலண்டரி ஆர்கனைசேஷன். உலகம் முழுவதும் இருக்கிற ஒரு இயக்கமாகும் அது. அதிலே தன்னிச்சையாகச் சேர்ந்து, பயிற்சி பெறவும், மக்களுக்கு உதவி செய்கின்ற ஒரு பணியைச் செய்வதற்கும் இந்த இயக்கத்தை நடத்தி வருகிறோம். இதிலே சேருகிறவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்பது சாரணியர் இயக்கத்தினுடைய அடிப்படைக் கொள்கைக்கு முரணானதாகும். யாரையும் கட்டாயப்படுத்தி இதில் சேரச் சொல்லவில்லை. என்.எஸ்.எஸ்., என்.சி.சி. ஆகியவற்றோடு இதை ஒப்பிட்டுப் பேசுவதும், அவர்களைப்போல இவர்களுக்கும் பணம் தர வேண்டுமென்று கேட்பதும், இந்தக் கொள்கைக்குச் சரியல்ல.



1983 ஏப்ரல் 28]

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவரவர்களே, சாரணியர் இயக்கத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள்கூட பொறுப்பிலே இருக்கிறார்கள். இதன்மூலம் நல்ல கட்டுப்பாடும், முறையான பழக்க வழக்கங்களும் ஏற்படுவதால், அனைத்து மாணவர்களும் சாரணியர் இயக்கத்தில் ஈடுபடக்கூடிய அளவுக்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? சாரணியர் இல்லம் ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சாரணியர் இயக்கம் பள்ளிகளிலே நல்ல ஆதரவோடு பரவி வருகிறது. இதற்கு ஏதாவது ஒரு எதிர்ப்பை உண்டாக்க வேண்டுமென்று நினைத்தால், இதைக் கட்டாயப்படுத்தலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சிரிக்க வைப்பார். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவரை சிரிக்க வைத்துவிட்டார்.

## பள்ளிக்குழு செயலர்

* 342 வினா.—**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்கல்வி மாவட்டத்திலுள்ள தனியார் பள்ளிகளில் பள்ளிக்குழு செயலர், தன் கடமையை ஆற்றமுடியாத பள்ளிகள் எத்தனை?

(இ) அவற்றில் எத்தனை பள்ளிகளுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன?

(உ) எத்தனை பள்ளிகளிலிருந்து வசதிக்கட்டண நிதியை (Amenity fee fund) கல்வி அதிகாரி மூலம் பள்ளிக் கட்டிடங்களைப் பழுதுபார்க்க, பயன்படுத்திக் கொள்வதில் ஆணைவேண்டி விண்ணப்பங்கள் வந்துள்ளன?

(எ) அவைகளின்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ), (இ) மற்றும் (உ) ஒன்று; விரவநல்லூரில் உள்ள, இந்து உயர்நிலைப்பள்ளி மட்டுமே.

(எ) மேற்படி பள்ளிச் செயலாளர் தகுதிபெற்றவர் அல்லர். அதனால் சிக்கல்கள் ஏற்பட்டன. அப்பள்ளி சம்பந்தப்பட்ட மாதாந்திர ஊதியம் மற்றும் இதர அன்றாட நடைமுறைகளை கவனிக்க திருநெல்வேலி தெற்கு மாவட்டக்

கல்வி அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பள்ளிக் கட்டிடங்கள் பழுதடைந்துள்ளதாக மாவட்டக் கல்வி அலுவலர் தெரிவித்ததன் பேரில் பள்ளி பொதுக்கணக்கு நிதியிலிருந்து வசதிக்கணக்கு நிதிகளிலிருக்கும் தொகையைக்கொண்டு பழுதடைந்த கட்டிடத்தைப் பழுதுபார்க்க அனுமதி அளிக்கப்பட்டது.

*திரு. ம. சங்கரலிங்கம் :* தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் வீரவநல்லூரில் இத்தகைய நிலை ஏற்பட்டு, அரசு உத்தரவு போட்டு, கல்வி அதிகாரி மூலம் நிதிகள் செலவு செய்யப்பட்டன. ஆனால் அதில் ஏற்படுகிற காலதாமதம், ஒரு இடைவெளியை ஏற்படுத்துகிறது. ஏதாவது ஒரு தனியார் பள்ளியிலே மேனேஜ்மென்ட் ' பேக்ஷன் ' ஆகி அவர்கள் பணத்தைச் செலவு செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டால், உடனடியாக அந்த அதிகாரத்தை மாவட்டக் கல்வி அதிகாரி ஏற்றுக்கொள்கிற வகையில் ஒரு நடைமுறை விதியை ஏற்படுத்த வேண்டும். இப்போது அவர்கள் சொல்லி, அரசின் அனுமதி பெற்று, பொறுப்பு ஏற்றுக்கொள்வதற்குள் ஓராண்டு இடைக்காலம் ஏற்படுகிறது. அந்த நிலை இல்லாமல், தனியார் பள்ளி நிர்வாகம் இரு கூறாகப் பிரிந்து, அங்கே செயலர் செயல்படாத நிலை ஏற்பட்டால், உடனடியாக கல்வி அதிகாரி செயலர் பொறுப்பை ஏற்று நிதியைச் செலவு செய்ய அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள ஒரு நடைமுறை விதியை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, அது குறித்து அரசு பரிசீலிக்கும். ஆனால் இந்தப் பள்ளியைப் பொறுத்தமட்டில், புதிதான நிலைமை என்னவென்றால், சம்பந்தப்பட்ட பள்ளிக் கல்விக் குழு தீர்மானத்தின்படி, மேற்படி பள்ளியை அதன் கட்டிடங்கள் உட்பட மற்ற அனைத்து அசையும், அசையாச் சொத்துக்களுடன் அரசுக்கு ஒப்படைத்துவிட முடிவு செய்ததன் அடிப்படையில், பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* வினாக்கள் 343, 344 ஒத்தி வைக்கப் படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி [*] அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*



## 2. உரிமைப் பிரச்சினை.

**மேலவை உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, பேரவை உறுப்பினரும் முதலமைச்சருமான திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மீது அவர்கள் பேரவையில் பேசிய பேச்சின் மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளது குறித்து.**

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* தமிழ் நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளேன் :—

" தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினரும், மாண்புமிகு முதலமைச்சருமான திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் மீது, அவர்கள் இந்தப் பேரவையில் பேசிய பேச்சின்மீது, சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள், அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறி உள்ளதால் அவர் எவ்வாறு முதலமைச்சர் பதவியில் தொடர்ந்து இருக்கலாம் என்பதற்கான ரிட் மனு ஒன்றினைச் சென்னை உயர் நீதி மன்றத்தில் தொடர்ந்துள்ளது, இப்பேரவை உறுப்பினரை அச்சுறுத்துவதாக அமையும், மற்றும் இப்பேரவையை அவமதித்ததான குற்றத்திற்கும் அவர் ஆளாவார். இது குறித்துப் பேரவை உறுப்பினர்களான திரு. வி. பி. பாலசுப்பிரமணியம், திரு. ஜே. சி. டி. பிரபாகரன் மற்றும் டாக்டர் சௌரிராஜன் ஆகியோர், திரு. வீராசாமி அவர்கள் மீது உரிமை மீறலுக்கான பிரச்சினை ஒன்றைப் பேரவையில் எழுப்ப அதுகுறித்து ஒரு தீர்ப்பினை அளித்துள்ளேன். அதன் படிவம் ஒன்று இத்துடன் இணைத்துள்ளேன்.

எனவே, மேலவை உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் மேலவை நடவடிக்கை அல்லாத வெளி நடவடிக்கையாக, அதாவது மேலவை உறுப்பினர் என்ற முறையில் அல்லாத நடவடிக்கையாக இருப்பதால், அது மேலவை, தனக்கு இழைக்கப்பட்ட உரிமை மீறலாகக் கருதி அவர்மீது மேலவை நடவடிக்கை எடுக்கின்றதா, அல்லது இப்பேரவை நடவடிக்கை தொடரலாமா என்பதுபற்றி தாங்கள் தங்களது கருத்தினை எனக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலவையே நடவடிக்கை எடுப்பதாக முடிவு செய்யுமானால் உரிமை மீறல் பிரச்சினைக்கான பேரவையிலுள்ள ஆவணங்களின் நகல்களை அனுப்பி வைக்கிறேன். அல்லது, மேலவையில் பேசப்பட்ட பேச்சு அல்ல, எனவே, பேரவையே நடவடிக்கை எடுக்கலாம் எனக் கருதினால் தாங்கள் அவ்வாறு எனக்குத் தெரிவித்தால், அதன்பின் பேரவை நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்."

பேரவைத் தலைவர் அவர்கள் அவைக்கு அளித்த தீர்ப்பின் சுருக்கம் பின்வருமாறு :—

"திரு. வீராசாமி அவர்கள் இவ்வவையில் பேசிய உறுப்பினர் மீது அவ்வாறு அவர் பேசியது தவறு; அதற்காக அவர் வகிக்கும் பதவியிலிருந்து விலக்கப்படவேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் கொடுத்துள்ள மனு இப்பேரவையில் ஒரு உறுப்பினர் பேசிய பேச்சின்மீது அவரை அச்சுறுத்தும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க இயலாது. அவ்வாறு எடுக்கப்படும் நடவடிக்கை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போதுகூட பேரவை உரிமைகளை மீறியதாகவும் பேரவையை அவமதிப்பதாகவும் அமையும்.

(முற்பகல் 10-00)

திரு. ஆற்காடு வீராசாமி எடுத்த நடவடிக்கை மேலவையில் அவரது செய்கையாக இல்லாவிட்டாலும் கூட, அவர் மேலவை உறுப்பினர் என்று இருப்பதால், இரு அவைகளுக்கும் இடையே உள்ள நல் உறவுகளை கருத்தில் கொண்டு, இப்பிரச்சினைமீது அவ்வவையே அந்த உறுப்பினர் அந்த அவைக்கு இழைத்த உரிமை மீறல் செயலாக எடுத்துக்கொண்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்படி அந்த அவைக்குச் செய்தி அனுப்பி வைக்கலாம். அல்லது மேலவை இப்பொருள் மேலவைக்கு சம்பந்தப்பட்டதில்லை, பேரவையே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்ற கருத்தினை பேரவைக்குத் தெரிவிக்கலாம்.

எனவே, இந்த அவையின் அனுமதியுடன் இப்பிரச்சினை குறித்த செய்தியை மேலவைத் தலைவருக்கு அனுப்பி மேலவையின் கருத்தினைப் பெற்று இப்பேரவைக்குத் திரும்ப செய்தி வந்தபின் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம்".

இந்த உரிமைப் பிரச்சினையில் அடங்கியுள்ள செயல், உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் இந்த அவையில் ஆற்றிய உரைக்காகவோ, அல்லது இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையில் அவையின் கடமைகளை ஆற்றும்பொழுதோ எழுந்தது அல்ல. இந்த அவைக்கு வெளியில், அவைக்கு சம்பந்தப்படாத செயல் குறித்தது. எனவே, சட்டப் பேரவை இதன்மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதில் இந்த அவைக்கு எந்தவிதமான ஆட்சேபமும் இருக்க முடியாது. இருப்பினும் இரு அவைகளின்



சுமுக உணர்வைக் காப்பதில் ஆர்வமுள்ள சட்டப் பேரவைத் தலைவர் என் கருத்தைக் கோரியுள்ளார்கள். அவர்களுக்கு இந்த அவையின் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உரிமைப் பிரச்சினையில் அடங்கியுள்ள செயல் இந்த அவைக்கு தொடர்பில்லாததாலும், அவைக்கு வெளியில் நடந்துள்ளபடியாலும், இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையில் அவையின் கடமைகளை ஆற்றும்போது எழுந்தது அல்ல என்பதாலும், சட்டப் பேரவை இதுகுறித்து பரிசீலித்து முடிவெடுக்கலாம் என்று பேரவைத் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

THIRU A. R. DAMODARAN: On a point of order, Sir. Since this is a very important constitutional point, may I know how this sort of direction can be given by the Hon. Speaker of the Legislative Assembly to the Hon. Chairman of this Council because we are an independent body and nobody can give us a direction that such and such things should be considered? If this arises on account of a speech that I may make in this House and if this can be raised as a matter of privilege in that House, this would considerably affect the freedom of Members to participate in the debates in this House.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இங்கே இந்த அவையிலே பேசி, அது அங்கே பேசப்பட்ட விஷயமாகி, உரிமைக் குழுவுக்கு அனுப்பலாமென்று சொன்னால்தான், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன விஷயம் வருகிறது. இந்த அவையிலே ஒன்றும் பேசப்படவில்லை. அவர் அவை உறுப்பினர் என்கிற காரணத்திற்காக அவர்கள் கேட்கிறார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை. அது வெளியிலே நடந்த விஷயம்தான். அவை உறுப்பினர் என்பதற்காக அல்ல; தனிப்பட்ட ஒருவரைக்கூட நாம் பிரிவிலேஜ் கமிட்டியில் கூப்பிட்டு விசாரிக்கலாம். உரிமை மீறப்பட்டிருக்கிறது என்பதைப் பொறுத்து, இரண்டு அவைகளிலும் உறுப்பினர்களாக இல்லாதவர்களைக்கூட நாம் அழைத்து உரிமைக் கமிட்டியில் விசாரிப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள்கூட முன்பு ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைப்பற்றி உரிமைப் பிரச்சினை கொடுத்திருந்தார்கள். தீப்பெட்டித் தொழில் அதிபர் ஒருவருடைய கடிதம்பற்றி நாம் ஏற்கெனவே ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் சம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள முடிவு என்பது அவர்

இந்த அவையில் பேசியதற்காகவோ, விமர்சனம் செய்தார் என்பதற்காகவோ அல்ல. வெளியிலே அவர் குறிப்பிட்ட ஒரு விஷயத்திலே ஈடுபட்டிருக்கிற நிலையில் அந்த அவையிலே உரிமை மீறப்பட்டிருப்பதாக அந்த அவையினுடைய தலைவர் கருதுகிறார். ஆனால் அவர் இந்த அவையினுடைய உறுப்பினர் என்ற காரணத்திற்காக, இருக்கிற உறவு நிலைமைகளை சுமுகமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில், பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே கருத்து கேட்டிருக்கிறார்கள். அதையொட்டித்தான் மாண்புமிகு தலைவரவர்கள் இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் தீர்ப்புக்கு நான் மறுப்பு சொல்லவில்லை. இங்கே மாண்புமிகு அவை முன்னவர் விளக்கம் தந்தார். ஆனாலும் நாம் காப்பாற்ற வேண்டிய ஒரு மரபு இங்கே இருக்கிறது. இந்த அவைக்கு உள்ள தனித்த உரிமையையும் அந்த அவைக்கு உள்ள தனித்த உரிமையையும் நாம் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். எனவே இந்த அவையிலுள்ள ஓர் உறுப்பினர் என்பதல்ல இங்குள்ள பிரச்சினை. எங்கே உள்ளவர்கள் மீதும் அவர்களுக்கு நடவடிக்கை எடுக்கிற உரிமை இருக்கிறது என்று அவர்கள் வைத்துக்கொள்ளலாம். ஆனால் இந்த அவையினுடைய ஒப்புதலோடு நடவடிக்கை எடுக்க முயற்சித்தார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி. அந்த வகையில் இது வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சி. இந்த அவையில் நடந்த செய்தியையொட்டியதல்லாததால், நாங்கள் அதுகுறித்து ஒன்றும் சொல்லுவதற்கில்லை என்று தலைவரவர்கள் சொல்லலாமே தவிர, நீங்களே முடிவெடுக்கலாமென்று அதற்கு ஒரு ஒப்புதலைக் கொடுக்கிற நிலை வருமானால், இந்த அவையினுடைய உரிமை பாதிக்கப்பட்டு விடுமோ என்று நாங்கள் அஞ்சுகிறோம் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் இங்கே கருத்துக்களைச் சொன்னார்கள். முதலில் நான் ஒன்றைச் சொல்கிறேன். மரபு காப்பாற்றப்பட்டாக வேண்டும். தலைவர் ஒரு தீர்ப்பை அளித்ததற்குப் பிறகு, அதைப்பற்றி விவாதம் நடைபெறுகிற வழக்கமே இல்லை! ஆனால் இதைப் பற்றி இங்கே நான் அளித்தது தீர்ப்புகூட அல்ல, ஒரு கருத்துதான் அது என்பதைத்தான் அது காட்டுகிறது. அவர்கள் என்ன கேட்டிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். அவர்கள் நம்மைக் கேட்காமலேயே நடவடிக்கை



எடுக்க முடியும். ஆனால் இந்த சபையில் உறுப்பினராக இருப்பதாலும், நம்முடைய நாட்டினுடைய ஜனநாயகத்திலும்—இதற்கு முன்பு இப்படி எல்லாம் நடக்கவில்லை—புதுமாதிரியாக இருப்பதாலும், நம்மோடு உள்ள உறவைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் தகவல் கேட்டிருக்கிறார்கள் நம்மை. "நாங்கள் எடுத்துக்கொள்கிறோம்" என்று அவர்கள் கேட்கலாம். ஆனால் தாங்கள் இதுகுறித்து முடிவெடுத்துக்கொள்ள தகவல் தேவை என்று கேட்டதால், "உங்கள் விருப்பப்படி" நடக்கலாமென்று நாமும் தகவல் தரலாம். அந்த அடிப்படையில் தகவல் தந்திருக்கிறோமேயொழிய, எந்த ஆணையையும் அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி சொல்லி அனுப்பவில்லை. இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினைபற்றி நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இதுகுறித்து நான் நன்றாக யோசித்துத் தான் முடிவெடுத்தேன். இங்கேயுள்ள உறுப்பினர்களேகூட இதைப்பற்றி ஏற்கெனவே என்னிடத்தில் கொடுத்தார்கள். அப்போதும்கூட நான் உறுதியாகச் சொல்லிய நிலையை உறுதியாகக் கடைப்பிடித்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இந்த அவையில் பேசியதற்காகவோ, இந்த அவையில் ஓட்டு அளித்ததற்காகவோ அவர்மீது இந்த அவை எடுத்த நடவடிக்கைக்காகவோ அவர்மீது பேரவையே நடவடிக்கை எடுக்க முன்வந்தாலும்கூட, அதற்காக வேண்டி இந்த அவையினுடைய உரிமையைக் காப்பாற்ற தலைவர் ஒருபோதும் தயங்க மாட்டார். இப்போது பிரச்சினை என்னவென்றால் தொடுத்திருக்கிற வழக்கு இந்த அவைக்கு வெளியிலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிபற்றி. வழக்குக்குக் காரணமான பேச்சும் வெளியிலே நடைபெற்ற பேச்சு. ஆகவே அதற்கும் நமக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவர்கள் நமக்கு அனுப்பாமலேயே இதுகுறித்து முடிவு எடுத்திருக்கலாம். ஆனால் ஒரு சபையினுடைய நாகரிகத்திற்காக, மரபுக்காக தகவல் அனுப்பியதும் தவறு, அதற்கு பதில் அனுப்பியதும் தவறு என்று ஒருவரும் சொல்லிவிட முடியாது. "இதுகுறித்து உங்கள் விருப்பப்படி நடக்கலாம்" என்கிற என்னுடைய கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறேன். இதுகுறித்து ஆணை ஒன்றும் அனுப்பப்படவே இல்லை. இதை நான் சொன்ன பிறகும்கூட, அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், அது அவர்கள் விருப்பம்—அவர்கள் அதை விட்டுவிடலாம். அதற்கும் இதிலே இடமிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

### 3. அறிவிப்பு.

### பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்டமுன்வடிவு என பேரவைத் தலைவரால் நிர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிடப்பட்ட கீழ்க்கண்ட சட்டமுன் வடிவுகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

1. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்துதலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1983).

2. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1983).

### 4. கவன ஈர்ப்பு.

**(1). அரசு மானியம் பெறும் பள்ளிகளிலுள்ள எஸ்.எஸ்.எல்.சி. கல்வித் தகுதி உடைய பதிவு எழுத்தர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 6 கொடுக்கப் படாமை குறித்து.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"அரசு மானியம் பெறும் பள்ளிகளிலுள்ள பதிவு எழுத்தர்களில் எஸ்.எஸ்.எல்.சி. கல்வித் தகுதி உடையவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 6 கொடுக்கப்படாமல் வேற்றுமை பாராட்டுவது குறித்தும் அதனைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, அவைமுன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பிரச்சினை நிலுவையில் இருந்தது. 24—2—1983 அன்று வெளியிடப்பட்ட அரசு ஆணை எண் 366-ன் மூலமாக ஓரளவுக்கு அவர்களுக்கு இருந்த பிரச்சினை தீர்க்கப்பட்டது. ஆனால் அதே நேரத்தில் இந்த 366 எண் கொண்ட அரசாணையில் ஒரே ஒரு குறைபாடு இருக்கிறது.

---

@ 574—575 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



இந்த ஆணையை 2—10—1970 முதல் முன் தேதியிட்டு, அந்தத் தேதி முதல் பயனளிக்கும் வகையில் வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் முன்பு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டவர்களைப் பொறுத்தவரையில், தவறுதலாக ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தால், அவர்கள் அதை நீண்ட காலமாக அனுபவித்துக்கொண்டு வந்திருந்தால், ரூபாய் 6 வித்தியாசத்தைத் திரும்ப வழங்க வேண்டாமென்று ஆணை வெளியிட்டிருக்கிறார்கள். பிடிக்கப்பட்ட இந்த 6 ரூபாயைக் கணக்கிட்டுப் பார்த்தால், மிக மிகச் சொற்பமான தொகை. இப்படி பிடித்தம் செய்த காரணத்தால், உணர்வுபூர்வமாக, உள்ளத்தாலே அவர்கள் வேதனையடைந்திருக்கிறார்கள். ஆகவே பிடித்தம் செய்த தொகையைத் திரும்பக் கொடுக்க வேண்டாமென்று ஆணையில் இருக்கின்ற முடிவை சற்று மாற்ற வேண்டும். பத்து ஆண்டுகளாக அவர்கள் தொல்லைப் பட்டுக் கொண்டிருந்த நிலையை மாற்றி அவர்களுடைய தொல்லையைக் களைய பெரிய மனது காட்டியதுபோல் இந்தத் தொகையையும் திரும்ப வழங்க, ஆணை வெளியிட கல்வித் துறை நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சொற்பத் தொகை என்பதாலும், இதனை நாம் திருப்பி எதற்காகத் தர வேண்டும், நிர்வாகப் பிரச்சினை வரும் என்பதாலும், திருப்பித் தருவது என்பது சிரமமான காரியம் என்பதாலும், பிடித்தம் செய்து அதிகக் காலமாகிவிட்டது என்ற காரணத்தினாலும், அரசு இத்தகைய முடிவை எடுத்தது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பிடித்தம் செய்து அதிக காலமாகி விட்டது என்று இந்தப் பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். பிடித்ததைத் திரும்பக் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்கின்ற பிரச்சினையைப் பொறுத்தவரையில், ஒருவேளை நிர்வாகப் பிரச்சினைகள் இருந்தால் கூட, அதைத் தவிர்க்கும் வகையில் வருங்காலத்தில் அவர்களிடத்திலிருந்து ஏதாவது பிடித்தம் செய்ய வேண்டியிருந்தால், அதில் கூட இந்த 6 ரூபாயையும் சரி செய்து கொள்ளலாம். அந்த முறையில் சிக்கலைத் தவிர்க்கலாம். அந்த வகையிலாவது அனுதாபத்துடன் அரசு இதைப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, கணக்கைத் தொடங்கும்போதே, வேறு பல சிக்கல்களுக்கு இடம் ஏற்பட்டு விடுகிறது. அந்த அளவுக்கு அலுவலகத்தில் பணி புரிபவர்களுக்கு பாரத்தைத் தாக்கூடிய அளவுக்கு பெரிய பிரச்சினையாக இல்லை. இருந்தாலும், இதற்கு ஏதாவது செய்ய முடியுமா என்று அரசு நிச்சயம் பரிசீலனை செய்யும்.

## (2) தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு பட்டப் படிப்பு முடிய இலவசக் கல்வி அளிப்பது பற்றி.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு பட்டப் படிப்பு முடிய இலவசக் கல்வி வழங்கப்படும் என அரசு அறிவித்து ஈராண்டாகியும் இதுகாறும் ஒரு ஆசிரியரின் குழந்தைக்குக் கூட அரசு அளிக்காததால், அக் குழந்தைகள் பட்டப்படிப்பைப் பெற முடியாமல் துயருறுவது குறித்து" மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது. இன்ஜினியரிங் கல்லூரி, மெடிகல் கல்லூரி போன்ற தொழில் படிப்புக் கல்லூரிகளில் படிக்கும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இந்த நிதி உதவி செய்து வருகிறோம். ஆனால் அதேபோன்று, பி.ஏ. பி.எஸ்.சி. எம்.ஏ., எம்.எஸ்.சி., மாணவர்களுக்கும் தரவேண்டுமென்று முடிவு எடுத்தோம். ஆனால் இதற்குக் கொடுக்க, தேசிய ஆசிரியர் நல நிதியில் இருக்கும் பணம் போதாது என்று அவர்கள் சொன்ன காரணத்தால், அரசு அந்த நிதி நிறுவனத்திற்குக் கணிசமான பணத்தைத் தந்தால்தான், அப்படிப்பட்ட மாணவர்களுக்குத் தர முடியும் என்று கூறியிருப்பதால், அதைத் தீவிரமாக அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு, எல்லா மட்டத்திலும் கல்விச் சலுகை அளிக்கப்படும் என்று 1980-81-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் ஆணை பிறப்பிக்கப்பட்டது, பத்திரிகையில் விளம்பரத்திற்காகச் செய்யப்பட்டது போல் இருக்கிறது. இதுவரையில் அந்த ஆணையின்படி ஒரு குழந்தை கூட அந்தச் சலுகையைப் பெறவில்லை. இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்ததற்குப் பின்பும், அதே விளக்கம்தான் தொடருகிறது. ஒரு ஆணையைப் போடுவதற்கு முன்பே, அதற்கான கூடுதல் செலவு எவ்வளவு, அதற்கான நிதி ஆதாரங்கள் இருக்கின்றனவா, அந்தச் செலவை எந்தத் தொகையிலிருந்து பெறுவது, என்பதைத் திட்டமிட்டு ஆணை பிறப்பித்தால், இது விளம்பரத்திற்கு மட்டும் பயன்படாமல், அந்தப் பிள்ளைகளுக்கும் சலுகைகள் கிடைக்கிற வகையில் பயன்படும். அப்படிச் செய்த தவறின் காரணமாக, ரூ. 16.75 லட்சம் நிதி கேட்டிருப்பதாகவும், அதைப்பற்றி இன்னும் தெரியவில்லை என்றும்,

---

@ 575 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பும் அதே பதிலை அளிப்பது போன்ற குறைகளை நிவர்த்தித்து ஆவன செய்யப்படுமா? இந்தச் சலுகை அவர்களுக்குக் கொடுக்க என்ன செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசு தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகைகளைத் தர வேண்டுமென்று விரும்பித்தான் செய்கிறது. இப்போது வேண்டுமானாலும் அது முடியவில்லை என்று சொல்லி நிறுத்திவிட முடியும். ஆனால் அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்து வருகிறது என்று சொன்னேன். நல்ல முடிவு எடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அரசு நிதியிலிருந்து கொடுப்பது என்பதைப் பற்றி பரிசீலித்துத் தான் சொல்ல முடியும். தேசிய ஆசிரியர் நல நிதியிலிருந்து தருவது என்றால், பிரச்சினையே இல்லை. அங்கே பணத் தட்டுப்பாட்டின் காரணமாக இந்தப் புதிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆசிரியர் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்பது தான் அவர்களது கோரிக்கை. அரசு அதை அளிக்கிறபோது, தேசிய ஆசிரியர் நல நிதியிலிருந்து அது எடுத்து அளிக்கப்படும் என்று போட்டதால், ஆசிரியர் சான்றிதழ் பெற்றாலேயே அவர்களுடைய குழந்தைகளுக்கு இலவசக் கல்வி தரப்படும் என்று தெரிவித்திருந்தால், சிக்கல் ஏற்பட்டிருக்காது. இப்போது ரூ. 8 லட்சம் தான் தேசிய நல நிதியில் இருக்கிறது, ரூ. 1 லட்சம் தான் இதற்கு ஒதுக்கப்படும், மற்ற நிதி அரசிடமிருந்து வரவேண்டும், அதற்கு பரிசீலிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இந்த ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிற நிதியை முன்பே ஒதுக்கி, அதற்குரிய அளவுக்கு ஒன்றிரண்டு பேருக்காவது உடனடியாகக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆகவே அதையாவது எடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை முழுவதும் பரிசீலித்து அரசு முடிவெடுப்பதற்கு முன்பு எதையும் தருவதற்கில்லை. ஆனால் ஒருவருக்குமே தரவில்லை, தரவில்லை என்று நாம் பேசிக் கொண்டிருப்பதாலேயே, ஒருவருக்கும் தரவில்லை என்று ஆகிவிடாது. இப்போது மெடிகல் கல்லூரியில் படிக்கும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் குழந்தைகளுக்கும், இன்சினியரிங் படிப்பவர்களுக்கும் ஆசிரியர் நல நிதியிலிருந்து நாம் தந்து வருகிறோம். இங்கே சொன்ன சலுகையானது கலைக் கல்லூரியில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு. அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற ஆசை அரசுக்கு

இருக்கிறது. அரசு நிதியிலிருந்து தரவேண்டுமானால், அது தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் அல்ல, எல்லோருக்கும் தரவேண்டிய நிலை ஏற்படும். அதைத் தவிர்க்கத்தான் நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான முறையில்தான் இதைப் பரிசீலிக்க வேண்டுமே தவிர, எல்லோருக்கும் தர வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

### 5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**(1) தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு உள்ளூர்ப் பகுதியில் நுகர்தலுக்காக, பயன் படுத்துதலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1983).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்துதலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1983) @ பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு, உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்துதலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1983) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

THIRU A. R. DAMODARAN: Before I speak on this Bill, I would like to mention that the Hon. Minister has announced various concessions in the Legislative Assembly and it is only fair that we know what they are as we may be talking on the same subjects. Before we discuss the provisions of the Bill. I would like to know from the Hon. Minister what proposed changes the Government have accepted to make in this Bill, so that there may be some meaningful discussion.

---

@ 576–598 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை என்று சொல்கிறபோது, மிட்டாய், மின்சாரப் பொருள்களில் பல்பு, ஒளிவிளக்குகள், ஓயர்கள், ஹோல்டர், சுவிட்சுகள் போன்றவைகளும், எல்லா மருந்துப் பொருள்களும், இந்த வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. பெட்ரோலைப் பொறுத்தவரை, மண்ணெண்ணெய் விலக்களிக்கப்பட்டுள்ளது.

THIRU A. R. DAMODARAN: Sir, I wish to state that we are all deeply agonised that in spite of explaining the implications of the Entry Tax, the Government have thought fit to introduce this Bill and this Bill has been circulated for consideration of both the Houses and has been passed by the Hon. the Legislative Assembly also.

May I first point out that this is not merely a Bill that is going to affect traders? This is a Bill that is going to affect every industry that has been established in Tamil Nadu and it is likely to have, as many industrialists have pointed out, disastrous effects on the goods that are likely to be sent by such industrialists to places outside Tamil Nadu.

The Entry Tax Bill first suffers from a serious disability and I hope the Hon. Minister will kindly bear with me when I point out that in no piece of legislation pertaining to a fiscal enactment, have such enormous powers been delegated to the Government in determining the rate of tax that can be levied, the areas in which it may be introduced and the date on which certain notifications can be published. I am aware of the fact that in certain Bills like the Urban Land Tax, etc., we have given the power to the Government to alter schedules and to determine the date on which a particular tax could be notified. But I would like the Hon. Minister to point out one parallel enactment of this Legislature over the past 32 years whereby we have delegated authority to the Government to fix the rate of tax in respect of a particular taxation measure.

(முற்பகல் 10-20)

In this Bill, the Government have assumed powers of fixing the rate of tax by notification. I strongly oppose this, as I believe that this is an usurpation of the powers of the Legislature. I am

mentioning this to the Hon. Minister because I believe that he is setting a very bad precedent for future Legislatures to follow. If we give the power of notification in so far as the rate is concerned, we are committing excessive delegation of power, not merely to the Ministers but to the Executive and I am sure the Members of both Houses would not agree to such excessive delegation of power. Let me take the Tamil Nadu General Sales Tax Act, the Surcharge on Sales Tax Act, the Additional Surcharge on Sales Tax Act and the Tamil Nadu Additional Sales Tax Act that we have introduced. In all these enactments, the rate has been clearly specified and, every time the Government wanted to increase the rate, they have had to come to the Legislature with a Bill and that has been approved by the Legislature. In this particular Bill, excessive delegation of authority has been made and I would first like to ..................

*மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :* மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் இன்னொன்றையும் இங்கே தெரிவித்து விட்டால், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசுவதற்கு வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன். Not exceeding five per cent என்பதைப் பொறுத்த வரையில், ஒரு திருத்தம் கொண்டு வந்து Not exceeding two per cent என்று ஆக்கியிருக்கிறோம். எனவே Not exceeding two per cent என்ற அடிப்படையில் பேசுவது நலமாக இருக்கும், உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, நான் பதில் சொல்லும் போது, ஒன்றைத் தெரிவிக்கலாம் என்று இருந்தாலும், இப்போதே சொல்லி விடுகிறேன். அதாவது இதைப் போலவே ஒரு சட்டத்தைக் கருநாடக மாநிலத்தில் கொண்டு வந்தார்கள். அதுபற்றிய வழக்கு உச்ச நீதி மன்றத் திற்குச் சென்றபோது, உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி என்ன சொன்னார்கள் என்பதையும் படித்துப் பார்த்துப் பேசினால் சௌகர்யமாக இருக்கும். இது அவருக்கும் நல்லது, அவைக்கும் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, I am not referring to the question whether the Government have the authority to do so or not. I am only stating that even under the Tamil Nadu Sales Tax Act, section 17 of the Act gives the power to the Govern-



ment only to reduce the sales-tax, exempt a commodity from sales tax or waive a tax that is to be collected or already collected. We have not given the power under section 17 to the Hon. Minister to raise the tax on cement from, say, 12 per cent to 14 per cent. In fact, we have not given the power at all to the Government, under the Tamil Nadu General Sales Tax Act, for the Government to increase the rate. The fact that the Hon. Minister has reduced the rate from 5 per cent to 2 per cent still gives him the scope to increase the rate by notification. In an area the rate may be one per cent and by notification, the Government can increase the rate from 1 per cent to 2 per cent. That, in my opinion, is a power that should not be given to the Executive and I would strongly deprecate the tendency of the Government to assume the powers of the Legislature. The Hon. Minister will find the disadvantages of introducing such measures only when he is on this side of the House and he will not feel it when he is on the other side.

25 கோடி ரூபாய் இந்த வரி போடுவதை விட, நிர்வாகத்தில் மற்ற வரி விதிப்பில், பிற நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம், இந்த வருவாயைச் சேகரிக்க முடியும். அப்படி நிதியைத் திரட்டிக்கொள்ள முடியும். மக்களுடைய ஆதரவைப் பெற்று நல்ல எண்ணத்தோடு வேறு வித வரிகளைத் திரட்டும் முயற்சியில் ஈடுபடலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வரிவிதிப்பு மூலம் வியாபாரிகளுக்கு பாதிப்பு வராது, மக்களுக்கு பாதிப்பு வராது என்று சொல்வது தவறு. எப்போதுமே நம்முடைய வரிவிதிப்புக் கொள்கைகளால் மக்களுக்குப் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படுவதைப் பார்க்கிறோம். இதனால் தொழில்கள் தேங்கியிருக்கின்றன. தேவையான மின்சாரம் கிடைக்காமல் பல தொழில்கள் தேங்கி, மூலப் பொருள் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. அண்டை மாநிலங்களில் இருக்கிற தொழில்கள் வளரக் காரணம், அவர்களது வரிவிதிப்பில் இருக்கிற கொள்கைகள்தான். பாண்டிச்சேரியில் போய் ஒரு லாரி வாங்கினால், 17 ஆயிரம் ரூபாய் லாபம். ஒரு அம்பாசிடர் கார் வாங்கி

னால், 10 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும். ஒரு சேர் வாங்கினால், 10 ரூபாய் லாபம் கிடைக்கும். பக்கத்தில் உள்ள கடலூருக்கும் பாண்டிச்சேரிக்கும் இந்த வித்தியாசம் இருப்பதைப் பார்க்கலாம். விலை குறைவாக இருக்கிறது என்று சொன்னால், வரி விதிப்பு முறையில் அவர்கள் கையாளுகிற முறைதான் காரணம். இப்படியே போனால், இதுமாதிரி வரிக் கொள்கை இருக்கிற மாநிலங்களில் தொழில்கள் நசித்துப்போய், அண்டை மாநிலங்களுக்கு அந்தத் தொழில்கள் சென்று விடுகிற நிலைமை ஏற்படும். இங்கே உற்பத்தி நிலைக் களன்களாக இருக்க முடியாது. ஆகவே சட்டமன்றப் பேரவையில் இதை நிறைவேற்றி விட்டோமே, இனிமேல் அதை நிறுத்த முடியாதே என்று நினைக்காமல், ஏதோ ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து, தற்காலிகமாக இதை நிறுத்தி வைப்பதுதான் சிறந்தது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் இதிலே சொல்லியிருப்பது 10 நகரங்கள், 3 மாநகராட்சிகள், 13 பெரு நகரங்கள் என்று சொன்னாலும் கூட அந்த நகரங்களில் உள்ள பொருட்கள் எல்லாம் கிராமங்களுக்கு வரும்போது, விலை ஏறத்தான் செய்யும். சென்னையில், மணலியிலிருந்து பெட்ரோல் வரவேண்டுமானால், உடனடியாக 13 காசு விலை ஏற்றி விட்டு, அதன்பிறகு பக்கத்து கிராமங்களுக்குச் செல்கிறபோது அங்கே ஏறிவிடுகிறது. அதேபோல், சர்க்கரை, இரும்பு, துணியும் அப்படித்தான். ஆகவே இதுபற்றி விரிவாக பட்ஜெட் கூட்டத்தில் சொல்லியிருப்பதை மீண்டும் இந்த அவைக்கு நினைவுபடுத்தி, இப்போது இதை நிறுத்தி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்கிறபோது வருமானம் குறைகிறது என்றால், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் வகையில் பாட்டிலிங் இப்போது தனியார்களுக்குக் கொடுத்திருப்பதை உடனடியாக நிறுத்தி, கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொடுத்தால், 30 கோடி ரூபாயை அரசு தன்னுடைய

(முற்பகல் 11-20)

நிதியில் சேர்க்க முடியும். அப்படிச் சேர்த்துக் கொள்வதன் மூலம் தற்போது கொண்டு வரப்பட்டுள்ள ரூபாய் 25 கோடிக்கான வரி விதிப்பைக் கைவிட முடியும். அரசாங்கத்திடம் குத்தகை எடுத்த தனியார்கள் இன்றையதினம் ரூபாய் 30 கோடி வரை அந்த வகையில் லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பணியை அரசே கூட்டுறவுத் துறையில் மேற்கொண்டு, இத்தகைய முறையற்ற வரிவிதிப்பிலிருந்து ஏன் மாநிலத்தை விடுவிக்கக் கூடாது என்றுதான் கேட்க விரும்புகிறேன். இந்த வரிவிதிப்பை





ஏதோ வெறும் வியாபாரிகள் மட்டும்தான் எதிர்க்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கருதக்கூடாது. சாதாரண மக்கள்கூட இதை எதிர்க்கிறார்கள். காரணம் இந்த வரிவிதிப்பின் காரணமாக, இனி சர்க்கரை, இரும்பு, கார் போன்ற சாதாரண மக்கள் பயன்படுத்துகிற பொருள்களெல்லாம் விலை உயரப் போகின்றன. எனவே இது இவ்வாறு சாதாரண மக்களைப் பெருமளவுக்குப் பாதிக்கக்கூடிய வரிவிதிப்பாக இருக்கிற காரணத்தால், நாங்கள் இதை வன்மையாக எதிர்க்கிறோம். அரசு இந்தத் தருணத்திலாவது இந்த வரிவிதிப்பைக் கைவிட வேண்டும் என்று அழுத்தந்திருத்தமாக வலியுறுத்துகிறோம். கைவிடும் என்றும் நம்புகிறோம். இந்த வரிவிதிப்பைக் கைவிடுவதால் இது ஒரு மானப் பிரச்சினையாக ஆகிவிடாது. அரசைப் பொறுத்த வரையில், உண்மையிலேயே, இது ஒரு நிதிப் பிரச்சினையாக இருக்குமானால், எல்லோரும் மிகவும் அனுதாபத்தோடு அணுகி, இதற்கு ஒரு வழி வகை கண்டாக வேண்டும். அந்த வகையில் ரூபாய் 25 கோடிக்கு வேறு என்ன செய்வது என்று பார்க்கும்போது, இருக்கிற வரிவிதிப்பு முறைகளிலேயே சில மாற்றங்களைக் கொண்டு வந்துகூட, இந்தத் தொகையைப் பெற்றுக் கொள்ள முடியும். அல்லது நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், சாராயக் கலவைத் தொழிலை, பிளென்டிங் அண்டு பாட்லிங் தொழிலை அரசே கூட்டுறவுத் துறையின் மூலம் மேற்கொண்டு தற்போது தனியாருக்குப் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கும் ரூபாய் 30 கோடியை அரசுக்கு உரியதாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வரிவிதிப்பை அரசு இந்தக் கட்டத்திலாவது நிறுத்தி வைத்து, நாட்டு மக்கள் இப்போதே பல்வேறு வகையில் துயருற்று இருப்பதால் அவைகளோடு அதிகப்படியான ஒரு துயரைச் சேர்க்காமல் இருக்க உதவிட வேண்டும் என்று வற்புறுத்தி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் தங்களுடைய அரிய கருத்துக்களையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது இந்த வரிவிதிப்பை அரசு கொண்டு வருவதன் மூலம் பல்வேறு சங்கடங்கள் ஏற்படும் என்றும், இதை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும், அல்லது குறைந்தபட்சம் ஆய்வுக் குழுவுக்கு விட வேண்டும் என்றும் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே பேரவையில் பேசும்போது, இந்த வரிவிதிப்பு வளர்ச்சித் திட்டங்களுக்குத்தான் பயன்படும் என்று குறிப்பிட்டதைப்போல், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள்கூட ஒரு விஷயத்தை இங்கே

குறிப்பிட்டார்கள். அதாவது இந்த வரிவிதிப்பின் மூலமாக இனி இங்கே உற்பத்தியாகும் பொருள்கள்மீதும், விற்பனை செய்யப்படும் பொருள்கள் மீதும், விலை அதிகமாவதன் காரணமாக மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஏழைகளும் சிறு விவசாயிகளும், சிறு வியாபாரிகளும் இதனால் நிச்சயமாகப் பாதிக்கப்படமாட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, ஏழைகளைப்பற்றியோ, சிறு வியாபாரிகளைப்பற்றியோ குறிப்பிடவில்லை. அவர்களெல்லாம் இந்த வரிவிதிப்பால் பாதிக்கப்படவில்லை என்பதை அவரும் ஒப்புக்கொள்கிறார் என்றுதான் கருதுகிறேன். அதுதான் உண்மையும்கூட. . .

**திரு. ஏ. ஆர். தாமோதரன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 'கன்சியூமர்' என்று நான் சொல்லும்போது, ஏழைகளும் உண்டு, பணக்காரர்களும் உண்டு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை எப்படிக் கருதுகிறாரோ எனக்குத் தெரியவில்லை. 'கன்சியூமர்' என்று சொல்லும்போது, எல்லோரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வருவாய் வேண்டும் என்பதற்காக ஏழை மக்கள் பயன்படுத்துகிற பேருந்துகளுக்குக் கூட போட்டிருக்கலாம், டிக்கட் கட்டணத்தை உயர்த்தியிருக்கலாம். ஆனால் வருகிற நட்டத்தையும் ஏற்றுக்கொண்டு டிக்கட் கட்டணத்தையும் உயர்த்தாமல் அந்தச் சுமையையும் இந்த அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கெல்லாம் நாங்கள் வரி போடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படியே போட்டாலும், ஏழைகள் உபயோகிக்கும் பேருந்துகளுக்குப் போட்டார்கள் என்று சொல்வார்கள். அப்படியே போட்டாலும், ஜனங்கள் வந்து இப்படி போட்டுவிட்டீர்களே என்று கேட்டு எடுத்துவிட்டால், அதற்கும் தனிப்பட்டவர்களைச் சம்பந்தப்படுத்தி எதையாவது சொல்வார்கள். இப்படிப்பட்ட நிலைமைதான் இன்றைய தினம் நாட்டில் இருந்து வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் இந்த அரசு அதிகமான வரியை எந்த வகையிலும் போடவில்லை. 5 ஆண்டுகளில் வரியே போடவில்லை, அல்லது இப்படிப்பட்ட வரிகளைப் போடவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு தாமோதரன் அவர்கள் பேசும்போது, "பெட்ரோலியம் ப்ராடக்ட்ஸ்-ஐப் பொறுத்த வரையில் அரசு சுமார் ஒரு லட்சம் ரூபாயைச் செலவழித்துவிட்டு ஏறக்குறைய ரூபாய் 56 கோடி வருவாயைப் பெறுகிறது" என்று குறிப்பிட்டார்கள். ஒரு லட்சம் ரூபாய் எதற்குச் செலவழிக்கிறோம் என்றால், நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்குச் சம்பளம் கொடுப்பதற்காக என்று சொன்னார்கள். இங்கே இருக்கிற எந்தத் தொழிற்சாலையானாலும் சரி,—அது தனியார் துறையைச் சார்ந்திருந்தாலும் சரி, அரசுத் துறையைச் சார்ந்திருந்தாலும் சரி—அவைகளுக்கு இந்த அரசு கொடுக்கிற சானிடரி சம்பந்தப்பட்ட உதவிகள், தண்ணீர் சப்ளை, மின்சார சப்ளை, பெட்ரோல் டங்க் என்றால் கார்கள் வந்து போக ரோடு போடுவது போன்ற பணிகளுக்காக இந்த அரசு எவ்வளவு ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கிறது என்பதை அவர் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



இந்த நேரத்தில் பல கருத்துக்களைச் சொல்ல முடியாவிட்டாலும், ஒரே ஒரு கருத்தை மட்டும் கண்டிப்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வரி கொண்டு வரப்பட்டதன் காரணமாகத் தவறுகள்தான் அதிகமாக நடக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கருத்து தெரிவித்தார்கள். தவறு நடக்கும் என்பதற்காகச் சிலவற்றை இங்கே விட்டுவிட முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் பேசும்போது வணிக வரித் துறையில் மிகப் பெரிய தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். ஒன்றை மிகவும் தைரியத்தோடு இங்கே நான் சொல்ல முடியும். இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, வணிக வரித் துறை அதிகாரிகளைப் பார்த்து, அரசு நிகழ்ச்சிகளுக்காகவோ, அரசுக்காகவோ நன்கொடை போன்றவைகளை வசூலிக்கச் சொல்லவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கே தெரியும். அந்தத் துறையில் உள்ளவர்கள் சிலர் தவறு செய்தால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கிறோம். சிலரை வீட்டுக்கே அனுப்பியிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதைச் சொல்வதால், வணிக வரித் துறையில் இருக்கிற எல்லோரும் நேர்மையானவர்கள் என்று சொல்லவில்லை. நேர்மையானவர்களும் இருக்கிறார்கள், நேர்மையில்லாதவர்களும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட இரண்டுவகை அதிகாரிகளும் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். நேர்மை இல்லாதவர்கள் வணிக வரித் துறையில் இருக்கிறார்கள் என்பதற்காக அந்தத் துறையை எடுத்துவிட முடியாது . . .

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது வணிகவரித் துறை நேர்மையற்ற துறை என்று சொல்லவில்லை 3½ லட்சம் ஊழியர்கள் இருக்கும்போது, தவறுகள் எங்கே செய்யப்பட்டாலும், அரசு ஜவாப்தாரி ஆகும் என்றுதான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறு நடக்காமல் பார்த்துக் கொள்வதுதான் அரசின் கடமை. தவறு நடக்கிறது என்று பயந்துகொண்டு அதைச் செய்யாமல் இருக்க முடியாது. உணவுக் கட்டுப்பாட்டுத் துறை இருக்கிறது. அதனால் எவ்வளவோ சங்கடங்கள் இருக்கின்றன. அதனால் எவ்வளவோ தவறுகள் ஏற்படுகின்றன. அதற்காக உணவுக் கட்டுப்பாட்டுத் துறையையே எடுத்துவிட முடியாது. அப்படி அந்தத் துறையை நீக்கிவிட்டால், பிறகு ஏழை எளிய மக்களுக்கு எப்படி உணவு தர முடியும் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு செய்தி இப்போது நினைவுக்கு வருகிறது. அதைச் சொல்வது நல்லது என்று நினைக்கிறேன். நான் அந்தக் கருத்தைச் சொல்வதாலே இதற்காகத்தான் இந்தச் சட்ட முன்வடிவே கொண்டு வந்தோம் என்று யாரும் தவறாகக் கருதிவிடக் கூடாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எவ்வாறு தொல்லையில்லாமல் செய்ய முடியும் என்பதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தபோது, சில பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியிடப்பட்டது. "மாண்புமிகு அமைச்சர்கள் கோடிக் கணக்கில் ரூபாய் பெறுவதற்காகப் பேரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக இந்த வரியைக் கொண்டு வராமல் இருக்கிறார்கள்" என்று பத்திரிகையில் செய்தி வெளியிட்டார்கள். எந்தத் துணிச்சலோடு இப்படி வெளியிட்டார்கள் என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும் செய்தி வெளியிட்டார்கள்.

அதைப்பற்றி இதுவரை ஒரு வியாபாரியும் பேசியது கிடையாது. ஒரு அறிக்கை கூட இப்படிப்பட்ட செய்தியைக் கண்டித்து அவர்களால் வெளியிடப்பட்டது கிடையாது. எனவே எங்களின் நிலையையும் மாண்புமிகு உறுப்பினர்கள் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தால், அதற்கு இங்கே எதிர்ப்பு. ஆனால் வெளியே கொண்டுவராமல் இருப்பதற்காக, பேரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு, இது நியாயம்தானா? இதை எவ்வளவு நாளைக்குப் பொறுத்துக் கொள்வது என்ற ரீதியில்தான் இப்போது இது வந்திருக்கிறது. இந்த அரசியலில் வியாபாரிகள் சிக்கிக்கொள்ளக் கூடாது என்பதுதான் என்னுடைய விருப்பமாகும்.



(முற்பகல் 11-30)

THIRU A. R. DAMODARAN: Sir, when we had a meeting in the South Indian Chamber of Commerce, one or two members referred to this ugly dispute that was going on. Our fear is that, in the fight between political parties, the real issues are being forgotten. Even when the Union Finance Minister reduced excise duty on the Maruti car for Rs. 210 crores, the accusation was made. So I would request that this part of the political game should not be considered by the Government when considering such important factors. No 'viyaapaari' is ever going to think that a tax is going to be reduced or a Bill is going to be withdrawn by payment of a few lakhs of rupees to any political party. This is a conflict that is going on between political parties and 'viyaapaaris' are not part of this conflict at all. I would like to tell the Hon. the Chief Minister, although I know that he will be hurt by such reports, that we have no way of restricting a free Press on these matters. It is a matter on which action should be taken separately.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அது மட்டுமல்லாமல் அரசுக்கு புதுவிதமான செலவுகள் வந்திருக்கின்றன. 1983-84 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 184 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பற்றாக்குறையையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது என்பது உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும்.

1981-82 ஆம் ஆண்டில் வறட்சி ஏற்பட்டது. அதற்காக நாம் மத்திய அரசிடத்திலே கேட்டது 110 கோடி ரூபாய். ஆனால் அவர்கள் நமக்குக் கொடுத்தது அல்லது செலவழிக்கலாம் என்று சொன்னது ரூபாய் 49.77 கோடி. அதிலே கடனாகக் கிடைத்தது ரூபாய் 22.5 கோடி, மானியமாகக் கிடைத்தது 9.6 கோடி ரூபாய். ஆனால் நாம் செலவு செய்ததோ 61 கோடி ரூபாய். இப்படிப்பட்ட இவை செலவுகளையெல்லாம் சமாளிக்க வேண்டிய இக்கட்டான கட்டத்திலே இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு எங்கு பார்த்தாலும் வறட்சியாக இருக்கிறது. வறட்சிக்காக நாம் கேட்டது 211 கோடி ரூபாயாகும். ஆனால் மத்திய அரசு அனுமதி அளித்தது 57 கோடி ரூபாய். ஆனால் இதுவரைக்கும் கொடுத்தது 15 கோடி ரூபாய். நாம் இது வரைக்கும் 57 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 ஏப்ரல் 28

அது மட்டுமல்லாமல், தமிழகத்தில் வடகிழக்குப் பருவக் காற்றும், தென் மேற்குப் பருவக் காற்றும் பொய்த்திருக்கின்றன. அதனாலே இங்கே வறட்சியாக இருக்கிறது. இதனால் விவசாயத் தொழிலாளர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களுக்குத் தெரியும். வேலை இல்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க இந்த அரசு பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. அதற்காக பொதுப் பணித் துறையின் மூலமாக, விவசாயத் துறையின் மூலமாக, நெடுஞ் சாலைத் துறையின் மூலமாக, ஊரகத் தொழில் துறையின் மூலமாகச் செலவழிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டும் போதாது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு விவசாயிகள் படுகிற சங்கடங்களைப் பார்த்து, அதே நேரத்தில் நெசவுத் தொழிலாளிகள் படும் சங்கடங்களையும் பார்த்து, நிலமற்ற விவசாயத் தொழிலாளிகளின் குடும்பத்திற்கு ஒரு வேட்டியும், ஒரு சேலையும் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். அப்படி நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கும், 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும் கொடுக்க வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில், 70 இலட்சம் விவசாயத் தொழிலாளிகள் இருக்கிறார்கள். ஒரு குடும்பத்திற்கு ஒருவர் என்று பார்க்கிறபோது, எட்டு இலட்சம், பத்து இலட்சம் பேர்களுக்குக் கொடுக்கவேண்டிய நிலைமையில் எதிர்பாரா செலவு இந்த அரசுக்கு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்லாமல், சத்துணவுத் திட்டத்திற்காக 132 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். ஆனால் ஆந்திராவில் அவ்வளவு செலவு செய்யவில்லையே என்று கூறியிருக்கிறார்கள். ஆந்திராவில் எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. இங்கே 132 கோடி ரூபாய் செலவழிக்கிறோம் என்றால், இதனால் 63 இலட்சம் குழந்தைகள் பயன் அடைகிறார்கள். இந்த ஆண்டு 132.48 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம். இதனால் பயன் அடைபவர்கள் 63 இலட்சம் பேர்கள். ஆந்திராவில் கொஞ்சம் தானே செலவாகிறது என்று சொன்னார்கள். ஆனால் எவ்வளவு பேர்கள் பயன் அடைகிறார்கள் என்ற கணக்கைப் பார்த்தால், நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, ஆந்திராவில் ஏறத்தாழ 80 கோடி ரூபாய் செலவழிக்கிறார்கள். இன்னும் விரைவிலே சத்துணவை அளிக்கலாமா என்பதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.



1983 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : முதலமைச்சர் அவர்கள் எனக்கு உதவி செய்திருக்கிறார்கள். இங்கே நாம் கொடுப்பது சத்துணவு. அங்கே முழு சத்துணவு கொடுக்காததால் அங்கே செலவு குறைவு. இங்கே முழு சத்துணவு கொடுப்பதால், செலவு அதிகமாக இருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையில், நடுத்தர மக்கள், அடித்தளத்திலுள்ள மக்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். அன்றாட வாழ்க்கைக்கே கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நியாய விலைக் கடைகளின் மூலமாக. . .

திரு. ம. சங்கரலிங்கம் : ஆந்திராவில் நண்பகல் உணவுத் திட்டம் என்று சொல்லி, அதைத் திட்டத்தில் சேர்த்து மத்திய அரசின் உதவியைப் பெறுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அது மாதிரி நாமும் பெற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதைத் திட்டத்திலே சேர்த்துவிட்டால், வேறு ஏதாவது திட்டத்தைக் கைவிட வேண்டியிருக்கும். நம்முடைய திட்டம் அதுவல்ல. போட்ட திட்டங்களும் உண்டு. விசேஷமாக தனியாகச் செய்யும்போது, அதற்காகப் பணம் சேர்க்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இதற்காக 17,844 நியாய விலைக் கடைகளை வைத்திருக்கிறோம். இதற்காக நல்ல ரக அரிசி ரூபாய் 3.50 கொடுத்து வாங்குகிறோம், சாதாரண அரிசி 2.50 ரூபாய் கொடுத்து வாங்குகிறோம். அவற்றை ஏழையெளியவர்களுக்கு ஒரு கிலோ அரிசி 2 ரூபாய், மோட்டா அரிசி ஒரு கிலோவிற்கு ரூபாய் 1.75 என்று கொடுக்கிறோம். 1980 ஆம் ஆண்டு நியாய விலைக் கடைகளின் மூலம் கொடுக்கப்பட்ட அளவு 1.6 இலட்சம் மெட்ரிக் டன்கள். அதனால் அப்போது அரசுக்கு ஏற்பட்ட செலவு 293.80 இலட்சம். 1980-81-ல் 2.1 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி கொடுக்கப்பட்டதால், அரிசி உதவிப் பணமாகக் கொடுத்தது 689 இலட்சம். 1981-82-ல் வறட்சி வந்துவிட்டது. நியாய விலைக் கடைகளில் அதிகமாக அரிசி கொடுக்கப்பட்டது. 7 இலட்சம் மெட்ரிக் டன் கொடுத்திருக்கிறோம். அதற்கு அரசு கொடுத்த உதவிப் பணம் 3,525 இலட்சம் ரூபாய். 1982-83-ல் வறட்சி. இந்த ஆண்டில் 8 இலட்சம் மெட்ரிக் டன் கொடுத்திருக்கிறோம். அதற்காக ரூபாய் 60 கோடியை அரசு கொடுத்திருக்கிறது. 1983-84-ல் 9 இலட்சம் மெட்ரிக் டன்

கொடுக்கப்படுகிறபோது, அதற்காக 90 கோடி ரூபாய் செலவாகும் என்று இந்த அரசு கணக்குப் போடுகிறது. இப்படி வருஷத்திற்கு வருஷம் இந்தக் கணக்கு அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது.

கிருஷ்ணா தண்ணீர் சென்னைக்கு வர வேண்டும் என்பது எல்லோருக்கும் ஆசை. இந்த அரசுக்கு அதிலே ஆசை. அது தேவைதான். நீண்ட காலமாக இதைக் கொண்டுவராமல் இருந்தோம். இதற்காக ஒவ்வொரு வருஷத்திற்கும் 60 கோடி ரூபாய் என்று மூன்றாண்டுகளுக்கு ஆந்திராவிற்குக் கொடுக்க வேண்டிய பணம் ஏறக்குறைய ரூபாய் 200 கோடியாகும். மேலும் இங்கேயுள்ள வாய்க்கால்களைச் சரிப்படுத்த, ஏரிகளின் கொள்ளளவைச் சரிப்படுத்த, கரைகளைச் சரிப்படுத்த ரூபாய் 236 கோடி ஆகும். ஆகமொத்தம் ரூபாய் 436 கோடி தேவைப்படுகிறது. இதற்கெல்லாம் இந்த அரசு எங்கே போகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுபான தொழிற்சாலைகளை நீங்களே எடுத்துக்கொண்டு நடத்தினால், 30 கோடி ரூபாய் இலாபம் வரும் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்லும்போது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தவறாகக் கருதக்கூடாது. 1971 முதல் 1973 வரை உள்ள 3 ஆண்டுகளில் மதுவிலக்கை அமுல்படுத்தியபோது, அரசுக்கு எவ்வளவு லாபம் என்றால் 1971-72-ல் ரூபாய் 22.2 கோடி, 1972-73-ல் 39.15 கோடி ரூபாய், 1973-74-ல் ரூபாய் 56.54 கோடி ஆகமொத்தம் ரூபாய் 117 கோடி அரசுக்கு வந்திருக்கிறது.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-40)

**திரு ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அப்போது நூறு மில்லி சாராயம் ஒரு ரூபாய்க்குத்தான் விற்கப்பட்டது. இன்றையதினம் 2 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அது மட்டுமல்ல. இன்றையதினம் இருக்கக்கூடிய பிளண்டிங் யூனிட்டுக்கள் அன்றையதினம் கிடையாது. ஹோல்சேலர்ஸ், ஐ.எம்.எப்.எல். லைசென்ஸ் ஹோல்டர்ஸ் கிடையாது. இப்போது இருப்பதுபோல கிடையாது. அதைப்போலவே ஹோல்சேலர்ஸ், டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் கிடையாது. அவர்களுக்கெல்லாம் அப்போது அதிக லாபம் இல்லை. இப்போது அந்தச் சாராயத்தையெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்தால், அரசாங்கத்திற்கு 30 கோடி ரூபாய் வரையில் வருவாயும் வரும் அல்லவா? அதை ஏன் இந்த அரசு மறுபரிசீலனை செய்யக்கூடாது?



**மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இப்போது 'மிடில்மென்' அதிகமாக இருக்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். அப்போது 'மிடில்மென்' இல்லை என்றால், லாபம் அதிகமாகத்தானே வந்திருக்கவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் சொல்லாமல் இப்படி இப்போது சொல்லியிருக்கின்றார்கள். இடையிலே உள்ளவர்கள் இல்லை என்றால், வரக்கூடிய லாபம் வரும் என்று சொல்கின்றார்கள். சென்ற ஆண்டுக்கு முதல் ஆண்டு என்று நினைக்கிறேன். பிளண்டிங் யூனிட்டுகள், ஹோல்சேலர்ஸ், ரிடெய்லர்ஸ் என்றெல்லாம் இருந்தும் கூட, சென்ற ஆண்டுக்கு முன் ஆண்டு 1981-82-ல் வந்திருக்கின்ற தொகை 110 கோடி ரூபாய். 1982-83 ல் ரூபாய் 151.6 கோடி வந்திருக்கின்றது. முதலிலே எல்லாம் ஒரே இடத்திலேதான் டிஸ்டிலேரி இருந்தது. அங்கே தான் ஹோல்சேலர்ஸ் இருந்தார்கள். இப்படி 'மிடில்மென்' இருந்தும்கூட அதிகமாக லாபம் வந்திருக்கிறது. அப்படி இருந்தும், இந்த அரசு இந்த பிளண்டிங் யூனிட்டுகளை, சாராயக் கடைகளைத் திறமையாக நடத்தி வருவதன் மூலம், 4 வருடத்தில் ரூபாய் 117 கோடி என்று இருந்ததற்குப் பதிலாக இன்றைக்கு ரூபாய் 110 கோடி ஒரு வருடத்தில் பெற்றிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் மீண்டும் மீண்டும் சொல்கின்றேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மதுவிலக்கைத் தளர்த்தியபோது, இந்த அளவுக்கு லாபம் நிர்ணயிக்கப்படவில்லை. இப்போது இடையிலே இருக்கக்கூடிய மிடில்மென்களுக்கு அரசாங்கமே, 750 மில்லி உள்ள பாட்டிலுக்கு 51 பைசா என்று லாபம் நிர்ணயித்திருக்கிறது. 85 பைசா சாராயத்தை ரூபாய் 7.91 பைசாவிற்கு விற்க அரசாங்கம் ஜி.ஓ. போட்டிருக்கிறது. ஆக இப்படி ஏராளமான லாபம் இருக்கிறது. ஒரு நூறு மில்லி லிட்டர் சாராயம் ஒரு ரூபாய்க்கு விற்பதற்குப் பதிலாக இன்றைதினம் ரூபாய் 2 க்கு விற்பதால் இடையிலே இருக்கக்கூடிய மிடில்மென்களுக்குக் கொள்ளை லாபம் வருகின்றது. அவர்கள் கோடிக் கணக்கான பணத்தை லாபமாக அடைகின்றார்கள். ஆகவே இதை அரசாங்கம் எடுத்து நடத்தினால், அந்தப் பணம் அரசாங்கத்திற்கு வருமே என்றுதான் யோசனை சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இடையிலே இருக்கின்ற மிடில்மென்கள் கோடிக்கணக்கில் பெற்றால், அரசுக்கு இப்படி இவ்வளவு லாபம் வந்திருக்க முடியும்? மிடில்மென்கள் இல்லாதபோது என்ன வந்திருக்கிறது என்பதைப்பற்றி இங்கே படித்துக்காண்பித்தேன். மிகவும் குறைவான பணம்

தான் அன்றைக்கு வந்தது. 22 கோடி, 30 கோடி, 56 கோடி ரூபாய் என்று வந்திருக்கின்றது. ஆனால் இன்றைக்கு அப்படி அல்ல. அவர்களுக்கு அது ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படியெல்லாம் சொன்னாலும்கூட, இன்றைக்கு ரூபாய் 110 கோடி, ரூபாய் 156 கோடி என்று வருகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், நாங்கள் திறமையாக நடத்துகிறோம். அவர்களுக்கு லாபம் அதிகமாக இல்லை என்பதைத்தான் காட்டுகிறது. வேறல்ல.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, திறமையாக நடத்துவதிலே நான் மாறுபட்ட கருத்து சொல்லவில்லை. நான் சொல்கின்ற அந்த பிளண்டிங் யூனிட், பாட்லிங் என்று இருப்பவைகளை அரசு எடுத்துக்கொண்டால் ரூபாய் 147 கோடி என்று இருப்பது ரூபாய் 190 கோடி அளவுக்கு வருமே. அப்படி அதிலே வருவதிலே அரசுக்கு என்ன கஷ்டம் என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இருக்கின்ற வியாபாரங்கள் பூராவையும் அரசே எடுத்து நடத்திவிடலாம். அது நல்லதுதான். நம்முடைய பொது உடைமைக் கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலேயெல்லாம் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்கின்றார்கள். நம்முடைய மாநிலத்திலும் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாமா என்பது கேள்வி. அப்படி என்றால், இதைவிட லாபம் வரக்கூடிய எத்தனையோ தொழில்கள் இருக்கின்றன. அதை முதலிலே எடுத்துக்கொள்ள வேண்டும். ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துக்கொள்ள வேண்டும். முதலிலேயே ஏன் சங்கடமான ஒன்றை எடுத்துக்கொள்ள வேண்டும். சங்கடம் இல்லாத ஒன்றை எடுத்துக் கொள்வதற்குப் போவோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இதைவிட லாபகரமான தொழில் எங்கேயும் இல்லை. டாட்டா, பிர்லா போன்றவர்கள்கூட கோடிக்கணக்கில் இதில் முதலீடு போட்டு அவர்கள் பெருத்த லாபம் பெறுகின்றார்கள். இந்தத் தொழிலிலே முதலீடு செய்து ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 30 ஆயிரத்திலிருந்து ரூபாய் 50 ஆயிரம் வரையில்கூட லாபம் பெறுகின்றார்கள். அந்த அளவுக்கு பலர் முதலீடு செய்து, லைசென்ஸ் பெற்று, சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், கூட்டுறவுத் துறையின் மூலம் நாம் மிகவும் திறமையாக நடத்தலாம். கூட்டுறவுத் துறை மிகவும் திறமையாகச் செயல்படுகிறது. இந்த இலாகாவே இதை எடுத்துக்கொண்டால், நிச்சயமாக இந்த





அரசுக்கு 50 கோடி ரூபாய் லாபம் வரும் என்பதைத்தான் சொல்கிறோம். அதை எடுத்துக்கொள்ள இந்த அரசு ஏன் தயங்குகிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம் :** இந்தத் தொழிலிலே அதிகமான லாபம் வருகிறது, வேறு எந்தத் தொழிலிலும் இதைவிட லாபம் இல்லை என்று எனக்கு என்னிடத்தில் இல்லை. திரு. வீராசாமி அவர்களிடம் அந்தக் கணக்கு இருப்பதாகச் சொன்னார்கள். அதைப் பரிசீலிப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே இதிலே இருக்கின்ற பல சங்கடங்களையெல்லாம் தெரிவித்திருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னபோது, இன்றைக்கு அரசு பொதுவுடைமை ஆக்கவேண்டிய இனங்கள் எத்தனையோ இருக்கின்றன என்று சொன்னார்கள். அதைப்பற்றி யோசித்து, அவைகளிலே எதை எதையெல்லாம் எப்படி எப்படியெல்லாம் செய்ய வேண்டும் என்பதையும் அரசு யோசிக்கும். இதைவிட லாபகரமான தொழில்கள் இருக்கின்றன. அதைத்தான் இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு இந்த அரசு நுழைவு வரியைக் கொண்டு வந்திருக்கிறது. நுழைவு வரியைக் கொண்டுவருகின்றபோது, இங்கே இருக்கின்ற அரசுக்கு இப்போது எவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன, அப்படி சங்கடங்கள் இருக்கின்றதாலே, தேவைகள் இருப்பதனாலே, இதையெல்லாம் கொண்டு வந்தோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் சொல்லும்போது, அரசு இப்படி நடத்துகின்றபோது, அது மத்திய அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி, அவர்களுடைய நிதிநிலையைச் சரிப்படுத்திக்கொள்வதற்கும் மத்திய அரசுக்கும் வாய்ப்புக்கள் இருக்க வேண்டும், மாநில அரசுக்கும் வாய்ப்புக்கள் இருக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்றபோது, மாநில அரசுக்கு இருக்கின்ற வாய்ப்புகள் மிகக் குறைவாக இருக்கின்றன. அப்படிக் குறைவாக இருக்கின்றபோது, அவைகளையும் மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்று சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு மத்திய அரசு வருவாய் வருகின்ற பெரிய பெரிய சாதனங்களையெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கின்றது. அவைகளையெல்லாம் மத்திய அரசிலேதான் வைத்திருக்கிறார்கள். மத்திய அரசிலே இருப்பவைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கார்ப்பரேஷன் டாக்ஸ். கார்ப்பரேஷன் டாக்சைப்பற்றிச் சொல்கின்றபோது,

மத்திய அரசுக்கு 1966-67-ல் 984.2 கோடி ரூபாய் வந்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு ஒவ்வொரு வருடமாக உயர்ந்து கொண்டு 1982-83-ல் அந்தக் கார்ப்பரேஷன் டாக்ஸ் ரூபாய் 2,382 கோடி வருகிறது. ஆனால் அதை நம்முடைய மாநில அரசுக்குத் தருவதே இல்லை. நமக்குத் தருவது பூஜ்யமாகத்தான் இருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே இன்கம் டாக்ஸ். அந்த இன்கம் டாக்ஸ் எவ்வளவு வருகிறது என்றால், மத்திய அரசுக்கு ரூபாய் 1,134.38 கோடி 1976-77-ல் வந்தது. ஆனால் இப்போது எவ்வளவு வருகிறது என்றால் ரூபாய் 1,622 கோடி வருகிறது. நமக்கும் மற்றும் மாநிலங்களுக்கும் மத்திய அரசு கொடுப்பது எவ்வளவு என்றால், அது ரூபாய் 95.1 கோடி.தான்.

THIRU A. R. DAMODARAN: Sir, I am afraid the figures given by the Hon. Minister are wrong. Probably the Hon. Minister is referring to the share of Tamil Nadu alone. According to the explanatory memoranda to the Budget documents of the Government of India, the share of the States from income-tax is Rs. 1,174 crores and it is about 85 per cent of the income-tax collection. The Hon. Minister is referring to Tamil Nadu's share and I think it is not the entire States' share.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அதுபோலவே யூனியன் எக்சைஸ் டியூட்டியிலே நமக்கு வருவது மிகக் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு ரூபாய் 7,809 கோடி வருகிறது என்றால், அவர்கள் நமக்குக் கொடுப்பது மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது. இப்படி பலவிதமான வரிகள் மத்திய அரசிலே இருப்பதால்தான், நாம் இந்த வரிகளைப் போடவேண்டிய நிலைமைகளுக்கு உள்ளானோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

அதுமட்டுமல்ல, இன்னும் ஒன்றைச் சொன்னால் பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன். மத்திய அரசு நமக்கு ஏன் ஷேர் கொடுக்க முடியவில்லை என்றால், மத்திய அரசும், மாநில அரசுகளும் நிர்வாகத்தைப் பல துறைகளில் வைத்துக்கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கல்வித் துறை இங்கேயும் இருக்கிறது. அங்கேயும் இருக்கிறது. விவசாயத் துறை இங்கேயும் இருக்கிறது, அங்கேயும் இருக்கிறது. கூட்டுறவுத் துறை இங்கேயும் இருக்கிறது, அங்கேயும் இருக்கிறது. மெடிகல், பப்ளிக் ஹெல்த் இங்கேயும் இருக்கிறது, அங்கேயும் இருக்கிறது. இப்படி பல துறைகள் மாநிலத்திலும், மத்தியிலும் இருப்பதால், மத்திய அரசு போதிய அளவுக்கு மாநிலங்களுக்குக் கொடுக்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் மாநிலங்களுக்குப் பணம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்றால், இந்த அவையின் மூலமாக மத்திய அரசுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்வேன். நாட்டின் பாதுகாப்பு, வெளி நாட்டுத் தொடர்பு, உள் நாட்டுத் தொடர்பு, கான்சி ஆகியவற்றை மட்டும் மத்திய அரசு வைத்துக்கொண்டு, மற்றவற்றை மாநிலங்களுக்கு விட்டுவிட்டால், நாம் நுழைவு வரி போட வேண்டிய வாய்ப்பு ஏற்பட்டிருக்காது.



மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். எப்படி எப்படி வரி போட்டார்கள் என்று சொன்னார்கள். முதலிலே துணி (டெக்ஸ் டைல்), சர்க்கரை (ஷுகர்), புகையிலை (டுபாகோ) இவைகளை எல்லாம் மத்திய அரசு எடுத்துக் கொண்டது. அதிலே எக்சைஸ் டியூட்டியிலே பங்கு கொடுக்க வேண்டும். பேசிக் எக்சைஸ் டியூட்டி, ஸ்பெஷல் எக்சைஸ் டியூட்டி, அடிஷனல் டியூட்டி என்பதில் 2 : 1 என்ற விகிதத்தில் நமக்குக் கொடுக்க வேண்டும். அதாவது. வருவதில் 2 மடங்கு அவர்களுக்கு, 1 மடங்கு நமக்கு என்று கொடுக்க வேண்டும். அப்படி இல்லை. நமக்கு 100 பங்கு வர வேண்டுமென்றால், அதில் 10.8 தான் வருகிறது. இன்றைக்கு டெக்ஸ்டைலைப் பொறுத்தவரைக்கும், 2 : 1 என்ற முறையில் நமக்குத் தர வேண்டும். 2 : 1 என்ற முறையில் தராமல், 10 : 1 என்ற முறையில் கொடுக்கிறார்கள். நமக்கு 2 : 1 என்று தர வேண்டும், ஆனால் 10 : 1 என்று தருகிறார்கள். பத்து மடங்கு தருவதற்குப் பதிலாக ஒரு மடங்கு தருகிறார்கள். அதனால் தான் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல டுபாகோவில் 2 : 1 என்பதற்கு பதிலாக 3 : 1 என்று தருகிறார்கள். அதனால் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு விட்டுவிடவில்லை. வனஸ்பதி, மருந்துப் பொருள்கள், சிமெண்ட், காகிதம், பெட்ரோலியம் ஆகியவற்றில் சென்ற ஆண்டு 136 கோடி ரூபாய் நமக்கு வந்திருக்கிறது. அதிலேகூட எடுத்துக்கொள்ள முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு அதை ஏற்காது. இதற்கு முன்னாலேயே பல எதிர்ப்புகளைத் தெரிவித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவரவர்களே, 136 கோடி ரூபாய் வந்திருக்கிறது. இருந்தும் 20 கோடி ரூபாய்க்குப் புதிதாக வரி போடுகிறார்களே.

மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நான் முதலிலேயே சொன்னேன். சத்துணவுத் திட்டம் மாத்திரமல்ல, 17,000 நியாய விலைக் கடைகளால் ஒவ்வொரு ஆண்டும் செலவு அதிகரித்து வருகிறது. 30 கோடி ரூபாயாக இருந்தது, சென்ற ஆண்டு 60 கோடியாகி, இந்த ஆண்டு 90 கோடி ரூபாய் அளவுக்கு உதவிப் பணம் தர வேண்டியிருக்கிறது. எனவே 150 கோடி ரூபாய் வந்தாலும், செலவினங்கள் அதிகமாகியிருக்கின்றன. இன்றைக்கு சென்னைக்குக் கிருஷ்ணா தண்ணீர் கொண்டுவர 436 கோடி ரூபாய் பணம் தேவைப்படுகிறது; ஒவ்வொரு ஆண்டும் 60 கோடி ரூபாய் தேவைப் படுகிறது என்று தெரிவிக்கும்போது, அதை எல்லாம் பார்த்தால், நுழைவு வரி எவ்வளவு அத்தியாவசியம் என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும்.

THIRU J. M. MIAKHAN: Our Hon. Minister is saying that expenditure has increased on very many items. By the introduction of this tax, the collection of sales tax will be affected. Will not the collection of sales tax be affected because of the introduction of this Entry Tax? Our Hon. Minister has not explained that.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நுழைவு வரி பற்றிச் சொல்லும்போது சொல்கிறேன். அரசுக்கு இருக்கிற சங்கடங்களை முதலில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ரெயில்வே பாசஞ்சர் பேர் ப்ரெயிட் ஆக்ட், 1957 என்று இருக்கிறது. அப்போது இந்த அரசுக்கு 1 கோடி ரூபாய் கொடுத்தார்கள். ஆனால் இன்றைக்கு தொடர்ந்து 1 கோடி ரூபாய்தான் கொடுக்கிறார்கள். இந்த வரி போடும்போது, 1961-62 ல் ஒரு கிலோ மீட்டருக்கு எவ்வளவு சார்ஜ் இருந்தது என்றால் 2 பைசா என்றுதான் இருந்தது. 1976-77 ல் அது 4 பைசாவாயிற்று. 1982-83 ல் எவ்வளவு இருக்கிறது என்று பாருங்கள். 100 மடங்கு உயர்ந்திருக்கிறது. இப்போதும் 1 கோடி ரூபாய்தான் கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சொல்ல வேண்டுமென்றால் ஆகாய விமானம், கடல் மார்க்கம் அல்லது ரயில் மூலமாக வருகிற பிரயாணிகள் அல்லது சாமான்கள். இவைகளுக்கு வரி போட்டு கொடுக்க வேண்டியிருக்கிறது. அவற்றை மத்திய அரசுக்குக் கொடுப்பதால், நமக்கு எவ்வளவு சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படி பல சங்கடங்கள் இருப்பதால்தான் இந்த மாதிரி வரியைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது, பல்வேறு விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்றை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு இடத்திலே இந்த வரி போட்டுவிட்டால், வேறொரு இடத்தில் வரி நிச்சயமாக வராது. எப்படி என்றால், வியாபாரிகள் வைத்திருக்கும் கணக்கை வைத்துக்கொண்டு, அதிலிருந்துதான் வரியை வசூலிக்கிறோமே தவிர, வேறு முறையில் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நுழைவு வரி என்பது இந்திய உப கண்டத்தில் இருக்கிறது என்பது உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்கு இந்த வரியைப் போடுவதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே இவ்வளவு வரி என்று விதிக்காமல் ஏன் not more than two percent போட்டிருக்கிறது என்று கேட்டிருக்கிறார்கள். இதற்கு முன் வேறு எதிலாவது இந்த முறையை எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா என்றும் கேட்டார்கள். சில நாட்களுக்கு முன்பு விளம்பர ஸ்லைட்கள், சுருள்கள் ஆகியவற்றுக்கு விளம்பர வரி என்னும்போது,

Not exceeding 65 paise for slides, not exceeding Rs. 1.50 for films என்று போட்டு, அதை நிறைவேற்றி இருக்கிறோம் என்பது உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும்

THIRU A. R. DAMODARAN: We wanted the Hon. Minister to quote good precedents by his predecessors and not bad precedents by himself. The tax quoted by him was also brought by him alone.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அது நல்ல உதாரணமா, கெட்ட உதாரணமா என்பது எடுத்துக்கொள்கிறவர்களைப் பொறுத்து இருக்கிறது.

அதுமட்டுமல்ல. உச்ச நீதி மன்றத்திலே, உயர்நீதி மன்றத்திலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், எல்லா இடங்களுக்கும் ஒரே மாதிரியாக வரி போடக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். நீதிபதிகள் திரு. சந்திரசூட் அவர்களும். திரு. தேசாய் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். சேரா

மாநிலம் இப்படி வரி போட்டு, அது உச்சநீதி மன்றத்திற்குப் போய், செல்லுமா செல்லாதா என்ற நிலை வந்து, செல்லும் என்று சொல்லியதுடன், எல்லா இடங்களுக்கும் ஒரே விதமாகப் போட முடியாது என்று சொன்னார்கள். பெங்களூருக்கும் ஒரே வரி, அதற்குப் பக்கத்தில் உள்ள ஊருக்கும் ஒரே மாதிரி வரி என்று போடக்கூடாது. சென்னைக்கு, மதுரைக்கு, திண்டுக் கல்லுக்கு எல்லாவற்றுக்கும் ஒரே மாதிரி வரி என்று போட முடியாது. அந்தந்த இடத்திற்கு ஏற்றாற்போல, அந்தந்த இடத்திலுள்ள வியாபாரம், ஜனத்தொகை ஆகியவற்றுக்கு ஏற்றாற்போல வரியை மாற்ற வேண்டுமென்று

(நண்பகல் 12—00)

உச்சநீதி மன்றம் சொல்லியிருக்கிறது. உச்ச நீதிமன்றத்திலுடைய தீர்ப்பின் அடிப்படையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் கடுமையான நெருக்கடியிலும் கூட மதிய உணவுத் திட்டத்தை நல்ல முறையில் நடை முறைப்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் மாண்புமிகு உறுப் பினர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். எங்கெங்கெல்லாம் சங்கடங்கள் இருக்கின்றனவோ அந்தச் சங்கடங்களை எல்லாம் இந்த அரசும் உணர்ந்து இருக்கிறது. அதுபோல் இந்தச் சட்ட முன்வடிவிலே என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்று வியாபாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் இதை நடைமுறைப்படுத்தும்போது, வியாபாரிகளுக்கும் பொது மக்களுக்கும் சங்கடம் ஏதாவது வருவதாக அரசு கருதினால், அவசியம் அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படும். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் போன்றவர் களுடைய கருத்துக்களைக் கேட்டு, இந்த அரசு சங்கடங்களைப் போக்கும் என்று சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டு, அமர்கிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த நுழைவு வரி போடப்படுவதற்கான காரணங்களைப்பற்றி பல் வேறு கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். நான் ஒரு பிரச்சினை குறித்து அவர்களிடமிருந்து பதில் அறிய விரும்புகிறேன். ஏதோ உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையிலே இதைக் கொண்டு வந்திருப்பதாக இங்கே சொன்னார்கள், ஆனால் ஸ்டீல் ரோலிங் மில்லைப் பொறுத்தவரையில், சேல்ஸ் டாக்ஸை நான்கு சதவிகிதம் உயர்த்தி விட்டார்கள் என்று சொல்லி,



திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், அதை எதிர்த்து உச்ச நீதி மன்றத்திற்குச் சென்றபோது, அரசு அதை எதிர்த்து அரசு போட்டதுதான் நியாயம் என்று வாதாடி, அந்த அடிப்படையில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையும் பெற்ற பிறகு, இந்த ஆட்சியிலே அந்த வரியை அறவே நீக்கி நுழைவு வரி என்கிற புதிய வரியை விதித்திருக்கும் நிலையில் அந்த வரி அறவே இல்லை என்று நீக்கியிருப்பதன் மர்மம் என்ன என்று நான் அறிய விரும்புகிறேன்.

இதனால் ஆண்டு ஒன்றுக்கு ஐந்து கோடியிலிருந்து ஆறு கோடி ரூபாய் வரை இந்த அரசுக்கு வர வேண்டிய வருவாயை இழந்திருக்கிறது இந்த அரசு. இதைப்பற்றி ஏன் ஆலோசனை செய்யவில்லை? புதிதாக பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய வகையிலே நுழைவு வரி விதிக்கப்படு வதன் மர்மம் தான் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பொதுமக்களுக்கு பாதிப்பு என்பது அவரவர்களுடைய கண்ணோட்டத்திலே பார்ப்பதிலே இருக்கிறது. பொது மக்கள் என்பவர்கள் யார் என்று முதலில் அறிய வேண்டும். மாண்பு மிகு உறுப்பினர் திரு. ஆறுமுகமும், நானும் பொதுமக்களுடைய அங்கங்கள் தான். அதுபோல் நுழைவு வரியைச் செலுத்துகிறவர்களும் பொதுமக்கள் தான். மொத்தம் 63 ஸ்டீல் ரோலிங் மில்ஸ் இருக்கின்றன. இந்த மில்களில் வேலை செய்கிற ஏறத்தாழ 12 ஆயிரம் தொழிலாளர்களும் கூட பொதுமக்கள் தான். இதுபற்றி நான் ஏற்கெனவே பல சந்தர்ப்பங்களில் சொல்லி யிருக்கிறேன். திரும்பவும் கேட்கிறார்கள். அரசுக்கு வர வேண்டிய வரிகளை அரசு இழக்க என்றைக்குமே தயாராக இல்லை. சிறு துளி பெரு வெள்ளம் என்பதுபோல சிறுகச் சிறுக, கொஞ்சம் கொஞ்சமாக வந்தாலும், நாம் வாங்கி அரசு வருவாயை அந்த வகையில் பெருக்கிக்கொள்ளலாம். அதே நேரத்தில் வரிகளை நாம் போட்டு, வசூலிக்கிற நிலை வருகிறபோது சங்கடம் வருகின்றது என்று யாராவது முறையிடுகின்ற நிலை வருகிறபோது, ஒரு ஜனநாயக அரசு என்கிற முறையில் நாம் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டிய கடமை இருக்கிறது. ஏதோ வந்து கேட்டார்கள் சரி போ என்று யாருக்கும் நாங்கள் கொடுத்துவிடவில்லை. அவர்களுக்கு இருக்கிற பல்வேறு சங்கடங்களைச் சொன்னார்கள். மற்ற மாநிலங்களில் இருக்கிற நிலைமைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். மற்ற மாநிலங் களில் எப்படி வரி போடுகிறார்கள், நம்முடைய மாநிலத்தில் என்ன

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 ஏப்ரல் 28

நிலைமை என்பதையெல்லாம் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆந்திராவில் 1976 முதல் வரி போடவில்லை. கர்நாடகாவில் 1977 ஆம் ஆண்டிலிருந்து 1979 ஆம் ஆண்டு வரையிலும் டீஜ(விலக்கு) உற்பத்திக்கு வரி விலக்கு அளித்திருக்கிறார்கள். அதுபோல் 1980 ஆம் ஆண்டிலிருந்து சிறிய உருக்கு உற்பத்தி சாலைகளுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு வரி இல்லை. மகாராஷ்டிராவில் வரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இப்படி பல மாநிலங்களில் எல்லாம் இதற்கு முன்னாலே வரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இரும்பை உருக்கி எஃகு ஆக்கி எங்கே வேண்டுமானாலும் கொண்டு போகலாம். ஆனால் அப்படிக் கொண்டு போகிற நிலையில் நம்முடைய மாநிலத்தில் மட்டும் இரு முறை வரி போடப்பட்டது. அதை எதிர்த்துத்தான் அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருந்தார்கள். அந்த இடைக்காலத்தில் அந்த வரியை வசூல் செய்யவில்லை. ஆனால் திரும்பி வரியை வாங்குகிறபோது, முதலில் மூலப் பொருள்களுக்கு அவர்கள் வரியைச் செலுத்தியிருக்கிறார்களா என்பதை அரசு பார்த்தது. அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு போர்ட் ஆப் ரெவின்யூவை எடுத்துக்கொண்டால், அதிலே யார் யார் இருக்கிறார்கள் என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். புல் போர்ட்-ல் தலைமைச் செயலாளருக்கு ஈக்வலாக சீனியர் ஐ.எ.எஸ். ஆபிசர் ஒருவர் இருக்கிறார், அவர்கள் தான் இந்த 63 ஸ்டீல் ரோலிங் மில்லைப் பொறுத்த மட்டில், சிபாரிசு செய்து, அரசு அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அதுவும் போதாது என்று சொல்லி, டாஸ்க் போர்ஸ் என்கிற குழுவைப் போட்டு அந்தக் குழுவும் இதுபற்றிச் சிபாரிசு செய்திருக்கிறது. இவ்வளவு பேர்களும் சிபாரிசு செய்ததற்குப் பின்னாலேதான் அரசு இதனைத் தள்ளிக் கொடுத்தது. அந்த மில்கள் எங்கே இருக்க வேண்டும் என்று சொன்னால், தமிழ் நாட்டிலே இருக்க வேண்டும். அவரவர்கள் வாங்குகிற பொருள்களை தமிழ் நாட்டிலே வாங்கியிருக்க வேண்டும். ஒரு முறை நான்கு சதவிகித வரியை அவர்கள் அதற்குக் கொடுத்திருக்க வேண்டும். அப்படி ஒருமுறை நான்கு சதவிகிதம் வரி கொடுத்திருந்தால் அப்படிப்பட்டவர்களுக்கு மட்டுமே இந்த வரி விலக்கு என்பது பொருந்தும். அப்படி வரி விலக்கு கொடுத்தபோதுகூட, சில கண்டிஷன்களையும் போட்டிருக்கிறோம். நான்கு பர்சென்ட் வரி கட்டாயம் கொடுத்திருக்க வேண்டும். மேலும் அவர்கள் பேலன்ஸ் ஷீட்டில் இன்கம்டாக்ஸ் கொடுத்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். இவ்வளவையும் அவர்கள் நிறைவேற்றும் அளவுக்கு வந்த பிறகுதான், வரி விலக்கு அளித்திருக்கிறோம்.



1983 ஏப்ரல் 28]

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய வேலைப் பளுவைக் குறைக்கும் எண்ணத்தில் ஒரு கருத்தைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அமைச்சரை முடிக்கவிட வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** முதலமைச்சர் அவர்கள்கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். இதை ஏன் நாங்கள் வலியுறுத்துகிறோம் என்றால் என்று சொல்லிவிட்டு முதலமைச்சர் குறிப்பிட்ட கருத்தை இங்கே நான் சொல்கிறேன். "சில பத்திரிகைகளில் கூட்டு பேரம் பேசுகிறார்கள் என்று செய்தியை வெளியிடுகிறார்கள். ஆகவே இதை எல்லாம் பார்க்க வேண்டியிருக்கிறது" என்று சொன்னார்கள். அதைப் போலவே இப்போது பிளன்டிங் அன்ட் பாட்டிலிங்கைப் பொறுத்தவரையில் . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** முதலமைச்சர் அப்படிச் சொல்லவேயில்லை. இப்படி பத்திரிகையில் எழுதி ஆரோக்கியமற்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அப்படி ஒரு கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்கள். அதைப்போலவேதான் . . .

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அப்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை ஒரு முன்னெச்சரிக்கை காரணமாக சொன்னதாக ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது? நாட்டிலே நிலைமை என்ன? எப்படி எப்படி எல்லாம் பிரச்சாரம் செய்கிறார்கள் என்பதை ஒரு விளக்கத்திற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருமையான ஒரு கருத்தைச் சொன்னார்கள். இப்படிப்பட்ட கருத்து பத்திரிகைகளில் உலாவி விட்ட நேரத்தில் கூட, சம்பந்தப்பட்ட வியாபாரிகள் ஒருவருமே மறுதலிக்கவில்லையே என்பது தான் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கருத்தினுடைய நோக்கம்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** பத்திரிகையில் வந்த செய்தி என்பதல்ல. இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்தை வெளியிட்டார்கள். ஆனால் சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர்

அவர்கள் பேரவையிலேயும், வெளியிலேயும் இதுபற்றிக் குறிப்பிட்டுப் பேசுகிற போது 'நுழைவு வரியா ? குழைவு வரியா ?' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்த விஷயம் குறித்து ஏற்கெனவே பேசியாகிவிட்டது. அதுதவிர உறுப்பினர்களும் விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துக்களைச் சொல்லி முடித்துவிட்டார்கள். அமைச்சர் அவர்களும் பதில் உரை ஆற்றி முடித்து விட்டார்கள். இந்நிலையில் ஏதோ ஒருவர் கேட்டார் என்பதால், சரி என்று அனுமதித்தேன். அதைப் பயன்படுத்தி ஒவ்வொருவராக எழுந்து அதையே விவாதமாக்கிக் கொண்டிருப்பதை நான் கண்டிப்பாக அனுமதிக்க முடியாது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மதுவிலக்கைத் தளர்த்தியதற்குப் பிறகு திரும்பத் திரும்ப இந்த அவையிலேயும், பேரவையிலேயும், வெளியிலேயும் மதுவிலக்கைப் பொறுத்தவரையில், பிளன்டிங் அன்ட் பாட்டிலிங் மற்றும் ஐ.எம்.எப்.எல். போன்றவை செய்கின்ற மது சம்பந்தப்பட்ட பணிகளை தனியாருக்கு அரசு கொடுக்கக் கூடாது, அரசே ஏற்று நடத்த வேண்டும் அல்லது கூட்டுறவு அமைப்புகளின் மூலம் நடத்த வேண்டும், அப்படி நடத்தினால் அரசுக்கு 50 கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் வரும் என்கிற கருத்தை வலியுறுத்திச் சொல்லிக்கொண்டு வருகிறோம். ஆனால் அரசு திட்டவட்டமாக இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. அப்படி என்றால் நுழைவு வரி மூலம் வருகின்ற இந்த வருமானமும் அரசுக்குத் தேவை இல்லை என்றுதான் பொருள். அந்த வகையில் எங்கள் கருத்தை ஏன் பரிசீலனை செய்யக் கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** சன்னியாசி 'நான் கல்யாணம் பண்ணி குடும்பத்தோடு வாழ்ந்தால் நன்றாக இருக்கும்' என்று நினைப்பான். கல்யாணமாகி குடும்பத்தோடு வாழ்பவன் 'சன்னியாசியாக வாழ வேண்டும்' என்று நினைப்பான். ஆக, நாட்டிலே சன்னியாசமும் விரும்பப்படுகிறது, சம்சாரி வாழ்க்கையும் விரும்பப்படுகிறது. (சிரிப்பு) அதுபோல்தான் மாண்புமிகு உறுப்பினர் கருத்தும் இருக்கிறது.

**திரு. சோ. ஆறுமுகம் :** அமைச்சர் என்ன வாழ்க்கையைப் பற்றி கருது கிறார் ?



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** நான் உங்களைப் பற்றியும் பொதுமக்களைப் பற்றியும் மட்டும் தான் கவலைப்படுகிறேன். (சிரிப்பு)

(பிற்பகல் 12-10)

**திரு. சோ. ஆறுமுகம் :** எங்களைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் கவலைப் பட வேண்டாம். அவர்களைப்பற்றி நாட்டு மக்கள் தெரிந்து கொண்டிருக் கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அதைக் கோபமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. விளையாட்டாகச் சொன்னேன். அமைச்சர் என்ற பொறுப்பில் இருந்துகொண்டு, 'நீங்கள்' என்று சொல்வது மக்களைக் குறிக்கும். எல்லோரையும்தான் சொன்னேன். அதேபோல்தான், எப்படி குடும்பத்தை நடத்துகிறவர்கள் சன்னியாசியாகி விடவேண்டும் என்று நினைப்பதும், சன்னியாசியாக இருப்பவர் இரவில் குடும்பத்தைப்பற்றி நினைப்பதும் இருக்கிறதோ, அதைப்போல, தொழிலை நடத்துகிறவர்கள் நஷ்டம், நஷ்டம் என்று சொல்கிறார்கள், தொழிலை நடத்தாதவர்கள் லாபம் வரும் என்று சொல்கிறார்கள். ஆக இரண்டு பேரையும் வைத்துத்தான் பார்க்க வேண்டும் எவ்வளவு லாபம், நஷ்டம் என்று, நடத்திப்பார்த்தால்தான் தெரியும்.

இதற்கு முன்பு மதுவிலக்கை ரத்து செய்யும்போது, அரசுக்கு எல்லா வழிகளிலும், எல்லா முறையிலும், எல்லாத் துறையிலும் எவ்வளவு வந்ததோ அதைவிட பலமடங்கு இன்றைக்கு வந்திருக்கிறது என்பதையும் முதலிலே ஒரே ஒரு இடத்தில் இருந்ததை இப்போது decentralise செய்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர் கூட 30 கோடி, 40 கோடி என்று சொல்கிறார்கள். அப்போது எவ்வளவு வந்தது என்று தெரியாது. ஆனால் இன்றைக்கு என்னவென்றால் இதை நடத்துவதில் லாபம் வரலாம். எந்தத் தொழிலிலும் லாபம் இல்லாமல் இருக்காது. இருக்கிற தொழில்களை அரசு ஏற்றுக் கொள்வதைவிட, அது லாபகரமாக நடக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஆகவே உறுப்பினர்கள் சொன்னதை அரசு யோசிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெளிவாகச் சொல்ல விரும்புவது, இந்தத் தொழிலைப் போல கொள்ளை லாபம் வரக்கூடிய தொழில் இந்தியாவிலேயே எதுவும் இல்லை. இரண்டாவது, இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் அரசு எடுத்துக்

கொண்டால், நிச்சயமாக ரூ. 50 கோடி லாபம் வரும். அப்படி ஒரு ஆண்டு எடுத்துப் பாருங்கள். அப்படி லாபம் வராவிட்டால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள், அதை ஏற்றுக் கொள்கிறோம். ஆகவேதான் திரும்பத் திரும்பச் சொல்வதற்குக் காரணம், சில பேருக்குக் கொஞ்ச லாபம் அல்ல, விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுக்கு சிலர், பல கோடி லாபத்தைக் கொள்ளையடிக்கிறார்கள். அதை ஏன் அரசு எடுத்து நடத்தக் கூடாது என்றுதான் மீண்டும் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அதிலே அதிகமாக லாபம் வருகிறது என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். அதிக லாபம் வருகிற தொழிலை நீங்கள் ஆட்சியில் இருக்கும்போது ஏன் 4, 5 ஆண்டு விட்டு வைத்தீர்கள் என்று தெரியவில்லை. (குறுக்கீடுகள்) லாபம் அதிகமாக வருகிற தொழில் என்றால், அதை எடுத்துக் கொள்வது பற்றி அரசு கவனிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதற்கு முன்பு, நீங்கள் ஏன் எடுத்துக் கொள்ளவில்லை என்று கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு மட்டும் ஏன் இந்த ஞானோதயம் ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் ஆண்டு வருமானமே 500 கோடி ரூபாய்தான். இப்போது 1500 முதல் 2000 கோடி ரூபாய் வரை வருமானம் வருகிறது. இரண்டாவது தி.மு.க. ஆட்சியில் இப்படி 'மிடில்மேன்' கிடையாது. பிளெண்டிங், பாட்டிலிங் உரிமை தனியாக யாருக்கும் கொடுக்கவில்லை. எங்கே டிஸ்டிலரி இருக்கிறதோ அங்கிருந்து நேரடியாக வினியோகிக்கப்பட்டு வந்ததே தவிர, அங்கு 'மிடில்மேன்' இல்லை. ஆனால் இங்கே 'மிடில்மேன்' என்று சொல்லப்படுபவர்களுக்கு லைசென்ஸ் கொடுத்து, அவர்களிடத்தில் ஏதேதோ செய்து கொண்டு. . .

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** டிஸ்டிலரி யூனிட் கூட தனியார் தான். நீங்கள் தனியாருக்குத்தான் கொடுத்தீர்கள். தனியார் இல்லையென்று சொல்வது தவறான வாதம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** டிஸ்டிலரி என்பது தனியாரிடம் இருந்தது. (குறுக்கீடுகள்) அதிலிருந்து பிளெண்டிங் மற்றும் பாட்டிலிங் செய்திருப்பது . . .

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** அப்போதே கூட்டுறவுத் துறையில் நடத்தியிருக்கலாம். ஆனால் தனியாரிடம்தான் கொடுத்தீர்கள்.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அதைத்தான் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பிளெண்டிங், பாட்டிலிங் என்பது கிடையாது. ஐ.எம்.எப்.எல், ஹோல்சேல் கிடையாது, ஹோல்சேல் ஏஜென்சி கிடையாது. நீங்கள் வைத்திருக்கிற முறைகள் தி.மு.க. ஆட்சியில் நிச்சயமாகக் கிடையாது. அதற்கான ரிக்கார்டுகள் அரசாங்கத்தில் இருக்கும். எடுத்துப் பாருங்கள். 100 மில்லி சாராயம் உற்பத்தி 1 ரூபாய்தான். இப்போது 2 ரூபாய். இடையில் அந்த ஒரு ரூபாய் யார் யாருக்குப் போகிறது ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** நாங்கள் 4, 5 கட்டங்களில் பிரித்து வைத்திருக்கிறோம். நீங்கள் ஒரே ஒரு கட்டத்தில் வைத்து எல்லாவற்றையும் செய்தீர்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் சொல்வது இவைகளை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான். தனியார் மூலம் கொடுங்கள் என்று சொல்லவில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் என்று போட்டு, தனியாக ஒரு ரிஜிஸ்டிராரை நியமித்து, ஐ.எம்.எப்.எல்., பிளெண்டிங் யூனிட், ஹோல்சேல் என்று இவைகளைக் கொடுத்தால், நிச்சயமாக அரசுக்கு 50 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும். அப்போது இந்த மாதிரி வரி போடவேண்டிய தேவையே இருக்காது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கூட்டுறவுச் சங்கம் என்றால், குடிகாரர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சங்கம் என்று வைத்துக் கொள்வது என்பதா ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அமைச்சர் தெரியாதது மாதிரி பேசுகிறார். இப்போது கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஐ.எம்.எப்.எல். பாட்டில்களான பிராந்தி, விஸ்கி போன்றவைகளை வியாபாரம் செய்து வருகிறார்கள். அது வேறு விவகாரம். ஆனாலும் கூட கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இப்படிப்பட்ட வியாபாரத்தை எடுத்துக்கொண்டால், நிச்சயமாக ரூ. 50 கோடி வருமானம் வரும் என்பதுதான் என்னுடைய வாதம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இதற்கு ஒரு முடிவே நிச்சயமாக வராது. ஆனாலும் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் முதலில் சொன்னபடி, தனியார்தான் முதலில் இருந்தார்கள். அப்போது 2, 3 பேர் இருந்தார்கள். இன்றைக்கு அந்தக் கடைகளை பரவலாக்கி, பிளெண்டிங் யூனிட்டுக்கு 10, ஹோல்சேல் அரக்கு . . .

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 ஏப்ரல் 28

என்றால் 16 பேர், ஹோல்சேல் ஐ.எம்.எப்.எல். என்றால் 15 பேர். ஆக 42 பேருக்குத் தந்திருக்கிறார்கள். அன்றைக்கும் தனியார்தான், இன்றைக்கும் தனியார்தான். இந்தமாதிரி எல்லாம் வர வேண்டுமென்று எதிர்க் கட்சியில் உள்ள உறுப்பினர் அவர்கள் யோசனை சொல்ல உரிமையிருக்கிறது. யோசனை இப்போது சொல்கிறார்கள். அப்போது அவர்கள் கையில் ஆட்சி இருந்த போது அதுமாதிரி நடக்கவில்லை. நடத்தத் தவறிவிட்டார்கள். அதனால் பாதகம் இல்லை. அரசு எதையெடுத்து நடத்த வேண்டுமென்று யோசிக்கிறதோ அப்போது, எந்தெந்த வகையில் லாபம் வரும், எந்தெந்த வகைகளில் சங்கடம் வராது என்று யோசித்து, முடியுமா என்று அரசு யோசிக்கும் என்று தெரிவித்து, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை அவையில் முடிவுக்கு விடுவதற்கு முன்பு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை இந்தத் தீர்மானத்தின் மீது மக்களுடைய கருத்தை அறிவதற்கு விழைகிறார்களா அல்லது இங்கேயே இப்போதே நிறை வேற்ற வேண்டுமென்று கருதுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** விவாதம் முடிந்து விட்டது. இனிமேல் ஏது விவாதம்?

**திரு. ம. சங்கரலிங்கம்:** தீர்மானத்தை அவையில் வற்புறுத்தினால், மக்கள் மீது பெரிய பளுவைச் சுமத்துவதாகும். அதனாலும். விரும்பத்தகாத வரியாக இது இருப்பதாலும், இப்போது தமிழ்நாடு இருக்கிற சூழ்நிலையில் இந்த வரிவிதிப்பு தமிழக மக்களுக்குச் துரோகம் செய்வது என்பதாலும், அதைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்பு செய்கிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையை விட்டு வெளியேறினார்கள்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு, உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்தலுக்காக விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள் மீது நுழைவு வரி விதிக்கும் சட்ட



1983 ஏப்ரல் 28] [மேலவைத் தலைவர்]

முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1983) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்”.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2.

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following recommendation:

“In sub-clause (g), omit items IV and V”.

THIRU K. RAMAMOORTHY: Sir, I second it.

THIRU A. R. DAMODARAN: Sir, let me state my point very briefly. Items IV and V relate to Municipalities, Townships and Panchayats. Originally, when the introduction of this tax was announced in the Budget Speech, there was no intention to extend it to every Panchayat as defined in the Tamil Nadu Panchayats Act. I do not know why the Panchayats, etc., have been mentioned in this Bill. Even if the Government have to introduce this tax, it should be introduced on a sample basis only in certain Corporation areas. Therefore, I move that the reference to Municipalities, Townships and Panchayats may be deleted from the Definition clause.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய பரிந்துரையை வலியுறுத்துகிறாரா? திரும்பப் பெறுகிறாரா?

THIRU A. R. DAMODARAN: Sir, I press it.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

“In sub-clause (g), omit items IV and V”.

பரிந்துரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 3.

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following recommendation:

“For sub-clause (1), substitute the following:

(i) There shall be levied and collected a tax on the entry into such area or areas as specified in schedule I, on the scheduled goods noted in Schedule II for use, consumption or sale in the areas specified. The rate of tax shall be .0001 per cent *ad valorem*”.

THIRU K. RAMAMOORTHY: Sir, I second it.

THIRU A. R. DAMODARAN: Sir, I think it is obvious because this is a Money Bill. I cannot say that the Money Bill should be revoked. So, I am reducing the rate to the point of absurdity where it will be .0001 per cent. I hope the Hon. Minister will accept it.

(பிற்பகல் 12-20)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே 'ஐந்து சதவிகிதத்திற்குக் குறைவில்லாமல்' என்றிருந்ததை மாற்றி "இரண்டு சதவீதத்திற்குக் குறைவில்லாமல்" என்று கொண்டு வந்திருக்கிறோம். நிதிநிலை அறிக்கையின்போதே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்கூட "இரண்டு சதவீதத்திற்கு அதிகமாகப் போகாமல்" என்றுதான் குறிப்பிட்டார்கள். விளம்பரச் சட்டத்தில்கூட ஐந்து சதவீதத்திற்குக் குறையாமல் என்றுதான் சொல்லி அப்படியே கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, அரசாங்கம் 'பவரை' எடுத்துக் கொள்கிறது என்று குறிப்பிட்டார். எல்லோரும் விரும்பிய காரணத்திற்காக "ஐந்து சதவீதத்திற்குக் குறையாமல்" என்றிருந்ததை மாற்றி "இரண்டு சதவீதத்திற்குக் குறையாமல்" என்று சொல்லுகிற அளவுக்கு அரசாங்கத்தின் அதிகாரத்தையே நாங்கள் குறைத்துக் கொண்டிருக்கிறோம். அதுவும் பெருந்தன்மையோடு இந்த அரசு குறைத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, இதை .0001 சதவிகிதம் என்று குறைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதற்காகத்தான் நான் ஆரம்பத்திலேயே அவரை உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பைப் படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். படித்துவிட்டு வந்தால், இதன் நியாயத்தை உணருவார் என்று எதிர்பார்த்துத் தான் படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். எனவே எல்லாப் பொருள்களுக்கும் .0001 சதவிகிதம் என்று போட முடியாது. 'It is' nonsense என்ற வார்த்தையையே உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். பெங்களூருக்கு ஒரு வரி, சாதாரண நகரங்களுக்கு ஒரு வரி என்று எப்படி போடுவது? பாப்புலேஷன் பேசிஸ் மற்றும் மக்கள் வாழ்க்கைத் தரம் அனைவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று உச்ச நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அதற்கு ஏற்பதான் நாம் இரண்டு சதவீதம் என்று கொண்டு வந்திருக்கிறோம். தமிழ் நாட்டில் எல்லா இடங்களுக்கும் இரண்டு



சதவீதம் இல்லை. எங்கேயும் இரண்டு சதவீதத்திற்கு மேலே போட முடியாது, எந்தப் பொருளுக்கும் போட முடியாது. சில பொருள்களுக்கு சில இடங்களில் இரண்டு சதவிகிதத்திற்கும் குறைவாக இருந்தாலும் இருக்கும். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அப்படி. இதற்குப் பிறகு இன்னொரு வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குப் போய் அங்கே மாறுபட்ட ஒரு கருத்து சொல்லப் படுகிற வரை இதுதான் சட்டப்படி செல்லும். அந்த வகையில்தான் அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது.

THIRU A. R. DAMODARAN: Only one clarification. Sir. The Hon. Minister should not forget my previous recommendation where I have said that the Entry Tax will be restricted to the Corporations of Madurai, Madras and Coimbatore. The Hon. Minister mentioned about the tax being introduced in Panchayats, Municipalities, etc., But, according to my recommendation, all those Municipalities, Panchayats, etc., disappear from the Bill. So, this tax at .0001 per cent applies only to the three Corporations. Therefore, the Judgment quoted by the Hon. Minister does not apply here. I am sure the Hon. Minister will appreciate this point and accept the recommendation.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் தம் திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா அல்லது வலியுறுத்துகிறாரா?

THIRU A. R. DAMODARAN: Sir, I press it.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"For sub-clause (1). substitute the following:—

There shall be levied and collected a tax on the entry into such area or areas as specified in Schedule I. on the scheduled goods noted in Schedule II for use. consumption or sale in the areas specified. The rate of tax shall be .0001 per cent *ad valorem*.

பரிந்துரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 3.

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following recommendation:

"Omit sub-clause (2) of Clause 3".

"Re-number sub-clause (3) as sub-clause (2) and substitute the following:

'The tax shall be payable by the registered dealer or the dealer liable to get himself registered who sends or causes to be sent into the local area such goods for use, consumption or sale'".

THIRU K. RAMAMOORTHY: I second it.

THIRU A. R. DAMODARAN: Sub-clause (2) relates to levy of different rates in different areas. As I have specifically recommended the tax to be .0001 per cent, this sub-clause has to be removed as a consequential amendment.

As far as sub-clause (3) is concerned this is a point that I have already mentioned. I want the Hon. Minister to note that tax shall be payable by the registered dealer or the dealer who is liable to get himself registered who sends or causes to be sent to the local area such goods for use, consumption or sale. There is a very important difference. The Hon. Minister has put it that the dealer who brings or causes to be brought goods shall pay the tax. I have suggested it to be the dealer who sends or causes to be sent. In other words, I am shifting the burden of tax payment from the cement dealer to the cement factory and from the petroleum dealer to the petroleum installation. This is only to mitigate the hardship. The Hon. Minister would have accepted this point in a Select Committee but in this open House, he is going to say what he has to say.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட பிரிவைப் பொறுத்தவரையில், இது பல புதிய பிரச்சினைகளுக்கு இடம் தருகிறது. பல சங்கடங்களுக்கும் இடமளிக்கிறது. எந்த இடத்தில் வரி வசூலிப்பது என்பதைப் பொறுத்தவரையில், யார் கொண்டு வந்தாலும், கொண்டு வருகிற பொருள்கள் அனைத்திற்கும் வரி விதிப்பு என்று வருகிறபோது, அரசாங்கத்திற்கேகூட சங்கடத்தை உருவாக்குகிற நிலைதான் வருகிறது. அரசாங்கம் கொண்டு வர இருக்கிற பல லட்சக் கணக்கான டன் நிலக்கரி போன்ற மற்ற பொருள்களுக்கும் இந்த வரி விதிப்பு உண்டு என்று சொல்லுகிறபோது, இதன் காரணமாக அரசாங்கத்தின் பட்ஜெட்டேகூட அதிகமாக ஆகிற நிலை உருவாகிறது. இறுதியில் அந்தப் பளு சாதாரண ஏழை எளிய மக்கள் மீதுதான் விழுகிற நிலை ஏற்படும். இதன் மூலமாக



அநேகமாக எல்லாப் பொருள்களுக்கும் வரி வந்துவிடுகிறது. கிருஷ்ணா நதி நீரை ரெயில் மூலம் கொண்டு வருகிற காரணத்தால், ரெயில் பெட்டிகளுக்கு வரியில்லாமல் இருப்பதால் அது தப்பிக்கிறது. இதன் காரணமாக ஊழல்கூட பல நகரங்களுக்கும் பரவலாக்கப்படுகிற நிலைதான் ஏற்படும். எனவே, இதைத் தவிர்க்க இந்தத் திருத்தத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தம் பரிந்துரையை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா?

THIRU A. R. DAMODARAN: Sir, I press my recommendation

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"(ii) Omit sub-clause (2) of clause 3.

(ii) Renumer sub-clause (3) as sub-clause (2) and substitute the following:

"The tax shall be payable by the registered dealer or the dealer liable to get himself registered who sends or causes to be sent into the local area such goods for use, consumption or sale".

பரிந்துரைகள், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றன.

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following recommendation:

"(3) Notwithstanding anything contained in sub-clauses (1)

"(3) Notwithstanding anything contained in sub-clause (1) and (2) tax shall not be payable on raw materials, intermediate goods or components used in the manufacture of any article or finished product which is despatched or sold to any person outside the State of Tamil Nadu'".

"(4) Goods which have suffered Entry Tax in any area in Tamil Nadu shall not be subject to Entry Tax in any other area in the State.".

THIRU K. RAMAMOORTHY: I second it.

THIRU A. R. DAMODARAN: This has a particular reference to the Engineering Industry and other industries in our State and I hope the Hon. Minister will realise that if he does not do that, we will be deprived of those industries which will go outside Tamil Nadu. There are various items which also go into the manufacture and in the interests of the manufacturers and the established industries, I would request him to accept this.

The other point is that goods which have suffered Entry Tax in any area in Tamil Nadu shall not be subject to Entry Tax in any other area in the State.

The Hon. Minister says, "I assure the House", We are passing the Bill and the Hon. Minister cannot merely say "I assure the House". The Hon. Minister should have moved an official amendment to the Bill. He has got the power to issue notifications. Anyhow, I cannot appreciate the flippant fashion in which the Bill is moved and passed. If the Hon Minister is accepting any recommendation, it should be moved as an official amendment to the Bill. I cannot be responsible if there is no time. The Bill has been brought on the last day of the sitting of the House and the Hon. Minister has no time to move any amendment. Even if the Hon. Minister says 'I assure', the assurance of the Hon. Minister is not a part of the Bill. Therefore, when he says that Entry Tax will not be collected more than once, he should indicate in the Bill the procedure by which it will be effected. We should all know the procedure when it is a complicated Bill. I can tell the Hon. Minister that there will be a tremendous amount of harassment. If he has accepted it in principle, I request him to bring in an amendment so that it may be embodied in the Bill. Otherwise, he will have to do it by means of an Ordinance day after tomorrow. At least let him do it.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் சொன்னதை பின்னாலே அவரே மறுத்திருக்கிறார். எப்படியென்றால், அரசுக்கு அளவுக்கு மீறிய அதிகாரங்கள் இருக்கின்றன என்று முதலில் சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு நீங்கள் ஒரு அவசரச் சட்டம் கொண்டுவந்துதான் இதை நிறைவேற்ற வேண்டிய நிலைமை இருக்கும் என்று சொல்லுகிறார். அரசு அதிகாரத்தை எடுத்துக் கொண்டிருப்பது உண்மைதான். ஆனால் எந்த நோட்டிபிகேஷன்



போட்டாலும் அல்லது ரூல்ஸ் போட்டாலும், சட்டசபைக்குத் தெரியாமல் போட முடியாது. நோட்டிபிகேஷன் அல்லது ரூல்ஸ் போடப்பட்டால், அவை அவைக்கு வந்து, அவையின் உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், அது செயல்படுத்தப்பட முடியாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே நன்கு தெரியும். என்ட்ரி டேக்ஸ்படி ஒரு பொருளுக்கு ஒரு இடத்தில் வரி போடப்பட்டுவிட்டால் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடையும் வரை, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 12-30)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** செக்-போஸ்டில் நிறுத்தி அங்கேயே வரி வசூல் செய்துகொள்வோம் என்று எண்ண வேண்டியதில்லை. எல்லா வியாபாரிகளைப் போல இவர்களும் கணக்கை வைத்துக்கொள்ள வேண்டும். அந்தக் கணக்குகளையெல்லாம் உரிய அதிகாரிகளிடத்திலே உரிய நேரத்தில் கொடுக்க வேண்டும். அதை அதிகாரிகள் சரிபார்க்க வேண்டும். அதில் எந்தெந்தப் பொருள்கள் இந்த நுழைவு வரிக்குள் வருகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். எல்லா வியாபாரிகளுக்கும் சங்கடம் இருக்கும் என்று சொன்னார்கள். அவர்கள், எந்தெந்தப் பொருள்களுக்கு நுழைவு வரி உண்டோ அந்தப் பொருள்களுக்கு மட்டும் கணக்கை வைத்துக்கொள்ள வேண்டும். அந்தக் கணக்கைப் பார்த்து அதன்படி வரி போட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் தம்முடைய பரிந்துரையை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா?

**திரு. ஏ. ஆர். தாமோதரன்:** தலைவர் அவர்களே, ஒவ்வொரு பரிந்துரைக்கும் தாங்கள் கேட்க வேண்டியதில்லை. நான் எல்லாவற்றையும் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

In clause 3, add the following sub-clauses (3) and (4):

"(3) Notwithstanding anything contained in sub-clauses (1) and (2) tax shall not be payable on raw-materials, intermediate goods or components used in the manufacture or any article or

finished product which is despatched or sold to any person outside the State of Tamil Nadu".

(4) Goods which have suffered Entry Tax in any area in Tamil Nadu shall not be subject to Entry Tax in any other area in the State."

பரிந்துரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 5.

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following recommendation:

"For sub-clause (5) substitute the following:

'While making any assessment under sub-section (4), the assessing authority may also direct the dealer to pay in addition to the tax assessed a penalty not less than 50 per cent and not exceeding 100 per cent of the amount of tax due that was not wilfully disclosed by the dealer in his return or in the case of failure to submit a return a penalty equal to the amount of tax assessed, as the case may be.' ".

THIRU K. RAMAMOORTHY: Sir, I second it.

THIRU A. R. DAMODARAN: Sir, the Hon. Minister has accepted the Kaiwar Committee recommendation. The Kaiwar Committee made a specific recommendation in so far as the Sales Tax Act is concerned, because there was a lot of doubts about the penalty to be levied. Formerly, when it was specified as 1 1/2 times, every person was levying penalty at over 100 per cent or 120 per cent. So, the Hon. Minister himself brought an amendment to the Sales Tax Act saying that, under section 23 of the Sales Tax Act, the minimum penalty should be 50 per cent and that it should not exceed 150 per cent. In the Entry Tax Bill, because of the hurry in which the Bill has been brought forward, this has not been embodied. Since this is a new tax. I do not want the penalty to be at 150 per cent and I want it to be reduced to 100 per cent. Since this is a part of the Kaiwar Committee recommendations and since the Entry Tax is similar to Sales Tax, I request that my recommendation may be embodied in the Bill.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, விற்பனை வரியில் எப்படி இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். முதலில் விற்பனை வரியில் ஆயிரம் ரூபாய் அபராதம் என்று இருந்தது. ஆனால் வருமான வரிச் சட்டத்திலே, அவர்கள் வேண்டுமென்றே கணக்கைக் கொடுக்காமல் இருந்தால், அல்லது தவறான கணக்கைக் கொடுத்தால், பிறகு அதைக் கண்டுபிடித்தால், அதைப்போல ஒன்றரை மடங்கு அபராதம் என்று இருக்கிறது. வருமான வரிச் சட்டத்திலே உள்ளது தான் விற்பனை வரிச் சட்டத்திலும் கொண்டுவரப்பட்டது. அதை டிரிபியூனல் சரியில்லை என்று சொன்னதற்குப் பிறகு உயர்நீதிமன்றத்திலே ஒரு வழக்கு இருக்கிறது. நம்முடைய விற்பனை வரிச் சட்டத்திலே ஒன்றரை மடங்கு என்று கொண்டு வந்துவிட்டோம். அதைப்போலவே இதைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"For sub-clause (5) substitute the following:

"While making any assessment under sub-section (4), the assessing authority may also direct the dealer to pay in addition to the tax assessed a penalty not less than 50 per cent and not exceeding 100 per cent of the amount of tax due that was not wilfully disclosed by the dealer in his return or in the case of failure to submit a return a penalty equal to the amount of tax assessed, as the case may be".

பரிந்துரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

THIRU J. M. MIAKHAN: Sir, I have been waiting till now because I thought that the Hon. Minister would at least agree to the hon. Member's recmmendation.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இப்போது சொற்பொழிவு ஆற்ற முடியாது. அது முறையாகாது. அதை அனுமதித்தால் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களையும் அனுமதிக்க வேண்டி வரும்.

பிரிவு 6.

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following recommendation:

"(1) In sub-clause (1) for the words "seven days", substitute the words "sixty days".

(2) In sub-clause (2) for the words "one-half", substitute the words "one-sixth".

(3) Add the new sub-clause (4):

"(4) Interest at 15 per cent per annum shall be paid, for security deposits furnished in cash and such interest shall be paid half-yearly. Security depositss may also be furnished in such other manner as may be prescribed".

THIRU K. RAMAMOORTHY: Sir, I second it.

THIRU A. R. DAMODARAN: This sub-clause relates to the security deposit that has to be paid by the dealer as soon as the entry tax area is notified. The Government have given only 7 days' time to make the deposit.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"(1) In sub-clause (1) for the words "seven days" substitute the words "sixty days".

(2) In sub-clause (2) for the words "one-half", substitute the words "one-sixth".

(3) Add the new sub-clause (4);

"(4) Interest at 15 per cent per annum shall be paid, for security deposits furnished in cash and such interest shall be paid half-yearly. Security deposits may also be furnished in such other manner as may be prescribed."

பரிந்துரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 7.

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following recommendation:

"(1) In sub-clause (1) for the words 'Five years' substitute the words 'Two years'.



(2) In sub-clause (2) for the words 'not exceeding one and a half times the tax assessed' substitute the words 'not less than 50 per cent and not exceeding 100 per cent of the tax so assessed".

THIRU K. RAMAMOORTHY: Sir, I second it.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

(i) In sub-clause (1) for the words "Five years" substitute the words "Two years".

(ii) In sub-clause (2) for the words "not exceeding one and a half times the tax assessed" substitute the words "not less than 50 per cent and not exceeding 100 per cent of the tax so assessed"

பரிந்துரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 9.

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following recommendation:

"In sub-clause 2 (ii) (b) for the words 'two and a half per cent' substitute the words 'one and a half per cent' ".

THIRU K. RAMAMOORTHY: Sir, I second it.

THIRU A. R. DAMODARAN: Sir, this refers to the interest that is being charged. Surely I hope the Hon. Minister does not want to be a Shylock and collect interest at 2 1/2 per cent per month, which amounts to 30 per cent per annum. The Hon. Minister has himself brought forth the Debt Relief Act. If the man does not pay the tax within a period of three months, the Hon. Minister is going to charge 2 1/2 per cent for each month subsequent to the third month and is trying to become a veritable Shylock, especially when he has himself brought the Debt Relief Act, and he wants to charge 30 per cent per annum as interest. This is terrible and this is obnoxious. I think even the Hon. Minister is thinking how it was put as 2 1/2 per cent when he wanted it to be only 2 per cent. So, I request that he may reduce it to 1 1/2 per cent.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, முன்பெல்லாம் வங்கிகளில் வட்டி விகிதம் 6¼ சதவீதம், 12 சதவீதம் என்று இருந்தது. இன்றைக்கு வங்கிகளில் 18 சதவீதம், 19 சதவீதம் என்று இருக்கிறது. ஆனால் இதிலே என்ன சங்கடம் என்றால், பேங்கிலே இருந்து

பணத்தை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்றால், நடைமுறைச் செலவு, ஆப்பரேஷன் காஸ்ட் இதெல்லாம் வந்துவிடுகிறது. நடைமுறைச் செலவு, ஆப்பரேஷன் காஸ்ட் ஆகியவற்றை எங்களுக்கு வாங்கித்தராமல் வங்கிக்குக் கொடுக்க வேண்டிய வட்டியை நாம் கொடுத்துவிடுவோம் என்று 19 சதவீதம், 18 சதவீதம் என்று வைத்தால், எங்களுக்கு ஆண்டுக் கணக்கிலே வராது. வங்கியிலே பணத்தை வாங்கிக் கொடுத்துவிட வேண்டும் என்பதற்காகத்தான் இதை வைத்திருக்கிறோம், வேறு ஒன்றுமில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"In sub-clause 2 (ii) (b) for the words "two and a half per cent" substitute the words "one and a half per cent".

பரிந்துரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 14.

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following recommendation:

"Add the following sub-clause"

(7) The appeal shall be disposed of as mentioned in any one of the ways outlined in sub-clause (5) of clause 14 within a period of 60 days from the date of receipt of appeal failing which the order of assessment or any other order shall abate and the return as filed by the person accepted and assessment completed without any of the penal provisions being invoked.'

THIRU K. RAMAMOORTHY: Sir, I second it.

THIRU A. R. DAMODARAN: This is a very simple recommendation, Sir, We are asked to appeal within 30 days. When we appeal, the appeal should be disposed of at least within 60 days. If the Hon. Minister does not want it to be 60 days, I am prepared to accept an amendment as 'ninety days'. But it should not take years for the order on the appeal to come. The Hon. Minister himself has complained that there is too much delay. Since the delay occurs on the part of the Government. I want a specific provision that the time allowed for disposing of an appeal shall not be more than 60 days. Hon. Members on the Treasury Bench, who frequently complain of delays in the High Court, will surely welcome this recommendation.





மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

'Add the following sub-clause:—

'(7) The appeal shall be disposed of as mentioned in any one of the way outlined in sub-clause (5) of clause 14 within a period of 60 days from the date of receipt of appeal failing which the order of assessment or any other order shall abate and the return as filed by the person accepted and assessment completed without any of the penal provisions being invoked.' ".

பரிந்துரை; அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 16.

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following recommendation:—

"(i) In sub-clause (1) omit the words 'in so far as it is prejudicial to the interests of revenue', and for the words 'the assessee' add the words 'the assessee or assessing authority'.

(ii) In sub-clause (2) for the words 'Four years' substitute the words "Two years' ".

THIRU K. RAMAMOORTHY: Sir. I second it.

THIRU A. R. DAMODARAN: Sir, I would like to explain this briefly. This relates to *suo motu* powers of the Commissioner to revise assessments. The Government have tied down the hands of the Commissioner by saying that he could re-open and re-assess only if it is prejudicial to the interests of revenue and not if the assessment order is basically bad legally. If he finds that the assessee has been over-assessed, he cannot *suo motu* revise. I think this is an unnecessary restriction on the most senior officer of the Government, at the level of Commissioner of Commercial Taxes. If you give him *suo motu* powers, give him *suo motu* powers to revise the assessment, whether rightly or wrongly made by the assessment authority. Please do not do it only to protect your own revenue. You have to protect the assessee also. The Hon. Minister has no sympathy at all for assessees. I would request him kindly to accept this recommendation.

[1983 ஏப்ரல் 28

(பிற்பகல் 12-40)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"(i) In sub-clause (1) omit the words 'in so far as it is prejudicial to the interests of revenue', and for the words 'the assessee' add the words 'the assessee or assessing authority'.

(ii) In sub-clause (2) for the words "Four years" substitute the words 'Two years'".

பரிந்துரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 22.

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following recommendation:—

"For clause 22, substitute the following:—

'The owner or other person in charge of a goods vehicle shall carry with him—

(i) Bill of sale on delivery note;

(ii) Goods vehicles record or trip sheet relating to the goods under transport and shall submit the same to the check-post if there be a checkpost or to the consignee for transmission to the assessing authority concerned."

THIRU K. RAMAMOORTHY: Sir, I second it.

THIRU A. R. DAMODARAN: Sir, very briefly, according to the Entry Tax Bill, it is stated that every lorry every day shall carry all details of all the goods transported by the lorry and shall submit them to the assessing authority in each and every local area. If a lorry goes from Madras to Kanyakumari and has to deliver goods in Tiruchi, Madurai and Tirunelveli, he has to carry all the duplicates of bills of the number of articles which he will carry in the lorry and it is his responsibility to forward it to the assessing authority. Do the Government think that this can be done humanly by any lorry owner? I am a lorry owner myself and I am carrying petroleum products and it is not possible. It is here that the Vedhanai Chavadis will come into play. We are not going to submit this return and to escape the vedhanai of being delayed at these Vedhanai Chavadis, currency notes will be given and they are being given. The Hon. Minister cannot prevent it





இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பும் அதே பதிலை அளிப்பது போன்ற குறைகளை நிவர்த்தித்து ஆவன செய்யப்படுமா? இந்தச் சலுகை அவர்களுக்குக் கொடுக்க என்ன செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசு தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகைகளைத் தர வேண்டுமென்று விரும்பித்தான் செய்கிறது. இப்போது வேண்டுமானாலும் அது முடியவில்லை என்று சொல்லி நிறுத்திவிட முடியும். ஆனால் அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்து வருகிறது என்று சொன்னேன். நல்ல முடிவு எடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அரசு நிதியிலிருந்து கொடுப்பது என்பதைப் பற்றி பரிசீலித்துத் தான் சொல்ல முடியும். தேசிய ஆசிரியர் நல நிதியிலிருந்து தருவது என்றால், பிரச்சினையே இல்லை. அங்கே பணத் தட்டுப்பாட்டின் காரணமாக இந்தப் புதிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆசிரியர் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்பது தான் அவர்களது கோரிக்கை. அரசு அதை அளிக்கிறபோது, தேசிய ஆசிரியர் நல நிதியிலிருந்து அது எடுத்து அளிக்கப்படும் என்று போட்டதால், ஆசிரியர் சான்றிதழ் பெற்றாலேயே அவர்களுடைய குழந்தைகளுக்கு இலவசக் கல்வி தரப்படும் என்று தெரிவித்திருந்தால், சிக்கல் ஏற்பட்டிருக்காது. இப்போது ரூ. 8 லட்சம் தான் தேசிய நல நிதியில் இருக்கிறது, ரூ. 1 லட்சம் தான் இதற்கு ஒதுக்கப்படும், மற்ற நிதி அரசிடமிருந்து வரவேண்டும், அதற்கு பரிசீலிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இந்த ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிற நிதியை முன்பே ஒதுக்கி, அதற்குரிய அளவுக்கு ஒன்றிரண்டு பேருக்காவது உடனடியாகக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆகவே அதையாவது எடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை முழுவதும் பரிசீலித்து அரசு முடிவெடுப்பதற்கு முன்பு எதையும் தருவதற்கில்லை. ஆனால் ஒருவருக்குமே தரவில்லை, தரவில்லை என்று நாம் பேசிக் கொண்டிருப்பதாலேயே, ஒருவருக்கும் தரவில்லை என்று ஆகிவிடாது. இப்போது மெடிகல் கல்லூரியில் படிக்கும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் குழந்தைகளுக்கும், இன்சினியரிங் படிப்பவர்களுக்கும் ஆசிரியர் நல நிதியிலிருந்து நாம் தந்து வருகிறோம். இங்கே சொன்ன சலுகையானது கலைக் கல்லூரியில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு. அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற ஆசை அரசுக்கு

[Thiru A. R. Damodaran] [1983 ஏப்ரல் 28

use, the H.S.D. should not have been charged with any fresh levy. In fact, the Hon. Minister for Small Industries has mentioned about the finance made available by the T.I.I.C. for purchase of generators by small scale industries. If the Government increase the levy on H.S.D. which is an essential input for that industry, are the Government not causing a great burden to fall on such industries? Tamil Nadu does not have many Chemical industries. We have a number of Engineering Industries and it is because 20 years ago a conscious decision was taken to support the automobile and ancillary industries and we have a very well-developed automobile spare parts industry. I do not wish to predict the amount of revenue the Hon. Minister will get. This would not be a profitable exercise. But, I know that the Hon. Minister will be very happy about one thing. If this Bill is passed, this tax-revenue will not only be a 'Kamadhenu' but it will be a super-Kamadhenu. I would only like to say that the Government must consider the impact of all their taxes on particular products.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : புராணத்தில் புதிதாக ஒரு வார்த்தையைச் சேர்த்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் "சூப்பர் காமதேனு" என்பதைச் சேர்த்திருக்கிறார். காமதேனு என்ற வார்த்தைதான் புராணத்திலே இருக்கிறது.

THIRU A. R. DAMODARAN: Now, Sir, with hybrid breeds of cattle, we have cows which yield 16 to 18 litres. So, the 'Kamadhenu' of 2,000 years ago may also, under the tutelage of the Hon. the Revenue Minister and the Hon. the Chief Minister, double the yield which it would normally have given 2,000 years ago. In fact, all Revenue Ministers who impose a tax say, "This is only 2 per cent". In fact the Finance Minister of the Government of India made these tragic mistakes whenever they had a taxation proposal in the Budget. But the Union Finance Minister wuld ask his Secretary to give a Press Note saying, "My taxation increase is only Rs. 700 crores or Rs. 800 crores. It will make a difference of only 0.25 in the Wholesale Index and 0.36 in the Retail Price Index." Similarly, the Hon. Minister will say, "This is only 2 per cent. Why are you objecting to all these taxes?" Sir, when he considers a tax on a product, he must consider the fact that there is an excise duty on it, there is an additional excise duty on it, there is a cess on it, there is a Tamil



1983 ஏப்ரல் 28] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

றென்று தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பல்வேறு திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள். அவைகள் எல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாத திருத்தங்களாக இருக்கின்றன என்று தெரிவித்தாலும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது எங்கெங்கே சிக்கல்கள் வருகின்றனவோ, பொது மக்களுக்கு எது தேவைப்படுகிறதோ அப்போது அந்தத் திருத்தங்களைப்பற்றி அரசு யோசிக்கும். இதில் பிடிவாதம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கடைசி அறிவிப்பு, இந்தச் சட்ட முன்வடிவு எவ்வளவு சங்கடமானது என்பதை அமைச்சரவர்கள் உணர்ந்திருப்பதைத் தெரிவிக்கிறது. ஆனாலும்கூட மிகப் பெரிய பளுவை, சுமையை சாதாரண மக்கள்மீது, தெரியாதவர்கள்மீது சுமத்தும் இந்தப் பிற்போக்குத்தனமான வரியை, குறைந்த அளவிற்கு முன் எச்சரிக்கையோடு பரிசீலனை செய்யாமல், கொண்டு வந்து, நிறைவேற்றி, அதற்குப் பிறகு பல சங்கடங்கள் ஏற்படுத்தும் சூழ்நிலையில் இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேறும் இந்த நிலையிலே, இந்த அவையிலே இருப்பதற்கில்லை என்பதை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் தெரிவித்து, வெளியேறுகிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. இராமமூர்த்தி அவர்களும், திரு. பி. முனுசாமி அவர்களும் வெளிநடப்பு செய்தனர்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு உள்ளூர்ப் பகுதிகளில் நுகர்தலுக்காக, பயன்படுத்துதலுக்காக, விற்பனை செய்வதற்காக வரும் சரக்குகள்மீது நுழைவு வரி விதிக்கும் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1983) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1983).

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1983) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1983) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1983) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1983) திருப்பி அனுப்பப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

@ 598–599 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.



3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(2) நடப்புக் கூட்டத் தொடரில் நடைபெற்ற அலுவல் குறித்து சில விவரங்கள்.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இந்தக் கூட்டத் தொடரின் அவை அலுவல்கள் குறித்து சில விவரங்களை அவைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

| | |
|---|---|
| 1. மேலவை நடைபெற்ற நாட்கள் | 45 |
| 2. மேலவை நடைபெற்ற மொத்த நேரம் (27—4—1983 முடிய) | 154 மணி 35 நிமிடம் |
| 3. நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் | 31 |
| 4. கூட்டாய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்ட சட்ட முன்வடிவுகள் | இல்லை |
| 5. கவன ஈர்ப்புத் தீர்மானங்களின்மீது அளிக்கப் பட்ட அறிக்கைகள். | 62 |
| 6. அவையில் முன்மொழியப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானங்கள். | 9 |
| 7. மேலவை விதி 60-ன்கீழ் முன்மொழியப்பட்ட நாள் குறிப்பிடப்படாத தீர்மானம். | 1 |
| 8. அவையில் எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினைகள். | 5 |
| 9. ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள். | 33 |
| 10. நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத் தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள். | 25 |
| 11. அவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகள். | 9 |
| 12. கொள்கை விளக்கக் குறிப்புகள் மீதான விவாதத்தில் பங்கு கொண்ட உறுப் பினர்கள். | 92 |
| 13. விடையளிக்கப்பட்ட வினாக்கள் (உடுக்குறி யிட்டவை.) | 340 |
| 14. குறுகிய கால வினா. | 1 |

| | |
|---|---|
| 15. அவை முன் வைக்கப்பட்ட உடுக்குறியிடாத வினாக்கள். | 89 |
| 16. கேட்கப்பட்ட துணை வினாக்கள். | 2,198 |
| 17. ஆற்றிய உரைகளின் எண்ணிக்கை, (27—4—1983 முடிய). | 473 |
| 18. அவைக்கு அளிக்கப்பட்ட குழுக்களின் அறிக்கை. | 2 |
| 19. விவாதிக்கப்பட்ட தனி உறுப்பினர் தீர்மானங்கள். | 2 |
| 20. விவாதிக்கப்பட்ட தனி உறுப்பினர் சட்ட முன்வடிவு. | 1 |
| 21. பார்வையாளர்களின் எண்ணிக்கை. | 711 |
| 22. விதி 82-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை. | 3 |
| 23. அச்சுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்பின் பக்கங்கள் (27—4—1983 முடிய). | 8,430 |

மாண்புமிகு உறுப்பினர்களே, மாண்புமிகு முதல்வரவர்களும், மாண்புமிகு அமைச்சர்களும், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களும் இந்தத் தொடர்க் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு என்னுடன் ஒத்துழைத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவையின் சார்பிலும், என் சார்பிலும், மற்றும் மேலவைக் கொரடா, எதிர்க் கட்சித் தலைவர் உள்ளிட்டு கட்சிகளின் தலைவர்கள், மாண்புமிகு மேலவை உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், மேலவைச் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி, மேலவைத் துறை அதிகாரிகள், அலுவலர்கள், பத்திரிகையாளர்கள், ஆகியவர்களுக்கும் வானொலி, தொலைக் காட்சி ஆகிய நிறுவனங்களுக்கும் அவையின் சார்பில், என் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மேலவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுகிறது.

பின்னர், மேலவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 12-58)



6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

Nil.

B. *Reports, Notifications and Other Papers.*

* 178. The Statement given by Hon. Thiru M. G. Ramachandran, Chief Minister regarding the settlement made with the Andhra Pradesh Government to bring drinking water to Madras City from Krishna River. (Tamil).

† 179. The Tamil Nadu Tax on Entry of Goods into Local Areas for Consumption, Use or Sale therein Bill, 1983 (L.A. Bill No. 34 of 1983) as passed by the Assembly.

† 180. The Tamil Nadu Entertainments Tax (Third Amendment) Bill, 1983 (L.A. Bill No. 35 of 1983) as passed by the Assembly.

181. Details regarding the Major Schemes of Rameswaram, Mamallapuram and Kanniyakumari in connection with the reply given by the Hon. Minister for Information and Religious Endowments for question No. 316 on 23rd April 1983.

---

* Laid on the Table of the House on 27th April 1983.

† Circulated to all M.L.C.s on 27th April 1983.

## இணைப்பு I

(494 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

அரசு அலுவலகங்கள் மற்றும் அதன் கீழுள்ள நிர்வாகங்களில் பணியாற்றும் பதிவு எழுத்தர்களுக்கு (Record clerks) நிர்ணயிக்கப்பட்டுள்ள (மூன்றாவது ஊதியக் குழு ஊதிய விதம் வருவதற்கு முன் உள்ள) ஊதிய விதம் ரூ. 140—3—155—4—175—5—210 ஆகும். இந்தப் பணியிடங்களுக்கு பள்ளியிறுதி வகுப்பு வரை படிக்காதவர்கள் நியமிக்கப்பட்டு வந்தனர். இந்தப் பணியிடங்களுக்கான கல்வித் தகுதியை மாற்றி பள்ளி இறுதி வகுப்பு தேர்வு எழுதியவர்களை நியமனம் செய்ய அரசு ஆணை பிறப்பித்தது. கல்வித் தகுதியை உயர்த்திய காரணத்திற்காக அவர்களுடைய அடிப்படை ஊதியத்தை ரூ. 146 ஆக அரசு தனது ஆணை எண் 393, நிதி, நாள் 12—3—1971-ல் உயர்த்தியது. இவற்றையொட்டி தனியார் பள்ளிகளில் பணிபுரியும் பள்ளியிறுதி படிப்பு தேர்வு எழுதிய பதிவு எழுத்தர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூ. 146 என நிர்ணயித்து கல்வித்துறை ஆணை வெளியிட்டது. இது தவிர, இவ்வுயர் ஊதியம் பள்ளி நூலகம் மற்றும் ஆய்வுக்கூடங்களில் பணிபுரியும் உடனாட்களுக்குப் (Attendants in Libraries and Laboratories) பொருந்தாது எனவும் அரசு (கல்வித்துறை) ஆணை வெளியிட்டது.

2. இதற்கிடையில் 1968-ம் ஆண்டில் அரசுப்பணியில் உள்ள உடனாள் (Attender) என்ற பணியிடத்தைப் பதிவு எழுத்தர் என்று பெயர்மாற்றம் செய்து ஆணையிட்டபோது இந்தப் பெயர் மாற்றம் அரசு உதவி பெறும் தனியார் உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் எல்லாவகை உடனாட்களுக்கும் பொருந்தும் என்ற கருத்தின் அடிப்படையில் நூலக ஆய்வுக்கூட மற்றும் மனையியல் உடனாட்களாக பணியாற்றுகிறவர்களுக்கும் 2—10—1970-ல் (எஸ்.எஸ்.எல்.சி. கல்வித்தகுதி பெற்றவர்களுக்கு) ரூ. 146 அடிப்படை ஊதியம் என்று பள்ளிக்கல்வி இயக்குநரால் நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் தனியார் பள்ளி மற்றும் அரசு கழக (B wing) பள்ளி நூலக, ஆய்வுக்கூட உடனாட்களுக்கு இவ்வுயர் ஊதியம் பொருந்தாது. ஆகவே, தவறுதலாக மேற்கூறப்பட்ட பள்ளிநூலகம் மற்றும் ஆய்வுக்கூட உடனாட்களுக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்ட ரூ. 146 ஊதியத்தில் அதிகப்படியான ரூ. 6-ஐ அவர்களுடைய சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்ய வேண்டும் என்று பள்ளிக்கல்வி இயக்குநருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. அதன்படி, தனியார் பள்ளி நூலக/ஆய்வுக்கூட உடனாட்களுக்கு வழங்கப்பட்ட உயர் ஊதியம் பிடித்தம் செய்யப்பட்டது. இவ்வாறு பிடித்தம் செய்யப்படுவதை நிறுத்தவேண்டுமென்றும், இவ்வூதியம் பள்ளி நூலக மற்றும் ஆய்வுக்கூட உடனாட்களுக்கும் வழங்கப்படவேண்டுமென்றும் கோரிக்கைகள்





பெறப்பட்டதையொட்டி அரசு இப்பொருள் குறித்து மறுபரிசிலனை செய்தது. உதவி பெறும் தனியார் பள்ளி நூலகம் மற்றும் ஆய்வுக்கூடங்களில் பணிபுரியும் உடனாள் ஒருவரின் பணிகளின் இயல்பு, பருமன், மற்றும் செறிவு (Nature, quantity and intensity) அலுவலகப் பதிவு எழுத்தர் பணியிடத்திற்கு ஈடானதே என்றும் எனவே பள்ளியிறுதி வகுப்பில் தேர்வு முடித்த உடனாட்களுக்கும் 2—10—1970 முதல் ரூ. 140—3—155—4—175—5—210 என்ற ஊதிய விகிதத்தில் ரூ. 146 வழங்கலாமென அரசு ஆணை எண் 366, நாள் 21—2—1983-ல் வெளியிட்டுள்ளது. தவிர ஏற்கெனவே தவறுதலாக வழங்கப்பட்டு பின் பிடித்தம் செய்யப்பட்ட தொகை திரும்ப வழங்கப்பட வேண்டாமென்றும் ஆணை வெளியிட்டுள்ளது. பிடித்தம் செய்து பல ஆண்டுகள் கடந்துவிட்டதால் அத்தொகையை திரும்ப வழங்கவேண்டாம் என முடிவு எடுக்கப்பட்டது.

## இணைப்பு I

[22 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகள் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும், பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் கல்விக்கட்டணம் செலுத்துவதற்கு தேசிய ஆசிரியர் நல நிதியிலிருந்து 1980-81-ம் ஆண்டு முதல் நிதி உதவி அளிக்க வேண்டுமென்றும் அவ்வாறு அளிக்கப்படும் நிதி உதவி எத்தனை மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்பது ஒவ்வொரு ஆண்டும் தேசிய ஆசிரியர் நல நிறுவனத்தின் நிதிநிலையைப் பொறுத்து வரையறுக்கப்படல் வேண்டுமென 16—7—1981 நாளிட்ட கல்வித்துறை அரசாணை எண் 1473-ல் ஆணைகள் வெளியிடப்பட்டன. இத் திட்டத்தை செயல்படுத்த ஆண்டு ஒன்றுக்கு 17.5 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும், ஆசிரியர் நல நிறுவனத்தின் ஆண்டு வருமானமாகிய ரூ. 8 லட்சத்திலிருந்து இத்திட்டத்திற்கு ரூ. 1 லட்சம் மட்டுமே ஒதுக்க முடியுமென்றும், மீதமுள்ள ரூ. 16.5 லட்சத்தை ஒவ்வொரு ஆண்டும் அரசு அதற்கென அமைந்த மானியமாக Adhoc grant ஆசிரியர் நல நிறுவனத்திற்கு அளிக்க வேண்டுமென பள்ளிக் கல்வி இயக்குநர் அரசினை கேட்டுள்ளார்.

இத்திட்டத்தைப் பற்றிய ஆணைகள் வெளியிடும்போதே இத்திட்டத்திற்கு அரசு நிதி உதவி அளிக்க இயலாது என்று திட்டவட்டமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், இத்திட்டத்தை செவ்வனே செயல்படுத்த இவ்விதத்தில் நிதி உதவி அளிக்கலாம் என்பது பற்றி அரசு தற்போது தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

இணைப்பு II

(498-ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L. A. BILL No. 34 OF 1983.

(As passed by the Assembly)

*A Bill to provide for the levy of tax on the entry of goods into local areas for consumption, use or sale therein.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows:—

## CHAPTER I.

### Preliminary.

1. *Short title and extent.*—(1) This Act may be called the Tamil Nadu Tax on Entry of Goods into Local Areas for Consumption, Use or Sale therein Act, 1983.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

2. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(*a*) "appellate authority" means an appellate authority appointed under sub-section (1) of section 13;

(*b*) "Appellate Tribunal" means the Tribunal appointed under the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959);

(*c*) "assessing authority" means an assessing authority appointed under sub-section (1) of section 13;

(*d*) "Commissioner" means the Commissioner of Commercial Taxes in the State;

(*e*) "dealer" shall have the meaning assigned to it in clause (*g*) of section 2 of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959);

(*f*) "Government" means the State Government;

(*g*) "local area" means the area within the limits of—

(i) the City of Madras as defined in the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), or



(ii) the City of Madurai as defined in the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971), or

(iii) the City of Coimbatore as defined in the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981), or

(iv) a municipality under the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), or

(v) a township under the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), or the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958), or the Mettur Township Act, 1940 (Tamil Nadu Act XI of 1940), or the Courtallam Township Act, 1954 (Tamil Nadu Act XVI of 1954), or Bhavanisagar Township Act, 1954 (Tamil Nadu Act XXXV of 1954), or under any other law for the time being in force, or

(vi) a panchayat under the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958);

(*h*) "registered dealer" means a dealer registered under this Act;

(*i*) "scheduled goods" means the goods specified in the Schedule to this Act;

(*j*) "State" means the State of Tamil Nadu;

(*k*) "tax" means the tax leviable under this Act;

(*l*) "year" means the financial year;

(*m*) words and expressions used but not defined in this Act shall have the meanings assigned to them in the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959).

## CHAPTER II.

### *Levy of tax.*

3. *Levy of tax.*—(1) There shall be levied and collected a tax on the entry into such local area or local areas as the Government may, by notification, specify, of scheduled goods for consumption, use or sale in such local area or local areas. The rate of tax shall be at such rate not exceeding two per cent adalorem as may be specified by the Government. The Government may specify different rates for different goods and for different local areas.

(2) While specifying different local areas for the purpose of levying different rates for different goods under sub-section (1), the Government shall have due regard to the population in the local area concerned and such other matters as may be prescribed.

(3) The tax shall be payable by the registered dealer or the dealer liable to get himself registered who brings or causes to be brought into the local area such goods whether on his own account or on the account of his principal or takes delivery or is entitled to take delivery of such goods on such entry.

